


# அத்திமலைத் தேவன்

பாகம் 4

– காலச்சக்கரம் நரசிம்மா

வானதி பதிப்பகம்

# அத்திமலைத்தேவன்

## (பாகம் - நான்கு)

'காலச்சக்கரம்' நரசிம்மா

வானதி பதிப்பகம்
23, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை–17.

முதற்பதிப்பு : அக்டோபர், 2019
© உரிமை : ஆசிரியருக்கு

**வானதி வெளியீடு**

விலை : ரூ. 400/-

| | | |
|---|---|---|
| ❒ | Title | **ATHIMALAIDEVAN (PART-4)** |
| ❒ | Author | **'Kalachakkaram' NARASIMMA** |
| ❒ | Language | Tamil |
| ❒ | Subject | Historical Novel |
| ❒ | Edition | First Edition, October, 2019 |
| ❒ | Pages | 488 |
| ❒ | Published By | **VANATHI PATHIPPAKAM**<br>23, Deenadayalu Street,<br>Thyagaraya Nagar, Chennai - 600 017.<br>Ph: 2434 2810 / 2431 0769<br>e-mail : vanathipathippakam@gmail.com |
| ❒ | Price | **₹ 400.00** |

Laser Typeset by: **SS Graphics**, Cell : 9843534436

***Printed at :*** **NOVENA OFFSET PRINTING CO.**, Chennai - 5 ✆ 28446166, 28446891

# முன்னுரை

**அ**த்திமலைத்தேவன் சரித்திர புதினத்தின் மூன்று பாகங்களையும் படித்துவிட்டு, அலைபேசியின் மூலமாகவும், தொலைபேசியின் வாயிலாகவும், மின்னஞ்சல்களிலும் என்னுடன் தொடர்புகொண்டு பேசியவர்கள், பிரமிப்புடன் என்னிடம் கூறிய கருத்து, 'நகரேஷு காஞ்சி' என்று அறிந்திருக்கிறோம். ஆனால் காஞ்சியின் ஒவ்வொரு கல்லுக்கும் பின்பாக இவ்வளவு சரித்திரங்களா! என்று மலைத்துப் போகிறார்கள். அத்திமலைத்தேவன் மூன்று பாகங் களையும் படித்துவிட்டு, கவசம் டிவியைச் சேர்ந்தவர் கள் ஒரு பத்து பகுதிகளாக அத்திமலைத்தேவனின் சரித்திரம் குறித்த எனது நிகழ்ச்சியினை ஒளிபரப்பி னார்கள். அதன்பின் எனக்கு வந்த அலைபேசி அழைப்புகள் ஏராளம். அத்திவரதன் வெளிவந்த ஒன்பதாம் நாள் நான் அவனைத் தரிசித்தேன். அவனைக் கண்டதும் எனது மேனி சிலிர்த்தது. அஸ்வத்தாமா துவங்கி இன்றைய தலைவர்கள் வரை எத்தனை பேர் அவனைத் தரிசித்திருக்கின்றனர். எத்தனை போர்களை அவன் பார்த்திருக்கிறான். ஒன்பது அடி மேனிதான். ஆனால் பாரதச் சரித்திரம் முழுவதும் அல்லவா வியாபித்து நிற்கிறான். மனமுவந்து இந்த எளியவன் எழுதும் புதினத்தின் கதை நாயகனாகத் திகழ சம்மதித்த அவனுக்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்? அடுத்த முறை அவன் வரும்போது அவனைக் காண நான் இருக்க மாட்டேன் என்றாலும், எனது புதினத்தை 2059-னில் வாசித்தவர்கள் அவனைத் தரிசிக்கச் செல்வார்கள் அல்லவா..?

அத்திமலைத்தேவன்- ஒன்று, இரண்டு, மூன்று பாகங்களைக் கடந்து நான்காம் பாகத்தினில் நுழைந்துவிட்ட நிலையில், அனைவரும் காஞ்சிக்குச் சென்று அத்திமலையானைத் தரிசித்துவிட்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

'காஞ்சியின் பெருமைகளை உணரவைத்த அத்திமலைத்தேவனை எழுதிய உமக்குத்தான் நன்றி கூற வேண்டும்!' - என்று மனம் நெகிழ்ந்து பலரும் பாராட்டி வருகின்றனர். ருத்ராக்ஷர் என்கிற உருத்திரன் கண்ணனார் கரிகாலனை காப்பாற்றியது, இளந் திரையன் மற்றும் கரிகாலன் என்கிற சகோதரர் களிடையே நடைபெற்ற தன்மானப் பிரச்னை போன்ற புதிய தகவல்கள் மலைப்பை ஏற்படுத்தின என்றனர். காஞ்சி தொன்மையான நகரம். நான் முன்பே கூறியது போன்று, ஆயர்பாடி காலம் தொடங்கி இப்போதைய காலம் வரையில், காஞ்சி என்கிற நகரம் பல அரசியல் திருப்பங்களுக்குக் காரணமாக இருந்துள்ளது.

அஸ்வத்தாமா தொடங்கி, புலிவேழு, சாணக்கியன், சந்திரகுப்தன், பிந்துசாரன், அசோகன், புஷ்யமித்ரா, சமுத்ரகுப்தன், கரிகாலன், சிம்மவர்மன், அவனி சிம்மன், ஜெயவர்மன், புலிகேசி, மகேந்திரன், நரசிம்ம பல்லவன் ஆகியோரின் காலம் வரை கடந்து வந்துவிட்டோம்.

மூன்று பாகங்களில் பலருக்கு பல்வேறு கதா பாத்திரங்கள் பிடித்திருந்தாலும், அனைவராலும் இரசிக்கப்பட்ட பாத்திரங்கள் ராஜஸ்ரீ மற்றும் ராஜ வர்மன். மதியூகமும் நன்னடத்தையும் கொண்ட ராஜஸ்ரீ எங்களைப் பெரிதும் கவர்ந்துவிட்டாள் என்று பலரும் கூறினார்கள்.

"உங்கள் நடையில்தான் என்ன வேகம்" - என்று அனைவருமே பாராட்டுகின்றனர்.

இதில் ஒன்றும் விந்தை இருப்பதாக நான் நினைக்கவில்லை. காஞ்சி வரதராஜன் தனது திருத்தேர் உற்சவத்தின்போது, தனது ஆலயத்தில் தொடங்கி, ஐந்து கி.மீ. தொலைவில் காந்தி சாலையில் உள்ள தேர்நிலைக்கு ஓட்டமாகவும் இல்லாமல், நடையாகவும் இல்லாமல் ஒருவித வேகத்துடன் முந்திச்செல்வார். அவரது நடைக்கு ஈடு கொடுக்க இயலாமல் திணறும் பக்தர்கள் ஓடிச் செல்வார்கள். அவரைக் கடந்து ஓடினால் கூட, அடுத்தகணமே 'என்னையா முந்துகிறாய்?' என்கிற ஆக்ரோஷத்துடன் அத்திமலையான் முந்திச் செல்வான். அப்படி ஒரு வேகம் அவனது நடையில்..! அந்த 'வரத' நடையைத்தான் எனது புதினத்தில் பிரயோகப்படுத்தி இருக்கிறேன். முதல் பாகம் மிகவும் விறுவிறுப்பு. அதற்கடுத்த பாகம் இன்னும் விறுவிறுப்பு, மூன்றாம் பாகம் அதைவிட விறுவிறுப்பு என்றுதான் வாசகர்கள் சொல்லிக்கொண்டு இருக் கிறார்களே தவிர, தொய்வு இல்லை என்று அனைவருமே கூறுகின்றனர். அத்திமலைத்தேவனின் நிறைவுகளுக்கு அவனே காரணம். குறைகள் இருந்தால், அவை என்னுடைய தவறுகளாக மட்டுமே இருக்க முடியும்.

**2018 ஜூன் மாதம்** அத்திமலைத்தேவன் புதினத்தைத் தொடங்கினேன். தகவல்கள் நீண்டு கொண்டே போகின்றன. நான்கு பாகங்கள் எழுதத் திட்டமிட்டிருந்தேன். இப்போது ஐந்து பாகங்கள் என்று முடிவு செய்துள்ளேன். இன்னும் பல பாகங்கள் எழுதிக்கொண்டே இருக்கலாம். ஆனால்.. அத்தி மலைத்தேவன் மீண்டும் தனது நீர் படுக்கைக்குச் செல்வதற்கு முன்பாக அனைத்து பாகங்களையும் வெளியிட வேண்டும் என்கிற ஒரே நோக்கத்தில் வேகத்தை அதிகரித்துக்கொண்டே இருந்தேன்.

அவன் பெருமைகளை, சரித்திர நிகழ்வுகளை அவ்வளவு குறுகிய காலத்தில் என்னால் முடிக்க இயலாது என்பதைப் புரிந்து கொண்டேன்.

வெள்ளிக்கிழமை ஜூன் 21, 2019, ஒரு மறக்க . முடியாத நாள். அன்றுதான் மூன்று பாகங்களை முடித்துவிட்டு, நான்காம் பாகத்தினுள் பிரவேசித்துக் கொண்டிருந்த என்னை, அத்திமலைத்தேவன் காஞ்சிக்கு அழைத்தான். The Hindu ஆங்கில நாளி தழுக்காக அத்திவரதர் வருகை குறித்துச் செய்யப் பட்டுள்ள ஏற்பாடுகளை அறிவதற்காக அன்று காஞ்சிக்குச் சென்றேன். ஆலய அதிகாரி,

என். தியாகராஜன், ஸ்ரீ உ.வே. அக்காரக்கனி ஸ்ரீநிதி சுவாமி மற்றும் சுவாமி லக்ஷ்மிநரசிம்மன் என்கிற கிட்டு பட்டர் ஆகியோரைச் சந்தித்தேன். அத்திவரதர் வெளியே எழுந்தருளச் செய்வது குறித்து அவர் களிடம் உரையாடிக்கொண்டிருந்த போது அனந்த சரஸ் என்னும் திருக்குளத்தின் உள்ளே அழைத்துச் சென்று எனக்குக் கிட்டு பட்டர் சிலையை எடுக்கும் விதம் குறித்து விளக்கினார்.

இருபத்து ஐந்து அடி ஆழம் உள்ள குளத்தில் பன்னிரண்டு அடி அளவு நீரை எடுத்துவிட்டு, சேறும் சகதியுமாக உள்ள பகுதியில் நடந்து சென்று இன்னும் பன்னிரண்டு அடி கீழே இறங்கினால், ஒரு இருண்ட பகுதி வரும். அங்கே ஒரு தொட்டி இருக்கும். அதில் நீர் வழிந்து கொண்டிருக்கும். அதன் உள்ளேதான் அத்திமலையான் சயனித்துக் கொண்டிருக்கிறான். உள்ளே இருக்கும் தேவ உடும்பர அத்தி மரத்தினாலான சிலை நீரில் மிதந்து கொண்டிருக்கும். சிலை வெளியே வந்துவிடாதபடி, தொட்டியின் ஓரங்களில் பொருத்தப்பட்டிருக்கும் நாகப்பாசங்கள் (நாக வடிவில் உள்ள clamps) அந்தச் சிலையை வெளியே வரவிடாமல் தடுக்கும்.

நாற்பது வருடங்களுக்கு ஒருமுறை, நாகபாசங்களை நீக்கி, சிலையை வெளியே எடுத்து ஆராதனை செய்து விட்டு, மீண்டும், குங்கலீயம், புனுகு மற்றும் சந்தனாதி தைலங்களைத் தடவி தொட்டியில் பத்திரப் படுத்திவிடுகிறார்கள். நான் முதல் பாகத்தில் குறிப் பிட்டது போன்று, தண்ணீரின் அடியில் அத்திமலைத் தேவனுக்கு ஆற்றல் அதிகரிக்கும்.

மிகவும் ஆற்றலுடன் காணப்படுவதால், அவனை அதீத எச்சரிக்கை நடவடிக்கைகளுக்குப் பின்பே அர்ச்சகர்கள் அணுகுவார்கள். உக்கிர மூர்த்தியான அவனை இருபதுபேர் எடுத்து வருவார்கள். அதற்கு அவர்கள் வருடத் துவக்கத்தில் இருந்தே உடலாலும், மனதாலும் தங்களைத் தயார்படுத்திக் கொள்வார்கள். இருப்பினும், பலர் நாற்பது வருடங்களுக்குப் பிறகு அவனைச் சந்திக்கும்போதும், முதன் முறையாக அவனைக் காணும் போதும், ஒரு வகை மன அழுத்தத்திற்கும் உள்ளாகிறார்கள். அவ்வகையில் ஒரு பட்டர் ஏழு வருடம் மன அழுத்தத்தில் இருந்தார் என்று கிட்டு பட்டர் என்னிடம் தெரிவித்தார்.

பட்டர்களின் பணி விக்கிரகங்களை அலங்காரப் படுத்துவதும், தேங்காய் உடைப்பதும் மட்டுமே என்று பலரும் நினைத்திருக்கிறார்கள். அவர்களுக்கும் ஆபத்தான பணிகள் உள்ளன என்பதைப் பலர் உணரமாட்டேன் என்கிறார்கள். நாமக்கல் ஆஞ்ச நேயர் ஆலயத்தில் உயரத்தில் இருந்து விழுந்து மரணம் அடைந்த பட்டரும் உண்டு. அனந்தசரஸ் குளத்தின் ஆழத்திற்குச் சென்று ஆபத்துகளைச் சந்திப்பவர்களும் உண்டு.

அவர்களை நான் வெறும் பட்டர்களாகப் பார்க்க வில்லை. நமது பொக்கிஷங்களைப் பாதுகாக்கும் அதிகாரிகளாகவே நினைக்கிறேன். அவர்களது தியாகங்களுக்கு எனது அத்திமலைத்தேவன் சமர்ப்பணம்.

**நான்காவது பாகத்தில் இனி நுழைகிறோம்.**

பல்லவர்களின் அழிவையும், சோழத்தின் எழுச்சி யையும் இந்த நான்காவது பாகம் பேசப்போகிறது. பல்லவர்களின் அழிவுக்குக் கட்டியம் கூறும் விதமாக, பால் பொங்குவது போன்று பொங்கி ஓடிய பாலாறு முற்றிலுமாக வறண்டு போகிறது. காஞ்சியின் நதிகள் காணாமல் போகத் துவங்குகின்றன. இரண்டாம் பரமேஸ்வரவர்மன் சாளுக்கியருடன் நடந்த போரில் இறக்க, வாரிசு இல்லாத பல்லவம், காம்போஜத்தி லிருந்து 'பல்லவ மல்லன்' என்கிற நந்திவர்மனை இறக்குமதி செய்ய, அவன் தான் செய்யும் ஆர்ப் பாட்டங்களால், பல்லவத்தின் அழிவினை இன்னும் துரிதப்படுத்துகிறான். திருபுறம்பியம் போரில் பாண்டிய, முத்தரைய கூட்டணியை வெல்லும் அபராஜிதன் தனது தோழன் ஆதித்த சோழனுக்குத் தன்னிடம் உள்ள சோழப் பகுதிகளைப் பரிசளிக்க, அவன் முத்தரையரை வென்று, தஞ்சையில் சோழர்களின் ஆட்சியை நிறுவுகிறான்.

திடீரென்று நண்பன் அபராஜிதனைக் கொன்று, பல்லவத்தை ஆதித்த சோழன் கைப்பற்றுகிறான்.

காஞ்சி, சோழர்களின் வசம் வருகிறது. ராஜாதித்யன், அரிஞ்சயன், கண்டராதித்யன் என்று அனைவருமே காஞ்சியில் வந்து தங்கினாலும், ஆதித்த கரிகாலன் சோழர்களின் வடபுல சேனை நாயகனாகக் காஞ்சியிலே தங்குகிறான். பொன் மாளிகை ஒன்றை எழுப்புகிறான். காஞ்சியின் பிரும்மாண்டத்தில் லயித்துப் போகிறான். அவனுக்குப் பிறகு, இராஜேந்திர சோழன், ஒத்தாடை ஆலயத்தின் வாயிலில் இருந்து வடக்கே படை எடுத்துப் போகிறான்.

தஞ்சை சக்கரவர்த்தியான சுந்தரச் சோழர் காஞ்சியில்தான் இறக்கிறார். அவன் மனைவி வான

வன்மாதேவி காஞ்சியில்தான் உடன்கட்டை ஏறுகிறாள். எதனால்..? தஞ்சை சோழன் எதற்காகக் காஞ்சியில் மரணம் அடைய வேண்டும்? 'சங்க தாரா'வில் நான் எழுப்பியிருந்த கேள்விக்கு இதில் விடை கூறப் போகிறேன். அதுமட்டுமா? ஆதித்த கரிகாலன் கொலை ஒரு inside job என்பதற்கான சாத்தியக்கூறுகள் இன்னும் அதிகரித்து உள்ளன. சோழ தஞ்சையிலிருந்து ஆதித்த கரிகாலனின் கொலையைப் பார்த்தபோது 'கொலைகாரர்கள் உள்ளேயே இருக்கும் கறுப்பாடுகள்' என்று கூறியிருந்தேன்.

இப்போது காஞ்சியில் இருந்து அதே கொலையைக் காணும்போது சந்தேகங்கள் இன்னும் பலப்படுகின்றன.

ஆதித்த கரிகாலன் காஞ்சியில் தங்கிய போது, பல்லவம் இரண்டு பிரிவுகளாகப் பிளந்து நிற்கின்றது. மூன்றாம் நந்திவர்மன் பல்லவத்தை உத்தரப் பல்லவம், தட்சிண பல்லவம் என்று இரண்டாகப் பிரித்து, வடபல்லவத்தை நிருபதுங்கவர்மனுக்கும், தென்பல்லவத்தைக் கம்பவர்மன் என்கிற மகனுக்கும் தருகிறான். கம்பவர்மனின் மகன் அபராஜிதன்.

அபராஜிதனுடன் பல்லவம் முற்றிலுமாக அழிகிறது. ராஜேந்திர சோழன் வரை காஞ்சி சோழர்கள் வசம் இருக்கிறது. அதன் பிறகு, பாண்டியர்கள் சிறிது காலம் காஞ்சியில் கோலோச்ச, பிறகு ஹோய் சளர்கள், கங்கர்கள் என்று காஞ்சி கைமாறுகிறது.

உண்மையில் அத்திமலைத்தேவனின் ஐந்து பகுதிகளை முடித்துவிட்டு நான் என்ன செய்யப் போகிறேன் என்றே தெரியவில்லை..! அரசியல், சினிமா, இலக்கியம் என்று பல துறைகளில் இருப்பவர்களைச் சந்தித்திருக்கிறேன். ஒரு குறிப்பிட்ட நாளில், 'இன்னும் என்ன! போதும் என்கிற

மனநிறைவு ஏற்பட்டுவிட்டது. இனி அமைதியான வாழ்க்கை போதும்' என்று கூற கேட்டிருக்கிறேன். அத்தகைய மனநிறைவினை எனக்கு அத்திமலைத் தேவன் அளித்துவிட்டான்.

இன்னும் இரண்டு ஆண்டுகளில் பணியில் இருந்து ஓய்வு பெறப்போகும் நிலையில், எனது இறுதி நாட் களைக் காஞ்சியில் கழிக்கத் தீர்மானித்திருக்கிறேன். காஞ்சியின் சரித்திரத்தில் என்னைப் புதைத்து கொண்டு காணாமல் போக வேண்டும் என்கிற ஆவல் மனதில் எழுகிறது. உண்மையான மனநிறைவோடு, கடைசி இரண்டு பாகங்களை உங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

எனது பல்லவ பயணத்திற்குப் பெரும் துணையாக நின்ற, வானதி உரிமையாளர் டாக்டர் ராமநாதன், வானதி பதிப்பகத்தின் தூண்களில் ஒருவரான திரு. சுந்தர் கிருஷ்ணன், திரு. டாக்டர் என். ஸ்ரீதரன், நூலை கணினி அச்சிட்ட திரு.செந்தில்குமார் மெய்ப்புத் திருத்தம் பார்த்த நாஞ்சில் திரு.பெ.மணி, திரு. மாரிமுத்து, அட்டைப்படங்களை வரைந்த ஓவியர்கள் திரு. வேதா, திரு.ஷ்யாம், ரெட்டாட் திரு. பவன்குமார், அத்திமலைத்தேவனைக் குறித்து விமர்சனங்கள் வெளியிட்ட 'தி இந்து' கீதா வெங்கட்ராமன், கலைமகள் ஆசிரியர் கீழாம்பூர், எழுத்தாள நண்பர்கள், இலக்கிய வாதிகள், எனது குடும்பத்தினர் அனைவருக்கும் எனது நன்றிகள்.

என்னை ஆதரிக்கும் வாசகர்களுக்குத் தலையல்லால் கைம்மாறிலேனே!

**'காலச்சக்கரம்' நரசிம்மா.**
**98417 61552**
**tanthehindu@gmail. com**

## வாசகர் குறிப்பு

அவரவர் தாம்தாம் அறிந்தவாறேத்தி
இவையிவை உண்மை,
இவையிவை கற்பனையென
மனமிசை சார்த்திக் கொள்ளவும்.
உதிரிபூக்களாம் சரித்திர சம்பவங்களை
எனது கற்பனை நாரினில்
சரமாகத் தொடுத்துள்ளேன்,
**'காலச்சக்கரம்' நரசிம்மா.**

# மூன்றாம் பாகத்தில்..

நவரத்ன பல்லவி தனது சீதன வெள்ளாட்டிகளின் உதவியுடன் அத்திமலைத்தேவனின் சிலையை ஒளித்து வைத்து, அது குறித்த வரைபடங்களையும், புதிர்களையும் கவிதையாக வடித்து, காஞ்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கோயில்களில் பதுக்கி வைத்துவிடுகிறாள். தனது சீதன வெள்ளாட்டி கம்பீரன் என்பவன் மூலமாகச் சகோதரன் ஜெயவர்மனை அழைக்க, முதலிரவு அறையிலிருந்த அவன், மனைவி சாயாதேவி யிடம் கூறிவிட்டு அத்திமலைக்குச் செல்ல, அங்கே அவன் நவரத்ன பல்லவி ரத்ன மண்டபத்தில் தற்கொலை செய்து கொண்டுள்ள காட்சியைப் பார்க்கிறான்.

நல்லவேளையாக, அவளது கையில் இருந்த ரகசியக் குறிப்புகள் அவனது பார்வையில் பட அவற்றை அஞ்சிலை அணங்கு என்கிற பட்டர் மகளிடம் கொடுத்துவிட்டு, போலி சிலையுடன் பிரக்ஞுதாராவுடன் சீனத்திற்குச் செல்ல, அவள் அவனை மாயக் குழியில் விழவைத்து, பௌத்த துறவியாக்கிவிடுகிறாள்.

காஞ்சியில் சிலையைக் காணாமலும், ஜெயவர்மனைக் காணாமலும் பல அனர்த்தங்கள் நிகழ்கின்றன. விஜய வர்மன் கொல்லப்பட, சாயாதேவி, நவரத்ன பல்லவியின் தற்கொலைகள் பல்லவத்தையே உலுக்குகின்றன. நவரத்ன பல்லவியின் கணவன், தான் கொள்ளையடித்த பொக்கி ஷங்களைப் பதுக்கிவைத்த இரகசியத்தைத் தருமசேனர் என்பவரிடம் கூறிவிட்டு இறக்க, அவரே பிற்காலத்தில் அப்பராக மாறி அந்த இரகசியத்தைத் தான் திருத்தி பணி கொண்ட மகேந்திரனிடம் கூற, அவன் அத்தி மலைத்தேவன் அங்கு இருப்பதாக எண்ணி, பொக்கிஷங் களைக் கண்டுபிடிக்கிறான். ஆனால் அத்திமலையானின் சிலை அங்கு இல்லை.

புலிகேசிக்கும், மகேந்திரனுக்கும் புள்ளலூரில் நடந்த போரில் மகேந்திரன் தோல்வியடைகிறான். மகேந்திரன்

தனது மகன் நரசிம்ம பல்லவனிடம், மூன்று வரம் கேட்கிறான்.

கலை — மாமல்லபுர பணிகளை முடிக்க வேண்டும்.

தலை — புலிகேசியின் தலையை மல்லைக் கடலில் வீச வேண்டும்.

சிலை — அத்திமலைத்தேவனின் சிலையைக் கண்டு பிடிக்க வேண்டும்.

முதல் இரண்டு கோரிக்கைகளை எளிதாக நிறை வேற்றும் நரசிம்மன், மூன்றாவது கோரிக்கையை நிறை வேற்ற முயற்சிகள் எடுத்தும் பலன் இல்லை. அப்போது சீன யாத்ரிகரும், ஜெயவர்மனின் சீடனுமான யுவான் சுவாங் காஞ்சிக்கு வந்து நரசிம்மனைச் சந்தித்து ஜெயவர் மனைப் பற்றி நிலவும் ஐயங்களைத் தீர்த்து வைத்து, ஜெயவர்மனின் மடலைத் தருகிறார். இரகசியங்கள் அஞ்சிலை அணங்கு என்கிற பட்டர் மகளிடம் இருப்பதாக ஜெயவர்மன் அந்த மடலில் கூறுகிறான்.

தனது காதலி ஸாமவை பெருந்தேவியின் பாட்டியான அஞ்சிலை அணங்கை பஞ்ச பொய்கை க்ஷேத்திரத்தில் சந்தித்து இரகசியக் குறிப்புகளைப் பெற்றுக்கொள்ளும் நரசிம்ம பல்லவனும் அவனது குழாமும் குணம் குன்றம் என்கிற இடத்தில் அத்திமலைத்தேவனைக் கண்டுபிடிக்க, தான் கண்ட கனவினைக் கருத்தில் கொண்டு, அத்தி மலைத்தேவனை அத்திமலை ஆலயத்தில் வைக்காமல், மல்லையில் ஜலசயன பெருமாளாகப் பிரதிஷ்டை செய்ய, கடல் கோள் ஏற்படுகிறது.

ஆழிப்பேரலையில் சிலை காணாமல் போக, தான் செய்த தவறை உணர்ந்து மீண்டும் அத்திமலையான் சிலையைத் தேடுகிறான். கடல் அடியில் மீனவர்களை அனுப்ப, அவர்கள் சிலையைக் காணவில்லை என்றும் 'மாமல்ல எதி' — என்று சிலை இருந்த இடத்தில் வடிக்கப்பட்டிருப்பதாகவும் சொல்ல, இடிந்து போகிறான் நரசிம்ம பல்லவன். மீண்டும் சிலையைத் தேடும் படலம் துவங்குகிறது.

இனி..

# அ. ஆழிப்பேரலை

சிங்கமல்லன் என்கிற நரசிம்ம பல்லவன் ஸ்தம்பித்துப் போய் நின்றிருந்தான். சென்ற முறை இவன் திருகடன் மல்லைக்கு விஜயம் செய்திருந்த போது, தங்க கலசங்கள் மின்ன கம்பீரத்துடன் நின்றிருந்த எழுமால் கோயில் களில் ஒன்று மட்டுமே இப்போது கடல் நீரின் நடுவே ஒரு தீவினை போன்று தனித்து நின்றிருந்தது. மாடுகளை விழுங்கிவிட்டு புரண்டு கொண்டிருந்த மலைப் பாம்பினை போன்று மற்ற ஆறு கோயில்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டுவிட்ட கடலலைகள் அமைதியாக வந்து கரையில் மோதின.

“நீ மகா மல்லனாக இருக்கலாம். நாங்கள் சீற்றம் கொண்டால் உனது பல்லவ ராஜ்யத்தையே விழுங்கி விடுவோம்” — அந்த அலைகளின் இரைச்சல் தன்னிடம் கூறுவது போன்று தோன்ற, மகா மல்லன் அதிர்ந்து போய் நின்றிருந்தான்.

சிற்பக் கோயில்கள் நீரின் அடியில் போகட்டும்! ஆனால் பல்லவத்தின் குலக்கொழுந்தான அத்திமலைத் தேவனும் அல்லவா கடல் நீரின் அடியில் சிக்கிக் கொண்டான்..? அவன் மட்டுமா? குபேரனால் அத்தி மலைத்தேவனுக்கு அணிவிக்கப்பட்ட ஒப்புயர்வில்லாத ஸ்ரீதள மணியுமல்லவா கடலின் அடியின் சென்று விட்டது. ஜலசயன பெருமாளாக வள்ளூரில் புதிதாக எழுப்பப்பட்ட ஆலயத்தில் பள்ளிகொண்டிருக்கும் அத்தி மலையானுக்கு ஸ்ரீதள மணியை அணிவித்து விசேட அலங்காரத்தைச் செய்யச் சொல்லியிருந்தான், கோயிலதி

காரிகளிடம். அத்திமலைத்தேவன் அதை அணிந்திருந்த காட்சியைப் பரவசத்துடன் கண்டு களித்திருந்தான். ஆனால் இப்போது, அத்திமலைத்தேவன், ஸ்ரீதள மணி இரண்டையும் அல்லவா இழந்துவிட்டிருந்தான்!

அத்திமலைத்தேவனைக் கடன்மல்லைக்கு எழுந் தருளச் செய்தது தவறோ? அத்திமலை ஆலய அதிகாரி மாயகூத்த மடலூருவாரும் தலைமைப் பட்டர் சதானந்த அத்தங்கியும் இவனிடம் கெஞ்சியிருந்தனரே. ராஜகுரு லோகிதரும், தலைமை குரு ஆமாத்தியாரும் கூட, 'வேண்டாம் இந்த விஷப்பரிட்சை' என்று எச்சரித் திருந்தனரே! இவன்தான் மன்னன் என்கிற அகந்தையில் எதையும் செவியில் ஏற்றிக்கொள்ளத் தவறியிருந்தான். விளைவு — பல்லவத்தின் பொக்கிஷத்தை அல்லவா இழந்திருந்தான்.

சிம்மவர்மனின் ஆட்சியில் காணாமல் போன அத்தி மலைத்தேவனின் பிரதிமை தனது ஆட்சிக் காலத்தில் கிடைத்துவிட்டது என்று பெருமிதம் கொண்டிருந்தான், சிங்கமல்லன். ஆனால் இப்போது — உள்ளதும் போனது என்கிற கதையாகத் தேவ உடும்பர அத்திமலை மேனியனை கடலுக்குள் நழுவ விட்டுவிட்டானே.

பல்லவத்தின் பொக்கிஷமான அத்திமலைத்தேவனை மட்டுமா இவன் கோட்டைவிட்டிருந்தான்? வேறு எந்த நாட்டிலும் அமைந்திராத, ஞானத்தின் உறைவிடமான, பல்லவ நாடு சான்றோர் உடைத்து என்கிற வழக்கிற்குக் காரணமான முக்கூடல் கடிகையைக் கூட அல்லவா, பாலாறு பொங்கி அழித்துவிட்டது..? பல அரிய சுவடிகளும், பட்டோலைகளும் ஆற்று வெள்ளத்தில் காணாமல் போய்விட்டனவே?

இந்தப் பேரழிவுகள் எதனைக் குறிக்கிறது? பரிதவித்துப் போய் ராஜகுரு திருமூர்த்தி லோகிதரைக் கேட்டான். அவர் முகத்தில் சுரத்தே இல்லை. பல்லவத்திற்குப் பல்லாண்டு பாடிக்கொண்டிருந்த காலதேவதை, இனி

அதன் செவிகளில் கர்ண மந்திரத்தை உச்சரிக்கத் தொடங்கியுள்ளது என்பதைச் சிங்கமல்லனிடம் எப்படிச் சொல்லுவார்?

'அத்திமலைத்தேவனைக் கடன்மல்லையில் வைக்காதே' என்று தலைப்பாடமாக இவர் அடித்துக் கொண்டபோது, தான் மன்னன் என்கிற மமதையில் உறக்கத்தின் ஊடே கண்ட கனவுக்கு மதிப்பளித்தான். தனது செயலினால், அனர்த்தங்கள் விளைந்த பிறகு, ராஜகுருவிடம் 'ஏன் இப்படியெல்லாம் நடக்கிறது?' — என்று வினவினால் இவரால் என்ன கூற முடியும்?

தலையில் வைக்கும் கிரீடத்திற்கு ஏன் மகுடம் என்று கூறுகிறார்கள்?

நிறைகுடம் தளும்பாது. அரைகுடமே தளும்பும். ஒரு மன்னனின் தலை நிறைகுடமாக இருக்க வேண்டும். மக்கள் மனமறிந்து செயல்படும் நிறைகுடமாகத் திகழும் கிரீடங்களை மகுடம் என்று அழைப்பார்கள்.

ஆனால் மகுடம் சூட்டிக்கொண்ட அடுத்த கணமே, மன்னர்களுக்கும், மனதில் விகாரங்கள் வந்து குடி ஏறிவிடுகின்றனவே! ஒரு தாயின் கர்ப்பத்தில் சிசுவுக்குப் பத்து மாத வாசம். அந்தப் பத்து மாத பந்தத்தின் போது தாயின் தொப்புள் கொடி வழியாகச் சிசு சுவாசித்து அவள் உண்ணும் உணவையே தானும் உண்டு வாழ்கிறது. சிசு வெளியே வந்ததும், தொப்புள் கொடி அறுபட்ட வுடன் அது தானே சுவாசிக்கிறது அல்லவா?

தனது கர்ப்பத்தில் சிசுவை தாங்குவது போல்தான், ஒரு நாட்டின் அரியணையும் ஐந்தாண்டு காலம் ஒருவனைத் தலைவனாகச் சுமக்கிறது. தாயின் தொப்புள் கொடி மூலம் சுவாசிப்பது போன்று தேசக்கொடியை தனது சுவாசமாகக் கொள்ள வேண்டும் ஒரு தலைவன். கர்ப்பத்தில் உள்ள சிசு, தனது தாயின் உணவை உட்கொள்ளுவது போல, ஒரு மன்னனும், அந்தப்

பதவிக்குரிய அதிகாரத்தை அனுபவிக்கலாம். ஆனால் ஆட்சி என்கிற கர்ப்பத்தில் இருந்து வெளியேறிய பிறகு, சிசு தனது காரியங்களைத் தானே பார்த்துக் கொள்வது போன்று, அந்தத் தலைவன் மீண்டும் அதிகாரத்தை நாடாமல் தனது வாழ்க்கையைத் தானே பார்த்துக் கொள்ள வேண்டும்..

நிறைகுடமாக மகுடங்கள் நின்றால் போதும். காலதேவதை அதனைச் சுமப்பவர்களை மீண்டும் மீண்டும் தனது ஆட்சி கர்ப்பத்தில் தாங்குகிறாள். மமதையும், அறிவின்மையும் கொண்டு தலைகள் ததும்பினால், அந்தக் கர்ப்பத்தினைக் காலதேவதை கலைத்துவிடுகிறது. ஆட்சி குறைபிரசவமாகவே முடிவடைகிறது..

அரியணை ஏறும் எவரும் இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமல் போவதால்தானே, நாட்டில் இவ்வளவு பிரச்னைகள்! இயற்கையின் மர்மங்களை அறிந்து கொள்ளாமல் அதனுடன் மோதியவர்கள் எத்தனையோ பேர் சரித்திரத்திலிருந்து காணாமல் போயிருக்கிறார்கள். இதனைச் சிங்கமல்லன் உணர்ந்தும், இன்று இயற்கையின் சீற்றத்திற்கு ஆளாகி இருக்கிறானே!

**க**டலையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த சிங்கமல்லனின் கடைசி நம்பிக்கையாகத் தண்டின் சில மீனவர்களுடன் *வள்ளூர் சென்றிருந்தான். இவன் அமைத்திருந்த ஜலசயன பெருமாள் கோயிலில்தான் அத்திமலைத்தேவனை பிரதிஷ்டை செய்திருந்தான். ஏழு இரதக்கோயில்களில் கடைசியாக இருந்தது ஜலசயன பெருமாள் கோயில் இரதம். முதல் கோயிலைத் தவிர அனைத்து கோயில்களையும் கடல் கொண்டு விட்ட

* வள்ளூர் தற்போது வசவ சமுத்திரம் என்று அழைக்கப் படுகிறது. 2004 சுனாமியில் நீரில் மூழ்கியிருந்த ஜலசயன பெருமாள் கோயில் வெளிவந்து, அதில் செதுக்கப்பட்டிருந்த 'மல்ல எதி' என்கிற எழுத்துக்கள் புலப்பட்டன.

*நிலையில், அத்திமலைத்தேவனை மீண்டும் மீட்டு எடுத்து அவனை அத்திமலைக் கோயிலிலேயே வைத்துவிட வேண்டியதுதான்.*

*"மன்னா!"*

*சிங்கமல்லன் திரும்பி நோக்க, தலைமை அமைச்சர் ஆமாத்தியாருடன் திருகடன்மல்லையைச் சேர்ந்த பெரியவர்கள் சிலர் நின்றிருந்தனர். அவர்களது முகங்களில் சோகமும், கவலையும் தாண்டவமாடிக் கொண்டிருந்தன.*

*"என்ன விஷயம்?" — புருவங்களை உயர்த்தினான், சிங்கமல்லன்.*

*"இவர்கள் கடன்மல்லையைச் சேர்ந்தவர்கள். மல்லையில் உண்டான ஆழிப்பேரலை புதிய கோயில் களோடு பழைய தலசயன பெருமாள் ஆலயத்தையும் நாசம் செய்துவிட்டது. ஆலயத்தின் முகப்பு மதில்கள் இடிந்து விழுந்து, கடல் நீர் ஆலயத்தில் புகுந்துவிட்டது. பிராகாரங்களில் நீர் சூழ்ந்துள்ளதால், பக்தர்கள் ஆலயத்தினுள் நுழைய அச்சப்படுகின்றனர். தாங்கள் தான் இந்தப் பிரச்னைக்கு உடனடியாக ஒரு தீர்வினை ஏற்படுத்த வேண்டும்!" கிராமத்தலைவர் ஏனமாதேவர் வேண்டிக் கொண்டார்.*

*"புதிய கோயில்கள் போனால் போகட்டும். இருக்கும் கோயிலைக் காப்பாற்றுங்கள்!" — என்கிற தொனியில் அவர் பேச, மன்னன் தலைமை அமைச்சரை உறுத்து நோக்கினான்.*

*"என்ன செய்யலாம், ஆமாத்தியரே?" — சிங்கமல்லனின் குரலில் உயிரே இல்லை.*

*"தலசயன பெருமாள் ஆலயத்தைச் சற்றே உள்தள்ளி எழுப்பலாம் என்று ஊர்மக்கள் கருதுகின்றனர்." — ஆமாத்தியார் கூற, சிங்கமல்லன் அமைதி காத்தான்.*

*'நான் உடனடியாக அதற்கான உத்தரவுகளை இடுகிறேன்!' என்று கூறத்தான் நினைத்தான்*

சிங்கமல்லன். ஆனால், அத்திமலைத்தேவன், இவன் மிகவும் சிறியவன் என்பதைப் புரியவைத்துவிட்ட பிறகு, அந்த கிராமத்தலைவரிடம் எவ்வித உத்தரவாதத்தையும் கொடுப்பதற்கு அஞ்சினான்.

"அத்தியூரான் உங்களது பிரச்னைகளைத் தீர்த்து வைப்பான்!" — மென்மையான குரலில் கூறிவிட்டு, தனக்காக அமைக்கப்பட்டிருந்த கூடாரத்தை நோக்கி நடந்தான். இவனது தந்தை எழுப்பியிருந்த அவந்திக பவனமும் நீரினுள் மூழ்கியிருக்க, அதன் சுழல் கோபுரம் மட்டும் நீருக்கு வெளியே சற்றே எட்டிப்பார்த்தது.

அன்று மாலை வரை தனது கூடாரத்திலேயே அடைபட்டுக் கிடந்தான். மீனவர்களுடன் வள்ளூருக்குச் சென்றுள்ள தண்டின் நல்ல தகவலைக் கொண்டு வருவான் என்று ஏங்கி எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

தண்டின் வெளிறிய முகத்துடன் கூடாரத்தினுள் நுழைந்ததுமே சிங்கமல்லனுக்குப் புரிந்து போனது... அத்திமலைத்தேவன் தேடுதல் வேட்டை, தோல்வியில் முடிந்து போனது என்பது.

"தண்ணீருக்கடியில் ஜலசயன பெருமாள் ஆலயத்தினுள் நுழைந்து தேடிப்பார்த்தனர். உள்ளே சிலை காணப்படவில்லை." — தண்டின் கூறியதும் உறைந்து போனான், சிங்கமல்லன்.

மிகவும் சிரமப்பட்டு நவரத்னதேவி பதுக்கியிருந்த அத்திமலையானின் சிலையை இப்படிக் கடலுக்குத் தாரை வார்ப்பதற்கா தேடிக் கண்டு பிடித்திருந்தான்?

கண்களில் நீர் தளும்பத் தண்டினை நோக்கினான். "எனது தந்தை கனவில் விடுத்த கோரிக்கையால்தான் மனம் பேதலித்தேன், தண்டா. இப்போது என்ன செய்வது?"

தண்டின் மகாமல்லனின் செவிகளை நோக்கிக் குனிந்தான்.

*"அரசே! ஜலசயன பெருமாள் ஆலயத்தின் சுவரில் 'மல்ல எதி' என்கிற சொற்கள் செதுக்கப்பட்டிருந்ததாக மீனவர் தலைவர் கூறுகிறார்!" — தண்டின் கூறியதைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தான், சிங்கமல்லன்.*

*"மல்ல எதி எனது தந்தையின் எதிரி அல்லவா? பீமவர்மர் கூறியபடி இப்போது அவன் எனது எதிரியாகிவிட்டான் போல் இருக்கிறது. அவன்தான் சிலையை எடுத்துச் சென்றிருக்க வேண்டும். அந்த மல்ல எதியை எங்கிருந்தாலும் தேடிக் கண்டுபிடியுங்கள். ஒன்பது அடி சிலையுடன் அவனால் வெகுதொலைவு போயிருக்க முடியாது. மாவிலக்கை துறைமுகத்தைச் சோதனை செய்யுங்கள்..!" — மகாமல்லன் உத்தர விட்டான்.*

*'அத்திமலையானே! எங்கிருந்தாலும், வந்துவிடு! உனது அத்திமலையிலேயே உன்னை பிரதிஷ்டை செய்கிறேன்.' — மனதிற்குள் புலம்பிக் கொண்டிருந்தான், சிங்கமல்லன்.*

# பொருளடக்கம்

## அ. ஆழிப்பேரலை


1. உக்ரோதயம் .................... 23
2. மானமுள்ள மானவர்மன் .................... 31
3. பிரவாள மாளிகை .................... 42
4. புடலைத் தோட்டத்தில் சடலங்காய்கள் .................... 59
5. உயிரா.. மானமா? .................... 68
6. கழுத்தில் சுற்றிய நாகம் .................... 85
7. ஒரு அலங்காரி, ஒரு அலங்கோலன்! .................... 103
8. பெருவளத்தில் குருதி வெள்ளம் .................... 117
9. பட்டுப்போன பல்லவ மரம்! .................... 125
10. கைலாயம் முதல் பாதாளம் வரை .................... 131


## ஆ. காம்போஜ காஞ்சி


11. புதிய பல்லவம் பூத்தது! .................... 144
12. காளையைச் சுற்றிய ஓநாய்கள் .................... 159
13. நந்திபுரத்தில் மங்கையர்கோன் .................... 164
14. பரகாலமே பதில் சொல்லும்! .................... 188
15. உதயசந்திரன் உதயமானான்! .................... 197
16. அதிகார நந்தி .................... 216
17. புகைபோக்கியின் உச்சியில்...! .................... 225
18. விருந்தில் ஒரு வியூகம்! .................... 243
19. பாசம்.. ரசாபாசம் .................... 261
20. கங்கம், மானபங்கம் .................... 269
21. காம்போஜக் கலகம் .................... 280

22. அஞ்சி நிற்கும் காஞ்சி! ....................................293
23. திசை மாறிய அத்தி! ....................................303
24. ஸ்வஸ்திக கிணறு ....................................323
25. சூரியவித்து ....................................334
26. பாணன் மகள் எய்த பாணம் ....................................346
27. பாயும் தாய், பதுங்கும் தனயன்! ....................................355
28. கடம்பும், உடும்பும் ....................................365
29. சீறியாழ், பெரும் பாழ்! ....................................372
30. நந்திக்கலம்பகம் ....................................380
31. அஸ்வம் முதல் அபராதம் வரை ....................................397
32. கடைசி பல்லவன் ....................................402

## இ. சோழ காஞ்சி

33. நினைவுகள் நிலைப்பதில்லை! ....................................439
34. காலத்தின் கட்டாயம் ....................................448
35. புதிய மொந்தை, பழைய கள் ....................................456
36. சோழ கிருமி! ....................................461
37. கரி வருது, கரிவரதா! ....................................467
38. மீண்டும் பிரவாள மாளிகை ....................................474
39. தேவியின் கோபம் ....................................485
40. அத்திமலைத்தேவன் ஆட்டுவிக்கிறான் ....................................487

# 1. உக்ரோதயம்

சிங்கமல்லன், மாமல்லன் என்று மக்களால் புகழப் பட்டாலும், கைக்கு எட்டியதை நழுவவிட்டோம் என்கிற வேதனை உள்ளத்தை அரிக்க, தனது காவற்படை வீரர்களிடம் "எப்பாடு பட்டாவது அத்திமலையானின் சிலையைத் தேடிக்கண்டுபிடித்து வாருங்கள்" என்று கட்டளையிட்டுவிட்டு, ஒத்தாடை அரண்மனைக்குத் திரும்பிக் கொண்டிருந்தான், நரசிம்ம பல்லவன்.

சிங்கமல்லன் அத்தியூரைக் கடந்து, எண்கரத்தான் ஆலயத்தின் அருகே வந்துகொண்டிருந்த போது, புதிய உபதளபதி சுந்தராக்ஷன் எதிரே தனது புரவியில் விரைந்து வந்து கொண்டிருந்தான். அவன் தன்னைத் தேடித்தான் அவ்வளவு வேகமாக வருகிறான் என்பதைப் புரிந்து கொண்டு சிங்கமல்லன் தனது புரவியை நிறுத்த, சுந்தராக்ஷன் தனது புரவியிலிருந்து தாவிக் குதித்து, சிங்கமல்லனை பணிந்தான்.

"அரசே! மிக அவசரம்..! தங்களது பாட்டனார் பீமவர்மன் மிகவும் ஆபத்தான கட்டத்தை எட்டியிருக் கிறார் என்று மருத்துவர்கள் அறிவித்துவிட்டனர். பீமவர்மர் இறுதியாக ஒருமுறை உடனே தங்களைப் பார்க்கத் துடிக்கிறார்..!" — சுந்தராக்ஷன் கூறியதும்தான் தாமதம் ஒத்தாடையை நோக்கி, சிங்கமல்லனின் குதிரை பறந்தது.

பீமவர்மனின் மஞ்சத்தின் அருகே நின்றான், சிங்கமல்லன்.

அவரை நோக்கிக் குனிந்து அவரது செவியில் கிசுகிசுத்தான்.

*“பாட்டா! சிங்கமல்லன் வந்திருக்கிறேன்..!”*

*அவனது குரலைக் கேட்டால் மட்டுமே கண் திறப்பது என்கிற தீர்மானத்தில் இருந்தவரைப் போன்று பீமவர்மனின் கண்கள் திறந்தன. மரணம் கண்களின் வழியே எட்டிப்பார்க்க, அதன் ஊடே பார்வையை நிலைநிறுத்தி சிங்கமல்லனைப் பார்த்தார், பீமவர்மன்.*

*“வந்துவிட்டாயா, சிங்கமல்லா! நான் இறப்பதற்குள் மீண்டும் அத்திமலையானை தரிசிக்க வைத்த உனக்கு எனது நன்றிகளைத் தெரிவிக்கவே உன்னை அழைத்தேன். ஆனால், ஆழிப்பேரலையில் மல்லை அழிந்துவிட்டதாக, மருத்துவரின் உதவியாளர்கள் பேசிக்கொண்டிருந்ததைச் செவிமடுத்தேன். நமது அத்திமலையானின் பிரதிமைக்கு ஆபத்து ஒன்றும் இல்லையே?” — பீமவர்மரின் குரலில் சந்தேகம் தொனித்தது.*

*‘இல்லை’ என்கிற பாவனையில் தலையசைத்தான், சிங்கமல்லன். இறக்கும் தருவாயில் இருப்பவரிடம், மீண்டும் சிலையைக் காணவில்லை என்று கூறுவானேன்.*

*“பாட்டா! மல்லையில் வள்ளூர் ஆலயத்தில் ஜலசயன பெருமாளாக அத்திமலைத்தேவன் சயனித்திருக்கிறான். அவனைக் காண மக்கள் கூட்டம் அலைமோதுகிறது.” — சிங்கமல்லன் கூறினான்.*

*“கேட்கவே ஆனந்தமாக இருக்கிறது..! சிங்கமல்லா! இப்போது நான் உன்னிடம் இரகசியம் ஒன்று கூற வேண்டும். யாருக்கும் தெரியக் கூடாது. அறையில் இருக்கும் அனைவரையும் வெளியேற்று!” — பீமவர்மன் கூற, அவரைத் திகைப்புடன் நோக்கிய சிங்கமல்லன், உடனே திரும்பி நோக்க, அறையில் இருந்த மருத்துவரின் உதவியாளர்கள், தலையைப் பணிந்துவிட்டு, அவசரமாக வெளியேறினர்.*

*காற்றில் தனது கைகளைப் பீமவர்மன் துழாவ, அவரது கைகளைப் பற்றிக் கொண்டான், சிங்கமல்லன்.*

"பல்லவத்தின் தலையெழுத்தையே மாற்றிய ஒரு இரவு. ஐந்து பேருக்கு முதல் இரவு அன்று! அன்று இரவுதான் நவரத்ன பல்லவியின் தற்கொலை, விஜயவர்மனின் கொலை, ஜெயவர்மன் காணாமல் போனது மற்றும் அத்திமலையான் காணாமல் போனது எல்லாமே நிகழ்ந்தது. அதன் பிறகு உப்பரிகையில் நடந்த குடும்ப ஆலோசனைக் கூட்டத்தில் ராஜவர்மன் ஒரு கருப்பாடு குடும்பத்தில் இருப்பதாகக் கூறினான். அனைவருமே அது ராஜவர்மனின் தம்பி விஜயவர்மன் என்றுதான் நினைத்தனர். ஆனால் அவன் அல்ல அந்தக் கருப்பாடு..!" சற்றே பேசுவதை நிறுத்திவிட்டு, இருமினார் பீமவர்மர்.

"தெரியும் பாட்டா..! குணபரன் என்கிற பிரமதி என்கிற மல்ல எதிதானே அந்தக் கருப்பாடு!" — சிங்கமல்லன் கூறினான்.

'அவன்தான் இப்போது எனது எதிரி — மகாமல்ல எதிரி! அவனது வசம்தான் அத்திமலைத்தேவனின் சிலை தற்போது உள்ளது.' மனதினுள் நினைத்தான், சிங்கமல்லன்.

"ஆம்! அவன்தான் அந்தக் கருப்பாடு என்று மகேந்திரனிடம் நான்தான் கூறினேன். அவனும் அதனை நம்பினான். பழி வாங்கும் வெறியோடு அலைந்த அவனைக் கருப்பாடு என்று கூறுவதற்கு மிகவும் எளிதாக இருந்தது. ஆனால் அவனும் அந்தக் கருப்பாடு இல்லை." — பீமவர்மன் கூற, திகைத்துப் போனான், சிங்கமல்லன்.

"பின் யார் அந்தக் கருப்பாடு?" — சிங்கமல்லனின் குரல் சற்றே கோபத்துடன் ஒலித்தது.

சற்றே அமைதியுடன் கண்களை மூடிய பீமவர்மன், பிறகு நிதானமாகக் கண்களைத் திறந்து அவனை பலவீனமாகப் பார்த்தார்.

"ராஜவர்மன் குறிப்பிட்ட கருப்பு ஆடு நான்தான். ராஜ ஸ்ரீக்கும், ராஜவர்மனுக்கும் அந்தக் கருப்பு ஆடு நான்தான்

என்பது தெரியும். ஆனால் அவர்கள் என்னைக் காட்டிக் கொடுக்கவில்லை. பல்லவ அரண்மனை கஜானாவைக் கொள்ளையடித்தது நான்தான். அத்திமலைத்தேவனின் ஸ்ரீதள மணியைக் களவாடி ரணதிலகனிடம் கொடுத்தது நான்தான். நான் ரணதிலகனிடம் ஸ்ரீதள மணியைத் தரும்போது எனது சகோதரி நவரத்ன பல்லவி அதனைப் பார்த்துவிட்டாள். அப்போது அவள் பிரக்ஞுதாராவின் வசியத்தில் இருந்ததாக நானும், ரணதிலகனும் நினைத் திருந்தோம். ஆனால் அன்று அவள் வசியத்திலிருந்து விடுபட்டிருந்ததால், அத்திமலையான் பிரதிமையை நான் கைப்பற்ற ரணதிலகனுடன் சேர்ந்து சதி செய்வதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தாள். அதனால் அவள் முன்னேற்பாடாகத் தனது சீதன வெள்ளாட்டிகளின் உதவியோடு சிலையை ஒளித்துவிட்டாள். சதியில் அரச குடும்பத்தைச் சேர்ந்த நானே ஈடுபட்டதை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. எனது செயல்தான் அவளது தற்கொலைக்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும்." — வேதனையுடன் சிறிது இடைவெளி தந்தார், பீமவர்மன்.

"அரச குடும்பத்தில் ஐந்து திருமணங்கள் நிகழ்ந்தன. அன்று மச்ச வாசுதேவர் நான்கு இளவரசர்களையும், நவரத்னாவையும் அரண்மனை நந்தவனத்தில் மரக்கன்று களை நடச்சொன்னார். வர்மகேது என்கிற குளிகத்தை என்னிடம் கொடுத்து அதனைத் தோட்டத்தில் விதைக்கும்படி கூறினாள் பிரக்ஞுதாரா. மன்னனாக அரியணை ஏறும் ஆசையில் அதனையும் செய்தேன். பிறகு ராஜஸ்ரீ, மற்றும் ராஜவர்மனிடம் மச்ச வாசு தேவரின் மீது பழியைத் திருப்பினேன்..!" — பீமவர்மன் கூறினார்.

சிங்கமல்லன் அதிர்ந்து போய் நின்றான். இவனுக்கு ஆசானாக, வழிகாட்டியாகத் திகழ்ந்த பீமவர்மர்தான் பல்லவ குடும்பத்தின் கருப்பு ஆடா? — திடுக்கிட்டுப் போய் அமர்ந்திருந்தான், சிங்கமல்லன். ஆனால் மரணப்

*படுக்கையில் இருப்பவரிடம் எப்படிக் கோபத்தைக் காட்டுவது..? மரணப்படுக்கைகளில் தானே பலர் தங்களது முகமூடிகளை அகற்றுகின்றனர்.*

*தனது மனதில் வைத்திருந்த பாரத்தை இறக்கிவிட்ட உணர்வு பீமவர்மரின் முகத்தில் தெரிந்தது.*

*"பிரக்ஞுதாரா தனக்குத் தேவ உடும்பர அத்திமர சிலை வேண்டும் என்றாள். ரணதிலகன் விலைமதிக்க முடியாத ஸ்ரீதள மணியைக் கேட்டான். இரண்டையும் நான் அளித்தால் என்னைப் பல்லவ அரசனாக அமர்த்து வதாகப் பிரக்ஞுதாரா உறுதி அளித்தாள். நானும் சிலையைக் கடத்துவதற்கு முயற்சிகளைச் செய்தேன். ஸ்ரீதள மணியைக் கஜானாவில் இருந்து அபகரித்தேன். மணியை ரணதிலகனிடம் அளித்தேன். ஆனால் நவரத்ன பல்லவியைக் காணவில்லை என்றதும் பிரக்ஞுதாராவும், ரணதிலகனும் என் மீது சந்தேகம் கொண்டனர். என்னிடமிருந்து ஸ்ரீதளத்தைப் பறிமுதல் செய்ததும், பிரக்ஞுதாரா என்னை நோக்கு பார்வையால் வசியம் செய்ய, நான் எனது ஆடைகளைக் களைந்துவிட்டுத் திகம்பரமாக ஓட ஆரம்பித்தேன். பிறகு சில சமணத் துறவிகள் என்னைக் காப்பாற்றிச் சந்திரகிரிக்கு அழைத்துச் சென்றனர். அங்கேயே துறவறத்தை ஏற்றேன்.*

*"நான் துறவியாக இருப்பதை அறியாமல், ரணதிலகன் சந்திரகிரி வடக்கில் உள்ள சிங்ககிரியில் தனது பொக் கிஷங்களைப் பதுக்கி வந்தான். அதில் ஸ்ரீதள மணியும் இருந்தது. ஒரு நாள், சமணத்தின் முதல் தீர்த்தங்கரரான ஆதிதேவரின் அவதார தினம் வந்தது. அன்று அவரது சிலையை ஸ்ரீதள மணியைக் கொண்டு அலங்கரித்தான்.**

---

* அத்திமலையானின் சிலை நவரத்ன பல்லவியால் பதுக்கப் பட்டது. பின்னாளில் காம்போஜ நாட்டு ஐராவத மலை உச்சியின் வசந்தகுடீரத்தின் உப்பரிகையில் நள்ளிரவில் அமர்ந்திருந்த, தானவர்மன், ககனா, சூரியவர்மன் மற்றும் ஸ்ரீவர்தனின் கண்களில் ஸ்ரீதள மணியின் ஒளி தெரிவதாகவும், உடனே நிலநடுக்கம் ஏற்படுவதாகவும், அதனால் சூரியவர்மன்

அன்று அத்திமலைத்தேவனுக்கு உரித்தான ஹஸ்த நட்சத்திரம். எனவே அந்த மணியை அணிவித்ததும் சிம்மகிரியே ஜொலித்தது. இதுவும் அத்திமலையானின் விருப்பம் போலும். ஆதி அத்திமலையானின் ஸ்ரீதளத்தை ஆதிதேவன் அணிந்திருக்கிறான் என்று நினைத்தேன்.

"எனக்கு ஒரு யோசனை தோன்றியது. மீண்டும் ரண திலகனிடம் இருந்து ஸ்ரீதளத்தை அபகரித்துவிட வேண்டும் என்று தீர்மானித்தேன். சமணப் பிக்கு ஒருவரின் உதவியோடு, சந்திரகிரியைச் சேர்ந்த அஜட சேனன் என்கிற பொற்கொல்லர் ஒருவரை வரவழைத்து ஸ்ரீதளத்தைக் காட்டி ஒரு போலியைத் தயார் செய்தோம். மீண்டும் பொக்கிஷங்களைத் தான் பதுக்கி இருந்த குகையில் ரணதிலகன் வைக்கும் போது, அந்தச் சமணத் துறவி, ஸ்ரீதளத்தை என்னிடம் அளித்துவிட்டு, போலியை பொக்கிஷங்களோடு வைத்துவிட்டான். அந்தப் போலியினைத்தான் உனது தந்தை தனது வருங்கால மனைவியான உனது தாய்க்கு பரிசாகக் கொடுத்தான்." — பீமவர்மருக்கு நெஞ்சை அடைத்தது. துக்கத்தாலா அல்லது பலவீனமான உடல் நிலையாலா என்பது பற்றிச் சிங்கமல்லன் கவலை கொள்ளவில்லை.

இப்படியா குடும்பப் பாசம் அற்று, சொந்த பந்தங்களுக்கு எதிராகவே சதியில் ஈடுபடுவார்கள்? அரியணை ஆசை இரத்தத்தை வற்றச் செய்துவிடுமா என்ன?

அடுத்தது பீமவர்மர் கூறிய தகவல் சிங்கமல்லனை திகைக்க வைத்தது.

---

நண்பனுடன் காஞ்சிக்கு வருவதாகவும் குறிப்பிட்டு இருந்தேன். சிங்ககிரியில் ஆதிதேவரின் சிலைக்கு ஸ்ரீதள மணி அணிவிக்கப் பட்ட அன்று இரவுதான் அவர்கள் தங்கள் வசந்தகுமரத்தின் உப்பரிகையில் அமர்ந்தபடி அதன் ஒளியைக் கண்டிருக் கின்றனர். மூன்றாம் பாகத்தில் இந்தச் சம்பவங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன.

"சிங்கமல்லா! ஸ்ரீதள மணியைக் குபேரனே அத்தி மலையானுக்குச் சாற்றியது. பூமியில் கிடைக்காத குபேர புரியில் இருக்கும் யட்ச நேத்திர கற்களைக் கொண்டு செய்யப்பட்டது. எனவே விலை மதிக்க முடியாதது. அந்த மணியை அப்படியே வைத்திருந்தால் நான் சிக்கிக் கொள்வேன் என்று எண்ணினேன். எனது நண்பன் அந்தப் பொற்கொல்லன் அஜடசேனனின் உதவியோடு அந்த மணியின் வடிவினை மாற்றி, பதக்கமாக இருந்ததை ஒரு ஹாரமாக மாற்றினேன். அதனை நானே அணிந்தேன். அதனை அணிந்த பின்னர்தான் கால்கள் நடக்க இயலாமல் போயின. எனவே அதனைப் பத்திரப்படுத்தினேன். இப்போது அதை உன்னிடம் கொடுத்துவிடுகிறேன். நீ மீண்டும் மல்லையில் எழுந்தருளி யிருக்கும் அத்திமலைத் தேவனுக்கே அவரது ஸ்ரீதள மணியைச் சாற்றிவிடு. இப்போது அதன் பெயர் ஸ்ரீதள மணியல்ல; உக்ரோதயம். இறைவனைத் தவிர வேறு யார் அணிந்தாலும் அந்தக் கற்கள் உக்கிர நேத்திரங்களைத் திறந்து கொள்ளும். அந்தக் கற்கள் நிலநடுக்கங்களை உண்டாக்கும் அளவுக்கு வீர்யத்தைக் கொண்டது. அதைக் களவாடி அணிந்ததால், நான் பல துன்பங் களைப் பட்டுவிட்டேன். சித்தம் கலங்கி நிர்வாணமாகத் திரிந்து கொண்டிருந்தேன். பிரக்ஞுதாரா, ரணதிலகன் ஆகியோரோடு சேர்ந்து சதி செய்து, ஸ்ரீதளத்தைக் களவாடி பல்லவ வம்சத்தில் குழப்பம் விளைவித்த என்னை இந்த நாடு மன்னிக்கட்டும்.." என்ற பீமவர்மன் தான் தலைசரித்திருந்த திண்டின் பின்பாகக் கைவிட்டு, ஒரு வெள்ளிப் பெட்டகத்தை எடுத்துச் சிங்கமல்லனிடம் நீட்டினார்.

சிங்கமல்லன் அதனைத் திறந்து பார்த்தான். அத்திமலையானின் ஸ்ரீதள மணி உள்ளே இருந்தது. தவறு! இப்போது யட்ச நேத்திரக் கற்களால் வடிவமைக்கப்பட்ட ஒரு ஹாரமாக மாறியிருந்தது. உக்கிரத்தை உமிழக்கூடிய அந்த ஹாரத்தின் பெயர்,

*உக்ரோதயம். வெகுநேரம் கண்ணிமைக்காமல் உக்ரோதயத்தையே வெறித்துக் கொண்டிருந்தான் சிங்கமல்லன்.

“அத்திமலையானின் திவ்ய ஆபரணத்தை உருமாற்ற உங்களுக்கு எப்படி மனம் வந்தது பாட்டா?” — சிங்கமல்லன் கேட்க, அவர் பதில் தரவில்லை. உக்ரோதயத்தில் இருந்து பார்வையைத் திருப்பிப் பீமவர்மரை நோக்கினான், சிங்கமல்லன். அவர் உலக வாழ்வை ஏற்கனவே துறந்திருந்தார்.

ஆக, அத்திமலையானுக்கு அணிவித்து ஆழிப் பேரலையில் அவனது சிலையுடன் காணாமல் போன ஸ்ரீதள மணி போலியானது போலும். சற்றே மனம் லேசாகச் சிங்கமல்லன் உக்ரோதயத்தைத் தனது தனிப்பட்ட கஜானாவில் பத்திரப்படுத்தினான்.

* உக்ரோதயம் ஹாரம் சரித்திரத்தில் மிகவும் புகழ் பெற்றது. இதனை அணிந்த பல்லவர்கள் நாசத்தைத் தேடிக் கொண்டார்கள். விரைவிலேயே உக்ரோதயம் பல்லவர்களின் அழிவுக்குக் கட்டியம் கூறத் துவங்கியது.

# 2. மானமுள்ள மானவர்மன்

**மா**விலக்கை கடற்கரையை நோக்கி ஊர்ந்து கொண்டிருந்தது, அந்தத் தோணி. தோணியைச் செலுத்திக் கொண்டிருந்த அந்த வாலிபன், திரண்டிருந்த அவனது புஜபலத்தால் அனாயசமாக அந்தத் தோணியைச் செலுத்திக் கொண்டிருந்தாலும், மனதில் அழுத்திக் கொண்டிருந்த பாரங்களால் தோணி மெதுவாகவே ஊர்ந்து கொண்டிருந்தது. விண்ணில் வைரங்களாக ஜொலித்த தாரகைகள் அவனது மனதுக்கு இதத்தைத் தரவில்லை.. வைரமாலை ஒன்று அறுந்து வைரங்கள் சிதறியது போன்று காட்சி தரும் விண்ணைக் கவனித்ததும் சிதறுண்டு போன தனது சங்கபோதி பரம்பரையின் அவல நிலை நினைவுக்கு வர, அந்த வாலிபனது முகம் சோகத்தில் ஆழ்ந்தது. அவன் பெயர் மானவர்மன். இலங்கையின் சங்கபோதி பரம்பரையைச் சேர்ந்தவன். *சங்கபோதி பரம்பரைக்கும், திஸ்ஸவானா

---

* பல்லவர்கள் காலத்தில் இலங்கையை மாற்றி மாற்றி ஆண்ட பரம்பரைகளின் பெயர் சங்கபோதி மற்றும் திஸ்ஸவானா. கி.பி. 689-ல் திஸ்ஸவானா பரம்பரையைச் சேர்ந்த மூன்றாம் அக்கபோதி இறக்க, மன்னனாகப் பதவி ஏற்க சங்கபோதி பரம்பரையைச் சேர்ந்த மானவர்மன் மன்னனாகத் தேர்ந் தெடுக்கப்படுகிறான். ஆனால், மாவீரனும் செல்வாக்குமிக்கச் செல்வந்தனுமான பூவண்ண ஆழிசிங்கன் என்னும் தமிழ்க் குடிமகன் தனது செல்வாக்கினைப் பயன்படுத்தி இலங்கை தளபதியும் தனது நண்பனுமான உன்னகரா ஹததத்தன் என்பவனை மன்னனாக அறிவிக்கிறான். மானவர்மனை கொலை செய்ய உத்தரவிடுகிறான் ஹததத்தன். அவனிடம் இருந்து தப்பிப் பல்லவத்திற்கு வரும் மானவர்மன் நரசிம்ம வர்ம பல்லவனை ஒரு ஆபத்திலிருந்து காப்பாற்ற, பிரதி

*என்கிற மற்றொரு குலத்திற்கும் அரியணையைக் கைப் பற்றுவதில் வெகு காலமாகவே போட்டி நடைபெற்று வந்த நிலையில், திஸ்ஸவானா பரம்பரையைச் சேர்ந்த நான்காம் அக்கபோதி வாரிசு இல்லாமல் இறந்து போக, அரியணை இனி முழுவது மாகத் தங்களுக்கே உரித்தானது என்கிற மகிழ்ச்சியில் சங்கபோதி பரம்பரை அக்கபோதிக்கு வாரிசாகத் தங்கள் பரம்பரையைச் சேர்ந்த மானவர்மனை மன்னனாகத் தேர்ந்தெடுத்தனர்.*

*மானவர்மன் மன்னனாக அறிவிக்கப்பட்டதும், சங்கபோதி பரம்பரையினர் ஆனந்தத் தாண்டவமாடினர். அவர்களை எதிர்த்து வந்த திஸ்ஸவானா பரம்பரை வாரிசின்றி அழிந்து போனது என்பது அவர்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தந்தது.*

*கோலாகலங்களுக்கிடையே, சங்கபோதி பரம்பரையின் ஆசான் பதுமவாசர் மானவர்மனை நெருங்கினார்.*

*"மானவர்மா! திஸ்ஸவானா பரம்பரையைச் சேர்ந்த அக்கபோதி மன்னர் பதவியில் நீண்ட நாட்கள் நிலைத்ததற்குக் காரணமே, *சிங்ககிரியின் வணிகரும்,*

---

உபகாரமாக நரசிம்ம பல்லவன் தனது படைகளை இலங்கைக்கு அனுப்பி ஹததத்தனை வீழ்த்தி மானவர்மனை மன்னனாக அரியணையில் அமர்த்துகிறான். அப்போது தொடங்கும் இலம்பகாணா பரம்பரையின் ஆட்சி தொடங்கி கி.பி. 1017 காலம் வரை தொடர்ந்தது. காசகுடி செப்பேடுகளில் நரசிம்ம பல்லவன் இலங்கையைக் கைப்பற்றியது பற்றிய குறிப்புகள் உள்ளன. பௌத்த நூலான மகாவம்சமும் இதனை ஊர்ஜிதம் செய்கிறது.

* Sigiriya or Sinhagiri (Lion Rock Sinhala: සිගිරිය,

Tamil: சிகிரியா, pronounced see-gi-ri-yY) is an ancient rock fortress located in the northern Matale District near the town of Dambulla in the Central Province, Sri Lanka. The name refers to a site of historical and archaeological significance that is domi nated by a massive column of rock nearly 200 metres (660 ft) high. According to the ancient Sri Lankan chronicle the Cula vamsa, this site was selected by King Kashyapa (477 - 495 CE)

தமிழரின் தலைவருமான பூவண்ண ஆழிசிங்கர்தான். நீ அரியணையில் நிலைக்க அவரது ஆசியும், ஒத்துழைப்பும் அவசியம். நாளைக் காலை என்னுடன் நீ சிகிரி மலை*க்கு வர வேண்டும், அங்கே சென்று அவர்கள் இருவரையும் சந்தித்து ஆசி கோரு!" — பதுமவாசர் கூற, மானவர்மன் தலையசைத்தான்.

"நாளை விடியலில் புறப்படலாம் ஆசானே!" — மானவர்மன் கூறினான்.

அன்றிரவு —

மன்னனாகப் போகின்ற உற்சாகத்தில் தனது சயன அறையில் நுழைந்தான் மானவர்மன். தனது மஞ்சத்தை நோக்கி அவன் நகர்ந்த போது, சரியாகச் சாளரத்தின் வழியாக குத்துவாள் ஒன்று பறந்து வந்து மஞ்சத்தின் மீது விழுந்தது. ஒருகணம் உறைந்து போய் நின்றான், மானவர்மன்.

ஓடிச்சென்று சாளரத்தின் வழியே எட்டிப்பார்க்க, கீழே ஒரு நங்கை நின்றிருந்தாள். இவனை நோக்கி தனது இரு கைகளையும் அசைத்தாள்.

"நான்தான் குத்துவாளை வீசி எறிந்தேன். அவசரமாகத் தங்களுடன் பேச வேண்டும், மிக அவசியமும் கூட...!" — அந்தப் பெண் கூற, மானவர்மன் உடனடியாகக் கீழே இறங்கிச் சென்றான். அந்தப் பெண்ணைத் தனது மாளிகையினுள் அழைத்தான்.

"பெண்ணே நீ யார்? இந்த இரவு வேளையில் எதற்காக வந்தாய்? எனது சயன அறைக்குள் எதற்காகக் குத்துவாளினை வீசினாய்?" — மானவர்மன் கேட்டான்.

---

for his new capital. He built his palace on the top of this rock and decorated its sides with colourful frescoes. On a small plateau about halfway up the side of this rock he built a gateway in the form of an enormous lion. The name of this place is derived from this structure - Sînhâgiri, the Lion Rock (an etymologysimilar to Sinhapura, the Sanskrit name of Singapore, the Lion City).

*"மானவர்மரே! நான் இறந்து போன மன்னன் அக்கபோதியின் மகள் தர்ஷவர்தினி. எனது தந்தையின் மரணத்திற்குப் பிறகு தாங்கள் மன்னனாகத் தேர்ந் தெடுக்கப்பட்டீர்கள் என அறிந்தேன். உங்களை எச்சரித்துவிட்டுப் போகலாம் என்று வந்திருக்கிறேன்..!" — தர்ஷவர்தினி கூறினாள்.*

*"என்ன எச்சரிக்கை விடுக்கப்போகிறாய், பெண்ணே?" — கேலியுடன் கேட்டான் மானவர்மன்.*

*"நாளை உமது குரு பதுமவாசர் தங்களைச் சிகிரி மலைக்கு அழைத்துச் சென்று, பூவண்ண ஆழிசிங் கரிடமும், இலங்கை தளபதி உன்னகரா ஹததத்தரிடமும் ஆசி கோரச் சொன்னாரா?" —தர்ஷவர்தினி கேட்டாள்.*

*"ஆம்! என்னிடம் அவ்வாறுதான் கூறினார்!" — மானவர்மனின் புருவங்கள் வியப்பினால் உயர்ந்தன.*

*"உங்கள் குருவுடன் சிகிரி மலைக்குச் சென்றீர்கள் என்றால், தங்களுக்கு ஆசி கிடைக்காது. பரலோக பிராப்திதான் கிடைக்கும். மன்னனாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள தங்களைக் கொன்று சிகிரி அகழிகளின் முதலைகளுக்குத் தீனியாகப் போட்டுவிட்டு, ஹததத்தனை மன்னனாக அறிவிக்கத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது" — தர்ஷவர்தினி கூறினாள்.*

*"உனக்கு இது எப்படித் தெரியும்?" — திகைத்துப் போய்க் கேட்டான் மானவர்மன்.*

*"எனது தந்தையின் மரணப்படுக்கையில்தான் இந்தத் திட்டம் தீட்டப்பட்டது. என்னைத் திருமணம் செய்து கொள்ளும் எண்ணத்தில் உள்ள ஹததத்தன் என்னையும் இந்தச் சதியில் ஒருவளாக இணைத்துள்ளான். ஆனால் நான் அவனை விரும்பவில்லை. பழைய மன்னர் சிலமேகவானாவின் பெயரன் வீரகஸ்ஸாவை விரும்புகிறேன். என்னை உங்கள் குருவை சந்திக்க அனுப்பியிருக்கிறார்கள்.*

"சிகிரி மலையில் உங்கள் இருவருக்கும் விருந்து தரப்படும். நீங்கள் அமரும் நாற்காலியின் கீழே பாதாளக் குகையின் வாயிற்கதவு உள்ளது. நேராக முதலைகள் இருக்கும் அகழிக்கு அந்தக் குகையின் உள்ளே விழுபவர்களை எடுத்துச் சென்று சேர்த்துவிடும். வெகு நாட்களாகவே பசியால் தவித்துக் கொண்டிருக்கின்றன, அந்த முதலைகள். ஹததத்தர் மற்றும் பூவண்ணர் உங்களைக் கொல்ல திட்டம் தீட்டிவிட்டனர். அதன்படி உங்களை இடது நாற்காலியிலும், உங்கள் குருவை வலது நாற்காலியிலும் அமர வைக்கவும், முடிவு செய்திருக் கின்றனர். இடது நாற்காலியில் அமரும் தாங்கள் உணவு உண்டதும், அதில் கலக்கப்பட்டுள்ள மூலிகை மருந்து பிரக்ஞையை இழக்கச் செய்யும். மூலிகையினால் நினைவாற்றலை இழப்பீர்கள். அப்போது உங்களை முதலைகளுக்குப் பலியிடுவார்கள். இதுதான் அவர்களது திட்டம்." — தர்ஷவர்தினி கூற, உறைந்து போய் நின்றிருந் தான், மானவர்மன்.

"கவலைப்படாதீர்கள்..! நான் இன்னும் உங்கள் குரு பதுமவாசரைச் சந்திக்கவில்லை. அதற்கு முன்பாகத் தங்களைச் சந்தித்திருக்கிறேன். அவர்கள் உங்கள் சங்க போதி வம்ச குரு பதுமவாசரை இதுவரை கண்டதில்லை. எனவேதான் என் மூலமாக ஒரு முக்கியத் தகவலை அவரிடம் தெரிவிக்க அனுப்பியுள்ளனர். சிகிரி மலை விருந்தில் கலந்து கொள்ள வரும் பதுமவாசரை மஞ்சள் ஆடையிலும், உங்களைச் செம்மை வண்ண ஆடையிலும் வரும்படி சொல்லியிருக்கிறார்கள். செம்மை வண்ண ஆடையை அணிந்தவரே மானவர்மர். அவரே கொல்லப்பட வேண்டும் என்பது திட்டம். நான் உங்கள் குருவிடம் மாற்றிச் சொல்கிறேன். நீங்கள் கூடிய வரையில் மஞ்சள் ஆடை அணிந்து சற்றே குலகுரு போன்று ஆடை அணியுங்கள். அவரை நான் இடது பக்க நாற்காலியில் அமரச் சொல்கிறேன். நீங்கள் வலது பக்க நாற்காலியில் அமருங்கள். சதித்திட்டத்தின்படி உங்கள் குரு முதலை

களுக்குப் பலி ஆகட்டும். நீங்கள் சதியை முறியடித்து இலங்கையின் மன்னனாகப் பதவி ஏற்றுக்கொள்ளுங்கள். நான் எனது காதலன் வீரகஸ்ஸாவை அடைகிறேன்!" — தர்ஷவர்தினி கூறினாள்.

"என்னைக் காப்பதற்காக இவ்வளவு பிரயாசை எடுத்து இருக்கிறாயே.. என்ன காரணம்?" — மானவர்மன் கேட்டான்.

"எனது தந்தை அக்கபோதியை தனது இரும்பு வளையத்தினுள் வைத்திருந்தான், ஹதத்தன். என்னையும் மணந்து கொண்டு, அரியணையையும் கைப்பற்ற நினைக்கிறான். அதற்குப் பூவண்ணன் உடந்தை. கொடியவனான அவன் என்னையும் மணக்கக் கூடாது, இந்த நாட்டையும் ஆளக்கூடாது என்கிற நல்லெண்ணம்தான் உங்களை எச்சரிக்கத் தூண்டியது. நான் உடனே சென்று உங்கள் குருவை சந்திக்கப் போகிறேன். மறக்க வேண்டாம். நீங்கள் மஞ்சள் ஆடை அணிந்து விருந்தினர் அறையில் வலது நாற்காலியில் அமர வேண்டும்" என்றவள், அவனைத் திரும்பிப் பாராமல் நடந்தாள்.

"தர்ஷவர்தினி! உனது உதவியை மறக்கமாட்டேன். ஒரு வேளை, நான் சூழ்ச்சிகளை முறியடித்து இலங்கை மன்னனாகப் பதவியேற்றால், உனது காதலன் வீரகஸ்ஸாவை எனது தளபதியாக நியமிப்பேன்!" — உணர்ச்சியுடன் கூறினான், மானவர்மன்.

"அப்படியெல்லாம் வாக்குத் தராதீர்கள், மானவர்மரே. எனது காதலன் வீரகஸ்ஸாவும் பேராசை மிக்கவர். தளபதியாக அவரை நியமித்தால், உங்களுக்கு எதிராகச் செயல்பட்டு மன்னனாகும் முயற்சியைச் செய்வார். அவருக்கு ஆசைகள் அதிகம். பல்லவத்தில் உள்ள அத்தி மலைத்தேவனின் பிரதிமையை எப்படியாவது கடத்தி, அதனைக் கொண்டு அஸ்வமேத யாகத்தைச் செய்து உலகையே ஆளும் ஆர்வத்தைக் கொண்டிருப்பவர், எனது

காதலர். எனவே சூழ்ச்சியிடமிருந்து தப்பி இன்னொரு சூழ்ச்சியில் சிக்கிக் கொள்ளாதீர்கள். நீங்கள் மன்னனாக அரியணையில் அமருவதை மட்டும் பாருங்கள்..!" — நின்று அலட்சியமாகக் கூறியவள், மீண்டும் விரைவாக நடந்து வெளியேறினாள்.

மானவர்மன் விக்கித்துப் போய் நின்றிருந்தான். சங்கபோதி குலத்தின் ஆசானாக இவனது மரியாதையும், பக்தியையும் ஒருபுறம் பெற்றபடி, தளபதி ஹததத்தனுடன் சேர்ந்து சதி செய்வதற்குப் பதுமவாசருக்கு எவ்வளவு நெஞ்சுரம் வேண்டும்?

கோபத்துடன் மஞ்சத்தில் சரிந்தவன், அன்றிரவு முழுவதும் உறங்கவேயில்லை. விடியற்காலையில் தனது சிவிகையில் வந்துவிட்டார், பதுமவாசர். செம்மை வண்ணத்தில் பட்டு வேட்டியையும், மேலே செம்மை வண்ணச் சால்வையையும் போர்த்தியிருந்தார். வேண்டாவிருப்பாக அவரை வணங்கினான், மானவர்மன்.

"குரு ஹோரையில் சிகிரி மலைக்குக் கிளம்புகிறோம், மானவர்மா! நீ மஞ்சள் ஆடையை உடுத்தி வா. உனக்கு மங்கலங்கள் உண்டாகும்..!" — கூசாமல் பொய்யுரைத்தார், பதுமவாசர்.

தர்ஷவர்தினி தான் கூறியபடி, சதித்திட்டத்தை மாற்றி விட்டாள் என்பதைப் புரிந்து கொண்டான், மானவர்மன். மஞ்சள் ஆடையை உடுத்தி, மஞ்சள் சால்வையை மேலே போர்த்திக்கொண்டான் மானவர்மன். குருவும் சீடனும் சிகிரி மலைக்குப் புறப்பட்டனர்.

சிகிரி மலையை அடைந்ததும், பூவண்ணர் இருவரையும் உற்சாகத்துடன் வரவேற்று விருந்தினர் அறைக்கு அழைத்துச் சென்றார்.

இருவரையும் ஹதத்தன் முன்பாக நிறுத்தினார். இருவரது ஆடைகளையும் நோட்டம்விட்ட ஹதத்தன் பதுமவாசரை இடது நாற்காலியிலும், மானவர்மனை வலது நாற்காலியிலும் அமரும்படி கூறினான்.

"முதலில் உணவு உண்போம். பிறகே மற்றவை!" — பூவண்ணர் கூற, தனது கடைசி உணவை அருந்தப் போகும் மானவர்மனை பரிதாபத்துடன் பார்த்தபடி, தனது முன்பாக வைக்கப்பட்டிருந்த உணவை அருந்தத் துவங்கினார், பதுமவாசர். ஹதத்தன் மானவர்மனை நோக்கி தனது கண்களைச் சிமிட்ட, இவனும் பதிலுக்குக் கண்களைச் சிமிட்டினான்.

விருந்து முடிய, பதுமவாசர் சற்றே மயக்கமுற்று அமர்ந்த நிலையில் நாற்காலியில் சரிய, ஹதத்தன் தொலைவில் நின்ற பணியாளை நோக்கித் தலையசைக்க, அவன் விரைந்து சென்று ஒரு இரும்புக் கைப்பிடியை பிடித்துக் கீழே தள்ள, பதுமவாசர் நாற்காலியுடன் அதளப் பாதாளத்தினுள் விழ, கீழே துள்ளிய முதலைகள் நீரில் ஏற்படுத்தும் சலசலப்பு ஒலியினைக் கேட்டபடி நின்றிருந்தான்.

மானவர்மனின் முதுகுத் தண்டினை நடுங்கச் செய்தது. தர்ஷவர்தினி மட்டும் இவனை எச்சரிக்கவில்லையென்றால், இவன்தானே பதுமவாசருக்கு பதிலாக முதலைகளுக்கு விருந்தாகி இருப்பான்!

"பதுமவாசரே! மானவர்மன் இறந்தான். இங்கிருக்கும் ஹதத்தன்தான் இனி இலங்கையை ஆளப்போகிறான். சங்கபோதி பரம்பரையின் கனவு தகர்ந்தது. நாங்கள் உங்களுக்கு வாக்கு கொடுத்திருந்தபடி, நீங்கள்தான் ஹதத்தரின் ராஜகுரு..!" பூவண்ணர் ஆழிசிங்கர் கொக்கரித்தார்.

அதற்குமேல் மானவர்மனால் பொறுக்க முடியவில்லை.

*"மன்னிக்க வேண்டும்! எனது முடிவை நான் மாற்றிக் கொண்டேன். எனக்கு ராஜகுரு பதவி போதாது. நான்தான் மன்னனாக முடிசூட்டிக் கொள்ள வேண்டும்!" — மானவர்மன் கூற, ஆழிசிங்கரும், ஹதத்தனும் திகைத்தார்கள்.*

*"பதுமவாசரே! மானவர்மன் சென்ற வழியே நீங்களும் போக வேண்டுமா? மானவர்மன் தேகம் முதலைகளின் பசிக்குப் போதவில்லை என்று நினைக்கிறேன். தங்களையும் உள்ளே தள்ள வேண்டியதுதான்!" — ஹதத்தன் கூற, மானவர்மன் சிரித்தான்.*

*"தவறாகப் புரிந்து கொண்டீர்! பதுமவாசர் ஏற்கனவே முதலைகளுக்கு இரையாகிவிட்டார். நான்தான் மானவர்மன். அவருக்குப் பதிலாக நான் மஞ்சள் ஆடையினைத் தரித்துக் கொண்டேன்..!" —மானவர்மன் கூற, இருவரும் திகைத்தனர்.*

*"ஹா! தர்ஷவர்தினி நம்மை ஏமாற்றிவிட்டாள்!" — கர்ஜித்தான், ஹதத்தன்.*

*"நீங்கள் இலங்கையை ஏமாற்ற நினைத்தீர். நாங்கள் உங்களையே ஏமாற்றிவிட்டோம்..!" — நகைத்த மானவர்மன், மறைத்திருந்த தனது வாளை எடுத்து அவர்களைக் குறிவைத்து நீட்ட, அவர்கள் "யாரங்கே" என்று அலற, சட்டென்று பாய்ந்து ஹதத்தனை வளைத்துப் பிடித்து அவனது குரல்வளையில் தனது வாளினைப் பதித்த மானவர்மன், கடற்கரை வரை அவனைப் பணயமாக வைத்துக்கொண்டு சென்றான். தோணி ஒன்றில் ஏறி அவனை நீரில் தள்ளிவிட்டு, விறுவிறு என்று பல்லவ கடற்கரையை நோக்கி தனது தோணியைச் செலுத்திக்கொண்டு சென்றான். இப்போதைக்கு இவனால் ஒன்றும் செய்ய இயலாது. ஹதத்தனின் படைவீரர்கள் இவனைக் கைப்பற்றினால் உடனே கொன்றுவிடுவார்கள். இப்போதைக்குப் பல்லவத்திற்குத் தப்பிச் செல்வதே நலம்.*

மானவர்மன் தோணியினை மாவிலக்கை துறைமுகத்தை நோக்கித்தான் செலுத்தினான். ஆனால் காற்று அந்தத் தோணியினை வடக்கே தள்ள, மல்லை கடற்கரையை நோக்கி அவனது தோணி நீரில் ஊர்ந்தது. கரையை நெருங்கும் சமயத்தில் இருளின் ஊடே மல்லையின் கடற்கரையில் சில மனிதர்களின் நடமாட்டம் தெரிந்தது.

இந்த நடுநிசி வேளையில், கடற்கரையில் அவர்கள் என்ன செய்கிறார்கள்..?

கரைசேர்ந்த மானவர்மன், அந்த மனிதர்களின் கண்களில் சிக்காமல் ஓடிச்சென்று அடர்ந்த மரங்களின் பின்பாக நின்று அவர்களை நோட்டம்விட்டான்.

அப்போது —

கடலின் அடியில் இருந்து சில மனிதர்கள் திடீரென்று மேலே வந்து சுவாசத்தைவிடத் துவங்கினர். அவர்கள் கடலின் அடியில் இருந்து எதையோ தாம்புக் கயிற்றில் பிணைத்து அதனைக் கரைக்கு இழுத்துக் கொண்டிருந்தனர்.

நடுநிசியில் மீன் பிடிக்கின்றனர் போல் உள்ளதே. பெரிய திமிங்கலம் ஏதாவது சிக்கி உள்ளதோ?

கண்களை இன்னும் கூர்மையாக்கி, இருளின் ஊடே கவனிக்க, ஒருவன் கையில் தீப்பந்தத்துடன் அந்த மனிதர்களை நோக்கி விரைந்தான்.

“ம்ம்! விரைவாக நடக்கட்டும்! சிலையைச் சுமந்து கொண்டு நான் சொல்லும் இடத்தில் பதுக்கிவிட்டு, விருந்து உண்டுவிட்டு, நீங்கள் சாளுக்கியம் கிளம்பலாம். சாளுக்கியம் சென்றவுடன், உங்களுக்குப் பெரும் பரிசு காத்திருக்கிறது!” — கரியநிற தலைப்பாகையைக் கட்டியிருந்த அந்த மனிதன் கூற, அங்குக் குழுமி யிருந்தோர், “வருங்காலப் பல்லவ மன்னர் மல்ல எதி குணபரர் வாழ்க!” என்று கோஷம் எழுப்பியபடி தொடர்ந்து கயிற்றினைப் பலமாக இழுத்தனர்.

இப்போது தீப்பந்தம் ஒளிர்ந்து கொண்டிருந்ததால், மானவர்மனால் அங்கு நடப்பதை நன்றாகக் கவனிக்க முடிந்தது.

கடலின் உள்ளிருந்து பிரம்மாண்டமான ஓர் உருவம் வெளிப்பட்டது. திமிங்கலம் அல்ல! அது ஒரு திருமாலின் சிலை என்பதை அவனால் உணர முடிந்தது. கரிய நிறத்தில் அந்தச் சிலை காணப்பட்டது. அந்தச் சிலையின் பாதங்களிலும், இடையிலும் பெரும் தாம்பினால் பிணைக்கப்பட்டிருந்தது. கரையை அடைந்ததும் அந்தச் சிலையைப் பிணைத்திருந்த தாம்பினை விடுவித்து சிலையைச் சுமந்து சென்று, பத்தடி நீளமுள்ள பெட்டகம் ஒன்றில் பத்திரப்படுத்திப் பெட்டகத்தை மூடினார்கள்.

புரவிகள் பிணைக்கப்பட்ட ஒரு பெரிய வண்டியில் அந்தப் பெட்டகம் வைக்கப்பட்டது. அந்த வண்டியின் உச்சியில் ஒரு கொடி படபடத்துக் கொண்டிருந்தது. மானவர்மன் அந்தக் கொடியை கூர்ந்து கவனித்தான்.

அதில் ஒரு மஞ்சள் கொடி கடற்கரைக் காற்றில் படபடத்துக்கொண்டிருந்தது.

குத்துவாள், பிறை நிலா, சூரியன் மற்றும் ஒரு பன்றியின் சின்னங்கள் மஞ்சள் வண்ணக் கொடியில் வரையப்பட்டிருந்தன. இலங்கையைச் சேர்ந்த மானவர்மனுக்கு அது சாளுக்கியக் கொடி என்பது தெரியாது. பெட்டகத்தில் வைக்கப்பட்ட சிலையும் அத்தி மலைத்தேவனின் சிலை என்பதும் தெரியாது. இருபது நபர்கள் சூழ அந்த வண்டி புறப்பட்டுச் செல்ல, தீப்பந்தத்தை ஏந்திய மனிதன் அந்த வண்டியினில் தொற்றிக்கொள்ள அவர்கள் புறப்பட்டனர். அந்தத் தீப்பந்த ஒளி சிறு புள்ளியாகி மறையும் வரை, மான வர்மன் அவர்களை நோட்டம்விட்டுக் கொண்டிருந்தான்.

# 3. பிரவாள மாளிகை

**கா**ஞ்சியின் தருமநகரம்.

ஆழிப்பேரலை மல்லை நகரை விழுங்கியதுடன், பாலாறும் பொங்கி முக்கூடல் கடிகையை அழித்திருந்தது. 'ஆவேசம் கொள்வதில் நான் மட்டும் என்ன சளைத்தவளா?' என்பது போன்று வேகவதி ஆறும் சீற்றத்துடன் பெருகிக்கொண்டிருந்தது. காஞ்சி நகரின் மக்கள் ஒருவித அச்சத்துடன் மௌனமாகவே தங்கள் பணிகளைச் செய்து கொண்டிருந்தனர். இயற்கையின் பேரிடர்களுக்கு அத்திமலைத்தேவனின் கோபமே காரணம்! அத்திமலையில் தோன்றியவனைக் கடன்மல்லையில் கொண்டு வைத்து, இப்போது அவனை மீண்டும் இழந்திருந்த, பல்லவ மன்னன் நரசிம்ம வர்மனின் பிடிவாதத்தினால்தான் அனைத்து கேடுகளும் நிகழ்ந்திருந்தன.

ஆனால் சிங்கமல்லனை சுட்டுவிரல் நீட்டி 'நீ தவறு செய்துவிட்டாய்' என்று கூறக்கூடிய துணிவினை யார் கொண்டிருக்கிறார்கள்?

தலைமை அமைச்சர் ஆமாத்தியார், தலைமை குரு லோகிதர், அத்திமலை ஆலய அதிகாரி மாயகூத்தர் மடலூருவார் மட்டுமல்ல, காஞ்சியின் சாதாரணப் பிரஜை கூட, மன்னன்தான் அத்தனை இயற்கை சீற்றங் களுக்கும் காரணம் என்கிற எண்ணத்தைக் கொண்டிருந் தனர். முக்கூடல் கடிகையில் தங்கியிருந்தோர் பலர் பாலாறு வெள்ளத்தில் மூழ்கி உயிரை இழந்திருந்தனர். மாலிருஞ்சோலை என்கிற ஸ்ரீ வரநதிகூட அல்லவா பொங்கி பெரும் நாசத்தை உண்டு செய்திருந்தது.

*ஆதிசரஸ்வதி கோயில், களப்பர தலைவன் ரணதிலகனால் தாராதேவியின் சமணப் பசடியாக மாறி, பின்பு சிம்ம விஷ்ணு பல்லவனால் களப்பரர்கள் விரட்டி யடிக்கப்பட, இப்போது எவ்வித ஆராதனையுமின்றிக் கோயிலாகவும் இல்லாமல், பசடியாகவும் இல்லாமல் பாழடைந்து கிடந்தது. அதனைச் சுற்றி இருந்த எழுமால் கோயில்கள் இடிபாடுகளாகக் காணப்பட அவற்றின் அருகே அனாதையாக நின்றிருந்தது, சிம்மவர்மன் தனது ஆருயிர் மகள் நவரத்ன பல்லவிக்குப் பரிசாக அளித்திருந்த பிரவாள மாளிகை.

நவரத்ன பல்லவியின் மரணத்திற்குப் பிறகு, அரச குடும்பத்தினர் யாரும் அங்கே செல்வதில்லை. அங்கிருந்த வைணவர்களைக் களப்பரர் விரட்டி அடித்திருந்தனர். பின்பு களப்பரர்களும் விரட்டியடிக்கப்பட, மக்கள் நடமாட்டம் இன்றி, கொடிகளும், செடிகளும் வளர்ந்து, பிரவாள மாளிகை பாழடைந்து காணப்பட்டது.

கதிரவன் மறைவதற்குக் காத்திருந்தது போல, கருமேகங்கள் எங்கிருந்தோ வந்து காஞ்சியின் மீது பந்தலிட, மின்னல் அலங்கார விளக்காய் இங்கும் அங்கும் தாவிக்கொண்டிருக்க, பெருத்த இடியோசை காஞ்சியின் மக்களிடையே பீதியைக் கிளப்ப, அன்றைய பொழுதைத் துரிதமாகவே முடித்துக் கொண்டு, அவரவர் மனைகளில் மக்கள் முடங்கிக் கொண்டனர்.

சுமார் இருபத்து பேர் பிரவாள மாளிகையின் இருள் படர்ந்திருந்த கொலு மண்டபத்தில் குழுமியிருந்தனர். மல்ல எதி மாளிகையின் பின்புறம் இருந்த அடுக்களையில் நிற்க, ஒரு வாலிபன் அடுக்களையின் புகைபோக்கியின் அடிபாகத்தைச் சுண்ணாம்புக் கலவையால் பூசிக்கொண்டிருந்தான்.

---

* **ஆதிசரஸ்வதி கோயில், தற்போது ஆதி காமாட்சி அம்மன் கோயிலாகக் காமாட்சி அம்மன் கோயிலின் பின்பாக உள்ளது.**

*மல்லைகடல் அடியில் ஜலசயன பெருமாளாகப் பள்ளிக்கொண்டிருந்த தேவ உடும்பர அத்திமர சிலையைச் சாளுக்கியர்களின் உதவியோடு மீட்டு எடுத்து ஒரு தேக்குமர பெட்டகத்தில் வைத்து பிரவாள மாளிகைக்கு எடுத்து வந்திருந்தான். ஆள் நடமாட்டம் இல்லாத பிரவாள மாளிகையில் சிலையை மறைத்து வைத்துவிட்டு, பல்லவர்கள் அசந்திருக்கும் வேளையில் சிலையைச் சாளுக்கியத்திற்கு எடுத்துச் செல்ல முடிவு செய்திருந்தான், மல்ல எதி. சிலையை வைத்து அஸ்வமேத யாகம் ஒன்றை நடத்தி, சாளுக்கிய மன்னனின் உதவியோடு பல்லவ அரியணையைக் கைப்பற்றுவதே மல்ல எதியின் லட்சியம்.*

*அத்தி சிலை வைக்கப்பட்டிருந்த மரப்பெட்டகத்தை நிமிர்த்தி வைத்து அதனைத் தாம்பு கயிறுகளால் பிணைத்துப் புகைபோக்கியின் மேலிருந்து இழுக்க, பெட்டகம் பிரச்னை எதனையும் ஏற்படுத்தாமல் புகைபோக்கியினுள் நுழைய.. புகைபோக்கியின் கீழே அந்தப் பெட்டகத்தைத் தாங்குவதற்கு இரும்பினால் பீடம் அமைத்து, புகைபோக்கியின் அடிபகுதியை சுண்ணாம்பு கலவையினால் பூசி மொழுகிவிடக் கட்டளை இட்டிருந்தான். அதனைத்தான் சம்புகன் என்கிற அந்த வாலிபன் நிறைவேற்றிக் கொண்டிருந்தான். அருகில் அவனது தாய் தாரா நின்றிருந்தாள்.*

*“தாரா! காரியம் நல்லபடியாக முடிந்தது. வந்திருக்கும் சாளுக்கிய விருந்தினர்களுக்கு உணவு பரிமாற வேண்டும். நீ உணவு தயாரிக்கும் பணியைத் துவக்கு!” — என்றதும் தாரா என்கிற அந்த மூதாட்டி அங்கிருந்து நகர்ந்தாள்.*

★ ★ ★

*சரஸிஜா பலமாகப் பெய்து கொண்டிருந்த மழையைப் பொருட்படுத்தாமல் தருமநகரத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தாள். அவளுடைய மனது முழுவதும் கசப் புணர்ச்சி பரவிக் கிடந்தது. களப்பரர்கள் தருமநகரத்தை*

சீரழித்து, திருமாலின் விண்ணகரங்களையும், ஆதி சரஸ்வதியின் ஆலயத்தையும் இடித்துவிட்டு, சமணப் பசடியை எழுப்பிய போது ரணதிலகன் தங்களது மருமகன் என்கிற ஒரே காரணத்திற்காகப் பல்லவர்கள் அவனது செயலைக் கண்டுகொள்ளாமல் இருந்தனர். தருமநகரத்தில் குடியிருந்த வைணவர்களையும் இதர சனாதனவாதிகளையும் ரணதிலகன் வெளியேற்றிய போது அதனையும் கண்டு கொள்ளாமல் இருந்தான் அவனிசிம்மன். இளவரசன் ஜெயவர்மன்தான் வெளியேற்றப்பட்ட மக்களை முக்கூடல் கடிகையில் குடியேற வைத்தான்.

சரஸிஜாவின் பாட்டனார் தயாம்ருதர் ஆதிசரஸ்வதி கோயிலின் தலைமை பண்டாரியாக விளங்கியவர். ஆதிசரஸ்வதியின் ஆலயத்தை இடிக்கக்கூடாது என்று அதன் வாயிலின் முன்பாக அவர் படுத்தபடி போராட, அவரைத் தனது வாளால் ரணதிலகன் வெட்டிக் கொன்றான். அவரது மகனும் சரஸிஜாவின் தந்தையான மாதங்க பிரசாதர், முக்கூடல் கடிகையின் தலைமைக் காரியஸ்தராக விளங்கியவர். தருமநகரச் சரஸ்வதியின் அதி தீவிர பக்தர். தனது தந்தையின் கொலைக்கு நியாயம் கேட்டு மாதங்கர் மன்னர் அவனிசிம்மன் என்கிற சிம்ம விஷ்ணு மற்றும், மகேந்திர பல்லவன் ஆகிய இருவரிடமும் போராடி அனைத்து போராட்டங்களும் வீணாக முடிய, களைத்துப் போனார். தருமத்தின் உறைவிடம் தருமநகரம். அத்தகைய தருமநகரம் நரகமாக மாறுவதைத் தடுக்க எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை என்கிற வருத்தம் பல்லவர்களின் மீது அவருக்கு எழுந்தது.

தருமநகரத்து மக்களின் அதிருப்தியைக்களையும் பொருட்டுதான் நரசிம்ம பல்லவன், திருகடன் மல்லையில் எழுமால் கோயில்களைக் கட்டுகிறேன் என்று அறிவித்து ஏழு ரதங்களை எழுப்பியிருந்தான்.

"திருகடன்மல்லையில் எழுமால் கோயில்களா? அதனைப் பரமன் ஏற்கமாட்டான். *கரிய மாணிக்கப் பெருமாள், கள்வர் எம்பெருமான், நிலாத்திங்கள் துண்டத்தான், உருகுவாருள்ளத்தான், திருவிருத்த பெருமான், நாகத்தெம்பெருமான், பள்ளிகொண்டான் ஆகிய ஏழு பெருமாள்களும் திருகடன்மல்லையில் வாசம் செய்ய மறுப்பார்கள்..!" என்று கூறிய வண்ணம் இருந்தார் மாதங்கர்.

நவரத்தின பல்லவியின் பட்டோலை குறிப்புகளைக் கொண்டு அத்திமலைத்தேவன் கண்டெடுக்கப்பட்டதும், சற்றே ஆறுதல் அடைந்த மாதங்கர், சிங்கமல்லன் அவரை ஜலசயன பெருமாளாகக் கடன்மல்லையின் ஏழாவது கோயிலில் எழுந்தருளச் செய்யப் போவதாக அறிவித்ததும் கடும் சினம் கொண்டார்.

"ஆலயங்கள் என்பவை பஞ்ச பூத சக்திகளின் இயக்கத்தில் எழுப்பப்பட்டுள்ளன. மந்திரிசபையை மாற்றி அமைப்பது போன்று, தெய்வங்களை மாற்றினால், அதன் விளைவுகள் படுபயங்கரமாக இருக்கும்!" என்று

---

* கரிய மாணிக்கப் பெருமாள் (எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை. வந்தவாசி அருகே அத்தி என்கிற கிராமத்தில் உள்ளதாகச் சிலர் கூறுகின்றனர்).

கள்வரெம்பெருமான் (காமாட்சி அம்மன் கோயிலில் உள்ளார்).

நிலாத்திங்கள் துண்டத்தான் பெருமாள் (ஏகாம்பரேஸ்வரர் கோயிலில் உள்ளார்).

உருகுவாருள்ளத்து பெருமாள் (உலகளந்த பெருமாள் கோயிலில் உள்ள நீரகத்தார் சந்நிதி).

திருவிருத்த பெருமான் (உலகளந்த பெருமாள் கோயிலில் உள்ள, கார்வான பெருமாள் சந்நிதி).

நாகத்தெம்பெருமான் (உலகளந்த பெருமாள் கோயிலில் உள்ள ஊரகத்தான் சந்நிதி).

பள்ளிகொண்டான் (வேலூர் அருகே பள்ளிகொண்டானில் உள்ளார்).

துணிந்து நரசிம்ம பல்லவனுக்கு மடல் ஒன்றை அனுப்பினார், மாதங்கர். அந்த ஓலையை அலட்சியமாக வீசி எறிந்திருந்தான், சிங்கமல்லன்.

மாதங்கர் கூறியது போன்று, இயற்கை பல்லவத்தின் மீது பெரும் சீற்றம் கொண்டு, நிலநடுக்கமாக, ஆழிப்பேரலையாக, பாலாற்றின் வெள்ளமாக வந்து காஞ்சியைப் படாதபாடு படுத்தியது.

"நான் சொன்னேனே! கேட்டீர்களா..?" — என்று மாதங்கர் உயிருடன் இருந்தால் சொல்லியிருப்பார். ஆனால், ஆழிப்பேரலை நிகழ்ந்த அதே சமயத்தில் நிலநடுக்கத்தினால் பாலாறும் பொங்கி, முக்கூடல் கடிகையை அழிக்க, அதில் தங்கியிருந்த பலரும் உயிரிழந்தனர். அதில் மாதங்கரும் ஒருவர். நல்லவேளை யாக, ஆதிசரஸ்வதி கோயிலுக்குச் சென்றிருந்ததால், சரஸிஜா மட்டும் தப்பியிருந்தாள்.

ஆதிசரஸ்வதி ஆலயத்தில் ஆராதனைகள் நின்ற பிறகு, மாதங்கர், தனது மகளிடம் அன்றாடம் அவளுக்குச் சாதமும், கனிகளும் எடுத்துச் சென்று நிவேதனம் செய்யச் சொல்லுவார். தங்களது அபிமானத் தேவி பூசனையில்லாமல் இருக்கிறாளே என்பதால் இந்த ஏற்பாட்டினைச் செய்திருந்தார்.

இப்போது கூட, கொட்டும் மழையைப் பாராமல்தான், சரஸிஜா தருமநகரத்திற்குச் சென்று கொண்டிருந்தாள். அவள் இப்போது யாருமில்லாத அனாதைதான். ஆனால் நிராதரவாக இல்லை. முக்கூடல் கடிகை வெள்ளத்தில் தப்பிய, கணித விற்பன்னர் பாலகனகரத்தினரும், அவரது மனைவி பிரேமாவதியும் இவளைத் தங்களது மகளாகத் தத்து எடுத்திருந்தனர். அவர்கள் இவளை அன்புடனும், வாஞ்சையுடனும் கவனித்து வருகிறார்கள். பிரேமாவதி அம்மையின் தம்பி பராக்கிரமன் வேமுலத்திற்கு வியாபார விஷயமாகச் சென்றிருக்கிறான். அவன் வந்ததும், அவனுக்கே சரஸிஜாவை மணமுடித்துக் கொடுத்துவிட நிச்சயித்திருக்கிறார்கள்.

மழை பலமாகப் பெய்யத்தொடங்க, வீதிகள் இருளில் மூழ்கியிருந்தன. ஆங்காங்கே நின்ற தீபஸ்தம்பங்களில் தீப கப்பரையை வைப்பது வழக்கம்தான். ஆனால், இந்தப் பேய்மழையில் யார் வந்து தீப கப்பரைகளை வைக்கப் போகிறார்கள்..? அப்படியே வைத்தாலும், இந்த மழையில் அவை எங்கே ஒளிரக்கூடும்?

யோசித்தபடி தருமநகரத்தினுள் நுழைந்தாள், சரஸிஜா. மனித சஞ்சாரமே இன்றி, இரவுப் பறவைகள் எழுப்பிய ஒலிகளும், சர்ப்பங்கள் சீறுவதும், அவற்றின் ஒலி கேட்கும் திக்கினை நோக்கி கீரிப்பிள்ளைகள் சரசரவென்று ஓடுவதுமாக இருந்தன. அவளது பார்வை இருளில் அடியோடு செயலிழந்து போக, அன்றாடம் தான் வரும் பாதையை யூகித்தபடியே சரஸிஜா சரஸ்வதியின் ஆலயத்தை நோக்கி நடந்தாள்.

இடிபாடுகளாகக் கிடந்த ஆலயத்தில் நுழைந்து கருவறையின் உள்ளே சென்றாள். உக்கிர சரஸ்வதியின் சிலை தாராதேவியின் சிலையாக மாற்றப்பட்டிருந்தது. சரஸ்வதி உக்கிரத்துடன் பிரம்மனின் சிருஷ்டி தண்டத்தைப் பறித்து வந்திருந்ததால், உக்கிர சரஸ்வதிக்கு வீணைக்குப் பதிலாகக் கையில் ஸ்ருஷ்டி தண்டத்துடன் காட்சியளிப்பது வழக்கம்.

சிலையின் முன்பாக நின்றாள், சரஸிஜா. வெளியே மழை இன்னும் பெய்துகொண்டிருக்க, திடீரென்று வெட்டிய மின்னலின் ஒளியில் சிலை புலப்பட்டது.

'திருமகளுடன் ஏன் மோதினாய் கலைமகளே? நீ கோயில் கொண்டிருக்கும் தருமநகரத்தின் நிலையைப் பார். கல்வியின் கோயில் இப்படிப் பாழடைந்து கிடப்பது வசமோ?' — மனதிற்குள் புலம்பினாள்.

மீண்டும் மின்னல் வெட்ட, தனது கரத்தில் ஏந்தியிருந்த மண் கலயத்தை சரஸ்வதியின் சிலை முன்பாக நீட்டினாள்.

"கலைமகளே. உனக்கு நான் கொண்டு வந்திருக்கும் பால் சோற்றினை ஏற்றுக்கொள். இந்த இடியோசைதான் உனக்கு ஆலயமணி. இதோ வெட்டும் மின்னல்தான் உனக்குத் தீபாராதனை. கூரையின் பிளவின் வழியாக உன் மீது வழியும் மழைநீர்தான் உனக்கு அபிஷேகம். பெண்கள் கோபத்தைக் கட்டுப்படுத்தவில்லையென்றால், இப்படித்தான் அவதிகளைச் சந்திக்க வேண்டும். நீ கோபத்துடன் உனது கணவனை விட்டுப் பிரிந்து வந்தவள் அல்லவா? அதனால்தான் இயற்கையும் உன்னை உதாசீனம் செய்கிறது!" — மனதில் தோன்றியதை பேசிக்கொண்டிருந்தாள், சரஸிஜா.

தான் ஏந்தியிருந்த மண்கலயத்தை மூடிவிட்டுப் புறப்படுவதற்குத் தயாரானாள்.

"மீண்டும் நாளை வருகிறேன் தாயே. நல்லவேளையாக, எனது மாமனுக்குத்தான் என்னை மணமுடிக்க எனது வளர்ப்புப் பெற்றோர் முடிவு செய்துள்ளனர். தொடர்ந்து நான் ஒத்தாடையில்தான் வசிக்கப் போகிறேன். எனவே அன்றாடம் நான் உனக்கு உணவு கொண்டு வருவதில் பிரச்னை இருக்காது. அதற்காக நான் கொண்டு வரும் பாலன்னத்தை மட்டுமே உண்டு கொண்டு, காலத்தைக் கழித்துவிடாதே..! விரைவிலேயே உனது ஆலயம் பழைய உன்னத நிலையை அடைவதற்கு வழியை ஏற்படுத்து!" — சரஸிஜா ஒருமுறை உக்கிர சரஸ்வதியின் செவிகளில் கூறிவிட்டு, ஆலயத்தைவிட்டு நீங்கினாள்.

காரிருள் பரவியிருந்ததால், கண்களுக்கு வேலை யில்லை. கைகளைக் காற்றில் துழாவியபடி மீண்டும் வந்த வழியே மெதுவாக நடந்தாள். சரியாகப் பிரவாள மாளிகையை நெருங்கும்போது மழையின் உக்கிரம் அதிகரித்தது. வானமே பொத்தலாகியது போன்று மழை நிலத்தைத் தாக்க, நடக்க முடியாமல் திணறினாள், சரஸிஜா.

மழையின் வேகம் சற்று மட்டுப்படும் வரை, பிரவாள மாளிகையில் ஒதுங்கியிருப்போம் என்கிற எண்ணத்தில், மாளிகையின் நந்தவனத்தினுள் நுழைந்தாள்.

ஏற்கனவே காய்ந்த சருகுகளாலும், உடைந்து விழுந்திருந்த மரக்கிளைகளாலும், குப்பைக் கூளங்களாலும் நடப்பதற்கு வகையில்லாமல் இருந்த பாதை, மழை நீர் ஓடியதால், இன்னும் அதிகச் சிரமங்களை ஏற்படுத்த, நிதானமாக நடந்து எப்படியோ பிரவாள மாளிகையின் மையப் பகுதியை அடைந்தாள்.

கையில் இருந்த மண்கலயத்தைக் கீழே வைத்துவிட்டு, தனது சேலைத் தலைப்பினை நன்றாக முறுக்கிப் பிழிந்து கொண்டிருந்தபோதுதான், மாளிகையின் உள்ளே பலத்த சிரிப்புச் சத்தம் கேட்டது.

ஒருகணம், அவளது தேகம் விறைத்துப் போனது.

பிரவாள மாளிகையில் தற்கொலை செய்துகொண்ட பல்லவ இளவரசி நவரத்ன பல்லவி ஆவியாக அலைகிறாள் என்கிற ஒரு பேச்சு உலவியதால், அந்த மாளிகைக்கு யாருமே வருவதில்லை. அந்த வதந்தியை ஊர்ஜிதம் செய்வது போன்று, மாளிகையின் உள்ளே இருந்து நகைப்பொலி கேட்கிறதே. நவரத்ன பல்லவியின் ஆவிதான் சிரிக்கிறதா?

ஆனால்,

ஒரு பெண்ணின் சிரிப்பொலியாக அது தோன்றவில்லையே! ஒரு ஆணின் அகங்கார சிரிப்பாக அல்லவா அந்தக் குரல் ஒலிக்கிறது. மாளிகையின் மையக் கதவு பூட்டியிருந்தது. மெதுவாக அந்தக் கதவை நோக்கி நடந்தவள், ஒரு கையால் அதனைத் தள்ள, கதவு அசைந்து கொடுக்கவில்லை. பிறகு இரு கைகளாலும் கதவைத் தள்ளினாள்.

'என்னுள் பல மர்மங்கள் பொதிந்து இருக்கின்றன. பல வலுவான கைகள் என்னைத் தள்ளிப்பார்க்க

முயன்று தோல்வி அடைந்து போயின. மயிலிறகைப் போன்ற உனது மிருதுவான கரங்களால் என்னை நீ தள்ளினால், நான் திறப்பேனோ?' — என்று கூறுவதைப் போன்று அக்கதவு பிடிவாதமாக நகர மறுத்தது.

அப்போதுதான், உள்ளே யாரோ தீப்பந்தம் ஒன்றை ஏற்றியிருக்க வேண்டும். திடீரென்று, மாளிகையின் உள்ளிருந்து படர்ந்த வெளிச்சம் அவளது கண்களுக்குக் காட்சிகளைப் புலப்படச் செய்தது. சுவரின் உயரத்தில் காற்றும் வெளிச்சமும் உட்புகுவதற்காக அமைக்கப் பட்டிருந்த சிறிய சாளரத்தின் வழியாக ஒளி தென்பட்டது.

உப்பரிகைக்குச் செல்லும் படிகள் சரஸிஜாவின் கண்களில் புலப்பட, ஒலி எழுப்பாமல் படிகளில் ஏறினாள். உப்பரிகையை அடைந்ததும், கீழே மாளிகையின் கொலுமண்டபத்தின் நடவடிக்கைகளைக் காண்பதற்காக மகாராணிகள் அமரும் மாடம் தென்பட, சரஸிஜா அதனுள் நுழைந்து இருளில் தன்னைப் புதைத்துக்கொண்டாள்.

பாழடைந்த அந்தக் கொலுமண்டபத்தில் இருபது நபர்கள் அமர்ந்திருக்க, நடுநாயகமாக ஒருவன் தீப்பந்தம் ஒன்றை ஏந்தி நிற்க, அவனருகே மற்றொரு மனிதன் நின்றிருந்தான். கரியநிற தலைப்பாகை ஒன்றை அணிந்திருந்தான். வெண்ணிற ஆடையில் காணப்பட்ட அவன் முகத்தில் படர்ந்த தீப்பந்தத்தின் ஒளி, அதனைச் சற்று குரூரமாகவே காட்டியது.

ஒரு மூலையில் விறகு அடுப்பு ஒன்று கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருக்க அதன் மீது ஒரு கங்காளத்தில் மூதாட்டி ஒருத்தி கூட்டாஞ்சோறு கிளரிக் கொண்டிருந் தாள். அங்குக் குழுமி இருப்பவர்களுக்கு உணவு தயார் ஆகிக்கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டாள், சரஸிஜா. அந்த மூதாட்டியைப் பார்க்கும்போது அவள் காஞ்சியைச் சேர்ந்தவளாகத் தோன்றவில்லை. சரஸிஜா

அந்தக் கரிய தலைப்பாகை அணிந்திருந்தவனை உறுத்து நோக்கினாள்.

அந்தக் கரிய தலைப்பாகையை அணிந்தவன் உரை ஒன்றை நிகழ்த்துவதற்குத் தயாராக நின்றிருந்தான் என்பதைப் புரிந்து கொண்டாள், சரஸிஜா. தனது செவிகளைக் கூர்மையாக்கினாள்.

அந்தக் கரிய தலைப்பாகைக்காரன் உரையாற்றத் துவங்கினான்.

'சாளுக்கிய படைவீரர்களே..! எனக்காக நீங்கள் பல்லவத்திற்கு விஜயம் செய்து ஒரு மாபெரும் செயலைச் செய்திருக்கிறீர்கள். அதற்கு நான் உங்களுக்கு என்றும் கடமைப்பட்டவனாக இருப்பேன். காரியம் வெற்றி கரமாக நடந்து முடிந்தது. சாளுக்கிய மன்னன் விக்கிர மாதித்யரிடம் இந்தப் பிரமதியின் நன்றிகளைச் சொல்லுங்கள்..." — என்றதும், திடுக்கிட்டாள் சரஸிஜா.

பிரமதி என்கிற பெயரை அவள் கேள்விப்பட்டிருக் கின்றாளே. ஆம்! ஒருமுறை ஒத்தாடை ஆலயத்திற்குச் சென்றபோது, அவளது தந்தை அப்பர் மகேந்திர பல்லவனைத் திருத்தி பணிகொண்ட கம்பா குளம் இதுதான் என்று இவளிடம் கூறியிருக்கிறார். மகேந்திர பல்லவனின் பிரதாபங்களைப் பற்றிக் கூறும் போதினில், அவரது தோழர்களான தசகுமாரர்களைப் பற்றித் தெரிவித்திருக்கிறார். அவர்களில் ஒருவனின் பெயர் பிரமதி என்றல்லவா கூறியிருக்கிறார்.

திகைப்புடன் அவன் பேசுவதைத் தொடர்ந்து கவனித்தாள். அங்கே குழுமியிருந்த மனிதர்களில் ஒருவன் எழுந்து வியப்புடன் கேட்டான்.

"பிரமதியா? அப்படியென்றால், தசகுமாரர்களில் தாங்களும் ஒருவரா?" — என்று அந்த மனிதன் கேட்டதும், இடிஇடியென நகைத்தான், பிரமதி.

"ஆம்! தசகுமாரர்களில் ஒருவன் நான். பிரமதியும் நான்தான். மல்ல எதி என்கிற பெயரில் பல்லவத்தில் குழப்பங்களை உண்டு செய்பவனும் நான்தான். எனது தந்தை வேறு யாருமல்ல! பல்லவ மன்னன் அவனிசிம்மன் என்கிற மகேந்திர சிம்மவிஷ்ணுதான். நான் நமது சாளுக்கியத்தைச் சேர்ந்த நாட்டிய தாரகை வித்யுதாவிற்கும், அவனிசிம்மனுக்கும் பிறந்தவன். எனது தாய் அவனிசிம்மனால் அப்புறப்படுத்தபட்டாள். நான் தப்பிச் சென்று ஓர் குடியானவனின் வீட்டில் மறைந்து வாழ்ந்தேன். பிள்ளை இல்லாத அவர் என்னை அன்புடன் வளர்த்தார். நான் அவரிடம் மகனாகச் சென்ற வேளை, பிள்ளையில்லாத அவருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. எனது தங்கையை உயிராகக் கருதினேன். மல்யுத்தத்தில் என்னை வென்ற மகேந்திரனின் தோழர்கள் நவகுமாரர்கள் எனது தங்கையின் வாழ்வை நாசப்படுத்த, அவர்களை ஒவ்வொருவராகக் கொன்று பழிதீர்த்தேன். மகேந்திரனை குறி வைப்பதற்குள், அவன் இறந்து விட்டான். அவனது மகன் சிங்கமல்லனை தற்போது குறி வைத்துள்ளேன். பல்லவர்கள் செய்த பெரும் பிழைகளுக்கு, ஆழிப்பேரலை யாகப் பொங்கி பேரழிவை ஏற்படுத்திய இயற்கையே தண்டனை அளித்துவிட்டது. பல்லவர்கள் பொக்கிஷ மாகக் கருதிய அத்திமலைத் தேவனின் சிலை இப்போது எனது வசம். அந்தச் சிலையைக் கடல் கொண்டது என்றவுடன் நான் அதிர்ந்தேன். அவனிசிம்மனின் மகனான நான், அந்தச் சிலையைக் கொண்டு யாகங் களைச் செய்து பல்லவ அரியணையைக் கைப்பற்ற எண்ணியிருந்தேன். இந்நிலையில் கடல் அடியில் இருக்கும் சிலையை நரசிம்ம பல்லவன் எடுப்பதற்குள் நாம் அதனை எடுத்துவிட வேண்டும் என்பதற்காகத்தான் சாளுக்கிய மன்னர் விக்கிரமாதித்யரின் ஆதரவை நாடினேன். அவரும் ஆழ்கடல் நீச்சல் தெரிந்திருந்த உங்களை எல்லாம் அனுப்பி, பொக்கிஷத்தைப் பத்திரமாக எனது

வசம் சேர்ப்பித்துவிட்டார். அதற்காக நான் என்றென்றும் அவருக்குக் கடமைப்பட்டிருக் கிறேன்..!" — பிரமதி கூற, சுவாசிக்க மறந்தவளாக நின்றிருந்தாள், சரஸிஜா.

"விருந்து முடிந்தவுடன் நீங்கள் சாளுக்கியத்திற்குத் திரும்பலாம்..! நானும் விரைவில் அத்திமலைத் தேவனுடன் சாளுக்கியம் வருவேன். அஸ்வமேத யாகத்தைச் செய்து, அவனது அருளைப் பெற்று, பல்லவ அரியணையைக் கைப்பற்றுவேன்!" —உற்சாகத்துடன் கூவினான், பிரமதி.

சரஸிஜா அதிர்ந்தாள். பல்லவத்தின் பொக்கிஷமான அத்திமலைத்தேவனைச் சாளுக்கியத்திற்கு எடுத்துச் செல்லப் போகின்றானாமே, பிரமதி. உடனே இந்தச் சதியை மன்னரிடம் தெரியப்படுத்த வேண்டும். ஆனால் மன்னரை எப்படி அணுகுவது?

தீர்மானத்துடன் மீண்டும் உப்பரிகையில் இருந்து இறங்கிய சரஸிஜா, பேய் மழையைப் பொருட்படுத்தாமல் ஒத்தாடையை நோக்கி ஓடிச்சென்றாள்.

★ ★ ★

**ம**ல்ல எதி சாளுக்கிய மன்னனுக்கு ஓர் ஓலையினை வடித்தான்.

'சாளுக்கிய மன்னர் வாழி. அனைத்து திட்டங்களும் வெற்றிகரமாக முடிந்தன. காஞ்சியின் பொக்கிஷம் இப்போது எனது வசம். அதனைத் தருமநகரின் பிரவாள மாளிகையில்தான் பதுக்கி வைத்துள்ளேன். பொக்கிஷம் வைத்திருக்கும் இடம், பல்லவர்களின் நாசிக்கு கீழேயே இருப்பதால் அவர்களால் காண முடியாது. எல்லையில் பலத்த காவல் நிலவுவதால், பல்லவர்கள் அயர்ந்திருக்கும் வேளையில் நான் அதனை எடுத்து வருகிறேன். அதுவரையில் உமது அஸ்வமேத யாகத் திட்டத்தை ஒத்தி வையுங்கள். பொக்கிஷத்தோடு விரைவில் வருகிறேன்.'

**— குணபரன் என்கிற பிரமதி.**

ஓலையினை செம்மை வண்ண வஸ்திரத்தில் சுற்றி, அந்த மூதாட்டிக்காகக் காத்திருந்தான். சாளுக்கிய வீரர்களுக்கு உணவு பரிமாறிவிட்டு, சேலை முந்தானை யினால் கைகளைத் துடைத்தபடி மூதாட்டி வந்தாள்.

"தாரா! காரியத்தைக் கச்சிதமாக முடித்து விட்டாயா?" — மல்ல எதி கேட்டான்..

"ஆஹா! கள்ளத்தனமாகப் பிறந்த சிசுக்களுக்குக் கள்ளிப்பாலை புகட்டிக் கொன்றிருக்கிறேன். மறுமணம் செய்ய நினைக்கும் ஆடவரின் நோயாளி மனைவிகளுக்கு நஞ்சு செலுத்திக் கொன்றிருக்கிறேன். உல்லாசம் தேடும் மனைவியருக்கு நந்தியாகத் திகழ்ந்த கணவரையும் கொன்றிருக்கிறேன். ஆனால் இன்று எனக்குக் கிடைத்தது ஒரு புதிய அனுபவம். எமனின் பரிபூரண ஆசிகள் எனக்குக் கிடைக்கும் என்று நம்புகிறேன்." தாராவின் கோரமான முகம் அவளது புன்னகையால் இன்னும் விகாரமாகக் காட்சியளித்தது.

"கவலைப்படாதே! உனக்கு இன்னும் புதிய அனுபவங்கள் கிடைக்கும். நாடுகள் உள்ளவரை அரசியலுக்குப் பஞ்சமில்லை. அரசியல் உள்ளவரை சதிகளுக்குப் பஞ்சமில்லை. சதிகள் அரங்கேறும் வரை கொலைகளுக்குப் பஞ்சமில்லை. கொலைகள் நடக்கும் வரை, உன் போன்ற கல்நெஞ்சுக்காரிகளுக்கு எவ்விதக் குறைவுமில்லை." — சிரித்தான் மல்ல எதி.

"என் போன்ற கல்நெஞ்சுக்காரிகள் உள்ளவரை, உன் போன்ற பேராசைக்காரர்களுக்கும் குறைவில்லை..!" — என்ற தாரா, மீண்டும் கோரமான இளிப்புடன் அவனை உறுத்து நோக்கினாள்.

"இடத்தைக் கொடுத்தால், மடத்தினையே பிடுங்குவாய் நீ!" — முணுமுணுத்தபடி தனது கையில் இருந்த அந்த வஸ்திரத்தால் சுற்றியிருந்த சுவடியை நீட்டினான்.

“சாளுக்கிய மன்னரிடம் மட்டும் தர வேண்டும். வழியில் உனது உயிருக்கு ஆபத்து வந்தால், முதலில் சுவடி அழிக்கப்பட்டவுடன்தான் உன் உயிர் பிரிய வேண்டும்!” — மல்ல எதி கூறினான்.

“எனக்கு அறிவுரை கூறாதே. சாளுக்கிய மன்னர்களின் மூன்று தலைமுறையைப் பார்த்தவள். அரச குடும்பத்திலேயே ஒருவரை ஒருவர் நம்பமாட்டார்கள். ஆனால் அனைவரும் என்னை நம்புவார்கள்..!” என்றவள், சுவடியை வாங்கித் தனது சேலையினுள் பதுக்கிக் கொண்டாள்.

பிரவாள மாளிகையிலிருந்து தனியாகப் புறப்பட்டாள், தாரா. காஞ்சியின் எல்லையை நோக்கிச் செல்வதற்காக ஐயம்படுகையை நோக்கி நடந்தாள். ஐயம்படுகை அருகே, காவல்படையினர் வெளியேறும் ஒவ்வொருவரையும் நிறுத்தி, விவரங்களைக் கேட்பதுடன் சோதனை செய்வதையும் கவனித்தாள். சாளுக்கிய நாட்டுக்காரி என்பது இவளது முகத்தில் நன்றாகவே புலப்படும். மேலும் சாளுக்கிய மன்னனுக்கு மல்ல எதியிடமிருந்து அனுப்பப்பட்ட ஓலை இவளது சேலையினுள் மறைக்கப் பட்டிருக்கிறது. சோதனை செய்யும்போது அந்த ஓலை அவர்களிடம் சிக்கிக் கொண்டால் வேறு வினையே வேண்டாம். அந்த விஷப்பரீட்சையும் இப்போதைக்குத் தேவையில்லை.

வந்த வழியே திரும்பி நடந்தாள். சற்றுத் தொலைவில் மூவர் ஒரு பாறையைச் சுமந்து வருவதைத் தாரா கண்டாள். அவளது கூரிய புத்தி சட்டென்று விழித்துக் கொள்ள, பாதையின் இடதுபுறம் கவனித்தாள். பாதையின் ஓரமாக இரு கற்களை நிலைநாட்டி யிருந்தார்கள். இரு கற்களும் ஆழமாக மண்ணில் புதைக்கப் பட்டிருக்க, இரு கற்களிலும் ஆழமான குழி இருந்தது.

தாராவின் சிந்தனை சுழன்றது. பாதையோரம் வழிப்போக்கர்கள் தங்களது சுமைகளை இறக்கி வைத்து இளைப்பாறுவதற்காகச் சுமைதாங்கிக் கற்களை நிறுவுகின்றனர் போலும். இதுவும் நன்மைக்கே. இப்போதைக்கு ஓலையை இதனுள் பதுக்கிவிட்டு பிறகு வந்து எடுத்துக் கொள்ளலாம். கிழவி சுற்றுமுற்றும் ஒருமுறை பார்த்துவிட்டு, தனது சேலையினுள் பதுக்கி யிருந்த சுவடியை அந்தக் குழியினுள் போட்டுவிட்டு, பாறையைச் சுமந்து வரும் மனிதர்களுக்காகக் காத்திருந்தாள்.

'ஐயம்படுகை சோதனைச் சாவடிக்கு முன்பாக நிற்கும் பெரிய ஆலமரம். அதன் கீழே அமைக்கப்பட்டுள்ள சுமை தாங்கிக் கல்லின் வலப்புறத் தாங்கியின் குழியில் சுவடி உள்ளது..!' தனக்குள் ஒருமுறை கூறிக்கொண்டாள்.

பாறையைச் சுமந்து வந்த அந்த மூவரும் இவள் யூகித்தது போன்று இரு தூண்களாக அமைக்கப்பட்ட அந்தப் பாறைகளின் மீது அந்தப் பாறையைக் கிடத்தினர். சுமைதாங்கி தயாராக நின்றது.

"ஏனப்பா! என்ன செய்கிறீர்கள்?" — ஒன்றும் தெரியாத அப்பாவியாகக் கிழவி கேட்க, அவர்களில் ஒருவன் அவளுக்கு விளக்கினான்.

"ஐயம்படுகை தலைவர் இங்கே ஒரு சுமைதாங்கிக் கல்லை நிறுவச்சொன்னார். நேற்று சூரிய அஸ்தமனத்தில் இரு கற்களை நாட்டினோம். பாறையை இருளில் எடுத்து வரவேண்டாம் என்று இன்று காலை எடுத்து வந்தோம்!" என்றான்.

'நான் கூட நேற்றிரவு இருபது கற்தூண்களை நாட்டி யுள்ளேன். இன்று காலை அவற்றின் மீது பாறைகளைக் கிடத்தும் பணிகள் தற்போது தொடங்கியிருக்கும்..!' — மனதினுள் நினைத்தபடி தாரா அங்கிருந்து நகர்ந்து ஆலமரத்தடியில் அமர்ந்தாள்.

*இன்றிரவு இங்கேயே தங்கிவிட்டு, விடியலில் சோதனை செய்யும் காவலர்கள் அகன்ற பிறகு, யாருடைய உதவியைப் பெற்றாவது, சுவடியை எடுத்துக் கொண்டு சாளுக்கியம் புறப்படலாம். கையில் இருக்கும் துணி மூட்டையில் மல்ல எதி கொடுத்திருக்கும் தங்க நாணயங்கள் அவர்களது கூலிக்கு உதவும்..! — என்று எண்ணியபடி துணிமூட்டையைத் தலையின் அடியில் வைத்தபடி படுத்தாள். சுகமான காற்று அவளைத் தாலாட்ட, அப்படியே உறங்கிப் போனாள். நள்ளிரவில், கள்வன் ஒருவன் கிழவியின் தலையின் அடியில் மூட்டை கிடப்பதைக் கண்டு, அவளை நெருங்கினான். அவள் தலையிலிருந்து மூட்டையை உருவ முயன்றான். சட்டென்று கிழவி கண்விழித்து மூட்டையைப் பற்றிக்கொண்டு அலற, வேறு வழி தோன்றாமல், தனது கையில் இருந்த கட்டாரியால் கிழவியின் நெஞ்சைப் பதம் பார்த்துவிட்டு, துணிமூட்டையுடன் ஓடிச்சென்றான்.*

*இருபது பேரின் உயிருக்கு உலை வைத்திருந்த தாரா, அந்த ஆலமரத்தின் கீழ் சடலமாகக் கிடந்தாள்.*

*சுமைதாங்கிக் கல்லினுள் அவள் ரகசியமாகப் பதுக்கி யிருந்த சுவடி கிடந்தது. அத்திமலையான் மட்டுமல்ல, அவனைப் பற்றிய குறிப்புகள் கூட, காஞ்சியின் எல்லையைக் கடக்காது போலும்..!*

# 4. புடலைத் தோட்டத்தில் சடலங்காய்கள்

**வே**கவதி ஆற்றின் கரையில் சாணக்கியன் என்கிற விஷ்ணுகுப்தனின் தந்தை காஞ்சனகுப்தர் வேத பாடசாலை நடத்திய அதே இடம் இப்போது அனேக மாற்றங்களைக் கொண்டிருந்தது. சாணக்கியரின் வீடு இருந்த இடத்தில் இப்போது பெரிய பாடசாலை இயங்கிக் கொண்டிருந்தது. இன்னும் பொழுது விடிய வில்லை. வேதபாடசாலையின் பார்ப்பன சிட்டர்களே எழுந்து இன்னும் வேதங்களை ஓதத் துவங்கவில்லை, நமக்கு என்ன அவசரம் என்பது போன்று பட்சிகள், தங்கள் முகங்களை இறகின் அடியில் புதைத்துக் கொண்டு ஒரு கண்ணால் ஆஸ்ரமத்தை வெறித்துப் பார்த்தன.

"உத்திஷ்ட!" —அப்ரமேயன் என்கிற தலைமை மாணவன் எழுந்து பூமிதேவியைத் தொழுது, சிரசில் ஒற்றிக்கொண்டு எழுந்து சக மாணவர்களிடம் கட்டளை யிட்டான். மன்னர்களுக்கு ஒரு வில், மக்களுக்கு ஒரு இல், மாணவர்களுக்கு ஒரு சொல் என்கிற காலம் அது. தலைமை மாணவனின் ஒரே சொல் அவர்களை எழுப்பிவிட்டது.

உடனே கையில் கெண்டி, அவரவர்களின் ஓலைப் பாயினையும், அவரவர்களின் சம்பிரதாய முறைப்படி திருமண், ஸ்ரீசூர்ணம், திருநீறு, சந்தனம் என்று சம்புடத்தில் எடுத்துக்கொண்டு வேகவதி ஆற்றை நோக்கிப் புறப்பட்டனர், சிறுவர்கள். அனைவருக்கும்

எட்டிலிருந்து பதின்மூன்று வயதிற்குள்ளாகத்தான் இருக்கும். அவர்களைத் தலைமை தாங்கி நடத்திச் சென்ற அப்ரமேயனுக்குப் பதினான்கு வயது இருக்கும்.

பாடசாலையின் பின்புறம் ஒரு ஹயக்ரீவர் ஆலயமும், மேதா சரஸ்வதி ஆலயமும் இருந்தன. அந்த ஆலயத்தின் மடைப்பள்ளிகளில்தான் மாணவர்களுக்கு உணவு தயாராகும். பாடசாலையின் குரு பரப்ரம்மர் வேகவதி ஆற்றின் கரையில் நிறையக் காய்கறிகளைப் பயிரிட்டிருந்தார். காய்த்து தொங்கும் பூசணி மற்றும் புடலைக் கொடிகள், அவரை மற்றும் கொத்தவரைக் காய்கள், தண்டுகள் என்று பாடசாலையின் தேவைக்குப் போக, மிகுதி காய்கறிகளை அத்திமலையானின் ஆலயத்திற்கும் அனுப்பிவிடுவார். இந்த முறை, ஆங்காங்கே புடலங்காய்கள் நிறையக் காய்த்திருந்தன.

இன்னும் விடிவதற்கான அறிகுறிகள் இல்லை.

பாலகர்கள்தானே! அந்த இருளில் கொடிகளில் தொங்கிக் கொண்டிருந்த புடலைகள் சர்ப்பங்களைப் போன்று காற்றில் அசைந்து கொண்டிருக்க, நூற்றுக்கணக்கான பாம்புகள் அசைந்து கொண்டிருப்பது போன்று அவர்களின் கண்களில் தோன்ற, அந்தப் பாலகர்கள் பயத்துடன் நடையில் தயக்கத்தைக் காட்ட, அப்ரமேயன் மட்டும் அவர்களை திரும்பி நோக்கினான்.

“அவை சர்ப்பங்கள் இல்லை. புடலைகள் தான். இருப்பினும் அச்சம் ஏற்படாமல் இருக்க, கருட மந்திரத்தைச் சொல்லிக்கொண்டு வாருங்கள்” என்று உத்தரவிட்ட அப்ரமேயன், புடலை தோப்பினில் நுழைந்தான். சிறிது தூரமே சென்றிருப்பார்கள்.

அப்ரமேயனின் கண்களில் குவியலாக ஏதோ தென்பட்டது. புடலங் கொடிகள் தான் உடைந்து விழுந்திருக்கின்றன போலும் என்று மேலும் இரண்டடி நடந்தவனின் முகம் மாறியது.

"அனைவரும் வந்த வழியே திரும்புங்கள்!" என்று அப்ரமேயன் கூறுவதற்குள், மற்ற பாலகர்களின் கண்களில் அந்தக் குவியல் பட்டது.

புடலங்காய் குவியல் அல்ல. சடலங்காய்களின் குவியல்.

ஆறு சடலங்கள் ஒன்றன் மீது ஒன்றாக ஒரு புடலைக் கொடியின் அருகே குவிக்கப்பட்டிருந்தன. அவ்வளவு தான்.. அப்ரமேயனும், மாணவர்களும் தங்களது ஆசானைத் தேடி ஓடிச்சென்றனர்.

வேகவதி ஆற்றங்கரையின் பாடசாலைத் தோட்டத்தில் ஆறு சடலங்கள் குவிக்கப்பட்டுள்ளன, பாடசாலை குரு பரப்ரம்மர் அரண்மனை அதிகாரிக்குத் தகவலை அனுப்பினார்.

காவல்படையைச் சேர்ந்த பத்து பேர் அவசரமாகப் பாடசாலைத் தோட்டத்திற்கு விரைந்தனர்.

அரண்மனை அதிகாரி கவுசிகதாசர் வேகவதி ஆற்றின் கரையில் இருந்த பாடசாலைக்குச் சென்றிருந்த காவலர்களிடம் தகவலை எதிர்பார்த்துக் காத்திருக்க, அமைச்சர் சரத்சந்திர பரமர் ஓடி வந்தார்.

"விஷயத்தைக் கேள்விப்பட்டீரா கவுசிகரே?" — அரண்டு கிடந்த அமைச்சரின் முகத்தைப் பார்த்ததும் அவருக்கு விஷயம் தெரிந்துவிட்டது என்பதை யூகித்தார், கவுசிகர்.

"சடலங்கள் கிடைத்த விவகாரம்தானே. எனக்குத் தெரியும். பாடசாலைக்கு வீரர்களை அனுப்பி யிருக்கிறேன்."

"பாடசாலைக்கு அனுப்பினீர்களா? அங்கு எதற்கு? எனது மைத்துனன் சாம்பசிவத்தின் மனைவி திரையன் ஏரிக்கு நீர் கொண்டு வருவதற்காகச் செல்ல, அங்கே நான்கு பிணங்களைக் கண்டு அலறியடித்தபடி தனது

மனைக்கு ஓடி வந்தாள். எனது மைத்துனன் தகவல்லைக் கூற ஒத்தாடைக்கு வந்தான்!" — அமைச்சர் கூறினார்.

கதிரவன் உதித்து, காஞ்சி ஒத்தாடையின் அரண்மனை வளாகத்தினுள் தனது வெளிச்சத்தைப் பாய்ச்சுவதற்குள் நால்திசையினில் இருந்தும் தகவல்கள் வந்து குவிந்தன.

திருப்புட்குழி ஜடாயு வனத்தில் விடியற்காலையில் நான்கு பிணங்களைக் கண்டுள்ளார்கள்.. ஆலயத்திற்கு மலர்களைப் பறித்து வரும், தனஞ்செயன் என்கிற பாகவதன் சடலங்களைக் கண்டு ஆலய அதிகாரிக்குச் சொல்ல, அவர்கள் அரண்மனைக்குச் செய்தியை எட்டவிட்டார்கள்.

கூரம் அருகே மூன்று சடலங்களும், தாமோதர மல்லம் அருகே மூன்று சடலங்களும் கிடப்பதாகத் தகவல் வர, அரண்மனையே கதிகலங்கிப் போனது.

சடலங்களாகக் கிடப்பவர்கள் யார்? அனைத்து சடலங்களையும் திரட்டி, ஒத்தாடை சிறை கிடங்கில் வரிசையாக வைத்தார்கள். மொத்தம் இருபது சடலங்கள். இறந்த ஒருவனின் ஆடையைப் பரிசோதித்தபோது சாளுக்கிய சின்னமான போர்வாள், பன்றி, பிறை சந்திரன், சூரியன் மற்றும் சங்கு பதிக்கப்பட்ட ஒரு முத்திரை கிட்டியது. இறந்தவர்கள் அனைவரும் சாளுக்கியர்கள் என்பது உறுதியானதும், அவசரமாகச் சிங்கமல்லனுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. சாளுக்கியர்களுடன் விரோதம் நிலவுகின்ற இந்தத் தருணத்தில், காஞ்சியில் இருபது சாளுக்கியர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டது என்றால், போர் மூளாதோ?

சடலங்களை மேற்பார்வையிட வந்திருந்தான் சிங்கமல்லன். உடன் அரசி ஸாமவை பெருந்தேவியும் வந்தாள். சிங்கமல்லன் ஆமாத்தியாரையும், தண்டியையும் நோக்கினான்.

"விடியலில் இதென்ன அனர்த்தம். இவர்கள் எப்படிக் காஞ்சியில் வந்து இறந்தார்கள்? கொலையா தற்கொலையா?" — சிங்கமல்லனின் குரல் கிணற்றிலிருந்து கேட்பது போன்று ஒலித்தது.

ஆமாத்தியர், அதற்குள் ஆரம்ப விசாரணையை முடித்துவிட்டிருந்தார்.

"அனைவரின் உடலிலும் நீலம் பாய்ந்திருக்கிறது. எனவே விஷம் அருந்தி இறந்திருக்கக் கூடும்!" —ஆமாத்தியார் கூற, சிங்கமல்லன் தண்டியை நோக்கினான்.

"அரசே! இவர்களது மரணம் நமது சரித்திரத்தின் ஒரு நிகழ்வினை நினைவுபடுத்துகிறது. அத்திமலைத்தேவனை ஒளித்து வைத்த இளவரசியார் நவரத்ன பல்லவியும் அவரது சீதன வெள்ளாட்டிகளும் தற்கொலை செய்து கொண்ட நிகழ்வு போல், இவர்கள் அனைவரும் ஏதோ ஒரு காரியத்தை நிறைவேற்றிவிட்டு, தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டிருக்க வேண்டும், இல்லையென்றால்.." என்று தண்டி இழுக்க,

"யாராவது இவர்களுக்கு நஞ்சை கொடுத்துக் கொன்றிருக்க வேண்டும்! இவர்கள் எப்படிக் காஞ்சியினுள் பிரவேசித்தார்கள். இந்த முடிவினை ஏன் ஏற்றனர்? ஐயுறும் வகையில் காஞ்சியில் யாராவது நடமாடினால் உடனே கைது செய்யுங்கள்."

ஸாமவை பிணங்களை மேலும், கீழுமாகப் பார்த்தாள். இருபது பேர். அனைவரும் புஜபராக்கிரமம் உள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள்.

"சுவாமி! அனைவரும் சாளுக்கியர்களா?" ஸாமவை கேட்க, சிங்கமல்லன் அவளை நோக்கி தலையசைத்தான். தனது மனைவி தனது சிந்தைக்கு வேலை கொடுத்துக் கொண்டிருக்கிறாள் என்பது புரிந்தது.

“மன்னா! ஒரு கேள்வி! நவரத்ன பல்லவியின் சீதன வெள்ளாட்டிகள் எப்படி ஒன்பது அடி சிலையைச் சுமந்து சென்று ஒளித்து வைத்தனர்..? அதுவும் ஒரே இரவில் எப்படிச் சிலையை ஒளித்து வைத்து, குறிப்புகளையும் வரைந்து, அவற்றைப் பதுக்க முடிந்தது?”

“சீதன வெள்ளாட்டிகளாக அளிக்கப்படுபவர்கள் ஒவ்வொருவரும் பலவான்களாக இருப்பார்கள். ஒவ்வொருவரும் நான்கைந்து ஆட்களின் பலத்தினைக் கொண்டு இருப்பார்கள். உயரமும், எடையும் சாதாரண ஒரு ஆண்மகனைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக இருக்கும். யாருக்கு சீதன வெள்ளாட்டிகளாகத் திகழ்கின்றனரோ அவர் விடுதலை அளிக்கும் வரையில் அவருக்கே ஊழியம் செய்ய வேண்டும். அவர் இறந்து போனால், தாங்களும் உயிரை மாய்த்துக் கொள்வார்கள். சந்திராத்ரி, விருகோதரன், ரவிவர்மன், கம்பீரன் நால்வருமே நாலைந்து ஆட்களின் பலம் பொருந்தியவர்கள்தான். ஆலயம் புகுந்து இந்த நால்வருமே ஒன்பதடி அத்திமலையானின் சிலையைச் சுமந்து சென்றிருக்கிறார்கள். எருதுகள் பூட்டிய வண்டியில் அவர்கள் குணம்குன்றத்திற்குச் சென்றிருக்க வேண்டும். குணம்குன்றம் ஆலயத்தில் தடவாவிகளும், நீர்த்தேக்கத் தொட்டிகளும் அதிகம் உண்டு. நிலத்திற்கு அடியில் உள்ள தொட்டியில் சிலையைப் பதுக்கிவிட்டு, பிறகு வரை படம் வரைந்து, அதனை ஒன்பது பகுதிகளாகப் பிரித்து, குறிப்புகளை எழுதி வைத்துவிட்டார்கள். ஒரு இரவில் காரியத்தைச் செவ்வனே முடித்தனர்.” — இந்த விவகாரத்தை விசாரித்துக் கொண்டிருந்த ஆமாத்தியார் ஸாமவைக்கு விளக்கினார்.

“ஒரு சீதன வெள்ளாட்டிக்கு ஐந்து ஆள் பலம் என்றால், மொத்தம் நான்கு சீதன வெள்ளாட்டிக்கு எவ்வளவு ஆட்களின் பலம் இருக்க வேண்டும்?” — ஸாமவை தண்டியை பார்த்தாள்.

"இருபது ஆட்களின் பலம், அரசியாரே!" — தண்டி சொல்ல, ஸாமவை சிங்கமல்லனைப் பார்த்தாள்.

"தண்டி சொல்வது சரி. சரியாக இங்கே இருபது பிணங்கள் இருப்பதைக் கவனியுங்கள்!" ஸாமவை கூற, அனைவரும் அதிர்ந்து போய் அவளைப் பார்த்தார்கள்.

"அரசே! ஜலசயன பெருமாளாகப் பள்ளிகொண்ட நமது அத்திமலையானின் பிரதிமை ஆழிப்பேரலையில் சிக்கி கடலடியில் சென்றது. தண்டியின் தலைமையில் கடலடியில் நமது ஆட்கள் சென்று பார்த்தபோது அங்கே சிலை இல்லை. 'மகா மல்ல எதி' என்கிற பெயர் அங்கே சுவரில் வடிக்கப்பட்டிருந்தது. மகா மல்ல எதி யார்? அவனிசிம்மருக்கும், சாளுக்கியத்தின் நாட்டியத் தாரகை வித்யுதாவுக்கும் பிறந்தவன்தானே. அவனை ஆதரிக்க, அத்திமலைத்தேவன் சிலையை எடுக்கச் சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்யனால் இவர்கள் அனுப்பப் பட்டிருக்க வேண்டும். சிலையை இவர்களைக் கொண்டு பத்திரப்படுத்திவிட்டு, விவரம் வெளியே தெரியக்கூடாது என்பதற்காக மல்ல எதி இவர்களை விஷம் வைத்துக் கொன்றிருக்க வேண்டும். நமது அத்திமலையானின் பிரதிமை மகா மல்ல எதியின் வசம் உள்ளது என்பது நிரூபணம் ஆகிவிட்டது. அவனை எப்படியாவது தேடிக் கண்டு பிடியுங்கள்." — ஸாமவை கூற, அவளது கூரிய புத்தி அனைவரையுமே திகைக்க வைத்தது.

"எல்லைகளை மூடுங்கள். மகா மல்ல எதி சிலையுடன் எங்கே செல்ல முடியும்? நாடெங்கும் அவனைத் தேடுங்கள்..!" — சிங்கமல்லன் உத்தரவிட்டான்.

அரண்மனைக்குச் செல்வதற்கு முன், நந்தவனத் தடாகத்தில் நீராடிவிட்டுச் செல்லும் உத்தேசத்துடன் ஸாமவையும், சிங்கமல்லனும் தடாகத்தை நெருங்க, ஒரு தாதி விரைந்து வந்தாள்.

"மன்னிக்க வேண்டும் அரசே! நந்தவன வாயிலில் காவலர் நிற்கிறார். யாரோ ஒரு பெண் வந்திருக்கிறாளாம்.

இன்று காஞ்சியில் கிடைத்த சடலங்களைக் குறித்துத் தனக்குத் தகவல் தெரியும் என்கிறாள். தங்களிடம்தான் அதனைத் தெரிவிப்பேன் என்று பிடிவாதம் செய் கிறாளாம்!" — தாதி கூற, சிங்கமல்லன், ஸாமவையைப் பார்த்துவிட்டு, அவளைத் திரும்பி நோக்கினான்.

"அந்தப் பெண்ணை உள்ளே அனுப்பு!"

சரஸிஜா விரைந்து வந்து சிங்கமல்லனை பணிந்தாள்.

'மன்னரே! நேற்று பலத்த மழை பெய்து கொண்டிருந்தது அல்லவா? ஆதிசரஸ்வதி ஆலயத்திற்குச் சென்றுவிட்டு வரும்போது தருமநகரப் பிரவாள மாளிகையில் ஒதுங்கினேன். பாழடைந்து கிடக்கின்ற அந்த மாளிகையில் ஒளி தெரிய உப்பரிகை சென்று இரகசியமாக எட்டிப்பார்த்தேன். தசகுமாரர்களில் ஒருவரான பிரமதி என்கிற மகா மல்ல எதி ஒரு கரியநிற தலைப்பாகையைக் கட்டிக்கொண்டு சுமார் இருபது சாளுக்கியர்களிடையே பேசிக்கொண்டிருந்தார். அத்திமலைத்தேவன் பிரதிமையைக் கடலில் இருந்து எடுத்துச் சாளுக்கியம் எடுத்துச் செல்லப் போவதாகக் கூறிக் கொண்டிருந்தார். அங்குக் குழுமியிருந்தவர்களுக்கு ஒரு கிழவி உணவு சமைத்துக் கொண்டிருந்தாள். இன்று காஞ்சியில் கிடைத்த சடலங்கள் அந்தச் சாளுக்கியர் களின் சடலங்கள் என நினைக்கிறேன்..!" —சரஸிஜா கூறினாள்.

நீராடும் எண்ணத்தைக் கைவிட்டு சிங்கமல்லனும், ஸாமவையும் சரஸிஜாவை அழைத்துக்கொண்டு சிறைச்சாலை கிடங்கிற்குச் சென்றனர்.

பிணங்களைக் கவனித்த சரஸிஜா மன்னனை பணிவுடன் நோக்கினாள்.

"அரசே! இவர்களைத்தான் நான் பிரவாள மாளிகையில் கண்டேன். அனைவருக்கும் நஞ்சினைக் கலந்த உணவை அளித்து அவர்களைக் கொன்று

விட்டான், மகா மல்ல எதி." — சரஸிஜா கூறியதுமே, மகாமல்லன் தீர்மானத்திற்கு வந்துவிட்டான்.

"மகா மல்ல எதி! இன்றிரவு வருகிறேன். எனக்காகப் பாழடைந்த பிரவாள மாளிகையிலேயே காத்திரு. உனது முடிவு எனது கையில்தான். மூன்று தலைமுறை கணக்கை இன்று தீர்த்துவிடுகிறேன். பொறு!" — என்றபடி தனது முத்துமாலையைக் கழற்றி சரஸிஜாவிடம் அளித்துவிட்டு, மீண்டும் ஸாமவையுடன் நந்தவனத் தடாகத்தை நோக்கி நடந்தான்.

# 5. உயிரா.. மானமா?

**கா**ஞ்சியின் பல்வேறு பகுதிகளில் சாளுக்கிய வீரர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்ட மறுதினம். முன்னிரவு நள்ளிரவாகக் கனிந்துவிட்டிருந்த நேரம் தண்டி, நரசிம்ம பல்லவனின் அந்தப்புரத்தினுள் நுழைந்தான். கருங்கல் தரையில், பட்டுத்துணியால் நெய்யப்பட்டிருந்த அவனது காலணிகள் 'சரக்.. சரக்' என்று ஒலி எழுப்பி அவன் மன்னனின் அந்தப்புரத்திற்கு இந்நேரத்தில் செல்வதற்கு ஒரு முக்கியக் காரணம் உள்ளது என்பதைப் பறைசாற்றிக்கொண்டிருந்தது.

இறையா என்கிற புலிகேசியின் ஆருயிர் நண்பனாக விளங்கிய பாரவியின் பெயரன் தண்டி புலமையில் வல்லவன் என்றாலும், குருகுலத்தில் சிங்கமல்லனுடன் ஒன்றாகப் படித்து அரசாங்க பணியில் நுழைந்து, இப்போது ஆசார்யர் தண்டியாக உயர்வு பெற்றிருந்தான். சிங்கமல்லன் அவனுக்குப் பல சலுகைகளை அளித்திருந்தான். தனிமையில் நரசிம்ம பல்லவனை, 'சிங்கமல்லா!' என்று அழைக்கும் உரிமையும் தண்டிக்கு உண்டு.

அந்தப்புரத்தின் வாயிலை அடைந்தவன், அங்கிருந்த காவலனைப் பார்க்க, அவன் குறிப்பு உணர்ந்தவனாக, தனது சுட்டுவிரலை வளைத்து, அந்தப்புரக் கதவினை தட்ட, தாதி ஒருத்தி வெளியே தலை நீட்டினாள்.

"ஆச்சார்யா தண்டி வந்திருக்கிறார்!" — காவலன் கிசுகிசுக்க, தாதி தனது விழிகளால் ஒருமுறை அவரை மேலுங்கீழும் நோக்கிவிட்டு, ஆமை தனது கூட்டிற்குள்

தனது தேகத்தை இழுத்துக் கொள்வது போன்று, தனது சிரசை உள்ளே இழுத்துக் கொண்டாள்.

கதவு திறக்கப்பட்டு, தாதி பணிவுடன் வெளியே வந்து தண்டியை நோக்கித் தலைகுனிய, தண்டி அந்தப் புரத்தினுள் பிரவேசித்தான். சிங்கமல்லன் தனது பள்ளி யறையைவிட்டு வெளியே வந்து, ஒரு இருக்கையில் அமர்ந்திருந்தான்.

*வேட்டி மட்டும் அணிந்து, தனது மார்பினை சால்வை ஒன்றினால் போர்த்தியிருந்தான், மன்னன்.

"காரணம் இல்லாமல் இந்நேரம் வரமாட்டாயே? என்ன விஷயம் தண்டி?"

"அரசியார் கூறியது உண்மையாகிவிட்டது. சாளுக்கியர்களின் பிணங்களுக்குப் பின்பாக மகா மல்ல எதிதான் இருக்கிறான். அவர்களுக்கு உணவு படைத்து அதில் நஞ்சைக் கலந்து கொலைகளைச் செய்திருக் கிறான். நஞ்சைக் கலந்த சாளுக்கிய நாட்டு மூதாட்டி ஒருவள் ஐயம்படுகையில் பிணமாக கண்டுபிடிக்கப் பட்டாள்.

"தெரியும்! மல்ல எதியின் கணக்கை தீர்க்கத்தான் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன்..!" — சிங்கமல்லன் கூறினான்.

"தனியாகவா! நானும் வருகிறேன்!" — தண்டி கூறினான்.

"அவன் நாட்டின் எதிரி அல்ல. எனது தனிப்பட்ட எதிரி. எனது பாட்டனின் ஆசைநாயகிக்கு பிறந்தவன். ஆக, இது எங்கள் குடும்ப விஷயம்.. வெளிமனிதர்கள் இந்த விவகாரத்தில் தலையிடுவதை நான் அனுமதிக்கப் போவதில்லை."

* வேட்டி என்னும் சொல் வேஷ்டிதம் என்கிற சமஸ்க்ருத சொல்லில் இருந்து வந்தது. வேஷ்டிதம் என்றால் ஏற்றுக் கொள்ளுதல் என்று பொருளாம்.

சிங்கமல்லனின் பிடிவாதம் தண்டி அறிந்ததுதானே..! வேறு வழியின்றித் தனது தலையைப் பணிய, சிங்கமல்லன் காவலன் கொண்டு வந்த வாளினை வாங்கித் தனது உறையினில் வைத்தான். தண்டியை நோக்கி ஒருமுறை கண்களை மூடித் திறந்தான்.

'கவலைப்படாதே! என்னை நான் பார்த்துக் கொள்கிறேன்!' என்கிற பொருள் அந்தச் செய்கையில் தொனித்தது.

★ ★ ★

**ஒ**த்தாடையில் இருந்து புயல் வேகத்தில் தருமநகரம் வந்த சிங்கமல்லன் ஆதிசரஸ்வதி ஆலயத்தின் அருகாமையில் நின்ற பிரவாள மாளிகையின் அருகே தனது புரவியை நிறுத்தினான்.

சிம்மவர்மன் தனது பிரிய மகள் நவரத்ன பல்லவிக்குச் சீதனமாக எழுப்பியிருந்த பிரவாள மாளிகை. ரணதிலகன் என்கிற ஸ்வேத ஹூணனுக்கு நவரத்னாவை தனது நோக்குவர்மத்தால், பிரக்ஞதாரா மணமுடித்துக் கொடுத்திருக்க, அவளது வசியத்திற்குக் கட்டுப்பட்டிருந்த சிம்மவர்மனே தனது கஜானாவில் இருந்து அவர்களுக்குச் சீதனங்களை அள்ளிக் கொடுத்திருந்தான்.

இந்தப் பிரவாள மாளிகையில் இருந்துதானே ரண திலகன் ஒரு குட்டி ராஜ்யத்தையே நடத்திக் கொண்டிருந் தான். எழுமால் கோயில்களை அவன் நீக்கியபோது கூட, பல்லவ அரச குடும்பம் மௌனம்தானே சாதித்திருந்தது. பிரக்ஞதாராவின் வசியசக்தி அவ்வளவு பலம் வாய்ந்ததுதானே.

அவனிசிம்மன் காலம் முடிந்து, மகேந்திர பல்லவனின் ஆட்சியும் முடிந்து, தற்போதைய சிங்கமல்லனின் ஆட்சியில் கவனிப்பாரற்றுக் கிடந்தது பிரவாள மாளிகை. நவரத்ன பல்லவியின் மரணத்திற்குப் பிறகு, அந்த இடம்

துர்ப்பாக்கியங்களை வழங்கும் இடமாகக் கருதப்பட்டு, அரச குடும்பத்தினர் அங்கே வருவது நின்று போனது. பல்லவர்கள் பிரவாள மாளிகையைத் தங்களது அவமானச் சின்னமாகக் கருதினார்கள். மக்களும், இறந்து போன இளவரசி ஆவியாக நடமாடுகிறாள் என்கிற பயத்தில் அங்கே செல்லவில்லை. எனவே, கள்வர்களுக்கும், கயவர்களுக்கும், சர்ப்பங்களுக்கும் உரிய இடமாக மாறிப்போனது பிரவாள மாளிகை.

சரஸிஜா என்கிற பெண், தான் மல்ல எதியை அங்கே கண்டதாகக் கூறியதால் மட்டுமே, சிங்கமல்லன் பிரவாள மாளிகையில் கால்களைப் பதிக்கின்றான்.

ஆங்காங்கே இடிந்து, புதர்களும், செடிகளும் மண்டிக் கிடந்தன. வெளிச்சம் இன்றி மாளிகையே இருளில் மூழ்கி இருந்தது.

'அடாடா! இதைப் பற்றி யோசிக்காமல் போனோமே! தீப்பந்தம் இல்லாமல் எங்ஙனம் உள்ளே நுழைந்து, மல்ல எதியைத் தேடுவது?'

சிங்கமல்லன் யோசித்துக் கொண்டு நின்றிருந்தான். மீண்டும் அரண்மனைக்குச் செல்ல வேண்டியதுதான் என்கிற எண்ணத்துடன் அவன் திரும்ப முற்பட, தற்செயலாகத் தன்னை நோக்கி ஒரு ஒளிவட்டம் நகர்ந்து வருவதைப் பார்த்தான், சிங்கமல்லன்.

அதோ வருகிறான், மகா மல்ல எதி!

சிங்கமல்லனின் கை உறையில் இருந்த வாளின் கைப்பிடியை பற்றியது.

ஆனால், ஒளிவட்டம் அருகில் வந்தவுடனேயே, அந்தச் சுளுந்தினை ஏந்தி வருபவன் ஒரு இளங்குமரன் என்பதை யூகித்துவிட்டான், சிங்கமல்லன். இவனது தந்தையின் வயதை ஒத்தவன் மல்ல எதி. இவன் மல்ல எதியாக இருக்க முடியாது.

*"வீரரே! வாருங்கள் நானும் தங்குவதற்கு இடம் தேடித் தான் அலைகிறேன். இந்தப் பரந்து விரிந்த மாளிகை பாழடைந்து கிடந்தாலும், நாம் இருவரும் இன்றைய இரவை கழிப்பதற்கு வசதியாக இருக்கும் என்று எண்ணுகிறேன்..!" கம்பீர குரலில் அந்த இளங்குமரன் பேசினாலும், அவன் தமிழை உச்சரித்த விதம், அவன் அன்னிய தேசத்தினனாக இருக்கக் கூடும் என்பதை உணர்த்தியது.*

*"வீரனே! நீ யார்? உன்னைப் பார்த்தால் அயல் தேசத்தைச் சேர்ந்தவனாகத் தெரிகிறது? நடுநிசியில், நீ ஏன் இப்படி அலைந்துகொண்டு இருக்கிறாய். நீ சாளுக்கிய தேசத்தவனோ?" — சிங்கமல்லன் கேட்டான்.*

*"சாளுக்கிய தேசத்தைச் சேர்ந்தவன் இல்லை. நான் காவிய நாயகன் இராமபிரானுக்குக் கீர்த்தியைத் தந்த தேசத்தைச் சேர்ந்தவன்." — அந்த இளங்குமரன் கூறினான்.*

*அவன் வேறு யாருமல்ல. இலங்கை மன்னனாகச் சங்கபோதி பரம்பரையால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பூவண்ண ஆழிசிங்கன் மற்றும் ஹததத்தனின் சதியில் இருந்து தப்பிக்க வேண்டி கடல் கடந்து மல்லையில் வந்து இறங்கிய மானவர்மன்தான்.*

*"இலங்கையைச் சேர்ந்தவனா நீ? காஞ்சியில் என்ன செய்கிறாய்?"*

*"இலங்கையின் சங்கபோதி பரம்பரையைச் சேர்ந்தவன் நான். எனது பெயர் மானவர்மன். அக்கபோதி என்கிற திஸ்ஸவானா பரம்பரையைச் சேர்ந்த மன்னன் இறந்ததும், என்னை இலங்கை அரியணைக்குத் தேர்ந்தெடுத்தனர்.. ஆனால் என்னைக் கொல்வதற்குச் சதிகள் தீட்டப்பட, தப்பி ஓடி இங்கே வந்திருக்கிறேன்." — மானவர்மன் கூறினான்.*

"புகலிடம் தேடி வந்திருக்கிறாய் போல் இருக்கிறதே..? அதற்கு நல்ல இடம் பார்த்தாய். இது மிகவும் எதிர்மறை எண்ணங்களை ஏற்படுத்தக் கூடிய மாளிகை. இங்கே தங்கினால், உனக்குப் போரிடும் எண்ணமே போய்விடும். நானே இதன் உள்ளே எப்படி நுழைவது என்று யோசிக்கிறேன். நான் இங்கே தங்குவதற்கு வரவில்லை. பல்லவத்திற்குக் கேடு விளைவித்துக் கொண்டிருக்கும் ஒரு தீய சக்தியை வேரறுப்பதற்காக வந்திருக்கிறேன்..!" — சிங்கமல்லன் கூறினான்.

"ஐயா! தாங்கள் யார் என்று நான் அறிந்து கொள்ளலாமா?" — மானவர்மன் கேட்டான்.

"பாரவி என்றொரு கவிஞர் உலகில் சிறப்பானவற்றைப் பற்றிப் பாடியிருக்கிறார், நீ அறிவாயோ..! புருஷேஷு விஷ்ணு, நாரீஷு ரம்பா, புஷ்பேஷு ஜாதி, நகரேஷு காஞ்சி, அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த காஞ்சியைத் தலைநகரமாகக் கொண்ட பல்லவத்தின் மன்னன் நரசிம்ம பல்லவன்..!" —சிங்கமல்லன் கூறியதும், மானவர்மனின் வாய் உலர்ந்து போனது.

"கடல்மல்லையை எழுப்பிய பல்லவரா நீங்கள்? இன்று நாள் முழுவதும் அங்குதான் பொழுதைக் கழித்தேன்" என்றவன், சிங்கமல்லன் சற்றும் எதிர்பாராத வகையில், சுளுந்தினைக் கீழே வைத்துவிட்டு, மூன்று முறை சிங்கமல்லனை வணங்கினான்.

சிங்கமல்லனின் புருவங்கள் உயர்ந்தன.

"எதற்காக மானவர்மா, என்னை மூன்றுமுறை வணங்கினாய்?" — சிங்கமல்லன் கேட்க, அவனைப் பிரம்மிப்புடன் நோக்கினான், மானவர்மன்.

"உங்கள் பிரதாபங்களை அறிந்தவன் நான். மல்லையின் கலைக்காக ஒருமுறை, புலிகேசியின் தலைக்காக ஒருமுறை, அஸ்வமேத நாயகன் அத்திமலைத் தேவனின் சிலையை மீட்டவர் என்பதால் ஒருமுறை

என்று மூன்று முறை தங்களை வணங்கினேன்." மானவர்மன் விளக்கினான்.

சிங்கமல்லனின் முகத்தில் துயரத்தின் சாயை படர்ந்தது.

"பிரயோஜனம் இல்லை, மானவர்மா! சிலையை மீட்டேன். கடல்மல்லையில் ஆலயம் அமைத்தேன். ஆனால் கடல் ஆழிப்பேரலையில் சிலை கடல் அடியில் சென்றுவிட்டது. அதனை எடுக்க முயற்சிகள் செய்த போது எனது எதிரியின் வசம் அந்தச் சிலை இருப்பதாகத் தெரிய வந்தது. அந்த எதிரியின் கதையை முடிக்கத்தான், இந்த நடுநிசியில் இங்கே நிற்கிறேன்..!" — சிங்கமல்லன் கூறியதும், மானவர்மனின் மனதில் தான் இலங்கையில் இருந்து மல்லையில் வந்து இறங்கியபோது கண்ட காட்சிகள் தோன்றின.

"பல்லவ மன்னரே! நான் இலங்கையிலிருந்து தோணியில் மல்லையில் வந்து இறங்கியபோது ஒரு காட்சியைப் பார்த்தேன். இருபது பேர் திருமாலின் சிலை ஒன்றை கடலினில் இருந்து எடுத்து, ஒரு பெட்டகத்தில் வைப்பதைக் கண்டேன். தீப்பந்தத்தை ஏந்திய ஒருவன் அவர்களை வழி நடத்திக்கொண்டிருந்தான். அவனை 'மகா மல்ல எதி வாழ்க' என்று புகழ்ந்து கோஷம் எழுப்பினர் அந்த மனிதர்கள்." — மானவர்மன் கூறியதும், சிங்கமல்லன் பரபரப்படைந்தான்.

"அவன்தான் மல்ல எதி. அவனைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன். அந்தத் திருமாலின் சிலைதான் பல்லவத்தின் பொக்கிஷமான அத்திமலைத்தேவனின் சிலை. நீ அதனைக் கண்டாய் என்றால் பாக்கியம்தான் செய்திருக்கிறாய். அவர்கள் சிலையை எடுத்துக்கொண்டு எப்படிச் சென்றார்கள்?"

"ஒரு பெரிய வண்டியில் வைத்து வடக்கு நோக்கிச் சென்றார்கள் மன்னரே!" — மானவர்மன் கூறினான்.

'வடக்கு நோக்கிச் சென்றார்கள் என்றால் சாளுக்கியம் தான் சென்று இருக்க வேண்டும். அப்படியென்றால், அந்தச் சாளுக்கியர்களின் பிணங்கள் எப்படிக் காஞ்சிக்கு வந்தன? சரஸிஜா அவர்கள் இந்த மாளிகையில் வந்து தங்கியதைப் பார்த்திருக்கிறாள். அவர்கள் சாளுக்கியம் புறப்படுவதற்கு முன்பாக இந்தப் பிரவாள மாளிகையில் உணவு அருந்தியிருக்கின்றனர். போகும் வழியில் சாளுக்கியர்கள் இறந்திருக்க வேண்டும். பிணங்களை அகற்றும் பொறுப்பை அந்த மூதாட்டியின் பிள்ளை களுக்குக் கொடுத்துவிட்டு, மல்ல எதி சாளுக்கியம் சென்றிருக்க வேண்டும்' — தனக்குள் யோசித்தபடி நின்றிருந்தான், சிங்கமல்லன்.

அத்திமலைத்தேவனின் சிலை பல்லவத்தைவிட்டுச் சாளுக்கியம் சென்றிருக்க வேண்டும் என்கிற எண்ணம் அவனுள் குழப்பத்தை மிகுதியாக்க, மனம் துவண்டு நின்றிருந்தான்.

அப்போது —

தருமநகரத்தின் நுழைவாயிலில் இருந்து பிரவாள மாளிகையை நோக்கி யாரோ புரவியில் வரும் ஒலி கேட்க, சிங்கமல்லன் எச்சரிக்கை அடைந்தான்.

"மானவர்மா! கையில் உள்ள சுளுந்தினை அணைத்து விடு. ஒருவேளை, மல்ல எதிதான் சாளுக்கியத்தில் சிலையை ஒளித்துவிட்டு வருகிறானோ! சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தன் அவனை நன்றாகவே தூண்டிவிடுகிறான். எங்கள் பொக்கிஷத்தைக் களவாட அவனும் உதவி செய்திருக்கிறான் போலும். விடப்போவ தில்லை. இதற்கு நிரந்தரத் தீர்வினைக் காணப்போகிறேன். சாளுக்கியத்தை அழித்து, அத்திமலைத்தேவன் சிலையை மீண்டும் அத்திமலையில் நிறுவப் போகிறேன்..!" — ஆக்ரோஷத்துடன் கூறினான் சிங்கமல்லன்.

"உங்களுக்கு என்னால் ஆன உதவியைச் செய்கிறேன்!" — மானவர்மன் ஒளிர்ந்து கொண்டிருந்த சுளுந்தினை அணைத்தபடி கூறினான்.

புரவியில் வந்த உருவத்தை இருளில் காண முடியவில்லை. இருந்தாலும் அது மகா மல்ல எதிதான் என்பதைச் சிங்கமல்லனின் உள்ளுணர்வு எச்சரித்தது.

தனது குதிரையிலிருந்து இறங்கியவன், இருளில் துழாவியபடி பிரவாள மாளிகையினுள் நுழைவதை மட்டும் அவனது அசைவினை வைத்துக் காண முடிந்தது.

புளிய மரம் ஒன்றின் பின்பாகப் பதுங்கியிருந்த சிங்கமல்லன் மானவர்மனின் செவியில் கிசுகிசுத்தான்.

"மானவர்மா! நான் உள்ளே சென்று அவனை பணிய வைத்து சிலை இருக்கும் இடத்தை அறியப்போகிறேன். நீ இங்கேயே இரு. நான் செய்தியை அறிந்துகொண்டு அவனைக் கைது செய்து அரண்மனைக்குச் செல்லப் போகிறேன். நீ எனது அரண்மனையிலேயே தங்கலாம். எனக்குச் சிலையை மீட்கும் விவகாரத்தில் நீ உதவி செய்கிறேன் என்றதால் நான் உன்னை இலங்கையின் அரசனாக அமர வைக்க உதவுகிறேன். இதோ..! இந்தக் கணத்தில் பல்லவ மன்னனான நானும், வருங்கால இலங்கையின் வேந்தனாகிய நீயும் இந்த ஆதிசரஸ்வதி தாய் முன்பாகச் செய்யும் உடன்படிக்கை. நமது நல்லுறவு இங்கிருந்து துவங்கட்டும். பத்திரம்..! நான் உள்ளே சென்றுவிட்டு மல்ல எதியோடு வருகிறேன்!" — என்றபடி பிரவாள மாளிகையை நோக்கி நகர்ந்தான், சிங்கமல்லன்.

"பத்திரம் அரசே!" — புதிய உற்சாகத்துடன் கூறினான், மானவர்மன்.

பல்லவ மன்னன் இவனை இலங்கை அரியணையில் அமர்த்துகிறேன் என்கிறார் என்றால், இவன் மன்னனாக இப்போதே பட்டாபிஷேகம் செய்துகொண்டது போல் தான். பிரவாள மாளிகையை வெறித்துப் பார்த்தபடி அந்தப் புளியமரத்தின் பின்பாக நின்றிருந்தான்.

மானவர்மன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, பிரவாள மாளிகையின் பக்கலில் இருந்த அரசமரத்தின்

இலைகளில் ஒளி பிரதிபலிக்க, உள்ளே சென்ற மகா மல்ல எதி தீயினை மூட்டியிருப்பது புலப்பட்டது. அந்த மாளிகையின் மைய மண்டபத்தில் இருந்து மங்கிய ஒளி புறப்பட, மானவர்மன், தொடர்ந்து அந்த மாளிகையையே நோட்டம்விட்டுக் கொண்டிருந்தான்.

உள்ளே சென்ற மல்ல எதி என்கிற பிரமதி என்கிற குணபரன் தீயின் அருகே அமர்ந்து சுவடி ஒன்றில் எதையோ வாசித்துக் கொண்டிருக்க, நிதானமாக உருவிய வாளுடன் அவனை நோக்கி நகர்ந்த சிங்கமல்லன் அதன் கூரிய முனையைச் மல்ல எதியின் பிடரியில் வைத்தான்.

"எனது பணிவான வந்தனங்கள், சிற்றப்பா! உங்கள் பிடரியில் எனது வாள் பதிந்து இருக்கும் பொழுதினில் நலமா என்று கேட்கும் அவசியம் இல்லைதான். திரும்பி நோக்குவதற்குச் சிரமமாக இருக்கும். எனவே நான் யார் என்பதை நான் சொல்லித்தான் நீங்கள் அறிய வேண்டும் அல்லவா. நான்தான் மல்ல மகா எதியாகிய தாங்கள் எதிரியாகக் கருதிக்கொண்டிருக்கும், மகா மல்லன், என்கிற நரசிம்ம பல்லவன். உங்களைச் சந்திக்க வேண்டும் என்கிற எனது வெகு நாளைய ஆவல் இன்று தீர்ந்தது..!" — சிங்கமல்லன் கூறினான்.

"வாராய்! என் மகனே! நான் நலமாக இருக்கிறேன். பிடரியில் உனது வாளை வைப்பதால் உனக்கு என்ன பெருமை கிட்டிவிடப் போகிறது. திரும்பி எனது குரல் வளையைக் காட்டுகிறேன். எனது குரல் வளையில் உனது வாளை வைத்தால் எனக்கும் பெருமை. உனக்கும் பெருமை..!"

சிங்கமல்லன் சற்றே திகைக்க, மல்ல எதி, சிங்கமல்லனை நோக்கி அமர்ந்து, அவனது வாளின் நுனியை தனது குரல் வளையினில் பதித்துக் கொண்டான்.

"சிற்றப்பா! உங்களுக்கு ஏன் பல்லவத்தின் மீது இத்துணை வன்மம்? எதற்காகப் பல்லவத்தின்

*பொக்கிஷத்தை கடத்தினீர்..?"—சிங்கமல்லன் சற்றே உக்கிரத்துடன் கேட்டான்.*

*"அதுதான் பிரச்னை, சிங்கமல்லா! அத்திமலைத் தேவனைப் பல்லவர்களாகிய நீங்கள் இன்னமும் பொக்கிஷமாகவே கருதிக் கொண்டிருக்கிறீர்கள். அத்தி மலையான் அஸ்வமேத யாகத்தில் தோன்றிய தெய்வம். மற்ற நாட்டு மன்னர்கள் அவனை ஆராதித்து அவனது அருள் பெற வேண்டும் என்று நினைக்க, நீங்களோ வளத்தை வாரி வழங்கும் அந்தப் பொக்கிஷத்தை சுயநலமாக வைத்து ஒளித்து வருகிறீர்கள். அதனால்தான் அவன் மல்லையில் இருக்க விரும்பாமல் கடலில் இறங்கிவிட்டான். எப்போது அவனைக் கடல் கொண்டதோ அவன் அனைவருக்கும் உரியவன். இனி பல்லவத்தின் பொக்கிஷம் இல்லை அவன். கடலில் இறங்கி முத்தெடுத்தது போன்று மல்லைக் கடலைக் கடைந்து நான் அவனை எடுத்திருக்கிறேன். இனி அவன் எனது பொக்கிஷம்..!" — இறுமாப்புடன் கூறினான் மல்ல எதி.*

*சிங்கமல்லனுக்கு இரத்தம் கொதித்தது.*

*"அஸ்வத்தாமாவின் குருதியில் தோன்றியது பல்லவம். அத்திமலைத்தேவனே பல்லவத்தை உருவாக்கினான். ஒரு நடனமாதின் குருதியில் தோன்றிய நீ, அவனை உரிமைகோருவதா? என்ன ஆணவம்? சிலையை எங்கே வைத்திருக்கிறாய்?" — சிங்கமல்லன் கேட்டான்.*

*"யாகத் தீயில் தோன்றியவன். குணம்குன்றத்தின் நிலத்தில் மறைந்திருந்தவன். ஆழ்கடலில் கிடந்தவன். செந்தீ, நிலம், நீர் என்று மூன்று பூதங்களில் இருந்தவர் இப்போது உனக்கு எட்டாத நிலையில் மண்ணையும், விண்ணையும் அளந்து நிற்கிறான். புகையும் புகாத இடத்தில் இருக்கிறான். நிற்கிறான்" — மல்ல எதி கூற, அவனைச் சற்றே அன்புடன் நோக்கினான், சிங்கமல்லன்.*

"சிற்றப்பா! பழைய வன்மத்தையும் பகைமையையும் மறந்துவிடுங்கள். உமக்கு அரசவையில் பெரும்பதவியைத் தந்து கௌரவமாக வைத்துக் கொள்கிறேன். அத்திமலைத் தேவன் சிலையை மீண்டும் அத்திமலையில் ஸ்தாபிதம் செய்து, அனைவரும் ஒற்றுமையாக வாழ்வோம்!" — சிங்கமல்லன் இறங்கி வர, உடனே அவனைக் கேலியுடன பார்த்தான், மல்ல எதி.

"நல்ல யோசனை மகனே. நீ தரும் பெரும்பதவியை ஏற்றுக் கொள்கிறேன். அந்தப் பதவி மன்னர் பதவியாக இருக்கும்படி நீ பார்த்துக் கொள்ள வேண்டும்!" — மல்ல எதி கூறியதும், சிங்கமல்லன் பொறுமை இழந்தான்.

"பிரமதி! அத்திமலையானை எங்கே வைத்திருக்கிறாய் என்பதைச் சொல்லி, உயிருடன் பிழைத்துச் செல். எனது பாட்டனின் குருதி பல்லவ மண்ணில் பெருகுவதை நான் விரும்பவில்லை.. சிலையை என்னிடம் ஒப்படைத்து விடு..!"

அவனை உறுத்துப் பார்த்துக்கொண்டிருந்த மல்ல எதி, சிங்கமல்லன் சற்றும் எதிர்பார்த்திராத ஒரு செயலைச் செய்தான். கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த தீயில் இருந்து ஒரு சுள்ளியைக் கையில் எடுத்து சட்டென்று சிங்கமல்லனின் மீது வீச, இதனால் நிலைகுலைந்த சிங்கமல்லன் சற்றே பின் வாங்க, அந்தச் சமயத்தை பயன்படுத்திக் கொண்டு அங்கிருந்து நழுவி ஓடத் துவங்கினான், மல்ல எதி. தன்னைச் சமாளித்துக் கொண்டு, சிங்கமல்லனும் அவனைத் துரத்திக்கொண்டு ஓட, அவன் உப்பரிகை படிகளில் ஏறி ஓடுவது, காய்ந்த சருகுகளின் ஒலியின் மூலம் அறிந்த சிங்கமல்லன் அவனை விரட்டிக்கொண்டு ஓட.. அவனை ஒரு கட்டத்தில் எட்டிப்பிடித்தான் சிங்கமல்லன். தனது இரும்புக்கரத்தினால் அவனது கழுத்தை வளைத்துப் பிடிக்க, அவனது பிடியில் தத்தளித்த மல்ல எதி சற்றும் எதிர்பாராமல் தனது முழங்கையினால் சிங்கமல்லனின்

விலாவினில் குத்த, சிங்கமல்லனின் பிடி தளர்ந்தது. அந்தத் தருணத்தை பயன்படுத்திக்கொண்டு கைப்பிடி சுவர் இல்லாத அந்த உப்பரிகையிலிருந்து ஒரு யூகத்தில் நந்தவனத்தை நோக்கிக் குதித்தான். அவன் அவ்வாறு தப்பி ஓட முயற்சிப்பான் என்பதைச் சிறிதும் எதிர் பார்க்காத சிங்கமல்லன் தானும் அந்த உப்பரிகையில் இருந்து நந்தவனத்தில் குதிக்க, இருளில் இடம் தெரியாமல் பாறைகள் இருந்த பகுதியில் விழ, சிங்க மல்லனின் முதுகில் அடிபட, வலி தாங்காமல் அப்படியே கிடந்தான். கையில் இருந்த வாளும் நழுவி எங்கோ சென்று விழுந்திருந்தது. அதைக் கவனித்துவிட்ட மல்ல எதி சிங்கமல்லனின் வாளை எடுத்துக் கொண்டு அவன் மீது பாய்ந்து அவனது நெஞ்சில் அமர்ந்தான்.

“சிங்கமல்லா! உனது பாட்டன் அவனிசிம்மனுக்குப் பிறந்தவன். உனது தந்தையின் மீது சகோதர பாசம் கொண்டிருந்தேன். எனது தாயைக் கொன்று என்னையும் ஒழிக்கச் சதி செய்தார், உனது பாட்டனார். அதாவது எனது தந்தை. அதற்குப் பதிலாக உனது தந்தை மகேந்திர மல்லனை தீர்த்துக் கட்ட நினைத்தேன். அவன் தப்பி விட்டான். ஆனால், எனது வஞ்சத்தைத் தீர்க்க நீ கிடைத்துவிட்டாய். மல்லனைக் கொல்வதைவிட மகா மல்லனைக் கொல்வது இன்னும் விசேடம் அல்லவா! அத்திமலைத்தேவனை வைத்து அஸ்வமேத யாகம் செய்து பல்லவனாக முடிசூட்டிக் கொள்ள உள்ளேன். சாளுக்கிய மன்னர் விக்கிரமாதித்யர் எனக்கு முழு ஆதரவை நல்கிவிட்டார். இனியும் நான் எதற்குக் காத்திருக்க வேண்டும். குணபர பல்லவன்தான் இனி அடுத்தக் காஞ்சி மன்னன்..!” — என்று கூறியவன், வன்மத்துடன் சிங்கமல்லனின் குரல்வளையை நோக்கி அந்த வாளினால் குறி வைத்தான்.

அவனது முகபாவத்தை வைத்தே அவன் கொலை வெறியில் இருப்பதை உணர்ந்தான் சிங்கமல்லன். அந்தக் கணத்தில் அத்திமலைத்தேவனைத் தான் நினைத்தான்.

திருலோச்சன பல்லவன், கரிகாலச் சோழன், பல்லவ இளந்திரையன், சமுத்ர குப்தன், விஷ்ணு கோபன், சிம்மவர்மன், அவனிசிம்மன், மகேந்திர பல்லவன், சாணக்கியன் என்று பல சான்றோர்கள் வழிபட்ட அத்தி மலைத்தேவனை இழப்பதற்கு இவன்தான் காரணம். அதற்கு இவனுக்கு இந்தத் தண்டனை தேவைதான். இருப்பினும், அத்திவரதனை மீண்டும் அவனது சந்நிதியில் வைத்துவிட்டே இறக்க வேண்டும் என்று இவன் செய்திருந்த சபதம் பொய்த்துப் போகிறது. அதோ.. மல்ல எதி தனது இரு கைகளையும் வாளின் பிடியில் வைத்து வேகமாக இறக்க முற்படுகிறான்.

திடீரென்று —

மல்ல எதியின் கைகள் அப்படியே அந்தரத்தில் நிற்க, அவனது கைகள் பற்றியிருந்த வாள் இப்படியும் அப்படியு மாக ஊசலாடிக் கொண்டிருந்தது. கொலைவெறி தாண்டவமாடிய அவனது கண்களில் இப்போது மரணத்தின் சாயை தென்பட்டது.

தனது கண்களைச் சமநிலைப்படுத்தி மல்ல எதியின் பின்பாக உறுத்துப் பார்த்தான் சிங்கமல்லன்.

மானவர்மன்தான் தனது கையில் இருந்த குத்து வாளினால் மல்ல எதியை குத்தியிருந்தான். மல்ல எதி அப்படியே சுருண்டு சிங்கமல்லனின் பக்கத்தில் சரிய, அவனது கண்கள் மட்டும், சிங்கமல்லனையே வெறித்துப் பார்த்தன.

"என்ன காரியம் செய்துவிட்டாய், மானவர்மா? இன்னும் அவனிடம் நான் அத்திமலைத்தேவனின் சிலை இருக்கும் இடத்தை அறியவில்லையே!" — பதற்றத்துடன் எழுந்தவன், சரிந்திருந்த மல்ல எதியின் தோள்களைப் பற்றி உலுக்கினான்.

"சிற்றப்பா! இந்தச் சமயத்திலாவது தயை கூர்ந்து அத்தி மலைத்தேவன் இருக்கும் இடத்தைச் சொல்லுங்கள்." — கெஞ்சினான் சிங்கமல்லன்.

"எனது உயிர் போகும்.. காஞ்சியின் உயிர்நாடியும் என்னோடு போகும்.. உனக்கு அந்தச் சிலை இனி எட்டாக்கனி.." — என்ற மல்ல எதியின் விரிந்த கண்களின் வழியாகவே அவனது உயிர் பிரிந்தது.

ஏமாற்றத்துடன் அவனது உடலை மண்ணில் சரித்துவிட்டு எழுந்தான், சிங்கமல்லன்.

"சற்றுப் பொறுமையாக இருந்திருக்கலாம், மானவர்மா! இப்போது நான் அவன் மறைத்து வைத்திருக்கும் சிலையை எங்கே என்று தேடுவேன்..?" — சிங்கமல்லன் புலம்பினான்.

"வேறு வழி இல்லை, மன்னவா! சிலையைத் தேட தங்களது உயிர் இருக்க வேண்டும் அல்லவா. சிலையை எப்போது வேண்டுமானாலும் தேடலாம். தங்களது உயிர் பிரிந்தால், பல்லவத்தை யார் காப்பது?" — மானவர்மன் கேட்க, அவனது கூற்றில் உள்ள நியாயத்தை உணர்ந்தான், சிங்கமல்லன்.

இறந்து கிடந்த மல்ல எதியின் கண்கள் விரிந்திருக்க, அது நேராகப் பிரவாள மாளிகையின் அடுக்களையின் மீது ஓங்கி நின்ற பன்னிரண்டு அடி உயரப் புகை போக்கியையே நோக்கி இருந்தது..!

மல்ல எதி சிங்கமல்லனிடம் கூறியதை யோசித்துப் பார்த்திருந்தால் புரிந்திருக்கும்.

யாகத் தீயில் தோன்றியவன்; குணம்குன்றத்தின் நிலத்தில் மறைந்திருந்தவன்; மல்லையின் ஆழ்கடலில் கிடந்தவன்..! செந்தீ, நிலம், நீர் என்று மூன்று பூதங்களிலும் இருந்துவிட்டான். இப்போது யாருக்கும் எட்டாத நிலையில் மண்ணையும், விண்ணையும் அளந்து நிற்கிறான். புகையும் புகாத இடத்தில் நிற்கிறான் என்றானே.

குணபரன் பிரவாள மாளிகையில் வசித்தபோது, மாளிகை அடுக்களையில் எப்போதும் உணவு சமைக்கப்

பட்டுக் கொண்டே இருந்தது. அழகிய பிரவாள மாளிகையில் கரிய புகை படிந்துவிடக்கூடாது என்பதற்காகச் சிம்மவர்மன் தனது மருமகனுக்குப் பிரும்மாண்டமாக ஒரு புகைபோக்கியை அமைத்துக் கொடுத்திருந்தான். பன்னிரண்டு அடி உயரமுள்ள அந்த மாளிகையின் புகைபோக்கியை ஒத்தாடை அரண் மனையில் உப்பரிகையிலிருந்து பார்க்கலாம். தனது பிரிய மகள் நவரத்தின பல்லவியின் மாளிகை அடுக் களையில் அன்றாடம் உணவு தயார் செய்யப்படுகிறதா என்பதை ஊர்ஜிதம் செய்து கொள்வதற்காகத்தான் அதனைப் பன்னிரண்டு அடி உயரத்திற்குச் சிம்மவர்மன் கட்டினானோ என்னவோ!

சாளுக்கியர்களைக் கொண்டு கடலில் இருந்து சிலையை எடுத்த மகா மல்ல எதி அந்தப் புகை போக்கியினில்தான் அத்தி சிலையை மறைத்தான். பாழடைந்த அந்தப் பிரவாள மாளிகைக்கு யாருமே வருவதில்லை. அதன் பின்புறமாக இருந்த அடுக் களையோ இன்னும் பாழடைந்து கிடந்தது. அகலமான அந்தப் புகைபோக்கியில் ஒன்பதடி சிலை வைக்கப் பட்டுள்ள பெட்டகத்தை நிமிர்ந்த வாக்கில் வைத்து விட்டு, புகைபோக்கியின் அடிபாகத்தையும், மேல் பாகத்தையும் சுண்ணாம்புக் கலவையைக் கொண்டு பூசி மூடிவிட்டான். புகை போக முடியாத இடத்தில் இப்போது அத்திமலையான் வசிக்கிறார். அவனது இருப்பிடத்தை யாராலும் அறிய முடியாது என்று உறுதியாக நம்பினான் மல்ல எதி.

சிங்கமல்லன் அத்திமலைத்தேவனைத் தேடி அலைந்து சோர்ந்து போனான்.

மானவர்மனுக்கு வாக்களித்தபடி இலங்கையின் மீது படையெடுத்துச் சென்று ஹதத்தனை விரட்டியடித்து மானவர்மனை இலங்கையின் வேந்தனாக அமர வைத்தான். மீண்டும் காஞ்சி வந்தவன், இனியும்

*அத்திமலைத்தேவனைக் கண்டுபிடிக்க முடியும் என்கிற நம்பிக்கையை இழந்து மரணப்படுக்கையில் விழுந்தான்.*

*மகன் இளவரசன் மகேந்திரனை அருகில் அழைத்தான். தனது தந்தையின் பெயரைத்தான் மகனுக்கு வைத்திருந்தான்.. அவனது மற்றொரு மகன் *பரமேஸ்வரனும் அருகே இருந்தான்.*

*மகேந்திரனிடம் தனது தனிப்பட்ட கஜானாவில் இருந்த அந்த வெள்ளிப் பெட்டகத்தை அளித்தான்.*

*"மகேந்திரா! இதில் அத்திமலைத்தேவனின் ஆபரணம் இருக்கிறது. இதன் பூர்வீகப் பெயர் ஸ்ரீதள மணி. இப்போது உக்கிரோதயம் என்று அழைக்கப்படுகிறது. எப்படியாவது அத்திமலையானைக் கண்டுபிடித்து அவனுக்கு இந்த ஆபரணத்தை அணிவித்துவிடு. அத்தி மலைத்தேவா! என்னை ஏற்றுக்கொள்" என்று கூறிய படியே உயிரைவிட்டான், நரசிம்மவர்மன் என்கிற சிங்கமல்லன். அவனது தேகத்தைத் தரும வனத்தில்தான் தகனம் செய்தார்கள். அவனது சிதையிலிருந்து புறப்பட்ட புகை, பிரவாள மாளிகையின் அடுக்களை புகை போக்கியை வலம் செய்தபடி விண்ணை நோக்கிச் சென்றது.*

---

* ஒரு சிறு விளக்கம்: நரசிம்மவர்மனுக்கு இரண்டு மகன்கள். மகேந்திரன் மற்றும் பரமேஸ்வரன். மகேந்திரன் இரண்டாம் மகேந்திரனாக- கி.பி. 669-ல் பதவி ஏற்பவன், அடுத்த வருடமே மர்மமான முறையில் இறந்து போக அவனது தம்பி பரமேஸ்வரவர்மன் பதவிக்கு வருகிறான். இவன் மகன்தான் இரண்டாம் நரசிம்மவர்மன் என்கிற ராஜசிம்மன். தனது பாட்டன் நரசிம்மவர்மனைப் போலவே உருவத்திலும், வீரத்திலும் இருந்ததால் அவனுக்கு அந்தப் பெயர் தரப்பட்டது. சிலர் இரண்டாம் மகேந்திரனின் மகன் பரமேஸ்வரவர்மன், அவனது மகன் ராஜசிம்மன் என்று எழுதியிருப்பது தவறு. ராஜசிம்மன் என்கிற இரண்டாம் நரசிம்மவர்மன் சிம்மமல்லன் என்கிற முதலாம் நரசிம்மவர்மனின் பெயரன்.

# 6. கழுத்தில் சுற்றிய நாகம்

**கி.**பி. 669 —

சிங்கமல்லன் என்கிற நரசிம்மவர்மனின் மரணத்திற்குப் பிறகு இப்போதுதான் திருவேங்கடம் வருகிறாள், ஸாமவை பெருந்தேவி. தனது கணவனின் கடைசி வேண்டுகோளான, 'அத்திமலைத்தேவனின் பிரதிமையை மீண்டும் அவனது ஆலயத்தில் பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்கிற கோரிக்கையை நிறைவேற்றித் தா' என்று வேங்கடவனிடம் விண்ணப்பம் செய்ய வந்திருக்கிறாள். தான் நன்கொடையாகத் திருமலை ஆலயத்திற்கு அளித்திருந்த போக ஸ்ரீனிவாசன் என்கிற அழகிய மணவாளனைக் கலங்கிய கண்களுடன் நோக்கினாள், ஸாமவை.

"சிங்கமல்லன் என்கிற நரசிம்ம பல்லவனை அழகிய மணவாளனாக எனக்குத் தந்து எனது அரச போக வாழ்க்கையை நீ அளித்ததால்தான் போக ஸ்ரீனிவாசன் என்கிற அழகிய மணவாளனாகத் தூய வெள்ளியில் வார்த்தெடுத்து, உன்னைப் பிரதிஷ்டை செய்துள்ளேன். சந்திர அம்சமாகத் திகழும் திருமலை ஆலயத்திற்கு வெள்ளியில் ஆன பேரத்தை அளிக்கும்படி நீதான் எனது கனவினில் வந்து கோரிக்கைவிடுத்தாய். எனது மகன் இரண்டாம் மகேந்திரனாகப் பல்லவ அரியணையில் ஏறி இருக்கின்றான். ஆனால் அரியணையையே கேலிக்குரிய தாக மாற்றிக் கொண்டிருக்கிறான்.. அவனையும், எனது இரண்டாவது மகன் பரமேஸ்வரனையும், நீதான் காக்க வேண்டும்..!" —மெய்ம்மறந்து பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள், ஸாமவை பெருந்தேவி.

"அரசியாரே! சாளுக்கியர்களுடன் நாளை போர் நிகழ உள்ள சூழ்நிலையில் திருவேங்கட மலைக் காட்டில் செல்வது மிகவும் ஆபத்தானது. நீங்கள்தான் திருவேங்கடம் வந்தே தீர வேண்டும் என்று கட்டளையிட்டீர்கள்! எனவேதான் நான் தங்களுடன் வரவேண்டியதாயிற்று. நாம் உடனே புறப்பட வேண்டும்!" — தண்டி கூற, தலையசைத்தாள்..

ஸாமவை அவனைச் சோகத்துடன் நோக்கினாள்.

"நாள் முழுவதும் நான் வேங்கடவன் சந்நிதியில் நின்றாலும், எனது பிரார்த்தனைகள் தீராது, தண்டி! சிங்கமல்லர் இறந்த அன்று கூட நான் துணிவுடன் இருந்துவிட்டேன். ஆனால், இன்று அவரது இழப்பு என்னை வாட்டுகிறது. ஒரு குரங்கின் கையில் சிக்கிய பூமாலையாகப் பல்லவம் மாறிவிடப் போகிறதோ என்கிற அச்சம் வாட்டுகிறது. நான் என்ன செய்யட்டும்! இறையருளைத் தவிர பல்லவத்தை வேறு சக்திகள் காக்கும் என்று தோன்றவில்லை..!" — கண்ணீர் உருண்டோட, கடைசியாக ஒருமுறை திருவேங்கடவனை வணங்கிவிட்டு ஸாமவை, ஆலயத்தின் வாயிலை நோக்கி நடந்தாள்.

பாவம்! அவள் என்ன செய்வாள்? 'ஆசானின் பிள்ளை மூடன்' என்பது போன்று நரசிம்ம பல்லவனுக்குப் பிறகு இரண்டாம் மகேந்திரவர்மனாகப் பதவி ஏற்றிருந்த அவளது மகன் சற்றே புத்தி தடுமாற்றம் கொண்டவனாக இருந்தான்.

தனது தந்தையின் நினைவாகத்தான் தனது மூத்த மகனுக்கு மகேந்திரன் என்று பெயரிட்டிருந்தான். இரண்டாம் மகன் பிறந்தபோது அவனுக்குப் பரவாசு தேவன் என்கிற அத்திமலைத்தேவனின் பெயரில் பரம என்கிற பதத்தையும், ஒத்தாடை ஈஸ்வரனின் பெயரையும் இணைத்து பரமேஸ்வரன் என்று வைத்திருந்தான்.

*கடைக்குட்டியாகப் பிறந்தவள் *குந்தவி. பேரழகும், நற்பண்புகளும் கொண்டவள். ஸாமவையின் அறிவு கூர்மையைக் கொண்டிருந்தாள். தேகம் என்னும் புரவிக்கு அறிவு என்கிற கடிவாளம் இல்லாவிட்டால், தறிகெட்டு ஓடாதோ..? மிகவும் கூர்மையான அறிவைக் கொண்டவள், ஸாமவை. பெரும் புஜபலபராக்கிரமத்தை கொண்டவன் சிங்கமல்லன். இருவருக்கும் பிறந்த மகேந்திரன் பக்குவம் சிறிதும் இன்றி நடமாடிக் கொண்டிருந்தான்.*

*ஸாமவையின் இரு புதல்வர்களைப் பார்க்கும்போது, மூத்தது **மோழை, இளையது காளை — என்கிற வழக்கு கூடப் பொய்யாகியது. இளையவனே மோழையாக இருந்தான். மூத்தவனோ பித்தனாகவே இருந்தான். அரியணை ஏறியதும் தக்க அறிவுரைகளைப் பெற்று அறிவும், பலமும் கொண்டவனாகத்தான் இருப்பான் என்று அனைவருமே நினைத்தனர். ஆனால், பல்லவத்தின் வம்சாவளியில் எங்கோ சித்தம் குறித்த பிரச்னைகள் இருந்திருக்க வேண்டும். அல்லது, தன்னைச் சரியாகப் பாதுகாக்காத பல்லவர்களின் மீது*

---

* குந்தவியைச் சரித்திர வாசகர்களுக்கு நினைவிருக்கும். நரசிம்ம பல்லவன்-ஸாமவை பெருந்தேவியின் மகளான இந்தக் குந்தவிதான் பார்த்திப சோழனின் மகன் விக்கிரமனை திருமணம் செய்து கொண்டதாகக் 'கல்கி' தனது பார்த்திபன் கனவில் கூறியிருக்கிறார். இந்தக் குந்தவியைப் பற்றிச் சரித்திரக் குறிப்புகள் எதுவும் விவரிக்கவில்லை. இவளது காதல் திருமணம் கல்கியின் கற்பனையாக இருக்கலாம்.

** மோழை என்றால் கொம்பு இல்லாத மிருகம். 'ஏழையைக் கண்டால் மோழை கூடப் பாயும்' என்கிற பழமொழி ஒன்று உண்டு. அதாவது செல்வாக்கில்லாதவனைக் கண்டால் மோழை என்கிற கொம்பில்லாத விலங்குகள் கூடத் தாக்குவதற்குப் பாயும். இளையவன் என்பவன் கொம்பு சீவிவிட்ட காளையாகப் பாய்வான் என்று பொருள்.. மூத்த மகன்கள் அப்பிராணிகள். இளையவர்கள் பொல்லாதவர்கள் என்று பொருள் கொடுத்துவிட்டனர், பெரியவர்கள்.

அத்திமலையான்தான் கோபம் கொண்டிருந்தானோ? யாருமே அவனை மகேந்திரன் என்று அழைப்பதற்குத் தயங்கினார்கள். பராக்கிரமசாலியான அவனது பாட்டன் மகேந்திரவர்மன் எங்கே, இந்தப் பாதிபிச்சன் எங்கே என்றுதான் இருவரையும் ஒப்பிட்டுப் பேசுவார்கள்.

'முதலாம் மகேந்திரன் மல்லன்.. இரண்டாம் மகேந்திரன் தொல்லன்' என்று வேடிக்கையாகக் கூறி வந்தார்கள். நாளடைவில் மகாதொல்லன் என்கிற பெயர்தான் அவனுக்கு நிலைத்தது. மறைவில் அவனை அரண்மனையிலேயே அப்படித்தான் அழைத்தார்கள்.

பால்யத்தில் வீரக்கலைகளைக் கற்பதற்காகச் சிங்க மல்லனின் நண்பனும், போர்க்கலைகளில் வல்லவனு மான இந்திரவர்மன் என்பவரிடம் அனுப்பியிருந்தாள், ஸாமவை. பயிற்சியின் போது வாளை மகேந்திரன் நழுவவிட, இந்திரவர்மன் அவனைக் கடுமையாகப் பேச, நேரே அரண்மனைக்கு வந்தவன், தாயிடம் உடனே இந்திரவர்மனை கைது செய்து சிறையில் அடைக்கா விட்டால் தான் உணவு உண்ணப் போவதில்லை என்று ஆர்ப்பாட்டம் செய்தான். ஸாமவை அவனைச் சமாதானம் செய்தும் அவன் அமைதியடையவில்லை.

வேறு வழியின்றி, இந்திரவர்மனும் வந்து மன்னிப்புக் கோரினான். ஆனால் மகேந்திரன் சமாதானம் அடையவில்லை. அவனைச் சிறையில் தள்ளியே தீர வேண்டும் என்னும் தீர்மானத்தில் இருந்தான். பிறகு இந்திரவர்மனே ஸாமவையைப் பார்த்துப் பேசினான்.

"அரசியாரே! விட்டுவிடுங்கள்..! இளவரசரின் கோபம் தீரவேண்டி நான் இரண்டு நாட்களுக்குச் சிறையில் இருக்க விரும்புகிறேன்!" என்று தானே காவலர்களிடம் சரணடைந்திருந்தான்.

மன்னனாகப் பதவி ஏற்றால் தன்னால் முதிர்ச்சியுடன் நடந்து கொள்வான் என்று பலரும் நினைத்திருந்தனர்.

ஆனால் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அவனது பித்தம் வளர்ந்து கொண்டே இருந்தது.

ஸாமவை தண்டியை அழைத்தாள்.

"ஆச்சார்ய தண்டி! நீர் அரசனாகப் பதவி ஏற்றிருக்கும் எனது மகனைவிட்டு ஒருகணம் கூடப் பிரியாமல் இருக்க வேண்டும். அவனது புத்தியாக நீரே செயல்பட வேண்டும். உமது அருகாமையில் அவன் சிந்தையில் ஏற்பட்டுள்ள குழப்பம் தீரும் என உறுதியாக நம்புகிறேன்!" — ஸாமவை இறைஞ்சினாள்.

'மிகவும் சிரமமான பணியைத் தனக்கு அளிக்கின்றாள், அரசியார்' என மனதினுள் நினைத்தபடிதான் அந்தக் கோரிக்கையை ஏற்றான்.

அரசவை கூடியது. எதிர்பாராத விதமாக ஆச்சார்ய தண்டி கொலுமண்டபத்திற்குச் செல்வதற்குத் தாமத மாகியது. அவர் வந்த இரதத்தின் சக்கரம் வீதியில் காணப்பட்ட ஒரு குழியில் ஏறி இறங்க, அந்த அதிர்ச்சியில் அச்சாணி நழுவி விழ, சக்கரம் கழன்று உருண்டோடிச் சென்றது. மீண்டும் சக்கரத்தை இரதத்துடன் பிணைத்து அரண்மனைக் கொலு மண்டபத்திற்கு வருவதற்குள் சபை கூடிவிட்டது.

ஆச்சார்ய தண்டி கொலுமண்டபத்தினுள் நுழைந்து மன்னன் மகேந்திரனை நோக்கி நடந்து அவனை நோக்கி தலை பணிய, அவரை அலட்சியமாக உறுத்துப் பார்த்தான் மகேந்திரன். தன்னை 'இது செய்! இதனைச் செய்யாதே. இப்படிச் செய்! இப்படிச் செய்யாதே!' என்று சதாசர்வகாலமும், ஆட்டி வைத்துக் கொண்டிருக்கும் ஆச்சார்ய தண்டியை அழவைக்க வேண்டும் என்கிற எண்ணம் தோன்றிவிட்டது அவனுக்கு.

போலி சினத்துடன் உரத்தக் குரலில் கட்டளை யிட்டான்.

“அரசவைக்குத் தாமதமாக வந்திருக்கும் இந்தத் தண்டியின் தலையை வெட்டி வீழ்த்துங்கள்!” என்று கூறிவிட்டு, தானே உரத்தக் குரலில் ‘கெக்கெக்கே’ என்று நகைக்கத் துவங்க, அவையே திடுக்கிட்டது.

சபை அங்கத்தினர் ஒருவரையொருவர் திகைப்புடன் பார்க்க, நிலைமை ரசாபாசமாக மாறுவதைக் கண்ட தண்டி அதனைத் திசைதிருப்ப எண்ணி சற்றே நகைத்தபடி அரசனைப் பார்த்தார்.

“நன்று கட்டளையிட்டீர் மன்னா! அரசவையில் தண்டனை வழங்கும் விதத்தைப் பற்றி நேற்று பாடம் படித்தோம். அதற்காக அரசவையில் நீர் பாடம் கற்ற திறமையை என்னிடமே காட்ட வேண்டுமா? தலையை வாங்கும்படி நான் என்ன தவறு செய்தேன், தங்களுக்குப் பாடம் சொல்லி கொடுத்ததைத் தவிர?” — ஆச்சார்ய தண்டி கேட்க, மகேந்திரனின் சிரிப்பு அதிகரித்தது.

“உமது பெயரே தண்டி! தண்டி தண்டி என்று உமது பெயரே கூறுகின்ற போது நான் தண்டிக்காமல் இருந்தால் எப்படி?” — தொடர்ந்து மகேந்திரன் சிரிக்க, ஆச்சார்ய தண்டி மௌனமாகத் தனது இருக்கையில் சென்று அமர்ந்தார்.

சிங்கமல்லனுக்கு இப்படி ஒரு மகனா? அறிவுகூர்மை கொண்ட ஸாமவையின் உதிரத்திலா இப்படி ஒரு மகன் பிறந்தான்?

இந்தச் சம்பவத்தைப் பற்றி அறிந்து கொண்ட ஸாமவை கண்ணீருடன் தண்டியிடம் மன்னிப்புக் கோரினாள்.

“அரசியாரே! நீர் மன்னிப்புக் கோருவதால் எவ்வித பயனும் இல்லை. இறைவனிடம் மன்றாடுங்கள். ஏதாவது நற்பலனை உண்டாக்குவான்!” என்று கூற, ஆச்சார்ய தண்டியையே உடன் அழைத்துக்கொண்டு திருவேங்கட வனிடம் மன்றாடுவதற்காக வந்திருந்தாள். மகேந்திரனை

இளையவன் பரமேஸ்வரனின் பொறுப்பில் விட்டுவிட்டு வந்திருந்தாள். பரமேஸ்வரன் அமைதியானவன் என்றாலும் பராக்கிரமசாலியாக இருந்தான். அவனிடம் கருத்துக்கேட்டால் மட்டுமே பதில் கூறுவான். எளிதில் சினம் கொள்ளமாட்டான். ஆனால் சினம் கொண்டால், அவனைக் கையாளுவது மிகவும் சிரமம். அண்ணனின் அரைவேக்காட்டுத்தனம் அவனுக்கும் பிரச்னையை ஏற்படுத்தியது. அவனது நண்பர்கள் சிலர் அவன் வருவதை அறியாமல், மகேந்திரனைப் பார்த்து, "மகாமல்லனின் மகன் மகாதொல்லன் வருகிறான்" என்று அழைக்க, சினம் கொண்ட பரமேஸ்வரன் அவர்களை நையப்புடைத்து பந்தாடிவிட்டான். கைகால்கள் முறிந்து, கவலைக்கிடமாகக் கிடந்த அவர்களை வாரிப்போட்டுக் கொண்டு மருத்துவரிடம் ஓடினர், அவர்களது பெற்றோர்.

அதன் பிறகு —

பரமேஸ்வரன் இருக்கும் போது, மகேந்திரனை யாரும் நையாண்டி செய்யாமல் இருந்தனர்.

அண்ணன் மகேந்திரனின் வீர உணர்ச்சியைத் தூண்டிவிட்டு, அவனிடம் நிலவும் பேதைமையை நீக்க நினைத்தான், பரமேஸ்வரன். மறுநாள் அண்ணனை வேட்டைக்கு அழைத்துச் செல்ல தீர்மானித்தான்.

இவர்கள் வேட்டைக்குப் புறப்படும் போது, சரியாக இரதத்தில் வந்து இறங்கினாள், ஸாமவை. பின்பாகப் புரவியில் வந்து இறங்கினார், ஆச்சார்ய தண்டி.

விசேடமாக அலங்கரித்துக் கொண்டு வேட்டைக்குச் செல்லும் மகன்களை வியப்புடன் நோக்கினாள் ஸாமவை.

"எங்கு புறப்பட்டீர்கள்?" — ஸாமவை கேட்க, தம்பியை முந்திக்கொண்டு அண்ணன் மகேந்திரன் பதிலளித்தான்.

"*சுவர்ணமுகி காடுகளில் வேட்டையாடச் செல்கின்றோம். பொன்மான் ஒன்றை வேட்டையாடி வர உள்ளேன்..!" — பெருமையுடன் கூறினான், மகேந்திரன்.

அலங்கரித்துக் கொண்டால் மகன் கம்பீரமாகத்தான் இருக்கிறான். அறிவில் சிறிது முதிர்ச்சி இருந்தால் போதும். நல்ல மன்னனாக அவனால் திகழ முடியும். ஒரு அறிவாளியான மனைவியைத் தேடிக் கண்டுபிடித்து அவளிடம் இவனை ஒப்படைத்துவிட்டால், அவள் இவனை வழிக்குக் கொண்டு வந்துவிடுவாள். தனது கற்பனையில் அவள் திளைத்திருக்க, பின்பாக வந்து நின்ற ஆச்சார்ய தண்டி மகேந்திரனை ஏற இறங்க நோக்கினான்.

மகேந்திரனின் அலங்காரத்தில் ஏதோ ஒரு விசேடம் தெரிகிறது. அவனை மீண்டும் மேலும் கீழும் ஆராய, சட்டென்று அவனது கண்கள் விரிந்தன.

மகேந்திரனின் அலங்கார விசேடணம் என்ன என்பது அவனுக்குப் புரிந்து போனது. முதுகுத் தண்டு சில்லிட, வாய் உலர்ந்து போனது. தன்னையும் அறியாமல் ஸாமவையைத் திகிலுடன் நோக்கினான்.

---

* அப்போதைய கங்க நாட்டின் பகுதியாகத் திகழ்ந்தது இன்றைய கோலார் தங்க வயல். நடுவே யாகச்சி என்கிற ஆறு பாய, இருபுறமும் அடர்ந்த காடுகளுடன் திகழ்ந்தது. ஸ்வர்ண சுரங்கங்கள், பொன் மான்கள் என்று தங்கமயமாக இருந்த காரணத்தால் அந்தக் காடுகளைச் சுவர்ணமுகி காடுகள் என்று அழைப்பார்கள். குறிப்பாகச் சூரிய அஸ்தமனத்தின் போது, அதன் கிரணங்களால் அந்தப் பகுதி ஜொலிக்கும். தலைக்காவேரியின் பிரிவாக ஓடிய யாகச்சி ஆற்றின் கரையில் முனிவர்கள் அந்த ஆற்றினையே சாட்சியாக வைத்து யாகங்களைச் செய்ததால் அந்த ஆற்றுக்கு யாகச் சாட்சி என்று பெயர். நாளடைவில் அதனை யாகச்சி என்று அழைக்கின்றனர். தற்போது மாண்டியா, தலக்காடு பகுதிகளில் பாய்கிறது.

"அரசியாரே..!"

தண்டி அச்சத்துடன் தன்னைப் பார்ப்பதைக் கண்ட ஸாமவைக்கு ஒன்றும் புரியவில்லை. தண்டி மீண்டும் தனது கழுத்தை வருடிக் காட்டியதும் சட்டென்று அவளால் அவன் கூறும் தகவலை அறிந்துகொள்ள முடியவில்லை.

நவரத்தின பல்லவியின் புதிர்களை எளிதாக விடுவித்தவள்தான். இருப்பினும், மகனின் அறிவுக்குறைவு அவளது சிந்திக்கும் திறனைப் பாதித்துவிட்டது போலும்.

"அரசியாரே! பரமனின் கழுத்தைச் சுற்றிய பாம்பைக் கவனியுங்கள்!" என்று சொன்னதும்தான் திகைத்துப் போய், மகேந்திரனின் கழுத்தைக் கவனித்தாள்.

அவனது கழுத்தில் உக்ரோதயம் ஜொலித்துக் கொண்டிருந்தது. ஸாமவை உறைந்து போனாள்.

அத்திமலைத்தேவன் அணியும் ஸ்ரீதள மணி. பீமவர்மனால் களவாடப்பட்டு, சந்திரகிரி பொற் கொல்லனால் வடிவு மாற்றப்பட்டு, யட்ச நேத்திரக் கற்களைக் கொண்டு அமைக்கப்பட்ட உக்ரோதய ஹாரம் தான் அவனது கழுத்தை அலங்கரித்துக் கொண்டிருந்தது.

உக்ரோதயத்தின் அருமை பெருமைகளை மகேந்திரன் அறிவானா?

அத்திமலைத்தேவனின் ஆபரணத்தை இவன் எப்படி அணியலாம்..? யட்ச நேத்திரக் கற்கள் தங்களது நேத்திரங்களைத் திறந்து, உக்கிரத்தை உமிழுமே. அதனை அணிபவர்களுக்குக் கேடு விளைவிக்குமே.. அதனை எங்ஙனம், இந்த மூடனுக்குப் புரிய வைப்பது?

என்ன செய்வது என்று தெரியாமல் மகேந்திரனை நோக்கினாள்.

"மகேந்திரா! இது என்ன விபரீத விளையாட்டு? வேட்டையாடுவதற்கு ஏன் விலைமதிப்பில்லா

உக்ரோதயத்தை அணிந்து செல்கிறாய்? எங்காவது தொலைந்து போய்விட்டால் அத்திமலையானுக்கு என்ன பதில் கூறுவது?" — மகனை எச்சரித்தாள்.

"அத்திமலையானே தொலைந்துவிட்டானே. அவன் ஆபரணம் தொலைந்தால்தான் என்னவாம்?" — மேதாவித்தனமாகத் தான் கேட்பதாக நினைத்துக் கொண்டு ஒரு வாத்து கத்துவதைப் போன்ற 'கெக்ககே' என்கிற நகையொலியினை எழுப்பினான், மகேந்திரன்.

தனக்குள் எழுந்த சினத்தையும், எரிச்சலையும் கட்டுப்படுத்திக் கொண்டான், தண்டி. இது முதன் முறையல்ல. அரியணை ஏறியவுடன் நடைபெற்ற முதல் பிறந்த நாள் கொண்டாட்டங்களுக்காக மகேந்திரன் உக்ரோதயத்தை அணிந்திருந்தான். எச்சரிக்கைகள் பல விடுக்கப்பட்டும் பிடிவாதமாக அதனை அணிந்தே தீருவேன் என்று கழற்ற மறுத்தான். அனைவரும் எதிர்பார்த்த அந்த விபரீதமும் நிகழ்ந்தது.

மகேந்திரனை 'இந்திரன் சந்திரன்' என்று புகழ்ந்து பாடிய நோஞ்சான் புலவர் ஒருவனுக்கு அரசவையிலேயே தனது கழுத்தில் அணிந்திருந்த உக்ரோதயத்தைக் கழற்றி பரிசாக அளிக்க, புலவர் அதனைத் தனது மடியில் முடிந்து கொண்டு செல்ல, பின்பாகவே தண்டி புரவியில் சென்று அந்தப் புலவரை மடக்கினான்.

ஒரு கிழி நிறையப் பொற்காசுக்களை நிறைத்து அவரிடம் நீட்ட, அரசன் கொடுத்த பரிசை தான் திருப்பித் தரமாட்டேன் என்று புலவர் வாதிக்க, தண்டி பொறுமை இழந்தான்.

"அத்திமலைத்தேவனின் ஆபரணம் இது. அவரது சாபத்தை உங்கள் குடும்பத்தினருக்குப் பெற்றுத் தரப் போகிறீர்களா?" என்று கேட்டதும், புலவர் அஞ்சி நடுங்கி, உக்ரோதயத்தைத் திருப்பித் தந்துவிட்டு, பொற்காசுகளை வாங்கிப் போனார்.

உக்ரோதயத்தைக் கஜானாவில் பத்திரப்படுத்தி இருந்தும், இன்று வேட்டைக்குச் செல்வதற்காக அதனை அணிந்து கொண்டிருந்தான் போலும்.

"அரசே! உக்ரோதயத்தை அணிந்து செல்ல வேண்டாம்! மிகவும் ஆபத்தானது!" தண்டி சொல்ல, அவனை எரித்துவிடுவது போன்று நோக்கினான், மகேந்திரன்.

"நான் மன்னன்! இதை அணியாதே என்று சொல்லும் உரிமையை உமக்கு யார் தந்தது? எச்சரிக்கிறேன்!" என்று சினத்துடன் கூறிவிட்டு, தனது குதிரையின் விலாவினில் உதைக்க, ஒரு மூடனிடம் போய் உதை வாங்கு கின்றோமே என்கிற ரோஷத்தில் குதிரை கனைத்துக் கொண்டு பாய்ந்தது.

"கவலைப்பட வேண்டாம்! உக்ரோதயம் தொலை யாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்!" அவர்களிடம் கூறிய பரமேஸ்வரன் அண்ணனின் புரவியைத் தனது புரவியில் பின்தொடர்ந்தான். அவர்கள் போன திக்கையே கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள், ஸாமவை. பட்டர் குல இரத்தமும், மன்னர் குல குருதியும் இணைந்தால் இப்படித்தான் அரைவேக்காடாக மகன் பிறப்பானோ? ஸாமவையின் கண்கள் குளமாக மாறின.

ஸ்வர்ணமுகி காடு!

தனது தமையன் மகேந்திரன் தனது கண்பார்வையை விட்டு அகலாத வண்ணம்தான் அவனைப் பின் தொடர்ந்து கொண்டிருந்தான், பரமேஸ்வரன்.

அப்போது பல்லவ குடிக்கு நஞ்சாகப் பாய்ந்து ஓடியது ஒரு புள்ளிமான்.

தண்டகாரண்யத்தில் சீதைக்கு ஆபத்தாகப் பொன் மான் வந்தது. இங்கு சீதை இல்லாத காரணமோ என்னவோ, ராமனே பொன்மானை ஆசைப்பட்டு விட்டான்.

*"பரமேஸ்வரா! அதோ பொன்மானைப் பிடிக்கலாம், வா!" — பரபரத்தான் மகேந்திரன்.*

*"அவசரப்படாதே அண்ணா! அந்த மானை நானும் பார்த்தேன்! அது காட்டு மான் அல்ல. யாரோ முனிவர்கள் வளர்க்கும் மான் போல் உள்ளது. கழுத்தில் வெள்ளி மணியில் ஒரு பதக்கம் காணப்படுகிறது. எனவே அந்த மானை விரட்ட வேண்டாம்..!" பரமேஸ்வரன் கூறினான்.*

*"நான் வேட்டையாடி அந்த மானைப் பிடித்துச் சிறந்த வீரன் என்று பெயர் பெற்றுவிடுவேனோ என்கிற பொறாமை உனக்கு. மன்னன் நான் கட்டளையிடுகிறேன். நாம் அந்த மானை வேட்டையாடுவோம் வா!" — பரமேஸ்வரன் தடுத்தும் கேளாமல், அந்த மான் சென்ற திக்கில் மகேந்திரன் புரவியைச் செலுத்த, சமயம் பார்த்து, பரமேஸ்வரனின் குதிரை நகராமல் முரண்டு பிடிக்க, அதற்குள் மகேந்திரனின் குதிரை, மான் சென்ற திக்கில் பாய்ந்து சென்றுவிட்டது.*

*"அண்ணா.. அண்ணா!" — என்ற பரமேஸ்வரனின் கூக்குரல் மகேந்திரனின் செவிகளில் புகவே இல்லை.*

*மகேந்திரனின் கண்களில் ஓடிக்கொண்டிருந்த அந்தப் புள்ளிமான் புலப்படத் தனது புரவியின் வேகத்தை அதிகரித்தான், மகேந்திரன். அந்த மான் சட்டென்று ஒரு திருப்பத்தில் காணாமல் போனது.*

*தனது குதிரையைவிட்டு இறங்கி, அந்தப் புள்ளி மானைத் தேடத்துவங்கிய மகேந்திரனின் கண்களில் சில கூடாரங்கள் தென்பட்டன. அவற்றை நோக்கி அவன் நடக்க, விரைவில் அந்தப் புள்ளிமானைக் கண்டான்.*

*கூடாரங்களின் நடுவே சில அழகிய பெண்களின் அரவணைப்பில் அந்த மான் நின்று கொண்டிருந்தது.*

*"நீலோத்பலா! எங்கே சென்றிருந்தாய்?" என்று ஒரு பெண் அந்த மானின் முகத்துடன் தனது முகத்தைத் தேய்த்துக் கொஞ்சிக் கொண்டிருந்தாள்.*

*இள நங்கையர் சிலர் அங்கே இருக்கின்றனரே என்று மகேந்திரன் தயங்கினான் இல்லை. விடுவிடுவென்று அவர்களை அணுகிக் கடுமையான குரலில் பேசினான்.*

*"ஹேய் பெண்களே. அந்த மானை நான் வேட்டையாட வேண்டும். விலகி நில்லுங்கள்..!" என்று அதட்டினான்.*

*அவனைத் திகைப்புடன் நோக்கினர், அந்தப் பெண்கள். என்ன துணிவு இந்த வாலிபனுக்கு? வனபோஜனம் கொண்டாட வந்திருக்கும் கங்க நாட்டு மன்னரின் முகாமினுள் நுழைந்து அரண்மனைப் பெண்களையே அதட்டுகின்றானே.*

*வினயபிரபா என்கிற தோழி அவனை அலட்சியமாகப் பார்த்தாள்.*

*"இது கங்க நாட்டு மன்னன் பூவிக்கிரமரின் தங்கையும், இளவரசியுமான *திரிலோக கங்காவதியின் பிரியமான மான். இதன் பெயர் நீலோத்பலா. இதனை நீங்கள் எப்படி வேட்டையாடுவீர்கள். அதன் கழுத்தில் உள்ள கங்க தேசத்துப் பதக்கத்தை நீங்கள் காணவில்லையா?" — வினயபிரபா கூற,*

*"எங்கே காட்டுங்கள் பார்க்கலாம்!" என்றபடி மானின் கழுத்தை குனிந்து நோக்கினான், மகேந்திரன்.*

*நடுவில் பெரிய யானை. சங்கம், சக்கரம், இருபுறமும் நின்ற குத்து விளக்குகள். இது கங்கர்களின் சின்னம்தான்.*

---

* சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்யனும், கங்க மன்னன் பூவிக்கிரமனும் ஆருயிர் தோழர்கள். ஒரே தட்டில் உணவு உண்ணக்கூடிய அளவுக்கு அவர்களது நட்பு திகழ்ந்தது. விக்கிரமாதித்யனுக்கு லோகமாதேவி என்கிற குந்தள நாட்டு அரசி பட்டத்து இளவரசியாகத் திகழ்ந்தாலும், அண்ணன் பூவிக்கிரமனின் நண்பன் விக்கிரமாதித்யனை காதலித்தாள் திரிலோக கங்காவதி. பூவிக்கிரமனும் விக்கிரமாதித்யனின் தங்கை விஜயவதனாவை காதலித்தான். இருவரும் பெண்ணைக் கொடுத்துப் பெண் எடுத்தவர்கள்.

மகேந்திரனின் நடையுடை பாவனைகள், உள்ளத்தால் அவன் முதிர்ச்சியடையாதவன் என்பதனை அந்தப் பெண்களுக்கு உணர்த்தியது. அதற்குப்பின் அவன் கூறியது அந்தப் பெண்களை அதிர்ச்சி கொள்ளச் செய்தது.

"பரவாயில்லை. நான் பல்லவ மன்னன் மகேந்திரன். எங்களுக்குக் கங்க நாடு பரம்பரை வைரிகளாக உள்ளனர். எனவே, வைரிகளின் மானை நான் வேட்டையாடுவதில் தவறில்லை." — மகேந்திரன் கூறிய அதே சமயம், கூடாரத்தில் அளவளாவிக் கொண்டிருந்த சாளுக்கிய இளவரசி விஜயவதனாவும், கங்க இளவரசி திரிலோக கங்காவதியும் கூடாரத்தின் நுழைவாயிலருகே நின்று தோழிகளிடம் பேசிக்கொண்டிருந்த மகேந்திரனைக் கண்டு திகைப்புடன் வெளியே வந்தனர்.

திரிலோக கங்காவதி, அன்னம் போன்று நடந்து வந்து, மகேந்திரனின் முன்பாக நின்றாள். அவள் பின்பாகவே நடந்தாள் விஜயவதனா. அவனிடம் கடுமையாகப் பேசுவதற்காக வாய் திறந்த கங்காவதியின் கண்கள் சட்டென்று மகேந்திரனின் கழுத்தில் அவன் அணிந்திருந்த உக்ரோதயத்தைக் கண்டன. அவை பிரமிப்பால் விரிந்தன. இந்த ஹாரம் வித்தியாசமாக உள்ளதே..? ஜொலிக்கும் இந்தக் கற்கள் நவரத்தினங்களில் எவ்வகைக் கற்கள்? இந்த ஆபரணத்தை நான் அணிந்து கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்! கங்காவதியின் இதயத்தை ஆசை பற்றிக்கொண்டது. தனது பிரியமான நீலோத்பலா புள்ளிமானைக் காட்டிலும், அந்த ஹாரம் மிகவும் விலை மதிப்பற்றது என்பதனை அவளது பேராசை உள்ளம் உணர்த்தியது. அவளுக்கு ஒரு யோசனை உதித்தது.

புன்னகையுடன் தனது சுட்டுவிரலை வாயின் மீது வைத்து விஜயவதனா மற்றும் தோழிகளின் பக்கமாகத் திரும்பி எச்சரித்துவிட்டு, கங்காவதி மகேந்திரனின் கவனத்தைத் தனது புறமாகத் திருப்பினாள்..

"பல்லவ அரசரே! நாங்கள் அனைவரும் கங்க நாட்டு இளவரசி திரிலோக கங்காவதியின் தோழிகள். கூடாரத்தில் தங்கியிருக்கும் எங்கள் இளவரசியார் உங்களது கம்பீர உருவத்தைக் கூடாரத்தில் இருந்து பார்த்தார். உங்களது பேரழகு அவரைத் திணறச் செய்துவிட்டது. எங்கள் இளவரசியார் தனது பிரியமான மானை தங்களுக்குப் பரிசளிக்க விரும்புகிறார். உடல்நிலை சரியில்லாத காரணத்தால் தங்களை இப்போது அவர் சந்திக்க முடியாது. மானை நீங்கள் எடுத்துச் செல்லுங்கள். ஆனால் நாளை மறுதினம் பௌர்ணமி நிலவில் எங்கள் மன்னர் வனபோஜன உற்சவத்தைக் கொண்டாட உள்ளார். அவசியம் தாங்கள் வந்து அந்த வைபவத்தில் கலந்து கொள்ள வேண்டும். அப்போது உங்களுடன் பேச நினைக்கிறார். இன்று நீங்கள் மிகவும் கம்பீரமாக விளங்குவதற்குக் காரணமே, தாங்கள் கழுத்தில் அணிந்திருக்கும் அந்த ஹாரம்தான். அதனை எங்கள் இளவரசியார் மிக அருகில் காண விரும்புகிறார். எனவே அவசியம் வனபோஜனத்திற்கு வாருங்கள். இப்போது மானை எடுத்துச் செல்லுங்கள்!" — என்றவுடன், மகேந்திரனின் கண்கள் தன்னையும் அறியாமல் அந்தக் குறிப்பிட்ட கூடாரத்தின் மீது படர்ந்தன.

கங்க இளவரசி தனது கம்பீரத்தில் மயங்கிவிட்டாள் என்பதே அவனுக்கு ஆனந்தத்தைத் தந்தது. 'மன்னன் என்றாலே மிருகங்களை வேட்டையாட வேண்டும், யாரங்கே என்று கையைத் தட்டி கட்டளைகளையிட வேண்டும், தண்டனைகள் வழங்க வேண்டும். இவை எல்லாவற்றையும்விட, மேலே மேலே பெண்களை மயக்கித் திருமணம் செய்துகொள்ள வேண்டும்..!' என்கிற எண்ணத்தைக் கொண்டிருந்த மகேந்திரன் தன்னைத் தானே பாராட்டிக் கொண்டான். பரவாயில்லையே..! பெண்களை மயக்கத் துவங்கிவிட்டேனே! ஒரு மன்னனின் தகுதிகள் எனக்கு உள்ளன போலும்..

*தனக்கு முன்பாக நின்று சிரமப்பட்டுச் சிரிப்பினை அடக்கிக் கொண்டிருப்பவள்தான் கங்க இளவரசி என்பதை அறிந்து கொள்ளத் தவறிவிட்டான், மகேந்திரன்.*

*இளவரசியின் தோழியே இவ்வளவு அழகு என்றால், இளவரசி தேவலோக மங்கையைப் போல் அல்லவா இருப்பாள். யோசித்தபடியே நின்றான்.*

*விஜயவதனா அந்த நீலோத்பலா என்கிற மானை பற்றி அவனிடம் ஒப்படைக்க, அவன் வெற்றி நடையுடன் தனது புரவியை நோக்கி நடந்தான். ஒரு கையால் புரவியையும், மறு கையால் நீலோத்பலாவையும் இழுத்துக் கொண்டு செல்ல, எதிரே அண்ணனைத் தேடி வந்த பரமேஸ்வரனைக் கண்டான்.*

*பரமேஸ்வரன் மானுடன் வரும் அண்ணனைத் திகைப்புடன் பார்த்தான்.*

*"பரவாயில்லையே! புள்ளிமானை பிடித்து விட்டாயே..!" — ஜாடையாக அண்ணனின் கழுத்தைக் கவனித்தான். உக்ரோதயம் பத்திரமாக அவனது கழுத்தில்தான் இருந்தது.*

*"உனது அண்ணனை என்ன நினைத்தாய்? நான் நினைத்தால் எதையும் சாதிப்பேன்!" — என்று பெருமை பேசினான். கங்க மன்னனின் மகள் தனக்குப் புள்ளிமானை பரிசளித்ததாகக் கூறாமல் மறைத்தான். அவனது வீர பிரதாபத்திற்கு அது இழுக்கை அல்லவா ஏற்படுத்திவிடும்.*

*"பரமேஸ்வரா! நீலோத்பலாவின் கால்களைக் கட்டி உனது குதிரையில் ஏற்றிக் கொள்!" — மகேந்திரன் கட்டளையிட்டான்.*

*"அது யார் நீலோத்பலா?" — பரமேஸ்வரன் திகைத்தான்.*

*"எனது குதிரைக்கு வாயுமித்ரன் என்று பெயர் இருப்பது போன்று, இந்த மானுக்கு நீலோத்பலா என்று பெயர் வைத்தேன்..! ம்ம்.. கேள்வி கேட்காமல் மானின் கால்களைக் கட்டு..!" — மகேந்திரன் கூறினான்.*

*அவர்கள் அரண்மனைக்குத் திரும்பிக்கொண்டிருந்த நேரம், கங்க நாட்டு இளவரசி தனது தோழிகளுடன் கூடாரத்தில் சதியாலோசனை நடத்திக் கொண்டிருந் தாள். மகேந்திரன் அணிந்திருந்த உக்ரோதயத்தை எப்படியும் கைப்பற்றியே தீர வேண்டும் என்கிற தீர்மானத்தில் இருந்தாள்.*

*"கங்காவதி! உனது கங்க நாட்டிற்கும், எனது சாளுக்கிய நாட்டிற்கும் பரம்பரை வைரிகள் பல்லவர்கள். அதன் மன்னனை நமது அண்ணன்மார் அனுமதியின்றி வனபோஜன வைபவத்திற்கு அழைத்திருக்கின்றாயே? அவர்கள் இதனை எப்படி எடுத்துக் கொள்வார்களோ?" — சாளுக்கிய இளவரசி விஜயவதனா பயந்தாள்.*

*"கவலை கொள்ளாதே, விஜயா! எனக்குத் தேவை மகேந்திரன் அணிந்திருக்கும் அந்த ஹாரம். அதனை மட்டும் பறித்துக்கொண்டு அவனை மீண்டும் பத்திரமாக அனுப்பிவிடுவேன். நமது அண்ணன்மாருக்கு இந்த விவரம் தெரியவே போவதில்லை."*

*"எப்படித் தெரியாமல் போகும்! வேட்டையினை முடித்துக் கொண்டு நாளை திரும்பிவிடப் போகிறார்கள். நாளை மறுநாள் சித்ரா பௌர்ணமி அன்றுதான் வனபோஜனம். பல்லவ மன்னன் வந்து நின்றால் அந்த நிலைமையை எப்படி எதிர்கொள்வது?"*

*"நீ ஏன் மனதைக் குழப்பிக்கொள்கிறாய்! இம்மாதிரி தருணங்களைச் சமாளிக்க என்னிடம் வலுவான ஆயுதம் ஒன்று உள்ளது. நாளை மறுநாள் வனபோஜன வைபவம் மட்டும் அல்ல. நீ எனது அண்ணியாகவும், நான் உனது அண்ணியாகவும் திகழ்வதற்கான உடன்படிக்கையைச்*

செய்துகொள்ள உள்ளோம் என்பதை மறக்காதே!" — கங்காவதி சிரித்தாள்.

"உனக்கு ஆனாலும் துணிவு அதிகம். ஏற்கனவே திருமணம் ஆகியிருக்கும் எனது அண்ணனைத்தான் மணப்பேன் என்று பிடிவாதம் செய்து வெற்றியும் கண்டுவிட்டாயே! ஏதோ எனது அண்ணியார் லோகதேவி சாத்வீகமானவராக இருக்கவே உன்னிடம் பிரச்னை செய்யவில்லை." — விஜயவதனா கூறினாள்.

"நான் ஒன்றை விரும்பிவிட்டேன் என்றால் அதனை அடையும்வரை ஓயமாட்டேன். உனது அண்ணனை விரும்பி அடைந்தேன். இப்போது மகேந்திரன் அணிந்திருக்கும் ஹாரத்தையும் அடைந்தே தீருவேன்!" — கங்காவதி சூளுரைத்தாள்.

"எப்படிச் செய்யப் போகிறாய்?" — விஜயவதனா கேட்க, மர்ம சிரிப்பு ஒன்றை உதிர்த்தாள், திரிலோக கங்காவதி.

# 7. ஒரு அலங்காரி, ஒரு அலங்கோலன்!

சித்ரா பௌணமி..!

அன்று ஹஸ்த நட்சத்திரம் வேறு!

'கங்க நாட்டு இளவரசி என்னை வனபோஜன வைபவத்திற்கு அழைத்திருக்கிறாள்..! நான் மிகவும் அழகாக அலங்கரித்துக் கொண்டு செல்ல வேண்டும்!' என்கிற எண்ணம் மட்டுமே மகேந்திரனின் எண்ணம் முழுவதுமாக வியாபித்திருந்தது. தனது உதவியாளன் தாளாளனை விரட்டிக் கொண்டிருந்தான்.

"தாளாளா! முழுமதியில் வெள்ளை ஆடைகளை உடுத்திக் கொண்டால்தான் மிகவும் எடுப்பாக இருக்கும். நிலவில் இருந்து இறங்கி வந்து நிற்கும் மன்மதனை போன்று நான் காட்சி தர வேண்டும். எனக்கு வெண்பட்டுப் பீதாம்பரங்களை எடுத்து வை. மேலே போர்த்திக் கொள்ள இரத்த வண்ணத்தில் உள்ள சால்வையைத் தயார் செய்" என்றபடி தனது முகத்தில் சந்தனக் குழைவை பூசிக்கொண்டிருந்தான்.

தாளாளனும் பம்பரமாக இயங்கிக் கொண்டிருந்தான்.

"அடேய் தாளாளா! நான் சந்திரமுகி காட்டிற்குச் செல்லும் தகவலை எனது தாயிடமோ, எனது தம்பியிடமோ அல்லது ஆச்சார்ய தண்டியிடமோ சொல்லாதே. என்னைப் போகவிடமாட்டார்கள்.." என்றவன், தந்தத்தினால் வடிவமைக்கப்பட்டிருந்த அந்தச்

*சீர்ப்பினை எடுத்து தலைமுடியைச் சீரமைக்கத் துவங்கினான்.

'நீங்கள் உங்கள் கழுத்தினில் அணிந்திருக்கும் ஹாரம்தான் உங்களது கம்பீரத்தை அதிகரிக்கின்றது. மறவாமல் அந்த ஹாரத்தை அணிந்து கொண்டு வாருங்கள். எங்கள் இளவரசியார் அந்த ஹாரத்தை அருகில் காண வேண்டுமாம்!' — இளவரசியின் தோழி கூறியிருந்தது நினைவுக்கு வர, உக்ரோதயம் இருந்த வெள்ளிப் பெட்டகத்தைக் கையில் எடுத்தான்.

மகேந்திரன் உக்ரோதயத்தைக் கையில் எடுத்ததும்தான், சூழ்நிலையின் ஆபத்தை உணர்ந்தான் தாளாளன்.

'அரசர் பெருமான் இந்த இரவிலா உக்ரோதயத்தை அணிந்து செல்ல இருக்கிறார்? தவறாயிற்றே!'

உக்ரோதயத்தின் கதை அவனுக்குத் தெரியும்..! காஞ்சி மற்றும் அத்திமலைத்தேவனின் சரித்திரத்தை அவன் முழுவதுமாக அறிவான். தாளாளனின் பாட்டன் அவனுக்கு அத்திமலை கதையைப் பற்றிக் கூறியிருக்கிறான்.

'பிரும்மன் ஆராதித்திருந்த அத்திமலை வரதனுக்கு விஸ்வகர்மா தேவ உடும்பர அத்தி மரத்தினில் தேகம் சமைத்துத் தந்திருக்க, குபேரன் அவனுக்கு ஸ்ரீதள மணியை அணிவித்திருந்தான். அந்த ஸ்ரீதள மணியே முக்கூடல் வரங்குள மண்டபத்தில் பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்தது. இளந்திரையன் ஆட்சிக் காலத்தில் கலவரம் ஒன்று ஏற்பட அதனை அரண்மனை கஜானா விற்கு மாற்றினார்கள். அந்த ஆபரணத்தை மன்னர் சிவஸ்கந்தனின் மனைவி அணிந்தார். அன்றே மன்னரும், அரசியும், மதம் கொண்ட யானையிலிருந்து விழுந்து இறந்தனர். அதனைக் களவாடிய பீமவர்மர் திகம்பர

* முடியை சீரமைப்பது சீர்ப்பு. அதனைத்தான் நாம் இப்போது சீப்பு என்கிறோம்.

துறவியாகப் பித்துப்பிடித்து அலைந்தார். பிறகு ஸ்ரீதள மணியை உக்ரோதயமாக மாற்றினார். மீண்டும் அத்திமலைத்தேவனின் பிரதிமையைக் கண்டெடுத்து அவருக்கு உக்ரோதயத்தை அணிவித்துவிடு என்று நரசிம்ம பல்லவன் மகன் மகேந்திரனிடம் கட்டளையிட்டுவிட்டுக் காலமாக, அத்திவரதனின் ஆபரணத்தை இந்த அரைவேக்காட்டு மன்னன் அணிந்துகொண்டு வனபோஜன வைபவத்திற்குச் செல்ல இருக்கிறது. அரசியாரை இரகசியமாக எச்சரிக்க வேண்டும்..!' — மனதினுள் தீர்மானித்துக் கொண்டான், தாளாளன்.

தாளாளன் உக்ரோதயத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டு யோசனையுடன் நிற்பதை நிலைக் கண்ணாடியின் வழியாக ஓரக்கண்களால் கவனித்தான், மகேந்திரன்.

அவன் மனதில் ஓடும் எண்ணங்களை அறிந்து கொண்டான். தான் உக்ரோதயம் அணிந்து செல்ல இருப்பதை, தாளாளன் தாயிடம் தெரிவிக்க நினைக்கிறான் என்பது புலப்பட்டது. அறிவுபூர்வமாகச் சிந்திக்க இயலாதவன் கூட, காதல் வேகம் வரும்போது தன்னையும் அறியாமல் நிலைமையைச் சமாளிக்கக் கற்றுக் கொண்டுவிடுவான் அல்லவா? காதல் என்கிற எண்ணம் வரும்போது, நான், எனது சுற்றம், எனது பரிவாரம் என்கிற எண்ணம் மறைந்து, காதலியைத் திருப்திப்படுத்துவது என்பது மட்டும்தானே ஒருவனின் குறிக்கோளாகிவிடுகிறது.

'உனது தாயின் இதயத்தைக் கொணர்ந்தால்தான் நான் உன்னை மணப்பேன்' — என்று காதலி, கூறினால், காதலன் உடனே காரியத்தில் இறங்குகிறானே தவிர, காதலியின் இதயத்தையும் சேர்த்து வெட்டி எடுத்து, இது எனது மகனின் காதலிக்கு என்று எந்த ஆண்மகன் கூறுகிறான்?

அவசரமாகத் தன்னை அலங்கரித்துக் கொண்ட மகேந்திரன் செந்நிறத்தில் முத்துக்கள் பதிக்கப்பட்ட பட்டுக் காலணியை அணிந்து கொண்டான்.

"தாளாளா! பருகுவதற்கு நீர் கொண்டு வா!" — மகேந்திரன் கூற, தாளாளன் வெள்ளிக் கூஜாவில் வைக்கப்பட்டிருந்த நீரைக் குவளையில் சரித்துக் கொண்டிருக்க, ஒரே பாய்ச்சலாக அறையைவிட்டு வெளியேறி, கதவினை வெளிப்புறம் தாளிட்டான்.

தாளாளன் ஓடிவந்து கதவைத் தட்ட, 'கெக்கக்கே' என்கிற தனது விக்குவது போன்ற சிரிப்பினை உதிர்த்தபடி சொன்னான்.

"அடேய் தாளாளா! நான் திரும்பி வரும் வரை இங்கேயே இரு!" — என்றபடி தனது புரவியை நோக்கி நடந்தான்.

அவன் திரும்பி வரும்வரை, தாளாளன் அந்த அறையிலேயே அடைபட்டுக் கிடக்க வேண்டுமென்றால், அவன் தனது ஆயுள் பர்யந்தம் அந்த அறையில்தான் அடைபட்டுக் கிடக்க வேண்டும் என்கிற உண்மையை அவர்கள் இருவருமே அந்தத் தருணத்தில் அறியவில்லை.

★ ★ ★

**ரா**ஜஹம்சமாக வானில் மிதந்து கொண்டிருந்த முழுமதி தனது பொன்னிறக் கிரணங்களைச் சுவர்ணமுகி காடுகளில் பரவவிட, அந்த அடவியின் மரம்செடி கொடிகள் அந்தப் பொன்னிற ஒளியில் தகதகத்துக் கொண்டிருந்தன. ஏற்கனவே ஸ்வர்ண சுரங்கங்களைத் தன்னகத்தே கொண்டிருந்த, பொன்னிறமான பூமியைக் கொண்டிருந்தது ஸ்வர்ணமுகி காடுகள். அந்தப் பொன்னிற பூமியில் வளர்ந்திருந்த மரம் செடிகொடி களின் வேர்ப்பகுதிகள் பொன்னிறமாக ஜொலித்துக் கொண்டிருக்க, இப்போது சந்திரனின் பொன்னிற ஒளியும் அந்த அடவியைப் பிரகாசத்துடன் காட்சி தர

வைக்க, அங்கே வனபோஜன வைபவத்தைக் கொண்டாடுவதற்காகக் குழுமியிருந்த கங்க மற்றும் சாளுக்கிய மன்னர்களது பரிவாரங்களின் மனங்களிலும் குதூகலம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.

*கோலாகல நகரத்தின் கிழக்கு எல்லையில் அமைந் திருந்தது சுவர்ணமுகி காடு. கோலாகல நகரத்திலிருந்து சுவர்ணமுகி காடுகளினுள் நுழைந்து மன்னர் முகாமிட்டிருந்த சுவர்ணமுகி ஆற்றின் கரையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது அந்தச் சிவிகை. அந்தச் சிவிகையின் முன்பும் பின்புமாக இரு காவலர்கள் தங்கள் புரவிகளில் சென்று கொண்டிருந்தனர்.

சிவிகையின் இரு பக்கங்களிலும் மெல்லிய பட்டுச் சீலை படபடத்துக் கொண்டிருக்க உள்ளே ஒய்யாரமாக அமர்ந்திருந்தாள் தேவ அலங்காரி. கங்க நாட்டின் ஆயுதக் கிடங்கினில் குவிக்கப்பட்டிருந்த ஆயுதங்களைக் காட்டிலும் அதிக வீர்யம் படைத்திருந்தாள், தேவ அலங்காரி.

ஆயுதக் கிடங்கில் வரிசையாக நிறுத்தி வைக்கப் பட்டிருக்கும் வாள்களுக்குக் கூட அவளது பார்வையின் கூர்மை கிடையாது. அங்கிருக்கும் விற்களில் இருந்து புறப்படும் அம்புகளுக்கும் கூட, அவளைப் போன்று இலக்கை நோக்கிப் பயணிக்கத் தெரியாது. உருண்டு திரண்டு கிடக்கும் இரும்புக் கதைகளுக்குக் கூட அவளது மனவுறுதி இருக்காது. கிடங்கினில் வரிசையில் நிறுத்தப் பட்டிருக்கும் நெடு வேல்களுக்குக் கூட அவளது

* கீழைக் கங்கர்களின் கல்வெட்டு ஒன்று, காங்கேயன் என்ற தலைவரின் கால்வழியில் வந்த 18 தலைமுறையினரை (சிதம்பரன் உட்பட) குறிக்கின்றது. இதில் 17ஆவது தலைக்கட்டான கோலாஹலன் என்பவன் பெரிய கங்கபாடி விசையத்தில் கோலாஹலம் என்ற நகரை எழுப்பினான் என்றும், இந்தக் கோலாஹலனுக்குப்பின் 80 தலைக்கட்டுகள் அந்தக் கோலாஹல நகரில் அரசாண்டது என்றும் தெரிவிக் கின்றது. தற்போதைய கோலார்தான் கோலாகல நகரம்.

சிந்தையின் கூர்மை இல்லை. மொத்தத்தில் கங்க நாடு வைத்திருக்கும் ஆயுதங்களில் மிக ஆபத்தானது தேவ அலங்காரிதான்.

எதிரிகளை ஒழிப்பது, எதிரி நாட்டு ரகசியங்களைக் கவருவது, போர்க்களத்திற்குச் சென்று எதிரி நாட்டுத் தளபதிகளுடன் சரசமாடி அவர்களது சோம பானத்தில் நஞ்சைக் கலப்பது போன்ற செயல்களை வெற்றிகரமாகச் செய்து, அரச குடும்பத்தின் அபிமானத்தைப் பெற்றிருந் தாள்.

மகேந்திர பல்லவனிடம் இருந்து உக்ரோதயத்தைப் பறிப்பதற்குத் தேவ அலங்காரியினால்தான் முடியும் என்பதை உணர்ந்து அவளைக் கோலாகல நகரில் இருந்து அழைத்து வர ஏற்பாடு செய்திருந்தாள், திரிலோக கங்காவதி.

சுவர்ணமுகி முகாமினை அடைந்தவுடன் நேராக இளவரசியிடம் அழைத்துச் செல்லப்பட்டாள், அலங்காரி. தனது முன்பாக நின்ற தேவ அலங்காரியை ஆர்வத்துடன் நோக்கினாள், திரிலோக கங்கா.

"பல்லவ அரசனின் கழுத்தில் விலையுயர்ந்த ஹாரம் ஒன்றை அணிந்திருக்கிறான். அதன் கற்களின் முன்பாக விண்மீன்கள்கூட ஜொலிக்க மறந்து நிற்கின்றன. அந்த ஹாரத்தை நான் அணிந்தால் மிகவும் நன்றாக இருக்கும். எனக்கு அந்த ஹாரம் வேண்டும். பல்லவ அரசன் நாளை சித்ரா பௌர்ணமி இரவில் வனபோஜனத்திற்கு வருமாறு அழைத்திருக்கிறேன். நீ கங்க இளவரசியாக நடித்து, அந்த ஹாரத்தைப் பறிமுதல் செய்ய வேண்டும்..!" கங்காவதி கூற, தேவ அலங்காரி தலையசைத்தாள்.

"ஹாரத்தை மட்டும் பறித்தால் போதுமா, அல்லது..?" — அலங்காரி இளவரசியை உறுத்து நோக்கினாள்.

"அவன் ஒரு வெகுளி. அவனது உயிரைப் பறிப்பதற்கான அவசியம் இருக்காது. நீ அவனை

இளவரசியாக நடித்து ஏமாற்றினாலே அந்த ஹாரத்தைக் கழற்றி உன்னிடம் கொடுத்துவிடுவான் என்றே தோன்று கிறது..!" — கங்காவதி கூற தலையசைத்தாள், அலங்காரி.

நரசிம்ம பல்லவனைப் பற்றி நிறையக் கேள்விப் பட்டிருக்கிறாள், அலங்காரி. சிங்கத்தின் குட்டியிடம் இருந்து ஹாரத்தைப் பறிப்பது ஒன்றும் சிரமமான காரியம் இல்லைதான் என்றாலும், சிம்மத்தின் வயிற்றில் பிறந்தது ஒரு வெள்ளந்தியான குட்டிப் பூனை என்பதை அறிந்ததும், அவளுக்குச் சுவாரஸ்யம் குறைந்து போனது.

வீர ஆண்மகனை துடிக்கத் துடிக்கக் கொல்லுவதில் அலங்காரிக்கு விருப்பம் அதிகம். பால்யத்தில் இருந்தே ஆடவரின் மீது வெறுப்பு. ஒரு பெண் மகவைக் கொடுத்து விட்டு, தனது தாயை வீசி எறிந்துவிட்டுச் சென்ற ஒரு போர்வீர தந்தையின் மீது துவங்கிய கோபம், வெறியாக விஸ்வரூபம் எடுத்ததற்குக் காரணமே, இவளது பேரழகினை அனுபவிப்பதற்காக அவர்கள் கையாண்ட குயுக்திகள்தான். தன்னைக் காமத்துடன் அணுகிய ஒருவனை வெட்டிக் கொன்றபோது முதன்முதலாக அவன் கதறியபடி இறந்துபோவதைப் பார்த்தபடி நின்ற போது, அதில் ஒருவித திருப்தியைக் கண்டாள். ஆடவரை, குறிப்பாக புஜபலத்துடன் திகழ்பவரைக் கொல்லும் தருணத்தில் அவளது உள்ளம் பூரிப்படைய நாளடைவில் அதுவே அவளுக்கு வாடிக்கையாகி விட்டது. ரகசியப் படையில் சேர்ந்து தனது ஆற்றலை அவ்வள் வளர்க்க, விரைவிலேயே கங்க நாட்டு மன்னனின் அபிமானத்தைப் பெற்றுவிட்டாள். 'சரசமாடி, சாகசம் செய்து கொல்ல வேண்டுமா? அழைத்து வாருங்கள் அலங்காரியை!' — என்று கட்டளையிடுவான், கங்க மன்னன் பூவிக்கிரமன்.

தேவ அலங்காரியிடம் அவள் செய்ய வேண்டிய பணியைப் பற்றிக் கங்காவதி விளக்கிக் கொண்டிருந்த அதே சமயம், ஸ்வர்ணமுகி காட்டினுள் நுழைந்தான்,

மகேந்திரன். அவனது கழுத்தில் யட்ச நேத்திரக் கற்கள் மினுமினுக்க, மின்னிக் கொண்டிருந்தது, உக்ரோதயம். வானத்து சந்திரன் உக்ரோதயத்தின் ஒளியின் முன்பாகத் தனது கிரணத்திற்கு மதிப்பில்லை என்பதை உணர்ந்தவனாக வெட்கத்துடன் முகில்களின் பின்பாக மறைந்து நின்றான்.

மகேந்திரனின் வாயுமித்திரன் குதிரை கங்க மன்னனின் முகாமை நோக்கி விரைந்தது.

தொலைவில் புரவி ஒன்று பாய்ந்து வரும் ஒலி அந்த அமைதியான இரவில் கேட்க, அலங்காரியின் தோளினைப் பற்றினாள், கங்காவதி. உடன் நின்ற விஜயவதனா அவளை வியப்புடன் நோக்கினாள்..

"அதோ வருகிறான், பல்லவ அரசன் மகேந்திரன். உனது அபார திறமையைக் காட்டி நடி! அவன் அணிந்திருக்கும் ஹாரம் எனது கழுத்தை அலங்கரிக்க வேண்டும்!" — என்றபடி கங்காவதி, விஜயவதனா மற்றும் தோழியருடன் வெளியேறி மகேந்திரனை வரவேற்கச் சென்றாள். அலங்காரி, கூடாரத்தின் நுழைவில் இருந்த திரைச்சீலையின் பின்பாக நின்று கண்களை மட்டும் நீட்டி வெளியே நோக்கினாள்.

"வாருங்கள் அரசே!" கங்காவதி கூற, குதிரையிலிருந்து கீழே குதித்தான், மகேந்திரன்.

விஜயவதனா அவனது கழுத்தை நோக்கினாள். கங்காவதி கூறியது போன்று பல்லவ அரசன் அந்த ஹாரத்தினை அணிந்து கொண்டுதான் வந்திருந்தான். 'இப்படி ஒரு அப்பாவி இருப்பானா?' — மகேந்திரனை பரிதாபத்துடன் நோக்கினாள், விஜயவதனா.

திரைச்சீலைக்குப் பின்பாக நின்று அலங்காரியும் அந்த ஹாரத்தைக் கவனித்தாள். ஒருகணம் தனது சுவாசத்தைப் பிடித்தாள். உண்மையிலேயே அந்த ஹாரம் மிகவும் அழகாகவும், நேர்த்தியாகவும் புதிய வடிவத்தில் இருந்தது.

துறவிக்கும் கூட அந்த ஹாரத்தைக் கண்டால் அதனை அடைய வேண்டும் என்ற எண்ணம் வரும். இளவரசி கங்காவதிக்கு அந்த ஆசை தோன்றியதில் வியப்பு என்ன?

"எங்கள் இளவரசியார் கங்காதேவியார் தங்களுக்காக வழி மீது விழி வைத்துக் காத்திருக்கிறார்? இதோ எங்கள் இளவரசியார்!" — திரிலோக கங்காவதி சிரிக்காமல் கூற, மற்ற தோழியர் தங்களது நகைப்பினை அடக்கியபடி, கண்களால் குலுங்கிச் சிரிக்க, தேவ அலங்காரி, திரைச் சீலையை விலக்கிக்கொண்டு, குனிந்த தலையும் நாணத்தால் சிவந்த கன்னங்களுமாக அன்னத்தைப் போன்று நடந்து சென்றாள்.

கொலை பாதக நெஞ்சம், கொடூரம் கொப்பளிக்கும் கண்கள், மென்மையினுள் மறைந்திருக்கும் கயமை, தீயை மூடி இருக்கும் உமியாக ஒரு புன்சிரிப்பு என்று பாதகி அலங்காரி அடிமேல் அடி வைத்து வந்தாள்.

'வேண்டாம் மகேந்திரா! காலன்தான் அலங்காரியாக மாறுவேடமிட்டு வருகிறான்.. அவளை நெருங்காதே. அத்திமலைத்தேவனின் ஆபரணத்திற்கு ஆபத்து வந்து கொண்டிருக்கிறது. ஓடிச் செல்!!' — பல்லவ மூதாதையர்களான, இளந்திரையன், விஷ்ணுகோபன், சிம்மவிஷ்ணு, ஜெயவர்மன், மகேந்திரன், சிங்கமல்லன் அனைவருமே மகேந்திரனை தடுக்க முற்படுவது போன்று அப்போது வீசிய பலத்த காற்று, மகேந்திரனை தொடர்ந்து நடக்க விடாமல் செய்ய, சற்றே சுவாசிக்க இயலாமல் தடுமாறினான்.

ஆனால் —

தனது ஒவ்வொரு அடியையும் அளந்து வைத்தபடி அவனை நோக்கி நடந்த அலங்காரி, அவனை நெருங்கி தனது தலையைப் பணிந்தவள், பிறகு தனது இமைகளைப் படபடக்கச் செய்து அவனை நோக்கினாள்.

பெண்களின் இமைகள் படபடத்தால், எதிரில் நிற்கும் ஆண்களின் இரும்பு மனது துடிதுடிக்குமே. இரும்பைக் காய்ச்சி உருக்கி தங்களுக்குத் தேவையான வடிவில் அந்த ஆண்மகனை வடிவமைக்கும் கொல்லன் பட்டறை அல்லவா பெண்களின் கண்கள்!

விவேகனாக இருந்தால், தனது வேகத்தை மட்டுப் படுத்தத் தெரிந்திருக்கும். வெறும் வேகத்தை மட்டும் கொண்டிருந்த மகேந்திரன், அவளது கண்பார்வையில் நிலைகுலைந்தான்..

இதுவரை ஒரு பெண்ணுடன் சரசமாடும் அனுபவம் மகேந்திரனுக்குக் கிட்டியிருக்கவில்லை. பால் போன்று வெண்ணிலா ஒளிமழையைப் பொழிய, மிக அழகிய பெண்ணொருத்தி, அதுவும் ஒரு இளவரசி, தன்னைப் படபடக்கும் விழிகளால் நோக்குகின்றாள் என்றால் தனது ஆண்மைக்கு முதன்முதலாகக் கிட்டிய அங்கீகாரம் அல்லவா அந்தப் பார்வை..? வீரமும், விவேகமும் குறைவாக இருந்தாலும், பெண்களை வசீகரிக்கும் விதமாக அழகிய தோற்றத்தைத்தான் கொண்டிருந்தான். பொதுவாகவே பல்லவ மன்னர்களுக்கு உரிய நெடிய உருவமும் கோதுமை நிறமும் மகேந்திரனிடமும் காணப் பட்டன.

அலங்காரி இளவரசியாகவே மாறிவிட்டிருந்தாள். சற்றே கடுமையாகக் கங்காவதியை நோக்கினாள்.

"அலங்காரி! உனக்கு இங்கிதம் இல்லையா..? பல்லவ மன்னரின் வருகைக்காக நான் வழி மீது விழி வைத்துக் காத்திருந்தேன் என்று அவரிடம் கூறத் தெரிந்த உனக்கு; நான் அவரை ஆலிங்கனம் செய்யத் துடிக்கிறேன் என்பதனை அறிந்தும், உனது தோழிகளுடன் இங்கேயே நின்றுகொண்டிருக்கிறாயே? ம்ம்.. கிளம்பு!" — அலட்சிய மாக அலங்காரி தனது நடு விரலையும், பெருவிரலையும் இணைத்துச் சிட்டிகையிட, அடக்க முடியாத சிரிப்புடன் கங்காவதி, விஜயவதனாவை இழுத்துக் கொண்டு

கூடாரத்தினுள் புக.. தோழிகளும் அவர்களைப் பின்தொடர்ந்தனர்.

"உமது சுந்தரவதனம் என்னை அடிமை கொண்டது, பல்லவரே! தங்களுடன் சரசமாட துடிக்கின்றேன். அன்று கூடாரத்தின் உள்ளிருந்து தங்களது அழகிய பிம்பத்தைக் கண்டதும், இரண்டு தினங்களாக அடியாள் உறங்கவில்லை. இங்கு நின்றால், எனது தந்தை வந்துவிடுவார். பல்லவத்திற்கும், கங்கத்திற்கும் உறவு சரி இல்லாத நிலையில், நம்மை அவர் சேருவதற்கு அனுமதிக்கமாட்டார். வாருங்கள்.. நாம் தனித்திருந்து சொர்க்கபுரியில் உலா வருவோம்!" — காதல் போதையில் அலங்காரி பேச, மகேந்திரன் தன்னை மறந்தான். தனது மார்பினில் தலை சரித்த, அலங்காரியை அணைத்தபடி அவனும் நடக்க, இருவரும் அடர்ந்த காட்டினுள் சென்று மறைந்தார்கள்.

"வாருங்கள்! நடப்பதை கவனிப்போம்!" —கங்கா வதியும், விஜயவதனாவும் தோழிகளுடன் இருவரையும் பின்தொடர்ந்தனர்.

அலங்காரி துணிவு நிறைந்தவள். நாடகம்தானே என்றில்லாமல் தனது சதியை அரங்கேற்றுவதற்கு எவ்வளவு தொலைவு வேண்டுமானாலும் செல்வாள். ஒருகணம், மகேந்திரனின் கம்பீரமான உடல் கட்டு அவளையே மயங்க வைத்தது. அதே சமயம், முதன் முறையாக ஒரு பெண்ணின் அருகாமையில் அவன் இருக்கிறான் என்பதைக் கம்பங் காட்டில் தறிகெட்டு ஓடும் காய்ந்த காளையாக அவன் செயல்பட்ட விதம் உணர்த்த, சட்டென்று அவனது வேகத்திற்குத் தடை போட்டாள்.

"அரசே! உங்கள் கழுத்தில் இருக்கும் ஹாரம், நமது சங்கமத்திற்குத் தடை விதிக்கிறது. அதனைக் கழற்றி விடுங்கள். பிறகு அணிந்து கொள்ளலாம்..!" அலங்காரி கூற, முன்னேறும் வேகத்தில் இருந்த மகேந்திரன்,

சட்டென்று தனது ஹாரத்தைக் கழற்றி பக்கலில் வைத்தான்.

குபேரன் அளித்த ஸ்ரீதள மணி உக்ரோதயமாக அந்தச் சுவர்ணமுகி காட்டின் நிலத்தில் அனாதையாகக் கிடந்தது. தொலைவில் ஒரு மரத்தின் பின்பாக நின்று அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்த அரசகுடும்பப் பெண்களின் பேராசை கொண்ட கண்கள் உக்ரோதயத்தை விழுங்குவதைப் போன்று பார்த்துக் கொண்டிருந்தன.

முதன்முறையாக ஒரு பெண்ணின் வஸ்திரம் இல்லாத தேகத்தைக் கண்ட மயக்கத்தில் மகேந்திரனின் கண்களும் கிறக்கத்துடன் விரிந்திருந்தன.

அப்போது —

ஹஸ்த நட்சத்திரம் கூடிய பௌர்ணமி என்பது உக்ரோதயத்திற்குத் திடீரென்று நினைவுக்கு வந்து விட்டதா என்ன?

ஹஸ்த நட்சத்திரத்தன்று ஸ்ரீதள மணியின் யட்ச நேத்திரங்கள் திறக்கும். அப்போது விண்ணில் ஒளி வட்டம் தோன்றும் என்பதெல்லாம் சாணக்கியன் காலத்தில் இருந்து நிகழ்வதுதானே. யட்ச நேத்திர ஒளியை கண்டுதானே, காம்போஜ இளவரசி ககனா அத்தியூர் வந்து, தானவர்மனை கண்டதும் காதல் கொண்டு, அவனைக் காம்போஜம் அழைத்துச் சென்றாள். அவள் மகன் சூர்யவர்மனும்தானே, யட்ச நேத்திரக் கற்களின் ஒளிவட்டத்தைக் கண்டு நண்பனுடன் காஞ்சி வந்து, அவந்திகாவை கண்டதும் காதல் கொண்டு, அப்பத்திற்குப் போராடும் பூனை களாகத் திகழ்ந்த, முதல் மல்லனையும், இறையாவையும் ஏமாற்றிய குரங்காக அவந்திகாவை காம்போஜத்திற்கு அழைத்துச் சென்றானே..!

அன்றும் ஹஸ்த நட்சத்திரம் என்பதால் அத்திமலை யானுக்கு உரிய ஆபரணமான உக்ரோதயத்தில் பதிக்கப்பட்டிருந்த யட்ச நேத்திரக் கற்களின் கண்கள் திறந்தன. மூடியிருந்த தனது நேத்திரங்களைத் திறந்த அலங்காரியும் தற்செயலாக யட்சநேத்திர கற்களை கவனித்தாள். தனது வீர்யத்தையும், உக்கிரத்தையும அலங்காரியின் கண்களின் உள்ளே பாய்ச்சியது உக்ரோதயம். அந்த உக்ரத்தை தாளமாட்டாமல் அலங்காரி தடுமாற, அவளது கண்களின் வழியாக உள்ளே சென்ற யட்ச நேத்திரக் கற்களின் வீர்யம் அவளது சிந்தையைத் திருப்பிப் போட்டது.

அவ்வளவுதான் —

அலங்காரியின் சிந்தை கலங்கியது. தான் யார் என்பதை மறந்தாள். சுற்றி நின்ற தோழிகளை மறந்தாள். ஆவேசம் கொண்டவளாக முன்னேறிச் சென்று ஒரு பெரிய கல்லைக் கையில் எடுத்தாள். அலங்காரி பெருங் கல்லை தூக்கிக்கொண்டு நிற்பதைக் கண்டு கங்காவதியும், விஜயவதனாவும், தோழிகளும் வாயடைத்துப் போய் நிற்க, அந்தக் கல்லை மகேந்திரனின் தலையை நோக்கிக் குறி வைத்தாள், அலங்காரி. கிறக்கத்தில் இருந்த மகேந்திரன், அலங்காரி தன்னுடன் சல்லாபிக்கத் தயாராகிக் கொண்டிருக்கிறாள் என்று எண்ணிக் காத்திருக்க, அவளோ கையில் கல்லை ஏந்தியபடி அவனை நோக்கி நடந்து வந்து, ஆவேசத்துடன், அந்தக் கல்லை மகேந்திரனின் சிரசில் இறக்கினாள்.

'நச்' என்று ஒருவித ஒலியுடன் இரத்தமும், மனித சூனகமும் வடிய மகேந்திரனின் தலை நிலத்தில் சரிந்தது.

மகேந்திரன் தலை நசுங்கி இறந்து விழுவதைக் கண்டு திகைத்துப் பெண்கள் அலற, அலங்காரியின் கவனம் அவர்கள் மீது திரும்ப, மீண்டும் கையில் அதே கல்லை எடுத்துக்கொண்டு கங்காவதியை நோக்கி நடந்தாள். விஜயவதனா திகிலுடன் கங்காவதியை அணைத்துக்

கொள்ள, அவர்களை நோக்கிக் கண்களில் உக்கிரத்துடன் வந்தாள் அலங்காரி.

இதோ —

கங்காவதியின் தலையின் மீது அந்தக் கல்லை இறக்குவதற்கு அலங்காரி தயாரான அதே சமயம், இரு அம்புகள் அவளது நெஞ்சைப் பிளந்தன. கங்காவதியும், விஜயவதனாவும் திரும்பி நோக்க, விக்கிரமாதித்யனும், பூவிக்கிரமனும் அங்கே தத்தம் விற்களை உயர்த்தியபடி நின்றிருந்தனர். விஜயவதனா ஓடிச்சென்று தனது அண்ணனின் மார்பில் சாய, கங்காவதி மட்டும் நிலத்தில் கிடந்த உக்ரோதயத்தை எடுத்து தனது மேலாடையில் பத்திரப்படுத்திக் கொண்டாள்.

கல்லிலே கலைவண்ணம் கண்டிருந்தனர், மகேந்திரன் மற்றும் நரசிம்ம பல்லவர்கள். ஆனால் தங்களது குலக்கொழுந்து மகேந்திரனின் உயிரை அந்தக் கல்லே பலி வாங்கும் என்றும் அவர்கள் சற்றும் எதிர்பார்த்திருக்கவேமாட்டார்கள்.

# 8. பெருவளத்தில் குருதி வெள்ளம்

**தா**ளாளன் தடதடவென்று மகேந்திரனின் அறைக் கதவைத் தட்டிக்கொண்டு இருக்க, காவலர் இருவர், மகேந்திரன் அறையின் கதவை வெளிப்பக்கம் தாளிட்டு விட்டு செல்வதைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தனர். மன்னரே தனது உதவியாளனை அறையினுள் சிறை வைத்துவிட்டு செல்வதைக் கண்ணுற்ற அவர்கள், கதவைத் திறந்து தாளாளனை வெளியே விடுவதற்குத் தயங்கினர். ஒருவேளை தாளாளன் செய்த தவறுக்கு அவனுக்கு வழங்கப்பட்டிருக்கும் தண்டனையாக மன்னன் அப்படிச் செய்திருக்கக் கூடுமோ என்கிற எண்ணம் தோன்ற, தட்டப்படும் கதவையே வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்தனர். நல்லவேளையாக, ராஜமாதா ஸாமவை பெருந்தேவி அங்கே தோன்றினார். அன்றாடம் உறங்கச் செல்வதற்கு முன்பாகத் தனது மகன்கள் மகேந்திரனும், பரமேஸ்வரனும் உணவு உண்டு தங்களது சயன அறைக்கு வந்துவிட்டனரா என்பதைக் கண்டு விட்ட பிறகே தனது அறைக்குச் செல்வார், ஸாமவை.

அன்று இரவும் வழக்கம் போல், மகேந்திரனின் அறைக்கு வர, அங்கே தடதடவென்று அறைக்கதவு தட்டப்படுவதையும், காவலர்கள் மலங்க மலங்க விழித்தபடி நிற்பதையும் கண்டு திகைத்தார்.

"என்ன நடக்கிறது இங்கே..? உள்ளே யார் குரல் கொடுக்கிறார்கள்? ம்ம்.. திறந்துவிடுங்கள்!" — ஸாமவை பெருந்தேவி கூறியதும், காவலர்கள் கதவைத் திறக்க, பதற்றத்துடன் வெளியே வந்தான், தாளாளன்.

அரசியைப் பணிந்தவனின் குரல் நடுங்கியது. "அரசியாரே! மன்னர் உக்ரோதயத்தை அணிந்து கொண்டு ஸ்வர்ணமுகி காட்டிற்குச் சென்றிருக்கிறார். யாரோ வனபோஜன வைபவத்திற்கு மன்னரை அழைத்திருக்கிறார்கள்!" —தாளாளன் கூற, ஸாமவையின் சப்த நாடியும் ஒடுங்கியது.

"பரமேஸ்வரனையும், ஆச்சார்ய தண்டியையும் வரவழையுங்கள்!" — கால்கள் வலுவிழக்க அங்கிருந்த நாற்காலியில் சரிந்தாள், ஸாமவை பெருந்தேவி.

'அய்யகோ! மூர்க்கனாயிற்றே என் மகன்! நன்மை எது தீமை எது என்று பாகுபாடு அறியாமல் எங்காவது சென்று சிக்கிக் கொள்ளப் போகிறானே. அத்திமலைத் தேவா..! உனது ஆபரணத்தை அணிந்து கொண்டு சென்றிருப்பதால் அவனைத் தண்டித்துவிடாதே. அறியாத செல்வன். அவனை நல்ல விதமாக மீண்டும் அரண்மனையில் சேர்ப்பித்துவிடு. இனி அவன் உனது உக்ரோதயத்தை அணியாமல் பார்த்துக் கொள்கிறேன்!' மனதினுள் அரற்றியவாறு அமர்ந்திருந்தாள்.

தண்டியும், பரமேஸ்வரனும் ஓடி வந்தார்கள். நடந்ததை அறிந்ததும், காவல் படையினருடன் ஸ்வர்ணமுகி காட்டிற்குப் புறப்பட்டார்கள்.

ஆச்சார்ய தண்டியினால் பொறுக்க முடியவில்லை. "சிங்கமல்லனுக்கு இப்படி ஒரு மகனா? ஸ்வர்ணமுகி காடு கங்கர்கள் வசம் அல்லவா உள்ளது? கங்கர்களுக்கும், நமக்கும் இடையே பகை நிலவுகிறது என்பது குழந்தைக்குக் கூடத் தெரியுமே. அந்தக் காட்டிற்கு ஏன் மகேந்திரன் செல்ல வேண்டும்? நமது பரம்பரை வைரிகளான சாளுக்கியர்களின் நண்பர்கள் கங்கர்கள். சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்யனும், கங்க மன்னன் பூவிக்கிரமனும் ஒரே தட்டில் உண்ணக்கூடிய நண்பர்கள். அங்கே உக்ரோதயத்தையும் அணிந்து கொண்டு எதற்காகச் சென்றான்?" — தண்டின் மனம் வெதும்பிக் கூற, பரமேஸ்வரன் அவருக்கு ஆறுதல் கூறினான்.

"கவலைப்படாதீர் ஆசானே..! அண்ணனுக்கு ஒன்றும் நேர்ந்திருக்காது. எங்காவது வனபோஜன விழாவில் கலந்து கொண்டு ஆடிப்பாடிக் கொண்டிருப்பான். நாம் சென்று அவனை அழைத்து வருவோம்!" என்றான்.

"அவன் மன்னன் என்பதனை அவன் மறந்தாலும் நாம் மறக்கக் கூடாது, பரமேஸ்வரா! இனி அவனை நாம் தனியாக எங்கும் செல்ல அனுமதிக்கக் கூடாது. உனது அண்ணனைப் பிரியாமல் நீ கூடவே இருக்க வேண்டும். அவனது தலையில் மகுடம் இருக்கிறதே தவிர, உனது சிந்தனைதான் அவனைச் செலுத்த வேண்டும். உனது அண்ணனுக்குப் பக்குவம் போதாது. எனவே, நீ அவனுடன் எப்போதும் இருக்க வேண்டும்..!" — தண்டின் கூற, பரமேஸ்வரன் தலையசைத்தான். இருவரும் ஸ்வர்ணமுகி காட்டினுள் நுழைந்தனர்.

பூரணச் சந்திரனின் ஒளியில் சுவர்ணமுகி காடு பொன்னிறமாகக் காட்சி அளிக்க, சுவர்ணமுகி ஆறும் அமைதியாகப் பாய்ந்து கொண்டிருந்தது. புலவனான ஆச்சார்ய தண்டிக்கும், பரமேஸ்வரனுக்கும் அந்தக் காட்சி ரம்மியமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் இருவருமே அதனை ரசிக்கக்கூடிய நிலையில் இல்லை.

மகேந்திரனைத் தேடிக் கண்டுபிடித்து, அவனை பத்திரமாக அரண்மனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்கிற நோக்கத்துடன் சுவர்ணமுகி காட்டின் எல்லையிலிருந்தே அவனைத் தேடத் துவங்கினர். வீரர்களும் தீப்பந்தங்களுடன் இருபுறமும் பரவி, பல்லவ மன்னரைத் தேடிக்கொண்டிருந்தனர். நீண்ட தேடுதல் வேட்டைக்குப் பிறகு, அவர்கள் சுவர்ணமுகி ஆற்றின் கரையோரமாகவே சென்று கொண்டிருந்தனர். பொழுது புலர்வதற்கான அறிகுறிகளும் தோன்றத் துவங்க, ஆச்சார்ய தண்டி இருபுறமும் நோட்டம் விட்டுக் கொண்டபடி வந்தார்.

அப்போது —

ஒரு குறிப்பிட்ட பாறையின் பின்பாக நீண்டிருந்த இரு கால்களைக் கண்டார். அருகே மகேந்திரனின் முத்துக்கள் பதித்த செம்மை வண்ண காலணிகள் கிடந்தன.

தண்டிக்கு சுவாசமே நின்றுவிடும் போலத் தோன்றியது. மௌனமாகத் தனது சுட்டுவிரலை அந்தப் பக்கமாக நீட்ட, பரமேஸ்வரன் திரும்பி நோக்கினான். அந்தக் காலணிகளைக் கண்டதுமே பரமேஸ்வரனுக்கு அடிவயிற்றில் ஒருவித கலக்கம்.

பரிவாரங்களுடன் அந்தப் பாறையை நோக்கிப் போனார்கள். தலை சிதறி, குருதி பொங்கிக் காய்ந்திருக்க, மகேந்திரனின் நாசியிலும், வாயிலும் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. அவனது கழுத்தினை நோட்டம் விட்டனர். அவன் அணிந்திருந்த உக்ரோதயம் இப்போது காணவில்லை. தனது தலைப்பாகையைக் கழற்றித் திகம்பரமாகக் கிடந்த மகேந்திரனின் தேகத்தை மறைத்தார் தண்டி.

"வனபோஜனத்திற்கு அழைப்பது போன்று அவனை ஆசை வார்த்தை கூறி வரவழைத்து உக்ரோதயத்தைப் பறித்துக்கொண்டு அண்ணனது கதையை முடித்து விட்டார்கள், கங்கர்கள்..!" ஆவேசத்துடன் தனது வாளினை உருவினான், பரமேஸ்வரன்.

"அவர்கள்தான் செய்தார்கள் என்பதற்கு ஆதாரம் இல்லையே, பரமேஸ்வரா! கொள்ளையர்கள் கூட இந்தச் செயலை செய்திருக்கலாம் என்பார்கள். நமது மகேந்திரன் எவ்விதப் பாதுகாப்பும் இன்றிச் சுவர்ணமுகி காட்டிற்கு வந்தது தவறு. மன்னன் என்பவனுக்குச் சமயோசிதமும் எச்சரிக்கை உணர்வும் மிகவும் அவசியம். உனது அண்ணன், எதனைத்தான் பக்குவத்துடன் கையாண்டிருக்கிறான்? நான் கூறுகிறேன் என்று தப்பாக நினைக்காதே. இதுதான் அத்திமலையானின் சித்தம்

போலும். அவனது ஆபரணத்தை அணிந்த உனது அண்ணனுக்கு அவன் கொடுத்த தண்டனை இது. பக்குவம் உள்ள நீ நாட்டை ஆளவேண்டும் என்பதற்காக உனது அண்ணன் வழிவகுத்துக் கொடுத்துவிட்டு சென்றுவிட்டான் என்றுதான் நாம் நினைக்க வேண்டும். மன்னனாகப் பொறுப்பேற்று, உனது தந்தை நரசிம்ம பல்லவனின் கோரிக்கையை நிறைவேற்று. அத்திமலைத் தேவனையும் கண்டுபிடி. உக்ரோதயத்தையும் தேடிக் கண்டுபிடி. இது செய்யும் வரை, மீண்டும் பல்லவ நாடு பொலிந்து நிற்கும் என்று எனக்குத் தோன்றவில்லை..!"

ஆச்சார்ய தண்டி கூற, பரமேஸ்வரன் அவர் கூறுவதைக் கேட்டபடி மௌனமாக நின்றான்.

பரமேஸ்வரன் பல்லவ அரியணையில் அமர்ந்து விட்டான்.

தன்னிடம் ஆசி கோரிய மகனை அள்ளியெடுத்து உச்சி முகர்ந்து கண்ணீர் உகுத்தாள், ஸாமவை.

"பரமேஸ்வரா! அஸ்வத்தாமா தொடங்கி, திரிலோச்சனா பல்லவன், இளந்திரையன், விஷ்ணு கோபன், சிம்மவர்மன், அவனிசிம்மன், ஜெயவர்மன், மகேந்திர பல்லவன், உனது தந்தை நரசிம்ம பல்லவன் என்று பலரது வீரம் மற்றும் தியாகம் செறிந்த கதைகளை நான் உனக்குக் கூறியிருக்கிறேன். நமது பல்லவத்தின் ஜீவநாடியே அத்திமலை தெய்வம்தான். அவன் இருந்த வரை நமது பல்லவம் பெரும் கீர்த்தியுடனும், வளத்துடனும் திகழ்ந்தது. இளவரசர் ஜெயவர்மனும் அவரது சகோதரி நவரத்ன பல்லவியும் அத்திமலை தெய்வத்தைக் காக்க செய்த தியாகங்கள் பல. உனது தந்தையார் அத்திமலையானைக் கண்டுபிடித்து அதனை மல்லையில் பிரதிஷ்டை செய்தார். ஆழிப்பேரலையில் அந்தச் சிலை காணாமல் போனது. அந்தச் சிலை மீண்டும் அத்திமலை ஆலயத்தில் நிறுவப்பட்டால்தான்

நமது பல்லவம் இழந்த புகழை மீண்டும் அடைய முடியும். நீ அதற்கான பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டும். உனது தந்தையின் புகழை மீண்டும் நிலை நாட்ட வேண்டும்!" — ஸாமவை கதறியபடி கூற, அவளை ஆறுதலுடன் அணைத்தான் பரமேஸ்வரன்.

"நிச்சயம் செய்வேன் அம்மா! பரமேஸ்வரனின் பல்லவம் மிகவும் பலம் பொருந்தியது என்று அனைவரும் கூறுவர். அத்திமலைத்தேவனை மீண்டும் அவனது மலையிலேயே பிரதிஷ்டை செய்து, உக்ரோதயத்தை அவனுக்கு அணிவிப்பேன். அதனை நீ காணத்தான் போகிறாய்!" — பரமேஸ்வரன் கூற, அவனை புளகாங்கிதத்துடன் அணைத்துக் கொண்டாள், ஸாமவை.

அன்று மாலை —

அத்திமலைத்தேவனின் ஆலயத்திற்குச் சென்று தரிசனம் செய்துவிட்டு ஒத்தாடையை நோக்கிப் புரவிகளில் சென்று கொண்டிருந்தனர், ஆச்சார்ய தண்டியும், மன்னன் பரமேஸ்வரனும்.

திடீரென்று தண்டி எதையோ நினைத்துக் கொண்டு ஒத்தாடைக்குச் செல்லும் வலப்புற பாதையில் செல்லாமல், தருமநகரத்திற்குச் செல்லும் இடப்புற பாதையில் திரும்பினார். பரமேஸ்வரன் வியப்புடன் அவரை நோக்கினான்.

"ஆச்சார்யரே! நாம் எங்கு செல்கிறோம்?"

"சரித்திரப் புகழ் வாய்ந்த நமது தருமநகரத்தில் உள்ள பல்லவர்களின் பிரவாள மாளிகைக்கு!" — தண்டி கூறினார்.

"பிரவாள மாளிகையா? நான் இதுவரையில் அப்படி ஒரு மாளிகையைப் பற்றிக் கேள்விப்பட்டதே இல்லையே..!" — பரமேஸ்வரன் திகைத்தான்.

"மன்னன் சிம்மவர்மனுக்கு நான்கு மகன்கள் ஒரு மகள் என்று கூறியிருந்தேன் அல்லவா? அந்த ஒரு மகள் நவரத்ன பல்லவி வசித்த மாளிகைதான் பிரவாள மாளிகை. அவளது திருமணத்திற்குச் சீதனமாகக் கொடுக்கப்பட்டது. ஆனால் இந்த மாளிகையில்தான் பல்லவத்திற்கு எதிராகச் சதித்திட்டங்கள் நிறைவேறின."

ஆச்சார்ய தண்டின் பரமேஸ்வரனை அழைத்துக் கொண்டு பிரவாள மாளிகையினுள் நுழைந்தார். காலங்கள் உருண்டோடி இருந்த போதிலும், மாளிகை பாழடைந்து காணப்பட்டதே தவிர, அதன் கட்டுமானத் திற்கு எவ்வித சேதமும் இல்லை. செடி கொடிகள் மண்டியிருக்க, சர்ப்பங்களும் கோட்டான்களும் அங்குக் குடியேறி இருக்க, வௌவால்கள் முகத்தில் அறைந்தபடி இங்கும் அங்கும் பறந்து கொண்டிருந்தன.

"ஆசை மகளுக்காகச் சிம்மவர்மன் உருவாக்கிய மாளிகை..! களப்பரர் நாட்டிலும் ஊடுருவி, குடும்பத் திலும் ஊடுருவி, பொக்கிஷங்களைக் கொள்ளையடித்த தோடு, அத்திமலைத்தேவனின் பிரதிமையையும் குறி வைத்தார்கள். ஜெயவர்மனும், நவரத்ன பல்லவியும் அத்திமலையானின் பிரதிமையைப் பதுக்கி வைத்துப் பிரக்ஞுதாராவிடம் இருந்தும், பௌத்தர்களிடம் இருந்தும் காப்பாற்றினார்கள். ஆனால் எதிர்பாராதவிதமாக உனது தந்தையின் எதிரி வசம் அந்தப் பிரதிமை சிக்கியது. மகா மல்ல எதி என்கிற உனது தந்தையின் எதிரியும் இறந்து விட்டான். அவன் சிலையை எங்கே பதுக்கி இருக்கிறான் என்பது மட்டும் தெரியாமல் போனது!" — தண்டி வருத்தத்துடன் கூறினார்.

"கவலைப்படாதீர்கள் ஆசாரியரே! அத்திமலை தெய்வத்தின் சிலை எங்கே இருந்தாலும் அதனைத் தேடிக் கண்டுபிடித்து அத்திமலை ஆலயத்தில் அவனை பிரதிஷ்டை செய்வேன்..! இது உறுதி!" — பரமேஸ்வரன் கூறினான்.

தண்டியின் கண்கள் கலங்கின.

"பரமேஸ்வரா! எனது மூதாதையர்களின் ஊர் கனூஜம். எனது பாட்டனார், ஹர்ஷரின் அவையில் இருந்து, புலிகேசியின் அரசவைக் கவிஞராகி, பிறகு மகேந்திர பல்லவரை அடைந்தார். நான் சிங்கமல்லரின் அவையில் புலவராகத் துவங்கி இன்று பல்லவர்களின் ஆசானாகத் திகழ்கிறேன். என்னை இந்த நிலைக்கு உயர்த்தியவன் அத்திமலைத்தேவன்தான். அவன் தனது ஆலயத்திற்கு மீண்டும் திரும்பிவிட்ட செய்தியை அறிந்து கொண்டு வானுலகம் சென்று நமது பல்லவ மூதாதையர்களிடம் அந்த நல்ல செய்தியைச் சொல்ல வேண்டும் என்று துடிக்கிறேன். நீ எனக்கு அந்த வாய்ப்பை நல்குவாய் என்று நம்புகிறேன்..!" — தண்டி கண்ணீருடன் பரமேஸ்வரனின் கரத்தை பற்றினார்.

அவர்களது பேச்சைக் கேட்டபடி புன்னகையுடன் அந்தப் பன்னிரண்டு அடி புகைபோக்கியின் உள்ளே பெட்டகத்தில் நின்றிருந்தான், அத்திமலைத்தேவன்.

பல்லவர்களின் மீது இரக்கம் கொண்டு அவன் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளப் போகிறானா, அல்லது பல்லவர்களின் மீது அவன் தனது நம்பிக்கையை இழந்துவிட்டானா என்பது போகப் போகத்தான் தெரியும்.

# 9. பட்டுப்போன பல்லவ மரம்!

**சா**ளுக்கிய மன்னன் விக்கிரமாதித்யன் கங்க நாட்டு இளவரசி திரிலோக கங்காவதியையும், கங்க மன்னன் பூவிக்கிரமன், சாளுக்கிய இளவரசி விஜயவதனாவையும் திருமணம் செய்துகொண்டதாகக் காஞ்சிக்கு தகவல் வந்ததும் பரமேஸ்வரனுக்கும் திருமணம் செய்து வைத்துவிட வேண்டும் என்கிற தீவிரத்தில் இருந்தாள் ஸாமவை.

பேரழகியான கொங்கு சேர இளவரசி, சேரகுல நாச்சியாரை ஸாமவைக்கு மிகவும் பிடித்துப்போக, பரமேஸ்வரனுக்கு அவளை நிச்சயம் செய்தாள். திருமணம் முடிந்ததும் உடனே கர்ப்பம் தரித்த சேரகுல நாச்சியார், அழகிய ஆண் மகவு ஒன்றைப் பெற்றாள். குழந்தைக்கு ராஜசிம்மன் என்று பெயரிட்டாள் ஸாமவை.

பரமேஸ்வரனைச் சுற்றி எதிரிகள் தங்களது வாட்களைத் தீட்டிக்கொண்டிருக்க, போர் வியூகங்களை அமைப்பதிலேயே அவனுக்குப் பொழுது சரியாக இருந்தது. சாளுக்கியர்கள், குந்தளர்கள், கங்கர்கள் மற்றும் பாண்டியர்கள் பல்லவத்திற்கு எதிராகச் சங்கநாதங்களை எழுப்பியபடி இருந்தனர்.

நாச்சியாரோ அத்திமலைத்தேவனிடம் பக்தி பூண்டு அவனது ஆலயத்திலேயே பெரும்பாலும் தங்கியிருக்க, பெயரன் ராஜசிம்மனை வளர்க்கும் பொறுப்பை முழுவதுமாக ஸாமவை ஏற்றுக்கொண்டாள்.

பாட்டி ஸாமவையுடன் அமர்ந்து சிங்கமல்லன் மற்றும் மகேந்திரமல்லன் ஆகியோரின் வீர பிரதாபங்களைப் பற்றிக் கேட்டறிந்தான் ராஜசிம்மன், அத்திமலைத் தேவனின் பெருமைகளைப் பற்றி ஸாமவை உரைக்க, அந்தச் சிலையைக் கண்டுபிடிக்கத் தனது தந்தைக்குப் பக்கபலமாக இருப்பேன் என்று ராஜசிம்மன் கூறி வந்தான்.

ராஜசிம்மன் வளர்ந்து குமார பருவத்தை அடைந்ததும் அவனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டப்பட்டது. சேரகுல நாச்சியார் பெரும்பாலும் அத்திமலை ஆலயத்திலேயே கழிக்க ஒரு நாள் ஆலயத்திலேயே தனது ஆத்மாவை அத்திமலைத் தேவனிடம் *சமர்ப்பித்தாள்.

மனைவி இறைவனடியைச் சேர்ந்து, ராஜசிம்மனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டப்பட்டதுமே பரமேஸ்வரனின் அமைதியான போக்கு மாறியது. போர்வேட்கை மிகுதியாக, முதலில் கங்கர்களை வீழ்த்தி தனது அண்ணன் மகேந்திரனின் மரணத்திற்குப் பழி தீர்க்க வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டு படைகளைத் திரட்டத் தொடங்கினான். உக்ரோதயத்தைக் கங்கர் களிடம் இருந்து பறிமுதல் செய்ய வேண்டும் என்று அறைகூவல் விடுத்தான்.

தனக்கு எதிராகப் பரமேஸ்வரன் படைகளைத் திரட்ட, தகவலை அறிந்த பூவிக்கிரமன், சாளுக்கிய நண்பன் விக்கிரமாதித்யனிடம் உதவி கேட்டான்.

பரமேஸ்வரவர்மன் சற்றும் எதிர்பாராத வகையில் தனது படைகளைத் திரட்டிக்கொண்டு சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்யன் *பெருவளநல்லூரில் வந்து நின்றான். அவனுக்குப் பக்கபலமாகக் கங்கர்களும்,

* அத்திமலையானிடம் ஈடுபாடு கொண்டு அவனிடம் ஐக்கியம் ஆன சேரகுல நாச்சியாருக்கு, மலையாள நாச்சியார் என்கிற பெயரில் சந்நிதி அமைக்கப்பட்டு இன்றும் வரதராஜர் ஆலயத்தில் இந்தச் சந்நிதி உள்ளது.

*பாண்டியர்களும் அணிவகுத்து நிற்க, காஞ்சியிலிருந்து புறப்பட்டுப் பெருவளநல்லூருக்குச் சென்றான் பரமேஸ்வரன்.*

*மகாபாரதப் போர் பதினெட்டு நாட்களுக்கு நடைபெற்றதை போன்று, பெருவளநல்லூர் போரும் பதினெட்டு நாட்களுக்கு நடைபெற்றது.*

*போர் நடந்துகொண்டிருந்த வேளையில் இளவரசன் ராஜசிம்மன் சமயோசிதத்துடன் செயல்பட்டான். தனியாக ஒரு படையைத் திரட்டிக்கொண்டு கங்க நாட்டை நோக்கிப் படையெடுத்துச் சென்றான்.*

*நண்பன் விக்கிரமாதித்யன் பரமேஸ்வர பல்லவனுடன் பெருவளநல்லூரில் போர் புரிந்து கொண்டிருக்கிறான் என்று அலட்சியமாக இருந்தான் கங்க நாட்டு மன்னன், பூவிக்கிரமன். திடீரென்று, ராஜசிம்மன் படையுடன் கோலாகல நகரம் வந்து நிற்க, அரண்டு போனான், பூவிக்கிரமன்.*

*பரமேஸ்வரன் கங்க நாட்டின் மீது போர் தொடுத்து தனது அண்ணன் மகேந்திரனின் கொலைக்குப் பழி தீர்க்கவே நினைத்திருந்தான். பூவிக்கிரமனிடம் இருந்து உக்ரோதயத்தை மீண்டும் பறித்துக்கொள்ள வேண்டும் என்றும் எண்ணியிருந்தான். ஆனால் பூவிக்கிரமன் சாமர்த்தியமாக விக்கிரமாதித்யனின் ஆதரவினைப் பெற்று, கங்க—பல்லவ மோதலாக இருக்க வேண்டிய போரை, சாளுக்கிய—பல்லவ போராக மாற்றி*

* பெருவளநல்லூர் தற்போது லால்குடி அருகே உள்ளது. இங்கு கிடைத்த சமஸ்க்ருத கல்வெட்டு ஒன்று, சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்யன் பரமேஸ்வரனிடம் தோல்வியுற்று, படைகளை இழந்து நிர்வாணமாக ஓடினான் என்று கூறுகிறது. ராயகோட்டா கல்வெட்டு ஒன்று பரமேஸ்வரவர்மனை 'அஸ்வமேத யக்நன்' என்று குறிப்பிடுகிறது. திருவெண்ணெய்நல்லூர், சிதம்பரம், மற்றும் விருத்தாசல சிவாலயங்களுக்கு இவன் திருப்பணிகளைச் செய்திருக்கிறான்.

விட்டிருந்தான். தனது படைகளின் பெரும் பகுதியை விக்கிரமாதித்யனின் உதவிக்காகப் பெருவளநல்லூருக்கு அனுப்பியிருந்தான்.

இந்நிலையில் திடீரென்று ராஜசிம்மன் பெரும் படையுடன் கோலாகல நகரின் கதவைத் தட்டுவான் என்று அவன் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை. சொற்ப படையுடனே ராஜசிம்மனை அவன் எதிர்க்கவேண்டிய நிலை. மிக எளிதாகக் கோலாகல நகரினுள் நுழைந்து விட்டான், ராஜசிம்மன்.

புரவியில் அமர்ந்தபடியே பூவிக்கிரமனின் கொலு மண்டபத்திற்குச் சென்றான், ராஜசிம்மன்.

“எனது பெரிய தந்தை மகேந்திரரை சதி செய்து கொன்று, உக்ரோதயத்தைப் பறித்துக் கொண்டீர்கள். உக்ரோதயம் அத்திமலைத்தேவனின் ஆபரணம். அதனை ஒப்படைத்துவிட்டால், ரத்தமின்றி, சேதமின்றி நான் திரும்பிப் போகிறேன். ஒப்படைக்க மறுத்தால்..!” — என்று எச்சரிக்கை விடுத்தான் ராஜசிம்மன்.

பதினாறு பிராயங்களே நிரம்பிய ஒரு குமரனுக்கு இவ்வளவு துணிவா?

“நீ குறிப்பிடும் உக்ரோதயம் எங்கள் வசமில்லை. மகேந்திர பல்லவனின் கொலைக்கும் எங்கள் கங்க நாட்டிற்கும் தொடர்பு இல்லை..!” — பூவிக்கிரமன் கூற, ராஜசிம்மன் பொறுமை இழந்தான்.

தனது பார்வையைச் சுழலவிட, உப்பரிகையில் அரசகுல பெண்கள் அமர்ந்து சபை நடவடிக்கைகளைக் கவனிக்க வேண்டி அமைக்கப்பட்ட மாடத்தைக் கவனித்தான். அரசியார் விஜயவதனாவும் அவள் மகள் ரங்கபதாகையும் அமர்ந்து இவனையே நோட்டம்விட்டுக் கொண்டிருந்தனர். அவள்தான் இளவரசியாக இருக்க வேண்டும் என்பதனை யூகித்தான், ராஜசிம்மன்.

தனது வாளினை உருவியபடி குதிரையிலிருந்து குதித்தவன் விடுவிடுவென உப்பரிகை மாடத்திற்குச் சென்றான். திகைத்துப்போய் நின்றிருந்த ரங்கபதாகையின் கூந்தலைப் பற்றி, தரதரவென்று இழுத்துக்கொண்டு மீண்டும் கொலுமண்டபத்திற்கு வந்தான்.

"பூவிக்கிரமா! உனது மகளைப் பிடித்துச் செல்கிறேன். உக்ரோதயத்தைக் கொடுத்து உனது பெண்ணை மீட்டு எடுத்துச் செல்" — என்றபடி ரங்கபதாகையை அலட்சிய மாகத் தூக்கி குதிரையின் மீது அமர வைத்தவன், தானும் அவள் பின்பாகத் தாவி ஏறி, காஞ்சிக்கு புறப்பட்டான்.

அவளைத் தனது பாட்டி ஸாமவையின் அந்தப் புரத்திற்கு இழுத்துச் சென்று அவள் வசம் ஒப்புவித்தான்.

"பாட்டி! இவள் ரங்கபதாகை! கங்க நாட்டு இளவரசி! உக்ரோதயத்தை ஒப்படைக்காதவரை இவள் நமது பிணையாக இங்கேதான் இருப்பாள். இவளது தந்தை பூவிக்கிரமன் உக்ரோதயத்தை ஒப்படைத்த மறுகணம் இவள் திருப்பி அனுப்பப்படுவாள்..!" — என்று கூறிவிட்டு அவளைத் திரும்பிப் பாராமல் நடந்தான்.

"கவலைப்படாதே பெண்ணே! ராஜசிம்மன் கருணை உள்ளம் படைத்தவன். உனது தந்தையைப் பணிய வைப்பதற்காக அவன் ஆடும் நாடகம் இது. உன்னைப் பாதுகாப்புடன் மீண்டும் உனது நாட்டிற்குத் திருப்பி அனுப்பிவிடுவான்..!" — ஸாமவை கூறினாள்.

"அத்திமலையில் வாழமாட்டோமா என்று எவ்வளவு காலமாக நான் ஏங்கி வருகிறேன் தெரியுமா? நகரேஷு காஞ்சி என்கிற இத்தகைய புண்ணிய பூமியில் சிறைக் கைதியாக இருப்பதற்கும் பாக்கியம் செய்திருக்க வேண்டும். இனி பல்லவமே என்னைப் பல்லக்கில் திருப்பி அனுப்பினாலும் நான் எனது நாட்டிற்குப் போவதாக இல்லை. இனி அத்திமலையான்தான் எனது தெய்வம். நீங்களே எனது பாட்டியார்..!" — ரங்கபதாகை

கூற அவளை பிரம்மிப்புடன் பார்த்தபடி நின்றிருந்தாள் ஸாமவை.

"என்ன சொல்லுகிறாய், பெண்ணே!" — ஸாமவை கேட்டாள்.

"உங்கள் பெயரன் தனது குதிரையில் என்னை அமரவைத்து ஊரறிய என்னைக் கடத்தி வந்த பிறகு, இனி என் வாழ்க்கை அவருடன்தானே அமைய வேண்டும்! எனது தலை அவரது மார்பில் ஏற்கனவே தஞ்சம் அடைந்துவிட்டது."

ரங்கபதாகை கூறியதும், ஸாமவைக்கு மெய்சிலிர்த்தது. சிங்கமல்லனின் குதிரையில் தான் நள்ளிரவு வேகவதி ஆற்றிற்குச் சென்ற காட்சி மனக்கண்ணில் தோன்றியது.

"உக்ரோதயத்திற்குப் பதிலாக வேறொரு விலை மதிப்பற்ற ஆபரணத்தைக் கொண்டு வந்தான், ராஜசிம்மன்..!" என்று ரங்கபதாகையைப் பரிவுடன் கட்டிக்கொண்டாள்.

பதினெட்டு நாட்களாக நடைபெற்ற பெருவளநல்லூர் போர் ஒருவழியாக முடிந்தது. விக்கிரமாதித்யன் போரில் தோல்வியுற்றான். பரமேஸ்வரன் போரில் வென்றாலும் அவனால் அத்திமலைத்தேவனைக் கண்டுபிடிக்க இயல வில்லை. தனது ஆயுள் காலம் முழுவதும் அத்திமலைத் தேவனைத் தேடியவன், மகன் ராஜசிம்மனிடம் பொறுப்பினைத் தந்துவிட்டு, உலக வாழ்வினை முடித்துக் கொண்டான்.

# 10. கைலாயம் முதல் பாதாளம் வரை

ராஜசிம்மன் அரியணை ஏறிவிட்டான். இரண்டாம் நரசிம்மவர்மனாகத் தந்தை பரமேஸ்வரவர்மன் பலத்துடன் விட்டுச்சென்றிருந்த பல்லவத்தை இன்னும் வலுவானதாக மாற்றுகிறேன் என்று சபதம் பூண்டிருந் தான். சாளுக்கிய தொல்லைக்கு ஒரு நிரந்தரத் தீர்வினை ஏற்படுத்துகிறேன் என்றும் வாக்கு தந்திருந்தான். அத்திமலைத்தேவனை மீண்டும் தேடி எடுத்து அவனது சந்நிதியில் வைக்கிறேன் என்றும் வாக்களித்திருந்தான். அவன் குரலில் தொனித்த உறுதி மக்களிடையே புதிய நம்பிக்கையினைத் தோற்றுவித்திருந்தது..

ஸாமவை தான் வளர்த்த ராஜசிம்மன் அரியணை ஏறியதைப் பார்த்து பேரானந்தத்தில் திளைத்தாள். மகேந்திரன், பரமேஸ்வரன் என்கிற இரண்டு மகன்களைப் பெற்று அவர்களும் இறந்து தான் வாழ வேண்டியிருக்கிறதே என்று தன்னையே நொந்து கொண்டாலும், ராஜசிம்மனுக்குத் தான் மட்டுமே ஆதரவாக இருக்கிறோம் என்பதனை உணர்ந்தவளாக அவனது வாழ்வில் பூரண அக்கறையைச் செலுத்தினாள். ராஜசிம்மனும் பாட்டியிடம் முக்கிய விஷயங்களில் ஆலோசனைகளைக் கேட்டு வந்தான்.

ராஜசிம்மனின் ஜாதகத்தை ஆதிசரஸ்வதி ஆலய அர்ச்சகர் பூர்ணவர்மரிடம் காட்டியபோது அவர் அதனை ஆழமாக ஆராய்ந்து, முடிவில் ஒரே ஒரு வாக்கியத்தைத்தான் கூறினார்.

*"அரசியாரே! ராஜசிம்மர் கைலாசகிரியின் உச்சியைத் தொடுவார். அதல பாதாளம் சென்று விளிம்பினையும் தொடுவார்..!" என்றார் பூர்ணவர்மர்.*

*ஸாமவைக்குப் புரியவில்லை. போர்களில் வென்று இமயம் முதல் பாதாளம் வரையில் ராஜசிம்மன் வெல்லுவான் என்று பூர்ணவர்மர் கூறுவதாகவே நினைத்தாள்.*

*ரங்கபதாகையைக் கடத்தி வந்து அவளைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டிருந்தான், ராஜ சிம்மன். எனவே, தனது மருமகப்பிள்ளையான ராஜ சிம்மனுக்குக் கங்க மன்னன் பூவிக்கிரமன் எவ்விதத் தொல்லைகளையும் கொடுக்கவில்லை என்றாலும், அவனது முதல் மனைவியின் வசம் இருந்த உக்கிரோ தயத்தை மீண்டும் காஞ்சிக்கு அளிக்க மறுத்தான். இதனால் ராஜசிம்மன் மனதினுள் அவனைக் கருவிக் கொண்டிருந்தான். ஆனால் ரங்கபதாகையின் மனம் நோகக்கூடாது என்று கங்க நாட்டின் மீது படை எடுக்காமல் இருந்தான்.*

*பரமேஸ்வரனிடம் பெருவளநல்லூரில் படுதோல்வி அடைந்திருந்த விக்கிரமாதித்யனும் சற்றே அடங்கி இருந்தான். இதனால் ராஜசிம்மனுக்குப் போர்களில் ஈடுபட வேண்டிய அவசியம் இல்லாமல் போனது. அவனால் ஆட்சியில் கவனம் செலுத்த முடிந்தது.*

*ஒரு நாள் ஒத்தாடை ஆலயத்திற்குச் சென்றவன், திருக்கச்சி மயானத்தில் நின்றுகொண்டிருந்தான். அப்பர் மகேந்திர பல்லவனைத் திருத்திப் பணிகொண்ட இடத்தில் நின்றபோது, அவன் ஒரு காட்சியைப் பார்த்தான்.*

*நெடிய உருவம் கொண்ட சிவயோகி ஒருவர் அவன் முன்பாக வந்து நின்றார். உடலெங்கும் சுடலைப் பொடி*

பூசியிருந்தார். ஜடாமுடி கூந்தலைக் கொண்டையாகப் போட்டிருந்தார். கழுத்திலும், மார்பிலும் ஏராளமான ருத்ராட்சங்கள். காலில் ஒரு வெள்ளித் தண்டை.

"மன்னா! என்னைப் போன்ற ஏழை சிவயோகிகள் இமயம் சென்று ஈசனைக் காண்பது எங்ஙனம்..? ஏதோ இந்த ஒத்தாடையானை பற்றிக்கொண்டு எங்கள் காலத்தைக் கழிக்கின்றோம். மாவீரரான நீங்கள் கைலாசகிரியை சுமந்து வந்து காஞ்சியில் வைக்கக் கூடாதா? எங்களைப் போன்ற சிவயோகிகள் அன்றாடம் தரிசித்து ஆனந்தம் கொள்வோமே!" என்றவர், கடகடவென்று சிரித்தபடி சந்நிதியினுள் நுழைந்து மறைந்தார்.

திகைத்துப் போய் நின்றிருந்தான், ராஜசிம்மன். முதலில் யாரோ ஒரு பித்தன் பக்தி உணர்வினால் உந்தப் பட்டுப் பிதற்றுகிறார் போலும் என்றுதான் நினைத்தான். பிறகு காவலாளிகளிடம், சந்நிதியினுள் சென்ற அந்தச் சிவயோகியை அழைத்து வரச் சொன்னான். ஆனால், அப்படி யாரும் சந்நிதியில் இல்லை என்று காவலாளிகள் கூறியதும் ஸ்தம்பித்து நின்றான், ராஜசிம்மன். தானே ஆலயம் முழுவதும் அந்தச் சிவயோகியைத் தேட, அவர் பிறகு கண்களில் படவே இல்லை.

ஈசனே வந்து 'கைலாசகிரியை காஞ்சிக்கு எடுத்து வா!' என்று தன்னிடம் ஆணை இட்டதாக நினைத்தான், ராஜசிம்மன். ஸாமவை பெருந்தேவி வேறு அவனது ஜாதகப்படி கைலாசகிரியைத் தொடுவான் என்று கூறி இருந்தாரே. உடனே கைலாசநாதருக்கு ஆலயம் ஒன்றை எழுப்பத் தீர்மானித்தான்.

தான் எழுப்பும் கைலாசநாதர் கோயில், தென்திசை கைலாயம் என்று அழைக்கப்பட வேண்டும் என்று விரும்பிய ராஜசிம்மன் இதன் கட்டடக்கலையைத்

*தானே முன்னின்று வரைந்தான். இக்கோயிலுக்கு *ராஜ சிம்மேஷ்வரம் என்று பெயரிடப்பட்டது.*

*கைலாசநாதர் ஆலயத்தின் கும்பாபிஷேகத்தின் போது ராஜசிம்மன் விமானத்தின் மீது ஏறி நின்று மக்களின் மீது புனிதநீரைத் தெளிக்க, அந்தக் காட்சியை ஆனந்தக் கண்ணீருடன் பார்த்துக் கொண்டிருந்தாள், ஸாமவை. ஆதிசரஸ்வதி ஆலய அர்ச்சகர் பூர்ணவர்மர் கூறியது போன்று கைலாசகிரியின் உச்சியில்தான் நின்று கொண்டிருந்தான், இவளது ராஜசிம்மன்.*

---

* இராஜசிம்மேஷ்வரம் ஆலயத்தில் சுமார் 1300 ஆண்டுகளுக்கும் மேலாக வழிபாடு நடந்து வருகிறது. இக்கோயில் முழுவதும் கல்லினால் கட்டப்பட்டதாகும். ராஜசிம்மனால் கட்டுவிக்கப்பட்ட சிற்பங்களோடுகூடிய உட்சுற்றின் தோற்றம் பிரம்மிப்பினை உண்டாக்கும். கைலாசநாதர் கோயில் கி.பி. 700-ஆம் ஆண்டளவில் ராஜசிம்மனால் கட்டத் தொடங்கப்பட்டதெனினும் இவனது மகனான மூன்றாம் மகேந்திரவர்மனே கட்டடப் பணிகளை நிறைவேற்றி வைத்ததாகத் தெரிகிறது. பின்னரும் 14-ஆம் நூற்றாண்டளவில், விஜயநகரக் காலத்தில், சில பகுதிகள் சேர்க்கப்பட்டதுடன், திருத்தங்களும் செய்யப் பட்டிருப்பதாக அறியக் கூடியதாக உள்ளது.

இரண்டாம் விக்ரமாதித்தன் என்ற சாளுக்கிய மன்னன் பல்லவர்களை வென்று காஞ்சியைப் பிடித்தபொழுது இந்தக் கோயிலுக்குச் சேதம் எதுவும் ஏற்படாமல் பார்த்துக் கொண்டான். (கி.பி.740) காஞ்சி நகரின் சிறந்த கலைஞர் களைப் பட்டகடலுக்குக் (கர்நாடகா) கொண்டு சென்றார். அங்கு அரசி லோகமாதேவியின் கட்டளைப்படி விருப்பாஷா என்ற கோயில் நிறுவப்பட்டது. இக்கோயில் காஞ்சி கைலாசநாதர் கோயிலைப் பல அம்சங்களில் ஒத்திருக்கிறது என்று கூறப்படுகிறது. பிரதான ஆலயத்தைச் சுற்றிப் பல சிறு துணை ஆலயங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் அழகிய சிறு விமானத்தைக் கொண்டுள்ளன. சிறு ஆலயங்கள் ராஜசிம்மனுடைய பட்டத்தரசி ரங்கபதாகை என்பவரால் கட்டப்பட்டவையாகும்.

இக்கோயிலின் முகப்பில் ராஜசிம்மனின் மகன் மூன்றாம் மகேந்திரவர்மனால் கட்டப்பட்ட சிறு கோயில் உள்ளது.

ராஜசிம்மனும் மாவீரனாகத் திகழ்ந்தான். பல எச்சரிக்கைகளை விடுத்தும், பூவிக்கிரமன் இறுதிவரை அவனுக்கு உக்ரோதயத்தை அனுப்பவேயில்லை. அவனுக்கு உக்ரோதயம் கிடைக்கவில்லை என்றாலும், ரங்கபதாகையிடம் அவன் கொண்டிருந்த அன்பு குறையவில்லை.

ஒரு நள்ளிரவு —

ஸாமவை பெருந்தேவி தனது அறையில் உறங்கிக் கொண்டிருந்தாள்.

அப்போது ஒரு கனவு தோன்றியது. பாலாற்றில் அவள் நீராடிக்கொண்டிருக்க, திடீரென்று அத்திமலைத்தேவன் ஆற்றிலிருந்து எழுந்து நிற்கிறான். தனது வாயை அவன் அகலத் திறக்க, பாலாற்று நீர் அனைத்தும் அவனது வாயினுள் புகுந்து மறைய, பாலாறு வெறும் பாலைவனமாகக் காட்சி தருகிறது. மீண்டும் மணல் மேட்டினுள் மூழ்கி மறைகிறான், அத்திமலைத்தேவன்.

"அத்திமலைத்தேவா! வேண்டாம்! பாலாற்றைத் திருப்பித் தா! காஞ்சியின் ஜீவ நாடி இது!" என்று பாலாற்று மணலில் இங்கும் அங்கும் ஓடுகிறாள். ஆற்றின் மணல் பாதங்களைச் சுட, அவை கொப்பளித்துப் போகின்றன. நா வறண்டு போகத் தண்ணீர் தண்ணீர் என்று ஸாமவை அலறுகிறாள்.

அந்த அலறலோடு அவளது கனவு முடிகிறது. திடுக்கிட்டு தனது மஞ்சத்தில் எழுந்து உட்கார்ந்தாள். ஸாமவையின் முகமெல்லாம் வியர்த்துப் போக, குழப்பத்துடன் குவளையில் நீர்ஊற்றி அருந்தினாள். தான் கண்ட கனவுக்குப் பொருள் என்ன? பாலாறு வற்றுவது போன்று கனவு கண்டாளே! நாட்டுக்கு என்ன கேடு விளையப் போகிறதோ?

மறுநாள் ஆதிசரஸ்வதி ஆலயத்திற்கு விரைந்தாள்.

சரஸ்வதியை தொழுதவள், ஆலயத்தின் அர்ச்சகர் பூர்ணவர்மரிடம் தனது கனவை விவரித்தாள்.

"சுவாமி! நான் கண்ட கனவின் பொருள் என்ன? மனம் குழம்பித் தவிக்கின்றதே?" — வேதனையுடன் ஸாமவை கூறினாள்

சரஸ்வதியின் சிலை முன்பாகக் கண்களை மூடி தியானம் செய்தவர், மீண்டும் கண்களைத் திறந்து அவளை ஆறுதலுடன் நோக்கினார்.

"கவலைப்பட வேண்டாம் அரசியாரே! வெகு விரைவில் பாலாற்றில் அத்திமலைத்தேவன் கிடைப்பான். மீண்டும் பல்லவம் பழைய பொலிவுடன் திகழும்..! இதனைத்தான் உங்கள் கனவு விளக்குகின்றது!" — பூர்ணவர்மர் கூற சற்றே மனநிம்மதியுடன் அரண் மனைக்குப் புறப்பட்டாள்.

ஸாமவையின் தலை மறைந்ததும், பூர்ணவர்மர் திகிலுடன் சரஸ்வதியின் சிலையை நோக்கினார்.

"அம்மா! இதென்ன சோதனை! அரசியார் கண்ட கனவு மோசமான விளைவுகளைக் குறிக்கின்றதே. பல்லவம் பஞ்சத்தின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்க உள்ளதா? பாலாறு அடியோடு வற்றி, வெறும் மணல் வெளியாக இருக்கப் போகின்றதா? பாலாறு ஓடும் வரைதான் பல்லவம் நிலைக்கும் என்று ப்ரஷ்ணத்திற்குப் பதில் தருகிறாயே. அப்படியென்றால், பாலாறு வற்றிய வுடன் பல்லவமும் அழிந்துவிடுமா? காஞ்சிக்கா இந்த நிலைமை..? தாயே காப்பாற்று!" என்று பூர்ணவர்மர் பரிதவித்து வேண்டிக் கொண்டிருந்தார்.

கைலாசகிரியை தொட்டிருந்த அவளது பெயரன் ராஜசிம்மன், விரைவிலேயே அதல பாதாளத்தில் விழ இருந்தான். மக்களின் அதிருப்தியினைச் சந்திக்க இருக்கிறான்.

நல்லவேளை! ஸாமவை அந்த அலங்கோலங்களைக் காணும் துர்ப்பாக்கியத்தைப் பெற்றிருக்கவில்லை. மரணம் விரைவிலேயே அவளுக்கு விடுதலையை வழங்கியது.

ராஜசிம்மனின் ஆட்சி நல்லவிதமாகவே தொடங்கியது. ஆனால் ஸாமவை கண்ட கனவு விரைவிலேயே பலிதம் ஆகத் தொடங்கியது.

சுழித்து நுரை பொங்க ஸ்ரீவரமலையின் அடிவாரத்தைத் தொட்டுக்கொண்டு பாய்ந்த பாலாறு, ஒரு நாள் அடியோடு வற்றியது. வெறும் மணல்வெளி மட்டுமே காணப்பட, மக்கள் இருகரையிலும் நின்று வேதனையுடன் அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

பாலாறு, செய்யாறு, வேகவதி, கொசத்தலையாறு என்கிற ஆறுகள் காஞ்சியை வளமாக்கியபடி ஓடிய நாட்களைத்தான் மறக்க முடியுமா..? வேகவதியில் பச்சை யோலை விடுதல், முக்கூடலில் வனபோஜனம் என்று கொண்டாட்டங்கள் நிகழ்ந்ததைத்தான் மறக்க முடியுமா..!

ராஜசிம்மனின் ஆட்சியில் முதன்முறையாகப் பாலாறு வற்றியது. இதனால் பெரும் துயரை அடைந்தான் ராஜசிம்மன். பெரும் பஞ்சம் நாட்டைப் பீடித்தது.

நெல்மணிகள் கிடைப்பது துர்லபமாக இருக்க, மக்களின் கோபம் ராஜசிம்மனின் மீது பாய்ந்தது. ஆலயம் கட்டி என்ன பயன்.. மக்களின் பசியைப் போக்க இயலாதவன் என்றெல்லாம் மக்களால் ஏசப்பட்டான்.. பூர்ணவர்மர் கூறியது போன்று கைலாசகிரியை தொட்டிருந்தவன் இப்போது அதல பாதாளத்தில் விழுந்துவிட்டிருந்தான். ரங்கபதாகைதான் அவனுக்கு ஆறுதல் கூறினாள்.

“இதற்கெல்லாம் காரணம், நமது பல்லவ குலக் கொழுந்தான, அத்திமலையான் எங்கோ ஆராதனைகள் இன்றித் தவித்துக் கொண்டிருப்பதுதான். முழுமூச்சுடன் அவனைத் தேடுங்கள். மீண்டும் அத்திமலையான் அவனது ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டால்தான் மழை பொழியும். வளங்களின் நாயகன் அவன். அவன் ஆராதனை இன்றிக் கிடப்பதால்தான் இத்தகைய துன்பங்கள் நேருகின்றன.” — ரங்கபதாகை கூறியதும், புதிய உத்வேகத்துடன் அத்திமலைத்தேவனின் சிலையைத் தேடத் துவங்கினான், ராஜசிம்மன்.

ஆனால் அவனது ஆட்சியில் அத்திமலைத்தேவன் இருக்கும் இடம் தெரியவில்லை. இராஜசிம்மனின் ஆட்சி முடிந்து அவனது மகன் இரண்டாம் பரமேஸ்வர வர்மனும் அரியணை ஏறினான்.

ஆனால் —

பதவியேற்ற இரண்டே ஆண்டுகளில், பரமேஸ்வர வர்மன் சாளுக்கியர்களுடன் நிகழ்ந்த போரில் கொல்லப் பட்டான். பரமேஸ்வரன் கொல்லப்பட்டது, பல்லவத்தின் அடித்தளத்தையே ஆட்டம் காணச் செய்தது. காரணம், இரண்டாம் பரமேஸ்வரனுக்குக் குழந்தை செல்வம் இல்லை.

ஸாமவை கண்ட கனவு பலித்தது. பாலாறு வற்றிப் போனது. பாலாறு ஓடும் வரையில்தான் பல்லவம் நிலைக்கும் என்று பூர்ணவர்மருக்கு ப்ரஷ்ணத்தின்போது ஆதிசரஸ்வதி விடை கொடுத்திருந்தாள். அவளது கூற்றும் அல்லவா உண்மையாகிவிட்டிருந்தது..?

இப்போது பல்லவம் மன்னன் இல்லாத நாடு! அஸ்வத்தாமா தொடங்கி, புலி வேமு, புலி சோமன், திருலோச்சன பல்லவன், பல்லவ இளந்திரையன், விஷ்ணுகோபன், சிம்மவர்மன், அவனிசிம்மன், மகேந்திர பல்லவன், நரசிம்ம பல்லவன், பரமேஸ்வரவர்மன்,

*ராஜசிம்மன் என்று ஒப்பற்ற மன்னர்களால் ஆளப்பட்ட பல்லவம் இன்று அனாதையாகப் பரிதவித்துக் கொண்டிருந்தது. சாணக்கியன், சமுத்ரகுப்தன், புலிகேசி, யுவான் சுவாங், பாரவி, தண்டி என்று காஞ்சியின் வனப்பைக் கண்டு மலைக்காதவர்கள் யார்?*

*ஜெயவர்மன், நவரத்ன பல்லவி என்று பலர் தியாகம் செய்து காத்த அத்திமலையான் கவனிப்பாரற்று பிரவாள மாளிகையின் புகைபோக்கியில் நிற்கின்றான். அரசியல் காரணங்களுக்காக அலைக்கழிக்கப்பட்டு தனது அத்தி மலையைவிட்டு நீங்கி இருளில் நிற்கின்றான். கனலில் இருந்து வந்தவன், புனலில், நிலத்தில் என்று பல்வேறு இடங்களில் பதுங்கி நிற்கிறான்.*

*நூற்றாண்டுகள் கடந்துவிட்டன, எப்போதுதான் அவன் மீண்டும் தனது இருப்பிடம் செல்ல இருக்கிறான்?*

*மன்னர் இல்லாத காஞ்சியில், சாளுக்கியர்கள் புகுந்துவிட்டனர். அத்திமலை ஆலயமும், ஒத்தாடை அரண்மனையும் இப்போது அவர்கள் வசம்.*

*நாட்டில் நிலவும் குழப்பத்தைத் தங்களுக்குச் சாதகமாக மாற்றிக் கொண்ட சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்யன் தனது பிரதிநிதியாகச் *சித்ரமாயன் என்பவனைக் காஞ்சியின் அரியணையில் அமர்த்தி யிருக்கிறான்.*

*சித்ரமாயனின் சர்வாதிகாரத்திற்கு உட்பட்டுவிட்ட பல்லவமும், காஞ்சியும் தலைவிதியே என்று ஒரு தகுந்த மன்னனுக்காகக் காத்திருக்கிறது.*

---

* சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்யன் சித்ரமாயன் மூலமாகக் காஞ்சியில் ஆட்சி செய்து கொண்டிருந்தான். இன்றும் வரதர் கோயில் தெற்கு மதிலில் சாளுக்கியர்களின் ஆட்சிக்கு உட்பட்டு, கோயில் இருந்ததற்கு அடையாளமாகச் சாளுக்கியரின் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கிறது. நிற்கும் வராகம், பிறை நிலா, சூரியன், சங்கு சக்கரம் கூடிய சாளுக்கிய சின்னத்தை இன்றும் காணலாம்.

யாரை மன்னனாக்குவது என்கிற பிரச்னையை ஆங்காங்கே மக்கள் விவாதித்துக் கொண்டிருக்க, பல்லவ தண்டநாயகர்களும், சான்றோர்களும், வேத விற்பன்னர் களும் ஒரு நாள் ரகசியமாக ஆதிசரஸ்வதி கோயிலில் கூடினர்.

பூரணவர்மர் மீண்டும் ஆதிசரஸ்வதியிடம் பிரஷ்ணம் கேட்டார்.

"தாயே! தலையில்லா தேசமாக உள்ளது நமது பல்லவம்.. உனது கோபம்தான் அத்திமலையானையே அத்திவனத்திற்கு வரவழைத்தது. நீதானே காஞ்சியின் மூத்த குடிமகள். நீதான் நாட்டில் நிலவும் குழப்பத்தை நீக்க வேண்டும். காஞ்சியின் அடுத்த மன்னனை எங்கே காண்பது?"

பிரஷ்ணத்திற்கு ஆதிசரஸ்வதி அளித்த பதில் அனைவரையும் புதிய நம்பிக்கையுடனும், உத்வேகத்துடனும் எழ வைத்தது.

"காம்போஜம் செல்லுங்கள்! சிம்மவர்மனின் மகன் தானவர்மனின் ஆறாம் தலைமுறையில் நான்கு இளவரசர்கள் உள்ளனர். அவர்களில் ஒருவனை அழைத்து வந்து பல்லவ மன்னனாக அரியணையில் அமர்த்துங்கள்!" தேவியின் உத்தரவு கிட்டியது.

தண்டநாயகர் ஆலவாயர் தலைமையில் ஐவர் குழாம் ஒன்று காம்போஜத்திற்கு மன்னனைத் தேர்ந்தெடுக்கப் புறப்பட்டது.

விஷயத்தை அறிந்த சித்ரமாயன், சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்யனுக்குச் செய்தி அனுப்பினான்.

விக்கிரமாதித்யன் சித்ரமாயனுக்குப் பதில் செய்தி அனுப்பினான்.

'காம்போஜத்தில் இருந்து வரும் பல்லவ மன்னன் பல்லவ மண்ணில் காலே வைக்கக்கூடாது. அவன்

கலத்தில் இருந்து இறங்கும் போதே அவனைத் தீர்த்துக்கட்ட ஏற்பாடுகளைச் செய்துவிடு!' — விக்கிரமாதித்யன், ஓலையில் கூறியிருந்தான்.

பல்லவ மன்னன் யார் என்பதே இன்னும் தெரிய வில்லை. அதற்குள் அந்த மன்னனை, அவன் யாராக இருப்பினும், தீர்த்துக்கட்டிவிடும்படி சாளுக்கிய விக்கிரமாதித்யன் கட்டளையிட்டிருந்தான்.

மாவிலக்கை, மல்லைக் கடலோரத் துறைகளில் வரப்போகும் மன்னனைக் கொல்வதற்காகச் சிறுசிறு குழாங்களாகச் சித்ரமாயனின் ஆட்கள் பரவி நின்றிருந்தனர்.

# ஆ. காம்போஜ காஞ்சி

**கி.பி.**728.

சிங்கமல்லன் என்கிற முதலாம் நரசிம்மவர்மன் இறக்க, அவனது மூத்த மகன் இரண்டாம் மகேந்திரன் அரியணை ஏறினான். உக்ரோதயம் என்கிற அத்திமலைத்தேவனின் ஆபரணத்தை அணிந்து கொண்டு சுவர்ணமுகி காட்டிற்குச் செல்ல, கங்க நாட்டு இளவரசி திரிலோக கங்காவதியின் சூழ்ச்சியால் கொல்லப்படுகிறான். உக்ரோதயமும் பறிபோகிறது.

தொடர்ந்து, அவனது தம்பி பரமேஸ்வரன் பதவிக்கு வருகிறான். சாளுக்கியர் மற்றும் கங்கர்களுடன் பெருவளநல்லூரில் போர்புரிய அவனால் அத்திமலைத்தேவனையோ, உக்ரோதயத்தையோ கண்டுபிடிக்க இயலாமல் போகிறது.

அவனுக்குப் பிறகு அவனது மகன் ராஜசிம்ம பல்லவனின் ஆட்சியில் பஞ்சம் ஏற்படுகிறது. பாலாறு வற்றிப் போகிறது. அவனது மகன் இரண்டாம் பரமேஸ்வரன் சாளுக்கியர்களுடன் நடைபெறும் போரில் உயிரைத் துறக்க பல்லவம் வாரிசு இல்லாத நாடாக மாறுகிறது. இதுதான் தக்க தருணம் என்று சாளுக்கியர்கள் சித்ரமாயன் என்கிற தங்கள் பிரதிநிதியை காஞ்சியில் பதவியில் அமர்த்துகிறார்கள்.

சிம்மவர்மனின் மகன் அவனிசிம்மனின் வழித்தோன்றல்கள் ஆண்டு கொண்டிருந்த பல்லவம், இனி அவனிசிம்மனின் தம்பியும் காம்போஜ மன்னன்

தானவர்மன் மற்றும் அவன் மனைவி ககனமயிக்குப் பிறந்த வழித்தோன்றல்களின் வசம் செல்லப் போகிறது.

தங்களை ஆளுவதற்குத் தானவர்மனின். ஆறாவது தலைமுறையைச் சேர்ந்த ஒரு இளவரசனைத் தேர்ந்தெடுக்க, தண்டநாயகர் ஆலவாயர், ராஜகுரு காஷ்யப அத்தங்கி, உபதளபதி விஜயவிக்கிரமன் மற்றும் ஆலோசகர் மதுசூதன பண்டிதர் மற்றும் மாவீரன் சுக்கில மல்லன் ஆகியோர் காம்போஜம் சென்று கொண்டிருந்தனர்.

# 11. புதிய பல்லவம் பூத்தது!

**‘ந**ந்தினி’ என்கிற அந்தக் கலத்தில் நந்திக்கொடி படபடத்துக் கொண்டிருந்தது. பல்லவத்தை ஆள்வதற்கு ஒரு மன்னன் தேவை. தானவர்மன் வழித்தோன்றலாகத் தற்போது காம்போஜத்தை ஆளும் மன்னன் ஹிரண்ய ஹரிவர்மாவுக்கு நான்கு மகன்கள் உள்ளனர். மூத்தவன், காம்போஜ நாட்டின் சத்ரியமல்லன்தான் சூடாமணி வர்மனாகக் காம்போஜத்தை ஆளப்போகிறான் என்பதால், மற்ற மூவரில் ஒருவனை பல்லவத்தின் மன்னனாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

நந்தினி கலத்தின் மேல்தளத்தில் ஐந்து பேர் நின்று, தொலைவில் மலைகளின் நடுவே தெரிந்த *சிம்மேந்திர துறைமுகத்தையே நோட்டம் விட்டனர். பல்லவ ராஜகுரு காஷ்யப சதகரணி, தண்டநாயகன் ஆலவாயர், தளபதி விஜயவிக்கிரமன், போர்க்கலைகளை போதிக்கும் சுக்கிலமல்லன் மற்றும் மதுசூதன பண்டிதர் ஆகியவர் களில் விஜயவிக்கிரமனும், சுக்கிலமல்லனும் இளங் குமரர்கள். மற்ற மூவரும் ஐம்பது பிராயங்களைக் கடந்தவர்கள். தங்களது வருங்கால மன்னன் இளங் குமரனாக இருக்கக் கூடும் என்பதால் அந்த வயதில் இருவரை உடன் அழைத்து வந்து அவனிடம் நெருங்கிப் பழக வைக்க நினைத்திருந்தனர்.

காம்போஜ குமரனுக்கு, காஞ்சியும் அதன் சூழ்நிலையும் குழப்பத்தினைத் தரலாம். முதியவர்களான

---

* தற்போது சிம்மேந்திர துறைமுகம் ஸிஹநௌவில்லே துறைமுகம் என்று (Port of Sihanoukville) என்று அழைக்கப் படுகிறது.

தாங்கள் அவனுக்கு ஆறுதல் கூறுவதைவிட, அவனது வயதை ஒத்தவர்கள் உடன் இருந்தால், ஒருவேளை அவர்கள் அவனைக் கலகலப்புடன் இருக்கச் செய்வார்கள்.

தாங்கள் தேர்ந்தெடுக்கும் மன்னன் பல்லவத்தின் பிரச்னைகளைக் கையாளக்கூடிய திறமைமிக்கவனாக இருக்க வேண்டுமே என்கிற கவலையுடன் காம்போஜத்தின் கரையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

சிறுபுள்ளியாய் தொலைவில் ஓர் உருவம் தெரிந்தது. கரை நெருங்க, அந்த உருவம் இப்போது தெளிவாய்த் தெரிந்தது.

காம்போஜ மன்னன் ஹரிவர்மாவின் வலதுகரமாகக் கருதப்படும், ஷ்யமந்தகச் சிம்மவபுதான் இவர்களை வரவேற்பதற்காக நின்றிருந்தார். காம்போஜ மன்னனையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருப்பவர். தேவராஜ மார்க்கத்தின் தலைமைக் குரு என்கிற பீடத்தில் அமர்ந்திருப்பவர். அவர். கூறுவதே காம்போஜத்தின் வேதவாக்கு.

"அதோ சிம்மவபு! தேவராஜ மார்க்கத்தின் குரு!" — மதுசூதன பண்டிதர் கூறினார்.

"குருதான். ஆனால் தேவ குரு பிரகஸ்பதி அல்ல. அசுர குரு சுக்கிரன்..!" — முணுமுணுத்தார், சதகரணி.

"அவரிடம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்!" — மதுசூதனன பண்டிதர் கூற, விஜய விக்கிரமன் அந்த உருவத்தை உறுத்து நோக்கினான்.

நெட்டையான உருவம். தீட்சண்யமான பார்வை. நெற்றியில் துலங்கும் கூர்ம புண்டரம். தேகம் முழுவதும் ஸ்வர்ண ஆபரணங்கள்.

நந்தினி கலம் கரையை அடைந்ததும், ஐவரும் கலத்தைவிட்டு இறங்க, கைகளைக் கூப்பியபடி அவர்களை வரவேற்றார், சிம்மவபு.

“வரவேண்டும்! காம்போஜ மன்னர் ஹிரண்ய ஹரிவர்மாவின் சார்பில் உங்களை வரவேற்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன். அஸ்வத்தாமாவின் குலக் கொழுந்துகள் ஆளும் உமது பல்லவமும், எமது காம் போஜமும் சகோதர நாடுகள் அன்றோ! சகோதரனை இன்னொரு சகோதரன் வரவேற்கிறான்!” — என்று சிம்மவபு கூறினார்.

வாய்தான் வரவேற்றதே தவிர கண்களில் ஒருவித குளிர்ச்சிதான் நிலவிக்கொண்டிருந்தது.

“காம்போஜத்திற்கு வருவதில் நாங்களும் பேருவகை கொள்கிறோம்..!” — ஆலவாயர் கூறினார். பிறகு தங்களைச் சிம்மவபுவிடம் அறிமுகம் செய்து கொண்டார்.

“மிக வருத்தமாக இருக்கிறது. பேரரசாகத் திகழ்ந்த பல்லவம், போர்க்கலை, சிற்பக்கலை என்று கலைகளின் உறைவிடமாக இருந்த பல்லவம், இன்று க்ஷீணித்து, மன்னன் இல்லாமல் அல்லாடுகின்றதே! காம் போஜத்தின் விதையை எடுத்துச் சென்று பல்லவ மண்ணில் நட்டு பயிர் செய்யப் போகிறீர்கள் போலிருக்கிறது!” — சிம்மவுபுவின் குரலில் தொனித்த நையாண்டியை உணர்ந்த அனைவரும், ஒருவரை யொருவர் நோக்கினர்.

விஜயவிக்கிரமனுக்குக் கோபம் தலைக்கேறியது. ஷ்யமந்தகச் சிம்மவபு சிக்கலான பேர்வழி என்பதை அறிந்திருக்கிறான். அவர் காம்போஜத்திற்குதானே ராஜகுரு! பல்லவத்திற்கு இல்லையே! இவன் ஏன் அவருக்குப் பயப்பட வேண்டும்?

“காம்போஜத்தின் விதையை எடுத்துச் செல்ல வரவில்லை. ஆறு தலைமுறைக்கு முன்பாக, காம்போஜ பசுவை சினை செய்வதற்காக எங்கள் பல்லவ ரிஷபத்தை உங்கள் நாட்டிற்கு ஓட்டி வந்தீர்கள். எங்களது காளை இப்போது எங்களுக்குத் தேவைப்படுகிறது. எனவே

அதனை ஓட்டிச் செல்லவே நாங்கள் வந்திருக்கிறோம்..!" — விக்கிரமன் கூறியதும், சிம்மவபுவின் முகம் சிறுத்தது. கண்களில் சினம் பொங்க, விக்கிரமனை வெறித்தார்.

"உங்கள் காளைதான். ஆனால் காம்போஜத்தில் இருக்கும் வீர்யம் பல்லவத்தில் இருக்குமா? உங்களுக்கு ஒரு மன்னரை வழங்குவதில் உண்மையிலேயே காம்போஜம் பூரிப்படைகிறது. ஆனால் அந்த மன்னரை உங்களால் பாதுகாப்புடன் வைத்துக் கொள்ள முடியுமா என்பதுதான் எனது கேள்வி. அஸ்வமேத யாகத்தில் தோன்றிய தேவ உடும்பர அத்திமலைத்தேவனையே பாதுகாப்புடன் வைத்துக் கொள்ளத் தெரியவில்லை. அவனது ஆபரணமான ஸ்ரீதள மணியும் போன இடம் தெரியவில்லை. ஆற்றலுக்குப் பெயர்போன ஜெய வர்மனை சீனத்திற்குத் தாரை வார்த்துக் கொடுத்து விட்டீர்கள். பாற்கடலை போன்ற பாலாற்றினையும் வற்ற அடித்துவிட்டீர்கள். பல்லவர்களுக்குப் பாதுகாப்பு உணர்வு அறவே கிடையாது போலும். இருப்பதை எல்லாம் இழந்துவிட்டு, இப்போது மன்னரைத் தேடி காம்போஜம் வந்திருக்கிறீர்கள்." — சிம்மவபு அலட்சியமாக அவர்களை நோக்கினார்.

'துவக்கமே சரியில்லையே. ஏன் சிம்மவபு இவ்வளவு எதிர்ப்பினைக் காட்டுகிறார்?' — சதகரணி நினைத்தார்.

பல்லவ விருந்தினர்களுக்காக இரண்டு ரதங்கள் காத்திருந்தன. அவற்றில் ஐவரும் ஏறிக்கொள்ள, இரதங்கள் அரண்மனையை நோக்கிப் பறந்தன. தனது இரதத்தில் அவர்களைப் பின்தொடர்ந்தார், சிம்மவபு.

அரண்மனை நந்தவனத்தில் பல்லவ குழாமிற்கு ஜாகைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. தனது ஜாகையின் வாயிலில் ஓங்கி உயர்ந்திருந்த அசோக மரம் ஒன்றின் கீழ் நின்று தொலைவில் தெரிந்த அரண்மனையை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தான், விஜயவர்மன்.

அப்போது —

கையில் வாட்களை ஏந்திய நான்கு சிறுவர்கள் நந்தவனத்திற்கு வந்தனர். விஜயவிக்கிரமனின் ஜாகைக்கு மிக அருகாமையில் வந்து நின்றவர்கள், வாட் பயிற்சி களைச் செய்யத் துவங்கினர். விஜயவர்மன் அவர்கள் நால்வரையும் கூர்ந்து கவனித்தான். அவர்களில் சற்று உயரமாகவும், இளங்குமரனாகத் திகழ்பவனே, காம்போஜ பட்டத்து இளவரசனாக இருக்க வேண்டும். மனதிற்குள் நினைத்தான்.

திடீரென்று —

அந்த நான்கு பேரில் பன்னிரண்டு பிராயத்து பாலகனாகத் திகழ்ந்தவன், விஜயவிக்கிரமனைப் பார்த்தான். தனது கையில் இருந்த வாளினை வீசி எறிந்துவிட்டு, இவனை நோக்கி நடந்தான்.

“நீங்கள்தான் பல்லவ நாட்டில் இருந்து வந்திருப்பவர் களா?” — அந்தப் பாலகன் கேட்க, விஜயவிக்கிரமன் தலையசைத்தான்.

“எங்கள் நால்வரில் ஒருவர் உங்கள் பல்லவ மன்னராகக் காஞ்சிக்குச் செல்ல வேண்டும் என்று எனது தந்தை கூறினார். நீங்கள் யாரை தேர்ந்தெடுக்கப் போகிறீர்கள்?” — அந்தச் சிறுவன் ஆர்வத்துடன் கேட்டான்.

“இளவரசே! தங்களது பெயர்?” — விஜயவர்மன் அந்தச் சிறுவனை ஆழமாகப் பார்த்தான்.

“உங்கள் நாட்டின் பெயர்தான் எனது பெயரும். எனது பெயர் பல்லவமல்லன். அதோ உயரமாக வாட்பயிற்சி செய்பவர் எனது மூத்த அண்ணன் சத்ரியமல்லன். அடுத்த அண்ணன் சங்கிரமல்லன். மூன்றாவது அண்ணன் ராஜமல்லன். நான்தான் கடைக்குட்டி..!” — பல்லவமல்லன் கூறினான்.

"அப்படியானால் நீங்களே எங்களது மன்னனாகக் காஞ்சிக்கு வாருங்கள். உங்கள் பெயரில்தானே பல்லவம் இருக்கிறது..!" நகைத்தான் விஜயவிக்கிரமன்.

"நான் வரமாட்டேன். பல்லவத்திற்கு ஏதோ சாபம் இருக்கிறதாமே. தேவராஜ வரதன் சிலையை நீங்கள் தொலைத்துவிட்டதால், உங்கள் நாட்டு மன்னர்கள் நிலைக்கமாட்டார்களாமே. நான் வரமாட்டேன்!" — என்றபடி மீண்டும் தனது சகோதரர்களிடம் ஓடிச் சென்றான், பல்லவமல்லன்.

விஜயவர்மன் கல்லாய்ச் சமைந்து நின்றான். ஷ்யமந்தகச் சிம்மவுபுவின் துர்போதனை போலும்! இவர்கள் தங்களுக்கு ஒரு மன்னனைத் தேடி வந்திருக்க, ஹரிவர்மாவின் மகன்கள் இவர்களுடன் வருவதற்குச் சம்மதிக்காவிட்டால், இவர்களது பயணமே வீண் தானே..?

பல்லவத்திற்கு என்ன நேர்ந்தது? எதனால் இப்படி ஒரு நிலை? அடுத்த மன்னன் நியமிக்கப்படும்வரை தனது பிரதிநிதி சித்ரமாயன் காஞ்சியிலே தங்கியிருப்பான் என்று சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்யன் அறிவித்ததும், காஞ்சிக்கு வந்த சித்ரமாயன் அதிரடியாகச் சில முடிவுகளை அறிவித்துவிட்டான். அத்திமலைத் தேவனின் ஆலயத்தைத் தனது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்துவிட்டான்.

சாளுக்கிய நாட்டில் தங்கியிருந்தபோது, பிரமதி என்கிற குணபரன், வசந்தமாலினி என்கிற மந்திரிகுமாரி ஒருவளை மணந்தான். அவர்களுக்கு வீராதித்தியன் என்கிற மகன் பிறந்தான். அவனது வழித்தோன்றல்தான் இந்தச் சித்ரமாயன் என்று ஒற்றர்கள் மூலம் பல்லவர்கள் அறிந்தனர். விக்கிரமாதித்யன் சித்ரமாயனை நிரந்தர மாகப் பல்லவ அரியணையில் அமர்த்த திட்டமிடுவதும், அவர்களுக்குப் புரிந்தது. எனவேதான், காம்போஜத்தில் இருந்து எப்படியும் ஒரு மன்னனை அழைத்து

வரவேண்டும் என்கிற தீவிரத்துடன் வந்திருந்தனர். ஆனால் இங்கே, காஞ்சிக்கு வருவதற்கு இளவரசர்களிடையே ஆர்வம் இருப்பதாகத் தெரியவில்லையே..!

தனது கவலையைத் தண்டநாயகர் ஆலவாயரிடம் கூறியபோது, அவர் யோசித்தார். "வேறு வழி எனக்குப் புலப்படவில்லை, விக்கிரமா! காம்போஜ இளவரசர்கள் நமது காஞ்சிக்கு வருவதற்கு விருப்பப்படவில்லை என்றால், நமக்கு உள்ள ஒரே வழி, சோழ தேசம்தான். காடவ நாட்டை ஆண்ட பீமவர்மருக்கு பிறந்த மகள் சோழ இளவரசன் ஒருவனை மணந்து சோழர்களுடன் ஐக்கியமாகிவிட்டாள். பலமிழந்து உறையூரின் சிறுபகுதியை ஆண்டுகொண்டிருக்கும் சோழன் ஒருவனை அழைத்து வந்து பல்லவ மன்னனாக அரியணையில் ஏற்றுவதுதான் நமக்கு முன்பாக உள்ள ஒரே வழி..!" ஆலவாயர் கூற, காஷ்யப சதகரணி ஆட்சேபம் தெரிவிக்கும் விதமாகத் தனது தலையை அசைத்தார்.

"சிம்மவர்மனின் வாரிசு தானவர்மனின் வழித் தோன்றல்கள்தான் பல்லவ அரியணைக்கு அருகாமையில் நிற்கின்றனர். சோழர்களில் ஒருவனை அழைத்து வந்து மன்னனாக அமர வைப்பது நமது பல்லவத்திற்குப் பெருமை சேர்க்காது. மேலும், காம்போஜ இளவரசர்கள் பாலகர்களாக உள்ளனர். பாலகன் ஒருவனை மன்னனாக அழைத்துச் சென்றால்தான் தான் ஒரு பல்லவ வேந்தன் என்கிற எண்ணத்தைக் கொள்வான். அத்தகைய எண்ணத்தையும் நம்மால் அவனுள் விதைக்க முடியும். சோழனை அரியணையில் அமர வைத்தால் தன்னை ஒரு சோழனாகத்தான் முன்நிறுத்திக் கொள்வான்." — காஷ்யப சதகரணி கூறினார்.

"ராஜகுரு சதகரணியின் கூற்றை நான் ஆதரிக்கிறேன். சத்திரிய மல்லன் வருங்காலக் காம்போஜ மன்னனாகத்

திகழப் போவதால், நாம், சங்கிரமல்லன், ராஜமல்லன் மற்றும் பல்லவமல்லன் மூவரில் ஒருவனைத் தேர்ந்தெடுக்க வேண்டும்..!" — சுக்கிலமல்லன் கூறினான்.

"பல்லவமல்லன். பெயரே மிகவும் பொருத்தமாக உள்ளது. அவனையே நமது மன்னனாக ஏற்கலாம்!" — மதுசூதன பண்டிதர் கூறினார்.

சற்றுமுன்பாகப் பல்லவமல்லன் தன்னிடம் கூறிய கருத்துக்களை அவர்களிடம் கூறிவிடலாமா என்று நினைத்தான், விஜயவிக்கிரமன். பிறகு, ஒரு பாலகனின் கருத்துக்கள் அவை. சிம்மவபு போதித்த கருத்துக்களைத் தான் அவன் பிரதிபலிக்கின்றான். அவை அவனது கருத்துக்களாக இருக்க முடியாது என்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான், விக்கிரமன்.

காம்போஜ அரசவை கூடியது. பல்லவ பிரதிநிதிகள் வந்து அமர்ந்ததும், விவாதம் தொடங்கியது.

காம்போஜ மன்னன் ஹிரண்ய ஹரிவர்மா பல்லவ தூதுக் குழுவை அமைதியாக நோக்கினான்.

"அஸ்வத்தாமாவின் இரட்டை மகன்கள் பல்லவமும், காம்போஜமும். பல்லவம் மன்னனில்லாத நிலைக்குத் தள்ளப்பட்டதை எண்ணி வருந்துகிறேன். நல்ல வேளையாக, தேவராஜன் எனக்கு நான்கு செல்வங்களைத் தந்திருக்கிறான். மூத்தவனைத் தவிர்த்து மற்ற மூவரில் உங்களுக்குப் பொருத்தமான மன்னனை நீங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்..!" என்றவன் எதிரே வரிசையாக அமர்ந்திருந்த இளவரசர்களை நோக்கிக் கைநீட்டினான்.

மூத்தவன் சத்திரியமல்லன் தனது கைகளைக் கட்டி அலட்சியமாக அமர்ந்திருக்க, தொடர்ந்து சங்கிரமல்லன், ராஜமல்லன் மற்றும் பல்லவமல்லன் அமர்ந்திருந்தனர்.

ஆலவாயர் மூவரையும் தனது இடுங்கிய கண்களால் நோக்கினார்.

“இளவரசர்களே! பல்லவத்தைப் பற்றியும் காஞ்சியைப் பற்றியும் அறிவீர்களா?” — ஆலவாயர் கேட்டார்.

“நன்றாக அறிவோம்! அஸ்வத்தாமா தொடங்கிச் சித்ரமாயன் வரை அனைத்து சரித்திரங்களையும் போதித்துவிட்டார், எங்கள் குரு. காஞ்சியை நினைத்தால் பிரம்மிப்பாகத்தான் இருக்கிறது! ஆனால்...” என்று இழுத்தான் சங்கிரமல்லன்.

‘ஆனால்...!’ என்கிற அந்தச் சொல் அவன் காஞ்சிக்கு வருவதை விரும்பவில்லை என்பதைத் தெளிவுபடுத்தியது.

“ஆனால்?” — ஹரிவர்மா கேட்க, சங்கிரமல்லன் தனது குரு சிம்மவபுவை நோக்க, அவர் புன்னகையுடன் அவன் முகத்தைப் பார்த்த உடனேயே, பல்லவ குழாமிற்குப் புரிந்து போனது, பல்லவத்திற்கு ஒரு மன்னன் கிடைப்பதை ஷ்யமந்தகச் சிம்மவபு விரும்பவில்லை என்று.

“பல்லவர்கள் தங்கள் பெருமைகளை அறியாதவர்கள். காஞ்சியின் வித்தான தேவராஜனின் சிலையையே பாதுகாக்கத் தவறியவர்கள். தேவராஜ மார்க்கத்தைத் தீவிரமாகப் பின்பற்றும் நான், காஞ்சியின் மன்னனாக அவனது கோபத்திற்கு ஆளாக விரும்பவில்லை. என்னால் காஞ்சிக்கு மன்னனாக வர இயலாது..!” — சங்கிரமல்லன் கூறியதும், ராஜமல்லனும் எழுந்து நின்றான்.

பல்லவக் குழுவை வெறித்து நோக்கினான். “எனது அண்ணன் சங்கிரமல்லனின் கருத்துதான் எனது கருத்தும். என்னால் காஞ்சிக்கு வர இயலாது” — கண்டிப்புடன் கூற, பல்லவர்களின் மனம் நொறுங்கியது.

கடை மகன் பல்லவமல்லன் எழுந்து நின்றான். அவன்தான் ஏற்கனவே தனது உள்ளக் கிடக்கையை விஜயவிக்கிரமனிடம் தெரிவித்துவிட்டானே. புதிதாக என்ன சொல்லப் போகிறான். அண்ணன்கள் வழியில்

நானும் வரவில்லை என்றுதான் கூறப்போகிறான்! — விக்கிரமன் நினைத்தான்.

பல்லவமல்லன் தனது தந்தையை ஒருமுறை பார்த்துவிட்டு, பிறகு பல்லவத் தூதுக் குழுவினரை நோக்கினான்.

"நான் காஞ்சிக்கு மன்னனாக வருவதற்குச் சித்தமாய் இருக்கிறேன்..!" — தெளிவான குரலில் பல்லவமல்லன் கூறியதும், பல்லவர்களாலேயே தங்களது செவிகளை நம்ப இயலவில்லை.

தன்னை மறந்து விஜயவிக்கிரமன் கேட்டுவிட்டான்.

"இளவரசரின் மனமாற்றத்திற்குக் காரணம் அறியலாமா?"

பன்னிரண்டு பிராயங்களே நிரம்பியிருந்த பல்லவ மல்லன் அவனைப் புன்னகையுடன் பார்த்தான்.

"காரணங்கள் பல உள்ளன..! அவற்றைக் கூறிக்கொண்டு இருந்தால், சித்ரமாயன் தன்னைக் காஞ்சியில் ஸ்திரப்படுத்திக் கொண்டுவிடுவான். எனவே, ஒரு சில காரணங்களை மட்டும் தெரிவிக்கிறேன்.

"ஒன்று... எனது பெயர் பல்லவமல்லன். எனவே பல்லவ மன்னனாகத் திகழ எனது சகோதரர்களைக் காட்டிலும் எனக்கு அதிக உரிமை உண்டு.

இரண்டு... தேவராஜ மார்க்கத்தைச் சேர்ந்த நான், தேவராஜன் உருவான அஸ்வமேத பூமியான காஞ்சியை ஆளுவதில் பெருமிதம் கொள்கிறேன்.

மூன்று... உலகில் இப்போது ஒரே ஒரு தேவ உடும்பர அத்தி மேனிதான் உள்ளது. அதைப் பல்லவம் பறி கொடுத்துவிட்டது. தேவராஜ மார்க்கத்தின் பொக்கிஷ மான அந்தப் பிரதிமையை எங்கிருந்தாலும் தேடிக் கண்டுபிடித்து மீண்டும் ஆராதனைகளைச் செய்ய வேண்டும். அந்த ஆராதனைகள் செய்யப்படாததால்

தான் பல்லவம் தனக்கு ஒரு மன்னனைத் தேடி கடல் கடந்து வந்திருக்கின்றதோ என்னவோ!" — தெளிவாகப் பேசினான், பல்லவமல்லன்.

தங்களுக்கு உரிய மன்னன் அவனே என்று பல்லவர்களும் தீர்மானித்துவிட்டனர்.

"வருங்காலப் பல்லவ மன்னர் தாங்களே, இளவரசர் பல்லவமல்லரே!" ஆலவாயர் உணர்ச்சிவசப்பட்டுக் கூறினார்.

"சற்று பொறு பல்லவமல்லா! உனது விருப்பத்தைத் தெரிவித்துவிட்டாய். அல்லவா! இனி மற்றதை உனது தந்தையும், நானும் பேசிக் கொள்கிறோம்" என்றதுமே பிரச்னைகள் துவங்கிவிட்டன என்பதைப் புரிந்து கொண்டனர் பல்லவர்கள்.

சிம்மவபு எழுந்து மன்னரை நோக்கிப் பணிந்தார். "மன்னா! காம்போஜம் போன்று தீவு இல்லை பல்லவம். பல்லவத்தைச் சுற்றி பறக்கும் வல்லூறுகள் பல உள்ளன. சாளுக்கியம், குந்தளம், கனகம், வாதாபி சாளுக்கியம், சேரம், பாண்டியம் என்று பலர் பல்லவத்தைக் கபளீகரம் செய்யத் துடிக்கின்றனர். நமது பல்லவமல்லர் ஒரு பாலகரே. எனவே அவரைப் பாதுகாக்கவும், வழிநடத்தவும் ஒரு காம்போஜ குழு இளவரசருடன் செல்ல வேண்டும். அவர் பக்குவம் பெற்று, சுயமாகச் சிந்தித்து ஆட்சி செய்யும் காலம் வரை, அந்தக் குழு மன்னருக்கு உதவியாகச் செயல்பட வேண்டும். இதற்குப் பல்லவர்கள் ஒப்புதல் தர வேண்டும்..!" — சிம்மவபு கூற, ஹரிவர்மா, பல்லவக் குழுவை நோக்கினான்.

பல்லவர்கள் அனைவருக்குமே சினம் பொங்கினாலும், விக்கிரமன் மட்டுமே எழுந்து நின்றான்.

"காம்போஜ மன்னரே! ஆட்சி செய்யத் தெரியாமல் நாங்கள் இங்கே வந்து, எங்களுக்கு ஆளுவதற்குச் சொல்லித்தாருங்கள் என்று கேட்கவில்லை. பல்லவ

மகுடத்தைச் சுமப்பதற்கு ஒரு மன்னனின் தலை தேவைப்படுவதால் மட்டுமே இங்கே வந்திருக்கிறோம். எங்களுக்கு மகுடத்தைச் சுமப்பதற்குத் தலையை மட்டும் தாருங்கள். சிந்தையாகச் செயல்படச் சான்றோர்கள் பலர் காஞ்சியில் உள்ளனர். நகரேஷு காஞ்சி என்கிற வழக்கையும், தொண்டை நாடு சான்றோர் உடைத்து என்கிற வழக்கையும் இந்தத் தருணத்தில் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்..!" — விஜயவிக்கிரமன் கூற, சிம்மவபு அவனை உறுத்துப் பார்த்தார்.

"இருக்கலாம்! ஆனால் பல்லவ சரித்திரத்தைக் கவனிக்கும்போது ஆட்சி செய்யத் தெரிந்தும் பல்லவர்கள் பல விவகாரங்களில் முன்னெச்சரிக்கை உணர்வின்றிக் கோட்டைவிட்டிருக்கின்றனர். அத்தி தேவராஜனின் சிலையை மட்டும் நான் குறிப்பிடவில்லை. ஸ்ரீதள மணியைப் பற்றியும்தான் கூறுகிறேன். ஜெயவர்மனை கோட்டைவிட்டதையும் கூறுகிறேன். எங்கள் பழைய மன்னர் சூரியவர்மரின் அரசியார் அவந்திகா, பல்லவர்களின் அபார முன்னெச்சரிக்கை உணர்வினை பற்றி ஒரு நூலாகவே இயற்றியுள்ளார். எனவேதான் கூறுகிறேன்... காம்போஜத்தின் அறிஞர்கள், தேவராஜ மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள், மற்றும் பாதுகாப்புப் படையினர் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்று பல்லவமல்லனைச் சூழ்ந்திருக்கும். இதற்குச் சம்மதம் தெரிவித்தால்தான், எங்கள் பல்லவமல்லரை காஞ்சிக்கு அனுப்புவோம்...!" — உறுதியாகக் கூறிவிட்டார், ஷ்யமந்தகச் சிம்மவபு.

பல்லவர்கள் ஒருவரையொருவர் நோக்கினார்கள். பிறகு ஆலவாயர், எழுந்து மன்னனை பணிந்தார்.

"எங்களுக்குச் சிறிது அவகாசம் வேண்டும்!" — என்று சொல்ல, ஹரிவர்மா அவர்களை நோக்கித் தலை அசைத்தான்.

“தேவையான அவகாசம் எடுத்துக்கொள்ளுங்கள். இது உங்கள் நாட்டின் எதிர்காலம் குறித்த பிரச்னை. எடுத்தோம் கவிழ்த்தோம் என்று முடிவெடுக்க முடியாது..!” — மன்னர் ஹரிவர்மா கூறினார்.

“ஆம் மன்னா! எடுத்தார்கள், கவிழ்த்தார்கள் என்று நிலைமை நிகழாமல் இருக்கத்தான் நான் நமது காம்போஜ குழுவினரை உடன் அனுப்ப வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறேன்!” —நமட்டுச் சிரிப்புடன் சிம்மவபு கூற, அவரை எரித்துவிடுவதைப் போன்று நோக்கிய பல்லவர்கள் எழுந்து நடந்து அவையைவிட்டு வெளியேறினார்கள்.

★ ★ ★

“**கா**ம்போஜ குழுவை பல்லவமல்லருடன் வர அனுமதிப்பது ஆபத்து. நமது பல்லவத்தின் தனித்தன்மை போய்விடும்..!” சுக்கிலமல்லன் கூறினான்.

“ஆனால் வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை. காம்போஜ குழுவினர் உடன் வராமல், பல்லவமல்லனை அனுப்புவார்கள் என்று தோன்றவில்லை..!” — அத்தங்கி கூறினார்.

“வேறு என்ன செய்யலாம்?” — மதுசூதன பண்டிதர் கவலையுடன் கேட்டார்.

ஐவரும் தங்களுக்குள் விவாதித்துக் கொண்டிருக்க, காம்போஜத்தில் பல்லவத் தூதனாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் சம்பூர்ணானந்தர் அவசரமாக உள்ளே நுழைந்தார்.

“என்ன தீர்மானம் செய்தீர்கள்? பல்லவமல்லன்தானே நமது மன்னன்..?” — சம்பூர்ணானந்தர் கேட்க, ஆலவாயர் தனது முகவாயைத் தடவினார்.

“இன்னும் எந்த முடிவுக்கும் நாங்கள் வரவில்லை சம்பூர்ணரே! ஷ்யமந்தகச் சிம்மவபு நமக்கு விதித்திருக்கும் நிபந்தனை எங்களை யோசிக்க வைக்கின்றது.”

"விரைவில் முடிவுக்கு வாருங்கள். நீங்கள் இங்கே இன்னும் காம்போஜ இளவரசரை மன்னராக ஏற்கலாமா கூடாதா என்று யோசித்துக் கொண்டிருக்க, வரப்போகும் காம்போஜ இளவரசனை பாலகன் என்றும் பாராமல் வெட்டி வீழ்த்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உங்கள் வருகைக்காக மாவிலக்கையிலும், மல்லையிலும் சித்ரமாயனின் ஆட்கள் காத்திருக்கிறார்கள். விக்கிர மாதித்யனும், சித்ரமாயனும் பல்லவத்திற்கு மன்னன் கிடைக்கக்கூடாது என்பதில் தீவிரமாக உள்ளனர்." — சம்பூர்ணர் கூற அதிர்ந்து போனார் ஆலவாயர்.

"அப்படியென்றால் நமது பிரயத்தனம் வீண்தான். இங்கிருந்து ஒரு பாலகனை மன்னனாக அழைத்துச் சென்று, அவனது உயிருக்கு உலை வைப்பானேன்? பல்லவமல்லனை அழைத்துச்சென்று அவனது உயிருக்குத் தீங்கு நேர்ந்தால் நாளை காம்போஜத்திற்கு நாம் பதில் கூற வேண்டியிருக்கும் அல்லவா! மன்னனைத்தேடும் பணியைச் சற்றே நிறுத்தி வைக்க வேண்டியதுதான்," — காஷ்யப சதகரணி கூறினார்.

"ஆம்! அப்படித்தான் செய்ய வேண்டும்!" மதுசூதன பண்டிதர் கூறிய அதே சமயம், ஆலவாயர் சரிந்திருந்த மஞ்சத்தின் அடியில் இருந்து ஒரு சிறிய உருவம் தவழ்ந்து வந்தது.

குறும்புடன் அறையில் குழுமியிருந்தவர்களை நோக்கிச் சிரித்தபடி எழுந்து நின்றது அந்த உருவம்.

பல்லவ மல்லன்!

"பல்லவத்திற்குப் பயணிக்க நான் தயார். எனது குரு எனக்குப் போதித்திருக்கிறார். ஆபத்துகளை அதிகம் சந்திப்பவர்களின் பக்கமாகத்தான் தேவராஜன் நிற்பானாம். எனவே, தேவராஜனின் அருள்பெற வேண்டி யாவது நான் ஆபத்துகளைச் சந்தித்தே தீர வேண்டும். பல்லவ மன்னனாக அரியணையில் அமருவதற்கு நான்

தயாராகிவிட்டேன். எனக்குப் பல்லவ கடற்கரையில் ஆபத்துக் காத்திருக்கிறது என்கிற தகவலை எனது பெற்றோரிடம் தெரிவிக்க வேண்டாம். பிறகு என்னை உங்களுடன் அனுப்புவதற்கு மறுப்பார்கள். குறிப்பாக எனது தாய் அரசியார் விதரணாதேவியின் செல்ல மகன் நான்! எனவே, நான் உங்களுடன் வரவேண்டும் என்றால் அமைதியாக இருங்கள்..!"

பல்லவமல்லன் சிரித்தபடி அந்த அறையின் வாயிலை நோக்கி நகர்ந்தவன், வெளியே செல்வதற்காகக் கதவைத் திறந்தான். வெளியேறுவதற்கு முற்பட்ட பல்லவமல்லன், கதவை பற்றியபடி பல்லவக் குழுவினரைத் திரும்பி நோக்கினான்.

"தொண்டையர் திலகங்களே. இன்னும் ஒரு விஷயம். இரகசிய ஆலோசனைகளைத் துவக்குவதற்கு முன்பாக ஒருமுறை அறையை நன்கு சோதனையிட்டுவிட்டு, பிறகே உங்களது ஆலோசனைகளை மேற்கொள்ளுங்கள். நான் இன்னும் காம்போஜ இளவரசன்தான். பல்லவ மன்னன் இல்லை. உங்களுக்கு முன்னெச்சரிக்கை உணர்வு தேவை. அது இல்லாத காரணத்தால்தான், தேவராஜனின் சிலையையே பறிகொடுத்து, பரிதவித்து நிற்கின்றீர்!" என்றவன் தனது பின்பாகக் கதவை மூடிவிட்டுச் சென்றான்.

பல்லவக் குழுவினர் அனைவரும் விக்கித்துப் போய் அமர்ந்திருந்தனர். பன்னிரண்டு வயது பாலகனாகவா உரையாற்றினான் பல்லவமல்லன்! என்ன ஒரு கம்பீரம்.. என்ன ஒரு அறிவுக்கூர்மை..!

நந்திவர்மனின் கைகளில் தொண்டை நாடு பத்திரமாக இருக்கும் என்பது மட்டும் அவர்களுக்கு நன்கு புரிந்து போனது.

# 12. காளையைச் சுற்றிய ஓநாய்கள்

**கா**ஞ்சியின் ஒத்தாடை மாளிகை.

அடைக்கலம் தேடி ஒண்டுவதற்கு வந்த பிடாரி, அடைக்கலம் தந்த ஊர்ப் பிடாரியை விரட்டிய கதையாக, சாளுக்கிய விக்கிரமாதித்யன் தனது பிரதிநிதியாகச் சித்ரமாயனை காஞ்சி அரியணையில் அமர்த்தியிருந்தான்.

சிம்மவர்மனின் பரம்பரை அவனுக்குப் பிறகு சிம்மவிஷ்ணுவில் துவங்கி இரண்டாம் பரமேஸ்வர வர்மனுடன் முடிந்து போனதை எண்ணி காஞ்சியின் சான்றோர் பெரும் வருத்தத்தில் ஆழ்ந்திருந்தனர். சிம்மவிஷ்ணுவின் தம்பிகளில் ஜெயவர்மன் புத்த துறவியாகச் சீனத்திற்குச் சென்றுவிட்டான். அவனது குலம் வளரவில்லை. காடவேசன் பீமவர்மனுக்கோ ஒரே மகள் பிறந்து, அவளும் உறையூர் சோழன் ஒருவனை மணந்து கொண்டாள். இந்நிலையில் காம்போஜம் சென்றிருக்கும் தண்டநாயகர் ஆலவாயர் தலைமையிலான பல்லவக் குழு, காம்போஜ இளவரசன் ஒருவனைத் தங்களது மன்னனாக அழைத்து வருவார்கள் என்கிற நம்பிக்கையுடன் காத்திருந்தனர்.

காம்போஜ இளவரசனை அழைத்து வர பல்லவக் குழுவினர் காம்போஜம் சென்றிருப்பதைச் சித்ரமாயன் விக்கிரமாதித்யனுக்குத் தெரிவிக்க, உடனே விழித்துக் கொண்டான், விக்கிரமாதித்யன்.

பல்லவம் இனி சாளுக்கியத்தின் நிழலாகத்தான் இருக்க வேண்டும். சாளுக்கியச் சூரியனிடம் இருந்து

ஒளியைப் பெறும் நிலவாகத்தான் பல்லவம் திகழ வேண்டும். அதற்குச் சித்ரமாயன்தான் தகுந்த அஸ்திரம்.

விக்கிரமாதித்யன் தனது இரு மனைவியர் — லோக மாதேவி மற்றும் திருலோகமாதேவி இருவருடனும் காஞ்சிக்கு வந்தான். ஒத்தாடை அரண்மனையில் தங்கிய அவர்கள், பகல் பொழுதினில் காஞ்சியின் ஆலயங்களை வலம் வந்தனர்.

இரவு வந்ததும், சித்ரமாயனும், விக்கிரமாதித்யனும் தங்களது சதியாலோசனைகளைத் துவக்கினர்.

"பல்லவம் இனி மீண்டும் தலை தூக்கக்கூடாது. அதற்கு என்ன செய்யலாம்? சித்ரமாயன் இனி மன்னனாக நிரந்தரமாக நீடிக்க வேண்டும்!" — விக்கிரமாதித்யன் கூறினான்.

விருபாக்ஷன் என்கிற விக்கிரமாதித்யனின் ஆலோசகன் எழுந்து நின்றான்.

"அரசே! பல்லவ மன்னன் அவனிசிம்மனுக்கும், வித்யுதா என்கிற சாளுக்கிய நாட்டியத் தாரகைக்கும் பிறந்த குணபரன் என்கிற பிரமதி சாளுக்கிய அமைச்சர் கல்யாணதேவரின் மகள் வசந்தமாலினியை மணம் செய்து கொண்டான். அவர்களுக்கு வீராதித்யன் என்கிற மகன் பிறந்தான். அவனது வழித்தோன்றல்தான் சித்ரமாயன் என்று அறிவிக்க வேண்டும்! அவனிசிம்மன் என்கிற சிம்மவிஷ்ணு பல்லவனின் ரத்தம் சித்ரமாயனின் உடலில் பாய்கிறது. காம்போஜ இளவரசனைக் காட்டிலும் அரியணையில் அமருவதற்குச் சித்ர மாயனுக்கே அதிக உரிமை உண்டு என்பதை ஒரு அறிவிப்பாகத் தண்டோரா இட்டு வெளியிடுவோம். இந்த அறிவிப்பின் மூலம், பல்லவ மக்களின் ஆதரவு பிளவுபடும். காம்போஜ இளவரசனைக் காட்டிலும், சித்ர மாயனுக்கு அதிக ஆதரவு கிடைக்கும். மன்னர் சிம்மவிஷ்ணுவை இன்னும் மக்கள் மறக்கவில்லை..!" — விருபாக்ஷன் கூற, விக்கிரமாதித்யன் தன்னை மறந்து தனது கைகளைத் தட்டி ஒலி எழுப்பினான்.

"சபாஷ் விருபாக்ஷா! நல்ல திட்டம்! அவனிசிம்மனின் வழித்தோன்றல் சித்ரமாயன்தான் இனி நிரந்தர மன்னன் என்பதனை அறிவிப்போம். பல்லவம் இனி சாளுக்கியத்தின் ஏவலாளாகத் திகழும்!" — விக்கிரமாதித்யன் குதூகலித்தான்.

"இன்னும் ஒரு யோசனை அரசே! பல்லவத்திற்கு மன்னன் இல்லாத இந்தச் சூழ்நிலையில், பல்லவம் கைப்பற்றியுள்ள சோழ நாட்டுப் பகுதிகளைக் குறி வைத்து மாறவர்ம பாண்டியனும் காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறான். சேர மன்னன் *வில்லாளன் கோதை மார்பனும் பல்லவர்களுக்கு எதிராகப் படைகளைத் திரட்டிக்கொண்டிருக்கிறான். சேர மன்னனுக்கு ஆதரவாகச் சபர மன்னன் உதயணனும் களத்தில் குதித்திருக்கிறான்! பாண்டியன் மாறவர்மன், சேர மன்னன் வில்லாள கோதையன் மற்றும் சபர உதயணன்

---

* சேர மன்னன் வில்லாள மாகோதையார் என்ற சேரமான் பெருமாள் திருவஞ்சைக் களத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட காலத்தில் சேர நாட்டை 12 (ஸ்வரூபம் = சுதந்திர நாடு) பிரிவுகளாகப் பிரித்து 12 மன்னர்களிடம் (குறுநில மன்னர்கள்) பிரித்து வழங்கப்பட்டது. அவை:

| | ஸ்வரூபம் பெயர் | தற்போதைய பகுதி |
|---|---|---|
| 1 | நெடியிருப்பு | கோழிக்கோடு |
| 2 | ஆரங்கோடு | வள்ளுவநாடு |
| 3 | பெரும்படப்பு | கொச்சி |
| 4 | திருப்பாப்பூர் | திருவிதாங்கூர் |
| 5 | குறும்பியாதிரி | குறும்ப நாடு |
| 6 | புறநாட்டுக்கரை | கோட்டையம் |
| 7 | கோளத்திரி | சிரக்கல் |
| 8 | போர்ளாத்திரி | கடத்த நாடு |
| 9 | தரூர் | பாலக்காடு |
| 10 | பாப்புக்கோயில் | பெய்ப்பூர் |
| 11 | பரப்புக்கோயில் | பரப்ப நாடு |
| 12 | சபர நாடு | சபரி மலைப்பகுதி |

ஆகிய மூவரும் அணி சேர்ந்து பல்லவர்களைத் தாக்க நினைக்கின்றனர். நாம் அவர்களுடன் சமரசம் செய்து கொண்டு தொண்டை நாட்டை நமக்குள் கூறு போட்டுக் கொள்வோம். பல்லவத்தின் சோழப் பகுதிகளைப் பாண்டியன் எடுத்துக்கொள்ளட்டும். பல்லவத்தின் கொங்கு பகுதிகளைச் சேரன் எடுத்துக்கொள்ளட்டும். காஞ்சியையும், வடபல்லவத்தையும் சாளுக்கியம் எடுத்துக் கொள்ளலாம். நமது பல்லவ மன்னனாகச் சித்ரமாயன் நீடிப்பார்..!" — விருபாக்ஷன் கூறியதும், உற்சாக மிகுதியால் தனது ஆசனத்தைவிட்டு எழுந்த விக்கிரமாதித்யன் தான் அணிந்திருந்த முத்துமாலையைக் கழற்றி விருபாக்ஷனுக்கு அணிவித்தான்.

"விருபாக்ஷா! விஷ்ணு சக்கரத்தைக் காட்டிலும் வேகமாகச் சுழல்கின்றது உனது சிந்தை. நீ கூறியது மிக அற்புதமான திட்டம். சாளுக்கியம் பல்லவக் காளையைக் கொன்று தனக்குத் தேவையான அளவுக்கு அதன் மாமிசத்தை உண்டுவிட்டு நகர்ந்ததும், குள்ள நரிகள் மிகுதியை உண்பது போன்று, பாண்டியர்களும், சேரர்களும் பல்லவத்தை உண்ணட்டும். உடனேயே இந்தத் திட்டத்தை நாம் செயல்படுத்துவோம்! அதற்கான ஏற்பாடுகளில் உடனே இறங்கு!" — விக்கிரமாதித்யன் கூறினான்..

ஒத்தாடை அரண்மனையின் வளாகத்தில், ஒத்தாடை யான் ஆலயத்திற்குப் பக்கலில் பெரிய மேடை ஒன்று அமைக்கப்பட, பொதுமக்கள் திரட்டப்பட்டு மேடையைச் சுற்றி அமரவைக்கப்பட்டனர். காஞ்சியின் சான்றோர்கள் ஒரு பக்கம் அமரவைக்கப்பட்டிருந்தனர்.

தாங்கள் இன்ன காரணத்திற்காக வரவழைக்கப் பட்டிருக்கிறோம் என்பது புரியாமல் சான்றோர்களும், மக்களும் அமர்ந்திருந்தனர்.

"அவனிசிம்மன் என்கிற சிம்மவிஷ்ணு பல்லவனுக்கும், வித்யுதா என்கிற சாளுக்கிய ஸ்திரீரத்னத்திற்கும் நிகழ்ந்த

காந்தர்வ விவாகத்தில் உதித்த குணபர பிரமதி, சாளுக்கிய அமைச்சர் கல்யாண தேவரின் மகள் வசந்தமாலினியை மணந்து அவர்களுக்கு வீராதித்யன் என்கிற மகன் பிறந்தான். வீராதித்யரின் மகன் கிருஷ்ண வதனனின் மகன்தான் சித்ரமாயன். ஆக, அவனிசிம்ம பல்லவரின் ரத்தம் அவரது தேகத்தில் ஓடுகிறது. எனவே தற்போது பல்லவ காஞ்சியில் சாளுக்கிய பிரதிநிதியாகத் திகழும் *சித்ரமாயன் பல்லவ மன்னனாக விரைவில் பதவி ஏற்பான்!" —விக்கிரமாதித்யன் அறிவித்ததும், "ஹா..!" என்று ஆங்காங்கே கூக்குரல்கள் எழும்பின.

மக்கள் திகைப்புடன் "இது என்ன புதுக் கதை!" என்று இரகசியமாக ஒருவருக்கொருவர் வினவ, விருபாக்ஷன், பாண்டிய மன்னன் மாறவர்மனையும் சேர மன்னன் வில்லாளன் கோதை மார்பனையும் சந்திப் பதற்காகப் புறப்பட்டுச் சென்றான். பாண்டியர்களுக்கும், சேரர்களுக்கும் சாளுக்கியத்தின் திட்டம் பிடித்துப் போக, அங்கே பல்லவத்திற்கு எதிராக அனைவரும் ஒன்று சேர்ந்தனர்.

சோழம் குறுநில உறையூரில் அப்போது ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தது.. தனித்து விடப்பட்ட பல்லவம் பரிதவித்துக் கொண்டிருந்தது. கங்க நாடும் பல்லவத்திற்கு எதிராகப் பழைய விரோதங்களைப் புதுப்பித்துக் கொண்டது. பாலகனான பல்லவமல்லன் எங்ஙனம் காஞ்சியில் காலடி வைக்கப்போகின்றான்? அவனைக் கண்டதும் வெட்டிப்போடும்படி சித்ரமாயன் கட்டளையிட்டிருக்கின்றானே!

---

* காஞ்சிக்கு தனது இரு மனைவியருடன் வந்த விக்கிரமாதித்யன், ராஜசிம்மன் கட்டிய கைலாசநாதர் கோயிலைக் கண்டு மிகவும் வியந்தான். சாளுக்கிய பிரதிநிதியாகத் திகழ்ந்த சித்ரமாயனை அவனிசிம்மன் வழி வந்தவன் என்று கூறி மன்னனாக அறிவிக்க முயற்சி செய்தான். காம்போஜத்தில் இருந்து காஞ்சியின் தண்டநாயகர்கள் அழைத்து வந்த நந்திவர்மன் பெரும் போராட்டத்திற்குப் பிறகே மன்னன் ஆக முடிந்தது.

## 13. நந்திபுரத்தில் மங்கையர்கோன்

'நந்தினி' என்கிற அந்தக் கலம் மாவிலக்கையை நோக்கிப் புறப்பட்டது. மன்னன் ஹரிவர்மா, அரசியார் விதரணா தேவி, இளவரசர்கள் சத்திரியமல்லன், சங்கிரமல்லன் மற்றும் ராஜமல்லன், ராஜகுரு ஷியமந்தகச் சிம்மவபு என்று அனைவருமே பல்லவமல்லனை வழியனுப்புவதற்கு வந்திருந்தார்கள்.

பல்லவமல்லனை தங்களது மன்னராகத் தேர்ந் தெடுத்து காஞ்சிக்கு அழைத்துச் செல்ல இருப்பதாக ஆலவாயர் மறுநாள் அரசவையில் அறிவித்ததும், மன்னர் தலையசைத்து தனது சம்மதத்தைத் தெரிவித்ததும்தான் தாமதம் —

"அடியேனுடைய நிபந்தனைகளைப் பற்றி என்ன முடிவு செய்திருக்கிறீர்கள்?" என்று எழுந்து நின்றார், சிம்மவபு.

ஆலவாயர் அவரை எச்சரிக்கையுடன் நோக்கிவிட்டு மன்னரிடம் வேண்டுகோளினை முன்வைத்தார்.

"ஆச்சார்யர் சிம்மவபுவின் நிபந்தனைகளை ஏற்கின்றோம். ஆனால் இப்போது பல்லவமல்லரை மட்டுமே நாங்கள் அழைத்துச் செல்ல விரும்புகின்றோம். பல்லவ மல்லருடன் காம்போஜத்தின் பெரும் படையே காஞ்சியில் வந்து இறங்கினால் பல்லவ மக்களிடையே சில ஐயங்கள் எழலாம். எனவே, பல்லவமல்லரின் பட்டாபிஷேகத்திற்குப் பிறகு காம்போஜத்தின் குழுவை காஞ்சிக்கு அனுப்ப வேண்டுகிறோம்!" — ஆலவாயர் கூறியதும், சிம்மவபு ஆட்சேபம் தெரிவிக்கும் விதமாக

ஏதோ கூறத்துவங்க, மன்னன் ஹரிவர்மா அவரை இடைமறித்தான்.

"அப்படியே ஆகட்டும், ஆலவாயரே! பல்லவமல்லரின் காஞ்சி பயணத்திற்கு அனைத்து ஏற்பாடுகளும் துரிதமாக நடைபெறட்டும்!"

ஹரிவர்மா அந்த விவாதத்திற்கு ஒரு முற்றுப் புள்ளியினை வைத்திருந்தான். பல்லவமல்லன் நந்தினி கலம் ஏறுவதற்கு முன்பாக அவனது தாய் விதரணா அவனை அணைத்து உச்சி முகர்ந்தாள்,

"பல்லவமல்லா! நமது மூதாதைய நாடு பல்லவம். உனது அண்ணன் காம்போஜத்தையும், நீ பல்லவத்தையும் ஆளப்போகின்றீர்கள். இது நமது குலத்தந்தை அஸ்வத்தாமாவின் திருவுள்ளம்தான். நன்றாக ஆட்சி செய்து கீர்த்தியுடன் விளங்குவாய். அஸ்வமேத யாகப் பூமியான காஞ்சி நகரத்தில்தான் நமது தேவராஜன் தோன்றினான். அந்த பூமியை நீ ஆளப்போகின்றாய். சிந்தித்துச் செயல்படு. தேவராஜ மார்க்கத்தின் மூல வித்து தேவ உடும்பர அத்திமர சிலை. அதனை எங்கிருந்தாலும், தேடிக் கண்டுபிடித்து மீண்டும் அத்திமலை ஆலயத்தில் பிரதிஷ்டை செய். இது நமது தேவராஜ மார்க்கத்திற்கும், காம்போஜத்திற்கும், உனது குலத்தந்தை அஸ்வத்தாமாவிற்கும் நீ செய்யும் கடமை..!" — விதரணா கூற தலையசைத்தான், பல்லவமல்லன்.

நந்தினி கலம் கம்போடிய கரையைவிட்டு தெற்காகப் புறப்பட்டது காம்போஜத்தின் தெற்கு எல்லையில் மேகமலையின் உச்சியில் *தேவராஜனின் ஆலயம் முகில்களின் ஊடே தென்பட்டது.

---

* தற்போதைய கம்போடியாவின் தெற்கு எல்லையில் உள்ள Phnom Penh ஆலயம். மூன்றாம் பாகத்தில் இதனைப் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. பென் என்கிற மூதாட்டி, கடலில் மிதந்து வந்த ஜெயவர்மனின் சிலையை மேகமலையின் உச்சியில் நிறுவினாள். தேவராஜ விஷ்ணுவின் இந்த ஆலயத்தைத் தற்போது Wat Phnom ஆலயம் என்று அழைக்கின்றனர்.

"அதோ தேவராஜன் ஆலயம். இளவரசர் ஜெயவர்மர் கொண்டு வந்த அத்திமர சிலை."

"வருங்காலப் பல்லவ மன்னனாக அரியணை ஏறப் போகிறாய். ஜெயவர்மரின் ஆசியைப் பெற்றுக்கொள்!" — காஷ்யப அத்தங்கி கூற, பல்லவமல்லன் அந்த ஆலயத்தை நோக்கிக் கரங்குவித்தான்.

பல்லவம் செல்லும் கலங்கள், மேகமலை தென் பட்டதும் மேற்கே திரும்பி, மாவிலக்கை கடற்கரையை நோக்கிச் செல்ல வேண்டும். காம்போஜத்திலிருந்து காஞ்சி நேர்கோட்டில் இருந்தாலும், ஐராவத மலைத் தொடரினைக் கடப்பதற்காகத் தெற்கே பயணித்து, மேகமலையைக் கடந்து மேற்கே திரும்ப வேண்டும்.

ஆனால், மேகமலையைக் கடந்தும், நந்தினி கலம் மேற்கே திரும்பாமல் தொடர்ந்து தெற்கே சென்று கொண்டிருந்தது.

ஆலவாயர் திகைப்புடன் விஜயவிக்கிரமனை நோக்கினார். "நமது கலம் ஏன் மேற்கே திரும்பாமல் இன்னும் தெற்கை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது..?"

விஜயவிக்கிரமன் பல்லவமல்லன் கேட்கக்கூடாது என்பதற்காக அவரது செவிகளில் கிசுகிசுத்தான்.

"இது எனது ஏற்பாடுதான். நாம் மாவிலக்கைக்குச் செல்லவில்லை. அங்கே பல்லவமல்லரைக் கொல்வதற்காகச் சதியாளர்கள் திரிகின்றனர். நாம் இப்போது நாகை துறைமுகத்திற்குப் போகிறோம்!" — விக்கிரமன் கூற, சதகரணி கவலையுடன் அவனைப் பார்த்தார்.

"நாகைக்கா? அங்கிருந்து காஞ்சிக்கு எப்படிப் போவது?"

"நாம் இப்போதைக்குக் காஞ்சிக்குச் செல்லப் போவதில்லை. பல்லவமல்லரை நாம் ஒரு பாதுகாப்பான

*இடத்தில் தங்க வைக்க உள்ளோம். அங்கிருந்து சித்ரமாயனுக்கு எதிராக மக்களைப் பொங்கி எழ வைத்து நமது பல்லவமல்லரை மக்கள் ஆதரவோடு அரியணையில் அமர்த்தப் போகிறோம்..!" — விஜய விக்கிரமன் கூறினான்.*

*"அதுவரை பல்லவமல்லரை எங்கே தங்க வைப்பது?" — சுக்கிலன் கேட்டான்.*

*"அதனை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். பல்லவரின் பாதுகாப்புப் பணிகள் மட்டுமே அடியேனுடையது..!" — விஜயவிக்கிரமன் கூறினான்.*

*சதகரணி யோசனையில் ஆழ்ந்தார்.*

*"திருநாகையிலிருந்து காஞ்சிக்கு எப்படிச் செல்வது?" — சதகரணி கேட்க, ஆலவாயர் மௌனம் சாதித்தார்.*

*மதசூதன பண்டிதர் சற்றே தயக்கத்துடன் மற்றவர்களை நோக்கினார்.*

*"எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. பல்லவ மல்லரை அழைத்துக்கொண்டு எனது கிராமமான *நந்திபுரத்திற்குச் சென்றுவிடுவோம். காஞ்சியில் நிலைமை மாறும்வரை அவர் நந்திபுரத்தில் எனது*

* நந்திபுரம் சோழ நாட்டின் மிக முக்கியமான ஊர். இங்கு ஜகன்னாத பெருமாளுக்கு ஒரு விண்ணகரம் உள்ளது. பிற்காலத்தில் அநிருத்த பிரம்மராயர் பிறந்த ஊர். அதற்கு முன்பாகவே நந்திபுரத்தில் பிரம்மராயர்கள் என்கிற அந்தணர்கள் வசித்தனர். மதுசூதன பண்டிதரும் பிரம்ம ராயர்தான். அவரது மாளிகை ஜகன்னாதரின் ஆலயத்தின் முன்பாக இருந்தது. இந்த ஆலயத்தில் தங்கி இருந்த பல்லவமல்லனைக் பாண்டியர்களும், சேரர்களும் சுற்றி வளைத்தனர். பல்லவமல்லனைக் காப்பாற்றியது நீலன் என்கிற சோழனின் சிற்றரசன். தளபதியாக இருந்த நீலன், பரகாலன் என்கிற திருமங்கை சிற்றரசுக்கு மன்னனாகத் திகழ்ந்து பிறகு திருமங்கை ஆழ்வாராக மாறினார். இப்போது நந்திபுர விண்ணகரம், நாதன் கோயில் என்று அழைக்கப்பட்டு வருகிறது.

மாளிகையிலேயே தலைமறைவாக இருக்கட்டும். காலம் கனியும்போது பல்லவமல்லரை காஞ்சிக்கு அழைத்துச் செல்வோம். அதுவரை அவர் நந்திபுரத்திலேயே தங்கியிருக்கட்டும்..!" — மதுசூதன பண்டிதர் கூறினார்.

"மிகவும் நல்ல யோசனை..!" — என்ற விஜயவிக்கிரமன், கலத்தின் கீழே அவசரமாக விரைந்து, துணி மூட்டை ஒன்றை கொண்டு வந்தான்.

"என்ன இது?" — காஷ்யப சதகரணி கேட்டார்.

"பல்லவமல்லரை இப்படியே அழைத்துச் செல்வது ஆபத்து. அவருடைய நிறமும் வடிவழகும் அவர் காம்போஜத்தைச் சேர்ந்தவர் என்பதை உணர்த்திவிடும். எனவே, பல்லவமல்லரை மாறுவேடத்தில் நந்திபுரம் அழைத்துச் செல்வோம். மதுசூதன பண்டிதரைக் கண்பார்வை இல்லாத ஒரு முதியவராகவும், அவரது கைத்தடியைப் பற்றி வழிநடத்தி அழைத்துச் செல்லும் சிறுவனாகப் பல்லவமல்லன் சென்றால் யாருக்கும் ஐயம் எழாது..!" — விக்கிரமன் கூற, அனைவருக்கும் அதுவே சிறந்த யோசனையாகத் தோன்றியது.

நந்தினி கலம் நாகையை நெருங்கிக் கொண்டிருக்க, சித்ரமாயனின் ஆட்கள் நாகை துறையில் இருக்கக்கூடும் என்பதை யூகித்த விஜயவிக்கிரமனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

தொலைவில் கரை தென்படத்துவங்கியதுமே, ஒரு சிறு தோணியைக் கலத்திலிருந்து இறக்கி, அதில் பல்லவ மல்லனையும், மதுசூதன பண்டிதரையும் இறங்கச் செய்தான்.

"நாகையின் தெற்கில் அடர்ந்த காடுகள் உள்ளன. நீங்கள் அந்தக் காட்டினுள் நுழைந்து நந்திபுரத்திற்குச் சென்றுவிடுங்கள். உங்கள் மாளிகையிலேயே பல்லவ மல்லன் இருக்கட்டும். காலம் கனியும்போது அவரைக் காஞ்சிக்கு வரவழைத்துக் கொள்கிறோம்!" — ஆலவாயர்

கூற, பண்டிதரும், பல்லவ மல்லனும் தோணியில் இருந்து இறங்கினர். நாகையின் அடர்ந்த காட்டுப்பகுதியை நோக்கி தோணியைச் செலுத்தத் துவங்கினார், பண்டிதர்.

பல்லவ மல்லனுக்கு மனத்தில் ஒருவித உற்சாகமும், ஆவலும் ஏற்பட்டுவிட்டன. தான் இதுவரை பார்த்தே இராத ஒரு நாட்டினுள் காலடி வைப்பதற்குள், தான் பார்த்தே இராத எதிரிகள் தன்னைக் கொலை செய்வதற்காகக் காத்திருக்கிறார்கள் என்கிற செய்தி அந்தப் பன்னிரண்டு வயது பாலகனின் இதயத்தில், தான் ஏதோ வீர விளையாட்டு ஒன்றை விளையாடிக் கொண்டிருக்கும் எண்ணத்தை ஏற்படுத்தியது.

தொலைவில் தெரிந்த நாகைக் கடற்கரையைப் பல்லவ மல்லன் வெறித்துப் பார்க்க, அவன் அச்சப்படுவதாக நினைத்த மதுசூதன பண்டிதர், அவனை ஆறுதலுடன் பார்த்தார்.

"பயப்படாதீர்கள் பல்லவ மல்லரே! உயிரைக் கொடுத்தாவது உங்களைக் காப்பாற்றுவோம்!" — பண்டிதர் கூறினார்.

பல்லவமல்லன் கலகலவென்று சிரித்தான்.

"உங்கள் பல்லவ மன்னர் இரண்டாம் பரமேஸ்வர வர்மரை, சாளுக்கியருடன் நிகழ்ந்த போரில் உயிரைக் கொடுத்து காப்பாற்றி இருந்தீர்களானால், இங்ஙனம் மன்னரைத் தேடி காம்போஜத்திற்கு வந்திருக்கவே வேண்டாமே..! ஆகவே, நீங்கள் என்னைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. என்னைக் காப்பாற்றிக் கொள்ள எனக்குத் தெரியும்!" —பல்லவமல்லன் கூற அதிர்ந்து போனார், பண்டிதர்.

பன்னிரண்டு வயது பாலகனின் பேச்சா இது? ஒரு மன்னனைப் போன்று அல்லவா இப்போதே நடந்து கொள்கிறான்..! அதன் பிறகு பண்டிதர் மௌனமாகவே தோணியைச் செலுத்த, அவர்கள் கரையை அடைந்தனர்.

கரையை அடைந்ததும், தோணியில் இருந்து குதித்த பண்டிதர், அதனை மேடான மணல் பகுதிக்கு இழுக்க, பல்லவ மல்லனும் மணல் மேட்டினில் குதித்தான்.

"இனி தொடங்குகிறது நமது விளையாட்டு அல்லவா பண்டிதரே?" — பல்லவமல்லன் கேட்க, தலையசைத்தார், பண்டிதர்.

கதிரவன் மேற்கே இறங்கிப் போக, இரவு படர்ந்து கொண்டிருந்தது. தொலைவில், நாகை துறைமுகத்தில் தீப்பந்தங்களும், எண்ணைக் கப்பரைகளும் ஒளிர்ந்து கொண்டிருக்க, பண்டிதரும் பல்லவமல்லனும் காட்டினுள் பிரவேசித்து, மேற்கே நடக்கத் தொடங்கினர்.

"பல்லவ மல்லரே! நாம் வெகு தொலைவு நடக்க வேண்டும். இரவெல்லாம் நடந்தால்தான் குடந்தையருகே உள்ள நந்திபுரத்திற்கு விரைந்து செல்ல முடியும்..! உங்களுக்கு ஆயாசமாக இருந்தால் சற்றே இளைப்பாறி விட்டுச் செல்லலாம்!" — பண்டிதர் கூற, அவரை அலட்சியமாக நோக்கினான், பல்லவமல்லன்.

"என்னை அரியணையில் அமர்த்துகிறேன் என்று சொல்லி அழைத்து வந்திருக்கிறீர்கள். நான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் பல்லவ அரியணையை நோக்கித்தான் வைக்கிறேன். அரியணையில் அமரும் வரை எனக்கு ஓய்வு கிடையாது. தொடர்ந்து செல்வோம்!" — பல்லவமல்லன் கூற, மனதினுள் எழுந்த வியப்பினை கட்டுப்படுத்தியபடி மதுசூதனர் தொடர்ந்து நடக்கத் துவங்கினார்.

சூரியன் மறைந்ததும், இரவுப் பறவைகள் கூடுகளி லிருந்து வெளிவந்து தங்கள் சாம்ராஜ்யத்தைத் துவக்கின. கரிய ஆந்தை ஒன்று மரக்கிளை ஒன்றில் அமர்ந்து தனது வட்டமான கண்களால் இவர்களை நோக்கியது. திடீரென்று, தனது கூர்மையான அலகினைத் திறந்து கூவ ஆரம்பிக்க, அதனைக் கேட்டு பண்டிதர் திகைத்தார்.

'இதென்ன! முதன்முறையாக நாகையில் காலடி எடுத்து வைக்கிறான், பல்லவமல்லன். இந்த வேளை பார்த்தா ஆந்தை அலற வேண்டும்?' — பண்டிதர் நினைக்க, பல்லவமல்லன் சற்றே நின்று அந்த ஆந்தையை உறுத்து நோக்கினான்.

"பண்டிதரே! ஆந்தை அறிவுள்ள பறவை அல்லவா? லட்சுமிதேவியின் வாகனம் அல்லவா?" — பல்லவமல்லன் கேட்டான்.

"ஆம் மல்லரே! ஆந்தை கூவுவதை அபசகுனமாகக் கருத வேண்டாம்! நல்லதே நடக்கும்!" — பண்டிதர் அவனுக்கு ஆறுதல் கூறினார்.

"அபசகுனமா? எங்கள் ஐராவத மலையில், ஆந்தை கூவினால், பெரும் பாக்கியமாகக் கருதுவார்கள். நான் உங்கள் மண்ணில் காலடி எடுத்து வைத்ததும், ஆந்தை கூவுவதால், நான் அதனை பாக்கியமாகவே கருதுகிறேன். நீண்ட நாட்கள் பல்லவ மன்னனாக நான் ஆட்சி செய்வேன்..!" — பல்லவமல்லன் தொடர்ந்து நடக்க, அவரைப் பின்தொடர்ந்தார் பண்டிதர்.

'வினோதமான பிள்ளைதான்! ஆனால் இவனைப் பார்த்தால் பெரியோர்கள் சொல்வதைக் கேட்டு ஆட்சி செய்வான் என்றே தோன்றவில்லையே. தன்னிச்சையாக ஆட்சி செய்யத் துவங்கினால் அது பல்லவத்திற்குக் கேடாக அல்லவா முடியும்..? இவனை விட்டுதான் பிடிக்க வேண்டும். போதாத குறைக்கு, பல்லவமல்லன் பதவி ஏற்றதும் காம்போஜத்திலிருந்து ஷ்யமந்தகச் சிம்மவபுவின் தலைமையில் ஆலோசனைக் குழாம் வந்து அவனைச் சூழ்ந்துகொள்ளும். தங்கள் மனிதர்களின் சொல்லைத்தானே பல்லவமல்லன் கேட்பான்?'

யோசனையுடன் பண்டிதர் நடக்க, திடீரென்று அந்தக் கேள்வியைக் கேட்டான், பல்லவமல்லன்.

“கடைசியாக, தேவ உடும்பர அத்திமர மேனியான் தேவராஜனை யார் பார்த்தார்கள்..? எங்கே பார்த்தார்கள்?” — பல்லவமல்லனின் குரலில் ஆர்வம் கொப்பளித்தது.

“மன்னர் நரசிம்ம பல்லவர் அதனைக் குணம்குன்றம் என்னும் பகுதியில் உள்ள ஆதிநாராயணப் பெருமாள் ஆலயத்தின் நீர்த்தொட்டியில் கண்டெடுத்தார். அதனை எழுமால் கோயில்களில் ஒன்றாக வள்ளூர் என்கிற கடற்கரைப் பிரதேசத்தில் ஜலசயன பெருமாளாகப் பிரதிஷ்டை செய்தார். பிரதிஷ்டை செய்த ஏழாம் நாள் ஆழிப்பேரலை பொங்கி எழ, ஆலயங்கள் நீரின் அடியில் மூழ்கின. பின்னர் ஒரு நாள், அத்திமலைத்தேவனின் சிலையை நீரிலிருந்து எடுப்பதற்குப் பிரயத்தனம் செய்த போது, நீரின் அடியே சிலை இல்லை. பல்லவர்களின் எதிரி சாளுக்கியர்களின் உதவியோடு நரசிம்ம பல்லவனின் எதிரி மகாமல்ல எதி என்பான் அதனை மறைத்துவிட்டான். மகாமல்ல எதியும் கொல்லப்பட்டு விட்டதால், அவன் தேவராஜனை மறைத்த இடம் மர்மமாகவே உள்ளது..!” — பண்டிதர் கூறினார்.

“யார் அந்த மல்ல எதி?” — பல்லவமல்லன் கேட்டான்.

“சிம்மவர்மருக்கு நான்கு மகன்கள் என்பது உமக்குத் தெரியுமல்லவா?” — பண்டிதர் கூற, தலையசைத்தான், பல்லவமல்லன்.

“தெரியும்! முதல் மகன்தான் அவனிசிம்மன் என்கிற பல்லவ மன்னர். இரண்டாவது மகன் தானவர்மன்தான் எனது முப்பாட்டனார். மூன்றாவது மகன் ஜெயவர்மன் தான் சீனத்திற்குச் சென்றார். நான்காவது மகன்தான் பீமவர்மன். நவரத்ன பல்லவி என்று ஒரு மகளும் இருந்தார் என்று சதகரணி கூறியிருக்கிறார்.”

*"உண்மை! அவனிசிம்மருக்கும் சாளுக்கிய நாட்டியப் பெண்மணி வித்யுதா என்பவளுக்கும் பிறந்தவன்தான் இந்த மகாமல்ல எதி. அவனது இயற்பெயர் குணபரன். மகேந்திர பல்லவனின் நண்பனாகத் தசகுமாரர்கள் என்கிற பெயரில் வந்து அவரது நண்பர்களைக் கொன்றவன். அவன்தான் தேவராஜன் சிலையைச் சாளுக்கியர்களின் உதவியோடு அபகரிக்க நினைத்தான். அதற்குள் அவனது உயிர் போய்விட்டது. அத்தி மலையானின் பிரதிமை எங்கே உள்ளது என்று தெரிய வில்லை..!" — மதுசூதன பண்டிதர் கூறினார்.*

*"நான் சிலையைக் கண்டுபிடித்து ஆலயத்தில் நிறுவுகிறேன். பண்டிதரே! இன்னும் ஒரு கேள்வி? அத்திமலைத்தேவன் மிகவும் ஆற்றல் வாய்ந்த ஸ்ரீதள மணி என்கிற ஆபரணத்தை அணிந்திருந்தான் அல்லவா?"*

*"ஆமாம்! குபேரன் அளித்த விலைமதிப்பில்லா ஆபரணம்! *யட்ச நேத்திரக் கண்கள் என்கிற ஒப்புயர் வில்லா கற்களைக் கொண்டவை. அதனைக் களவாடிய பீமவர்மன், அதனை மறைக்க ஸ்ரீதள மணியினை உருமாற்றி, உக்ரோதயம் என்கிற ஆபரணத்தைச்*

* மிக அண்மையில், the International Mineralogical Association ஒரு அறிவிப்பினை செய்தது. Ccarmeltazite என்கிற ஒரு புதிய இரத்தினக் கல்லை தாங்கள் கண்டெடுத்திருப்பதாகக் கூறியது. The mineral was named after Mount Carmel in Israel where it was found and the elements it contains- Titanium, Aluminum and Zirconium. அதனைக் கேரமல் நீலரத்தினம் (Caramel sapphire) என்று பெயரிட்டிருப்பதாக அறிவித்தார்கள். Curiously, the chemical formula of this stone resembles allendeite, a mineral identified for the first time in the Allende meteorite, a rocky meteorite that fell February 8, 1969, in the Mexican state of Chihuahua. யட்ச நேத்திரக் கண்கள் என்பவை ஒருவகை நீலக்கற்கள்தான். விண்ணுலகக் கற்கள்தான் நல்ல நவரத்னங்களாக நமக்குக் கிட்டுகின்றன என்பதை ஊர்ஜிதப்படுத்தியது இந்த அறிவிப்பு. குபேரன் அணிவித்த ஸ்ரீதள மணி இவ்வகை யட்சநேத்திரக் கற்கள்தான்.

செய்தான். அதனை இரண்டாம் மகேந்திரன் கங்க நாட்டின் இளவரசி ஒருத்தியின் சூழ்ச்சியினால் பறிகொடுத்துவிட்டான். தனது உயிரையும் இழந்தான். தற்போது உக்ரோதயம் கங்க நாட்டின் கஜானாவில்தான் இருக்க வேண்டும்!" — பண்டிதர் கூறினார்.

"இப்படி பல்லவம், தனது மன்னர்களையும், பொக்கிஷங்களையும் இழந்து கொண்டே போகின்றதே. இதற்கு நான்தான் ஒரு முடிவுகட்ட வேண்டும் போல் இருக்கிறது. மீண்டும் பல்லவத்தை பொலிவடையச் செய்கிறேன்!" — என்ற பல்லவமல்லன் மீண்டும் தன்னைச் சுற்றி நோக்கினான்.

"நாம் எங்கே இருக்கிறோம்?" — பல்லவமல்லன் கேட்டான்.

"ஒரு காலத்தில் இது சோழ நாட்டின் பகுதி. இப்போது சோழம் உறையூர் பகுதியைச் சுற்றிச் சுருங்கி நிற்கின்றது. சோழ நாட்டின் பல பகுதிகள் இப்போது சிற்றரசுகளாக உள்ளன. வடசோழத்தை பல்லவமும், தென்சோழத்தை பாண்டியமும், மேற்கு சோழத்தை சாளுக்கியமும், கங்கமும் கைப்பற்றிக் கொண்டன. விஞ்சிய உறையூர் பகுதியை மட்டுமே சோழர்கள் ஆண்டு கொண்டிருக்கிறார்கள். இப்போது நாம் பயணிக்கும் காடு ஆலிநாடு என்கிற சிற்றரசாகும்."

பண்டிதர் கூறிய அதே சமயம், சட்டென்று நின்றான் பல்லவமல்லன்.

தொலைவில் சில தீப்பந்தங்கள் இவர்கள் நின்ற பக்கமாக நகர்ந்து வந்து கொண்டிருந்தன. மதுசூதன பண்டிதர் பரபரப்படைந்தார்.

"எச்சரிக்கை பல்லவமல்லா! வருவது சித்ரமாயனின் ஆட்களாக இருக்கக்கூடும். நாம் பதுங்கிக் கொள்வது நல்லது. அதோ அந்த அரச மரத்தின் கீழே உள்ள

*பாறையின் பின்பாகப் பதுங்கிக் கொள்வோம். அவர்கள் கடந்து சென்றதும், நாம் தொடர்ந்து நடப்போம்!" — என்றபடி பல்லவமல்லனின் கையைப் பற்றியபடி அந்தப் பாறையை நோக்கி விரைந்தவர் அதன் பின்பாக அமர்ந்து கொண்டனர்.*

*"மூச்சுவிடாதே, பல்லவமல்லா!" — பண்டிதர் எச்சரித்தார்.*

*அப்போது தொலைவில் மிகக் கம்பீரமான் குரலில் பாடல் இசைத்தபடி சிலர் வருவது தெரிந்தது. பாடும் குரல்கள் நெருங்கி வருவது கேட்டது.*

*மதுசூதன பண்டிதரும், பல்லவ மல்லனும் சுவாசிப்பதை நிறுத்திவிட்டு செவிகளைக் கூர்மையாக்க, அந்த மனிதர்களின் பாடல் அவர்களது செவிகளில் விழுந்தது.*

"சதுரங்க தளத்துடன்
சதுர்திரு நகர் தன்னில்
அதிவேகமாகவே
குதிரை மேல் வாரார்!
பொன் குதிரை மேல் வாரார்..!
ஆடல்மா பொன் குதிரை மேல் வாரார்
ஆலிநாடார் குதிரை மேல் வாறார்..!"

*இனிய குரலில் கோஷ்டி கானம் செய்தபடி அந்தக் குழுவினர் பல்லவமல்லன் பதுங்கியிருந்த பாறையை நெருங்கினார்கள். முதலில் கம்பீரமான குதிரை ஒன்றின் மீது சுந்தரப் புருஷன் ஒருவர் அமர்ந்திருந்தார். பட்டுத் தலைப்பாகை, பட்டு வேட்டி, இடையில் உடைவாள், கையில் ஈட்டி என்று அவர் குதிரையில் மிதந்து செல்வதைப் போன்று இருந்தது. அவருக்கு மிக அருகே ஒரு கரிய குதிரையில் ஒருவன் நிழலாகப் பின்தொடர்ந்தான். அவனுக்கும் பின்பாக நால்வர் தத்தம் குதிரைகளில் பயணித்தபடி பாடிக்கொண்டே வந்தனர்.*

*முதலில் குதிரையில் சென்றவர்தான் ஆலிநாட்டு சிற்றரசர், *நீலன். ஆலிநாடன் உறையூர் சோழ நாட்டு தளபதி. எதிரிகளுக்குக் காலனாக விளங்கியதால், பரகாலன் என்கிற பட்டத்தை அவருக்குச் சோழன் வழங்கியிருந்தான். அவரது வீரத்தைப் பாராட்டி **திருமங்கை என்கிற பகுதியின் சிற்றரசனாகவும் அவரை அறிவித்திருந்தான்.*

*அவருக்கு மிக நெருக்கமாக ஒரு கரிய குதிரையில் ஒருவன் நிழலாகப் பின்தொடர்ந்தான். அவனுக்கும் பின்பாக நால்வர் தத்தம் குதிரைகளில் பயணித்தபடி பாடிக்கொண்டே வந்தனர். பரகாலனின் நெருக்கமாக வந்தவர்தான் தூண்டில்வல்லான். பரகாலனின் ஒற்றன் மற்றும் மெய்க்காவலன். கடுமையான பார்வையும், துடிப்பான இளமையும் கொண்டவன். பரகாலனுக்காக*

---

* நீலன் என்கிற பரகாலன்தான் பின்னாளில் ஆழ்வார்களில் கடைக்குட்டியாக விளங்கிய திருமங்கையாழ்வார். சோழ நாட்டில் திருவாலி திருநகிரிக்கு மிக அருகிலே உள்ள திருக்குறையலூரில் பிறந்தார். பரமேசுவரன், நந்திவர்மன் போன்ற பல்லவ மன்னர்களைப் பற்றிய குறிப்புகள் இவர் பாடல்களில் இருப்பதால் இவரை எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தவர் என்று சொல்ல முடிகிறது. நள வருஷத்தில் கார்த்திகை மாதம் பௌர்ணமியும் கார்த்திகை நட்சத்திரமும் சேர்ந்த தினத்தில் பிறந்ததாகக் குறிப்புகள் உள்ளன. இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் நீலன். இளம் வயதிலே போர்த் திறமைகள் பயின்றார். தந்தைக்குப் பின் சோழ மன்னனின் சேனாதிபதியாக அமர்ந்து பல போர்களில் வெற்றி பெற்று பரகாலன் (எதிரிகளின் எமன்) என்ற பெயர் பெற்றார். இவருடைய வீரத்துக்குப் பரிசாகச் சோழ மன்னன் இவரைத் திருமங்கை என்னும் குறுநிலத்திற்கு அரசனாக முடிசூட்டினார். ஆழ்வார்களிலேயே மிக அதிகம் அலைந்தவர் திருமங்கை மன்னன்தான். அவரால் பாடப்படவில்லை யென்றால் அந்தக் கோயில் பிற்காலத்தது என்று சொல்லி விடலாம். ஆழ்வார் பாடல்கள் நம் ஆலயங்களின் பழைமையை நிரூபிக்கும் சரித்திரச் சான்றுகளாக உள்ளன.

** திருமங்கை நிலம் தற்போது திருநாங்கூர் அருகே மங்கை மடம் என்று அழைக்கப்படுகிறது.

உயிரையே அளிப்பதற்குச் சித்தமாக இருப்பவன். தூண்டிலான் என்று பரகாலனால் பிரியமாக அழைக்கப்படுபவன்.

அவனுக்குப் பின்பாகக் கம்பீர நாட்டையில் பரகாலனின் வீரதீரங்களை விவரித்துப் பாடி வரும் நால்வர்தான் பரகாலனின் அமைச்சர்கள். ஜலேந்திரன், சாயாவக்ரன், பஞ்சவன் மற்றும் வார்த்தாவரணன் என்பதுதான் அவர்களுடைய பெயர்களாக இருந்தாலும், தனது அமைச்சர்களின் குணநலனைக் கொண்டு அவர்களைப் புதுப்பெயர்கள் இட்டுத்தான் பரகாலன் அழைத்தான்.

ஜலேந்திரன், திறமையான நீச்சல் வீரன். மகா சாகரங்களாக இருந்தாலும் சரி, குறுகிய ஓடைகளாக இருந்தாலும் சரி, விரைவாக நீந்தி, காரியங்களை ஆற்றுவான். நீர் மேல் தவழ்ந்து செல்வது போலவே நகருவான். அவனை 'நீர்மேல் நடப்பான்' என்றுதான் பரகாலன் அழைத்தார்.

சாயாவக்கிரனுக்கு உள்ளுணர்வு மிகக் கூர்மையானது. நிழலைப் போன்று எதிரிகளைத் தொடருவான். அவர்கள் எதிர்பாராத நேரத்தில் தோன்றி அவர்களைக் கலங்கடித்து, நிலைகுலையச் செய்து பரகாலனின் எதிரிகளைத் தீர்த்துக்கட்டுவான். அதே போன்று, இவர்கள் செல்லும் பாதையில் பரகாலனை தாக்குவதற்கு எதிரிகள் யாராவது பதுங்கியிருந்தால், சாயாவக்கிரனின் உள்ளுணர்வு எச்சரித்துவிடும். அவர்கள் எங்கே பதுங்கி யிருந்தாலும், அவர்களை வெளிப்படுத்திவிடுவான். இவனை நிழலைப்பிடிப்பான் என்று அழைத்தார் ஆலிநாடன்.

மூன்றாவது அமைச்சர், பஞ்சவன். ஆபத்துகளில் நிலை குலையாமல், தெளிவாகச் சிந்தித்து நல்ல ஆலோசனை களைச் செய்வான். அவன் இடையில் தாள் என்கிற சங்கு எப்போதும் ஊசலாடிக் கொண்டிருக்கும். அவன்

அதனை எடுத்து ஊதினால், ஏதோ பிரச்னை உண்டாகிறது என்று பரகாலன் புரிந்துகொள்வார். இவனது பெயர் தாளூதுவான்.

பரகாலனே சற்று எச்சரிக்கையுடன் பேசும் வார்தா வரணன்தான் நான்காவது அமைச்சர். அவனைத் 'தோலா வழக்கன்' என்றுதான் பரகாலன் அழைப்பார். வாய்ப்பந்தல் போட்டு, சொற்களாலேயே தோரணங் களை அமைத்து, ஆணித்தரமாகப் பேசி எதிராளியைச் சரணாகதி அடையச் செய்துவிடுவார். அவர் விவாதம் செய்து வெல்லாத வழக்குகளே இல்லை. வெல்ல முடியாத பலமான வழக்குகளையும் கூட, தனது ஆவேசமான குரலால் கூப்பாடு போட்டே வென்று விடுவார். அவரது உரையைக் கேட்டால் வழக்காடும் எதிராளிக்கே தான்தான் தவறு செய்துவிட்டோமோ என்கிற எண்ணம் எழும்.

தோலா வழக்கனுக்கு அஞ்சியே பரகாலனிடம் யாரும் வம்பு வளர்க்கமாட்டார்கள். நால்வருக்கும் பரகாலன் என்றால் உயிர். அவர் கிழித்த கோட்டினைத் தாண்ட மாட்டார்கள். அவர் மீது அதீத விசுவாசத்தைச் செலுத்தி னார்கள். வழியில் பரகாலன் உண்பதற்கு முன்பாகத் தாங்கள் அந்தப் பண்டத்தை உண்டு தங்களுக்கு ஒன்றும் நேரவில்லை என்றால்தான் பரகாலனை புசிக்க அனுமதிப்பார்கள்.

பரகாலனின் உலகமே இந்த நான்கு அமைச்சர்களும், தூண்டிலான் என்கிற அந்த மெய்க்காப்பானும்தான். பஞ்ச பாண்டவர்களைப் போன்று எங்கு சென்றாலும் ஒன்றாகவே செல்வார்கள். உறையூர் சோழனே, அவர்களைப் பராக்கிரம ஐவர் என்றுதான் அழைப்பான்.

பரகாலனின் வதனம் வீரமும், உத்வேகமும் கொண்டதுதான். உதடுகளின் விளிம்பில் ஒரு அலட்சியச் சிரிப்பு குடிகொண்டிருக்கும். யாருக்கும் அஞ்சேன் என்கிற துணிவு கண்களில் பொங்கிக் கொண்டிருக்கும்.

பெண்களுக்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்றால் ஆண்களுக்கு, துணிவு, வீரம், வேகம் மற்றும் ஆளுமைதானே ஆபரணங்கள். பரகாலனிடம் இந்த நான்கு ஆபரணங்களும் உண்டு. ஆண்மையின் பாய்ச்சலாகப் பாய்ந்து செயலாற்றி வந்த பரகாலன் முதன்முறையாக அன்று காலையில்தான் தனது வேகம் செயலற்றுப் போனதை உணர்ந்தார்.

தன்னை மன்னனாக நியமித்த உறையூர் சோழனுக்குச் செலுத்த வேண்டிய திறையை அளித்துவிட்டு, பாண்டிய மன்னன் மாறவர்மனின் போர் பிரயத்தனங்களைப் பற்றி உறையூர் சோழ மன்னனிடம் ஆலோசித்துக் கொண்டிருந்தார், பரகாலன். பாண்டியன் மாறவர்மன், சேர மன்னன் வில்லாளன் கோதை, சபர மன்னன் உதயணன், சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்யன் மற்றும் கங்க மன்னன் பூவிக்கிரமன் ஆகியோர் மன்னன் இல்லா பல்லவத்தை ஐந்து கூறுகளாகப் பிரித்துக் கொள்ளத் திட்டமிட்டு வருவதாகச் சோழ ஒற்றன் செய்தி கொண்டு வந்திருந்தான்.

பல்லவர்களுக்கு மன்னன் இல்லாத நிலையில், மாறவர்ம ஸ்ரீவல்லப பாண்டியன் பல்லவப் பகுதிகளைக் கபளீகரம் செய்ய முயன்றால், தனது உறையூருக்கும் ஆபத்து என்பதை உணர்ந்திருந்த *ஆதித்தன்,

* கோப்பெருஞ்செங்கண் சோழன் துவங்கி விஜயாலய சோழன் பின்பு மீண்டும் சோழப் பேரரசை நிறுவும் வரையிலான காலத்தில் சோழர்களைப் பற்றிய குறிப்புகளே இல்லை. தெலுங்கு சோழர்கள் என்று தங்களை அழைத்துக் கொண்ட சிலர் கிருஷ்ணா நதிக்கரையில் ஆட்சி செய்தனர். தஞ்சையில் இளங்கோ முத்தரையர்கள் ஆட்சி செய்ய, உறையூர் பகுதியை உறையூர் சோழர்கள் ஆண்டு கொண்டிருந்தார்கள். அவ்வளவோ புகழ் பெறாத இவர்கள், பாண்டியர்களுக்கும் பல்லவர்களுக்கும் இடையே sandwich ஆகி, உறையூரை மட்டும் ஆண்டு கொண்டிருந்தனர். ஆலிநாடு, மங்கை நாடு ஆகியவை உறையூர் சோழன் வசம் இருந்ததாக அறியலாம். முத்தரையர்கள் பாண்டியர்களின் ஆதரவாளர்களாய் தஞ்சை

ஆலோசனைக்குப் பரகாலனை அழைத்திருந்தான். பாண்டியர்களை அடக்க, நாம் பல்லவர்கள் பக்கமே நிற்க வேண்டும் என்று வாதிட்டார், பரகாலன். அவர் களுக்கு மன்னன் இல்லையென்றாலும், பல்லவத்தின் பக்கம் நிற்பதே நமக்கு நன்மை பயக்கும் என்று ஆதித்தனிடம் கூறிவிட்டு, உறையூரிலிருந்து **மங்கை நாட்டிற்குப் புறப்பட்டார்.

தனது நான்கு அமைச்சர்களுடனும், தூண்டி லானுடனும் மங்கை மடத்திற்குச் சென்று கொண்டிருந்த வேளையில்தான் அனைவருக்கும் தாகம் ஏற்பட்டது. அருகே நீர்நிலை ஏதாவது தென்படுகின்றதா என்று பார்த்தபோது, அல்லிமலர்கள் நிறைந்த ஒரு பொய்கை கண்களில் தென்பட்டது. பரிவாரங்களுடன் அந்தப் பொய்கைக்குச் சென்றார் பரகாலன்.

பரகாலன் அல்லி இலைகளை விலக்கி இரு கைகளாலும் நீரை அள்ளிப் பருகினார். வேட்கை தீரும் வரைக்கும் கற்கண்டாக இனித்த அந்த நீரைப் பருகியவர், தனது வாயை மேல்வஸ்திரத்தினால் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தார். பரகாலனின் அமைச்சர்கள் இப்போது நீரைப் பருகிக் கொண்டிருக்க, பரகாலன் மட்டும் குளத்தின் எதிர்ப்புறம் நோக்கினார்.

ஒரு ஒற்றையடிப்பாதையின் துவக்கத்தில் அடர்ந் திருந்த இரு மலர்ச்செடிகளை விலக்கிக்கொண்டு ஒரு

---

தொடங்கி இன்றைய புதுக்கோட்டை வரை ஆண்டார்கள். திருபுறம்பியம் போர் நிகழ்ந்தபோது உறையூர் சோழர்கள் பல்லவர்கள் பக்கமும், முத்தரையர்கள் பாண்டியர் பக்கமும் நின்று போரிட்டனர். அபராஜித பல்லவன் போரில் வெல்ல, ஆதித்த கரிகாலனுக்குத் தன்வசம் இருந்த சோழப் பகுதிகளைப் பரிசாகத் தர, ஒருங்கிணைந்த சோழத்தை தனது தந்தை விஜயாலய சோழனை முதல் மன்னனாக அறிவித்து உருவாகினான், ஆதித்த சோழன்.

** மங்கை நாடு -- சீர்காழி அருகே தற்போது மங்கைமடம் என்று அழைக்கப்படுகிறது இந்தக் குறுநிலம்.

நங்கை கையில் குடம் ஒன்றைச் சுமந்தபடி வந்தாள். வீரன் பரகாலன் போர்க்கலைகளைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பவன். மங்கை நாட்டை ஆண்டு கொண்டிருந்தாலும் மங்கைகளைப் பற்றி இதுகாறும் நினைத்துப் பார்த்ததில்லை. ஆனால் குடத்தில் நீர் சேந்த வந்திருந்த அந்த நங்கை, செடிகளை விலக்கிக்கொண்டு வந்தது, முகில்களைக் கிழித்துக்கொண்டு வெளிவந்த பூரண மதியினைப் போன்று காட்சியளித்தது. அவள் குனிந்து நீரை எடுக்க முயல, அவளது மெல்லிய இடை உடைந்து போனதால் அவள் கீழே விழுவதைப் போன்று தோன்றியது. அவள் பரகாலனை பார்க்கவேயில்லை. ஆனால் ஈட்டியைப் போன்ற அவரது பார்வை அந்தப் பெண்ணையே நோக்கியது.

அந்தப் பெண்ணின் பேரழகு பரகாலனின் இதயத்தைச் சுண்டி இழுத்தது. 'எங்கள் வெள்ளக் குளத்தின் காரிகை அவள். எங்கள் பகுதிக்குப் பெருமை சேர்ப்பவள். அவளது நீண்ட கூந்தல் அலைபாய்ந்தால், அவளது பேரெழில் இன்னும் நன்றாகத் தெரியும்!' என்று கூறுவதைப் போன்று அங்கே காற்று பலமாக வீச, அந்த நங்கையின் சேலை முந்தானை காற்றில் ஆடியதே தவிர, அவளது கூந்தலை அலைபாய வைக்க முயன்ற காற்றுக்குத் தோல்வியே கிடைத்தது. தனது கூந்தலை உறுதியான கொண்டையாகச் சிரசின் பின்புறமாக முடிந்திருந்தாள். முடிந்திருந்த கூந்தலை உறுதியாகப் பிணைத்திருந்தது, ஒரு திருகுப்பூ.

தலையின் உச்சியில் ஒரு இராக்கொடியை அணிந் திருந்தாள் அந்தப் பெண். அவளது இராக்கொடி பரகாலனின் கண்களில் நன்றாகப் புலப்பட்டது. தொலைவில் இருந்து காண்பவர்களுக்கு இராக்கொடி புலப்பட்டால், அந்தப் பெண் தலை நிமிராதவள் என்பதனை அறியலாம். ஒரு பெண் தலைகுனிந்து இருக்கும் போதுதான் அவள் அணிந்திருக்கும்

இராக்கொடி எதிரே நிற்பவர்களுக்குப் புலப்படும். தலை நிமிராக்கொடி என்பதனை குறிக்கும் ஆபரணம்தான் இராக்கொடி. அவளது இராக்கொடி புலப்பட அவள் தலைநிமிராத பெண் என்பதனை உணர்ந்தார் பரகாலன்.

"யார் அந்த நங்கை?" — முணுமுணுக்கத்தான் செய்தார். அடுத்தகணம், வில்லில் இருந்து புறப்பட்ட அம்புகளாகப் பாய்ந்து சென்றனர் நான்கு அமைச்சர்களும். ஆனால் மற்ற மூவரும், பொய்கையைச் சுற்றி எதிர்க்கரையை அடைவதற்குள், நீர்மேல் நடப்பான் பொய்கையில் குதித்து, நடந்து செல்பவனைப் போன்று விரைந்து சென்று இடையில் குடத்துடன் நின்ற அந்த மங்கையின் முன்பாக நின்றான். அவனை ஏறிட்டு நோக்காமல் தனது இடையில் இருந்த குடத்தில் நிரம்பியிருந்த நீரை நோக்கினாள்.

மற்ற மூவரும் ஓடி வந்து அவள் முன்பாக நின்றனர்.

"அதோ! எதிர்க்கரையைப் பாருங்கள்! எங்கள் தலைவர்! மங்கை குறுநிலத்தின் வேந்தர்..!" — தோலா வழக்கன் கூறியதும் அலட்சியமாக எதிர்க்கரையை நோக்கினாள் அந்தப் பெண்.

"மங்கைக்கு அரசரா? கணமங்கையா அல்லது ஸ்ரீவர மங்கையா?" — அந்தப் பெண் கேட்டதும், விழித்தனர் அமைச்சர்கள்.

"திருவாலி அருகே உள்ள மங்கை நாடு. அவர் ஆலிநாடன். உறையூர் சோழ மன்னன் ஆதித்தனின் தளபதி. மன்னரால் பரகாலன் என்று அழைக்கப் படுபவர்." — தோலா வழக்கன் கூறினான்.

அவனை ஏற இறங்க நோக்கினாள், அந்தப் பெண். "பரத்துவத்தை நாடுபவளிடம் பரகாலனுக்கு என்ன வேலை?" என்றபடி அந்த ஒத்தையடிப் பாதையில் நடந்தாள், அந்தப் பெண்.

ஸ்தம்பித்துப் போய் நின்றனர், அமைச்சர்கள். "எங்கள் தலைவர் உன்னிடம் பேச வேண்டுமாம்..! வா!" என்றவுடன் அஞ்சி நடுங்கி ஓடி வந்து தலைகுனிந்து நிற்பாள் என்று இவர்கள் நினைக்க, அவள் அவர்களை லட்சியம் செய்யாமல் நடக்கின்றாளே.

தோல்வியுடன் அவர்கள் திரும்ப, பரகாலன் ஆவலுடன் அவர்களைப் பார்த்தார்.

"தோலாவழக்கா! தான் யார் என்பதை அவள் கூறினாளா?"

"இல்லை பரகாலரே! உங்களை மங்கைமட வேந்தர் என்று அறிவித்தேன். கணமங்கையா, அல்லது ஸ்ரீவர மங்கையா என்று கேட்டாள்! பரகாலன் என்றேன். பரத்துவத்தை நாடும் தன்னிடம் பரகாலனுக்கு என்ன வேலை என்று கூறிவிட்டாள்!" — தோலா வழக்கன் கூறினான். தன்னையே அந்தப் பெண் வாயடைத்துப் போகச் செய்துவிட்டாள் என்கிற அதிர்ச்சி அவன் முகத்தில் நன்றாகத் தெரிந்தது.

அதற்குமேல் பரகாலனால் பொறுக்க இயலவில்லை. ஆடல்மாவின் மீது ஏறி அல்லிப்பொய்கையைக் கடந்து அந்தப் பெண் சென்ற ஒத்தையடிப் பாதையில் விரைந்தார்.

சற்றுத் தொலைவில் அந்தப் பெண் சென்று கொண்டிருப்பதைக் கண்டு புரவியின் வேகத்தைக் குறைத்தார்.

"பெண்ணே! சற்று நில்!" கட்டளையிட்டார் பரகாலன்.

"இதுவோ மனிதர்கள் நடப்பதற்காக அமைக்கப்பட்ட ஒற்றையடிப் பாதை. இதில் புரவிகளைச் செலுத்துவதே தவறு. நடந்து செல்பவர்களை விரட்டுவதும் தவறு!" என்றபடி திரும்பி அவரை உறுத்து நோக்கினாள்.

*அந்தப் பார்வையிலேயே சொக்கிப் போனார் பரகாலன்.*

*"வாணிலா முறுவல்.. சிறுநுதல் பெருந்தோள்."*

*அவரையும் அறியாமல் அவரது வாய் முணு முணுத்தது. வீரமகளின் குமாரன், திருமகளைப் போன்ற அந்தப் பெண்ணைக் கண்டதும், கலைமகளின் தத்துப்புதல்வனாகிவிட்டார், பரகாலன்.*

*மெய்ம்மறந்து அவளையே நோக்கிக் கொண்டிருக்க, எரிச்சலடைந்தாள் அந்தப் பெண்.*

*"மங்கை நாட்டில் மங்கையரே கிடையாதா? முன்னர் பின்னர் மங்கையைப் பார்த்திராதவர் போன்று அப்படி வெறிக்கின்றீரே!" — அந்தப் பெண் கேட்டாள்.*

*"மங்கை நாட்டில் உன்னைப் போன்ற மங்கையே கிடையாது. அதனால்தான் மங்கை நாட்டிற்கு உன்னை அழைத்துப் போக நினைக்கிறேன்." — பரகாலன் இதயம் படபடக்கக் கூறினார்.*

*"அதோ அந்த அல்லிப்பொய்கையின் ஒரு மலரைக் கூட இந்த வெள்ளக்குளத்து வாசனின் அனுமதி இல்லாமல் பறிக்க முடியாது. நீர் ஒரு மங்கையையே எடுத்துச் செல்ல நினைக்கின்றீர். எங்கள் தலைவன் அனுமதிக்கமாட்டான்." — அந்தப் பெண் கூறினாள்.*

*"யார் உங்கள் தலைவன். அவனிடம் நான் பேசுகிறேன்!"*

*"அவன் இவன் என்கிற ஏகவசனம் வேண்டாம். அவன் அனைவருக்கும் மூத்தவன். அனைவருக்கும் அண்ணன்! அவன் வேங்கடவன்..! எங்கள் குலதெய்வம்..!" — அந்தப் பெண் கூறினாள்.*

*"தெய்வமா? தெய்வத்திடம் பேச எல்லாம் எனக்கு அவகாசம் இல்லை. நீ யார் பொறுப்பில் இருக்கிறாய்? அவர்களைப் பற்றிய விவரம் கூறு! நான் அவர்களிடம் பேசுகிறேன்..?" — பரகாலன் கூறினார்.*

"எதனைப் பற்றிப் பேசப் போகிறீர்?" — அந்தப் பெண்ணின் குரலில் கேலி தொனித்தது.

"என் பெயர் நீலன். நீயோ நீலாம்பல் மலரைப் போன்று இருக்கிறாய், இந்த நீலன் நீலாம்பலாக நிற்கும் உன்னைச் சூட நினைக்கிறான்." — பரகாலன் கூறியதும், அதுவரை அவனை அலட்சியமாக நோக்கிக் கொண்டிருந்த அந்தக் கண்களில் வியப்பு. நீலாம்பலை குறிக்கும் குமுதமலரைத்தான் தனது பெயராகக் கொண்டிருந்தாள். அவளது பெயர் குமுதவல்லி. பொன்னரங்கர் என்கிற வைணவ வைத்தியரின் மகள். அவரது வைத்தியத்திற்கு மிகவும் பயன்பட்டது குமுத மலர். அவரை நீலாம்பல் வைத்தியர் என்றே ஊர்மக்கள் அழைத்து வந்தனர்.

தனக்கு மிகவும் உகந்த நீலாம்பல் மலரைக் குறிக்கும் விதமாகக் குமுத மலரின் பெயரினையும், வெள்ளக் குளத்தின் மலரான அல்லி மலரையும் இணைத்து குமுதவல்லி என்று அவளுக்குப் பெயரிட்டிருந்தார்.

"நீலாம்பல் மலரைப் போன்றவள் எனது மகள்!" — என்று வாய் ஓயாமல் கூறிக்கொண்டிருப்பார், பொன்னரங்கர். இப்போது இந்தக் குதிரை வீரனும் அவளை நீலாம்பல் மலரைப் போன்று இருப்பதாகக் கூறியதும் அவளுள் வியப்பு படர்ந்தது.

"வீரரே! நீலாம்பல் மலரின் சிறப்புத் தெரியுமா..? நீலாம்பல் மலர் மட்டும் துவக்கத்தில் விரிந்திருந்து பிறகு குவியும். மற்ற மலர்கள் எல்லாம் குவிந்திருந்து பிறகு மலரும். நான் குமுத மலரைப் போன்றவள் என்று நீங்களே கூறிவிட்டீர்கள். எனவே, திருமணம் குறித்து நான் எவ்வித முடிவுக்கும் வரவில்லை. முதலில் என்னைத் திருமணம் செய்து கொள்ள நினைப்பவரை நோக்கி எனது மனம் குவிய வேண்டும். மனம் குவிந்தால் தான், மனங்களைப் பரிமாறிக்கொள்ள முடியும். எனக்குத் தற்போது எவ்விதத் திருமண எண்ணங்களும்

இல்லை. எனது மனம் குவியாமல், எனது தந்தை எவ்வித முடிவுக்கும் வரமாட்டார்..!" — குமுதவல்லி கூறினாள்.

"உனது மனம் எப்போது குவியும்?" — பரகாலன் கேட்டார்.

"இப்போதைக்கு வேங்கடவன் சந்நிதியில் எனது கைகள் குவிந்து வருகின்றன. எனது மனம் எப்போது குவியும் என்பது அவனுக்குத்தான் தெரியும். இருப்பினும், ஒன்றை மட்டும் உங்களிடம் கூறிக்கொள்ள நினைக்கிறேன். ஒரு வைணவனை நோக்கித்தான் எனது மனம் குவியும். உங்கள் ஆசை நிராசையாகவே இருக்கும். எனவே, உங்கள் எண்ணங்களை மாற்றிக்கொண்டு, வந்த வழியே செல்லுங்கள்!" உறுதியான குரலில் கூறிவிட்டு, தனது வழியே குமுதவல்லி தொடர்ந்து நடக்கத் துவங்கினாள்.

"உனது பெயரையாவது கூறு?" — ஏக்கத்துடன் கேட்டார்.

"அதுதான் கூறிவிட்டீர்களே, நான் நீலாம்பல் மலரைப் போன்று உள்ளதாக. எனது பெயர் குமுதவல்லி!" என்று திரும்பி நோக்காமல் கூறியபடி தனது வழியே நடந்தாள்.

விருப்பம் இல்லாதவளிடம் பேசி என்ன பயன் என்றுதான், திரும்பி வந்திருந்தார், பரகாலன். ஆனால், அமைச்சர்களுடனும், தூண்டிலானுடனும் மங்கை நிலத்தை நோக்கி பயணிக்க, குமுதவல்லியின் அழகிய முகம் பரகாலனை சித்ரவதை செய்தது. மெதுவாகத் தனது மனதை அவள் வசம் இழந்துவிட்டார். அவள் தனக்குக் கிடைப்பாளா என்கிற கவலைதான் அவர் முக வாட்டத்திற்குக் காரணம்.

"சதுரங்க தளத்துடன்
சதுர்திரு நகர் தன்னில்
அதிவேகமாகவே
குதிரை மேல் வாரார்!
பொன் குதிரை மேல் வாரார்..!

ஆடல்மா பொன் குதிரை மேல் வாரார்
ஆலிநாடர் குதிரை மேல் வாரார்.
புலிவேந்தன் படையாளும் பரகாலர்
குதிரை மேல் வாரார்!
பொன் குதிரை மேல் வாரார்..!
ஆடல்மா பொன் குதிரை மேல் வாரார்
ஆலிநாடர் குதிரை மேல் வாரார்.."

*தனது அமைச்சர் சகாக்களின் பாட்டு அவரைப் பாதிக்கவேயில்லை. குமுதவல்லியைப் பற்றிய சிந்தனை களில் ஆழ்ந்திருந்த நேரம், சரியாகப் பல்லவ மல்லனும், மதுசூதன பண்டிதரும் மறைந்திருந்த பாறையின் அருகே வந்தனர்.*

*அந்தப் பகுதியைக் கடந்தபோது சாயாவக்ரன் என்கிற நிழலைபிடிப்பானின் உள்ளுணர்வு விழித்துக் கொண்டது. பாட்டு பாடுவதை நிறுத்திவிட்டு சுற்று முற்றும் நோக்கினான். அவனது பார்வை, அரச மரம் ஒன்றின் அடியில் இருந்த அந்தப் பாறையை நோக்கியது. உடனே தனது இடையில் இருந்த சங்கினை எடுத்துப் 'பூம் பூம்' என்று ஊதத் தொடங்கினான்.*

*அந்தச் சங்கின் ஒலி கேட்டு பரகாலன் சுயநினைவுக்கு வந்தார். பாறையின் பின்பாகப் பதுங்கியிருந்த பண்டிதரின் குலையை நடுங்க வைத்தது அந்தச் சங்கொலி. அவரது தேகம் நடுங்குவதைப் பார்த்தான், பல்லவமல்லன்.*

# 14. பரகாலமே பதில் சொல்லும்!

**"தா**ளூதுவானே! என்ன நடந்தது? எதனால் உனது சங்கினை முழக்கினாய்?" — பரகாலன் கேட்டார்.

"இங்கு யாரோ இருக்கின்றனர்! நம்மை யாரோ வேவு பார்ப்பதாக எனது உள்ளுணர்வு எச்சரித்தது." — பஞ்சவன் கூறினான்.

பரகாலன் சுற்றுமுற்றும் நோக்கினான். இரவு படர்ந்துவிட்ட நிலையில் தீப்பந்தங்களின் ஒளியில் அவருக்கு ஒன்றும் புலப்படவில்லைதான். இருப்பினும், பஞ்சவனின் உள்ளுணர்வில் அவருக்கு அதீத நம்பிக்கை இருந்தது. இதுவரை அவனது உள்ளுணர்வு அளித்திருந்த சமிக்ஞைகள் பொய்த்ததில்லை.

"பதுங்கியிருக்கும் மனிதர்கள் யாராகயிருந்தாலும் தங்களை வெளிப்படுத்திக் கொள்வது நல்லது. நாங்களாகத் தேடிக் கண்டுபிடித்தால், உங்கள் உயிர் நீங்கிவிடும் என்பதை உறுதியாகச் சொல்கிறேன்!" — தனது வெண்கல குரலில் பரகாலன் கூற, கலவரத்துடன் பாறையின் பின்னால் இருந்து எழுந்து நின்றார், மதசூதன பண்டிதர். அவர் பின்பாக எழுந்து நின்றான், பல்லவமல்லன்.

"அபயம் அபயம்! நான் பல்லவ நாட்டின் அரசவைப் புலவர் மதுசூதன பண்டிதர். இவன் எனக்கு உறவுக்கார சிறுவன். அவனைக் காஞ்சிக்கு அழைத்துச் சென்று கொண்டிருக்கிறேன். புரவிகள் வரவே, கள்வர்களோ என்று எண்ணி அஞ்சி பதுங்கிக் கொண்டோம்!" — பண்டிதர் கூற, பரகாலரின் பார்வை பண்டிதரிடம்

இருந்து தாவி, அவருக்குப் பின்பாகத் தனது கையைக் கட்டிக்கொண்டு அஞ்சாமல் நிற்கும் பல்லவமல்லனை நோக்கியது. அவரது புருவங்கள் வியப்பால் உயர்ந்தன.

பரகாலனின் பார்வை தன் மீது படர்ந்ததும், அவரை உறுத்து நோக்கினான், பல்லவமல்லன்.

"ஐயா! உங்களிடம் கொண்ட அச்சத்தினால் பண்டிதர் பொய் கூறுகிறார். நான் காம்போஜ மன்னன் ஹிரண்ய ஹரிவர்மனின் மூன்றாவது மகன் பல்லவ மல்லன். பல்லவ அரியணையில் என்னை மன்னனாக அமர்த்துவதற்கு, காஞ்சிக்கு என்னை அழைத்துச் செல்கிறார் பண்டிதர். தற்போது காஞ்சியை ஆண்டு கொண்டிருக்கும் சித்ரமாயனால் எனக்கு ஆபத்து உண்டாகக்கூடாது என்று என்னைத் தனது இருப்பிட மான நந்திபுர விண்ணகருக்கு அழைத்துச் செல்கிறார், பண்டிதர்!" பல்லவமல்லன் கூறியதும், பரகாலன் அயர்ந்து போய் அந்தச் சிறுவனைப் பார்த்தார்.

அந்தப் பாலகனின் முகத்தில் ராஜகளை தாண்டவ மாடியது. அவன் நிறமும் பேரழகும், அவனைக் காம்போஜ இளவரசன் என்பதை ஊர்ஜிதம் செய்தன. அச்சமில்லாமல், அவன் சற்றே இறுமாப்புடன் பேசியது அவனுள் வளர்ந்துவரும் வீரத்தை பறைசாற்றியது.

"என் மீது கொண்ட அச்சத்தினால் பண்டிதர் பொய் உரைக்கிறார், என்கிறாயே சிறுவா! உனக்கு என்னிடம் அச்சம் இல்லையா..? நீ யார் என்பதை இப்படியா தேங்காயை உடைப்பது போன்று கூறுவது..? நீ வருங்காலப் பல்லவமன்னன் என்பதனை அறிந்தால் என்னால் உனக்கு ஆபத்து நேரக்கூடும் என்பதை நீ சிந்திக்கவில்லை. பண்டிதர் சிந்தித்திருப்பார். எனவே அவர் பொய் உரைத்தது நல்லதற்குதானே?" — பரகாலன் அவனை நோக்கிக் கேட்டார்.

"உங்களிடம் எனக்கு என்ன அச்சம்? கள்வர்கள் என்றால் இப்படித் தங்கள் பிரதாபங்களைப் பாடிக்

கொண்டு வரமாட்டார்கள்.. ஆடல்மா என்கிற பொன் குதிரை மேல் வருகிறார் என்று தங்களது புரவியின் சிறப்புகளை உங்கள் பரிவாரத்தார் பாடுகின்றனர் என்றால், அதன் மீது அமர்ந்திருக்கும் தாங்கள் எவ்வளவு சிறப்பானவர் என்பதும் புரிகிறது. புலிவேந்தர் படையாள்பவர் என்று போற்றியதால் தாங்கள் சோழ தளபதி என்பதும் தெரிகிறது. பண்டிதர் அச்சத்தினால் தங்கள் பரிவாரத்தின் பாடலில் கவனம் செலுத்த வில்லை. நான் கவனம் செலுத்தினேன். அவ்வளவே. தாங்கள் அஞ்ச வேண்டிய மனிதர் இல்லை என்பதைப் புரிந்து கொண்டேன்." — பல்லவமல்லன் தனது பதிலினால் அவரை வியப்பில் ஆழ்த்தினான்.

தனது அகன்ற விழிகளால் பல்லவ மல்லனை ஆழமாகப் பார்த்தார். பல்லவ மன்னனாக மாறத் தகுதியைக் கொண்டிருப்பவன்தான். இருப்பினும், மகுடம் என்பது அதிக கனம் கொண்டதல்லவா? இந்தப் பாலகனின் சிறு சிரசு பல்லவ மணிமுடியைத் தாங்கும் வலு கொண்டிருக்கிறதா?

"பாலகா! உனது பெயர் பல்லவமல்லன் என்கிறாய்..! பல்லவ மன்னனாகத் திகழ்வதற்குப் பெயர் பொருத்தமாக இருக்கிறது என்பது உண்மைதான். இருப்பினும், பெயரில் பல்லவம் இருப்பதால் மட்டுமே நீ பல்லவ மன்னன் ஆகிவிட முடியாது. பல்லவத்தைச் சுற்றி ஐந்து பெரும் எதிரிகள் வல்லூறுகளாக வட்டமிடு கின்றனர். கங்கம், பாண்டியம், சேரம், சபரம், மற்றும் சாளுக்கியம் ஆகிய நாடுகள் பல்லவத்தைக் கூறுபோடு வதற்கு முயல்கின்றன. பல்லவம் எதிரிகளால் சூழப் பட்டுள்ள நிலையில் சிறுவனான உன்னால் என்ன செய்ய முடியும்? காம்போஜத்தில் இருந்து மன்னன் ஆவதற்குக் கிளம்பி வந்துவிட்டாய். ஆனால் அதனால் பெரும் ஆபத்தை விலைக்கு வாங்கிக்கொண்டிருப்பதை நீ அறிவாயா?" — பரகாலன் கேட்டார்.

"பல்லவத்திற்கு மன்னன் இல்லை என்று யார் சொன்னது? பல்லவத்திற்கு நிரந்தரமாக ஒரு மன்னன் இருக்கிறான். அவன்தான் அத்திமலைத்தேவன் என்று காஞ்சி மக்களால் அழைக்கப்படும் எங்கள் தேவராஜன். அவன்தான் பல்லவத்தை ராஜாவாக இருந்து வழிநடத்து கின்றான். தேவர்களுக்கெல்லாம் அரசன் தேவராஜன். இதுவரை பல்லவ மன்னர்களாகத் திகழ்ந்தவர்கள் அனைவரும் வெறும் பிரதிநிதிகளே. மீண்டும் பல்லவத்தைத் தேவராஜன் பொலிய வைப்பான் என்று நம்புகிறேன். அவனது உத்தரவின் பேரில்தான் நான் பல்லவத்திற்குப் புறப்பட்டு வந்தேன். என்னை அவன் பல்லவ மன்னனாக அமர வைப்பான் என்று நம்புகிறேன்..!" — பல்லவமல்லன் கூறினான்.

பரகாலன் ஸ்தம்பித்துப் போனார்.

"யார் அந்த தேவராஜன்?" — பரகாலன் கேட்க, பல்லவமல்லன் பரகாலனை ஆழமாகப் பார்த்தான்.

"தேவராஜன் எங்கள் குலதெய்வம். நான் தேவராஜ மார்க்கம் என்கிற வைணவ பிரிவைச் சேர்ந்தவன். அவன்தான் பல்லவர்களுக்கும் குலதெய்வம். அத்தி மலையில் கோயில் கொண்டிருக்கும் அத்தியூரான்தான் என்னை மன்னனாக நியமிப்பான்!" — பல்லவமல்லன் கூற, தன்னையும் அறியாமல் பரகாலனின் நினைவு வெள்ளக்குளத்தில் தான் சந்தித்த குமுதவல்லியின் பால் சென்றது.

மாலவன் என்கிற தெய்வம் தன்னை வழிநடத்துவான் என்று கூறும் இரண்டாவது ஜீவன், பல்லவமல்லன். அன்று மாலைதான் குமுதவல்லி அவனிடம் அதே கருத்தினைத் தெரிவித்திருந்தாள். எண்ணங்களை நிறைவேற்றுபவனா மாலவன்?

"இருவரும் எங்கே சென்று கொண்டிருக்கிறீர்கள்?" — பரகாலர் பண்டிதரைக் கேட்டார்.

“எனது சொந்த ஊரான நந்திபுரத்திற்குச் சென்று தலைமறைவாக இருக்கப் போகிறோம். சித்ரமாயனின் ஆட்கள் பல்லவ மல்லரைத் தேடி வருகின்றனர் என்று அறிகிறோம். காலம் கனியும்வரை நந்திபுர நகரிலேயே தங்கியிருப்பதாக உத்தேசம்!” — பரகாலரிடம் சற்றே பயம் விலக, பண்டிதர் கூறினார்.

பல்லவ மல்லனையே யோசனையுடன் பார்த்தார், பரகாலன். கோப்பெருஞ்செங்கண் சோழனுக்குப் பிறகு சோழம் பொலிவினை இழந்திருந்தது. சோழத்தின் அடையாளமாக உறையூர் பகுதியை ஆண்டு கொண்டிருந்தான், ஆதித்தன். மனதின் ஆழத்தில் மீண்டும் சோழத்தை வலுவான நாடாக்கி, பாண்டியத்தையும், சேரத்தையும், பல்லவத்தையும் அடக்கி ஆள வேண்டும் என்கிற விருப்பம் இருந்தது. ஆனால் பதுங்கிய சோழப் புலிக்கு மீண்டும் பாய்வதற்குத் தக்க தருணம் அமையவே இல்லை. பாண்டியத்திற்கு எதிராகப் பல்லவத்தை ஆதரிக்க மட்டுமே உறையூர் சோழனால் முடிந்தது.

பரகாலனுக்குப் பல்லவ மல்லனின் மீது ஒருவித வாஞ்சை உண்டானது. இந்தப் பாலகனை மன்னனாக அமர்த்தினால், காம்போஜத்தின் ஆதரவு பல்லவத்திற்குக் கிடைக்கும். பல்லவம், சோழம், காம்போஜம் மற்றும் ஈழம் ஆகிய நான்கும் ஒரு அணி அமைத்துப் பாண்டியர்களை எதிர்க்கலாம். ஈழத்திற்கும், பாண்டியத்திற்கும் பகைமை அதிகரித்துக் கொண்டிருக்கும் வேளையில், பல்லவ மல்லன் காஞ்சியில் மன்னனாக அரியணை ஏறினால், சோழத்தை பலப்படுத்தவும் நல்ல வாய்ப்பு.

பரகாலன் தனது மெய்க்காவலாளி தூண்டிலானை நோக்க, அவன் அவரது பார்வையைப் புரிந்துகொண்டு தனது புரவியில் இருந்து இறங்கினான்.

“பண்டிதரே! நீங்களும் பல்லவ மல்லனும் இந்தப் புரவியில் ஏறிக்கொள்ளுங்கள். உங்களை நந்திபுரத்தில் விட்டுவிட்டு, நாங்கள் மங்கை நாடு செல்கிறோம். வருங்

*காலப் பல்லவ மன்னர் வெகு தொலைவு நடந்திருக்கிறார், போலும். மிகவும் களைத்துக் காணப்படுகிறார்."*

*நன்றி கலந்த பார்வையுடன் பரகாலரை நோக்கிய பண்டிதர், திரும்பி பல்லவ மல்லனைக் காண்பதற்குள், அவன் இலாவகமாகத் தூண்டிலானின் புரவியின் மீது தாவி ஏறினான். அவன் பின்பாகத் தொற்றிக் கொண்டார், பண்டிதர்.*

*'பரவாயில்லையே! பல்லவமல்லன் தயாராகத்தான் வந்திருக்கிறான்!' — தனக்குள் நினைத்த பரகாலன், தனது பரிவாரங்களை நோக்கித் தலையசைக்க, அனைவரும் நந்திபுரம் புறப்பட்டனர். பல்லவமல்லன் அமர்ந்திருந்த தனது குதிரையின் கடிவாளத்தைப் பற்றியபடி அதன் வேகத்திற்கு ஈடு கொடுத்து ஓடத் துவங்கினான், தூண்டிலான்.*

*பரகாலனின் பரிவாரத்தினர், மீண்டும் தங்களது விஜய கீதத்தை கம்பீர நாட்டையில் பாடத்துவங்கினர்.*

'தேவராஜ குல வித்து
காம்போஜ வழித்தோன்றல்
பல்லவ மல்லன்தான்
காஞ்சியை ஆளவே
குதிரை மேல் வாரார்..'

*என்று தனக்குள் பாடத்துவங்கினான், பல்லவமல்லன்.*

*விடியலில் பண்டிதரின் மாளிகையின் வாயிலில் பரிவாரம் நின்றது.*

*புரவியில் இருந்து இறங்கினார்கள், பண்டிதரும் பல்லவ மல்லனும்.*

*பரகாலனை நோக்கிக் கரங்குவித்தார், பண்டிதர்.*

*"ஆலிநாடரே! தாங்களும், தங்கள் பரிவாரமும் எனது மாளிகையில் தங்கி சிரம பரிகாரம் செய்துவிட்டுப் போகலாமே..!" — பண்டிதர் கூற, எதிரே தெரிந்த மாலவனின் விண்ணகரத்தை வெறித்தபடி பதில் தந்தார், பரகாலன்.*

*"தவறாக நினைக்க வேண்டாம். உடனே எனது மங்கை நாட்டிற்குத் திரும்ப வேண்டும். பணிகள் அதிகம் உள்ளன!" என்றாலும் பரகாலனின் கண்கள் எதிரே தெரிந்த விண்ணகரத்தையே நோக்கின. விண்ணகரத்தைக் கண்டதுமே குமுதவல்லியின் அழகிய முகம் தோன்றியது!*

*கண்கள் அந்த ஆலயத்தையே வெறித்தாலும், பரகாலனின் நினைவு மீண்டும் வெள்ளக்குளத்திற்குப் பாய்ந்து சென்றது. அல்லிப்பொய்கையில் தனது குடத்தில் நீரை நிரப்பிக் கொண்டிருந்த குமுதவல்லி அவரது கண்களில் புலப்பட்டாள்.*

*'ஒரு வைணவனை நோக்கித்தான் அந்தக் குமுத மலராள் மனம் குவிவேன் என்கிறாளே. ஒரு வைண வனாகத் திகழ்வது எங்ஙனம்?' பரகாலன் அந்த ஆலயத்தையே தொடர்ந்து நோக்கினான்.*

*"பண்டிதரே! அதோ தெரியும் ஆலய நாயகன் யார்?" — பரகாலன் கேட்டார்.*

*"நந்தியின் கர்வத்தை ஒடுக்கிய பெருமாள் *ஜகன்னாதன் அந்த ஆலயத்தில் குடிகொண்டிருக் கிறான்..! மிகவும் புராதன ஆலயம் இது. வாருங்களேன்!*

---

* நாதன் கோயில் என்கிற பெயரில் தற்போது கும்பகோணம் மற்றும் பழையாறை அருகே உள்ளது. பின்னாளில் சோழர்களின் பிரதம அமைச்சர் அநிருத்த பிரும்மராயர் அவதரித்த மண். 'நாதன் கோயில்' என்னும் இடம் பழைய பல்லவரின் தென்புறக் கோட்டையாக இருந்தது. அதற்கு நந்திபுரம் என்பது பெயர். பல்லவமல்லன் இங்கு தங்கியிருந்த சமயம் பார்த்துப் பாண்டியன் தன் துணைவரான சேர மன்னன் வில்லாளன் கோதை, சபர மன்னன் உதயணன், கங்க மன்னன் பூவிக்கிரமன் மற்றும் சாளுக்கியரின் பிரதிநிதி சித்ரமாயன் ஆகியோருடன நந்திபுரத்தைச் சுற்றி வளைத்தான். பாண்டியன் படையெடுப்பை எதிர்பாராத நந்திவர்மன் நாதன் கோயிலுக்குள் அகப்பட்டுக் கொண்டான். நந்திவர்மன் அங்கிருந்து தப்பியதும், அவனைக் காப்பாற்றிப் பல்லவ தளபதி உதயசந்திரன் வசம் பரகாலன் பல்லவ மல்லனை ஒப்படைத்ததும், பரபரப்பை ஏற்படுத்தும் நிகழ்வுகள்.

நீராடிவிட்டு ஆலயத்திற்குச் சென்று தரிசிக்கலாம்!" — பண்டிதர் மீண்டும் அழைத்தார்.

"நந்தியின் கர்வத்தை அடக்கியதோடு நிற்கட்டும். எனது கர்வத்தை அடக்குவதற்கு இன்னும் காலம் வரவில்லை. போர் வீரர்களுக்குக் கர்வம் மிகவும் அவசியம். இப்போது ஆலயத்தினுள் நுழைந்து, எனது கர்வ பங்கம் நிகழ்ந்துவிட்டால், பிறகு என்னால் போர் புரிய முடியாது. நான் சென்று வருகிறேன்!" என்ற பரகாலர் பல்லவ மல்லனை நோக்கிப் புன்முறுவலித்தார்.

பல்லவ மல்லனும் அவரை நோக்கிப் புன்னகை செய்ய, பரகாலர் அங்கிருந்து தனது பரிவாரங்களுடன் திருமங்கை நாட்டிற்குப் புறப்பட்டார்.

சிறிது தொலைவே சென்றிருப்பார்கள். பஞ்சவனின் உள்ளுணர்வு திடீரென்று மீண்டும் விழித்துக் கொண்டது. அந்தத் தெருவின் முனையில் ஒரு புளிய மரம் நின்றிருந்தது. அதன் அடர்த்தியான இலைகளின் ஊடே மறைந்திருந்த ஓர் உருவம், பண்டிதருடன் நிற்கும் பல்லவ மல்லனையும், இவர்களையும் மாற்றி மாற்றி நோட்டம்விட்டுக் கொண்டிருந்தது.

தாளூதுவான் தனது சங்கினை எடுத்து ஒலி எழுப்ப, பரகாலன் திடுக்கிட்டுத் திரும்பி நோக்கினான். பஞ்சவன் புளியமரத்தை நோக்கித் தலையை அசைக்க, உடனே பல்லவ மல்லனைச் சூழ்ந்திருக்கும் ஆபத்தினை உணர்ந்து கொண்டார், பரகாலர்.

அந்தப் புளியமரத்தில் இருந்து இறங்கிய சித்ரமாயனின் ஒற்றனான வஜ்ரசேனன் என்பவன் தனது குதிரையில் ஏறி, காஞ்சியை நோக்கி விரைந்தான்.

பரகாலனை பல்லவமல்லன் மிகவும் கவர்ந்து விட்டிருந்தான். அந்தப் பாலகனை தான் காப்பாற்ற வேண்டும் என்கிற ஒருவித உத்வேகம் தோன்ற தனது பரிவாரத்தை நோக்கித் தலையசைத்தார்.

குமுதவல்லியால் தான் ஒரு தீவிர வைணவனாகி, பன்னிரு ஆழ்வார்களில் கடைக்குட்டியாகி, பாரதத் தேசத்தில் பரவிக் கிடக்கும் மாலவன் விண்ணகரங் களுக்குச் சென்று பிரபந்தங்களைப் பாடி, அந்தப் பிரபந்தங்களில், நந்திவர்மனின் மீது தான் கொண்டுள்ள வாஞ்சையைப் பிரதிபலிக்கும் வண்ணமாகப் பிரபந்தங் களை இயற்றப் போகிறோம் என்பதை அப்போது பரகாலன் அறியவில்லை.

பொதுவாக ஒருவனது வாழ்க்கையில் எழும் வினாக்களுக்குக் காலம்தான் பதில் கூறும். ஆலிநாடனின் மனதில் எழும் கேள்விகளுக்கு அந்தப் பரகாலம்தான் பதில் கூறப் போகிறது. பரத்துவம் அமைத்துத்தர இருந்த காலம் என்பதனைக் கூறவும் வேண்டுமா என்ன?

# 15. உதயசந்திரன் உதயமானான்!

மதுசூதன பண்டிதரின் மாளிகையில் பல்லவ மல்லன் தங்கி வருவது மிக இரகசியமாக வைக்கப் பட்டது. தண்ட நாயகர் ஆலவாயர், உபதளபதி விஜய விக்கிரமன், ராஜகுரு காஸ்யப சதகரணி ஆகியோர் நாகை துறையில், நந்தினி கலத்தில் இருந்து இறங்கியதும் வெவ்வேறு பாதைகளில் காஞ்சிக்கு பயணித்தனர். விஜயவிக்கிரமன் மட்டும் வில்வலம் பகுதிக்குச் சென்றான். பழைய பல்லவத் தளபதி உதயசந்திரன். தற்போது பல்லவத்தின் படைகளை இரகசியமாகத் திரட்டிக் கொண்டிருந்தான்.

குந்தள அரசனான தந்திதுர்கனுக்கு பிறந்த மகன் தான் உதயசந்திரன். பல்லவத்தின் மீது தீரா பற்றுக் கொண்டிருந்தான். பல்லவத்தைப் பழைய பொலிவுடன் திகழ வைக்க வேண்டும் என்கிற உத்வேகம் உதய சந்திரனிடம் அதிகமாகவே இருந்தது.

வில்வலம் வேகவதி ஆற்றங்கரையில் இருந்தது. அதன் தலைவனான உதயசந்திரனைச் சந்தித்து, காம் போஜத்தில் இருந்து பல்லவமல்லன் வந்திருப்பதை அறிவித்தான்.

“தளபதியாரே! பல்லவத்தின் மன்னன் வந்துவிட்டார். தற்போது நந்திபுரத்தில் தலைமறைவாக மதுசூதன பண்டிதரின் பாதுகாப்பில் உள்ளார்.” — விஜய விக்கிரமன் கூறியதும், உதயசந்திரன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. தனது இருக்கையிலிருந்து

எழுந்து தாவி வந்து விக்கிரமனை அணைத்துக் கொண்டான்.

"வற்றிக்கிடக்கும் பாலாற்றில் மீண்டும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவது போன்று, வறண்டு கிடக்கும் எனது இதயத்தில் பாலை ஊற்றெடுத்து ஓடச்செய்யும் செய்தியை தெரிவித்திருக்கிறாய், விக்கிரமா! இனி புதிய உத்வேகத்துடன் எனது பணிகளை ஆற்றுவேன். விரைவில் பல்லவ மன்னர் காஞ்சியின் அரியணையை அலங்கரிப்பார்.." — உதயசந்திரன் கூறிக்கொண்டிருந்த அதே சமயத்தில், வஜ்ரவேலன் சித்ரமாயனின் முன்பாக நின்றிருந்தான்.

"நந்திபுரத்தில் புலவர் மதுசூதன பண்டிதரின் மாளிகையில் ஒரு பன்னிரண்டு வயது பாலகன் தங்கி யிருக்கிறான். காம்போஜத்தில் இருந்து வந்திருப்பதாக அறிகிறேன். காம்போஜ மன்னன் ஹிரண்ய ஹரிவர் மாவின் மகன்களில் ஒருவன். அவனை மன்னனாகக் காஞ்சியின் அரியணையில் அமர்த்த திட்டம் தீட்டி வருகிறார்கள்..!" — வஜ்ரசேனன் கூறியதும், ஆவேசம் அடைந்தான் சித்ரமாயன்.

சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்யன், கங்க மன்னன் பூவிக்கிரமன், பாண்டியன் ஸ்ரீமாறன் வல்லபன், சேரன் வில்லாளன் கோதை மற்றும் சபர மன்னன் உதயணன் ஆகியோருக்கு தகவலை அனுப்பினான்.

நந்திபுரத்தில் பல்லவமல்லன் மறைந்திருக்கிறான் என்று செய்தி வர, கங்க மன்னனும், சாளுக்கிய மன்னனும் தங்களது படைகளை சித்ரமாயனுக்கு அனுப்பினர்.

பாண்டிய மன்னன் ஸ்ரீமாறன் வல்லபன் தனது படைகளோடு நந்திபுரத்திற்குப் புறப்பட்டான். சபர மன்னன் உதயணனும், சேரன் வில்லாளனும் தத்தம் படைகளோடு நந்திபுரத்தை முற்றுகை இட்டனர்.

நந்திபுரத்தின் கிழக்கில் சித்ரமாயனும், தெற்கில் பாண்டியனும், மேற்கில் வில்லாளனும், வடக்கில் உதயணனும் நின்று பல்லவமல்லன் தப்பிச் செல்ல முடியாதபடி வியூகம் அமைத்தனர்.

மதுசூதன பண்டிதர் கலவரப்பட்டுப் போனார். 'உனது மகனை பல்லவ மன்னனாக அரியணையில் அமர்த்துகிறோம் என்று கூறிவிட்டு, இப்படிக் காலனுக்குக் காவு கொடுக்கப் போகிறோமே' — என்கிற அச்சம் அவரது மனதைக் கவ்வ, என்ன செய்வது என்று தெரியாமல், பல்லவ மல்லனை அழைத்துக்கொண்டு ஜகன்னாத பெருமாள் ஆலயத்திற்குள் சென்று பதுங்கிக் கொண்டார். சித்ரமாயனும், ஸ்ரீமாறனும் ஆலயத்தினுள் நுழைந்து கொலை பாதகத்தைப் புரியமாட்டார்கள் என்று நம்பினார், பண்டிதர்.

பாண்டியன் ஸ்ரீமாறன் தலைமையில் சித்ரமாயன், வில்லாளன், மற்றும் உதயணன் ஆகிய நால்வரும் ஆலோசனை செய்து கொண்டிருந்தனர்.

'மறுநாள் சூரிய உதயத்திற்குள் பண்டிதரும், பல்லவ மல்லனும், சித்ரமாயனிடம் சரணடைய வேண்டும். இல்லையேல், படைகள் நந்திபுரத்தினுள் நுழைந்து பல்லவ மல்லனை கைது செய்யும்..!' — என்று செய்தி அனுப்பப்பட்டது.

பண்டிதர் திணறிப் போனார். இவரால் என்ன முடிவு எடுக்க முடியும்? பல்லவ மல்லனை சித்ரமாயனிடம் ஒப்படைத்த அடுத்தகணமே, அந்தப் பாலகனைக் கொன்றுவிடுவார்களே..!

"அத்திமலைத்தேவா! உனது பல்லவ மன்னனை நீதான் காக்க வேண்டும். இந்த இக்கட்டில் இருந்து நீயே அவனைக் காப்பாற்ற வேண்டும்!" — மனமுருக பிரார்த்தித்துக் கொண்டிருந்தார், பண்டிதர்.

நந்திபுரத்தின் கிழக்கில் சித்ரமாயனின் முகாம்!

உறக்கத்தில் இருந்து மீண்ட சித்ரமாயன் தன்து கூடாரத்தில் இருந்து வெளியேறி காற்றாட உலாவிக் கொண்டிருந்தான். பல்லவ மல்லனின் தலையை வாங்கிவிட்டு, காஞ்சியின் நிரந்தர மன்னனாகத் தன்னை அறிவித்துக் கொள்ள வேண்டியதுதான். சேரன், பாண்டியன், சாளுக்கியன், கங்கன் மற்றும் சபரன் என்று அனைத்து மன்னர்களுமே இவனை ஆதரிக்கும் நிலையில், மீண்டும் பல்லவத்தால் தலைதூக்க முடியுமா என்ன?

'தான் பல்லவ மன்னன் ஆவது உறுதி' என்கிற நினைப்பில் அந்த விடியலின் சுகமான காற்றை அனுபவித்து நடந்து கொண்டிருந்தான்.

அப்போது —

"ஹாய்.. ஹாய்..!" — என்று கூக்குரல் கேட்க, திரும்பி நோக்கினான் சித்ரமாயன். இரண்டு மூன்று வண்ணான்கள் கழுதைகளை ஓட்டியபடி சென்று கொண்டிருந்தனர். கழுதைகளின் முதுகினில் வஸ்திர மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவை நிதானமாகக் கொள்ளிட ஆற்றங்கரையை நோக்கிச் சென்றுகொண்டிருக்க, ஒருவன் மட்டும் சித்ரமாயனை பார்த்துவிட்டு, தலையில் கட்டியிருந்த பாகையை அவிழ்த்துக் கட்கத்தில் சொருகியபடி ஓடி வந்தான். நெற்றியில் ஊர்த்வ புண்டரத்தை இட்டுக்கொண்டிருந்த அந்த வண்ணான், பணிவுடன் சித்ரமாயனின் முன்பாக நின்றான்.

"ஐயா! சலவை செய்யக் கொள்ளிடத்திற்குப் போகிறேன்! உங்கள் வஸ்திரங்கள் ஏதாவது இருந்தால் தருகிறீர்களா?" — அடக்கமான குரலில் கேட்டான், அந்த வண்ணான்.

"இன்னும் எனது வஸ்திரத்தில் போர்க்களத்தின் புழுதியோ, அல்லது எதிரிகளின் குருதியோ படிய

வில்லை. படிவதற்கும் வாய்ப்பில்லை. எனவே உனக்கு இங்கே வேலையில்லை!" — கர்வத்துடன் கூறினான், சித்ரமாயன்.

"ஓ..! சண்டை போட வந்திருக்கிறீர்களா? நீங்கள் எந்த நாட்டு மன்னன்?" — அப்பாவியாகக் கேட்டான் அந்த வண்ணான்.

"தற்போது பல்லவ நாட்டை ஆளும் சாளுக்கிய பிரதிநிதி. எனது பெயர் சித்ரமாயன். வருங்காலத்தில் நானே பல்லவ மன்னனாகப் பதவி ஏற்கப் போகிறேன்!" — சித்ரமாயன் கூறினான்.

"சந்தோஷம் ஐயா! எனது பெயர் கண்டகோபாலன். நந்திபுரத்தில் இருக்கும் ஜகந்நாதன் ஆலய பெருமானின் வஸ்திரங்களைத் துவைத்துத் தருபவன். இப்போது ஆலயத்திற்குத்தான் துணிகளை எடுத்து வரச் செல்கிறேன். வருங்காலப் பல்லவமன்னரே! அடியேனுக்கு ஒரு ஆசை. தாங்கள் அதை நிறைவேற்றி வைக்க வேண்டும்..!" — கண்டகோபாலன் கூற, அவனை சுவாரசியம் இல்லாமல் நோக்கினான், சித்ரமாயன்.

'யாசகம் கேட்கப் போகிறானோ?'

"ஒன்றுமில்லை ஐயா. நந்திபுர ஜகந்நாதர் ஆலயம் சென்று அவரது வஸ்திரங்களை மூட்டைகட்டி வருவேன். அவற்றை மீண்டும் ஆற்றில் தோய்த்து உலர்த்தி மாலை மீண்டும் கொண்டு வருவேன். இன்று மாலை நான் வரும்போது ஜகன்னாதனின் நீல பட்டாடை ஒன்றை உங்களுக்குப் பரிசளிக்க விரும்புகிறேன். தங்களது பட்டாபிஷேகத்தின் போது அந்த நீலப் பட்டினை அணிந்து கொள்ள வேண்டும். பல்லவ மன்னர் முடி சூட்டிக்கொள்ளும் போது நான் அளித்த பட்டாடையை அணிந்து கொண்டார் என்கிற பெருமையை எனக்குத் தாருங்கள்." — கண்டகோபாலன் கூறியதும், சித்ரமாயனை உற்சாகம் தொற்றிக்கொண்டது.

மன்னனாக அவனுக்குக் கிடைத்த முதல் அங்கீகாரம் இது. அவன் தரும் நீலப் பட்டாடையைத்தானே அணியச் சொல்கிறான். அணிந்து கொண்டால் போகிறது..!

“நாங்கள் வந்த காரியம் முடிந்தவுடன் இன்று பிற்பகலே கூடக் காஞ்சிக்குப் புறப்பட்டுவிடுவோம். எனவே நீ தர விரும்பும் நீலப் பட்டாடையை உடனே கொண்டு வா!” என்றான்.

“ஐயா! ஆலயத்திற்குள் போக முடியுமா? உங்கள் படையினரின் கெடுபிடிகள் அதிகமாக உள்ளதே?” — கண்டகோபாலன் கேட்டான்.

“யாரங்கே!” என்றான் சித்ரமாயன்.

அதிகாரி ஒருவர் ஓடி வந்தார்.

“இவன் ஆலய வஸ்திரங்களைச் சலவை செய்யும் வண்ணான். அவன் ஆலயத்திற்குள் சென்று வருவதற்கான அனுமதிச் சான்றினை வழங்குங்கள். விரைவாக வந்துவிடு, கோபாலா! எந்தச் சமயத்திலும் எங்கள் படைகள் ஆலயத்தினுள் பிரவேசிக்கலாம்..!” சித்ரமாயன் கோபாலனை எச்சரித்தான்.

“இமைக்கும் பொழுதினில் வந்துவிடுகிறேன். பெருமாளின் வஸ்திரங்களைப் பட்டர் மூட்டைகட்டி வைத்திருப்பார். எடுத்துக்கொண்டு வர வேண்டியது தான்.” — கண்டகோபாலன் கூறினான்.

அதிகாரி தந்த சுவடியைப் பெற்றுக்கொண்டு தனது கழுதையுடன் ஜகன்னாதரின் ஆலயத்தை நோக்கி நடந்தான் கண்டகோபாலன்.

சுவடியைக் கண்டதும், படையினர் அவனைத் தடுக்க முற்படவில்லை. கழுதையை ஓட்டிச் சென்று அதனை ஆலயக் குளத்தின் அருகே நிற்க வைத்தான். ஆலயத்தினுள் நுழைந்தவன், வெளியே வந்தபோது

அவனது தோள்கள் இரண்டிலும் பெரிய துணி மூட்டைகள் காணப்பட்டன. அவற்றைக் கழுதையின் மீது வைத்துக்கட்டிய கண்டகோபாலன், ஒரு நீலப் பட்டாடையை மட்டும் எடுத்துக் கோயில் குளத்திலேயே அதனைத் தோய்த்துக் காய வைத்தான். பிறகு அந்தப் பட்டாடையை அழகாக மடித்து, கழுதையின் மீது இருந்த மூட்டையின் மீது வைத்தான்.

காவலாளிகள் அவனைத் தடுக்கவில்லை என்றாலும் ஒரு சோதனை அதிகாரி மட்டும் துணி மூட்டைகளை ஆராய்வதற்கு முற்பட்டார். மூட்டையின் மீது கைவைக்க, சட்டென்று கூக்குரல் இட்டான், கண்டகோபாலன்.

"வஸ்திர மூட்டைகளின் மீது கைவைக்காதே. சித்ரமாயருக்கு வஸ்திரங்கள் எடுத்துச் செல்கிறேன்!" என்றதும் அந்த அதிகாரி பணிவுடன் விலகி வழிவிட்டான்.

கண்டகோபாலன் நேராகச் சித்ரமாயனின் முகாமிற்குச் சென்று, ஜகன்னாத பெருமாளின் நீலப் பட்டாடையை அவனுக்கு நீட்டினான்.

"பல்லவ மன்னரே! நான் கூறிய நீலப் பட்டாடை இதோ! ஆலய புஷ்கரணியிலேயே அதனைச் சுத்தம் செய்துவிட்டேன். மறக்காமல் உங்கள் பட்டாபிஷேகத் தன்று இதனை நீங்கள் அணிந்து கொள்ள வேண்டும்!" கண்டகோபாலன் நீட்டிய அந்த நீலப் பட்டாடையைப் பெற்றுக்கொண்டான், சித்ரமாயன்.

"உனது அன்பிற்குப் பெருத்த நன்றி!" — கூடார திரையை விலக்கிக்கொண்டு வெளியேறிய கண்ட கோபாலனுக்கு நன்றி சொல்வதற்காகப் பின்பாகச் சென்றான், சித்ரமாயன்.

சித்ரமாயனின் கண்களில் கண்டகோபாலனின் கழுதை புலப்பட்டது. வரும்போது இரண்டு துணி மூட்டைகள்தான் இருந்தன. இப்போது நான்கு பெரிய

மூட்டைகள் இருந்தன. "ஹேய்.." என்று கண்டகோபால்ன் குரல் கொடுத்ததும், அந்தக் கழுதை நடக்கத் துவங்கியது. வரும்பொழுது இல்லாத கனத்தை இப்போது அந்தக் கழுதை உணர்ந்தது. சற்றே தள்ளாடி கழுதை நடை போட, அதைச் சித்ரமாயன் கண்டான்.

'இந்தக் கழுதை பொதி சுமப்பதைப் போன்றுதான் நான் மன்னனாகப் பல்லவ மகுடத்தைச் சுமக்கப் போகிறேன். பல்லவ மன்னனாகப் பதவியேற்றதும், சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்யனுக்குக் கொடுத்த வாக்கினை நிறைவேற்றியாக வேண்டும். எப்பாடு பட்டாவது, காணாமல் போன அத்திமலைத்தேவனின் சிலையைக் கண்டுபிடித்து விக்கிரமாதித்யன் வசம் ஒப்படைக்க வேண்டும். அதனைக் கொண்டு அவன் அஸ்வமேதயாகம் செய்ய உள்ளானாம்.'

கண்டகோபாலன் கடைசியாக ஒருமுறை சித்ரமாயனை நோக்கிப் புன்னகை புரிந்தபடி நகர்ந்தான்.

வரும்பொழுதினில் இல்லாத கனம் இப்போது எப்படி ஏற்பட்டது என்பதை யோசிக்காமல், தனது விதியை நொந்தபடி அந்தக் கழுதை மெதுவாக நடந்து கொண்டிருந்தது.

ஆலயத்தினுள் நுழைந்திருந்த கண்டகோபாலன் அங்குப் பதுங்கியிருந்த பல்லவ மல்லனை ஜகன்னாதரின் வஸ்திரங்கள் இடையே மறைத்து மூட்டைகட்டி கழுதை மீது வைத்திருந்தான்.

வருங்காலப் பல்லவ மன்னன் பட்டத்து யானையின் மீது பவனி வருவதற்கு முன்பாகக் கழுதையின் மீது உலா சென்று கொண்டிருந்தான்.

மூட்டையின் அதிகக் கனத்திற்குக் காரணம், அதனுள் ஒளிந்திருந்த பன்னிரண்டு வயது பல்லவ மல்லன் என்பதனை அந்தக் கழுதையும் புரிந்துகொள்ளவில்லை. சித்ரமாயனும் அறியத் தவறியிருந்தான்.

மதியம் வரை பண்டிதரிடமிருந்தோ, பல்லவ மல்லனிடம் இருந்தோ செய்தி வராத நிலையில், சித்ரமாயனின் படைகளும், பாண்டியப் படைகளும் ஜகன்னாதர் ஆலயத்தினுள் புகுந்தன.

சந்நிதியில் இருந்த மதுசூதன பண்டிதரைச் சூழ்ந்தன படைகள்.

"எங்கே காம்போஜ இளவரசன்?" — சித்ரமாயன் கேட்டான்.

"காம்போஜ இளவரசனா? இங்கே எதற்கு வரப் போகிறான்?" — பண்டிதர் பதில் தந்தார்.

"உம்முடன் ஒரு பன்னிரண்டு வயது பாலகன் இருந்தானே? எங்கே அவன்?" — ஸ்ரீமாறன் பாண்டியன் கேட்டான்.

"இதோ இருக்கின்றானே! திருவாழி செல்வன். எங்கள் ஆலய பட்டருக்கு உதவியாக இருக்கட்டும் என்று திருக்குடந்தையில் இருந்து நேற்றுதான் தருவித்தோம். திருவாழி செல்வா! மன்னர் பிரானுக்குத் தீர்த்தம் சாதித்து, சடகோப மரியாதையைச் செய்..!" — பண்டிதர் கூறினார்.

தனது முன்பாக நின்று தீர்த்தத்தை நீட்டிய அந்தச் சிறுவனை உறுத்துப் பார்த்தான். அரச இலட்சணங்கள் இன்றிக் கரிய திருமேனியும், இடுங்கிய கண்களுமாகக் காட்சி தந்த அந்தச் சிறுவனைப் பார்த்ததுமே அவன் பல்லவ மல்லனாக இருக்க முடியாது என்பதனை யூகித்தான், பாண்டியன்.

ஆலயம் முழுவதும் தேடியும், வேறு சிறுவன் யாரும் அகப்படாததால், பாண்டியனும், சேரனும் பெரும் ஏமாற்றம் அடைந்தார்கள். சித்ரமாயனை கோபத்துடன் வெறிக்க, தனக்குப் பொய்த் தகவலை அளித்த வஜ்ரசேனனின் மீது கடுங்கோபம் கொண்டான், சித்ரமாயன்.

*மதுசூதன பண்டிதர் நிம்மதி பெருமூச்சு ஒன்றை சிந்தியபடி ஜகன்னாத பெருமாளை நோக்கிக் கை குவித்தார். பல்லவ மல்லனை எப்படிக் காப்பாற்றுவது என்று யோசித்துக் கொண்டிருக்கையில்தான் வண்ணான் கண்டகோபாலன் உள்ளே நுழைந்தான். அவனைக் கண்டதுமே, பண்டிதருக்கு அவன் யார் என்பது புரிந்துவிட்டது. கண்களில் நீர் மல்க, கண்டகோபாலனை நோக்கிக் கைகூப்பினார். கண்டகோபாலன் தனது திட்டத்தைப் பண்டிதரிடம் கூறியதுமே, எவ்வித ஐயமும் இன்றி அந்தத் திட்டம் ஈடேறும் என்று தோன்றிவிட்டது, பண்டிதருக்கு. உடனே, பண்டிதர், கண்டகோபாலருக்கு உதவியாகக் காரியத்தில் இறங்கினார்.*

*பல்லவ மல்லனை எப்படியாவது பல்லவ தளபதி உதயசந்திரனின் வசம் ஒப்படைத்துவிடும்படி கண்ட கோபாலனிடம் வேண்டிக் கொண்டார், பண்டிதர்.*

*கண்டகோபாலன் ஆலயத்தைவிட்டு எவ்விதத் தடையுமின்றி வெளியேறியதைக் கண்டதும், 'வருங்காலப் பல்லவ மன்னனைக் காப்பாற்றிவிட்டோம்!' என்கிற பெருமிதத்தில் அப்படியே ஆயாசத்துடன் அமர்ந்து விட்டார்.*

*யார் அந்தக் கண்டகோபாலன்?*

'சதுரங்க தளத்துடன்
சதுர்திரு நகர் தன்னில்
அதிவேகமாகவே
குதிரை மேல் வாரார்!
பொன் குதிரை மேல் வாரார்..!
ஆடல்மா பொன் குதிரை மேல் வாரார்
ஆலிநாடர் குதிரை மேல் வாரார்.'

*ஆம்! ஆலிநாடர் என்கிற திருமங்கை நாட்டு சிற்றரசர், சோழ சேனாதிபதி பரகாலன்தான் கண்ட கோபாலனாகக் கழுதையின் பின்பாகச் சென்று கொண்டிருந்தார்.*

★ ★ ★

*வில்வலம்!

ஊரின் எல்லையில் பெருகிக்கொண்டிருந்த வேகவதி கரையில் களிப்புடன் நின்றுகொண்டிருந்தான், உதய சந்திரன். மன்னன் பல்லவமல்லன் அவனை நோக்கி வந்து கொண்டிருப்பதாகத் தகவல் வந்திருந்தது.

உதயசந்திரன் நெடிய உயரம் கொண்டவன். ஒல்லியான தேகம். மார்புப் பகுதி மேடாகவும், வயிற்றுப் பகுதி பள்ளமாகவும், நேர்க்கோடு ஒன்றை வரைந்தது போலத் திகழ்ந்தான். வலிமை அவனது தேகத்தில் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. குந்தள ரத்தமும், பல்லவக் குருதியும் சேர்ந்து அவனுக்குப் பேரழகை வாரி வழங்கியிருந்தது. இத்தகைய கம்பீரமும், வீரமும், வலிமையையும் கொண்டிருந்தவன், தானே பல்லவ மன்னனாக அறிவித்துக் கொண்டிருக்க முடியும். ஆனால் மனத்தில் விசுவாசம் என்கிற எண்ணம் திகழ்கின்ற போது, அங்கே சுயநலம் இருக்காது என்பதற்கு உதாரணமாகத் திகழ்ந்தான், உதயசந்திரன்.

பாண்டியர்கள், சேரர்கள், சபரர்கள், சாளுக்கியர்கள் மற்றும் கங்கர்கள் என்று அனைவருமே பல்லவத்திற்கு எதிராக அணி சேர்ந்திருந்த நிலையிலும், உதயசந்திரன் தனது படையினருக்குத் துணிவையும் தன்னம்பிக்கையையும் அளித்திருந்தான்.

---

* தற்போது பாண்டிச்சேரி அருகே உள்ள வில்லியனூர் என்கிற பகுதிதான் வில்வவளநல்லூர் என்கிற புராண காலத்துப் பெயரைக் கொண்டிருந்தது. சங்கபாணி ஆற்றின் கரையில் அகத்தியர் நிறுவிய காமேஸ்வர லிங்கம்தான் தற்போது காமேஸ்வரர் ஆலயமாக இங்கே உள்ளது. இந்த ஆலயத்தின் அம்பிகை சந்நிதியில்தான் ராஜகாந்தி தனது மகன் உதய சந்திரனுடன் பதுங்கியிருந்தாள். பிற்காலத்தில் உதிரப் பெருக்கினால் (Haemophilic) பாதிக்கப்பட்ட விஜயாலய சோழன் இங்கே வேண்டிக்கொண்டு குணமடைந்ததாகக் கூறுகிறார்கள்.

“நந்திவர்ம பல்லவர் நமக்கு மன்னராகக் கிடைத்து விட்டார். இனி அத்திமலைத்தேவனும் விரைவில் நமக்குக் கிடைக்கப் போகிறான். பல்லவம் வீறுகொண்டு எழும் காலம் வந்துவிட்டது. பாண்டியன் ஸ்ரீமாறனையும் அவனுக்குத் துணை நிற்பவர்களையும் சிதற அடிப்போம்! முதலில் தன்னை வருங்காலப் பல்லவ மன்னன் என்று எக்காளம் செய்து கொண்டிருக்கும் சித்ரமாயனின் தலையை வாங்குவேன்..!” என்று சபதம் செய்தான், உதய சந்திரன்.

உதயசந்திரன் வில்வலம் பகுதியில் தன் படைகளுடன் நந்திபுரத்திலிருந்து வரும் வருங்கால பல்லவ மன்னன், பல்லவமல்லனின் வரவை எதிர்நோக்கியிருந்தான்.

பல்லவ ராஜசிம்மன் என்கிற இரண்டாம் நரசிம்மனின் பெயரன் உதயசந்திரன். முதலாம் மகேந்திரன் பல்லவ மல்லனாக மல்லையை எழுப்பி அழியாப் புகழையும், கீர்த்தியையும் அடைந்தானே தவிர, மகேந்திரன் என்று அவனுக்குப் பின்பாகப் பெயர் கொண்ட இருவருமே அதிக நாட்கள் உயிர் வாழ வில்லை. விதி அவர்களுக்கு எதிராக ஒரு சதியினைத் தான் அரங்கேற்றியிருந்தது போலும். நரசிம்மவர்மனின் மூத்த மகன், அறிவு பக்குவம் இன்றி, உக்ரோதயத்தை அணிந்துகொண்டு இரவு சுவர்ணமுகி காட்டிற்குச் சென்று உக்ரோதயத்தையும் தனது உயிரையும் சேர்த்து பறிகொடுத்திருந்தான்.

ராஜசிம்ம பல்லவன் என்கிற இரண்டாம் நரசிம்ம வர்மனின் மூத்த மகன் மகேந்திரன் யுவராஜாவாக இருக்கும்போதே, கடம்ப நாட்டு இளவரசி ஐராவதியை மணந்து கொண்டான். தங்களுக்குப் பிறந்த மகளுக்கு ராஜகாந்தி என்று பெயரிட்டிருந்தான். கருவூர் அருகே இருந்த மலைக்காடுகளில் வேட்டையாடச் சென்ற மகேந்திரன், அங்கு இருந்த காட்டு மனிதர்களின் ஆராதனை சிலையைத் தன்னையும் அறியாமல்

சேதப்படுத்த, அதனால் வெகுண்ட அந்த வனவாசிகள், மகேந்திரனை சூழ்ந்துகொண்டு அவன் தலையை வெட்டி, தங்கள் வன தெய்வத்திற்குப் பலி கொடுத்தனர்.

மகேந்திரன் இறந்துவிட, ராஜசிம்ம பல்லவனுக்குப் பிறகு அவனது இளைய மகன் பரமேஸ்வரன் அரியணை ஏறினான். இரண்டு நரசிம்மவர்மர்களின் மகன்களான மகேந்திரர்களும் அகோரமாக மரணத்தைச் சந்திக்க, அதன் பிறகு மகேந்திரன் என்கிற பெயரை தங்கள் மன்னர்களுக்கு வைப்பதை பல்லவம் நிறுத்திவிட்டது போலும்.

மகேந்திரனின் மகள் ராஜகாந்தி தனது தந்தையின் முகத்தையே பார்த்திராதவள். பரமேஸ்வரன் அவள் மீது அன்பை செலுத்திதான் வந்தான். ஒரு நாள், ராஜகாந்தி அத்திமலைத்தேவனின் ஆலயத்தில் அவனைத் தொழுது கொண்டிருந்த சமயம். ஒரு கம்பீர வாலிபன் அவள் முன்பாக வந்து நின்றான். அத்திமலைத்தேவனின் சந்நிதியில்தானே முன்பே பல ஜோடிகள் இணைந்திருந்தன. ஜெயவர்மன் — சாயாதேவி, தானவர்மன் — ககனமயி, சூரியவர்மன் — அவந்திகா என்று புகழ்பெற்ற காதலர்கள் தங்கள் வாழ்க்கைப் பயணத்தைத் துவக்கியதே அத்திமலைத்தேவன் சந்நிதியில்தானே..! ராஜகாந்தி தன்னை மறந்த நிலையில் அத்திமலைத்தேவனைத் தரிசித்துக் கொண்டிருந்த வேளையில், எதிரே நின்ற அந்தக் கட்டழகு வாலிபன் அவளையே உறுத்துப் பார்த்தபடி நின்றான். வீரமிக்க அவனது கண்கள் இப்போது காதலை வெளிப்படுத்திக் கொண்டிருந்தன.

அவனது பெயர் *வயிரமேகன். அசோகர் காலத்தில் தட்சிணத்தில் தோன்றி மறைந்து போன ராஷ்டிர

* இந்த வயிரமேகன்தான் தந்திதுர்கன் (கி.பி.735-756) என்கிற மன்னனாக ராஷ்ட்டிரகூடம் என்கிற குந்தள அரசை நிறுவினான். மான்யகேதம் அவனது தலைநகரம். எல்லோரா குறிப்புகள் தந்திதுர்கன் சாளுக்கியர்களை வென்றான் என்று கூறுகின்றன. சமன்காடு என்கிற தற்போதைய மராட்டிய மாநில

*கூடத்தை மீண்டும் நிறுவ உறுதி பூண்டிருந்தான் வயிரமேகன்.*

*புதிய சாம்ராஜ்யத்தை உருவாக்குவதற்கு அத்தி மலைத்தேவனின் அருளினைப் பெற வேண்டி வயிர மேகன் காஞ்சிக்கு வந்திருந்தான். சந்நிதியில் நிற்கும்போது தான் அவனது பார்வை எதிரே நின்றிருந்த ராஜ காந்தியின் மீது பதிந்தது. இருவரும் கண்டதும் காதலில் விழுந்தனர்.*

*ராஜகாந்தியின் சிற்றப்பன் பரமேஸ்வர பல்லவன் சாளுக்கியர்களிடம் மும்முரமாகப் போர் நிகழ்த்திக் கொண்டிருந்த நேரம். வயிரமேகனும் ராஜகாந்தியும் அத்திமலை ஆலயத்திலேயே மாலை மாற்றிக்கொண்டு மணவாழ்கையைத் துவக்கினர். அவர்களது காதல் பரிசாகத் தோன்றியவன்தான் உதயசந்திரன்.. தான் வருங் காலக் குந்தள அரசி என்கிற நினைப்பில் வாழ்வின் ஒவ்வொரு துளியையும் ரசித்து அனுபவித்தாள், ராஜ காந்தி. ஆனால் விதி அவர்களை நோக்கி விஷமத்தனமாகச் சிரித்தது.*

---

கோலாபூர் கல்வெட்டுகள், பதாமி சாளுக்கியர்களை வெற்றிபெற்றதாகக் கூறுகிறது. ராஜகாந்தியை காந்தர்வ விவாஹம் செய்து கொண்ட இவன், தனது பட்டத்து அரசியாகப் பவநகர் (குஜராத்) இளவரசி சுபாஷிணியை மணந்தான். லதா சாம்ராஜ்யம், மால்வ நாடு, தங்கம், கலிங்கம், சேஷம் என்று பல குறுநிலங்களை வென்றவன், மான்யகேது நகரில் அஸ்வமேத யாகத்தைச் செய்தான். வக்கலேரி கல்வெட்டு, இவன் காஞ்சிக்குப் படை எடுத்துச் சென்றதையும் தனது மகள் ரேவாதேவியை இரண்டாம் நந்திவர்மனுக்குத் திருமணம் செய்து தந்ததையும் குறிப்பிடுகின்றன. ராஜகாந்தியையும், தனது மகன் உதயசந்திரனையும் மான்யகேதுவுக்குத் தந்திதுர்கன் அழைக்க, ராஜகாந்தி தான் பல்லவத்தைவிட்டு வெளியேற விரும்பவில்லை என்று கூறி, வில்வலத்தில் தங்க, உதயசந்திரன் மாபெரும் வீரனாக வளர்ந்து அதனைத் தனது கோட்டையாக மாற்றிக்கொண்டான்.

குந்தள அரசை நிறுவுவதற்காகத் தனது ஆதரவாளர் களின் இருப்பிடத்திற்குப் புறப்பட்டுச் சென்றான், வயிரமேகன். சரியாகச் சாளுக்கிய போரில் பரமேஸ்வர பல்லவனும் கொல்லப்பட்டான். சாளுக்கியர்களின் பிரதிநிதியாக வந்த சித்ரமாயன், ஒத்தாடை அரண்மனையை ஆக்ரமித்துக் கொண்டான்.

ராஜகாந்தி மிகவும் நடுநடுங்கிப் போனாள். தனக்கும் உதயசந்திரனுக்கும் அவனால் பெரும் தீங்கு நேரிடலாம் என்பதனை அவள் உணராமல் இல்லை. கணவன் வயிரமேகனின் இருப்பிடத்திற்குச் செல்லலாம் என்றால் அவன் குந்தள அரசை நிறுவ வேண்டி மும்முரமாகப் போராடிக்கொண்டிருந்தான்.

பல்லவ மன்னன் ராஜசிம்மனின் பெயரன், சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்யனை எதிர்த்துப் புரட்சி செய்து கொண்டிருக்கும் வயிரமேகனின் மகன் என்கிற இரு காரணங்கள் போதுமே, உதயசந்திரனைக் கொல்வதற்கு. ஒத்தாடையில் இருந்து தப்பிய ராஜகாந்தி, வில்வலம் என்னும் காட்டுப் பகுதியில் உள்ள அம்பிகை கோயிலில் பதுங்கிக் கொண்டாள். அங்கிருந்த கிராம மக்கள் அவள் யார் என்பதை அறிந்ததும் அவளுக்கு அடைக்கலம் கொடுத்தனர். அந்தக் கிராமத்தின் செல்லப் பிள்ளையாக மாறினான் உதயசந்திரன்.

தந்திதுர்கனாக வயிரமேகன் பதவி ஏற்றதும், மான்யகேதுவிற்கு வரும்படி ராஜகாந்திக்கும், உதயசந்திரனுக்கும் அழைப்பு விடுத்தான். ஆனால் இருவருமே அதனை நிராகரித்துவிட்டனர்.

பாலகனாக இருக்கும்போதே உதயசந்திரனின் மனதில் ஒரு வைராக்கியம் துளிர்விட்டிருந்தது.

சித்ரமாயனைக் கொன்று பல்லவ மன்னனை காஞ்சி அரியணையில் அமர்த்துவேன்..!

அத்திமலைத்தேவனின் பிரதிமையை எங்கிருந்தாலும் தேடிக் கண்டுபிடித்து அவனது ஆலயத்தில் மீண்டும் பிரதிஷ்டை செய்வேன்.

கங்க மன்னன் பூவிக்கிரமன் வசம் உள்ள உக்ரோதயத்தை மீண்டும் கைப்பற்றி அத்திமலைத் தேவனிடம் ஒப்படைப்பேன்..!

உதயசந்திரன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர, இந்த வைராக்கியமும் உறுதியான அத்திமரமாக அவனுள் வளர்ந்தது.

தனது கோரிக்கையை ராஜகாந்தி ஏற்காததால், பவ நகர இளவரசி சுபாஷிணியை மணந்து கிருஷ்ணன் என்கிற மகனையும், ரேவாதேவி என்கிற மகளையும் பெற்றுக்கொண்டான், தந்திதுர்கன். மகள் ரேவாதேவி பேரழகியாக வளர்ந்து காஞ்சியின் வருங்கால அரசியாக அரசியலில் பெரும் பங்கு வகிக்கப் போகின்றாள்.

அது குறித்து ராஜகாந்தி கவலை கொள்ளவில்லை. எனது மகன் உதயசந்திரன் பல்லவத்தை மீட்பான் என்கிற நம்பிக்கையோடு காத்திருந்தாள்.

மீண்டும் ஒரு தூதுவன் மான்யகேதுவில் இருந்து வந்தான். இந்த முறை கணவன் தந்திதுர்கனின் கோரிக்கையை ராஜகாந்தியால் நிராகரிக்க முடிய வில்லை. தனது தங்கை சந்திரபிந்துவின் மகள் பீயுஷ மணியை உதயசந்திரனுக்கு மணம் முடிக்க விரும்புவ தாகக் கோரிக்கை விடுத்திருந்தான். ராஜகாந்தியும் தனது சம்மதத்தைத் தெரிவித்து அந்தத் தூதுவனிடம் பதில் அனுப்பியிருந்தாள்.

தனது மூத்த மகன் உதயசந்திரனை குந்தளத்தின் பட்டத்து இளவரசனாக அறிவிக்கவே சித்தமாக இருந்தான், தந்திதுர்கன். ஆனால் அத்திமலைத்தேவனின் மீதும், பல்லவத்தின் மீதும் தீராத காதல் கொண்டிருந்த உதயசந்திரன் மான்யகேதுவுக்குச் செல்வதை

விரும்பவில்லை. வில்வலத்திலேயே தங்கி பல்லவத்தின் மீட்சிக்காகப் போராடிக்கொண்டிருந்தான்.

பல்லவம் வாரிசில்லாமல் அழிந்து போனதற்கும், பாலாறு வற்றிப்போனதற்கும், அத்திமலைத்தேவனின் பிரதிமை காணாமல் போனதே காரணம் என்கிற எண்ணத்தில் மீண்டும் பல்லவத்தைப் பலப்படுத்த எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டிருந்தான். மன்னன் என்று ஒருவனை இரத்தமும் சதையுமாக மக்கள் முன்பாக நிறுத்தினால்தான் பல்லவ மக்கள் எழுச்சி பெறுவார்கள் என்று நம்பினான். பல்லவ மல்லன் காம்போஜத்தில் இருந்து நந்திபுரத்தில் தலை மறைவாக இருந்து எதிரிகளால் சூழப்பட்டு, அங்கிருந்து தப்பி வில்வலம் வந்து கொண்டிருக்கிறான் என்பதை அறிந்ததும், ஊர்மக்களுடன் வேகவதி ஆற்றங்கரையில் அவனை வரவேற்க நின்றிருந்தான்.

தொலைவில் கழுதைகளின் அலறல் கேட்டது.

"அதோ! பல்லவமல்லன் வருகிறான்..!"

வில்வலத்தினுள் நுழைந்ததும், மூட்டையின் உள்ளே இருந்த பல்லவ மல்லனை விடுவித்தான், ஆலிநாடன்.

கழுதைகளின் பின்னால் ஆலிநாடனுடன் கம்பீரமாக நடந்தான், பல்லவமல்லன்.

அவனது பால் வெண்மை நிறத்தை தொலைவில் வரும்போதே கண்டுவிட்டனர், வில்வல மக்கள். என்ன நிறம்! என்ன அழகு!

"பல்லவ மன்னர் வாழ்க..! பல்லவ மல்லர் வாழ்க!" என்று கோஷமிடத் துவங்கினர், மக்கள்.

பல்லவ மல்லனை ஆரத்தழுவி வரவேற்றான், உதயசந்திரன்.

"வாருங்கள் பல்லவ மன்னரே!" — உணர்ச்சியுடன் கூறினான், உதயசந்திரன்.

“என்னை வரவேற்பது இருக்கட்டும். ஆலி நாட்டரசர் என்னைக் காப்பாற்றவில்லையென்றால், நான் இன்று இல்லை. அவரை முதலில் உபசரியுங்கள்!” — பல்லவ மல்லன் கூறியதும், உதயசந்திரன் நெகிழ்ச்சியுடன் அவரது கையைப் பற்றினான்.

“அஸ்வத்தாமா தொடங்கிய குலம், பல்லவ குலம். வாரிசு இல்லாமல் தொண்டரையர் வம்சம் பரமேஸ்வரனுடன் அழிந்துவிடக் கூடாதே என்று அஞ்சினேன். இனி கவலையில்லை. கடல் கடந்து சென்று பல்லவத்திற்கு ஒரு மன்னனைப் பெற்றோம். எதிரிகளின் சூழ்ச்சியினில் மன்னர் சிக்கிக்கொண்டார் என்பதைக் கேட்டுத் துடிதுடித்துப் போனோம். தக்க தருணத்தில் நீர் வந்து நந்திபுரத்தில் நிகழ்ந்த சதியினை முறியடித்து எங்கள் மன்னனைக் காப்பாற்றி உள்ளீர். இதற்கு நாங்கள் என்றும் தங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம். இனி கவலையில்லை. நான் திரட்டிய படைகளுடன் சித்ர மாயனையும் அவனது ஆதரவாளர்களையும் ஒரு கை பார்ப்போம்!” — உதயசந்திரன் கூறினான்.

“உண்மை! உங்கள் பல்லவமல்லன் மறுபிறவி எடுத்து வந்திருக்கிறான். பல்லவர்களின் சின்னம் நந்தி. நந்திபுரத்தில் பின்னப்பட்ட சதியை முறியடித்து உங்கள் பல்லவ மன்னன் வந்திருப்பதால், பல்லவம் மீண்டும் பொலிந்து நிற்கும். நந்திபுரத்தில் நிகழ்ந்த சூழ்ச்சியை முறியடித்த நந்தி குல வேந்தன் பல்லவ மல்லனை நந்திவர்மன் என்று அழைப்பதே பொருத்தமாக இருக்கும்..!” — ஆலிநாடன் கூறியதும், அங்கே “ஆஹா!” என்கிற பெருங்குரல்கள் எழுந்தன.

“பல்லவ மன்னர் நந்திவர்மர் வாழ்க!” — உதயசந்திரன் குரல் எழுப்ப, அங்குத் திரண்டிருந்தவர்கள், “வாழ்க.. வாழ்க!” என்று கோஷம் எழுப்பினர்.

அவனிசிம்மன் வழிவந்தவர்களினால் ஆளப்பட்ட பல்லவம், பரமேஸ்வரவர்மனுடன் முற்றுப்பெற்று,

இப்போது அவனது தம்பி தானவர்மனின் ஆறாவது தலைமுறையில் தோன்றியிருந்த நந்திவர்மனால் ஆளப்பட உள்ளது..

ஜெயவர்மன் பல்லவ மன்னனாக இருந்திருந்தால், பல்லவம் இன்னும் பலமாக இருந்திருக்கும் என்கிற எண்ணம் காஞ்சி மக்களிடையே வெகுகாலம் நிலவியது. மகேந்திரன், நரசிம்மன், ராஜசிம்மன் என்று மிகவும் பலமிக்கப் பல்லவர்கள் ஆண்டிருந்த பல்லவம், இப்போது நந்திவர்மன் என்கிற பன்னிரண்டு வயது பாலகனின் வசம் வந்துள்ளது.

அவனால் நீடித்த ஆட்சியினைத் தர முடியுமா? காணாமல் போன அத்திமலைத்தேவனைக் கண்டு பிடிக்க முடியுமா? அத்திமலைத்தேவனின் ஆபரணம் ஸ்ரீதள மணியாகத் திகழ்ந்து, தற்போது உக்ரோதயம் என்கிற பெயரில், கங்க மன்னன் கஜானாவில் கிடக்கும் அந்த ஹாரத்தை மீட்க முடியுமா?

இன்னும் பிரவாள மாளிகையின் புகைபோக்கியினுள் ஒளிந்தபடி நின்றிருக்கும் தேவ உடும்பர அத்தி மலையானின் பிரதிமைக்குத்தான் இதற்கான விடைகள் தெரியும். அவற்றை இப்போதைக்கு நம்மிடம் கூறும் நிலையில் அவர் இல்லை.

# 16. அதிகார நந்தி

திருமங்கையில் தனது மாளிகையில் கோபாவேசத்துடன் கைகளைப் பின்பாகப் பிணைத்தபடி நடந்து கொண்டிருந்தார், ஆலிநாடர். உறையூரிலிருந்து ஆதித்தன் அனுப்பியிருந்த ஓலை முக்காலியின் மீது கிடந்தது. ஆலிநாடரைச் சுற்றி அவரது பரிவாரத்தினர் நிற்க, தூண்டிலான் கையில் ஆலவட்டத்துடன், ஆலிநாடர் எப்போது அமருவார், எப்போது நாம் அவருக்கு விசிறத்துவங்கலாம் என்பது போன்று காத்திருந்தான்.

"உறையூர் மன்னருக்கு வல்லரசாக வேண்டும் என்கிற ஆசை உள்ளதே தவிர, அதற்கான துணிவு இல்லை. இப்போது காலம் கனிந்து வருகிறது. நந்திவர்மனுக்கு ஆதரவாக நாம் களத்தில் குதித்தால், பாண்டியரின் படைகளைப் பின்தள்ளி நாம் அவர்களிடம் இழந்திருந்த பகுதிகளை மீண்டும் கைப்பற்றி, வலுவான சோழத்தை அமைக்கலாம். ஆனால், பல்லவர்களுக்கு ஆதரவாக இப்போதைக்குக் களத்தில் குதிக்க வேண்டாம் என்று ஓலை அனுப்பியுள்ளார், உறையூர் ஆதித்தன். காம் போஜத்தில் இருந்து வந்திருக்கும் அந்தப் பாலகனுக்கு உள்ள துணிவு கூட உறையூர் சோழனுக்கு இல்லையே!" — மனம் வெதும்பிய ஆலிநாடர் சட்டென்று நின்று தோலாவழக்கனை நோக்கினார்.

"தோலாவழக்கா! சோழ தளபதியான என்னைத் தானே மன்னனின் கட்டளை கட்டுப்படுத்தும். உங்களை அல்லவே. நீங்கள் நால்வரும் நந்திவர்மனுக்கு ஆதரவாகப் பாண்டியர்களை எதிர்கொள்ளுங்கள்!" என்று ஆலிநாடர்

கூற, உற்சாகத்துடன் அந்த நால்வரும் பரகாலனை பணிந்துவிட்டு, வில்வலம் புறப்பட்டனர்.

வில்வலம்!

உதயசந்திரனின் படைகள் வேதவதி ஆற்றின் கரையில் திரண்டிருந்தன..

நந்திவர்மன் எனப் பெயர்பெற்றிருந்த பல்லவ மல்லன் தனது வசம் ஒப்படைக்கப்பட்டதும், அந்தப் பன்னிரண்டு வயது பாலகனை ஏற இறங்கப் பார்த்தான், உதயசந்திரன்.

பால் போன்ற வெண்மை, அகன்ற கண்கள்! கடல் அலையாய் எழும்பி மேடான முன்நெற்றியில் பரவும் சுருள் முடி காற்றில் அசைந்தது. இவனுக்கு மகுடத்தைச் சூட்டும் வரை, நாங்கள் இப்படிதான் கட்டுக்கடங்காமல் நெற்றியில் புரண்டு கொண்டிருப்போம் என்று அவனது குழல்கள் உரைப்பது போன்று தோன்றியது உதய சந்திரனுக்கு. பாலகப் பருவத்திலிருந்து குமார பருவத்தினுள் காலடி வைப்பதற்குத் தயாராகிக் கொண்டிருந்தான் நந்திவர்மன் என்பதை உணர்த்தும் விதமாக, ரோமங்கள் நாசியின் அடியில் தோன்றத் துவங்கி இருந்தன. வலிமை அவனது புஜங்களில் திரண்டிருந்தன. தசைகள் முறுக்கேறிக் கொண்டிருக்க, போர்க்கலைகளை அவன் கற்றிருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டான், உதயசந்திரன்.

ஆனால் —

காம்போஜம் குளிர் பிரதேசம் என்பதால் அவனது தேகம் மங்கையரைப் போன்று மினுமினுத்தது. பல்லவத்தின் தட்பவெப்பநிலை வேறு. அதற்குரிய பயிற்சிகளைச் செய்வித்து அவனைத் தயார் செய்ய வேண்டும்..! மனதிற்குள் நினைத்தான் உதயசந்திரன்.

நந்திவர்மனும் உதயசந்திரனை விழுங்குவது போன்று பார்த்துக் கொண்டிருந்தான். பல்லவ தளபதி சற்றே

கடுமையான பார்வையுடன் நடுத்தர வயதினைக் கொண்டிருப்பான் என்று இவனாகக் கற்பனை செய்து கொண்டிருந்தான். ஆனால் இருபது பிராயங்களையே எட்டிப்பிடித்திருந்த உதயசந்திரன் மிகக் கம்பீரமாக இருந்தான். இவனைவிடக் கருத்த நிறமாகத் தோன்றி னாலும், அவனது கண்கள் துடிப்புடன் சுழன்று கொண்டிருந்தன. கூர்மையான நாசி, செழுமையான கன்னங்கள், தடித்த உதடுகள், அகன்ற மார்பு, குன்றுகளைப் போன்ற புஜங்கள், கை கால்கள் என்று ஆண்மையின் திரட்சியுடன் தோன்றினான், உதய சந்திரன். அவனுக்கும், தனக்கும் அதிகம் தலைமுறை இடைவெளி இல்லாத காரணத்தால் தாங்கள் இருவரும் நல்ல நண்பர்களாக இருக்க முடியும் என்று நினைத்தான். இவன் ராஜசிம்ம பல்லவனின் பெயரன் என்று மதுசூதன பண்டிதர் கூறியது நினைவுக்கு வந்தது.

"உதயசந்திரரே! உங்களிடம் ஒரு கேள்வியைக் கேட்கலாமா?" — நந்திவர்மனும் துவக்கத்திலேயே கேள்வியுடன் பேச, சற்றே வியப்புடன் அவனை நோக்கினான் உதயசந்திரன்.

"வருங்கால மன்னன் நீ! நீங்கள், உங்கள் என்று என்னை அழைக்காமல் என்னை ஒருமையிலேயே நீ அழைக்கலாம்!" — உதயசந்திரன் கூற, சிம்ம கர்ஜனையைப் போன்ற அவனது குரலே கோழையையும் வீரனாக்கும் என்பதை நந்திவர்மன் உணர்ந்தான்.

"நீயே ராஜசிம்ம பல்லவரின் பெயரன்தானே. மாபெரும் வீரனாகவும் இருக்கிறாய்! எதற்காக என்னைக் காம்போஜத்தில் இருந்து அழைத்து வந்தீர்கள்?" — நந்தி வர்மன் கேட்க, புன்முறுவலுடன் அவனைப் பார்த்தான்.

"எனக்குப் பல்லவம் மட்டுமல்ல, குந்தள அரியணை கூட அளிக்கப்பட்டது. நான் எந்த அரியணையும் வேண்டாம் என்று கூறிவிட்டேன். ராஜசிம்மனின் பெயர்த்தியின் மகனைக் காட்டிலும், தானவர்மனின்

*ஆறாம் தலைமுறை வாரிசுக்குத்தான் அரியணை உரித்தாக வேண்டும். எனவேதான், உன்னைக் காம்போஜத்தில் இருந்து தருவித்தோம்..!" — உதயசந்திரன் கூறினான். முதல் சந்திப்பிலேயே உதயசந்திரனும், நந்திவர்மனும் மிகவும் நெருங்கிவிட்டனர்.*

*வில்வலத்தின் இயற்கை சூழ்நிலையும், உதயசந்திரனின் அமைதியான குணமும் நந்திவர்மனுக்கு மிகவும் பிடித்துப் போனது. உதயசந்திரனின் அருகாமை தனக்குப் பெரும் பாதுகாப்பினைத் தரும் என்பதை உணர்ந்து கொண்டான்.*

*மறுநாள், சூரியோதயத்திற்கு முன்பாகவே நந்திவர்மனை எழுப்பிவிட்டான், உதயன். "நந்திவர்மா! அன்றாடம் சூரியோதயத்திற்கு முன்பாக எழுந்து நீ என்னுடன் போர் பயிற்சிகளைச் செய்ய வேண்டும்!" — கண்டிப்புடன் கூறினான், உதயன்.*

*"உதயசந்திரரே! நான் போர்க்கலைகளை அறிவேன். மல்யுத்தம், வாள் பயிற்சி, வேல் எறிதல், சாரங்க பயற்சி அனைத்தையும் அறிவேன்..!" — உறக்கத்திலிருந்து எழுந்து கொள்ள மனமில்லாமல் நந்திவர்மன் கூற, அந்தப் பாலகனை வாஞ்சையுடன் நோக்கியபடி, அவனை வலுக்கட்டாயமாகத் தூக்கி நிறுத்தினான்.*

*"நந்திவர்மா! உனது *காம்போஜ தேசம் குளிர் பிரதேசம். அதன் தட்பவெப்ப நிலைக்கும் இங்கே பல்லவத்தின் நிலைக்கும் வேறுபாடுகள் அதிகம். உனக்குப் போர்க்கலைகள் தெரிந்திருக்கலாம். ஆனால் பல்லவ சூழ்நிலைக்கு ஏற்ப உனது தேக நிலையை நீ*

---

* நந்திவர்மன் காம்போஜத்தில் இருந்து வந்து போராடி அரியணை ஏறிய சம்பவங்கள் காஞ்சி வைகுண்ட பெருமாள் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளன. காசக்குடி தகடுகள் இந்தச் சம்பவங்கள் குறித்து விருத்த பிரஜாபதியாக நந்திவர்மன் தேர்ந்தெடுக்கப்பட்டதை விவரிக்கின்றன. நந்திவர்மன் அறுபத்தைந்து ஆண்டுகள் ஆட்சி செய்தான் என்று இந்தக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

அமைத்துக்கொள்ள வேண்டும். பயிற்சிக்கு தயாராகு!" — என்று வலுக்கட்டாயமாக அவனைப் பயிற்சிக்கு அழைத்துச் சென்றான்..

குளிர் பிரதேசமான காம்போஜத்தில் போரிடுவது வேறு, வெப்பம் மிகுந்த பல்லவ மண்ணில் போர்புரிய அதிக ஆற்றல் கொண்டு இருக்க வேண்டும் என்பதை நந்திவர்மனுக்குப் புரிய வைத்தான், உதயசந்திரன். சூரியோதயத்திற்கு முன்பாகவே அவனை உறக்கத்தி லிருந்து எழுப்பிப் போர்க்கலைகளைப் பயில்வித்தான். உதயசந்திரனின் போர்த் திறமையையும், ஆற்றலையும் கண்டு மலைத்துப் போனான், நந்திவர்மன். அவனைப் போன்ற மாபெரும் வீரனிடம் போர்க்கலைகளைக் கற்க தான் பெரும் பேறு செய்திருக்க வேண்டும் என்று நினைத்தான்.

காலையில் போர்ப் பயிற்சிக்குப் பிறகு, பல்லவ தண்ட நாயகர் ஆலவாயர், காஷ்யப சதகரணி, விஜயவிக்கிரமன், சுக்கில மல்லன், ஆலிநாடரின் நான்கு தளபதிகள் ஆகியோருடன் ஆலோசனை செய்து கொண்டிருப்பான்.

விரைவிலேயே —

உதயசந்திரனின் தலைமையில் சித்ரமாயனையும், பாண்டியர்களையும் வீழ்த்த வியூகம் அமைக்கப்பட்டது. அப்போதுதான் உற்சாகமான செய்தி ஒன்று அவர்களுக்குக் கிடைத்தது. உதயசந்திரனின் தந்தை தந்திதுர்கன் தனது மகனுக்கு உதவுவதற்குக் குந்தளப் படைகளை இரகசியமாக அனுப்பியிருந்தான். குந்தளப் படைகளும் வந்து சேர்ந்ததும், தங்கள் காஞ்சியைக் கைப்பற்ற முடியும் என்கிற நம்பிக்கை அவர்களுக்குப் பிறந்தது. சித்ரமாயனின் அடுத்தக்கட்ட நடவடிக்கைக் காகக் காத்திருந்தான், உதயசந்திரன்.

★ ★ ★

**கா**ம்போஜ இளவரசன் பல்லவ மண்ணில் வந்து இறங்கினான் என்பதே உறுதியாகத் தெரியாத நிலையில்,

பாண்டிய மன்னன் ஸ்ரீமாற வல்லபன், சித்ரமாயனை சினத்துடன் நோக்கினான்.

"நந்திபுர விண்ணகரத்தில் பல்லவமல்லன் தங்கியிருப்பதாக நீதானே செய்தி அனுப்பினாய். அவன் ஆலயத்தில் இல்லையே! எங்ஙனம் தப்பிச் சென்றிருக்க முடியும்? என்ன செய்வாயோ தெரியாது? அந்தப் பாலகனின் தலையைக் கொண்டு வந்து என்னிடம் நீ ஒப்படைக்க வேண்டும்..!" ஸ்ரீமாறன் கூற, வேறு வழியின்றி மீண்டும் தனது படைகளைக் காஞ்சியை நோக்கி நகர்த்தினான், சித்ரமாயன்.

தனக்கு நீலப் பட்டாடையைப் பரிசளித்த வண்ணான் உருவில் வந்திருந்த ஆலிநாடர்தான் பல்லவ மல்லனைக் காப்பாற்றித் தனது வஸ்திர மூட்டையில் மறைத்து அழைத்துச் சென்ற கதையை அவன் இன்னும் யூகிக்கவில்லை. அந்த வண்ணான் கொடுத்த பட்டாடையைத் தடவியபடி காஞ்சிக்குத் திரும்பிக் கொண்டிருந்தான்.

காஞ்சியை நோக்கிச் சென்றபோது, *நெகிழ்வளை என்னும் இடத்தில் சித்ரமாயனுக்குப் பெருத்த அதிர்ச்சி காத்திருந்தது. உதயசந்திரன் தலைமையிலான பல்லவப் படை அங்கே அவனை வழிமறித்தது. அங்கே கடும் போர் மூண்டது.

உதயசந்திரனின் வீராவேசத் தாக்குதலைச் சந்திக்க முடியாமல், சித்ரமாயன் தப்பி ஓட, அவனை விரட்டிச் சென்றான் உதயசந்திரன்.

---

* நெகிழ்வளை இன்றைய நெய்வேலிப் பகுதி. உதயேந்திரம் தகடுகள் (Udayendiram plates) குறிப்பிடும் தகவல்கள் இவை. வில்வலம் தலைவன் உதயசந்திரன் பல்லவ மல்ல நந்திவர்மனைக் காப்பாற்ற படைகளுடன் சென்றான். சித்ரமாயன் படைகளை வழிமறித்து அவனுடன் போரிட, சித்ரமாயனின் படைகள் சிதறி ஓட, நல்லூர், நெய்வேலி மற்றும் சூதவனம் ஆகிய இடங்களில் மீண்டும் திரண்ட சித்ரமாயனின் படைகளை அழித்தான். இறுதியில் சூதவனம் என்கிற இடத்தில் சித்ரமாயனின் தலையை வெட்டி வீழ்த்தினான். சித்ரமாயனின் படைகளைச் சின்னாபின்னமாக்கினான், உதயசந்திரன்.

*சூதவனம் என்கிற பகுதியில் அவனை மடக்கிப் பிடித்தான்.

"எனக்கு காஞ்சி அரியணை வேண்டாம். நான் சாளுக்கியத்திற்கே சென்றுவிடுகிறேன்!" — இறுதியாக ஒருமுறை உதயசந்திரனிடம் கெஞ்சினான், சித்ரமாயன்.

"உன்னைக் கொன்றால்தான், பாண்டியரின் கொட்டம் அடங்கும்!" என்றபடி உதயசந்திரன் தனது வாளினை வீசினான். சூதவன பூமியில் சித்ரமாயனது தலை உருண்டது.

சித்ரமாயனது தலை வாங்கப்பட்டது என்பதை அறிந்ததும் பாண்டியன் ஸ்ரீமாற வல்லபனும், சபர மன்னன் உதயணனும், காஞ்சியை நோக்கி வந்தனர்.

படை எடுத்து வந்த பாண்டியரை எதிர்கொண்டு சந்தித்தான், உதயன். அல்லிமலர் இதழ் போல் ஒளிர்ந்த தன் வாளால் சித்திரமாயனைக் கொன்றவன், வெற்றி வேட்கையுடன் **பாண்டியப் படையின் மீது பாய்ந்தான். இறுதியில், பாண்டியரின் படை பின்வாங்கியது.

---

* சூதவனம் தான் இன்று மாங்காடு என்று அழைக்கப்படுகிறது. தான் சித்ரமாயனை வென்றதன் அடையாளமாக அங்கிருந்த வைகுண்ட பெருமாள் ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்டினான், உதயசந்திரன். இன்றும் மாங்காடு காமாட்சியம்மன் ஆலயத்தின் அருகே இந்த வைகுண்ட பெருமாள் கோயிலைக் காணலாம்.

** பாண்டியருடைய படையை நிதம்பவனம், சூதவனம், சங்கரக் கிராமம், மண்ணைக்குறிச்சி, சூரவழுந்தூர் முதலிய இடங்களில் உதயசந்திரன் வென்றான். பாண்டியப் படைகள், 'நெடு வயல், குறுமடை மன்னிக்குறிச்சி, பூவலூர், கொடும்பாளூர், பெரியலூர் என்னும் இடங்களில் வென்றன. குழும்பூரில் நடந்த போரில் பாண்டியன் பல்லவனுடைய கரிகளையும் பரிகளையும் கைக்கொண்டான்'[3] என்று கூறுகின்றன. இவற்றுள் மன்னிக்குறிச்சி என்பது அறந்தாங்கி தாலுக்காவில் உள்ள மணக்குடி ஆகலாம்; நிதம்பவனம்-வேப்பங்காடு, சூதவனம்-கோவிலூர் (தேவாரகாலத்துத் திருவுசாத்தானம்)

*பாண்டியர் பின்வாங்கியதைக் கண்ட உதயசந்திரனின் வெற்றி வேட்கை தணியவில்லை.*

**நெஞ்மேலி என்னும் இடத்தில் சபர மன்னன் உதயணனை எதிர்கொண்டான் உதயசந்திரன். அவனையும் வெற்றிகொண்டு விரட்டி அடித்தான்.*

*சித்ரமாயனைக் கொன்று, பாண்டியர்களையும், சபரரையும் விரட்டி அடித்து மீண்டும் காஞ்சியைப் பல்லவத்தின் வசம் கொண்டு வந்தான் உதயசந்திரன். வலுவான ஐவர் கூட்டணியை உடைத்து பல்லவத்தின் ஆளுமையை மீண்டும் நிலைநாட்டிய உதயசந்திரனின் வீரத்தைப் பற்றிதான் எங்கும் பேச்சு. பாண்டியர்களும், சாளுக்கியர்களும் கூட உதயசந்திரனின் வீரத்தை மறைவில் சிலாகித்துப் பேசினர்.*

*காஸ்யப சதகரணி குறித்துத் தந்த முகூர்த்த நாளில், காம்போஜ இளவரசன், சிம்மவர்மனின் இரண்டாவது மகன் தானவர்மனின் ஆறாவது தலைமுறையில் உதித்திருந்த குலக்கொழுந்து பல்லவமல்லன் இரண்டாம் நந்திவர்மனாக அரியணையில் ஏறுவதற்காகக் காஞ்சிக்குள் பிரவேசித்துக் கொண்டிருந்தான். யானையின் மீது வந்த நந்திவர்மனைக் காண மக்கள்*

சங்கரகிராமம்-சங்கரனார் குடிக்காடு ஆகலாம். இவை யாவும் தஞ்சைக் கோட்டத்திலேயே பெரும்பாலும் இருப்பவை; சில புதுக்கோட்டைச் சீமையில் இருப்பவை. இந்த இடங்களில் இருதிறத்தாரும் வெற்றிபெற்றதாகக் கூறுவது பொருந்தும் என்றே கூறலாம். பாண்டியன் சில இடங்களில் வெற்றிபெற்றான்; இறுதியில் உதயசந்திரன் சில இடங்களில் வெற்றிபெற்றான் எனக் குறிப்புகள் கூறுகின்றன. உதயசந்திரன் வருவதற்குமுன் சில இடங்களில் போர் நடந்திருக்கும்; முற்றுகைக்குப் பின் பல இடங்களில் சேனை சிதறிப், போர் செய்திருத்தல் இயல்பே. ஆங்காங்கு நடந்த போர்கள் ஆயினும், இறுதியில் பல்லவன் படையை வழிநடத்திச் சென்ற உதயசந்திரன்தான் வெற்றிபெற்றான் என்பதில் ஐயமில்லை.[4]

* நெஞ்மேலி இன்று நெமிலி என்று அழைக்கப்படுகிறது.

கூட்டம் அலைமோதியது. உதயசந்திரன் அவனுக்குப் பக்கலில் தனது புரவியில் வர, இருவரின் மீதும் மக்கள் மலர்மாரி பொழிந்தனர்.

"பொலிக பொலிக.. பல்லவம் பொலிக. மன்னர் நந்திவர்ம பல்லவர் வாழ்க. தளபதி உதயசந்திரர் வாழ்க!"

விண்ணை அதிர வைத்தன மக்கள் எழுப்பிய கோஷங்கள்.

முதன்முறையாகக் காஞ்சியினுள் காலடி எடுத்து வைத்தான் நந்திவர்மன்.

# 17. புகைபோக்கியின் உச்சியில்...!

"ஜெயவிஜயிபவ!

தொண்டையர்கோன் பல்லவமல்ல நந்திவர்மர் பராக் பராக்..!"

கட்டியங்காரன் அவனது வரவை அறிவிக்க, நந்திவர்மன் கொலுமண்டபத்தினுள் நுழைந்து தனக்காக மலர்களால் அமைக்கப்பட்டிருந்த நடை மேடையில் நடக்கத்து வங்கினான். முத்தும், நவரத்தினங்களும் இழைக்கப்பட்ட குடையை ஒருவன் பிடிக்க, சுவர்ணப்பிடிகளுடன் கூடிய கவரிகளைப் பெண்கள் வீச, கொம்பும், துந்துபியும் முழங்க, பண்டிதர்கள் வேதங்களைக் கோஷிக்க மன்மதனைப் போன்ற அழகுடன் நடைபோட்டான்.

அவனது வலதுபுறமாக நடந்தான், உதயசந்திரன். உதயனிடம் நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டுவிட்டான், நந்திவர்மன். உதயன் அமரச் சொன்னால் அமருவான். எழுந்து நட என்றால் உடனே நடை போடுவான். உதயசந்திரனின் வீரத்திற்கும், யோசனைகளுக்கும் அதிக மதிப்பளித்தான், நந்திவர்மன்.

தண்டநாயகர் ஆலவாயர், காஷ்யப சதகரணி உள்பட அனைவருக்குமே மகிழ்ச்சி. காம்போஜ இளவரசன் இங்கே இருக்கும் சூழ்நிலையுடன் ஒத்துப்போவானா என்கிற ஐயத்துடன் இருந்தவர்கள், உதயசந்திரனின் முழுக் கட்டுப்பாட்டில் நந்திவர்மன் இயங்குவதைக் கண்டு களிப்படைந்தார்கள்.

*ஆலவாயர் நந்திவர்மனின் பட்டாபிஷேகத்திற்கு மிகவும் விமரிசையான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். நந்திவர்மனை நந்திபுர விண்ணகரத்தில் எதிரிகளிடத்தில் இருந்து காப்பாற்றிய ஆலிநாடருக்கு விசேட அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது.*

*பட்டாபிஷேகத்திற்கு முதல் நாள் ஒரு அதிசயம் நிகழ்ந்தது. ராஷ்ட்ரகூட மன்னன் வயிரமேகன் என்கிற தந்திதுர்கன் தனது பன்னிரண்டு வயது மகள் ரேவாதேவியுடன் காஞ்சிக்கு வந்தான்.* பட்டாபிஷேக வைபவத்திலும் அவன் கலந்து கொண்டான்.*

*நந்திவர்மனின் மகுடாபிஷேகத்தைக் காண மக்கள் கூட்டம் அலைமோதியது. ஒத்தாடை அரண்மனைக் கொலுமண்டபத்தில் பிரமுகர்கள் அமருவதற்கு இருக்கை கிடைக்காமல் நின்று கொண்டே வைபவத்தைக் கண்டு களித்தனர்.*

*ஆலிநாடர் மற்றும் அவரது நான்கு சகாக்களும் முன்வரிசையில் அமர்ந்திருந்தனர். அவருக்கு எதிரே வயிரமேகன் என்கிற தந்திதுர்கனும், தங்கப் பதுமையைப் போன்ற அவனது மகள் ரேவாதேவியும் அமர்ந் திருந்தனர்.*

---

* பல சரித்திர பேராசிரியர்கள், தந்திதுர்கன் காஞ்சியின் மீது படை எடுத்து வந்ததாக எழுதியுள்ளனர். நந்திவர்மன் அரியணை ஏறுவதற்காகத் தனது மகன் உதயசந்திரனுக்குப் படைகளை அனுப்பியவன் எதற்காகக் காஞ்சியின் மீது படை எடுக்க வேண்டும். தனது மகள் ரேவாதேவியை நந்தி வர்மனுக்குத் திருமணம் செய்து கொடுக்கவே அவன் காஞ்சிக்கு வந்தான். அவனது மகன் உதயசந்திரனின் வீர பிரதாபங்களைக் கேட்டு அவனைப் பாராட்ட வேண்டியே காஞ்சிக்கு வந்திருந்தான். குந்தளர்கள் காஞ்சியின் மீது படை எடுத்து வந்தனர் என்று கூறுவது தவறு. காரணம், பல்லவர்களைப் போலவே, குந்தளர்களுக்கும் சாளுக்கியர்கள் பரம வைரிகளாகத் திகழ்ந்தனர். எதிரியின் எதிரி நண்பன் என்கிற முறையில்தான் பல்லவமும், குந்தளமும் திருமண உறவை ஏற்படுத்திக்கொண்டன.

இராஜகுரு காஸ்யப சதகரணி தங்கத்தட்டில் வைக்கப்பட்டுக் கொணரப்பட்ட மகுடத்தைக் கையில் எடுத்து சபையோருக்குக் காட்டிவிட்டு, நந்திவர்மனின் சிரசில் வைத்தார். பரமேஸ்வரவர்மனுக்குப் பிறகு, மீண்டும் நந்திவர்மனின் உருவில் பல்லவம் தொடர்ந்தது.

மகுடம் சூட்டப்பட்டதும் முதலில் உதயசந்திரனை நோக்கித்தான் கைகூப்பினான், நந்திவர்மன். அவன் நந்திவர்மனை அருகே அழைத்து அணைத்தபடி ஆலிநாடரிடம் சென்றான்.

"நந்திவர்ம பல்லவனை ஆசீர்வதியுங்கள், பரகாலரே!" — உதயசந்திரன் கோரினான்.

பரகாலர் புன்னகைத்து நந்திவர்மனை அணைத்து உச்சி முகர்ந்தார். "மாற்றங்கள் திடீர் என்றுதான் வரும், நந்திவர்மா! பல்லவ மல்லனாகக் காம்போஜத்தில் இருந்து வந்தாய். நந்திபுரத்தில் பேராபத்தில் சிக்கி உயிர் தப்பினாய். இன்று பல்லவம் என்னும் பெரும் தேசத்தின் மன்னனாக முடிசூட்டிக் கொண்டாய். உனக்கு மட்டும் மாற்றம் வரவில்லை. சோழ தளபதியாகத் திகழ்ந்து, மங்கை நாட்டு வேந்தனாக இருந்த என்னுள்ளும் பெரும் மாற்றம் நிகழ்ந்துவிட்டது. குமுதவல்லி என்கிற ஒரு வைணவப் பெண் என்னைத் திருத்தி பணிகொண்டு நான் பயணிக்க வேண்டிய சரியான மார்க்கத்தை எனக்குக் காட்டிவிட்டாள். அன்று உன்னைக் காப்பதற்காகக் கண்டகோபாலன் என்கிற வண்ணானாக வேடமிட்டேன் அல்லவா! அப்போது நான் நெற்றியில் வைத்துக்கொண்ட ஊர்த்துவப் புண்டரத்தை அதன் பிறகு நான் நீக்கவேயில்லை. எனது நெற்றியை அது அன்றாடம் அலங்கரித்து வருகிறது. ஒரு பெண்ணின் மீது கொண்ட காதல் எனது வாழ்க்கையை மாற்றி விட்டது. உனக்கு விதிக்கப்பட்டிருக்கும் மாற்றத்தையும் ஏற்று மக்களுக்கு

*நல்லாட்சி வழங்கு!" — *பரகாலன் அவனது தலையில் கையை வைத்து ஆசீர்வதித்தார்.*

*அதே சமயம் —*

*வயிரமேகன் என்கிற தந்திதுர்கன் தனது இருக்கையில் இருந்து எழுந்தான். பட்டாபிஷேகம் செய்துகொண்ட நந்திவர்ம பல்லவனுக்குத் தான் ஒரு பரிசு வழங்க இருப்பதாகக் கூறி, தனது மகள் ரேவாதேவியை அருகே அழைத்தான்.*

* பரகாலன் என்கிற ஆலிநாடர் பின்னாளில் ஆழ்வார்களில் கடைக்குட்டியாகத் திருமங்கை மன்னன் என்றும் கலியன் என்றும் அழைக்கப்பட்டார். நந்திவர்ம பல்லவனை ஆபத்தில் இருந்து காப்பற்றியதோடு அவனோடு நெருக்கமாகவும் இருந்தார். வயிரமேகன் நந்திவர்மனுக்குப் பெண் கொடுத்து தனது உறவை பலப்படுத்தியபோது அங்கே ஆழ்வாரும் இருந்திருக்க வேண்டும். எனவேதான் பெரிய திருமொழி அட்டபுயகரத்தானை பற்றிய இரண்டாம் பத்து எட்டாம் திருமொழியின் கடைசிப் பாட்டில் 'தன் வலி தன் புகழ் சூழ்ந்த கச்சி மன்னவன் தொண்டையர்கோன் வணங்கும் நீள்முடி மாலை வயிரமேகன்!' என்று குறிப்பிட்டுள்ளார். நந்தி வர்மனுக்குப் படைபலம் கொடுத்து வலிமையையும், பெண்ணைக் கொடுத்து புகழையும் தந்த வயிரமேகன் என்கிற தந்திதுர்கனையும் சேர்த்தே பாடியுள்ளார்.

'இலகிய நீள்முடி மாவலி,
தன் பெரு வேள்வியில் மாண் உருவாய், முன நாள்
சலமொடு மாநிலம் கொண்டவனுக்கு
இடந்தான் தடம் சூழ்ந்து அழகாயக் கச்சி
உலகுடை மன்னவன் தென்னவனைக்
கன்னி மா மதிள் சூழ் கருவூர் வெருவ
பல்படை சாய வென்றான் பணிந்த
பரமேஸ்வர விண்ணகரம் அதுவே.'
– பெரிய திருமொழி திவ்யார்த்த தீபிகை.

பல்லவ மன்னன் இரண்டாம் நந்திவர்மனுக்கும் பாண்டியன் வரகுணனுக்கும் கருவூரில் நடந்த போரைப் பற்றித் தளவாய்புரம் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன. எனவே நந்திவர்மனும் திருமங்கை மன்னனும் நெருக்கமான நட்பு கொண்டிருந்ததை இந்தப் பாசுரங்கள் தெளிவாக்குகின்றன.

ரேவாதேவியின் கரத்தை பற்றி நந்திவர்மனின் கையில் வைக்க, நந்திவர்மன் உதயசந்திரனை திகைப்புடன் நோக்கினான்.

உதயசந்திரன் தனது அழகிய பல்வரிசை தெரிய சிரித்தான்.

"ரேவா எனது தங்கைதான். இன்று முதல் நான் உனது மைத்துனன்!" என்றதும் குதூகலத்துடன் அவளது கையைப் பற்றினான், நந்திவர்மன்.

"பார்த்தாயா. அரியணை கிடைத்த உடனே பட்ட மஹிஷியும் கிட்டினாள். நீ தேடுவதெல்லாம் தானாகக் கிட்டும்!" — பரகாலன் வாழ்த்தினார்.

பட்டாபிஷேகம் நிறைவடைந்ததும், காஸ்யப சதகரணி மற்றும் உதயசந்திரன் இருவருடனும் அத்திமலைத்தேவன் ஆலயத்திற்குச் சென்றான். காம்போஜத்தில் இருந்த ஐராவதமலையைப் போன்ற உயர்ந்த மலை அல்ல. வெறும் சிறு குன்றமே என்பதை அறிந்தபோது சற்றே ஏமாற்றமடைந்தான்.

"எங்கள் ஐராவதமலையைப் போன்று இருக்கும் அத்திமலை என்று நினைத்தேன்!" — நந்திவர்மன் முணுமுணுக்க, சதகரணி சிரித்தார்.

"மலை சிறியதுதான். ஆனால் கீர்த்தி இமயத்தை ஒத்தது!" — அவர் கூற, நந்திவர்மன் அத்திமலையின் மீது ஏறினான். உண்மைதான். ஆலயம் ஐராவத மலையின் மீது இருந்த ஆலயத்தைக் காட்டிலும் பிரம் மாண்டமாக இருந்தது. பிரம்மிப்புடன் தேவராஜனாகக் காட்சி தரும் ஸ்ரீவர வரதநாராயணனை தரிசித்தான்.

"இவர் ஸ்ரீவரம் என்கிற பகுதியில் இருந்து தருவிக்கப் பட்ட வரதநாராயணர். அத்திமலைத்தேவனின் பிரதிமை கிடைக்கும் வரை, இவரே தேவராஜனாகச் சேவை சாதிக்க உள்ளார்!" — சதகரணி கூறினார்.

"தேவராஜனை யார் எடுத்துச் சென்றார்கள்?" — நந்திவர்மன் திகைப்புடன் கேட்டான்.

"அது ஒரு பெரிய கதை. வாருங்கள். இன்றைய மதிய உணவு முடிந்ததும் நான் அந்தப் பெருங்கதையைச் சொல்கிறேன்." — சதகரணி கூறினார்.

"ஆமாம்! மன்னருக்கு ஒன்றுவிடாமல் கூறுங்கள். அத்திமலையானின் புராணத்தை அறிந்து கொண்டால் தான், அவர் அணிந்திருக்கும் மகுடத்தின் பெருமைகளை மன்னரால் உணர முடியும்!" —உதயசந்திரன் கூறினான்.

சாணக்கியன் தேவ உடும்பரத்துடன் வடக்கே சென்று மவுரியத்தை நிறுவியது தொடங்கிச் சமுத்ரகுப்தன் படையெடுப்பு, சிம்மவர்மனின் நான்கு மகன்கள், நவரத்தின பல்லவி ரணதிலகனிடம் ஏமாந்த கதை, தேவ உடும்பர சிலையைக் கவருவதற்குப் பிரக்ஞுதாரா செய்த சதி, ஜெயவர்மன் செய்த தியாகம், ராஜவர்மனும், ராஜ்ஸ்ரீயும் பல்லவத்தைக் கட்டுக்கோப்பாகக் காத்தது, சிலையைக் கண்டுபிடிக்க மகேந்திரன் செய்த முயற்சிகள், ஸாமவையின் உதவியோடு நரசிம்ம பல்லவன் சிலையைக் கண்டுபிடித்து அதனை மல்லையில் ஜலசயன பெருமாளாகப் பிரதிஷ்டை செய்தது, ஆழிப் பேரலையில் கோயிலை கடல் விழுங்கியது, மகா மல்ல எதி என்கிற பல்லவர்களின் எதிரி அந்தச் சிலையைக் கைப்பற்றிப் பதுக்கியது வரை அனைத்தையும் சதகரணி கூற, பிரம்மிப்புடன் அமர்ந்திருந்தான், நந்திவர்மன்.

"யார் அந்த மகா மல்ல எதி? கண்டு பிடித்தீர்களா?"

"நன்கு அறியப்பட்டவன்தான். மகேந்திர பல்லவரின் தசகுமாரர்கள் என்கிற நண்பர்களில் ஒருவனாகத் திகழ்ந்தவன். அவனை இனங்கண்டு கொண்டு, நரசிம்ம பல்லவர் அவனைக் கைது செய்யச் சென்றார். துரதிர்ஷ்டவசமாக, அவன் அவர் மீது பாய்ந்து அவரது குரல்வளையைக் கத்தியால் குத்திக் கொல்ல

முயன்றபோது, இலங்கையைச் சேர்ந்த மானவர்மன் என்கிற இளவரசன், மல்ல எதியை வெட்டிக் கொன்றான். அதனால், மகா மல்ல எதி தேவ உடும்பர சிலையை எங்கு பதுக்கியிருக்கிறான் என்பதே தெரியாமல் போய்விட்டது!" —வேதனையுடன் அவனுக்குப் பதிலளித்தார், சதகரணி.

"எவ்வளவு சதிகள், தியாகங்கள், கொலைகள், போர்கள்..! அனைத்துமே தேவ உடும்பர தேவராஜனை அடைவதற்காகவா? எதற்காக மன்னர்கள் அந்தச் சிலையை அடைய விரும்புகிறார்கள்?" — நந்திவர்மன் கேட்டான்.

"என்ன இப்படிக் கேட்கிறாய், நந்திவர்மா? உனது காம்போஜமே அந்தச் சிலையை அடையத் திட்டமிட்டது மறந்து போனதா? தேவ உடும்பர சிலை எங்கள் தேவராஜ மார்க்கத்திற்கே சொந்தம் என்று ஒரு கோரிக்கையை எழுப்பினார், காம்போஜ அரசி ககனமயி. எதற்காக அந்தச் சிலையை மன்னர்கள் அடையத் துடிக்கிறார்கள் என்றால் தற்போது இம்மண்ணுலகில் தேவ உடும்பரம் ஒன்று மட்டுமே உள்ளது. அதுவும் அத்திவரதன் சிலையாக உள்ளது. அஸ்வமேத யாகத்தில் தோன்றிய அவனது மேனியைக் கொண்டு அஸ்வமேத யாகத்தைச் செய்ய ஒவ்வொரு மன்னனும் துடிக்கின்ற காரணமே, உலகையே வெல்லக்கூடிய ஆற்றலை அவன் தருவதால்தான்."

"அஸ்வமேத யாகமா? நானும் செய்யலாமா?" — நந்திவர்மன் கேட்டான்.

"நிச்சயம் செய்யலாம். அதற்கு முன்பாக எப்படியாவது நாம் தேவராஜனின் பிரதிமையைக் கண்டுபிடிக்க வேண்டும். அதோடு, அவரது ஆபரணமான உக்ரோதயம் என்கிற ஸ்ரீதள மணியையும் கண்டுபிடிக்க வேண்டும்!" — காஸ்யப சதகரணி கூறினார்.

"அந்த ஆபரணம் எங்கே உள்ளது?" — நந்திவர்மன் கேட்டான்.

"கங்க மன்னன் பூவிக்கிரமனின் கஜானாவில் உள்ளது. சூழ்ச்சியால் அதனைப் பறித்துக் கொண்டார்கள்!" — சதகரணி கூறினார்.

"சற்று ஓய்வெடு, நந்திவர்மா! பட்டாபிஷேகத்திற்காகப் பிரம்ம முஹூர்த்தத்திலேயே எழுந்துவிட்டாய். சற்றே கண்ணயர்ந்தால், இரவு விருந்தின்போது உற்சாகமாக இருக்கலாம்!" —உதயசந்திரன் கூறினான்.

"ஓய்வா? இனி உறக்கமே இல்லை உதயசந்திரரே! தேவராஜ பிரதிமையைக் கண்டுபிடித்து, அதற்கு உக்ரோதயத்தைச் சாற்றி, மீண்டும் அத்திமலையில் பிரதிஷ்டை செய்து, அதன்பிறகு அஸ்வமேத யாகத்தைச் செய்யப் போகிறேன். இது செய்தபிறகே உறங்கச் செல்வேன்..!" — தீர்மானத்துடன் நந்திவர்மன் கூற அவனை மற்ற இருவரும் புளகாங்கிதத்துடன் பார்த்தார்கள்.

"செய்வோம், நந்திவர்மா!" — உணர்ச்சியுடன் கூறினான், உதயசந்திரன்.

"புறப்படுங்கள் உதயசந்திரரே! இப்போது நீங்கள் கூறிய சரித்திரங்கள் நிகழ்ந்த பகுதிகளைக் காண வேண்டும் போல் இருக்கிறது." — நந்திவர்மன் கூற, அவனது உற்சாகத்தை ரசித்தபடி உதயசந்திரன் அவனுடன் கிளம்பினான்.

இரவு நிகழ இருந்த விருந்துக்கு ஏற்பாடுகளைச் செய்து வந்த தண்டநாயகர் ஆலவாயருக்கு உதவியாக இருப்போம் என்று அவரைத் தேடிச் சென்றார், சதகரணி.

வேகவதி நதிக்கரை. வில்வலம் வழியாகக் காஞ்சியில் பெருகி பாலாற்றில் முக்கூடலாகக் கலக்கும் பாதை யிலேயே நந்திவர்மனை அழைத்துச் சென்றான், உதய சந்திரன்.

இங்கு முக்கூடல் உள்ளது போன்று, காம்போஜத்திலும் ஒரு முக்கூடல் உள்ளது. இங்கு யானைமலை என்றால், அங்கு ஐராவத மலை உள்ளது. இங்கிருப்பவனும் தேவராஜன் என்றால், காம்போஜத்திலும் தேவராஜன் உள்ளான். அங்கு ஒரு தருமநகரம் என்றால் இங்கும் ஒரு தருமநகரம் உள்ளதே. அஸ்வத்தாமாவுக்கும், நாகசொமாவுக்கும் பிறந்த இரட்டையர்களின் வம்சங்கள் தானே பல்லவமும், காம்போஜமும். எனவேதான் காம் போஜத்தைச் சேர்ந்த இவனை இங்கே மன்னனாக அரியணையில் அமரச் செய்திருக்கின்றனர். காம் போஜத்தின் தேவராஜ மார்க்கமும் இங்குள்ள வைணவமும் வேறுபடுகிறதே தவிர, மார்க்கம் ஒன்றே. சந்திரகாந்தி செடியை அணிந்த அஸ்வத்தாமாவின் மகன் வழியில் தோன்றிய காம்போஜம் சந்திர பாதையில் நிற்கிறது. பல்லவச் செடியை மாலையாகத் தரித்த புலி சோமாவின் பரம்பரையான பல்லவம் சூரிய பாதையை நோக்கி நிற்கின்றது. இது ஒன்றுதானே வேறுபாடு..!

"இந்தப் பாலாறு சுழித்துப் பொங்கி ஓடிக் கொண்டிருந்த காலம் உண்டு, நந்திவர்மா. எனது பாட்டனார் ராஜசிம்மன் காலத்தில் முழுவதுமாக வற்றிப்போனது. தேவ உடும்பர அத்திசிலையைப் பறிகொடுத்ததால் ஏற்பட்ட சாபம் போலும். வேகவதியும் சிறு கீற்றாக ஓடிக்கொண்டிருக்கிறது..!" — உதய சந்திரனின் குரலில் வருத்தம் மிஞ்சியது.

"வருத்தப்படாதீர், உதயசந்திரரே! மீண்டும் அத்தி மலையான் தனது ஆலயத்தில் நிற்பான். மீண்டும் எனது ஆட்சியில் பாலாறு பெருகி ஓடும்!" — நந்தி வர்மனின் குரலில் தொனித்த உறுதி, உதயனுக்கு வியப்பைத் தந்தது.

"நீ நிச்சயம் செய்வாய், நந்திவர்மா!" — அவனை வாஞ்சையுடன் அணைத்துக் கொண்டான், உதயன்.

"அடுத்ததாக, என்னைத் தருமநகரம் பகுதிக்கு அழைத்துச் செல்லுங்கள், உதயரே!" நந்திவர்மன் கூற, இருவரும் புரவிகளில் ஏறி தருமநகரம் சென்றனர்.

ஆதிசரஸ்வதி கோயில் செப்பனிடப்பட்டு, ஆராதனைகள் துவக்கப்பட்டிருந்தன. ஆதிசரஸ்வதியை தொழுதுவிட்டு, நந்திவர்மனை பிரவாள மாளிகைக்கு அழைத்துச் சென்றான். சிம்மவர்மனால் கட்டப்பட்ட அந்த மாளிகை, ஒன்பது தலைமுறை சரித்திரங்களை விழுங்கிவிட்டு வாயைப் பிளந்து கிடக்கும் இராட்சதனைப் போன்று கிடந்தது. எங்கும் மரங்களும் செடிகளும் அடர்ந்து பிரதான கட்டடத்தையே மறைத்தன. சுவர்களும், தூண்களும் ஆங்காங்கே பூச்சுகள் பெயர்ந்திருந்தாலும், உறுதியுடன்தான் நின்றன. தனது உடைவாளால், செடிகளையும், தழைகளையும் வெட்டியபடி முன்னேறினான், உதயசந்திரன். அவனைப் பின்தொடர்ந்தான், நந்திவர்மன்.

"தனது ஆசை மகள் நவரத்தின தேவிக்காகச் சிம்மவர்ம பல்லவன் எழுப்பிய மாளிகை இது! அவள் வசித்த மாளிகை இது. அவள் தற்கொலை செய்து கொண்டதால் அதன் பிறகு இங்கு யாரும் வசிக்க வில்லை. அவளது ஆத்மா இங்கே அலைவதாகச் சிலர் நம்புகின்றனர். எனவே இங்கே யாரும் வருவதில்லை..!" — உதயன் கூறினான்.

"எவ்வளவு பிரும்மாண்ட மாளிகை..?" பிரவாள மாளிகையின் விஸ்தாரமான கொலுமண்டபத்தையும், மேலே இருபுறமும் அமைக்கப்பட்டிருந்த மாடங்களையும் கவனித்தான்.

"இந்த மாளிகையின் விஸ்தீரணத்தைப் பார்த்தாலே, சிம்மவர்மர் தனது மகள் நவரத்தின பல்லவியின் மீது வைத்திருந்த பிரியத்தின் அளவு தெரிகிறது!" — பிரம்மிப்புடன் கூறினான், நந்திவர்மன்.

"ஆசையாக அவர் கட்டிய இந்த மளிகை இப்படிப் பாழடைந்து கிடக்கும் என்பதை யார் எதிர்பார்த்தார் கள்? மன்னன் சித்தம் கலங்கிப் படுக்கையில் இருந்தார். ஜெயவர்மன் சீன தேசம் சென்றான். நவரத்தின

பல்லவியும் தற்கொலை செய்து கொண்டாள். வழிவழியாகப் பல்லவர் கதைகள் சோகங்களும், மர்மங்களும் நிறைந்ததாகவே உள்ளன. பார்க்கலாம்! உன்னாட்சிதான் புதிய சகாப்தத்தைப் படைக்க வேண்டும். பல்லவம் அனைத்துப் பிரச்னைகளையும் கடந்து புதிய பல்லவமாகப் பொலிந்து நிற்க வேண்டும்!" — உதயசந்திரன் சோகத்துடன் கூறினான்.

"இளவரசி நவரத்ன பல்லவி எதற்காகத் தற்கொலை செய்து கொண்டாள்?" — நந்திவர்மன் கேட்டான்.

"களப்பர ரணதிலகனிடம் ஏமாந்து போனோமே என்கிற வருத்தம் காரணமாக இருக்கலாம். அத்திமலைத் தேவன் பிரதிமையை ஒளித்து வைத்தவள் அவள்தான். பிரக்ஞுதாரா தன்னையும் தனது சீதன வெள்ளாட்டிகளையும் வசியம் செய்து இரகசியத்தை அறியக்கூடும் என்பதால் அவர்கள் அனைவரும் தங்களை மாய்த்துக் கொண்டதாக அரண்மனைக் கருவூலக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. எது எப்படியோ, இன்றுவரை பல்லவத்திற்குப் பெண் ராசி இல்லை என்பது நிரூபணம் ஆகிக்கொண்டே வருகிறது. ராஜவர்மனின் மகள் ஜெயஸ்ரீ என்பவளும் தற்கொலை செய்து கொண்டாள். எனது தாய் ராஜகாந்தியும் பல்லவ இளவரசிதான். திடீர் காதலில் சிக்கி, கொண்டவனால் கைவிடப்பட்டு, தலைமறைவாக வாழ்ந்து, என்னைப் பெற்று, நோயில் விழுந்து குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடந்து அண்மையில்தான் மரணம் அடைந்தாள். எனக்கு ஒரே ஒரு வருத்தம்தான். எனது திருமணத்தைக் காண வேண்டும் என்று அவள் மிகவும் விருப்பப்பட்டாள். பெண் கூட மான்யகேதுவில் தயாராகக் காத்திருக்கிறாள். எனது அத்தையின் மகள் பீயுஷமணி. ஆனால், அத்திமலையானின் பிரதிமையைக் கண்டெடுத்த பின்னர்தான் நான் திருமணம் செய்து கொள்வேன் என்று சபதம் செய்திருப்பதால், திருமணத்திற்கு நான் உடன்படவில்லை. அந்தக்

குறையுடன்தான் எனது தாய் ராஜகாந்தி தனது கண்களை மூடினாள்!" — உதயனின் மனதை பாரம் அழுத்த, தனது கண்கள் கலங்குவதைத் தவிர்க்க அவற்றை இறுக மூடினான்.

"உனது தாயைவிட, அந்தப் பீயுஷமணிதான் இன்னும் அதிகப் பரிதாபத்திற்கு உரியவள். நீ எப்போது சபதத்தை நிறைவேற்றப் போகிறாய் என்று ஆவலுடன் காத்திருப்பாள், பாவம்! அத்திமலைத்தேவனுக்காக இல்லாவிட்டாலும், பீயுஷமணிக்காக நாம் விரைவில் அத்திமலை வரதனின் பிரதிமையைக் கண்டுபிடித்தே தீர வேண்டும்..!" — நந்திவர்மன் கூறினான்.

"பல்லவ இளவரசிகள் யாரும் சுகப்படவேயில்லை, நந்திவர்மா! நவரத்ன பல்லவி, ஜெயஸ்ரீ, எனது தாய் ராஜகாந்தி. அவ்வளவு ஏன்! ஜெயவர்மரின் மனைவி சாயாதேவி கூடத் தற்கொலை செய்துகொண்டாள் என்று கருவூலக் குறிப்புகள் கூறுகின்றன..!" — உதயன் கூறினான்.

"எனக்கென்னவோ, நவரத்தின பல்லவி துணிவான முடிவைத்தான் எடுத்திருக்கிறாள் என்றே தோன்றுகிறது. அவள் வாழ்ந்திருந்தால், இந்த மாளிகையைப் போன்று அவள் வாழ்வும் பாழடைந்து போயிருக்கும் அல்லவா? கள்வனைப் புருஷனாக ஏற்று அவனுடன் காலமெல்லாம் கண்ணீர் சிந்தியபடி வாழ்வதைவிட, தன்னை மாய்த்துக்கொண்டு நிம்மதியைத் தேடியிருக்கிறாள்!" நந்திவர்மன் கூற, சரியாகக் கொலுமண்டபத்தைக் கடந்து நீண்ட முற்றத்திற்கு இருவரும் வந்தனர்.

திடீரென்று —

இவர்களது அரவம் கேட்டு, கூட்டமாக ஊசலாடிக் கொண்டிருந்த வௌவால்கள் 'விர்'ரென்று பறக்கத் துவங்க, ஒன்றிரண்டு வௌவால்கள் இருவரின் முகத்தையும் தாக்கின.

"எச்சரிக்கை நந்திவர்மா! முகத்தை மூடிக்கொள்..! வெளவால்களின் துர்நாற்றம் ஒருவிதக் காய்ச்சலை உண்டு செய்யும்." — உதயன் கூறினான்.

"எங்கள் காம்போஜ நாட்டில் ஒரு நம்பிக்கை. எங்கெல்லாம் வெளவால்கள் அதிகம் தென்படுகிறதோ, அங்கே பொக்கிஷங்கள் இருக்கும் என்று நம்பு கிறார்கள்..!" — நந்திவர்மன் கூற, உதயன் சிரித்தான்.

"பல்லவத்தின் சோக நினைவுகள்தான் அதன் பொக்கிஷங்கள்!" — என்றவன், முற்றத்தில் அடர்ந்து பரவியிருந்த ஒரு கொடியை அறுத்து வழியேற்படுத்த, சரியாக அடுக்களையின் மீது அமைக்கப்பட்டிருந்த அந்தப் பன்னிரண்டு அடி புகைபோக்கி இருவரது கண்களிலும் தென்பட்டது.

"எவ்வளவு உயரமான புகைபோக்கி!?" — நந்திவர்மன் வியந்தான்.

"சிம்மவர்மர் தனது பெண் நவரத்னாவின் மாளிகையில் இருந்து இந்தப் புகைபோக்கியைப் பார்க்க வேண்டும் என்பதற்காக இதனை அமைத்தாராம்.. புகை வெளிவருவதைக் கண்டதும், தனது மகள் வசிக்கும் மாளிகையில் அடுக்களையில் உணவு தயாரிக்கப்படுகிறது என்கிற திருப்தியை கொள்ள வேண்டும் என்பதற்காக அமைக்கப்பட்ட புகைபோக்கி. இதன் வழியாகப் புகை வெளியேறவே இல்லை. திருமணம் ஆன அன்று இரவே, நவரத்ன பல்லவி தற்கொலை செய்து கொண்டாள்..!" — உதயன் கூறினான்.

"அதன்பிறகு இங்கே யார் வசித்தார்கள்?"

"ரணதிலகன் அதன்பிறகு இங்கே வசித்தான். தான் கொள்ளையடிக்கும் பொருட்களை இங்கேதான பதுக்கி வைத்தான். சிம்மவிஷ்ணு பல்லவர் அவனை விரட்டி அடித்து அவன் பதுக்கிய பொக்கிஷங்களைக் கஜானாவில் சேர்த்தார். அதன் பிறகு இங்கே யாருமே

வருவதில்லை. ஒன்றிரண்டு பேர் இங்கே இரவைக் கழித்து, மறுநாள் பிணமாகக் கண்டெடுக்கப்பட்டதால் யாரும் இங்கே வருவதில்லை..!" — உதயன் கூறினான்.

இருவரும் அகன்ற வாயிலுடன் மிகவும் பிரம்மாண்டமாக இருந்த பிரவாள மாளிகையின் அடுக்களையினுள் நுழைந்தனர். அடுக்களையே இடிந்து போய், கல்லும் சுண்ணாம்புக் கலவையுமாகக் கிடக்க, ஆங்காங்கே பல்வேறு ஜந்துகள் ஊர்ந்து கொண்டிருந்தன.

உணவு பொங்குவதற்காக நான்கு பிரம்மாண்ட மண் அடுப்புகள் அமைக்கப்பட்டிருந்தன. அடுப்புகள் இடிந்து போய்க் காணப்பட்டன. நந்திவர்மனின் கண்கள் பம்பரமாகச் சுழல, நடுவே இருந்த அந்தப் பெரிய அடுப்பைக் கவனித்தான். அதன் மீதுதான் சற்று முன்பாக அவன் கண்ட அந்தப் புகைபோக்கி அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அந்தப் புகைபோக்கியின் அடியில் இருந்த துவாரம் பூசப் பட்டிருந்தது. நந்திவர்மன் தலையைக் குனிந்து அதன் அடிபாகத்தை ஆராய முற்பட்ட போது —

சடாரென்று உதயன் அவனைப் பின்னுக்கு இழுத்தான்.

அடுப்பின் கூரைப் பகுதியில் இருந்து கல்லும் மண்ணும் சிதறின. "காலை நான் பட்டாபிஷேகம் செய்து கொண்டதற்குப் பல்லவ மூதாதையர்கள் என்னை ஆசீர் வதிக்கின்றனர் போலும்!" — கேலியாகச் சொன்னான் நந்திவர்மன்.

உதயசந்திரனும் முறுவலித்தபடி அங்கிருந்து நகர, அடுப்பின் பக்கத்தில் உயரே செல்வதற்குச் சுழலும் படிகள் அமைக்கப்பட்டிருந்ததைக் கண்டார்கள்.

"இந்தப் படிகள் எங்கே செல்கின்றன?" — நந்திவர்மன் கேட்டான்.

"நாம் சற்று முன் கண்டோமே, அந்தப் பிரம்மாண்டப் புகைபோக்கி. அதைப் பணியாளர்கள் சுத்தம் செய்வதற்காக அமைக்கப்பட்ட சுழலும் படிகள். புகைபோக்கியின் உச்சிக்குச் செல்கின்றன போலும்..!" —உதயன் கூறினான்.

"மேலே ஏறிச் செல்லலாமா?" — ஆவலுடன் கேட்டான் நந்திவர்மன்!

"நீ இப்போதுதான் குமார பருவத்தில் காலடி வைக்கிறாய். அந்தப் பருவத்திற்குரிய ஆர்வம் அப்படித்தான் கேட்கத் தோன்றும். நான் உன்னுடைய தளபதி. உன்னை ஆபத்தில் இருந்து காப்பது என் பணி! மேலே சென்று உனக்கு ஏதாவது நேர்ந்தால், அரியணை ஆசையில் நான்தான் உன்னை ஆபத்தில் சிக்க வைத்தேன் என்கிற பழியை எனக்கு ஏற்படுத்தாதே, நந்திவர்மா!" — உதயன் கண்டிப்புடன் கூறினான்.

"மக்கள் ஏன் அப்படி நினைக்கப் போகிறார்கள்? நான் காம்போஜத்தில் இருந்து வருவதற்கு முன்பாகவே நீ நினைத்திருந்தால் மன்னனாக அரியணையில் அமர்ந் திருக்கலாமே. என்னைக் கேட்டால், என்னைவிடப் பல்லவ மன்னனாக அரியணையில் அமர்வதற்கு நீயே பொருத்தமானவன், உதயா!" நெகிழ்ச்சியுடன் கூறியபடி சுழலும் படிகளில் ஏறத் துவங்கினான், நந்திவர்மன். வேறு வழியின்றி, உதயசந்திரனும் அவனைப் பின் தொடர்ந்தான்.

சுண்ணாம்புப் படிகள் ஆங்காங்கே பெயர்ந்து மிகவும் சீலமாகக் காட்சிதந்தன. ஒன்றிரண்டு படிகள் அடியோடு தகர்ந்து, இருவரையும் தாவிச் செல்ல வைத்தன. ஆங்காங்கே வௌவால்களும் தங்களது யோக நித்திரையைக் கலைத்ததால் உக்கிரம் கொண்டு இவர்கள் இருவரின் முகங்களையும் தாக்கின.

ஒருவழியாக உச்சிக்குச் சென்றதும், ஒரு கதவு பிளந்து கிடந்தது. அதனைத் தனது காலால் எட்டி உதைக்க, அது பெருத்த சத்தத்துடன் விழுந்தது. கதவின் பின்பாகப் புகைபோக்கியின் உச்சி தெரிந்தது. புகைபோக்கியின் உச்சிப்பகுதியின் கீழே சுத்தம் செய்யும் பணியாளர்கள் நடப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த மரப்பாலம் ஒன்று காணப்பட்டது.

அதன் மீது காலைப் பதிக்க முயன்றான், நந்திவர்மன்.

"எச்சரிக்கை நந்திவர்மா..! பல நூற்றாண்டுகளைத் தாண்டிவிட்ட மாளிகை. நமக்குக் கவனம் தேவை. மரம் உளுத்துப் போனதாக இருக்கலாம். கால் வைத்தவுடன் உடைந்து விழலாம். நான் முதலில் செல்கிறேன்..!" என்றவாறு நந்திவர்மனை பின்னுக்குத் தள்ளிவிட்டு தான் முன்னால் நடந்தான். ஆச்சரியம்தான். அந்த மரப்பாலம் உறுதியாகத்தான் இருந்தது. அந்தப் புகைபோக்கியைச் சுத்தம் செய்வதற்காக அதன் உச்சியின் கீழ் வட்டமாக அமைக்கப்பட்டிருந்த அந்தப் பாலத்தில் நின்றனர் இருவரும்.

"அதோ கிழக்கில் தெரிகிறது பார், அத்திமலைத் தேவனின் ஆலயம். இங்கே வடமேற்கே பார்! நமது ஒத்தாடை அரண்மனையும், ஒத்தாடையான் ஆலயமும் தெரிகிறது. அதோ வடகிழக்கே தெரிகிறது பார், ஸ்ரீவர மலையும், முக்கூடல் மணல்வெளியும். அதோ பார் வேகவதியின் கரையில் அடர்ந்த காடு! அதுதான் தும்பருவனம் என்கிற ததும்பவனம். பிரம்மன் அஸ்வமேதம் செய்த இடம். அங்கேதான் புகழ் பெற்ற ராஜதந்திரி சாணக்கியன் தனது பால்யத்தில் வசித்தான்..!" — உதயன் சுட்டிக்காட்ட, பிரம்மிப்புடன் நின்றான், நந்திவர்மன். காற்று வந்து புகைபோக்கியின் மீது வேகமாக மோதி, அவர்களைத் திணறச் செய்தது.

உணர்ச்சியுடன் தன்னைச் சுற்றி நோக்கினான், நந்திவர்மன்.

"அத்திமலைத் தேவராஜனே! எங்கிருக்கிறீர்..? நான் உங்களைத் தேடிக் கண்டெடுத்து, அத்திமலையில் உங்களைப் பிரதிஷ்டை செய்து, உக்ரோதயத்தை அணிவித்து அஸ்வமேத யாகத்தைச் செய்யப் போகிறேன். எங்கிருந்தாலும் வந்துவிடுங்கள். பிரகலாதனைப் போன்று நானும் ஒரு பாலகன்தான். உங்களை அழைக்கிறேன். எங்கிருந்தாலும் வாருங்கள்..!" பலங்கொண்ட மட்டும் குரலை உயர்த்திக் கூவினான், நந்திவர்மன்.

அவனைத் திகைப்புடன் பார்த்தான், உதயசந்திரன். இந்தக் குமாரனுக்குத்தான் எவ்வளவு தன்னம்பிக்கை. இங்ஙனம் குரல் கொடுத்தால் அத்திமலைத்தேவனின் செவிகளில் விழுந்துவிடுமா?

"நீ பிரகலாதனைப் போன்று குரல் கொடுத்தால், உடனே அவர் இதோ இந்தப் புகைபோக்கியை பிளந்துகொண்டு வெளியே வந்துவிடப் போகிறாரா என்ன? அவனைத் தேடுவதை விட்டுவிட்டு, புகைபோக்கியின் உயரே நின்று கூவினால் அவன் வந்துவிடுவானா..?" — உதயன் சிரித்தான்.

"வருவான், நிச்சயம் வருவான்! இன்று காலை ஆலிநாடர் என்னிடம் கூறியதை கவனித்தாய் அல்லவா? 'மாற்றங்கள் தொடரும். நீ தேடுபவை தானாக உன்னை அடையும்!' என்றாரே..! நிச்சயம் அத்திமலைத் தேவராஜன் என்னைத் தேடி வருவான்!" — நந்திவர்மன் கூறினான்.

"வரட்டும். அதற்கு முன்பாகக் கங்க நாட்டுக் கஜானாவில் இருக்கும் அவனது ஸ்ரீதள மணியான உக்ரோதயத்தைக் கைப்பற்ற வேண்டும். அத்திமலைத் தேவன் வந்தவுடன் எங்கே எனது ஸ்ரீதள மணி என்று கேட்பான் அல்லவா?" — உதயன் கூறினான்.

இருவரும் கீழே இறங்கத்துவங்கினர். புகைபோக்கியின் உள்ளே ஒன்பது அடிக்கு, அத்திமலைத்தேவன்

இவர்களது சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டு சிரித்தபடி நின்றிருந்தான். நந்திவர்மன் அழைத்ததும், தூணைப் பிளந்து வெளியேறிய நரசிங்கத்தைப் போன்று புகைபோக்கியைப் பிளந்துகொண்டு அத்திமலைக்குச் செல்ல இவனுக்கும் ஆசைதான். கலியின் சித்து விளையாட்டுகள் இன்னும் தொடர வேண்டிய நிலையில் அவன் எதற்காகக் காத்திருக்கிறான்? இன்னும் கோரத் தாண்டவமாடும் கலியின் ஆட்சியில், வேறு சில மன்னர்களும் தோன்ற உள்ளனர். அவர்களது ஆட்டம் தீர்ந்த பிறகே, அவன் வெளியே வர நிச்சயித்திருக்கிறான். நந்திவர்மன் புகைபோக்கியின் உச்சியில் இருந்து கூவியபோது, வெளியே வந்திருக்கலாம் அத்திமலைத் தேவராஜன்.

ஆனால் அவனுக்கு வரத்தோன்றவில்லை.

நந்திவர்மன் பல்லவத்திற்குப் புறப்படுவதற்கு முன்பாகத் தனது ராஜகுரு ஷ்யமந்தகச் சிம்மவுபுவிற்கு ஒரு வாக்குக் கொடுத்திருக்கிறான். எப்போது அத்திமலைத்தேவராஜனின் பிரதிமை கிடைக்கிறதோ அதனைக் காம்போஜத்திற்கு அனுப்பி ஐராவத மலையில் தேவராஜனாகப் பிரதிஷ்டை செய்வேன் என்று வாக்களித்திருந்தான்.

இந்த நிலையில், நந்திவர்மனின் அழைப்பை ஏற்று எப்படி வெளியே வரத்தோன்றும், அத்திமலைத் தேவனுக்கு?

தாங்கள் தேடும் அத்திமலையின் பொக்கிஷம் அந்தப் புகைபோக்கியின் உள்ளேதான் மகாமல்ல எதியால் பதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியாமல், இருவரும் அந்தச் சுழல் படிகளில் இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

# 18. விருந்தில் ஒரு வியூகம்!

நந்திவர்மன் பதவி ஏற்றதை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அந்த விருந்துக்குக் காஞ்சியின் முக்கியப் பிரமுகர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். முக்கூடல் கடிகையை நரசிம்மவர்மன் ஆட்சியில் பாலாறு பொங்கி அழித்துவிட, ஒத்தாடை அரண் மனைக்கு அருகிலேயே புதிய கடிகை இயங்கிக் கொண்டிருந்தது. அந்தக் கடிகையின் விஸ்தீரணமான மைதானத்தில்தான் விருந்து நடக்க ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. இது தவிர, அத்தியூர், தருமநகரம், மாலிருஞ் சோலை மற்றும் முக்கூடல் வேங்கடவன் கோயில் ஆகிய இடங்களில் பொதுமக்களுக்கும் விருந்து அளிக்க ஏற்பாடு செய்திருந்தார், ஆலவாயர்.

பட்டாபிஷேகத்தை முன்னிட்டுக் கடிகை இரண்டு நாட்களாகச் செயல்படவில்லை. கடிகையின் மைதானத்தில் பெரிய பந்தல் அமைக்கப்பட்டு ஒரு மூலையில் விருந்து தயாரிப்பதற்கான அடுக்களையும் ஒதுக்கப்பட்டது. மைதானத்தின் மணலில் நீர் தெளிக்கப் பட்டு, ஆங்காங்கே இரத்தினக் கம்பளங்கள் விரிக்கப் பட்டன. செயற்கை செடிகள், நீரூற்றும் பதுமைகள், அலங்காரத் தோரணங்கள், பொம்மைகள் என்று அந்தப் பந்தல் மிக அழகாக அலங்கரிக்கப்பட்டது. பந்தலின் மையத்தில் மன்னனும் முக்கியப் பிரமுகர்களும் அமர் வதற்காக ஒரு கண்ணாடி அறை உருவாக்கப்பட்டது. அந்தக் கண்ணாடி அறையின் உள்ளே பஞ்சணைகளும், திண்டுகளும் நேர்த்தியாக வைக்கப்பட்டன. கண்ணாடி

மாளிகையின் வெளியே சிறு சிறு வட்ட வடிவத்தில் தடுப்புகளுடன் கூடிய அறைகள் அமைக்கப்பட்டு அவை மிக அழகாக அலங்கரிக்கப்பட்டன.

நந்திவர்மனுக்கு ஆதரவாகச் செயல்பட்ட அனைவரையும் அன்று கௌரவிக்க ஏற்பாடு செய்திருந்தான், உதயசந்திரன்.

உதயசந்திரனுடன் நந்திவர்மன் நடக்க, அவன் பின்பாக ஆலவாயர், காஸ்யப சதகரணி, மதுசூதன பண்டிதர் ஆகியோர் நடந்தனர்.

வயிரமேகன் என்கிற தந்திதுர்கனும் அவன் மகள் ரேவாதேவியும் அடுத்து வந்து மையத்தில் இருந்த கண்ணாடி அறையினுள் நுழைந்தனர்.

ஆலிநாடர் தனது மெய்க்காப்பாளன் தூண்டிலா னுடனும், அவரது நான்கு சகாக்களான, ஜலசேனன், சாயாவக்ரன், பஞ்சவன் மற்றும் வார்த்தாவர்ணன் ஆகியோருடன் வர, உதயசந்திரன் கண்ணாடி அறையில் இருந்து வெளியே வந்து, ஆலிநாடரை பணிவுடன் வரவேற்று கண்ணாடி அறைக்குள் அழைத்துச் சென்றான்.

காஞ்சியின் பிரமுகர்கள், கற்றறிந்த சான்றோர்கள், வியாபாரிகள், என்று அனைவரும் விருந்துக்கு அழைக்கப் பட்டிருந்தனர்.

அத்தியூர் மகாத்மியம் என்கிற நாட்டிய நாடகத்தைக் கடிகையின் கலைக்குழுவினர் ஆடி விருந்தினரை மகிழ்வித்தனர்.

சரஸ்வதி கோபத்துடன் சிருஷ்டி தண்டத்தைப் பிரம்மனிடம் இருந்து பறித்துச் செல்ல, அதனால் அஸ்வமேத யாகம் செய்யும் பிரம்மனுக்கு அவள் பல இடையூறுகள் தர, இறுதியில் அவளது கர்வத்தை அடக்கி, தேவராஜன் காட்சி தர, அவனுக்குத் தேவ

உடும்பர அத்தி மரத்தில் விஸ்வகர்மா தேகம் சமைக்க, குபேரன் ஸ்ரீதள மணியை அணிவிக்க, தான் அத்தி மலையிலேயே தங்கி பக்தர்களுக்கு அருள்பாலிப்பேன் என்று தேவராஜன் கூறுவதுடன், நாடகம் இனிதே முடிந்தது.

அனைவருமே நாடகத்தை ஆர்வத்துடன் பார்த்தனர். நாடகத்தின் முடிவில் இத்தகைய விசேடமான பிரதிமையைக் காஞ்சி இழந்துவிட்டதே என்கிற வேதனைதான், நடந்த விவரங்களை அறிந்த பல பேருக்குத் தோன்றியது.

விருந்து தொடர, ஆலிநாடர் கனிகளையும், பழரசத்தையும் மட்டுமே உண்டார்.

"ஆலிநாடரே! நீ என்ன அரசாட்சி செய்யும் வேந்தனாக அல்லாமல், அந்தணனைப் போன்று சூனகத்தை நிராகரிக்கின்றீரே?" — ஆலவாயர் கேலி செய்தார்.

"என்னுடைய காதலி குமுதவல்லிக்குப் பிடிக்காத எந்தச் செயலையும் நான் செய்யமாட்டேன். வைணவ குல திலகமான அவள் என்னை வைணவனாக வாழும் படி பணித்திருக்கிறாள். நான் ஏற்கனவே அந்தத் திக்கில் பயணத்தைத் தொடங்கிவிட்டேன்..!" என்று புன்சிரிப்புடன் கூறினார், ஆலிநாடர்.

"உமது வாழ்வில் நடுவில் வந்தவளுக்காகத் தொட்டில் பழக்கங்களை விடுவானேன்? காதலுக்கு இவ்வளவு பெரிய விலையைத் தர வேண்டுமா என்ன?" — தனது இனிய குரலில் வியப்பினை வெளிப்படுத்தினாள், ரேவா.

"தந்தை, தாய், சகோதரர்கள் அனைத்து உறவுமே தேகப் பந்தத்தால் உருவானது. குருதியைச் சார்ந்த உறவு இவ்வுறவுகள். ஆனால் கண்டதும் காதல் கொண்டு, ஒருவளின் இதயத்தைப் பெற வேண்டி அவளுக்குப் பிடித்த வகையில் தன்னை மாற்றிக்கொள்ள எண்ணுவது

என்பது மனரீதியிலான உறவு. எத்தனையோ பெண்களைச் சந்தித்தும் ஏற்படாத அந்த உணர்வு குமுத வல்லியைக் கண்டதும் மட்டுமே எனக்கு ஏற்பட்டது. எனது மனதை அவள் வசம் ஒப்படைத்து விட்டேன். அவள் மனதை என்னிடம் தருவதற்கு இசைந்து விட்டாள். அவளது மனம் எனது வசம் இருக்கும்போது, அவளுக்குப் பிடிக்காத செயல்களை நான் எப்படிச் செய்வது?" — ஆலிநாடர் கூறியதும் அங்கிருந்த பலர் உருகிப் போனார்கள்.

உதயசந்திரனின் மனம் கூட, தனக்காகக் காத்திருக்கும் பீயுஷமணியை நினைத்துத் துடித்தது. ஆலிநாடர் கூறுவது அல்லவோ தூய்மையான காதல்! வைணவப் பெண்ணின் மனதைப் பெற வேண்டி ஒரு வைணவராக மாறிக் கொண்டிருக்கிறாரே..? தனக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கும் பீயுஷமணியை இவனோ திரும்பிப் பாராமலேயே இருக்கிறானே.

விருந்து முடிந்தது.

நந்திவர்மன் எழுந்தான்.

"சான்றோர்களே..! இன்று நான் மன்னனாக உங்கள் முன்பாக நிற்பதற்குக் காரணமே நமது ஆலிநாடர்தான். கண்டகோபாலன் என்கிற வண்ணான் வேடம் புனைந்து என்னை நந்திபுர விண்ணகர ஜகன்னாதனின் வஸ்திரங் களின் இடையே மறைத்து கழுதையின் மேல் வில் வலத்திற்கு அழைத்துச் சென்று, தளபதி உதயசந்திரனிடம் ஒப்படைத்தார். அவரை எங்ஙனம் கௌரவிப்பது என்று தெரியவில்லை. இருப்பினும், உறையூர் சோழனுக்கு அவர் திறை செலுத்தி வருவதாக அறிகிறேன். ஆனால் அண்மைக்காலத்தில் அவர் சோழனுக்குத் திறை செலுத்த மறுத்துவிட்டதால், தளபதி பதவியில் இருந்தும், மங்கை நாட்டின் சகல பொறுப்புகளில் இருந்தும் அவரைச் சோழ மன்னன் நீக்கிவிட்டதாக அறிகிறேன். சோழனால்

பரகாலனுக்கு இனி தொல்லைகள் ஏற்படாது. மங்கை நாட்டின் பொறுப்புகளை மீண்டும் அவரிடமே ஒப்படைக்கும்படி சோழனுக்கு ஆணை இடுகிறேன்!" — என்றதும் ஆலிநாடர் எழுந்தார்.

"நந்திவர்மரே! அவசியமில்லை. நான் புதிய பாதையில் பயணிக்கத் தொடங்கிவிட்டேன். எனது காதலி குமுத வல்லியின் கோரிக்கைகளை ஏற்றுத் திருமாலடியார் களுக்கு அன்னம் அளித்து வருகிறேன். இனி அரசாட்சி தேவையில்லை என்கிற முடிவுக்கு நான் என்றோ வந்துவிட்டேன். உனது அன்பு அழைப்பினை நிராகரிக்க முடியாமல்தான் விருந்துக்கு வந்தேன். விருந்து இனிது முடிந்தது. இனி நான் புறப்படுகிறேன். உனது அன்பிற்கு நன்றி..!" என்று கூறிவிட்டு, இருக்கையை விட்டு எழ, உதயசந்திரன அவர் முன்பாக பாய்ந்து சென்று நின்றான்.

"பரகாலரே! விருந்துக்காக மட்டும் தங்களை அழைக்க வில்லை. விருந்து முடிந்ததும் ஒரு முக்கிய ஆலோசனை உள்ளது, அதில் கலந்து கொள்வதற்காகவும்தான் தங்களை அழைத்திருக்கிறோம். ஆலோசனை முடிந்து இன்றிரவு தாங்கள் அரண்மனையிலேயே தங்கிவிட்டு, விடியலில் திருமங்கை நாட்டுக்கு எழுந்தருளலாம்!" உதயசந்திரன் வேண்டிக்கொள்ள, பரகாலர் புறப்படும் எண்ணத்தை கைவிட்டார்.

அன்றிரவு —

ரேவா தனது ஜாகைக்குத் திரும்ப, ஒத்தாடை அரண் மனையின் ஆலோசனை அறையில் நந்திவர்மன், உதய சந்திரன், வயிரமேகன் பரகாலன், தண்டநாயகர் ஆலவாயர், இராஜகுரு காஷ்யப சதகரணி, மதுசூதன பண்டிதர், விஜயவிக்கிரமன் மற்றும் சுக்கில மல்லன் ஆகியோர் மட்டும் அமர்ந்திருந்தனர்.

உதயசந்திரன் அவர்களது முன்பாக உரை நிகழ்த்தத் துவங்கினான்.

“விருந்து நடைபெறுவதற்கு முன்பாகக் கடிகை கலைக் குழுவினர் நடத்திய அத்திமலை மகாத்மியம் நாடகத்தைக் கண்டு களித்திருப்பீர்கள் என்று நினைக் கிறேன். நானும் கண்டேன். ஆனால் களிக்கவில்லை. காரணம், காஞ்சியின் பொக்கிஷமான அத்திமலைத் தேவனின் பிரதிமை நமது கை நழுவிப் போய்விட்டது. களப்பரருக்கு பயந்து நவரத்ன பல்லவி அதனை ஒளித்து வைத்தாள். சீனப் பயணி யுவான் சுவாங் கொண்டு வந்த மடலைக் கொண்டு, அந்தச் சிலை இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்தார், நரசிம்ம பல்லவர். ஆனால் கைக்கு எட்டிய கனி வாய்க்கு கிட்டாததைப் போன்று, தேவராஜ சிலை ஆழிப்பேரலையில் மூழ்கி, பிறகு மகாமல்ல எதி என்கிற எதிரியின் கையில் சிக்கியது. அவன் அதனை எங்கோ பதுக்கி வைத்துள்ளான். எங்கே என்று கூறுவதற்கு அவன் உயிருடன் இல்லை. அந்தச் சிலையை எப்பாடுபட்டாவது தேடிக் கண்டுபிடித்து அத்தி மலையில் மீண்டும் பிரதிஷ்டை செய்ய வேண்டும். பல்லவத்தின் சார்பில் அஸ்வமேத யாகம் செய்து மீண்டும் பழைய கீர்த்தியை அடைய வேண்டும். அதற்காகவே இந்த ஆலோசனை கூட்டம்..!” — உதயசந்திரன் கூறினான்.

“பிரதிமை கிடைத்தபின்தான் அஸ்வமேதம் செய்ய வேண்டுமா என்ன? நந்திவர்மன்தான் மன்னனாகப் பதவி ஏற்றுக்கொண்டுவிட்டானே! ரேவாதேவிக்கும் அவனுக்கும் திருமண நாள் கூட நிச்சயம் ஆகிவிட்டது. எனவே, அஸ்வமேதம் செய்யத் தடை ஒன்றும் இல்லை. பிரதிமை கிடைக்கவில்லை என்றால் கூட நந்தி வர்மனால் அஸ்வமேதம் செய்ய முடியும்!” — வயிரமேகன் கூறினான்.

“இல்லை என்று சொல்லவில்லை. அஸ்வமேதத்திற்கு தேவ உடும்பர சமித்துகள் மிகவும் தேவை அல்லவா? ஒன்று தேவ உடும்பர பிரதிமையைப் பந்தன ஸ்தாபனம்

செய்து அஸ்வமேதம் செய்ய வேண்டும் அல்லது தேவ உடும்பர சமித்தாதாரணம் செய்து அஸ்வமேதம் செய்ய வேண்டும். இப்போது பிரதிமை காணாமல் போய் உள்ள நிலையில் நாம் எப்படி அஸ்வமேதம் செய்வது?" — காஸ்யப சதகரணி கூறினார்.

"அத்திமலைத்தேவனுக்குப் பிரச்னைகள் தோன்றியதே அஸ்வமேதம் செய்ய விரும்பிய மன்னர்களால்தான். இல்லையேல், அவனுக்கு ஏன் இந்தப் பிரச்னைகள்? முதன்முதலில் விஷ்ணுகுப்தன் அத்தியூரில் இருந்து தேவ உடும்பர சமித்துகளை எடுத்துச் சென்று அஸ்வமேத யாகம் செய்து மவுரியத்தை நிறுவினான். அதன் பிறகு, சமுத்ரகுப்தன், புஷ்யமித்ரா, ஹர்ஷன், புலிகேசி என்று பல மன்னர்கள் தேவ உடும்பரத்திற்காக அலைந்தனர். இவரால் போதாது என்று மகாயான பௌத்தர்கள், தெரவாட பௌத்தர்கள் அவர்கள் பங்குக்குத் தேவ உடும்பர சிலையைக் கடத்த திட்டமிட்டனர். எல்லா வற்றிற்கும் காரணம் வடக்கே இருந்த தேவ உடும்பர அத்தி மரத்தை திஸ்ஸரக்கா என்கிற அசோகனின் மனைவி வெட்டிச் சாய்த்ததுதான். இல்லையேல், காஞ்சிக்கு இவ்வளவு பிரச்னைகள் ஏற்பட்டிருக்காது!" — காஸ்யப சதகரணி கூறினார்.

தனது முகவாயை வருடியபடி யோசனையில் ஆழ்ந்திருந்த பரகாலன், திடீரென்று உதயசந்திரனை ஆழமாகப் பார்த்தார்.

"படுத்துக்கொண்டும் போர்த்திக்கொள்ளலாம். போர்த்திக்கொண்டும் படுக்கலாம். அவரவர் வசதியைப் பொறுத்தது!" — பரகாலர் கூறியதும் அனைவரும் அவரை வியப்புடன் நோக்கினர்.

"நான் சொல்ல வருவது என்னவென்றால், பிரதிமை கிடைத்தும் அஸ்வமேதம் செய்யலாம். அஸ்வமேதம் செய்த பிறகும் பிரதிமை கிடைக்கலாம்." — பரகாலர்

கூறியதும், மதுசூதன பண்டிதர் புருவங்களை உயர்த்தினார்.

“அதெப்படி! தேவ உடும்பர பிரதிமையைப் பந்தன ஸ்தாபனம் செய்ய வேண்டும் அல்லது தேவ உடும்பர சமித்தாதாரணம் செய்ய வேண்டும். நம்மிடம் தேவ உடும்பரம் இல்லாத போது எங்ஙனம், அஸ்வமேத யாகத்தைச் செய்வது?”

பரகாலன் தான் அமர்ந்த இருக்கையில் இருந்து எழுந்து சென்று சாளரத்தின் அருகே நின்றார். கரிய வானில் ஜொலித்த நட்சத்திரங்களை வெறித்தவர் திடீரென்று திரும்பி சாளரச் சுவரில் சாய்ந்தபடி நின்று தனது கைகளைக் கட்டிக்கொண்டார்.

“நந்திவர்மா! உனது விருந்தின் போது என்னை எப்படிக் கவுரவிப்பது என்பது தெரியவில்லை என்று கூறி எனக்குத் தளபதி பதவியையும் திருமங்கை நாட்டின் பொறுப்புகளையும் மீண்டும் தருகிறேன் என்றாய். நான் வேண்டாம் என்று மறுத்துவிட்டதற்கு உண்மையான காரணம் உங்களுக்குத் தெரியாது. அதனை இப்போது கூறுகிறேன்.

“சோழ மன்னனுக்கு நான் கட்ட வேண்டிய கப்பம், திறை ஆகியவற்றை எனது காதலிக்காகச் செலவழித்து விட்டேன். நான் ஒன்றும் அவளுக்கு ஆபரணங்களும், சுவர்ணங்களும் வாங்கித் தரவில்லை. அன்றாடம் ஆயிரம் திருமால் அடியார்களுக்கு உணவளித்து வருகிறேன். இந்த கைங்கர்யங்களைச் செய்வதால் எனது செல்வங்கள் அனைத்தையும் இழந்துவிட்டேன். சோழ மன்னனின் ஆதரவையும் இழந்துவிட்டேன். நான் என்ன செய்வேன்..! உன்னிடம் செல்வங்களைப் பெற்று நான் திருமாலடியார்களுக்கு உணவளிக்க முடியும். அதனை நீ செய்த கைங்கர்யங்களாகவே குமுதவல்லி கருதக்கூடும் என்பதால்தான் உனது உதவியையும் மறுத்தேன். இப்போது ஒரு உண்மையைக் கூறுகிறேன். நான் ஒரு

*கள்வன். மங்கை மடத்தைச் சுற்றியுள்ள காடுகளில் வழிப்போக்கர்களிடம் கொள்ளையடித்துதான் எனது கைங்கர்யங்களைச் செய்கிறேன். இன்றிரவு கூட, விருந்து முடிந்ததும் கொள்ளையடிப்பதற்காகத்தான் செல்ல நினைத்திருந்தேன். உதயசந்திரன் வேண்டிக் கொண்டதால் திட்டத்தை நாளை இரவுக்குத் தள்ளி வைத்தேன். இதுவும் அத்தியூரானின் திருவுள்ளம் என்றுதான் கூற வேண்டும்.*

*"சென்ற வாரம், ஒரு நாள் நானும், எனது சீடன் தோலாவழக்கனும் *பதரிதிட்டு புத்த விஹாரத்திற்குச் சென்றிருந்தோம். அங்கே ஸ்வர்ணத்தில் வடிக்கப்பட்ட ஒரு புத்தர் சிலையைப் பார்த்தேன். அந்தச் சிலையை மிகவும் பாதுகாப்புடன் வைத்திருக்கிறார்கள். அந்தச் சிலை வைத்திருக்கும் அறைக்குக் கதவு கிடையாது. கூரிய வாட்கள் சொருகப்பட்ட சக்கரம் ஒன்று அந்த அறையின் நுழைவாயிலில் சுழன்றுக்கொண்டே இருக்கும். அது சுழலும் போது யாராலும் அந்த அறைக்குள் பிரவேசிக்க முடியாது. அந்தச் சக்கரத்தை சுழல வைக்கும் யந்திரம் ஒன்று பாதுகாப்பு அறையில் இருக்கும். அந்த யந்திரத்தின் மையத்தில் வெள்ளிப்பூண் போடப் பட்ட*

* தற்போதைய நாகப்பட்டினத்தின் நீதிமன்றம் இயங்கும் இடத்தில் ஒரு காலத்தில் சூடாமணி விஹாரம் என்கிற பெயரில் புத்தர்களின் ஆலயம் இருந்தது. மகரத்துவஜன் சூடாமணிவர்மன் எனும் மன்னன் புகழ்பெற்று விளங்கினான். அவனது மகன் விஜயோத்துங்கவர்மன் தன் தந்தையின் திருநாமத்தை நிலைநாட்ட இராஜராஜ சோழன் (கி.பி.985-1014) ஆட்சிக் காலத்தில் நாகப்பட்டினத்தில் சூடாமணி விகாரத்தைப் புதுப்பித்துக் கட்டினான். அதற்கு முன்பாக அந்த விஹாரத்தின் பெயர் பதரிதிட்டு. பதரி என்றால் இலந்தை. இலந்தை மரங்கள் அடர்ந்திருந்த நிலமாதலால் அந்த விஹாரத்திற்குப் பதரிதிட்டு என்று பெயர். சீனப்பயணி யுவான் சுவாங், நாகை புத்த விகாரங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். மிகவும் ஆச்சரியப்படுத்தும் செய்தி என்னவெனில், நூறு புத்த மடங்களும், பதினாறாயிரம் புத்த துறவிகளும் இப்பகுதியில் வசித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிடி ஒன்று இருக்கும். நாள் முழுவதும் மாற்றி மாற்றி ஒரு புத்தபிக்கு அந்தப் பாதுகாப்பு அறையில் அமர்ந்து அந்த யந்திரத்தைச் சுழற்றிக்கொண்டு இருப்பானாம். சுவர்ண புத்த சிலையைக் காக்கவே இந்தப் பாதுகாப்பு நடவடிக்கை. நான் அந்தப் புத்தனின் சிலையைச் சுழலும் சக்கரத்தின் ஊடேதான் பார்த்தேன். சுத்த அபரஞ்சி தங்கத்தால் ஆனது. இனி நான் கூறப் போகும் தகவல் தான் உங்களுக்கு வியப்பாக இருக்கும். அந்தத் தங்க புத்தர் சிலையினைத் தேவ உடும்பர மரத்துண்டின் மீது அமர்த்தியிருக்கிறார்கள். புத்த பிக்கு ஒருவர் கூறிய தகவல் இது. சதகரணி கூறிய சரித்திரத்தின் படி, அசோகனின் மனைவி தேவ உடும்பர மரத்தை சிதைத் தாள் அல்லவா? சிதைந்த தேவ உடும்பரத்தின் துண்டம் ஒன்றுடன் புத்த பிக்கு ஒருவர் தெற்கே வந்தவர், இங்கே பதரிதிட்டு விஹாரத்தில் அதனை வைத்து, ஸ்வர்ண புத்தன் சிலையை அதன் மீது இருத்தினார்" —என்று கூறிய பரகாலர், அனைவரையும் ஒருமுறை நோக்கினார். நந்திவர்மன் உட்பட அனைவருமே அயர்ந்து போய் அமர்ந்திருந்தனர்.

"நானும் எனது சகாக்களும் பதரிதிட்டு சென்று இன்றிரவு அந்தப் புத்தர் சிலையைக் களவாட நினைத்திருந்தோம். உதயசந்திரன் வேண்டியதால் மட்டுமே நான் இங்குத் தங்கும்படி ஆனது. நாளை புறப்பட்டுப் பதரிதிட்டு விஹாரத்திற்குச் செல்கிறோம். என்னுடன் யாராவது வந்தால் தேவ உடும்பரத்தை எடுத்துத் தருகிறேன்!" பரகாலன் கூறியவுடன் நந்திவர்மன் எழுந்து நின்றான்.

"ஆலிநாடரே! நான் தங்களுடன் வருகிறேன்!"

உதயசந்திரன் தலையசைத்து மறுத்தான். "நீ போக வேண்டாம், நந்திவர்மா. நான் பரகாலருடன் செல்கிறேன்..!"

"இல்லை உதயசந்திரா! நந்திவர்மன் வருவதே நல்லது. மெலிந்த தேகத்துடன் சிறு குமரனாக இருக்கிறான்.

அவனால் மட்டுமே சக்கரத்தில் பதிக்கப்பட்டிருக்கும் வாட்களின் இடையே எளிதாகப் புக முடியும்!" என்றார் பரகாலர்.

"நல்லது! நீங்கள் தேவ உடும்பரத்தை பெற்றுத் தாருங்கள். நான் அதற்குள் கங்க நாட்டின் கஜானாவில் பதுக்கப்பட்டிருக்கிற உக்ரோதயத்தைப் பறிமுதல் செய்யும் முயற்சியில் இறங்குகிறேன்..!" என்றான் உதயசந்திரன்.

"எப்படிச் செய்யப் போகிறீர்கள்... போர் தொடுக்கப் போகின்றீரா?" — பரகாலர் கேட்டார்.

"முடிந்தால் கங்க நாட்டின் மீது போர் தொடுத்து அத்திமலையானின் ஆபரணமான உக்ரோதயத்தை மீட்போம்." — விஜயவிக்கிரமன் கூற, பரகாலன் சிரித்தான்.

"காதோடு காதாகப் பணியை முடிப்பதைவிட்டு, எதற்காகப் போர்? வீணாக உயிர்ச்சேதங்களும், பொருட்சேதங்களும் விளைவிப்பானேன்..? எனது சகாக்களிடம் பணியை ஒப்படையுங்கள். பணியைச் செவ்வனே செய்து முடிப்பார்கள். பதரிதிட்டு பணி முடிந்ததும், நான் எனது சகாக்களை உங்களிடம் அனுப்புகிறேன். அவர்கள் உக்ரோதயத்தை நல்லபடியாகக் கொண்டு வருவார்கள்..!" — பரகாலன் கூற, நந்திவர்மன் அவரை உற்சாகத்துடன் நோக்கினான்.

மறுநாள் நள்ளிரவு —

நந்திவர்மனும், பரகாலனும் தத்தம் குதிரைகளின் மீது ஏறி பதரிதிட்டுக்குப் புறப்பட்டனர். நீர்மேல் நடப்பான், நிழலைப் பிடிப்பான், தோலா வழக்கன் மற்றும் தாளூதுவான் அவர்களை பின்தொடர்ந்தனர். பதரிதிட்டு விகாரம் இருளில் மூழ்கியிருந்தது. பாதுகாப்பு அறையில் மட்டும் தீப கப்பரை ஒன்று ஒளிர்ந்து கொண்டிருந்தது. அதன் மங்கிய ஒளியில் அறையின் வாயிலில் ஒருவன்

காவலுக்கு நின்றிருப்பது தெரிந்தது. புரவிகளை வெளியே கட்டிவிட்டு, சப்தம் செய்யாமல் ஆறு பெரும் விஹாரத்தினுள் நுழைந்தனர். சாயாவக்கிரன் என்கிற நிழலைப்பிடிப்பான் ஓசைப்படாமல் பாதுகாப்பு அறையின் பக்கமாக நடந்தான்.

'புத்தம் சரணம் கச்சாமி
தர்மம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி'

என்று உறங்காமல் இருப்பதற்காகப் பௌத்த தருமத்தின் தாரக மந்திரத்தை முணுமுணுத்தபடி யந்திரத்தைச் சுழற்றிக்கொண்டிருந்தார், ஒரு புத்த பிக்கு.

புத்த விஹாரம் பூட்டப்பட்டு அதன் திறவுகோல் பாதுகாப்பு அறையின் ஆணியில் மாட்டப்பட்டிருந்தது. விஹாரத்தின் மற்ற துறவிகள் எல்லாம் பின்பாக இருந்த பர்ணசாலையில் உறங்கிக்கொண்டிருந்தனர். சக்கரத்தைச் சுழற்றிக்கொண்டிருந்த பிக்குவின் பாதுகாப்புக்கு ஒரு காவலன் நிற்க, மற்றொரு காவலன் விஹாரத்தைச் சுற்றி வந்துகொண்டிருந்தான். ஆறுபேரும் விஹாரத்தின் அடர்ந்த நந்தவனத்தினுள் நுழைந்து மரங்களின் பின்பாக மறைந்து நின்றார்கள். விஹாரத்தைச் சுற்றி வந்த காவலன் மீண்டும் நந்தவனப் பகுதியில் பதுங்கியிருந்த இவர்களைக் கடந்து அடுத்த சுற்றினைத் துவக்க, நிழலைப் பிடிப்பான், ஓசைப்படாமல் அவனைப் பின்தொடர்ந்து சென்றான்.

'தொம்!' ஒரு மனிதன் நிலத்தில் விழும் ஒலி கேட்க, சாயாவக்ரன் தனது பணியைச் செவ்வனே முடித்து விட்டான் என்பது புரிந்தது. அடுத்ததாகச் சாயாவக்ரன் என்ன செய்யப் போகிறான் என்பதை அறிவதற்காக ஆவலுடன் நின்றான், நந்திவர்மன்.

அதோ.. ரோந்து காவலாளி அடுத்த சுற்று வருகின்றானே..! அப்படியென்றால் சற்று முன்பாக மயங்கி விழுந்தது சாயாவக்ரனா?

திகைப்புடன் அருகே நின்றிருந்த ஆலிநாடரை நோக்கினான், நந்திவர்மன்.

"சாயாவக்ரன் எங்கே?"

"பொறுத்திருந்து பார்!" பரகாலன் கூற, அடுத்த சுற்றினைத் துவக்கியிருந்த அந்தக் காவலன் இவர்கள் நின்ற பக்கமாகத் தனது கட்டை விரலை உயர்த்தியதும் தான், அந்தக் காவலாளியின் உடையில் சாயாவக்ரன் தான் சென்று கொண்டிருக்கிறான் என்பது புரிந்தது.

சற்று நேரத்தில் மற்றொரு காவலாளியையும் பிரக்ஞையை இழக்கச் செய்து நிலத்தில் உருட்டி விட்டான், சாயாவக்ரன்.

அவன் விழுந்த ஒலியைக் கேட்டு புத்தபிக்கு திகைப் புடன் திரும்பிப் பார்க்க, உள்ளே நுழைந்த நிழலைப் பிடிப்பான், நொடியில் அவரை வளைத்துப் பிடித்துக் கைகால்களைக் கட்டி, வாயில் துணியை அடைத்து விட்டு, சுவரில் தொங்கிக்கொண்டிருந்த திறவுகோலை எடுத்துக்கொண்டு வெளியேறினான்.

விஹாரத்தைத் திறந்து உள்ளே செல்ல, நந்திவர்மனும், பரகாலரும் ஸ்வர்ண புத்தன் சிலை வைக்கப்பட்டிருந்த அறையின் வாயிலில் நின்றனர். அறையின் வாயிலை அடைத்தபடி ஒரு சக்கரம் அமைக்கப்பட்டிருந்தது. வேகமாகச் சுழலும் அந்தச் சக்கரம் இப்போது சுழலாமல் நின்றிருந்தது. சக்கரத்தின் இரு வாட்களிடையே மெலிந்த தன்னால் எளிதாக நுழைந்துவிட முடியும் என்பதனை உணர்ந்தான், நந்திவர்மன்.

"அதோ பார் நந்திவர்மா! உனக்குத் தேவையான பொருளின் மீது எனக்குத் தேவையான பொருள் வைக்கப்பட்டுள்ளது. போய் எடுத்து வா..!" பரகாலன் கூற, நந்திவர்மன் இரு வாட்களிடையே தனது உடலை நுழைத்து எச்சரிக்கையுடன் உள்ளே நுழைந்தான். அறையினுள் சென்று ஸ்வர்ண புத்தர் சிலையை ஒரு

கையிலும் எடுத்து அதன் கீழே இருந்த தேவ உடும்பர துண்டத்தை மறு கையிலும் எடுத்து வெளியே நீட்டினான். அதனை வாங்கிக் கொண்ட பரகாலர்,

"சீக்கிரம் வெளியேறு, நந்திவர்மா!" — என்று கூற, நந்திவர்மன் மீண்டும் தனது உடலைக் குறுக்கிக் கொண்டு சக்கரத்தின் இரு கூரிய வாட்களிடையே நுழைவதற்கு எத்தனித்தான்.

'தடதட' என்று ஒலி திடீரென எழும்பி, அந்தச் சக்கரம் மீண்டும் சுழல ஆரம்பித்தது. நந்திவர்மன் திடுக்கிட்டு நின்றான்.

"பரகாலரே! என்ன இது? சக்கரம் சுழலுகின்றதே!" — நந்திவர்மன் கூற, பரகாலரும் பரபரப்புடன் வாயிலுக்கு விரைந்தார்.

"நிழலைப்பிடிப்பானே! மீண்டும் சக்கரம் சுழல்கின்றது. பல்லவ மன்னர் சக்கரத்தின் மறுபுறம் சிக்கி உள்ளார். என்ன நடக்கின்றது.. பார்" — பரகாலன் கூற, சாயாவக்ரன் பாதுகாப்பு அறைக்கு விரைந்தான்.

கைகள் கட்டப்பட்டு வாயில் துணி அடைக்கப்பட்ட நிலையில் மூர்ச்சை தெளிந்திருந்த அந்தப் பிக்கு, தனது காலினால் யந்திரத்தின் பிடியைச் சுழற்றிக் கொண்டிருந்தார். அதனால்தான் சக்கரம் சுழல்கின்றது என்பதை உணர்ந்த சாயாவக்ரன், அவரை மீண்டும் தாக்கி மூர்ச்சையடையச் செய்ய, யந்திரம் சுழல்வது நின்றது. நந்திவர்மன் எளிதாகச் சக்கரத்தின் வழியே நுழைந்து வெளியேறினான்.

ஸ்வர்ண விக்கிரகத்துடன் பரகாலனும் மற்ற சீடர்களும் திருமங்கைக்குப் புறப்பட்டனர். நந்திவர்மன் தனது புரவியில் ஏறுவதற்கு முன்பாகப் பரகாலரை திரும்பி நோக்கினான். பரகாலரை அவன் கடைசி முறையாகப் பார்க்கிறான் என்பதை அவனது உள்ளுணர்வு எச்சரித்திருக்க வேண்டும். விரைவில்

திருநகரியின் *திருமணங்கொள்ளையில் பெருமானையே வழிப்பறிச் செய்து கலியன் என்னும் பெயரைப் பெற்று கடைக்குட்டி ஆழ்வாராகத் திகழ இருந்தார், என்பது அப்போது யாரும் எதிர்பார்த்திராத நிகழ்வு.

ஸ்வர்ண விக்கிரகத்துடனும், தேவ உடும்பர மரத் துண்டத்துடனும் அவரவர் இருப்பிடத்திற்கு புறப்பட தயாராயினர். நந்திவர்மன் ஆலிநாடனை சற்றே அச்சத்துடன் நோக்கினான். "ஸர்வண விக்கிரகத்தையும், தேவ உடும்பரத்தையும் களவாடி செல்கின்றோமே. களவாடுதல் பாவமில்லையா?" — நந்திவர்மன் கேட்டபோது, ஆலிநாடன் சிரித்தார்.

"களப்பரர் நமது ஆலயங்களில் இருந்து கொள்ளை யடித்து புத்த விஹாரங்களையும், சமண பசடிகளையும் எழுப்பினர். நாம் களவாடப்பட்ட நமது ஐஸ்வர்யங் களைத்தானே மீண்டும் எடுத்துக் கொள்கிறோம். விசனப்படாமல் சென்று உனது மன்னர் பணிகளை கவனி. தேவ உடும்பம் கிடைத்துவிட்டது. அஸ்வமேத யாகம் செய்து மன்னர்களின் மன்னனாக திகழ்வாயாக!" — அவனை ஆசிர்வதித்துவிட்டு, தனது பரிவாரங் களுடன் மங்கை நாட்டுக்கு சென்றான், ஆலிநாடர்.

---

* திருகண்ணங்குடி என்னும் ஊரில் இரவினைக் கழித்த பரகாலன் அங்கே வயல் ஒன்றில் ஸ்வர்ண சிலையைப் புதைத்து வைத்தார். உறங்காபுளிய மரத்தின் அடியில் இரவை கழித்தார். அவர் கண் விழித்தபோது நிலத்தை ஒரு உழவன் உழுதுகொண்டிருந்தான். புத்தர் சிலையை எப்படி எடுப்பது என்று யோசிக்க, தோலா வழக்கன் அந்த உழவனிடம் 'இது என்னுடைய நிலம்' என்று தகராறு செய்ய, உழவன் தனது பெயரில் நிலத்தின் உரிமை உள்ள சுவடியை எடுத்து வந்து தானே அதன் உரிமையாளன் என்று நிரூபிப்பதாக வீடு செல்ல, அவன் வருவதற்குள் ஸ்வர்ண விக்கிரகத்தை எடுத்துக்கொண்டு பரகாலர் மங்கைமடம் சென்றுவிட்டார் என்கிற சம்பவத்தைத் 'தோலா வழக்கு' என்ற தலைப்பில் சங்கதாராவில் விவரித்திருக்கிறேன்.

ஒத்தாடை அரண்மனைக்குள் நுழைந்த தேவ உடும்பர அத்திமரத்தை ராஜகுரு ஷ்யமந்தக சிம்மவ புவிடம் காட்டினான், நந்திவர்மன்.

சம்மவபுவின் முகம் பிரகாசமானது.

“வடபுலத்தில் தோன்றிய தேவ உடும்பரம். விதுரரால் மைத்ரேய மகரிஷியின் ஆஸ்ரமத்தில் நிரஞ்சன நதிக்கரையில் விதைக்கப்பட்டது. இதன் கீழ் புத்தன் ஞானம் பெற்றான். புஷ்யமித்ராவால் அழிக்கப்பட்டது. அசோகனின் மகள் சங்கமித்தாவால் இலங்கைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அரச மரம் ஒன்றில் மீண்டும் விதைக்கப்பட்டது. வெட்டப்பட்ட தேவ உடும்பர அத்தியின் துண்டம் எதிர்பாராத வகையில் பதரிதிட்டில் கிடைத்தது நீ செய்த யோகம். காம்போஜமும் பல்லவமும், தழைக்க, நாம் செய்ய இருக்கும் அஸ்வமேதத்திற்கு தேவ உடும்பர சமித்துகள் தயார். இனி என்ன குறை, பல்லவமல்லா? எனக்கு ஒரு ஆசை. பல்லவமும், காம்போஜமும் இணைந்து உலகத்தையே தனது குடையின் கீழ் கொண்டு வரவேண்டும். தொடங்குவோம் நமது அஸ்வமேதத்தை!” — சிம்மவபு கூறினார்.

அஸ்வமேத யாகத்திற்கு சங்கல்பம் செய்துக் கொண்டான் நந்திவர்மன்.

“மன்னரே! தேவ உடும்பர சமித்துக்களை தயார் செய்ய வேண்டும்!” என்று புரோகிதர்கள் விண்ணப்பம் செய்தனர்.

நந்திவர்மன் அரண்மனை அதிகாரி கனகேந்திரனை நோக்கி தலையசைத்தான்.

கனகேந்திரன் அரண்மனை கஜானாவிற்கு சென்று அங்கே பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருந்த தேவ உடும்பர அத்திமரத்துண்டினை எடுத்துக்கொண்டான். அரண்மனையை மைதானத்தில் ஒத்தாடையானின்

ஆலயத்தின் அருகே உருவாக்கப்பட்டிருந்த யாக சாலையை நோக்கி செல்லாமல், தனது பிரத்யேக அறையை நோக்கி நடந்தான். தனது அறைக்குள் நுழைந்து தாளிட்டவன், தனது கரத்தில் இருந்த தேவ உடும்பரத்தை ஒரு மஞ்சள் துணியில் சுற்றி, தனது இருக்கையின் கீழ் பதுக்கி வைத்தான். தனது மேஜையின் மீது தயாராக இருந்த ஒரு அத்திரமத்தின் உடைந்த பகுதியை கையில் எடுத்து, அதன் மீது மஞ்சளையும், குங்குமத்தையும் அப்பி, பட்டு துணி ஒன்றில் சுற்றி கையில் எடுத்துக்கொண்டான். பிறகு யாகசாலையை நோக்கி நடந்தான். நந்திவர்மனை ஜாடையாக கவனித்தான், கனகேந்திரன்.

சிம்மவபவுடன் யாகத்தை பற்றி தீவிரமாக பேசி கொண்டிருக்க, கையில் தேவ உடும்பத்துடன் வந்த கனகேந்திரன், தலைமை புரோகிதரிடம் அதனை நீட்ட, அவர் மறுபேச்சின்றி, அந்த அத்திமரத்துண்டை யாகசாலைக்கு வெளியே எடுத்து சென்று மெல்லிய சமித்துகளாக வெட்டத் துவங்கினார். கனகேந்திரன் அவர் முழுவதுமாக அத்திமர சமித்துக்களை தயார் செய்யும் வரை அங்கேயே நின்றிருந்தான். அவர் சமித்துக்களை சேகரித்து ஒரு கயற்றில் கட்டிய பிறகே, நிம்மதி பெருமூச்சு ஒன்றை சிந்தி விட்டு, தனது பணிகளை கவனிக்க சென்றான்.

அன்றிரவு —

கனகேந்திரன் நம்பகமான ஒருவனின் மூலம், தான் பதுக்கியிருந்த தேவ உடும்பர அத்திமரத்தை, குந்தளத்தற்கு அனுப்பினான். அதற்காகவே காத்திருந்த குந்தள மன்னன் வயிரமேகன் என்கிற தந்திதுர்கன், தானும் துரிதமாக அஸ்வமேத யாகத்தை செய்ய தொடங்கினான்.

பல்லவமும், காம்போஜமும் உலகத்தையே ஆண்டு, தான் மன்னர்களின் மன்னனான தேவாதிராஜனாக திகழ வேண்டும் என்று நந்திவர்மன் அத்திமர சமித்து களை கொண்டு வேள்வி நடத்தினான். தேவராஜன்

*அவனது வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டும் என்று கடுமையாக பிரார்த்தனை செய்து யாகத்தை செய்து முடித்தான்.*

*அதே சமயம் —*

*வயிரமேகன் என்கிற தந்திதுர்கனும் அரண்மனையில் அஸ்வமேத யாகத்தை செய்துக்கொண்டிருந்தான்.*

*"எனக்கும் பல்லவ இளவரசி ராஜகாந்திக்கும் பிறந்த எனது மகன் உதயச்சந்திரனும், அவன் வழித்தோன்றல் களும், மாபெரும் மன்னர்களாக இந்த தட்சிணத்தை ஆள வேண்டும். பெரும் கீர்த்தியுடனும், புகழுடனும், திகழ வேண்டும்!" என்று அத்திமலையானிடம் வேண்டிக் கொண்டு யாகத்தை நடத்தினான். தேவ உடும்பர சமித்துக்களை கொண்டு, வயிரமேகன் செய்த யாகத்தினால் உள்ளம் குளிர்ந்த அத்திமலையான் உதயச் சந்திரனையும் அவனது வழித்தோன்றல்களையும் கீர்த்திமிக்க மன்னர்களாக திகழ வைக்க முடிவு செய்து விட்டான். அவனது வழித்தோன்றல்கள் தஞ்சையை தலைநகராக கொண்டு தட்சிணத்தையே கைப்பற்றி, வடக்கே கங்கையை கடந்து வங்க நாட்டையே கைப்பற்ற போகின்றனர். வயிரமேகன் தனது வேண்டுதலில் பல்லவ மன்னர்களாக என்று கூறியிருந்தால் ஒருவேளை உதயச்சந்திரனும், அவனது வாரிசுகளும் பல்லவத்தையே ஆண்டிருக்கலாம்... வயிரமேகன் பல்லவம் என்று குறிப்பிடாத காரணத்தினால், புதிய சாம்ராஜ்யம் ஒன்றை தோன்றுவிக்க முடிவு செய்திருந்தான், அத்தி மலையான். அந்த புதிய சாம்ராஜ்யத்திற்கு விந்தளிக்க போகிறவன் உதயச்சந்திரன்.*

*அந்த புதிய சாம்ராஜ்யத்தின் பெயர்தான் சோழம்!*

---

*** நந்திவர்மன் தனது ஒத்தாடை அரண்மனையில் மிகவும் விமரிசையாக அஸ்வமேத யாகம் செய்து அஸ்வமேதி என்கிற பட்டத்தை வென்றான் என்று சரித்திர குறிப்புகள் கூறுகின்றன.**

# 19. பாசம்.. ரசாபாசம்

"பல்லவ மன்னன் நந்திவர்மன்தான். ஆனால் ஆட்சி செய்வது எனது மகன் உதயசந்திரன்தான்" ரேவாதேவி — நந்திவர்மன் திருமணத்தன்று இரவு நிகழ்ந்த விருந்து கேளிக்கையின்போது, கையில் மதுரசக் கிண்ணத்தில் இருந்த மதுரசத்தை அருந்தியபடி வயிரமேகன் தந்திதுர்கன் கூற, அந்தக் கருத்து முதன்முறையாக நந்தி வர்மனையே சற்று அருவருக்கச் செய்தது. ரேவாதேவியே தனது தந்தை கூறியதைக் கேட்டு முகம் சுளித்தாள். உதயசந்திரன் அவளுக்கு அண்ணனாக இருந்தாலும், அவன் மாற்றாந்தாய் பெற்ற மகனல்லவா? தந்தையின் வெளிப்படையான பேச்சு அவளுக்குச் சங்கடத்தைத் தந்தது.

"தந்தையே! தாங்கள் சற்று அதிகமாக மதுரசத்தைப் பருகி உள்ளீர்கள் என்று கருதுகிறேன். பேசாமல் உறங்கச் செல்லுங்கள்..!" நிலைமையைச் சமாளிக்க முயன்றாள், ரேவா.

வயிரமேகன் அதோடு நின்றிருக்கலாம், சற்று மிகையாகவே பேசத்துவங்கிவிட்டான். "உண்மையில், எனது மகன் உதயசந்திரன் பல்லவ மன்னனாக அமருவான் என்றுதான் நான் குந்தளப் படைகளைப் பல்லவத்திற்கு உதவியாக அனுப்பினேன். அவன் நந்திவர்மனை அரியணையில் அமர்த்திவிட்டான்..! அது சரி! மகன் அமர்ந்தால் என்ன! மருமகன் அமர்ந்தால் என்ன? எப்படியோ பல்லவத்தின் பிடி எனது கையில் இருக்க வேண்டும்! நந்திவர்மா! நீ பதின்மூன்று வயது

பாலகன். உதயசந்திரனுக்குப் போர்க்கலைகளும், அரசியல் வியூகங்களும் அத்துபடி. அவன் சொற்படி கேட்டு பலப்படுத்து. உன்னை வடக்கில் சாளுக்கியர் களும், தெற்கில் பாண்டியர்களும் குறி வைத்திருக் கின்றனர். எனவே புத்தியுடன் பிழைத்துக்கொள்!" என்று பேசிக்கொண்டிருக்க, நந்திவர்மனின் முகம் சுருங்கியது.

வயிரமேகனின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த சுக்கில மல்லன், மெதுவாக நகர்ந்து சென்று தொலைவில் சாயாவக்கிரருடன் பேசிக்கொண்டிருந்த உதயசந்திரனை நெருங்கினான்.

"உதயசந்திரரே! அங்கே நிலைமையை விபரீதமாக்கிக் கொண்டிருக்கிறார், உங்கள் தந்தை வயிரமேகர். அங்கே உங்களது வரவு தேவைப்படுகிறது!" என்றதும் வியப்புடன் திரும்பி நோக்கினான், உதயன்.

கையில் மதுரசக் கோப்பையுடன் வயிரமேகன் பேசிக் கொண்டிருக்க, கருத்த முகத்துடன் ரேவாவும், நந்தி வர்மனும் நிற்க, ஆலவாயரும், சதகரணியும், மதுசூதன பண்டிதரும் சங்கடத்துடன் நெளிந்து கொண்டிருந்த காட்சியைக் கண்டான்..

ஒருவாறு நிலைமையை யூகித்த உதயன், அங்கே விரைந்தான்.

"தந்தையே! புதுமணத் தம்பதிகளை எதற்குத் தொந்தரவு செய்கிறீர்கள்? அவர்களுக்குத் தனிமை தேவை," என்றபடி தந்தையின் தோளினில் கைபோட்டு, அங்கிருந்து அவரை அப்புறப்படுத்த முயன்றான்.

"நந்திவர்மா! நீயும் ரேவாவும் உங்கள் பள்ளியறைக்குச் செல்லுங்களேன்!" என்று நந்திவர்மனை நோக்கிச் சொன்னான்.

"எப்போது எங்கே செல்ல வேண்டும் என்பது எனக்குத் தெரியும். நான் மன்னன்!" — குரலில் சற்றே

காட்டம் தொனிக்க, நந்திவர்மன் கண்களில் குளிர்ச்சியுடன் உதயனை ஏறிட்டான்.

முந்தைய தினம் வரை 'உதயரே..! உதயரே!' என்று சுற்றி வந்தவனின் மனதை மணமேடை மாற்றிவிட்டதா அல்லது வயிரமேகனின் உளறல்கள் பாதித்துவிட்டதா?

அவனது முகத்தை ஆராய்ந்தபடி நின்ற உதயசந்திரன் வயிரமேகனை அணைத்தபடி அங்கிருந்து நகர, ரேவாதேவி தனது கணவனை நோக்கினாள்.

"எனது தந்தையின் பேச்சைப் பெரிதாக எடுத்துக் கொள்ளத்தேவையில்லை. தங்களது அழகையும், வீரத்தையும் கண்டு மயங்கித்தான் தங்களை மணந்து கொண்டேன். இன்று முதல் உங்கள் சுக துக்கங்கள் அனைத்திலும் நான்தான் பங்குகொள்ள வேண்டியவள். எனவே, உங்கள் மைத்துனரை சற்றே விலக்கி வையுங்கள். உங்கள் தளபதி படைத்தளங்களுக்கு மட்டும்தான் அதிபதி. தங்களுக்கு அல்ல." தலையணை மந்திரத்தின் சங்கல்பத்தை அங்கேயே துவக்கினாள், ரேவா.

மறுநாள் காலை, தந்தை வயிரமேகன் கண்விழித்ததும், உதயன் அவரைக் கோபத்துடன் நோக்கினான்.

"மதுரசத்தின் போதையில் இப்படித்தான் பேசுவீர்களா? என்னை மன்னனாக அமர வைக்கத்தான் குந்தளப் படையை அனுப்பியதாகக் கூறி, என் மகனின் சொல்லைக் கேட்டு நடந்தால்தான் பல்லவத்திற்கும், குந்தளத்திற்கும் நட்பு நிலைக்கும் என்று கூறினீர்கள். நந்திவர்மன் என்னைப் பற்றி என்ன நினைப்பான்..?" — உதயன் பொருமினான்.

"அதெல்லாம் ஒன்றும் தவறாக நினைக்கமாட்டான். எனது மகள் ரேவா அவனைச் சரிக்கட்டிவிடுவாள்!" — வயிரமேகன் கூறிக்கொண்டிருக்கும் போதே, கதவு திறக்க உள்ளே வந்தாள், ரேவாதேவி.

“தளபதியாரே! நானும் எனது தந்தையும் சற்றே தனிமையில் பேச வேண்டும்..! சற்றே விலகி இரும்!” என்று ஆழமான பார்வை ஒன்றைப் பார்த்தாள், ரேவா.

நேற்று வரை வாய்நிறைய ‘அண்ணா!’ என்று அழைத்தவள், சற்றே விலகி இரும் என்று கூறியது அவனது இதயத்தைக் காயப்படுத்திவிட்டது. விருட்டென்று திரும்பி, அறையைவிட்டு வெளியேறினான்.

வயிரமேகனின் முகம் கருத்தது.

“என்ன துணிச்சல் இருந்தால் எனது மகனை அவமானம் செய்வாய்?” — கர்ஜித்தான் வயிரமேகன்.

“நானும் உங்கள் மகள்தானே..!” — அலட்சியமாகக் கூறினாள், ரேவா.

“இருக்கலாம்! உனது தாயை மணப்பதற்கு முன்பே நான் அவனது தாய் ராஜகாந்தியை திருமணம் செய்து கொண்டேன். நினைவில் கொள்!” — வயிரமேகன் கர்ஜித்தான்.

தந்தைக்கும் மகளுக்கும் இடையே ஏதோ பிரச்னை என்பதை உணர்ந்தவளாக ரேவாவின் தாய் சுபாஷிணி அங்கே தோன்றினாள்.

“என்ன நடக்கிறது இங்கே?” — தாய் கேட்டதும், ரேவா உடைந்தாள்.

“பாரம்மா! என் கணவரை தாழ்த்தி, உதயசந்திரரை உயர்த்திப் பேசுகிறார். பெயருக்குத்தான் என் கணவர் மன்னனாம், ஆனால் ஆட்சி செய்பவர் உதயசந்திரன் என்று எனது கணவர் எதிரேயே பேசுகிறார். அவர் மனம் என்ன பாடுபடும்..?” — ரேவாதேவி கண்களில் நீர் பெருகியது.

“உங்களுக்கு புத்தி பேதலித்துவிட்டதா என்ன?” — சுபாஷிணி கேட்டதும், வயிரமேகன் உக்கிரமடைந்தான்.

"எனது மகன் உதயசந்திரனின் பாத தூசுக்கு, நந்திவர்மன் என்ன, நானே சமமாகமாட்டேன். குந்தள அரியணை, பல்லவ அரியணை இரண்டையும் வேண்டாம் என்று கூறிவிட்டு, பல்லவம் மீண்டும் பழைய கீர்த்தியைப் பெற வேண்டும் என்று பாடுபடுகிறான். ஆறு தலைமுறைக்கு முன்பாகச் சகோதரர் உறவின் மூலம் அரியணை கிட்டியிருக்கிறது உன் கணவனுக்கு. ஆனால் உதயனின் வீரம் அவனுக்கு அரியணைகளை அளித்தும் அவன் அதனை நிராகரித்து இருக்கிறான். இதற்குமேல் உதயசந்திரனை நீயோ உனது கணவனோ அவமானம் செய்தால், நான் அவனைக் குந்தள மன்னனாக அறிவித்துவிடுவேன்." — சினத்துடன் கூறினான், வயிரமேகன்.

"அப்போது என் மகன் கிருஷ்ணனின் கதி?" — சுபாஷிணி அதிர்ச்சியுடன் கணவனை நோக்கினாள்.

"ஏன்.. ரேவா தனது பிரிய அண்ணனை தனது பல்லவத் தளபதியாக வைத்துக் கொள்ளட்டுமே..!" — அலட்சியமாகக் கூறிவிட்டு, இனி உங்களோடு பேச்சு இல்லை என்பது போன்று விருட்டென்று அறையை விட்டு வெளியேறினான், வயிரமேகன்.

"ரேவா! விட்டுப்பிடி! இந்த விவகாரத்தை இனியும் பெரிதுபடுத்தாதே. காலம் வரும்போது பதிலடி கொடுப்போம். உனது தந்தை சினம் கொண்டால் யோசிக்காமல் காரியங்களைச் செய்வார். உன் மீது உள்ள கோபத்தில், உதயசந்திரனை குந்தளத்தின் மன்னனாக அறிவித்துவிட்டால், உனது அண்ணன் கிருஷ்ணன் நொறுங்கிப் போவான்..!" என்றாள் சுபாஷிணி.

"ஒன்று மட்டும் புரிந்துகொள், தாயே! பல்லவத்தின் நட்பை வேண்டிதான், என்னை நந்திவர்மருக்கு மண முடிப்பதாகத் தந்தை கூறியதை நம்பினேன். இப்போது தான் புரிகிறது, தனது மூத்த மகன் உதயசந்திரனை சீராட்டுவதற்கே இந்தத் திருமணம் என்று! இனி உதய

சந்திரனும், குந்தளமும் பல்லவத்திற்குப் பரம வைரிகள்!" என்றபடி கோபத்துடன் நடந்து அறையைவிட்டு வெளியேறினாள்.

'ஒரு சொட்டு மதுரசம் அதிகமானால், பல சொட்டு குருதி, போர்க்களத்தில் பெருகி ஓடுகிறது. இதனை இந்த முட்டாள் மன்னர்கள் எப்போதுதான் புரிந்து கொள்வார்களோ!' மனதினுள் கணவனைக் கடிந்தபடி நகர்ந்தாள், சுபாஷிணி.

மறுநாள் ஒன்றுமே நடவாதது போன்று நந்தி வர்மனைக் காண வந்தான், உதயசந்திரன். அன்றாடம் காலையில் அன்றைய நிகழ்வுகளைப் பற்றி நந்தி வர்மனிடம் ஆலோசனை கூறுவது உதயனின் வழக்கம். அன்றும் நந்திவர்மனின் அறையை நோக்கி நடந்தான். தங்கை ரேவாவின் கோபம் கட்டுக்குள் அடங்கி இருக்கும் என்று நினைத்தபடி வர, நந்திவர்மனின் அறை இருந்த மண்டபத்திற்குச் செல்லும் வாயிலிலேயே தடுத்து நிறுத்தப்பட்டான், உதயன்.

"மன்னரை இப்போது காண முடியாது!" என்று தயக்கத்துடன் தடுத்த காவலாளியை வெறித்தான் உதயன்.

"நான் யார் என்பது உனக்குத் தெரியுமல்லவா..! நாட்டின் தளபதி. மன்னரின் ஆலோசகர். மன்னனுக்கு மைத்துனன், அரசிக்கு அண்ணன்..!"

"தெரியும், தளபதியாரே! தங்களை மட்டும்தான் உள்ளே அனுமதிக்கக் கூடாது என்று அரசியாரின் உத்தரவு. சற்று முன்பாக ஆலவாயர், மன்னரைச் சந்திக்க அந்தப்புரத்திற்குச் சென்றுள்ளார்..!" — காவலன் கூறியதும், உதயசந்திரனின் முகம் சிவந்தது. விருட் டென்று திரும்பி வந்த வழியே நடந்தான்.

தியாகங்களைச் செய்து நாட்டுக்காகப் போராடி ஒரு வலுவான மன்னனை உருவாக்கும்போது, பெண்கள்

குறுக்கே புகுந்து அந்த மன்னனை தங்கள் கையினுள் போட்டுக்கொண்டு, அந்த தியாகியின் தியாகங்களைக் கேலிக்குரியதாக மாற்றுவது, எல்லா சரித்திரங்களிலும் நடைபெறுவதுதானே. யாரோ ஒரு பெண் நந்திவர்மனின் மனைவியாக வந்து, அவனைத் தனது கைக்குள் போட்டுக்கொண்டு, இவனுக்கும், நந்திவர்மனுக்கும் இடையே இருக்கும் நட்பினை உடைத்துவிடப் போகின்றாளே என்கிற அச்சத்தில்தான், தனது தங்கை ரேவாதேவியை நந்திவர்மனுக்குத் திருமணம் செய்ய ஒப்புதல் அளித்திருந்தான். யாரோ ஒரு பெண் செய்யும் வேலையை அவனது தங்கையே செய்துவிட்டாள்!

மனம் வெறுத்துப் போன உதயசந்திரன் தனது மாளிகையை அடைந்தான். அங்கே வயிரமேகன் அமைதியாக அமர்ந்திருந்தான்.

"தந்தையே! நீங்கள் சற்று நிதானத்தைக் கடைப் பிடித்திருக்கலாம்..!" ஆற்றாமையுடன் அவர் எதிரே அமர்ந்து கொண்டான், உதயன்.

"இப்போது என்ன நடந்துவிட்டது என்று இடிந்து போகிறாய். என்னுடன் குந்தளம் கிளம்பி. வா. உனக்காகப் பீயுஷமணி காத்திருக்கிறாள். அவளை மணந்து கொண்டு இருவரும் எனக்குப் பிறகு குந்தள அரியணையில் அமருங்கள்..!" — வயிரமேகன் கூற, தலையசைத்து மறுத்தான், உதயன்.

"நான் பல்லவத்தை விட்டு வரமாட்டேன். எனது உயிர் இங்கேதான் பிரியும். மரணம் எய்துவதற்குள் அத்தி மலைத்தேவனின் பிரதிமையைத் தேடிக் கண்டுபிடிக்கப் போகிறேன். நந்திவர்மனுக்கு எனது சேவை தேவை யில்லை என்றால், வில்வலத்தில் சென்று தங்கிக் கொள்கிறேன்..!" — கண்டிப்புடன் கூறினான், உதயன்.

"அப்படியென்றால் பீயுஷமணியின் கதி?" — வயிரமேகன் குரலில் சினம் தொனித்தது.

"உங்கள் மகள் ரேவாதேவி நந்திவர்மனுக்கும் எனக்கும் இடையே நிலவிய ஒற்றுமையைக் குலைத்தது போதாதா? பீயுஷா வேறு எங்கள் இடையே வர வேண்டுமா?" — உதயன் கேட்டான்.

"பாவம் அந்தப் பெண்! உன்னைக் கணவனாக வரித்து விட்டாள். அவளை நான் உன்னிடம் அனுப்புகிறேன். தயை கூர்ந்து அவளை ஏற்றுக்கொள்! நான் என் தங்கைக்கு வாக்கு கொடுத்துவிட்டேன்." — வயிரமேகன் கெஞ்சினான்.

"திருமணம் செய்து கொள்ளாமல் நான் செய்த தியாகங்களை ஒரே இரவில் என் தங்கை கொச்சைப் படுத்திவிட்டாள்! இனி நான் எதற்குத் தொடர்ந்து தியாகங்களைச் செய்துகொண்டே போக வேண்டும். உங்கள் இஷ்டப்படி பீயுஷமணியை அனுப்புங்கள். நான் வில்வலம் காமேஸ்வரர் சந்நிதியில் அவளை மணந்து கொள்ளப் போகிறேன்!" தீர்மானத்துடன் உதயன் கூற, உற்சாகத்துடன் எழுந்தான், வயிரமேகன்.

விரைவில், குந்தள அரியணையில் ஏறவும் உதயன் சம்மதித்துவிடுவான் என்று தோன்றியது அவனுக்கு.

# 20. கங்கம், மானபங்கம்

நந்திவர்மன் ஆலோசனை அறைக்குள் நுழைய அவனைப் பின்தொடர்ந்தாள், ரேவாதேவி. ஆலவாயர், சதகரணி, மதுசூதன பண்டிதர், உபதளபதி விஜய விக்கிரமன், குதிரைப்படை தலைவன் சுக்கிலமல்லன் ஆகியோர் அமர்ந்திருக்க, தளபதி உதயசந்திரனின் இருக்கை காலியாக இருந்தது. கம்பீரமும், ஆண்மையும் நிறைந்திருந்த உதயசந்திரன் வந்து அமர்ந்தால்தான், ஆலோசனைக் கூட்டங்கள் களைகட்டும். ஆனால், மன்னனின் திருமணம் நிகழ்ந்த நாள் முதல், நந்தி வர்மனுக்கும், உதயசந்திரனுக்கும் இடையே இரும்புத் திரை ஒன்று தோன்றிவிட்டது.

சித்ரமாயனை கொன்று, நந்திவர்மனை மன்னன் ஆக்கியதே உதயசந்திரன்தானே. அப்படியிருக்க, இன்று அவனை நந்திவர்மன் புறக்கணிப்பது எவ்வகையில் நியாயம்?

மக்களிடையே அரசல்புரசலாக எழுப்பப்படும் கேள்விகள்தான் என்றாலும், அதனை நந்திவர்மனின் செவிகளுக்கு எடுத்துச் செல்லும் துணிவு, தண்ட நாயகருக்கோ, இராஜகுருவுக்கோ, உபதளபதி விஜய விக்கிரமனுக்கோ இல்லை.

மதுசூதன பண்டிதரிடம் ஒரு நாள், விக்கிரமன் இரகசியமாகப் புலம்பினான்.

"உதயசந்திரன் நந்திவர்மனுக்காக எவ்வளவு தியாகங்களைச் செய்தார். அவற்றை உதாசீனம் செய்து, அரசியாரின் பேச்சைக்கேட்டு அவரைப் புறக்கணிப்பது

சரியில்லை. உதயசந்திரர் பதவியை உதறினால் நானும் உபதளபதி பதவியைவிட்டு நீங்கிவிடுவேன்!" — வீர வசனம் பேசினான், விஜயவிக்கிரமன்.

அவனை ஏளனச் சிரிப்புடன் நோக்கினார், பண்டிதர்.

"அப்படியா விஜயவிக்கிரமா? இப்போது நீ என்னிடம் கூறிய வார்த்தைகளை உன்னுடைய மனைவியிடம் கூறு. அவள் என்ன பதிலைத் தருகிறாள் என்று நாளை என்னிடம் தெரிவிக்க வேண்டும்" என்றார். மறுநாள் அவரைத் தேடி வந்த விக்கிரமன் தலைகுனிந்தான்.

"என் மனைவியிடம், உதயசந்திரர் பதவி இறங்கினால் நானும் உபதளபதி பதவியைவிட்டு நீங்குவேன் என்றேன். அவள் என்னைக் கடிந்து கொண்டாள். 'உதயசந்திரன் பாதையைவிட்டு நீங்கினால், மன்னரை உற்சாகப்படுத்தித் தளபதி பதவியைப் பெறும் வழியைப் பார்ப்பீரா அல்லது உதயசந்திரனின் பின்பாகச் செல்வீரா?' என்று சினந்தாள்!" — விஜயவிக்கிரமன் கூறினான்.

"இப்போது புரிகிறதா? அரசியலை ஆட்டுவிப்பவர்கள் பெண்களே..! ஆட்டுவிப்பவர்கள் பெண்களாக இருக்கும் போது எதற்கு ஆலோசனைகள், இரகசியக் கூட்டங்கள். எல்லாம் வீணே! ரேவாதேவியாரின் கட்டளையின் பெயரில்தான் தளபதியை மன்னர் புறக்கணிக்கிறார்." — பண்டிதர் கூறினார்.

"நாளை போர் மூண்டால், அனுபவமில்லா நம் மன்னருக்குப் பக்கபலமாக இருக்கப் போவது அரசியாரா, உதயசந்திரரா..?" — விஜயவிக்கிரமன் கேட்ட அதே நேரம், இதே கேள்வியை மன்னரிடமே கேட்டுவிட்டார், தண்டநாயகர் ஆலவாயர்.

"மன்னா! நாட்டின் தளபதி இப்போதெல்லாம் காஞ்சியைக் காட்டிலும் வில்வலத்தில்தான் அதிகம் தங்குகிறார். நாளையே சாளுக்கியர்கள் படை எடுத்து வந்தால், திடீரென்று அவரை எப்படி அழைப்பது? தங்களுக்கும் அவருக்கும் இடையே நிகழும் பனிப்

போரினை முடிவுகட்டுதல் அவசியம்..!" —ரேவாதேவி இல்லாத துணிவில் ஆலவாயர் மன்னரிடம் கூறினார்.

"இருக்கட்டும்! நான் உதயசந்திரரின் நிழலில் இருந்து வெளிவர வேண்டும் சமயம்தான் இது. அவர் இல்லாமல் நான் ஒரு போரை ஜெயிக்க வேண்டும். அப்படி என்னால் ஜெயிக்க முடியவில்லை என்றால் நான் மன்னராகப் பதவி வகிப்பதில் பெருமை இல்லை!" நந்திவர்மன் கூறினான்.

"தனிப்பட்ட பிரச்னைகளை எதற்கு நாட்டின் பிரச்னைகளாகக் கருத வேண்டும் மன்னா? பல்லவத்தை மீண்டும் பொலியச் செய்வேன் என்று சபதம் செய்துள்ளீர்கள். அத்திமலைத்தேவனை மீட்க வேண்டும். கங்க நாட்டில் இருந்து உக்ரோதயத்தையும் மீட்க வேண்டும். உதயசந்திரர் இல்லாமல் இதனை எங்ஙனம் செய்வது. நீங்கள் இருவரும் ஒருமுறை சந்தித்துப் பேசினால் எல்லாம் சரியாகிவிடும்!" ஆலவாயர் துவக்கிய முயற்சியை, நல்லபடியாக முடிக்கப் பார்த்தார், காஸ்யப சதகரணி.

உடனே அவரை விருட்டென்று திரும்பி நோக்கியவன், எழுந்து நின்றான்.

"நல்லது ராஜகுரு! நல்ல யோசனையைக் கூறியுள்ளீர்கள். உதயசந்திரன் இல்லாமல் நான் ஒருவனாகவே படை எடுத்துச்சென்று கங்க மன்னன் ஸ்ரீபுருஷன் வசம் உள்ள உக்ரோதயத்தைப் பறித்து வருவேன். எனது தனித்தன்மையை இந்தப் போரின் மூலம் நிலைநாட்டுவேன்..!" — நந்திவர்மன் கூற, திடுக்கிட்டு எழுந்தனர், ஆலவாயரும், சதகரணியும்.

பிள்ளையாரைப் பிடிக்க முயல தங்கள் முயற்சி குரங்காக முடிந்ததை உணர்ந்து பதற்றத்துடன் மன்னரின் மனதை மாற்ற முயன்றனர்.

"மன்னா! போர் புரிய வேண்டாம் என்று கூறவில்லை..! தளபதி இல்லாமல் போருக்குச் செல்வது

நியாயமில்லை. வேண்டுமென்றால், உதயசந்திரரை பதவியில் இருந்து நீக்கிவிட்டு, விஜயவிக்கிரமரை தளபதியாக அறிவித்துவிட்டு பிறகு போருக்குச் செல்வோம்!" — ஆலவாயர் கூறினார்.

"இல்லை! உதயசந்திரன் தளபதியாகத் தொடரட்டும். அவர் பங்கேற்காத யுத்தத்தில் நான் வெற்றி பெற வேண்டும். என்னால் தனியாகப் போரில் வெல்ல முடியும் என்பதை நிரூபித்துவிட்டே அவரை பதவியில் இருந்து நீக்க வேண்டும்..!" — பிடிவாதமாகக் கூறினான், நந்திவர்மன்.

ரேவாதேவியின் பிடியில் அவன் முற்றுமாக இருப்பதை உணர்ந்தனர், இருவரும். காம்போஜத்தில் இருந்து அழைத்து வரும் மன்னன் சொன்னதைக் கேட்பான் என்று நம்பியிருக்க, துவக்கமே இப்படித் தகராறாக உள்ளதே! பல்லவம் எப்படித்தான் மீளப்போகிறதோ?

"அத்திவரதனின் உக்ரோதயத்தைக் களவாடி தங்கள் வசம் வைத்திருக்கும் கங்க நாட்டின் மீது போர் தொடுத்து, அதனை மீட்கப் போகிறேன்!" — நந்திவர்மன் அரண்மனை வளாகத்தில் நின்றிருந்த மக்களிடையே உரையாற்ற, மக்கள் குழம்பினர். மகிழ்ச்சி ஆரவாரம் செய்யத் தோன்றவில்லை. தளபதி உதயசந்திரர் எங்கே? என்று தங்களுக்குள் கிசுகிசுத்தபடி, அறைகூவல்விடும் அந்தப் பதின்மூன்று வயது பாலகனையே வெறித்துக் கொண்டிருந்தனர்.

"நான் நண்பர்களுடன் போர் விளையாட்டு விளையாடப் போகிறேன்!" என்று கூறுவது போன்று, போர் அறிவிப்பினை வெளியிடும் இந்தக் குமரனை எங்ஙனம் நம்புவது?

"பல்லவம் பொலிக! மன்னர் நந்திவர்மர் வாழ்க! தளபதி உதயசந்திரர் வாழ்க!" — மக்கள் கோஷமிட, தனது கையை உயர்த்தினான், நந்திவர்மர்.

"இந்தப் போரில் நானே மன்னன்! நானே தளபதி. எனது உதவி சேனாதிபதியாக, விஜயவிக்கிரமன் திகழ்வார்..!" — வெண்மையைப் பிரதிபலித்த அவனது கரம் உயர, அந்தக் கை மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் விதமாகவே இல்லை. ராஜ கணையாழி அவனது மோதிர விரலுக்குப் பொருத்தமாக இல்லாமல் மிகவும் பெரியதாக இருக்க, அதனை வெள்ளி நூலினால் கட்டி அணிந்திருந்தான். இவனால் கத்தியையும், கேடயத்தையும் சுமக்க முடியுமா? உதயசந்திரன் சுட்டிக்காட்டியதால் தானே மக்கள் இவனையே மன்னனாக ஏற்றனர்.

அவன் மக்களிடையே ஆற்றிய உரையை உதய சந்திரனின் ஆதரவாளன் சுக்கிலமல்லன் வில்வலத்திற்குக் கொண்டு வந்தான். நந்திவர்மனின் பக்குவமில்லாத நடவடிக்கைகள் உதயனுக்குக் கவலையை அளித்தன. ரேவாதேவியின் தூண்டுதலின் பேரில்தான் அவன் இப்படிச் செயல்படுகிறான் என்பதை உணர்ந்தான். என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டு அமர்ந்திருந்தான், உதயசந்திரன்.

அப்போது —

அவனது மாளிகையின் வாயிலில் புரவிகளின் குளம்பொலி கேட்க, ஒரு இரதம் வந்து நிற்பதை தனது மாளிகையின் உப்பரிகையில் இருந்து நோக்கினான். அவனது வருங்கால மனைவி பீயுஷமணிதான் வந்திருந்தாள். வயிரமேகன் சொன்னபடி தனது தங்கை மகளை அவனிடம் அனுப்பிவிட்டான். பீயுஷாவை பார்த்து பல வருடங்கள் ஆகிவிட்டன. ஒரே ஒருமுறை, வயிரமேகனுடன் வில்வலம் வந்திருக்கிறாள்.

பேரழகியாக இருந்தாள் பீயுஷா. ஆனால் அவளது அழகை ரசிக்கும் நிலையில் இல்லை அவன். தான் துவக்கிவைத்த களேபரங்களுக்குத் தானே ஒரு தீர்வை உண்டு பண்ணியுள்ளான், வயிரமேகன். உடனடியாகப் பீயுஷாவை திருமணம் செய்துகொண்டு, நந்தி

வர்மனையும், ரேவாதேவியையும் திருமணத்திற்கு அழைத்து அவர்களுடன் மீண்டும் நல்லுறவை ஏற்படுத்த எண்ணினான்.

தனது பாதங்களில் பணிந்த பீயுஷாவின் தோள்களைப் பற்றி அவளைத் தூக்கி நிறுத்தினான்.

"நல்ல சமயத்தில் வந்தாய், பீயுஷா. உடனே நமது திருமணம் நடைபெற வேண்டும். நமது திருமணத்தை வைத்து பல்லவ அரசியலை பலப்படுத்த வேண்டும்!" என்று கூறினான்.

"நான் தங்களுக்குப் பிரயோஜனப்படுகிறேன் என்பதே எனக்குப் பேரானந்தத்தை அளிக்கிறது" என்று மட்டும் கூறிவிட்டு, பீயுஷா உள்ளே செல்ல, வில்வலம் பிரமுகர் களை உடனடியாக அழைத்தான்.

"நான் எனது அத்தை மகள் பீயுஷமணியைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன். வில்வலம் காமேஸ்வரர் ஆலயத்தில்தான் திருமணம் நடைபெறப் போகிறது. பல்லவ அரச குடும்பம், குந்தள அரச குடும்பம், அமைச்சர்கள், பிரமுகர்கள் அனைவரும் வில்வலம் வரக்கூடும். ஏற்பாடுகள் பலமாக இருக் கட்டும்..!" — உதயசந்திரன் கூற, வில்வல மக்கள் அடைந்த உற்சாகத்திற்கு அளவே இல்லை!

உதயசந்திரன் தானே புரவியில் காஞ்சிக்குச் சென்றான்.

காவலாளி வழக்கம் போல அவனை ஏற இறங்கப் பார்த்தான்.

"தளபதி! மன்னரும் மற்றவர்களும் மந்திராலோ சனையில் இருக்கிறார்கள். போர் தொடுப்பது குறித்துப் பேசுகின்றார்கள். இப்போது அவர்களைக் காண முடியாது..!" — காவலாளி கூறியதும், உதயனுக்குக் கோபம் ஏற்பட்டது.

"போர் குறித்துப் பேசுகின்றனர் என்றால் எனக்கு உள்ளே செல்ல முழு உரிமையும் உண்டு. நான்தானே இன்னும் தளபதி!" என்றவன் கதவை உதைத்துக் கொண்டு உள்ளே செல்ல, நந்திவர்மன் மையத்தில் சிங்காசனத்தில் அமர்ந்திருக்க, மற்றவர்கள் அவனைச் சுற்றி அமர்ந்திருந்தனர்.

புயல் போன்று உள்ளே நுழைந்த உதயசந்திரனை அனைவரும் திடுக்கிட்டு நோக்கினர்.

உதயசந்திரனின் கண்கள் அந்த அறையில் இருந்தவர்களை நோக்கின. ஒரு மூலையில் அமர்ந்திருந்த அந்த வாலிபனை உறுத்துப் பார்த்தான்.

"பூரணதிலகா! மந்திராலோசனை அறையில் என்ன செய்கிறாய்?" — உதயசந்திரன் கேட்க, அவன் மலங்க மலங்க விழித்துப்பார்த்தான்.

"மந்திராலோசனை விவரங்களைப் பதிவு செய்கிறான்!" — ஆலவாயர் முணுமுணுத்தார்.

"எதற்கு? கங்க நாட்டின் அரண்மனை அதிகாரியாக இருக்கும் அவன் மாமனாருக்குப் பதிவேட்டினை அனுப்புவதற்கா..?" — என்று கர்ஜித்தான் உதயசந்திரன். நந்திவர்மன் மௌனம் சாதித்தான்.

அவன் வெளியேறும் வரை அமைதி காத்த உதயசந்திரன், தனது திருமண ஓலையை நந்திவர்மனிடம் நீட்டினான்.

"உங்கள் தளபதிக்குத் திருமணம். வில்வலம் வந்து வாழ்த்திட வேண்டுகிறேன். தளபதியாக அல்லா விட்டால், மைத்துனனாக வரலாம். அதற்கும் விரும்ப வில்லை என்றால், தங்களது நலம்விரும்பி ஒருவனின் திருமணம் என்று கருதியாவது தாங்கள் அவசியம் வில்வலம் வர வேண்டும்!" என்றபடி ஓலையை நீட்ட, நந்திவர்மன் அதனை வாங்கி மேஜையில் வைத்தான்.

“எக்கணமும் போர் மூளலாம்! போர் மூளவில்லை என்றால் பார்க்கலாம்!” — அந்தக் குமரனின் அலட்சிய மான பதிலைக் கொண்டே, அவன் திருமணத்திற்கு வரப்போவதில்லை என்பது புரிந்துவிட்டது. தன்னிடம் இருந்த மற்ற ஓலைகளை மேஜையின் மீது வைத்தவன், ஆலவாயரை நோக்கினான்.

“அனைவருக்கும் அழைப்பிதழை வைத்திருக்கிறேன். என்னை வந்து ஆசீர்வதிக்க வேண்டுகிறேன். ஒரு விண்ணப்பம்..! எனது திருமணத்திற்கு வருவதைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகவே இப்போது நாட்டின் மீது போரினைத் திணிக்காதீர்கள். சித்ரமாயன் நம்மை எவ்வளவு பலவீனப்படுத்த முடியுமோ அவ்வளவு வேலைகளைச் செய்திருக்கிறான். இப்போது கங்கர்களின் மீது போர் தொடுத்தால், சாளுக்கியர்கள் நம் மீது பாய்வார்கள். பிறகு உங்கள் விருப்பம்!” என்றபடி அறையைவிட்டு வெளியேறினான்.

உதயசந்திரன் கூறியது உத்தமமான வார்த்தைகள் என்பது தெரிந்தும் அனைவருமே அமைதி காத்தனர். என்ன செய்வது..? பாலகனை மன்னனாகக் கொணர்ந்தால், புதிய சூழ்நிலையோடு ஒன்றிப்போவான் என்று நினைத்ததற்கு மாறாக எல்லாமே தலைகீழாக அல்லவா நடக்கிறது? உக்ரோதயத்திற்காகப் போர் தொடுக்கப் போகிறேன் என்று அறிவிக்கும் இந்தக் குமரன், போரின் விளைவுகளைப் பற்றி நினைத்துப் பார்த்திருப்பானா..?

அப்போதுதான் திடுக்கிடும் தகவல் ஒன்றை வெளியிட்டான், நந்திவர்மன்.

“காம்போஜத்தில் இருந்து நமக்கு உதவுவதற்காகப் போர்க்கலையில் வல்லுநர்களும், தளவாடங்களும், ஆலோசகர்களும் ஒரு கலத்தில் புறப்பட்டு விரைவில் வருகிறார்கள்.”

ஆலவாயர் உறைந்து போய் அமர்ந்திருந்தார். புலி வருகிறது.. என்கிற கதையாக எது நிகழ்ந்துவிடக் கூடாது

*என்று இவர்கள் இதுவரை அச்சம் கொண்டிருந்தார் களோ, அதுவும் நடக்க உள்ளது போலும். காம் போஜர்கள் காஞ்சியில் வந்து இறங்கப் போகிறார்கள் என்றால், அவர்களது ஆட்சிதான் இங்கே நடக்கும். பல்லவர்களின் குரல் எங்ஙனம் ஒலிக்கும்?*

*கூட்டம் முடிந்து நந்திவர்மன் வெளியேறிய பின்னரும் கூட, ஒருவரையொருவர் வெறித்துப் பார்த்தபடி அமைதியாக உட்கார்ந்திருந்தனர். பல்லவம் எங்கே போகிறது?*

*சரியாக, உதயசந்திரன் பீயுஷமணியின் கழுத்தில் மங்கல நாணை அணிவித்த அதே நேரம், பல்லவப் படை கோலாகலபுரத்தைச் சுற்றி வளைத்தது. மன்னன் ஸ்ரீபுருஷன் அதனால் கலங்கவில்லை. வந்திருக்கும் பாலகனை எனக்கு ஆலவட்டம் வீசச் செய்கிறேன் என்று கறுவியபடி போர்க்களத்திற்கு வந்தான்.*

*அவனி ஆற்றங்கரையில் இரு படைகளும் மோதின. கங்கர்கள் பல்லவர்களின் தாக்குதல்களை முறியடித்தபடி முன்னேற, பதின்மூன்று வயது நந்திவர்மன் பின்வாங்கிய படி செல்ல, கோலாகலபுரத்தின் அவனி கரையில் இருந்து *பெங்குலிகோட்டை என்கிற பகுதி வரை நந்திவர்மனை பின்வாங்கச் செய்தபடி முன்னேறினான், ஸ்ரீபுருஷன்.*

*உதயசந்திரனின் மீதுள்ள கோபத்தில் கங்கர்களின் மீது வீணாகப் படை எடுத்தது தவறு என்பதை உணர் வதற்குள் நிலைமை கைமீறிப் போனது. பெருங்கல் கோட்டை என்கிற பகுதி வரை பல்லவரை பின்வாங்கச் செய்த ஸ்ரீபுருஷன், பெருங்கல்கோட்டையைக் கைப்பற்றினான்.*

* பெருங்கல்கோட்டை தற்போது வடஆற்காடு மாவட்டத்தில் பெருங்கல்மேடு என்று அழைக்கப்பட்டு வருகிறது.. பெருங்கல் மேட்டில் ஸ்ரீபுருஷனைப் பாராட்டி அவனுக்குப் பெருமானடி என்கிற பட்டத்தை அவனது படைவீரர்கள் அளித்தனர்.[23]

*ஆறு காடுகளில் ஒன்றில் பல்லவர்கள் திகைத்துப் போய் அமர்ந்திருந்தனர். கோலாகலபுரியில் தொடங்கி இவ்வளவு தொலைவு வரை தாங்கள் பின்வாங்கி வந்திருக்கிறோம் என்பதை நினைத்துப் பார்க்கவே அவர்களுக்கு அவமானமாக இருந்தது.

இன்னும் விடிவதற்கான அறிகுறிகள் எழவில்லை. குளிர்ப் பிரதேசத்தில் வளர்ந்திருந்த நந்திவர்மனுக்கு அந்தப் பகுதியின் வெப்பம் தாங்கவில்லை. தன்னை மறந்து தனது கூடாரத்தில் உறங்கிக்கொண்டிருந்தான்.

அப்போது —

கர்ஜனையாக எதிரொலித்த ஒரு வெண்கலக் குரல், துவண்டு போயிருந்த வீரர்களின் நெஞ்சங்களை உலுக்கி எழுப்பியது.

உதயசந்திரன்தான் தனது போர்வாளை உயர்த்தியபடி தனது புரவியில் அமர்ந்திருந்தான்.

"பல்லவச் சிங்கங்களே! புறப்படுங்கள்..! நமது அத்திமலைத்தேவனின் உக்ரோதயத்தை மீட்போம்!" என்று கூக்குரலிட, உற்சாகத்துடன் எழுந்தான் விஜய விக்கிரமன். கூடாரத்தில் உறங்குகின்ற நந்திவர்மனை எழுப்ப நினைத்தவன், பிறகு அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டு தனது குதிரையை நோக்கித் தாவிச்சென்றான்.

உதயசந்திரனின் பின்பாகப் பல்லவப் படையினர் திரண்டு வருவார்கள் என்பதைச் சற்றும் எதிர் பார்த்திராத ஸ்ரீபுருஷன், தனது படையினரைத் தயார் செய்வதற்குள், உதயசந்திரன் அவனைச் சூழ்ந்து கொண்டான். கடும் யுத்தம் நடைபெற, உதயசந்திரனின் வேகத்திற்கு ஸ்ரீபுருஷனால் ஈடு கொடுக்க இயலவில்லை.

பல்லவர்கள் எளிதாகக் கங்கர்களை அடக்கி, ஸ்ரீபுருஷனை கைது செய்தனர்.

கங்க தளபதி, அக்கபப்பதேவாவை தன்னருகே அழைத்தான், உதயசந்திரன்.

---

* ஆறு காடுகள் தான் இன்றைய ஆற்காடு.

"உங்கள் மன்னன் ஸ்ரீபுருஷன் இப்போது எங்கள் பணயக் கைதி. நீங்கள் சென்று பல்லவத்திற்கு உரித்தான உக்ரோதயத்துடன் வாருங்கள். சூரிய அஸ்தமனத்திற்குள் நீங்கள் உக்ரோதயத்துடன் வரவில்லை என்றால் உங்கள் மன்னனின் தலை மண்ணில் புரளும்..!" என்றதும் அக்கப்பன் தனது புரவியில் விரைந்தான்.

நடந்ததைப் பணியாட்கள மூலம் அறிந்திருந்த நந்திவர்மன் தனது கூடாரத்திலேயே காத்திருந்தான். பல்லவர்கள் படை திரும்பி வந்தது. விஜயவிக்கிரமன் உக்ரோதயத்தை நந்திவர்மனிடம் நீட்டினான்.

"உதயசந்திரர் இதைத் தங்களிடம் அளிக்கும்படி கூறினார்..!"

நந்திவர்மன் பிரம்மிப்புடன் உக்ரோதயத்தைப் பார்த்தான்.

"உதயசந்திரர் எங்கே?" — முணுமுணுப்பாக ஒலித்தது நந்திவர்மனின் குரல்.

"நேற்று அவருக்கு மணநாள். திருமணம் முடிந்த கையோடு இங்கே புறப்பட்டு வந்தார். தனது பணியை முடித்துவிட்ட நிலையில் வில்வலம் புறப்பட்டுச் சென்றார்!" — விஜயவிக்கிரமன் கூற, நந்திவர்மன் அமைதி காத்தான்.

உதயசந்திரன் இருக்கும் வரை இவனால் புகழ் பெறவே முடியாது..! உதயசந்திரன் என்னும் ஆலமரத்தின் கீழே வளரும் ஒரு செடியாகத்தான் இவன் இருப்பான். அவனுள் சினம் பொங்கியது.

"உங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி தானே? உங்களுக்குப் பிரியமான உதயசந்திரன் உக்ரோதயத்தை மீட்டுத்தந்து விட்டான். ஊரெல்லாம் தண்டோரா போடுங்கள். பிறகு நான் எதற்கு? என்னை ஏன் காம்போஜத்தில் இருந்து வரவழைத்தீர்கள்?" ஹோ என்று அலறியவன், தனது கூடாரத்தினுள் நுழைந்து பஞ்சணையில் சரிந்து, கதறி அழத்துவங்கினான்.

# 21. காம்போஜக் கலகம்

உக்ரோதயத்தை மீட்டு விஜயவிக்கிரமனிடம் கொடுத்துவிட்டு, ஸ்ரீபுருஷனையும் விடுவித்துவிட்டு, மீண்டும் காஞ்சிக்குத் திரும்பாமல் வில்வலத்திற்குத் திரும்பிவிட்டான், உதயசந்திரன். உக்ரோதயத்தை மீட்டுக் கொடுத்ததால், மனம் இளகி மனைவி ரேவாவுடன், தன்னைத் தேடி நந்திவர்மன் வில்வலம் வருவான் என்றே நினைத்தான், உதயசந்திரன்.

ஆனால், உதயசந்திரன் எதிர்பார்த்தது போன்று நந்திவர்மன் அவனைச் சந்திக்க வரவேயில்லை. ஒரு திருமண வாழ்த்து செய்தியோ, உக்ரோதயத்தை மீட்டதற்கு நன்றியையோ கூறவில்லை. இன்னும் கூறுவதென்றால், தனது கையாலாகாத்தனத்தை எண்ணி கூடாரத்தில் கதறி அழுத நந்திவர்மன் வெளியே வரும்போது இன்னும் இறுகிவிட்டிருந்தான்.

மதுரஸ போதையில் வயிரமேகன் இவனைக் குறித்தும், உதயசந்திரனை புகழ்ந்தும் பேசியதால் ஏற்பட்ட கோபம் மட்டும் காரணம் அல்ல. உதயசந்திரன் மீது அளவு கடந்த அன்பும் ஆதரவும் கொண்டிருந்தவன்தான். ஆனால் மன்னனாகப் பதவி ஏற்ற அன்று, கடிகை மைதானத்தில் நடைபெற்ற நாடகத்தைக் கண்டானே. அந்த நாடகத்தில் நடித்தவர்களைப் பாராட்டும் எண்ணத்துடன் அவர்களது ஒப்பனை அறைக்குச் சென்றபோது அங்கு நடைபெற்ற சம்பாஷணை நந்திவர்மனை நிலைகுலையச் செய்துவிட்டது. அந்த நாடகத்தில் நடித்தவர்கள் தன்னைப் பற்றிக் குறிப்பிட்ட

சில கருத்துக்கள் நந்திவர்மனை மிகவும் அவமான மடையச் செய்துவிட்டன.

மேடைக்குப் பின்பாக இருந்த ஒப்பனை அறையில் பெண்கள் சிலர் ஒப்பனைகளைக் கலைத்தபடி உரையாடிக் கொண்டிருந்தனர்.

"மீனா! இன்று உனது நடிப்பு மிகவும் அருமை. வேகவதி ஆறாக நீ உணர்ச்சியைக் கொட்டி நடித்த விதம் அனைவரையும் கவர்ந்துவிட்டது." — ஒரு பெண் கூற, மீனா என்கிற அந்தப் பெண் பதிலளித்தாள்.

"எனக்கும் இன்று பரம திருப்தி, விஜயா! முதல் வரிசையில் உதயசந்திரர் வேறு அமர்ந்து நாடகம் பார்த்தாரா! எனது கைகால்கள் வெலவெலத்துப் போயின..! பொதுவாக அவர் நாடகம், நடனம் எல்லாம் பார்க்க வரமாட்டார் அல்லவா! இன்று அவர் வேறு நாடகம் பார்க்கிறார் என்கிற பயத்தில் மிகவும் கவனமாக நடித்தேன்..!"

"நானும் கவனித்தேன், மீனா! தளபதியார் உதய சந்திரன்தான் என்ன கம்பீரம்! அவரது நெடிய உருவமும், மலையைப் போன்ற தோள்களும், வெண்கலக் குரலும், முறுக்கு மீசையும், ஓங்கி வளர்ந்த மரங்களைப் போன்ற கால்களும், தெறித்துவிடுவது போன்ற உடல் வலிமையையும், பார்வையாலேயே கருங்கற்களைப் பிளந்துவிடுகின்ற கூர்மையையும் கொண்டிருக்கிறாரே! எவ்வளவு கம்பீரம்..?!" — விஜயா கூறினாள்.

"ஏதேது! தளபதியாரிடம் காதல் கொண்டுவிட்டாய் போல் இருக்கிறதே?" — அகல்யா என்கிற இன்னொருத்தி சிரித்தாள்.

"கொண்டால் என்ன தவறு, அகல்யா? பார்ப்பதற்கு எவ்வளவு கம்பீரமாக இருக்கிறார்..!" — விஜயா கூற, அவர்கள் பேசுவதைத் தொடர்ந்து கேட்டபடி நின்றான் நந்திவர்மன்.

"ஏன்! நமது மன்னர் நந்திவர்மர் கூட அழகாகத்தானே இருக்கிறார்?" — அகல்யா கேட்க, விஜயா என்கிறவள் தந்த பதில் நந்திவர்மனை கொதிக்க வைத்தது.

"என்ன அழகு அவரிடம் உள்ளது..? சோகை பிடித்தது போன்ற வெண்மை நிறத்தைத் தவிர, அந்தப் பாலகனிடம் என்ன இருக்கிறது? வெண்ணையை உருட்டிச் செய்தது போன்ற ஒரு மேனி. அப்போதுதான் தாய்ப்பால் குடித்துவிட்டு எழுந்து வந்தது போன்ற முகம். ஆண் என்றால் உடலில் வலிமையும், வீரமும் பொங்க வேண்டும். இவன் எப்போது கோபம் கொள்வான், எப்போது எரிமலையெனப் பொங்குவான் என்கிற பயம் உண்டாக வேண்டும். நமது மன்னரைப் பார்த்தால் பயமா உண்டாகிறது! திருவிழாவில் தொலைந்து போன குழந்தையைப் போன்று விழித்துக் கொண்டிருக்கிறார். நாடகத்தைக் கூட அவர் ரசித்தது போல் தெரியவில்லை. நடுநடுவே திராட்சைக் கனிகளை உண்பதிலேயே கவனத்தைச் செலுத்தினார். உண்மையைச் சொல்லட்டுமா! எனக்கு நந்திவர்மரைக் காணும் போது மன்னன் என்கிற எண்ணமே தோன்றமாட்டேன் என்கிறது. இந்தப் பிரக்ருதியை காம்போஜத்தில் இருந்து தருவித்திருக்கவே வேண்டாம். நமது உதயசந்திரரே மன்னனாக அரியணையில் அமர்ந்திருக்கலாம். அவரும் ராஜசிம்ம பல்லவரின் பேரன்தானே..!" — விஜயா கூறினாள்.

"ஆமாம்! எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது!" — மீனா என்கிற பெண் கூற, நொறுங்கிய இதயத்துடன் மீண்டும் ஒத்தாடை நந்தவனத்தினுள் நுழைந்தான். அனைவரும் உதயசந்திரனுக்கு மரியாதை செலுத்துவதும், அவனிடம் பேசுவதுமாக இருக்க, தான் பெயருக்கு ஒரு மன்னன் என்பதாக உணர்ந்தான். இரவு விருந்தின் போது சுவாரஸ்யம் இல்லாமல்தான் இருந்தான்.

திருமணத்தன்று இரவு, வயிரமேகன், மதுரச போதையில் உதயசந்திரன் மன்னனாகப் பதவி ஏற்பான்

என்கிற நம்பிக்கையில்தான் தான் குந்தளப் படைகளை அனுப்பியதாகக் கூறியதும், அவனது கட்டுப்பாடு தளர்ந்தது. உதயசந்திரனை வெறுத்து ஒதுக்கத் துவங்கி இருந்தான்.

உக்ரோதயத்துடன் வந்தவன், அதனை ஆலவாயரிடம் கொடுத்து கஜானாவில் பத்திரப்படுத்தச் சொல்லிவிட்டு தனது பள்ளியறைக்குச் சென்றுவிட்டான். மனைவி ரேவாதேவி, உக்ரோதயத்தை மீட்டு வந்ததற்காக அவனுக்கு ஆரத்தி எடுத்து வரவேற்பு கொடுக்க, கோபத்தில் ஆரத்தி தட்டை தட்டிவிட்டான்.

"எனக்கு ஏன் சுழற்றுகிறாய், ஆரத்தி? உனது அண்ணன், உதயசந்திரன்தான் உக்ரோதயத்தை மீட்டு வந்தான். அவனுக்குச் சென்று எடு ஆரத்தி! பொருத்த மாகத் திருமணம் வேறு செய்து கொண்டிருக்கிறான்!" என்றபடி மஞ்சத்தில் சரிந்தான்.

இராஜகுரு சதகரணி மூலம் நடந்ததை அறிந்து கொண்டாள் ரேவா. அவளுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. உதயசந்திரன் மட்டும் சமயத்தில் அங்கு செல்லவில்லை என்றால், நந்திவர்மனின் கதை முடிந்திருக்கும் என்பதைப் புரிந்து கொண்டாள். உதயசந்திரன் மக்களாலும், பல்லவப் படைகளாலும் மிகவும் விரும்பப்படுகிறான் என்கிற உண்மை மெதுவாக அவளுக்கு உறைத்தது. மீண்டும் நந்திவர்மனுக்கும், உதயசந்திரனுக்கும் சமரசம் ஏற்படுத்தினால் என்ன என்று மனதினுள் அவள் நினைத்தாள். ஆனால் காலம் கடந்துவிட்டது என்பதை உணர்த்துவது போன்று, மறுநாள் விடியலில் நந்திவர்மன் இரதத்தில் மாவிலக்கைக்குப் பயணமானான். தன்னிடம் கூட விடைபெற்றுக் கொள்ளாமல், அவன் பரபரப்புடன் மாவிலக்கை கிளம்பியது அவளுள் உறுத்தலை ஏற்படுத்தியது.

*காம்போஜத்தில் இருந்து வாங்மேயா என்கிற கலம் வந்து மாவிலக்கையில் நின்றது. அந்தக் கலத்தில் இருந்து பெரிய பலகை ஒன்று கரை வரை நீள, அந்தப் பலகையில் மிக நேர்த்தியாகப் படிகள் செதுக்கப் பட்டிருந்தன. அந்தக் கலத்தை ஆவலுடன் பார்த்தபடி நின்றான், நந்திவர்மன்.*

*கலத்தில் இருந்து முதலாவதாக வெளிப்பட்டார், தேவராஜ மார்க்கத்தின் தலைவர் ஷ்யமந்தகச் சிம்மவபு.*

*"பல்லவ மல்லா!"*

*நந்திவர்மனின் பழைய பெயரை உச்சரித்தபடி தனது இரு கைகளையும் விரித்து அவனை நோக்கியபடி இறங்கி வந்தார் சிம்மவபு. அவரைத் தொடர்ந்து கடுமையான தோற்றத்துடன் ஒருவன் இறங்கினான். காம்போஜத்தின் பழைய தளபதி, விருத்தமயன். மனதில் ஈரம் இல்லாதவன். அவனைத் தொடர்ந்து கிரிராஜர் என்கிற அரசியல் சூத்திரதாரி இறங்க, அவரைத் தொடர்ந்தாள் அவரது மகள் சுரஞ்சனா. அவர்களைத் தொடர்ந்து தேவராஜ மார்க்கத்தைச் சேர்ந்த விற்பன்னர்கள், வியாபாரிகள், கலைஞர்கள் என்று அறுபது முதல் எழுபது பேர் கலத்தில் இருந்து இறங்கி வந்தனர்.*

*"பல்லவ மல்லா! மன்னனாக அரியணை ஏறிவிட்டாயா? கேட்பதற்கே உற்சாகமாக உள்ளது. அஸ்வமேத யாக பூமியான காஞ்சியை நம்மவன் ஆளுகிறான் என்பதே பெருமையாக உள்ளது" என்றார்.*

*அவரது திருவடியில் விழுந்து பணிந்தான், நந்திவர்மன். விருத்தமயன் நந்திவர்மனை நோக்கி தலைகுனிந்து பணிய,*

*"விருத்தரே! நலமா?" — நந்திவர்மன் கேட்க, சிரித்தான், மயன்.*

*"நலமாக இருக்கத்தான் தங்களை நாடி வந்திருக்கிறேன்!" என்றதும் புன்னகையுடன் அடுத்து வந்து நின்ற கிரிராஜரை நோக்கினான்.*

"வரவேண்டும் கிரிராஜரே! சான்றோர் உடைய நகரம் காஞ்சி. அதில் நீர் வசிக்கவில்லை என்றால் எப்படி?' — நந்திவர்மன் கூறிக்கொண்டிருந்தபோதே, அவரது பின்பாக நின்று, தனது படபடக்கும் இமைகளால் நந்திவர்மனை நோக்கினாள், சுரஞ்சனா.

"இந்த அழகு மன்னனை இழந்தது காம்போஜத்தின் துர்ப்பாக்கியம்.. பெற்றது காஞ்சியின் பாக்கியம்!" என்றதும், நந்திவர்மனின் கண்கள் வியப்பால் விரிந்தன.

"அட! உங்கள் மகள் சுரஞ்சனாவும் வந்திருக்கிறாளா? காஞ்சி இனி களைகட்டும்!" என்றபடி அவளை ஆர்வத்துடன் பார்த்தான். சிறு வயதில் இருந்தே இவனிடம் நல்ல தோழமை பாராட்டி வந்தாள். மற்ற மூன்று சகோதரர்களுடன் பழகினாலும், பல்லவ மல்லனிடம் மட்டும் அதிக உரிமை எடுத்துக்கொள்வாள். தன்னைக் கேவலப்படுத்திய அந்த நாடகப் பெண்மணி களின் முன்பாக இந்தப் பேரழகியை நிறுத்தி, இவள் கால் தூசுக்கு நீங்கள் சமானம் ஆகமாட்டீர் என்று கூற வேண்டும்!

"அனைவரும் காஞ்சிக்கு வரவேண்டும்" — என்று வரவேற்ற நந்திவர்மன் அவர்களுக்கு இரதங்களையும், புரவிகளையும், மாட்டு வண்டிகளையும் வழங்கினான்.

அனைவரும் மாவிலக்கையில் இருந்து ஒத்தாடை அரண்மனைக்குப் புறப்பட்டனர்.

"அய்யோ. பல்லவம் இவ்வளவு வெப்பம் கொண்ட நாடா.." — தனது மேலாடையால் விசிறிக்கொண்டாள், சுரஞ்சனா.

அனைவரும் ஒத்தாடை அரண்மனையை அடைந்ததும், விருத்தமயன் முகம் சுளித்தான்.

"இந்த சிறிய மாளிகையா பல்லவரின் அரண்மனை?" — விருத்தன் நையாண்டி செய்ய, சிம்மவபு அவனைக் கண்டிப்புடன் நோக்கினார்.

“நாம் இங்கே குதூகலமாகப் பொழுதைக் கழிக்க வரவில்லை. நமது தேவராஜ மார்க்கத்திற்குச் சொந்த மான பொக்கிஷங்களைக் கைப்பற்றி, இங்கிருக்கும் அத்திமலையைத் தேவராஜ மார்க்கத்தின் பாதைக்குக் கொண்டு வர இருக்கிறோம்” சிம்மவபு கூறியதை விருத்தமயன் கவனித்துக் கொண்டிருந்த அதே சமயம், வண்டிக்காரனின் பரந்த முதுகு விறைத்தது. அவனது கழுத்து நரம்புகள் புடைத்தன.

சாயாவக்ரன் என்கிற நிழலைப் பிடிப்பான்தான் அந்த வண்டியைச் செலுத்திக் கொண்டிருந்தான். அவர்களை ஒத்தாடையில் இறக்கிவிட்டு வண்டியை வில்வலத்திற்குச் செலுத்தினான் சாயாவக்ரன், காம்போஜத்தில் இருந்து வந்திருக்கும் படையினரின் நோக்கத்தை உதய சந்திரனிடம் தெரிவிப்பதற்காக.

அன்றிரவு —

காம்போஜத்திலிருந்து வந்தவர்களுக்கு விருந்து ஒன்றை ஏற்பாடு செய்திருந்தான் நந்திவர்மன். ரேவாதேவி தன்னை மிகவும் நேர்த்தியாக அலங்கரித்துக்கொண்டு விருந்துக்கு வந்தாள்.

நந்திவர்மன் தனது இருக்கையில் அமர, அவனது வலதுபுறம் ரேவாதேவியும், இடப்புறம் சுரஞ்சனாவும் அமர்ந்தனர். மற்ற பிரமுகர்கள் வரிசையில் அமர்ந்தனர். ஒரு பல்லவ பிரமுகரை அடுத்து ஒரு காம்போஜ பிரமுகர் அமர்த்தப்பட்டார். அவ்வகையில், தண்டநாயகர் ஆலவாயர் பக்கலில் விருத்தமயனும், காஸ்யப சதகரணியின் அருகில் ஷ்யமந்தகச் சிம்மவபுவும், மதுசூதன பண்டிதர் பக்கலில் கிரிராஜரும் உபதளபதி விஜயவிக்கிரமன் பக்கலில் ஜனமேயன் என்கிற காம்போஜ வீரனும் அமர்ந்தனர்.

நந்திவர்மனைக் கடந்து ரேவாதேவியை எட்டி நோக்கினாள், சுரஞ்சனா.

"பல்லவ மல்லா! உனது மனைவி ஒரு பதுமையைப் போன்று இருக்கிறாள். உன்னளவு நிறம் இல்லையென்றாலும், அழகாக இருக்கிறாள்." — சுரஞ்சனா கூறினாள்.

சிம்மவபு தனது அருகில் அமர்ந்திருந்த காஸ்யப சதகரணியைத் தனது இடுங்கிய கண்களால் நோக்கினார்.

"இராஜகுருவே! உங்கள் அத்திமலைத் தேவராஜ ஆலயத்தில் எவ்வித ஆகமங்களைப் பின்பற்றுகின்றீர்?"

"பல்லவத்தில் இருவகை ஆகமங்களைப் பின்பற்றும் ஆலயங்களும் உள்ளன..? அத்திமலையில் பாஞ்சராத்த ஆகமங்களையே பின்பற்றுகின்றனர்?" — சதகரணி கூறினார்.

"எங்கள் தேவராஜ மார்க்கத்தில் இருவகை ஆகமங்களை ஏற்றுக்கொள்வதில்லை. எங்கள் ஆகமங்கள் விஸ்வநாத ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டது." —- சிம்மவபு கூறினார்.

"வேதங்கள் பசுக்கள் என்றால், ஆகமங்கள் அவை கறக்கும் பால் அல்லவா?" — சதகரணி கூற, விருந்தினர்கள் அனைவரும் தேவராஜ மார்க்கத்தின் அதிகாரியும், பல்லவத்தின் ராஜகுருவும் நிகழ்த்தும் உரையாடலை ஆர்வத்துடன் கவனித்தனர்.

"உண்மைதான் பல்லவ ராஜகுருவே! ஆனால் உங்கள் ஆகமங்களுக்கும், எங்கள் ஆகமங்களுக்கும் வேறுபாடு உண்டு. வேதங்கள் பசுக்கள்தான்! ஒப்புக்கொள்கிறேன். ஆனால் எங்கள் விஷ்வநாத ஆகமங்கள் காமதேனு தானாகச் சுரக்கும் பால் போலத் தானாகவே பலனளிக்க வல்லது..!" — சிம்மவபுவின் தொனியில் தங்களது தேவராஜ மார்க்கமே உயர்ந்தது என்பதை நிலைநாட்ட வேண்டும் என்கிற அவசரம் தெரிந்தது.

"எங்களிடமும் பாஞ்சராத்த ஆகமங்கள் உள்ளன. ஐந்து இரவுகளில் திருமாலே விஸ்வக்ஷேனனிடம்

உரைத்த ஆகமங்கள் உள்ளன. அவை பொதுவாக, இங்கே இது வேண்டும், அது வேண்டும் என்று கோரி இறைவனுக்குத் தொண்டு புரிவதில்லை. எங்கள் ஆராதனைகளையே கைங்கர்யமாகக் கருதுகிறோம். என்ன இருந்தாலும், கர்மபூமி இதுதான். கடல் கடந்து இருக்கும் பிரதேசங்கள் போகபூமி. இங்குதான் செய்யும் கர்மங்களுக்கு வீர்யம் அதிகம். எனவேதான், பிரம்மனும் அஸ்வமேதம் செய்யக் காஞ்சி வனத்தைத் தேர்ந்தெடுத்தான்." — சற்றே காட்டத்துடன் ஒலித்தது சதகரணியின் குரல்.

"இருக்கலாம் சதகரணி! ஆனால் உங்கள் மண்ணில் வாழ்பவர்களுக்கு அதன் பெருமைகள் தெரிவதில்லையே! வேதங்கள், ஆகமங்கள் எல்லாமே நமக்குக் கிடைத்த பொக்கிஷங்கள். பொக்கிஷங்களை எப்படிப் போற்ற வேண்டும்? உதாரணத்திற்கு, அத்திமலைத் தேவராஜனின் தேவ உடும்பர மேனி எத்தகைய பொக்கிஷம்! உலகிலேயே தற்போது ஒரே ஒரு தேவ உடும்பர அத்தியினால் ஆன மேனி இருக்கும் நிலையில் அதைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும் என்று தெரியவில்லையே..!" —சிம்மவபு கூற, அதைக் கேட்டு, தண்டநாயகரால் பொறுத்துக்கொள்ள இயலவில்லை.

"என்ன செய்வது? பொக்கிஷங்களைக் குறிவைத்து கடலுக்கு அப்பால் இருக்கும் பகுதிகளில் இருந்து பலரும் வருகின்றனர். யார் நல்லவர், யார் தீயவர் என்று நம்மால் எப்படிப் பாகுபாடு செய்ய முடியும்? அத்திமலைத் தேவன்தான் தன்னையே பாதுகாத்துக் கொள்ள வேண்டும்!" — ஆலவாயர் கூறியதும், சிம்மவபு நந்திவர்மனை நோக்கினார்.

"காணாமல் போன அத்திமலையானின் சிலையைப் பற்றித் தகவல் ஏதேனும் கிடைத்ததா?" — விருத்தமயன் கேட்க, மதுசூதன பண்டிதர் அவனைச் சற்றே எரிச்சலுடன் நோக்கினார்.

"அது எங்கள் நாட்டின் உள்விவகாரம். அதனைப் பற்றிப் பொது விருந்தில் விவாதிப்பதற்கு ஒன்றுமில்லை!" — பண்டிதர் கூற, அவரை உறுத்துப் பார்த்தார், சிம்மவபு.

"பண்டிதரே! மறந்துவிடாதீர்கள். நம் இரு நாடுகளும் பங்காளி நாடுகள். அஸ்வத்தாமாவின் இரு மகன்களின் வழி வந்தவர்கள் நாம். இருவரும் காஞ்சியில் தோன்றிய வர்கள். எந்த உரிமையில் நீங்கள் எங்கள் இளவரசரை இங்கே மன்னனாக அழைத்து வந்துள்ளீரோ, அதே உரிமையில்தான் நாங்களும் அத்திமலைத்தேவனைப் பற்றி விசாரப்பட அருகதை உண்டு!" சிம்மவபு புன்னகை யுடன் கூறினாலும், அவர் குரலில் இருந்த காட்டம் பண்டிதரை அரண்டு போகச்செய்தது.

தன்னை நந்திபுரத்திற்கு அழைத்துச் சென்று அங்கே மறைத்து வைத்து, பாண்டியரிடம் இருந்து காப்பாற்று வதில் பெரும் பங்காற்றி இருந்த மதுசூதன பண்டிதரின் உதவிகளை அலட்சியம் செய்தான், நந்திவர்மன்.

"மதுசூதன பண்டிதரே! இது நந்திபுரம் அல்ல! நந்தி வர்மனின் அரண்மனை. விருந்தினர்களை விருந்தினர் களாக நடத்துவதற்குக் கற்றுக் கொள்ளுங்கள்..!"

பண்டிதர் தலையைக் குனிந்து கொண்டார்.

நிலைமையைச் சமாளிக்கப் பேச்சை திசை திருப்பினாள், ரேவாதேவி.

"சிம்மவபு சுவாமி! உங்கள் தேவராஜ மார்க்கத்தைப் பற்றிக் கூறுங்களேன்."

"தேவராஜனை மட்டுமே வழிபடும் மார்க்கம், எங்கள் தேவராஜ மார்க்கம். நாட்டின் மன்னனை அவனே தேர்ந்தெடுத்து ஆள வைக்கிறான். தற்போது இரண்ய ஹரிவர்மன் அவ்வகையில் தேவராஜனின் பிரதிநிதி. அவன் மகனை தனது மூல இருப்பிடமான அத்திமலை உள்ள காஞ்சியை ஆள வைத்ததும் அவனே..!"

— சிம்மவபு கூற, நந்திவர்மன் அவரை கேள்வியுடன் பார்த்தான்.

"காம்போஜ தேவராஜ மார்க்கமும், இங்கு அத்தியூரின் வைணவமும் தேவராஜனைத்தானே தொழுகின்றன. இரு மார்க்கங்களுக்கும் வேறுபாடு உண்டா?"

நந்திவர்மனை புன்சிரிப்புடன் நோக்கினார், சிம்மவபு.

"உள்ளது பல்லவ மல்லா! இரு வழியும் மோட்சத்தைத் தான் நாடுகின்றன. ஆனால் இங்குள்ளவர்கள் போன்று சரணாகதி, கைவல்யம் போன்ற மோட்ச சாதனங்களை நமது தேவராஜ மார்க்கம் ஏற்பதில்லை. முழுமூச்சுடன் பக்தியோகத்தைக் கடைப்பிடிக்கிறோம். மிகவும் சிரமமானது என்றாலும் அந்தச் சிரமங்களை ஏற்கிறோம். சரணாகதி, கைவல்யம் போன்றவை எல்லாம் ஆன்மபலம் இல்லாதவர்களுக்கு என்று நம்புகிறோம். முக்கியமாக, கைவல்யத்தை நாம் ஏற்பதே இல்லை.

மோட்சம் என்பதை ஒவ்வொரு மார்க்கமும் ஒவ்வொரு பெயரில் சொல்லியிருக்கும். அத்வைதிகள் அதை ஆத்ம ஸாக்ஷாத்காரம் அல்லது ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் என்கிறார்கள். சைவர்கள் சிவ ஸாயுஜ்யம் என்றும், வைணவர்கள் விஷ்ணு ஸாயுஜ்யம் என்கிறார்கள். தேவராஜ மார்க்கத்தைச் சேர்ந்த நாம், தேவராஜ சாயுஜ்யம் என்கிறோம்.

"புத்தர், ஒரு தீபம் அணைந்து போய்விட்டாற்போல ஸகலமும் அழிந்து போய்விட்ட 'நிர்வாணம்' என்கிறார். ஜைன மதத்திலும், யோக சாஸ்த்திரத்திலும் 'கேவல ஸ்திதி,' 'கைவல்யம்' என்றே மோட்சத்தைச் சொல்லியிருக் கிறது. தேவராஜ மார்க்கத்தைப் பொறுத்தவரை சகலமும் தேவராஜனே!" — சிம்மவபு விளக்கினார்.

அனைவரும் அமைதியாகச் சிம்மவபு கூறுவதைக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

ஆலவாயர், சதகரணி, விஜயவிக்கிரமன், அனைவருக்கும் ஒன்று மட்டும் தெளிவானது. இந்தக் காம்போஜ குழாம் பல்லவத்தில் பல குழப்பங்களை உண்டுபண்ணப் போகின்றது. இந்தக் குழாத்திடம் மன்னன் சிக்கிக் கொள்ளாமல் இருக்க வேண்டும்!

"பல்லவமல்லா! நாளைக் காலை நாங்கள் அத்தி மலைக்கு விஜயம் செய்ய இருக்கிறோம்! ஏற்பாடுகளைச் செய்!" — என்றவுடன் நந்திவர்மன் தலையசைத்தான்.

விருந்து முடிந்தது. அனைவரும் ஒத்தாடை அரண் மனையைவிட்டு புறப்பட்டனர்.

மதுசூதன பண்டிதர் சதகரணியின் செவிகளில் கிசுகிசுத்தார்.

"எனக்கு என்னவோ எதுவும் சரிப்படவில்லை..! இந்தக் காம்போஜ பட்டாளம் எதற்காகக் காஞ்சிக்கு வந்தது என்பதே மர்மமாக உள்ளது. மன்னரைத் தங்கள் வசப்படுத்திக்கொண்டு என்னவெல்லாம் செய்யத் திட்ட மிடுகின்றனரோ. இந்தச் சமயம் பார்த்து உதயசந்திரன் வேறு ஒதுங்கி நிற்கிறாரே. பல்லவம் ஒழிந்த மடமாக அல்லவோ உள்ளது..!" பண்டிதர் விட்ட இடத்திலிருந்து, சதகரணி தொடர்ந்தார்.

"ஆம்! நாளை வேறு அத்திமலைத்தேவன் ஆலயத் திற்குச் செல்லப் போகிறார்களாம். அத்திமலையில் என்ன சதிகளை அரங்கேற்ற உள்ளார்களோ? ஒன்று செய்வோம்..! நாளை உதயசந்திரனைச் சந்திக்க வில்வலம் செல்வோம்..!" — சதகரணி கூற, ஆலவாயருக்கும் அது நல்ல யோசனையாகப் பட்டது.

ஒத்தாடை அரண்மனை அந்தப்புரத்தில் ரேவாதேவி நந்திவர்மனுக்காகக் காத்திருந்தாள். நந்திவர்மனோ விருந்தினர் மாளிகையில் சிம்மவபு, விருத்தமயன், கிரிராஜர், சுரஞ்சனா ஆகியோருடன் அமர்ந்திருந்தான்.

"உங்களுக்கு ஒரு முக்கியமான பொருளைக் காட்டப்போகிறேன்!" என்றபடி தனது மேலாடையில் மறைத்து வைத்திருந்த உக்ரோதயத்தை எடுத்து அவர்கள் முன்பாக முக்காலியில் வைத்தான்.

"இதுதான் ஸ்ரீதள மணி. இதன் இப்போதைய பெயர் உக்ரோதயம். ஹஸ்த நட்சத்திரத்தன்று ஒளிர்விடும். இதன் கற்கள் யட்ச நேத்திரக் கற்களால் ஆனது. மிகவும் ஆற்றல் வாய்ந்தது..!" — நந்திவர்மன் கூற, அதைக் கண்ட ஷ்யமந்தகச் சிம்மவபுவின் கண்கள் விரிந்தன.

"இவைதான்! நமது தருமநகரத்தில் நிலநடுக்கத்தை உண்டு செய்யும் கற்கள். ஹஸ்த நட்சத்திரத்தன்று தேவராஜனுக்கு இதனைச் சாற்றும்போது நமது ஐராவத மலையின் வசந்தக் குடிரத்தில் இதன் ஒளியை பல மன்னர்களும், அரசிகளும் கண்டிருக்கின்றனர். பலே! நந்திவர்மா! இதனைக் கண்டெடுத்துவிட்டாய் என்றால், விரைவில் தேவராஜனின் பிரதிமையையும் நாம் கண்டெடுத்துவிடுவோம். எனக்கு நீ தந்த வாக்கு நினைவிருக்கிறதா..? பிரதிமை கிடைத்தவுடன் அதனைக் காம்போஜத்திற்கு அனுப்ப வேண்டும் என்பது. ஐராவத மலையின் உச்சியில் ஆதி தேவராஜனை பிரதிஷ்டை செய்து நமக்கு உரியவனாக ஆக்கிக்கொள்வோம்..!" — சிம்மவபு கூறினார்.

தருமநகரத்தின் பாழடைந்த பிரவாள மாளிகையின் பின்புற அடுக்களையின் மீதிருந்த புகைபோக்கியினுள் பதுங்கியிருக்கும் அத்திமலையான் செவிகளில் இவர்களது உரையாடல் விழுந்ததா தெரியவில்லை. அவன் தனக்குரிய ஆலயத்தை எப்போது அடையப் போகிறான்? அவனுடைய பிரச்னைகள் இப்போதைக்குத் தீர்ந்தபாடில்லை. தனது பிரச்னைகளை அவன் எங்ஙனம் சமாளிக்கப் போகிறான் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# 22. அஞ்சி நிற்கும் காஞ்சி!

**கா**ம்போஜக் குழுவினருடன் அத்திமலைக்கு வந்திருந்தான், நந்திவர்மன். ஆலயத்தின் சந்நிதியில் நின்றிருந்த சிம்மவபு, தேவராஜனாக நின்றிருந்த பிரதிமையை வெறித்துப் பார்த்தார்.

"இவர் ஸ்ரீவரம் என்கிற மாலிருஞ்சோலை மலையி லிருந்து வரவழைக்கப்பட்ட வரதநாராயணன். அவர் மீண்டும் கிடைக்கும்வரை இவர் இங்கே வரதனாக அருள் பாலிப்பார் என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள்..!" — ஆலய தலைமை பட்டர், சுதர்ஷன அத்தங்கி கூற, தலையசைத்தார், சிம்மவபு.

"இருக்கட்டும்!" என்றபடி ஓரக்கண்களால் அருகே இருந்த நந்திவர்மனை கவனித்தார். 'இவர் நிரந்தரமாக இங்கேயே இருக்கட்டும். தேவ உடும்பர அத்தி மேனியான் காம்போஜத்து ஐராவத மலையில் நிற்கட்டும்' என்று பொருள்பட நந்திவர்மனை ஆழமாகப் பார்த்தார்.

ஆலயம் பிரம்மாண்டமாகத்தான் இருந்தது. ஐராவத மலையளவு பெரியதாக இல்லாவிட்டாலும், இதன் கீர்த்தி அதைக் காட்டிலும் பெரியது. பிரம்மதேவன் அஸ்வமேத யக்னம் செய்த இடம். மேலும், இவரது தேவராஜ மார்க்கத்தைக் காட்டிலும், அத்தியூரில் ஆகம வழிபாடுகளுக்குப் பெருமை அதிகம். அவற்றின் வீர்யத்தைச் சிம்மவபுவினால் உணர முடிந்தது.

கிரிராஜர் சிம்மவபுவின் செவியில் கிசுகிசுத்தார். "இந்த ஆலயம் நமது தேவராஜரைப் போன்று அல்லாமல் கிழக்கு நோக்கி நிற்கிறதே..! அது ஏன்?"

"இங்குள்ள ஆலயங்கள் எல்லாமே கிழக்கு நோக்கித் தான் அமைந்திருக்கும். அவர்கள் சூரிய பாதையை நோக்கியே தங்களது ஆலயங்களை அமைப்பார்கள். நம்மைப் போன்று சந்திர பாதையை நோக்கி அமைப்பதில்லை..!" — சிம்மவபு விளக்கினார்.

"நாம் இனி காஞ்சியிலே வசிக்கப் போகிறோம் என்றால், நமக்கென்று ஒரு ஆலயம் வேண்டாமா? நமது தேவராஜ மார்க்கத்தை, நமது விஷ்வநாத ஆகமங்களைப் பின்பற்றி ஆராதனை செய்ய ஒரு ஆலயம் தேவை அல்லவா?" — சுரஞ்சனா சிம்மவபுவை கேட்டாள்.

"நமது பல்லவ மல்லர் அதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பார்!" — சிம்மவபு கூறியதும், சுரஞ்சனா தனது வெண்முத்துப் பற்கள் புலப்பட நந்திவர்மனை நோக்கிச் சிரித்தாள்.

"பல்லவ மல்லரே! உங்களுக்காகத்தான் குளிர்ச்சியான காம்போஜத்தை விட்டு, இங்கே காஞ்சிக்கு வந்திருக்கிறோம். எங்களை வசதியாக வைத்துக்கொள்வது உங்கள் பொறுப்பு!" — சற்று மிரட்டலாகவே ஒலித்தது அவளது குரல். பால்யத்தில் தன்னுடன் விளையாடியவன் என்கிற உரிமை அதற்குக் காரணமாக இருக்கலாம்.

"கவலைப்படாதே சுரஞ்சனா! இங்கே காஞ்சியில் உங்களுக்கு எவ்விதக் குறைபாடும் நேராது. வசதிகள் மட்டுமல்ல, பல்லவ அரசியலில் உங்களுக்கெல்லாம் தகுதியான இடமும் தரப்படும்!" என்று நந்திவர்மன் கூறியதும், ஷ்யமந்தகச் சிம்மவபு திருப்தியுடன் தலையசைத்தார். இதை எதிர்பார்த்துதானே இவர்கள் காம்போஜத்திலிருந்து காஞ்சிக்கு பயணித்திருந்தார்கள். தொடர்ந்து அவர்கள் ஆலயத்தைச் சுற்றி வர, அரண்மனையில் ரேவாதேவி குழப்பத்துடன் தனது அந்தப்புரத்தில் இங்கும் அங்குமாக உலாவிக் கொண்டிருந்தவள், ஒரு கட்டத்தில் பொறுமையை

இழந்தாள். அரண்மனை அதிகாரி, குணசீல ஆமாத்தியாரை அழைத்தாள்.

"மன்னர் எங்கே?" எரிச்சலுடன் கேட்டாள் ரேவா.

"நேற்று இரவு வெகுநேரம் விருந்தினர் மாளிகையிலேயே காம்போஜக் குழுவினருடன் உரையாடிக் கொண்டிருந்தார். அங்கேயே தங்கிவிட்டார். இன்று காலையிலேயே அத்திமலைக்குச் சென்றுவிட்டார்." குணசீலர் தலையைக் குனிந்தபடி கூறினார்.

நேற்று விருந்து முடிந்து அவர்களுடன் விருந்தினர் மாளிகைக்குச் சென்றவன் எப்போது திரும்பி வந்தானோ என்று இவள் யோசித்துக் கொண்டிருக்க, அவன் இரவையே விருந்தினர் மாளிகையில்தான் கழித்திருக்கிறான் என்பது குணசீலர் சொல்லித்தான் அவளுக்குத் தெரிந்தது. தனது பால்யத் தோழி சுரஞ்சனாவுடன் அளவளாவிக் கொண்டிருந்திருப்பான். அளவளாவலோடு நின்றதா அல்லது குலாவலும் நிகழ்ந்ததா?

"உடனே ஆலவாயர், சதகரணி மற்றும் மதுசூதன பண்டிதர் மூவரையும் நான் சந்திக்க வேண்டும் என்று கூறி அவர்களை அரண்மனைக்கு வரவழையுங்கள்!" உத்தரவிட்ட ரேவா மீண்டும் தனது அந்தப்புரத்திரனுள் முடங்கிக் கொண்டாள்.

தண்டநாயகர் ஆலவாயர், காஸ்யப சதகரணி, மதுசூதன பண்டிதர், குணசீல ஆமாத்தியார், விஜயவிக்ரமன், சுக்கிலமல்லன் அனைவருமே ரேவாதேவியைச் சந்திக்க வந்திருந்தனர்.

நீராடி முடித்து, எளிமையான அலங்காரத்துடன் அவர்கள் முன்பாகப் பிரசன்னமானாள், ரேவாதேவி. முகம் இறுக்கமாக இருந்தது.

"நாட்டு நடப்புகளைக் கவனித்து வருகிறீர்களா? காம்போஜத்தில் இருந்து வந்துள்ள குழுவினருடனேயே

கடந்த இரண்டு நாட்களாக மன்னர் சுற்றிக் கொண்டிருப்பதை அறிவீர்களா?" — நிஷ்டூரத்துடன் கேட்டாள், ரேவாதேவி.

"கவனித்தோம் அரசியாரே!" — ஆலவாயர் கூறினார்.

"கவனித்துமா மௌனத்தைக் கடைப்பிடிக்கின்றீர்..? அந்த காம்போஜக் குழுவை வைக்க வேண்டிய இடத்தில் வைக்க வேண்டாமா? எதற்காக அவர்களுக்கு இத்தகைய மாபெரும் வரவேற்பு, ஆட்டம், பாட்டம், விருந்து கேளிக்கை?" — ரேவா கேட்டாள்.

"பல்லவத்திற்கு மன்னனை அளித்திருக்கிறார்கள் அல்லவா? அதனால்தான்..!" — விஜயவிக்கிரமன் கூறினான்.

"ஏன் குந்தளம் கூடத்தான் இந்த நாட்டிற்கு அரசியை அளித்துள்ளது. குந்தளர்களுக்கு இத்தகைய வரவேற்பு கொடுக்கப்படுகிறதா என்ன? மன்னரே இரவெல்லாம் காம்போஜக் குழுவினருடன் தங்கி, தானே அவர்களை அத்திமலைக்கு அழைத்துப் போக வேண்டுமா? அந்தப் பெண் சுரஞ்சனாவுடன், மன்னர் நெருங்கிப் பழகுவது எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை!" — ரேவாதேவி கூற, ஆலவாயர் நிமிர்ந்து அரசியாரின் கண்களுக்குள் பார்த்தார்.

"அரசியாரே! தாங்கள் சுரஞ்சனாவினால் ஏற்படவுள்ள ஆபத்தை மட்டும் நினைத்துப் பார்க்கிறீர்கள். ஆனால் அவளைக் காட்டிலும் பெரிய ஆபத்துகள் நமது அத்திமலையை, காஞ்சியை, பல்லவத்தை மிரட்டிக் கொண்டிருக்கின்றன!" — ஆலவாயர் கூற, ரேவாதேவி உறைந்து போனாள்.

"என்ன சொல்ல வருகிறீர்?"

"காஞ்சி ஒத்தாடை அரண்மனையில் மன்னரைச் சுற்றி காம்போஜர்கள் ஒரு வட்டத்தை உருவாக்கி

விடுவார்களோ என்று அச்சப்படுகிறோம். அரசியல், அத்திமலை ஆலயம், காஞ்சி மற்றும் பல்லவத்தைத் தங்கள் கட்டுப்பாட்டினில் கொண்டு வந்துவிடுவார்கள் காம்போஜர்கள் என்று நாடெல்லாம் மக்கள் ஐயத்துடன் பேசிக்கொண்டிருக்கின்றனர். இதை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்!" — சதகரணி கூறினார்.

"எங்ஙனம் அதனைச் செய்வது?" — ரேவா கேட்டாள்.

"பெண்களுக்கு மட்டுமல்ல, அரசியாரே! ஆண் களுக்கும் அவ்வப்போது பிறந்த வீட்டின் மீது பாசம் வரும். நமது மன்னருக்கு அத்தகைய பாசம் அவர்களைக் கண்டதும் பொங்குகின்றது. ஆனால் எதுவுமே அளவுடன் இருத்தல் வேண்டும். குசேலனைக் கண்டதும் கண்ணனுக்கு எழுந்த பரிவினால் அவன் கொடுத்த அவலை உண்டுகொண்டே இருந்தான். ஆனால் இரண்டு பிடி அவல் உண்டவுடன் அவனை மேலே உண்ணாத படி செய்தாள் ருக்மணி. நமது மன்னரின் பாசத்தைக் கட்டுப்படுத்தவில்லை என்றால், பல்லவத்தையே காம்போஜர்களுக்குத் தாரை வார்த்துவிடுவார். அவரை நீங்கள்தான் கட்டுப்படுத்த வேண்டும்!" — மதுசூதன பண்டிதர் கூறினார்.

"முயன்று பார்க்கிறேன்! அவரை மீண்டும் என் வசப்படுத்த ஒரு ஆயுதத்தை வைத்திருக்கிறேன். அதைக் கொண்டு அவரைக் கட்டுக்குள் கொண்டு வர முடியும் என்று நினைக்கிறேன்..!" — ரேவாதேவி சொல்லி கொண்டிருக்கும் போதே, காம்போஜக் குழுவினருடன் அரண்மனைக்குத் திரும்பினான்.

"அடடே! அனைவரும் இங்குதான் இருக்கின்றீரா? என்ன விஷயம்?" — நந்திவர்மன் வியப்புடன் ஆலவாயரை நோக்கினான்.

"அதை நான் சொல்கிறேன் அரசே! எனது வயிற்றில் தங்கள் வாரிசு உருவாகி உள்ளது..!" — ரேவா வெட்கத்

துடன் கூற, சுரஞ்சனாவுடன் நடந்து சென்று கொண்டிருந்த நந்திவர்மன் வியப்புடன் திரும்பி நோக்கினான்.

"பரவாயில்லையே! பெரிய கவலை விட்டது. பதினாறு பிராயங்களில் நான் தந்தை ஆகின்றேனே. மகிழ்ச்சியைத் தரும் செய்தியைக் கூறினாய், ரேவா! மீண்டும் வாரிசைத் தேடி இனி காம்போஜத்திற்குக் காவடி எடுக்க வேண்டிய தேவை இல்லை என்று சொல்..!" — நந்திவர்மன் கூற, பல்லவர்களின் முகங்கள் இருண்டன.

பல்லவத்தின் மன்னனாக இருந்து கொண்டு பல்லவர் களையே காயப்படுத்துகின்றானே..! ரேவாதேவியின் முகமும் சுருங்கி இருந்தது.

தொடர்ந்து காம்போஜக் குழுவினருடன் உணவறைக்கு நந்திவர்மன் சென்றுவிட, ரேவாதேவி, குழப்பத்துடன் ஆலவாயரை நோக்கினாள்.

"இப்போது என்ன செய்வது? இந்த காம்போஜக் குழாத்தை எப்படி விரட்டுவது?" — ரேவாவின் குரலில் கவலை ஒலித்தது.

"ஒருவரால் மட்டுமே இதனைச் செய்ய முடியும், அரசியாரே!" — சுக்கிலமல்லன் கூற, அவனை நோக்கிப் புருவத்தை உயர்த்தினாள், ரேவாதேவி.

"இதற்கெல்லாம் காரணமே, நாம் தளபதி உதய சந்திரரை புறக்கணித்ததுதான். பல்லவத்தின் பெருமை களுக்கு உருவகமாக வில்வலத்தில் தங்கியிருக்கும் அவரை உடனடியாகக் காஞ்சிக்கு வரவழைக்க வேண்டும். தாங்கள் அவருடைய சகோதரி. அவரது திருமணத்திற்குக் கூடத் தாங்கள் செல்லவில்லை. உதய சந்திரரின் மேற்பார்வையில் இருந்தபோது சரியான பாதையில் பயணித்துக் கொண்டிருந்தார், மன்னர். அவரிடமிருந்து விலகியதும்தான் மன்னரின் போக்கினில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. தன்னை அலட்சியம் செய்தும்,

அதைப் பெரிதுபடுத்தாமல், உதயசந்திரர் உக்ரோதயத்தை மீட்டு ஸ்ரீபுருஷனிடம் இருந்து மன்னரைக் காப்பாற்றி உள்ளார். தாங்கள் அழைத்தால் நிச்சயம் காஞ்சிக்கு வருவார்."

ரேவாதேவி யோசித்தாள். சுக்கிலமல்லன் கூறியது நியாயமான வார்த்தைகளாகப் பட்டது. உதயனின் கண்டிப்பு, செயல்திறன், வீரம், உறுதி, தேசபக்தி இவற்றைப் புறக்கணித்ததன் விளைவு, பல்லவம் நிறையவே அனுபவித்துவிட்டது. நந்திவர்மன் என்கிற மதயானைக்கு அங்குசம் தேவை. இன்னும் பதினாறு பிராயங்களைக் கடந்திருக்காத அவன் எடுப்பார் கைப் பிள்ளையாகத் திகழக்கூடாது. காம்போஜர்கள் அவனை வசப்படுத்துவதற்குள் அவனை மீட்க வேண்டும். உதய சந்திரனால்தான் காம்போஜர்களை அடக்கி, நந்தி வர்மனை மீட்க முடியும்.

"அனைவரும் புறப்படுங்கள். நாம் வில்வலம் சென்று எனது அண்ணனைச் சந்திப்போம்!." — ரேவாதேவி கூறினாள்.

★ ★ ★

**வி**ல்வலம்!

ரேவாதேவி, மற்றவர்கள் புடைசூழ உதயசந்திரனின் மாளிகையினுள் நுழைந்தாள். உதயனும், பீயுஷமணியும் அவர்களை அன்புடன் வரவேற்றனர்.

"அரசியாரே! இவள் எனது மனைவி பீயுஷா. எனது அத்தை மகள்..!"

"நானும் உங்கள் சகோதரிதான், உதயசந்திரரே! எனக்கும் பீயுஷா அத்தை மகள். உங்கள் திருமணத்திற்கு வராததற்கு என்னை மன்னித்துவிடுங்கள்..!" —உண்மை யான வருத்தத்துடன் கூறினாள், ரேவாதேவி.

"அதனால் என்ன, அரசியாரே! நாம் எல்லாருமே அரசியல் பொம்மைகள். அரசியல் நிலவரத்திற்கேற்ப நமது உறவுகள் மாறும். இதையெல்லாம் மனதில் நினைத்து வருந்தினால், அரசியலும் நடத்த முடியாது, குடும்பமும் நடத்த முடியாது..! முதல் முறையாக வந்திருக்கிறீர்கள். உணவு அருந்திவிட்டுப் போகலாம்..!" — பீயுஷா கூறினாள்.

"விருந்தே அருந்திவிட்டுப் போகிறேன். நான் உனது நாத்தி வேறு. விருந்து தடபுடலாக இருக்கட்டும். நான் எனது சகோதரனுடன் சற்று அளவளாவிவிட்டு வருகிறேன். உனக்கு மருமகன் வேறு பிறக்கப் போகிறான். எனவே, காரத்தைச் சற்று தவிர்த்துவிடு!" — ரேவாதேவி கூற, பீயுஷா சிரித்தபடி அங்கிருந்து அகன்றாள்.

"நீ கர்ப்பம் தரித்திருக்கிறாய் என்பதை அறிந்து மகிழ்கிறேன், ரேவா! இனி பல்லவம் நாடு நாடாகச் சென்று வாரிசு யாசகம் கோர வேண்டியதில்லை." — உதயன் கூற, அனைவரும் திடுக்கிட்டு ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"இதையேதான் மன்னரும் கூறினார், அண்ணா! அவர் கூறியது காம்போஜத்தின் அகம்பாவமாகத் தொனித்தது. ஆனால் தாங்கள் அதைக் கூறியபோது உங்கள் குரலில் ஒலித்த நிம்மதியை புரிந்துகொண்டேன்..!" — ரேவா கூறினாள்.

"எப்படி இருக்கிறான் என் மருமகன்?" — உதயன் கேட்க, நெகிழ்ந்து போனாள் ரேவா. நந்திவர்மனின் மீது இவ்வளவு வாஞ்சையைக் கொண்டிருப்பவனைப் போய்ப் புறக்கணித்தோமே என்கிற குற்றவுணர்வில் அவளது கண்கள் கலங்கியிருந்தன.

"அண்ணா! காம்போஜத்திலிருந்து சிம்மவபு தலைமையில் ஒரு குழாம் வந்துள்ளது. அரண்மனையில் அவர்கள் செய்யும் ஆர்ப்பாட்டத்தைத் தாங்க இயல

வில்லை. மன்னர் சதாசர்வகாலமும் அவர்களுடனேயே கழிக்கிறார். அவர்கள் கூறுவதை வேத வாக்காக நினைக்கிறார். சுரஞ்சனா என்கிற பெண்ணால் எனது வாழ்க்கைக்குப் பிரச்னைகள் ஏற்படுமோ என்று அஞ்சுகிறேன். சிம்மவபுவால் அத்திமலை ஆலயத்திற்குக் கேடுகள் விளையுமோ என்று சதகரணி அஞ்சுகிறார். மொத்தத்தில் காம்போஜக் குழுவினரால் பல்லவத்திற்கே ஆபத்துகள் நேரிடுமோ என்று அஞ்சுகிறோம்..!" — ரேவா கூறினாள்.

"இதில் என்னால் என்ன செய்ய முடியும், ரேவா?" — உதயனின் குரல் கிணற்றுக்குள் இருந்து ஒலிப்பது போன்று தோன்றியது.

"உங்களால்தான் பிரச்னைகளைக் கட்டுக்குள் கொண்டு வர முடியும், உதயசந்திரரே. காம்போஜக் குழுவினரை வைக்கும் இடத்தில் வைத்து, மன்னரை நல்ல பாதையில் வழிநடத்திச் செல்ல முடியும்..!" ஆலவாயர் கூறினார்.

"என்னால் எப்படி முடியும்? எங்கள் இருவரிடையே தொடர்புகள் அறுந்துவிட்டனவே..!"

"நீங்கள்தான் இன்னும் தளபதியாக இருக்கின்றீர், உதயசந்திரரே. அதை மறக்க வேண்டாம். அண்மையில் நடைபெற்ற உக்ரோதயப் போரில் கூட, தாங்கள்தான் வெற்றியைத் தேடிக் கொடுத்தீர்கள். தளபதி என்கிற முறையில் இந்த விவகாரத்தில் தலையிட்டு மன்னரை மீட்டுத் தாருங்கள்..!" மதுசூதன பண்டிதர் கூறினார்.

எந்த வேளையில் மதுசூதன பண்டிதர் இவ்வாறு கூறினாரோ?

தன்னிடம் அவர்கள் விட்ட பணியை ஏற்றுக் கொள்ளும் எண்ணத்துடன் வாயைத் திறந்து, 'முயற்சிக் கிறேன்!' என்று கூறுவதற்கு முற்பட்டான், உதயன்.

அப்போது —

பணியாள் ஒருவன் வந்து அவசரமாக உதயனின் செவிகளில் ஏதோ கிசுகிசுத்தான்.

"தலைக்கு மேல் வெள்ளம் போய்விட்டது..! நான் தளபதி பதவியில் இருந்து நீக்கப்பட்டுவிட்டேன். எனக்குப் பதிலாகக் காம்போஜத்தில் இருந்து வந்திருக்கும் விருத்தமயன் பல்லவ தளபதியாக நியமிக்கப் பட்டுள்ளான்!" — உதயன் அமைதியாகக் கூறினான்.

ரேவா அதிர்ச்சியுடன் எழுந்து நின்றாள். மற்றவர்களும் 'ஆ..!' என்று கூக்குரல் இட்டனர்.

சதகரணி உதயனை வேதனையுடன் நோக்கினார்.

"என்னை அப்படி வேதனையுடன் நோக்காதீர், சதகரணி. காரணம் உங்கள் பதவியும் பறிக்கப்பட்டு விட்டது. உங்களுக்குப் பதிலாக ஷ்யமந்தகச் சிம்மவபு பல்லவத்தின் ராஜகுருவாக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆலவாயரே! நீங்களும் ஓய்வு எடுத்துக்கொள்ளலாம். உங்கள் தண்டநாயகர் பதவி கிரிராஜர் வசம் சென்று விட்டது..!" — உதயன் கூறினான்.

"எனது அரசி பதவி இருக்கிறதா அல்லது சுரஞ் சனாவுக்கு அளித்துவிட்டாரா, மன்னர்?" —ரேவாதேவி கேட்க, அவளைத் திகைப்புடன் நோக்கினான், உதயன்.

"வேலியினில் ஓடிய ஓணானை மடியில் கட்டிக் கொண்டதற்கு நாம் இன்னும் எவ்வளவு அனுபவிக்கப் போகிறோமோ?" — சதகரணி புலம்பினார்.

# 23. திசை மாறிய அத்தி!

காஞ்சியில் ஒருவித மயான அமைதி நிலவிக் கொண்டிருந்தது. ஏதோ ஒரு விபரீதத்தை மன்னர் நந்திவர்மன் அரங்கேற்ற இருக்கின்றான் என்று பலரது உள்ளுணர்வும் எச்சரித்துக் கொண்டிருந்தது. அத்தி மலைத்தேவனின் தேவ உடும்பர மேனி காணாமல் போனதால் காஞ்சிக்கு அடுக்கடுக்கான சோதனைகள் என்று சான்றோர்கள் பலர் நினைத்துக்கொண்டிருந்த காலம் உண்டு. சிம்மவர்மனின் ஆட்சிக்காலத்தில் காணாமல் போன பிரதிமை மீண்டும் நரசிம்மவர் மனால் கண்டெடுக்கப்பட்டபோது, அப்போது பரபரப்பு தோன்றியது உண்மை. புதிய தலைமுறையினர் கூட, தாங்கள் காணாத அத்திமலைத்தேவனின் பிரதிமையைக் காண்பதற்காக ஆவலுடன் குணம்குன்றம் சென்றனர்.

ஆனால் மகாமல்லன் நரசிம்மவர்மனின் ஆட்சியில், அவனது பிடிவாதத்தால் மல்லையில் ஜலசயன பெருமாளாக நிறுவப்பட்டு, பிறகு ஆழிப்பேரலையில் சிக்கி, நீருக்குள் பிரதிமை சென்றதும், தலைமுறைகள் மாறி வர, காணாமல் போன பிரதிமையை எண்ணி துயருற்றவர்கள் அந்தத் துயரத்துடனே மறைந்து போக, அந்தப் பிரதிமையின் பெருமைகளை அறியாத புதிய தலைமுறையினர், ஸ்ரீவரத்து அத்திவரதப் பெருமாளையே உண்மையான அத்திவரதனாக நினைக்க, தேவ உடும்பர மேனியைப் பற்றி அறிந்தவர்களும், அதைப் பற்றிச் சிறிது சிறிதாக மறக்கத் துவங்கினர்.

மக்களின் மறதிதானே அரசியலில் இருப்பவர்களுக்கு மூலதனம்..?

இந்த மறதியை பிரயோகப்படுத்திதான், சிம்மவபு எப்படியாவது தேவ உடும்பர அத்திமலைத்தேவனின் சிலையைக் கண்டுபிடித்து காம்போஜத்திற்கு எடுத்துச் சென்றுவிட வேண்டும் என்கிற எண்ணத்தில் இருந்தார்.

அந்த எண்ணத்தை நிறைவேற்றத்தான், காம்போஜத்தி லிருந்து வந்திருந்த குழாம், மன்னன் நந்திவர்மனைச் சுற்றி வளையம் ஒன்றை அமைத்து, பல்லவர்கள் அதனுள் நுழையாமல் பார்த்துக் கொண்டது.

உதயசந்திரனை நந்திவர்மன் புறக்கணித்தபோது தங்களுக்கு அது அனுகூலமாக இருக்க, பலரும் அவனைக் கண்டுகொள்ளாமல் இருந்தனர். ஆனால் காம்போஜத்திலிருந்து ஆலோசனைக் குழாம் வந்ததும், பல்லவத்தைச் சேர்ந்த அனைவரும் ஒதுக்கப்பட, அனைவரும் வில்வலம் ஓடிச்சென்று உதயசந்திரனிடம் புலம்பினார்கள்.

"ஒத்தாடை அரண்மனை முழுவதும் இப்போது சிம்மவபு மற்றும் விருத்தமயனின் ஆதிக்கத்தில் உள்ளது. எங்களை உள்ளே நுழையவே விடுவதில்லை. மன்னர் எங்களைச் சந்திக்க மறுக்கிறார், உதயசந்திரரே!" — தண்டநாயகர் ஆலவாயர், சதகரணி உட்பட அனைவரும் வில்வலம் வந்து புலம்பினார்கள்.

இதே ஆலவாயர், ஒருமுறை மன்னரைச் சந்திக்க உதயசந்திரன் சென்றபோது, "மன்னர் தற்போது தங்களைச் சந்திக்கும் நிலையில் இல்லை. பின்னர் நான் சொல்லி அனுப்புகிறேன். அப்போது வாருங்கள்!" என்று உதயசந்திரனிடம் கூறியவர்தான்.

'உங்களுக்கு இது தேவைதானா..! என்னை இவ்வளவு நாட்கள் அலட்சியம்தானே செய்தீர்கள்..' என்று அப்போதும் கேட்கவில்லை, உதயசந்திரன். அவனுடைய சாத்வீகம் அத்தகையது. அவர்களுக்கு ஆறுதல் கூறி அனுப்பினான்.

*விரைவில், தலைமை அமைச்சர் என்கிற புதிய பதவியில் கிரிராஜர் அமர்த்தப்பட, விருத்தமயன் புதிய தளபதியாகப் பொறுப்பேற்றுக்கொண்டான். அனைத்தையும்விட, இராஜகுருவாகப் பதவியேற்ற ஷ்யமந்தகச் சிம்மவபுவுக்கு அத்திமலை ஆலயத்தை நிர்வகிக்கும் தலைமைப் பொறுப்பையும் கொடுத்தான்.*

*"பல்லவர்கள் தோன்றுவதற்கு முன்பாகச் சதவாகன காலத்தில் இருந்து சதகரணி வம்சத்தினர்தான் ஆலய நிர்வாகத்தைக் கவனித்து வருகின்றனர். எங்கிருந்தோ வந்தவர்கள், நமது ஆலயத்தை நிர்வகிக்கிறதா?" — சதகரணி வேதனை தாளாமல் உதயசந்திரனிடம் கதறினார்.*

*அத்திமலை ஆலயத்தின் நிர்வாகம் கைக்கு வந்ததுமே, சிம்மவபு நேராக ஆலயத்திற்குச் சென்றார்.*

*"அத்தங்கி! தேவராஜன் காஞ்சியில் அவதரித்தவன் என்றாலும், பல்லவர்கள் மற்றும் காம்போஜர்கள் இருவருக்குமே அவனிடம் சம உரிமை உண்டு. தற்போது ஆராதனை செய்யப்படும் பாஞ்சராத்த மற்றும், வைகானச ஆகமங்களோடு தேவராஜ மார்க்கத்தின் விஷ்வநாத ஆகமங்களையும் சேர்க்க வேண்டும்" என்று கட்டளையிட, தலைமைப் பட்டர் சுதர்ஷன அத்தங்கி பதறிப் போனார்.*

*"சதவாகன காலத்திற்கு முன்பாகவே அத்தியூர் என்று மிகவும் பிரசித்தி பெற்றிருந்தது இந்த ஆலயம். அப்போது நடைமுறையில் இருந்த ஆகமங்களின்படிதான் இன்று வரை ஆராதனைகள் நடைபெறுகின்றன. எனவே ஆகமங்களை மாற்றுவதற்கு இடமில்லை. அப்படி மாற்றினாலும், தேவராஜன் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டான்..!" — சுதர்ஷன அத்தங்கி கூறியதும், அவரை உக்கிரத்துடன் உறுத்துப் பார்த்தார், சிம்மவபு.*

*"ஆஹா! நன்றாகத் தெரிகிறதே, உங்கள் ஆராதனைகளின் இலட்சணம். கிரமமும், நியமமும் தங்களிடம்*

இல்லாத காரணத்தால்தான் தேவராஜன் அத்திகிரியை விட்டுப் புறப்பட்டுச் சென்றுவிட்டான். உங்கள் ஆராதனைகளில் அவனது திருவுள்ளம் உகந்திருந்தால், அவன் அத்திமலையைவிட்டு அகன்றிருப்பானா? அவன் மாற்றத்தை விரும்புவதால்தான், பல்லவர்களுக்கு வாரிசு இல்லாமல் செய்து, எங்கள் காம்போஜத்தின் குருதியை பல்லவ மன்னனாக அரியணை ஏற்றியுள்ளான். காம்போஜ மன்னனை ஏற்பீர்கள். எங்கள் ஆகமங்களை ஏற்கமாட்டீர்களா?" — என்று கர்ஜிக்க, அத்தங்கி வாயடைத்துப் போனார். அன்று மதியம் ஆலயம் சாற்றப் பட்டவுடன், காஸ்யப சதகரணியின் மாளிகைக்குச் சென்று சிம்மவபுவின் கோரிக்கையைப் பற்றிக் கூறி குறைபட, அவர் அத்தங்கியையும் அழைத்துக்கொண்டு வில்வலம் சென்றார்.

"முன்பாவது தளபதியாக இருந்தேன். உரிமையுடன் உங்களுக்கு ஆலோசனைகள் கூறி வந்தேன். இப்போது நானும் பல்லவத்தின் ஒரு சாதாரண பிரஜை. என்னால் என்ன செய்ய முடியும்?" — விரக்தியுடன் கூறினான், உதயன்.

"நாளையே விஷ்வநாத ஆகமங்களைத் தேவராஜ ஆலயத்தின் வழிபாட்டு முறையில் சேர்க்க வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறார், சிம்மவபு. நான் என்ன செய்வேன்?" அத்தங்கி புலம்பினார்.

"மன்னரிடம் கூறினீர்களா?" — உதயன் கேட்டான்.

"மன்னர் என்னைச் சந்திக்க மறுத்துவிட்டார், உதயசந்திரரே!" — காஸ்யப சதகரணி சோகத்துடன் கூறினார்.

நல்லவேளையாக, மறுநாள் நந்திவர்மனின் மனதை திசைதிருப்பும் செய்தி ஒன்று மதுரையிலிருந்து காஞ்சிக்கு வந்தது. சிம்மவபுவின் ஆலோசனைப்படி அத்திமலை ஆலய ஆகமங்களில் விஷ்வநாத ஆகமங்களையும் சேர்க்க வேண்டும் என்று தீவிரத்துடன் காணப்பட்ட நந்தி

வர்மனுக்குப் பாண்டிய மன்னன் மாறவர்மன் ராஜசிம்மன் மரணம் அடைந்த செய்தி வந்தது. அவனது மகன் ஜதிலன் பராந்தக நெடுஞ்செழியன் அரியணையில் அவசரமாக அமர்த்தப்பட்டான் என்கிற செய்தி வந்தது.

உடனே, அத்திமலை விவகாரத்தை விட்டுவிட்டு, அவசரமாக அவையைக் கூட்டினான்.

"இதுவே தக்க தருணம். பாண்டியர்களிடம் பழைய கணக்கை தீர்க்க வேண்டி உள்ளது. என்னை நந்திபுரத்தில் கொல்ல முயன்ற ஸ்ரீமாறனின் மகனை விரட்ட வேண்டும். நாம் பாண்டியர்களின் மீது போர் தொடுக்க வேண்டும்..!" — நந்திவர்மன் கூற, அவையில் அமர்ந்திருந்த பல்லவ சான்றோர்கள் திடுக்கிட்டனர்.

இப்போது எதற்காகப் பாண்டியர்களின் மீது போர் தொடுக்க வேண்டும்? அவனும் இப்போதுதான் பதவி ஏற்றுள்ளான். மேலும், காம்போஜ நாட்டில் இருந்து வந்த விருத்தமயனை தளபதியாக அமரவைத்துவிட்டு பாண்டியர்களின் மீது படை எடுத்தால், அவனால் என்ன செய்ய முடியும்? பல்லவத்தையே அவன் இன்னும் முழுவதுமாகக் கண்டறியவில்லையே? பாண்டியத்தைப் பற்றி அவனுக்கு என்ன தெரியும்?

உதயசந்திரன் தளபதியாக இருந்திருந்தால், இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டிய அவசியம் இருக்காது..? ஒருவரையொருவர் உறுத்துப் பார்த்தபடி அமைதி காத்தனர்.

தளபதி விருத்தமயன் எழுந்து வீராவேசமாகப் பேசினான். "இப்போதே நாம் போர் தொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். மேலும் கொடுங்களூர் சேரர்கள், கருவூர் சேரர்கள் மற்றும் தகடூர் மன்னன் ஆகியோர் நமக்கு ஆதரவை நல்கியியிருக்கும்போது, பாண்டியர் களால் என்ன செய்ய முடியும்? நமது படைகள் போருக்குத் தயார்!" — விருத்தமயன் கூறினான்.

*நந்திவர்மன் பாண்டியர்களின் மீது போர் அறிவித்தான். *வேம்பில் என்கிற பகுதியில் இரு படைகளும் மோதின.*

*விருத்தமயன் பாண்டியரின் போர்த்திறமைகளைக் குறைவாக மதிப்பிட்டிருந்தான். நியனம் பகுதியில் பாண்டியர் படைகளைச் சந்தித்த அவன், அவர்களது ஆவேசத் தாக்குதல்களைத் தாங்க இயலாமல் சுருண்டான். விரைவில் எளிதான வெற்றியை ஈட்டினர், பாண்டியர்கள். பதவியேற்றவுடன் போரில் பெற்ற வெற்றி, பராந்தக நெடுஞ்செழியனின் புகழை அவனது மக்களிடையே உயர்த்தியது.*

*பக்குவம் இல்லாத ஒரு வாலிபனை, மாபெரும் போர் வீரனாக மாற்றிவிட்டான், நந்திவர்மன் என்று பல்லவ பிரஜைகளே காஞ்சியில் கேலி செய்தனர்.*

*உதயசந்திரன் பல்லவத்தின் வீழ்ச்சியைக் கண்டு உறக்கம் வராமல் தவித்தான். பல்லவத்திற்கா இந்தக் கதி..? திறமை இல்லாதவர்களை, தனது காம்போஜ தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் மட்டுமே, தன்னைச் சுற்றி வைத்திருக்கும் நந்திவர்மனின் கண்களை யார் திறப்பது? தனக்குள் மறுகிக் கொண்டு வில்வலத்தில் நாட்களைக் கழித்து வந்தான்.*

*பாண்டியர்களிடம் தான் பெற்ற படுதோல்வியைத் திசை திருப்ப எண்ணிய, விருத்தனும், சிம்மவபுவும் நந்தி வர்மனிடம் புதிய கட்டுக்கதையை அவிழ்த்துவிட்டனர்.*

*காம்போஜமும் அதன் தலைநகரம் தருமநகரமும், எப்போதும் வளமும், பசுமையும் நிறைந்திருப்பதற்குக்*

---

* கி.பி.776-ல் வேம்பில் பகுதியில்- தற்போது கேரளாவில் சேர நாட்டில் கொடுங்களூர், கருவூர் மற்றும் பாண்டியம் தேசங்களின் எல்லையில் வேம்பிலி என்கிற இந்தப் பகுதியில், பல்லவர்களை ஆதரித்த சேரர்களை வென்றான், பாண்டியன். தஞ்சை அருகே நியனம் என்கிற பகுதியில் நந்திவர்மன் படைகளையும் முறியடித்தான், பாண்டியன்.

காரணமே, ஐராவத மலையின் மீது கோயில் கொண்டிருக்கும் தேவராஜன், சந்திர பாதையான மேற்கு நோக்கி நிற்கிறான். ஆனால், அத்திமலைத் தேவராஜன் சூரிய பாதையான கிழக்கை நோக்கி நிற்பதால்தான், நாட்டில் சுபிட்சம் இல்லை. சூரிய பாதையை நோக்கி நிற்பதால், நீர்நிலைகள் வற்றிவிடுகின்றன. பாலாறு ராஜசிம்ம பல்லவனின் ஆட்சியில் வற்றிப்போனது. மேலும் பல்லவ மன்னர்களின் வாழ்விலும் சோகங்கள், மரணங்கள். மன்னர்களும் நிலைக்காமல், காம்போஜத்தி லிருந்து நந்திவர்மனை மன்னனாக வரவழைத்திருக் கின்றனர். இந்த நிலை மாற வேண்டும் என்றால், சூரிய பாதையான கிழக்கை நோக்கி நிற்கும் அத்திமலைத் தேவராஜன் சந்திர பாதையான மேற்கை நோக்கி நிற்க வேண்டும். அப்போதுதான், நாட்டில் ஸ்திரத்தன்மை ஏற்படும், நதிகள் பெருகி ஓடும்; சுபிட்சம் பெருகும். போர்களில் வெற்றிபெற முடியும் என்று கூற, அவர்களது விளக்கத்தை ஏற்றான், நந்திவர்மன்.

தேவராஜன் ஸ்ரீதள மணி அணிந்த ஹஸ்த நட்சத்திர தினங்களில் எல்லாம் தங்கள் நாட்டில் நிலநடுக்கங்கள் ஏற்பட்டன என்று நம்பிய காம்போஜர்கள், மிகச் சாமர்த்தியமாக அத்திமலைத் தேவராஜனை திசை மாற்றும் எண்ணத்தைச் செயல்படுத்த துவங்கினர். காம்போஜம் காஞ்சியின் நேர்கோட்டில் இருப்பதாகத் தேவராஜ மார்க்கத்தின் நூல்கள் கூறியிருந்தது அவர் களிடையே இப்படி ஒரு நம்பிக்கையைத் தோற்று வித்திருந்தது போலும்.

அவர்களது விளக்கத்தைச் சற்றும் சிந்திக்காமல் அப்படியே ஏற்றான், நந்திவர்மன்.

ஒருவேளை அவர்கள் கூறியது போன்று செய்தால், நந்திவர்ம பல்லவனான தனக்கும் புகழ் உண்டாகும் என்று நினைத்துவிட்டான், போலும்.

"அத்திமலைத் தேவராஜன் மட்டுமில்லை. காஞ்சியில் உள்ள அத்தனை ஆலயங்களையும் சூரிய பாதையான கிழக்கில் இருந்து சந்திர பாதையான மேற்கை நோக்கித் திருப்பி வைக்கப்படும்!" என்று அறிவித்தான்.

பல்லவமே பதறியது. மன்னனுக்குச் சிந்தை கலங்கி விட்டதா என்ன? பிரம்மன் அஸ்வமேத யக்னம் செய்து, விஸ்வகர்மா, தேவேந்திரன், குபேரன் என்று தேவர்களால் எழுப்பப்பட்ட ஆலயம். சூரியன்தானே அனைத்துக்கும் மையத்தில் இருக்கிறான். அவன் பாதையைத்தானே ஆகமங்கள் ரீதியாக எழுப்பப்படும் ஆலயங்கள் நோக்க வேண்டும். இதென்ன புதுக்கதையை அவிழ்த்துவிடுகின்றார் சிம்மவபு?

சதகரணி நந்திவர்மனை சற்றே துணிவுடன் நோக்கினார்.

"நமது முறைப்படி ஆலயம் கிழக்கு நோக்கித்தான் இருக்க வேண்டும். அஸ்வத்தாமா காலத்திலிருந்து ஆலயம் கிழக்கு நோக்கித்தான் நின்றிருக்கிறது. நாம் எதற்காக ஆலயம் நோக்கும் திசையை மாற்ற வேண்டும். அவனிசிம்மன், மகேந்திரன், நரசிம்ம பல்லவன் போன்ற மன்னர்கள் மாபெரும் வெற்றியை ஈட்டியுள்ளனர். அப்போதெல்லாம் ஆலயம் கிழக்கு நோக்கித்தானே நின்றது." சதகரணி கூறினார்.

"சுவாமி! நீர் யாகம் செய்வதானால் எந்த திசையை நோக்கிச் செய்வீர்?" — சிம்மவபு கேட்டார்.

"கிழக்கு நோக்கித்தான் அமர்ந்து செய்வேன்!" — சதகரணி கூறினார்.

"கிழக்கு நோக்கி நீர் அமர்ந்து யாகம் செய்தால், ஓமகுண்டம் கிழக்கு நோக்கித்தானே இருக்க வேண்டும். ஹோமகுண்டத்தில் இருந்து தோன்றிய தேவராஜன் அப்படியென்றால் பிரம்மனை நோக்கி மேற்கு திக்கை நோக்கித்தானே நின்றிருப்பான்." — சதகரணி கூறினார்.

"அப்படிக் கூறுவது தவறு! குணதிசைதான் அனைத்துக்கும் துவக்கம். சூரியனின் பாதை அதுதான். அந்தப் பாதையில்தான் அவனது தேர்க்கால் தனது பயணத்தைத் துவக்குகிறது. நீங்கள் கூறும் சந்திரனே சூரிய பாதையைப் பார்த்து அதன் ஒளியைப்பெற வேண்டும் என்பதற்காகத்தான் மேற்கு பக்கம் நிற்கிறான்..! இம்மாதிரி காரணங்களைக் கூறி நமது ஆதிகால வழக்கங்களை, சம்பிரதாயங்களை, கோட்பாடுகளை மாற்றக் கூடாது. இயற்கை மாறும். ஆற்றில் சில வருடங்கள் நீர் ஓடலாம், சில வருடங்கள் வற்றி இருக்கலாம், அரசியலும் மாறும். சில போர்களில் வெற்றி பெறலாம். சிலவற்றில் தோல்வி அடையலாம். அதற்காக ஆலய வடிவை மாற்றக்கூடாது!" — உறுதியுடன் கூறினார், சதகரணி.

"அதற்காக ஆலயத்தின் திசையை மாற்றி, தேவ ராஜனின் கோபத்திற்கு இலக்காக வேண்டாம். அரசியல் ஆலய விவகாரங்களில் தலையிடக் கூடாது. பிறகு அரசியல் செய்வதற்குத் தேசமே இல்லாமல் போய்விடும்" என்ற சதகரணியைச் சிம்மவபு ஆவேசத்துடன் நோக்கினார்.

அப்போது யாரும் எதிர்பாராதவிதமாக உதயசந்திரன் கொலுமண்டபத்தினுள் பிரவேசித்தான். அவனது வரவை யாரும் அந்தச் சமயத்தில் எதிர்பார்த்திருக்கவில்லை என்பது அவர்களது முகங்களிலேயே தெரிந்தது.

உதயசந்திரன் வந்து நின்றதும், நந்திவர்மனின் கண்கள் தானாகத் தாழ்ந்தன. உதயசந்திரனைக் காணும்போதெல்லாம், இவன்தான் பல்லவ மன்னனாக இருக்கத் தகுதி கொண்டவன். தானவர்மன் வழியில் தோன்றியிருந்ததால் மட்டுமே தான் அரியணையை அலங்கரித்துக் கொண்டிருக்கிறேன் என்னும் அந்தத் தாழ்வு மனப்பான்மை தோன்ற, அவனைக் காண்பதை தவிர்த்தான். அவையில் இருந்த சதகரணி உட்படப் பல்லவர்கள் துணிவு கொண்டனர்.

பல வருடங்களுக்குப் பிறகு, நந்திவர்மனும், அவனும் சந்திக்கின்றனர்.

நேரடியாக விஷயத்துக்கு வந்தான், உதயசந்திரன்.

"பல்லவ மன்னரே! விபரீத பரிட்சைகள் வேண்டாம். ஆட்சி செய்வதில் கவனத்தைச் செலுத்துங்கள். உங்களைத் தேடிக் கண்டெடுத்துப் பல்லவ அரியணையில் அமர்த்தியதற்கு, பல்லவத்திற்குப் பெருமைகளைத் தேடித் தாருங்கள். பல்லவத்தின் பெருமைகளை, காஞ்சியின் தொன்மையை அறியாது, காம்போஜத்தில் இருந்து வந்திருக்கும் புதியவர்களின் ஆலோசனை ஏற்றுப் புராணங்களையும், சரித்திரங் களையும் மாற்றாதீர்கள். 'நகரேஷு காஞ்சி' என்று பாரவியே கூறி உள்ளார். காம்போஜம் பிறப்பதற்கு முன்பே அத்திகிரி பேரருளாளனின் ஆலயம் இங்கே இருந்திருக்கிறது. இந்நிலையில் நீங்கள் இந்த ஆலயத்தின் திசையை மாற்றி வைக்கப் போவதாகக் கூறுவது அறிவிலித்தனம். தயை கூர்ந்து இம்மாதிரியான ஆர்ப்பாட்ட அரசியலை நிறுத்திவிட்டு, தங்களை இங்கே அழைத்து வந்து மன்னராக அமர்த்தியதற்காக நல்ல பலன்களை மக்களுக்குத் தாருங்கள். மக்கள் அவற்றைத் தான் எதிர்பார்க்கிறார்கள். அழிவுப் பாதையில்தான் பல்லவம் செல்ல வேண்டும் என்றால் பரமேஸ்வர மன்னர் இறந்து போனதும், பாண்டியர்களிடமே நாங்கள் அடிமையாக ஆகியிருப்போம் அல்லவா! அழிவுப் பாதையில் இட்டுச் செல்ல, காம்போஜத்தில் இருந்து தாங்கள் வந்திருக்க வேண்டிய அவசியம் இல்லையே..!"

நந்திவர்மன் வாயடைத்துப் போனான். உதய சந்திரனின் பேச்சைக் கேட்டதும், அவையில் இருந்த பல்லவ சான்றோர்கள் உரத்தக் குரலை எழுப்பி, அத்தி மலை ஆலயத்தை மேற்கு நோக்கித் திருப்பி வைக்கும் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கத் துவங்கினர். தனது உரையை முடித்துவிட்டு, மேலே எதுவும் பேசாமல்,

கொலுமண்டபத்தைவிட்டு வெளியேறி, வில்வலம் சென்றுவிட்டான், உதயன்.

அரண்மனை கொலுமண்டபத்தில் எழுந்த கூக்குரல் மெதுவாக அரண்மனை வளாகத்தில் பரவி, ஒத்தாடை, தருமநகரம், மாலிருஞ்சோலை, அத்தியூர், முக்கூடல் என்று பரவியது. பல்லவம் முழுவதும் காஞ்சிக்காகக் குரல் கொடுக்க, காம்போஜர்கள் திகைத்து நின்றார்கள்.

காஞ்சி நகரம் முழுவதும், உதயசந்திரன் கொலு மண்டபத்தில் ஆற்றிய உரையைப் பற்றித்தான் பேச்சு. உதயசந்திரன், காம்போஜர்களை விரட்டுவதற்குப் பிரயத் தனங்களைத் துவக்கிவிட்டான்; விரைவில் நந்திவர்மனை தனது கைப்பிடிக்குள் கொண்டு வந்து விடுவான் — என்றெல்லாம் மக்கள் பேசிக்கொண்டிருக்க,

உதயசந்திரன் உள்ளவரை தங்களது காம்போஜ களியாட்டத்தை அரங்கேற்ற காஞ்சியில் மேடை கிடையாது என்பதைப் புரிந்து கொண்டு நந்திவர்மனை குழப்பினார்கள்.

"வில்வலத்தில் உதயசந்திரன் படை திரட்டி வருகிறான். காஞ்சிக்குப் படை எடுத்து வந்து, நந்திவர்மனைக் கொன்று, காம்போஜர்களை விரட்டி, பல்லவ அரியணையைக் குறிவைக்கிறான்!" என்று விஷ விதையை அவனது மனதில் விதைத்தனர்.

புரட்சியைத் தோற்றுவிக்க முயலும் உதயசந்திரனை முளையிலேயே கிள்ளி எறிய நினைத்தான், நந்திவர்மன்.

"உதயசந்திரனை கைது செய்யுங்கள்!" — விருத்தனிடம் கட்டளையிட, அவன் தனது படையினரோடு வில்வலம் சென்றான்.

உதயசந்திரன் கைது செய்யப்பட்டுக் காஞ்சிக்கு அழைத்து வரப்பட, வில்வல மக்கள் வழியெங்கும் அவன் பின்பாகத் திரண்டு ஒத்தாடை அரண்மனைக்கு வந்தனர். காஞ்சி மக்கள் ஏற்கனவே உதயசந்திரனைக்

காண்பதற்காக ஒத்தாடை அரண்மனை வளாகத்தில் திரண்டிருந்தனர்.

உப்பரிகையில் இருந்து அரண்மனை முன்பாகத் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தைக் கண்டு அதிர்ந்து போனான், நந்திவர்மன். மக்களின் மனம் பாலாறு போன்று வறண்டிருக்க, தான் உதயசந்திரனைக் கொன்றால், பாலாறு பொங்கி முக்கூடல் கடிகையை அழித்தது போன்று, பல்லவர்களின் நாட்டுப்பற்று பாலாறாகப் பெருகி, காம்போஜத்தையே அழித்துவிடும் என்பதை உணர்ந்தான்.

ஆனாலும், தனது மீசையில் மண் ஒட்டாதவகையில் உதயசந்திரனை கொலுமண்டபத்தில் நிறுத்தி, அவனுக்குத் தண்டனை வழங்கினான்.

"உதயசந்திரரே! நாட்டில் கலவரம் உண்டு பண்ணும் நீங்கள் இனி வில்வலம் மட்டுமல்ல, பல்லவத்திலேயே இருக்கக்கூடாது. தங்களை நாடு கடத்துகிறேன்" என்று அறிவித்த நந்திவர்மன், உதயசந்திரனை பல்லவத்தின் எல்லையில் விட்டு வருமாறு கட்டளையிட்டான்.

"எங்கள் ஆணையை மீறி நீர் பல்லவத்தில் கால் வைத்தால், உங்கள் தலை வாங்கப்படும்!" — விருத்த மயன் கூறியபடி உதயசந்திரனையும், பீயுஷமணியையும் பல்லவத்தின் எல்லையில் விட்டனர். அங்கிருந்து கால்கள் போன வழியே நடந்தனர், உதயசந்திரனும், பீயுஷமணியும். பீயுஷமணியின் கரங்களில் அவர்களது ஒரே செல்வன் இதயசந்திரன் உறங்கிக்கொண்டிருந்தான்..

காம்போஜர்களின் வெகு நாளைய கனவு நிறைவேறியது. கிழக்கு நோக்கி நின்றிருந்த ஆலயங்கள் எல்லாமே *மேற்கு நோக்கி சந்திர பாதையில் திருப்பி

* காஞ்சியில், காம்போஜ தேவராஜ மார்க்கத்தின் அடிப்படையில் அனைத்து கோயில்களும் மேற்கு நோக்கி திருப்பி வைக்கப்பட்டன. ஆனால் நந்திவர்மன் காலத்திற்குப் பிறகு காம்போஜர் செல்வாக்கு வீழ்ந்தபிறகு கட்டப்பட்ட பாண்டவ

*அமைக்கப்பட்டன. இனி காஞ்சியில் அமைக்கப்படும் கோயில்கள் எல்லாமே மேற்கு நோக்கித்தான் நிற்க வேண்டும் என்கிற உத்தரவினைப் பிறப்பித்தான் நந்திவர்மன்.*

*அத்தியூர் மக்கள் சோகத்தில் ஆழ்ந்தார்கள்.*

*ஏற்கனவே அத்திமலையானின் தேவ உடும்பர மேனி காணாமல் போனது என்கிற வருத்தத்தில் இருந்த அத்தியூர் வாசிகளுக்கு, இனி ஆலயம் மேற்கு நோக்கித்தான் நிற்கும் என்கிற ராஜ உத்தரவு பெரும் சோகத்தினை உண்டாக்கியது.*

*'சரஸ்வதியே வேகவதி ரூபத்தில் தென்மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி யாகத்தைக் கலைக்க பாய்ந்து வருகிறாள். கிழக்கில்தான் முக்கூடலில் சங்கமமாகிறாள். கிழக்குதானே, சூரிய திசை..! குணதிசையில்தானே அனைத்துமே துவங்குகிறது. கோயிலை மேற்கு நோக்கி திருப்புவதால் என்ன அனர்த்தங்கள் நேருமோ!' என்று கலங்கினர், அத்தியூர் வாசிகள்.*

---

தூதர் ஆலயம் கிழக்கு நோக்கித்தான் அமைக்கப்பட்டது. நந்திவர்மன் காலத்தில் தேவராஜ மார்க்கக் கோட்பாடுகளைப் பல ஆலயங்களில் அவர்கள் திணித்தனர். தென்னாட்டு வைணவர்களுடன் அவர்கள் கலவாமல் தங்களது தேவராஜ மார்க்கத்தின் தனித்தன்மையை நிலைநாட்டினார்கள். அப்போது திவ்ய பிரபந்தங்களும் புகழ் அடையாத நிலை.

முதலாழ்வார்கள் மற்றும் சிவசஸ்கந்தவர்மன் ஆட்சிக் காலத்தில் திருமழிசை ஆழ்வாரும் பல பிரபந்தங்களை இயற்றி இருந்தாலும் அவை பிரபந்தங்களாகத் தொகுக்கப்படவில்லை. குடந்தையில் தங்கியிருந்த திருமழிசை ஆழ்வார் என்கிற பக்தி சாகரர், தனது பாடல் சுவடிகளைக் காவிரியில் விட்டெறிய, அவரது சீடர்கள் நீந்திச் சென்று மீட்டுவந்த பாடல்கள் மட்டுமே, இப்போது கிடைத்துள்ள அவரது பாடல்கள்.

'ஆராவமுதே அடியேன்' என்கிற பாசுரத்தை செவியுற்று, வீர நாராயணப்புரத்து நாதமுனி என்னும் ஆசாரியர், பிரபந்தங் களைத் தேடித் திரட்டி ராகமிட்டுத் தொகுத்ததுதான், இன்றைய நாலாயிர திவ்விய பிரபந்தம்.

நாட்டில் ஆங்காங்கே கலவரங்கள் வெடிக்க ஆரம்பித்தன. வைணவர்கள், சைவர்கள், சாக்தர்கள் என்று அனைவரும் கைகோர்த்து நந்திவர்மனின் இந்த அறிவிப்பை எதிர்க்க, அவர்களை அடக்க முடியாமல் நந்திவர்மன் திணறினான்.

ஆட்சியே ஸ்தம்பித்து நிற்க, அர்ச்சகர்களும் போராட்டத்தில் இறங்க, வேறு வழியின்றி நந்திவர்மன் ஒரு சமரச திட்டத்தை உருவாக்கினான். அதன்படி ஆலயத்தின் மூல சிலைகள் மட்டுமே மாற்றப்படும் என்றும் தாயார், அம்பாள் மற்றும் இதர துணை சந்நிதிகளில் மூர்த்தங்கள் திசை மாற்றப்படாது என்றும் அறிவித்தான்.

சிம்மவபு அத்திமலை ஆலயத்தின் மாற்றங்களைத் தானே முன்னின்று மேற்பார்வையிட்டார். வழக்கமாக அனைவரும் நுழைந்த கிழக்கு வாசல் மூடப்பட்டது. அதைவிட மேற்கு திசையில் இருந்த சிறிய பின்வாயிலை பெரிதாக்கி அதனையே மூல நுழைவாயிலாக மாற்றி அமைத்தார். ஆலயத்தின் மேற்குப்புறமாக இருந்த நந்தவனம் அழிக்கப்பட்டு, பிரம்மாண்ட நுழைவாயில் அமைக்கப்பட்டது. கிழக்கு நோக்கி நின்ற பெருமாள் நந்திவர்மன் ஆட்சிக் காலத்தில் மேற்கு நோக்கித் திரும்பி நின்றார். அதுவரை சூரிய பாதையான கிழக்கை நோக்கி நின்ற அத்திகிரி வரதர், இப்போது சந்திர பாதையான மேற்கு நோக்கி நின்றார். ஆலய ஆகமங்களும் சிறிது சிறிதாக மாறத்துவங்கின. காம்போஜத்திலிருந்து வந்த தேவராஜ மார்க்கத்தினர் வசம் ஆலயம் சிறிது சிறிதாகச் செல்லத் துவங்கியது.

கி.பி. 781 —

தனது ஆட்சிக் காலம் முழுவதும் தவறுகளுக்கு மேலே தவறுகள் செய்த நந்திவர்மனுக்குப் பெரிய தண்டனை யாகத் திகழ்ந்தது, பெண்ணாற்றங்கரையில் நடந்த போர். படையெடுத்து வந்த பாண்டியன் ஜடில பராந்தக

நெடுஞ்செழியன், பல்லவத்தின் பெரும்பகுதிகளைப் பிடித்துக்கொண்டான்.

நிலைகுலைந்து போன நந்திவர்மனுக்கு மற்றொரு பேரிடி காத்திருந்தது.

தனது நாட்டில் பல குழப்பங்களை வைத்துக்கொண்டு அயல் நாடுகளின் பிரச்னைகளில் மூக்கினை நுழைத்தான், நந்திவர்மன். கங்க நாட்டின் மன்னன் இறையப்பாவுக்கு எதிராக அவனது சகோதரன் கங்கன் சிவமாறனுக்கு ஆதரவு அளித்து அவனை அரியணையில் அமர்த்தினான். குந்தள அரசன் கோவிந்தனும் இதற்கு ஆதரவினை நல்கினான். சிவமாறன் கங்க அரியணை ஏறிய மறு வருடம், ஒரு திருப்பம் நிகழ்ந்தது.

நந்திவர்மனின் நண்பனான குந்தள அரசன் கோவிந்தனை பதவியில் இருந்து இறக்கி, அவன் தம்பி நிருபமதுருவன் பதவி ஏற்றான்.

"அண்ணனை வீழ்த்தி தம்பி அரியணை ஏறுவது நியாயம் இல்லை!" — செய்தி அனுப்பினான், நந்திவர்மன்.

"கங்க நாட்டு சிவமாறனுக்கு ஒரு நியாயம், எனக்கு ஒரு நியாயமா?" என்று கோபத்துடன் கேட்டான், துருவன்.

பல்லவப் படைகளைக் கோவிந்தனுக்கு ஆதரவாக அனுப்பினான் நந்திவர்மன். அந்தப் படைகளை வீழ்த்தி குந்தள அரியணை ஏறிய துருவன், நந்திவர்மனை தண்டிக்க எண்ணி, காஞ்சியின் மீது படையெடுத்து வந்து, பல்லவத்தின் பகுதிகளைக் கைப்பற்றினான்.*

பாண்டியன் பராந்தக நெடுஞ்செழியனும், குந்தள நிருபமதுருவனும், பல்லவத்தைக் கூறுபோட, காஞ்சியும் அதனைச் சுற்றி உள்ள பகுதிகள் என்று நந்திவர்மனின் ஆட்சி சுருங்கியது. பல்லவத்தின் எல்லைக்குள் காலடி

*வைத்தால் தலைவாங்கப்படும் என்று உதயசந்திரனுக்கு எச்சரிக்கை விடப்பட்டிருந்தது. ஆனால் வில்வலமே, உதயசந்திரன் இல்லாத பல்லவத்தில் தான் இருக்கப் போவதில்லை என்பது போன்று, பல்லவத்தின் கைகளைவிட்டு நழுவியது.*

*எல்லாப் பக்கங்களிலும் தோல்வி. மக்களின் ஆதரவும் அடியோடு இல்லை. காம்போஜத்தில் இருந்து பாலகனாக வந்து மக்களின் அபிமானத்தைச் சம்பாதித்துப் பெரும் கீர்த்தியை அடைந்திருக்கலாம், நந்திவர்மன். ஆனால் மக்களால் மிகவும் விரும்பப்பட்டவன் ஜெயவர்மன் என்றால், மிகவும் வெறுக்கப்பட்டவன் நந்திவர்மனாகத்தான் இருக்க வேண்டும்.*

*அதை அவன் உணர்ந்தபோது காலம் கடந்துவிட்டது. தனது மகன் தந்திவர்மனுக்குப் பட்டத்தைச் சூட்டி விட்டு, வைணவத்தில் ஆழ்ந்தான் நந்திவர்மன். உதய சந்திரனைச் சந்தித்து சமரசம் செய்து கொண்டால், இழந்த கீர்த்தியைப் பெறலாம் என்று ரேவாதேவி மன்றாடியும் கேட்கவில்லை. இறுதிவரை அவன் உதயசந்திரனைச் சந்திக்கவே இல்லை.*

*பெரும் போரில் ஏற்பட்ட தோல்விகள், மக்களிடையே நிலவும் வெறுப்பு என்று அனைத்து வகையிலும் தனது எதிர்பார்ப்புகள் பலிதம் ஆகாத நிலையில் மரணப்படுக்கையில் விழுந்தான், நந்திவர்மன்.*

*பொதுவாக மரணப்படுக்கையில் விழுந்தவர்களுக்கு, அண்மைக்காலத்தில் தாங்கள் பழகிய மனிதர்களுடன்*

---

*** கி.பி. 778-ல் பல்லவ நந்திவர்மன், குந்தள கோவிந்தன், இருவரும் சேர்ந்து சிவமாறனை கங்க நாட்டு அரியணையில் அமர்த்தினர். ஆனால் அடுத்த வருடமே கோவிந்தனின் சகோதரன், நிருபமதுருவன் தனது சகோதரனை கவிழ்த்தி குந்தள அரியணையை கைப்பற்றிக் கொண்டான். அந்தக் கையோடு அண்ணன் கோவிந்தனை ஆதரித்த நந்திவர்மனின் மீது படையெடுத்து வந்து பல்லவத்தின் பெரும்பகுதியை கைப்பற்றிக் கொண்டான்.**

தொடர்புகள் அறுந்து, தங்கள் பெற்றோர், உடன்பிறந்த சகோதரர்கள், பால்ய நண்பர்கள், சிறு வயதில் வளர்ந்த பகுதிகள் குறித்த நினைவுகளே அதிகம் இருக்கும். தனது தாய் வந்து அழைப்பது போன்று காட்சிகள் தோன்றும். இறுதியில் மரணம் அடைவதற்கு ஒரு நாள் முன்பாக மீண்டும் நினைவு வந்து அப்போதைய மனிதர்களிடம் தொடர்பு கொள்வார்கள். மனைவி, மகன், மகள் என்று அன்று முழுவதும் அவர்களுடன் பேசிவிட்டு, மரணத்தைத் தழுவுவார்கள். கடைசி நாளில் தோன்றும் தெளிவினை போக்குத் தெளிவு என்று சொல்வார்கள்.

அவ்வகையில், மரணப்படுக்கையில் கிடந்த நந்தி வர்மன் மயக்க நிலையில் தாய், தந்தை, சகோதரர்கள், காம்போஜத்தின் ஐராவத மலை போன்ற நினைவு களிலேயே கிடந்தான்.

இனி மன்னர் மீளமாட்டார் என்று மருத்துவர் தனது உதட்டைப் பிதுக்கி ரேவாதேவியைப் பார்த்த போது, சடாரென்று கண்களைத் திறந்தான், நந்திவர்மன். மன்னருக்குப் போக்குத்தெளிவு ஏற்பட்டுவிட்டது என்பதைப் புரிந்து கொண்ட மருத்துவர், பிரதானிகளைப் பார்த்து தலையசைத்தார்.

நந்திவர்மன் ரேவாதேவியையும், மகன் தந்திவர் மனையும் ஒருமுறை வாஞ்சையுடன் நோக்கினான். பிறகு சுற்றி நின்ற மந்திரி பிரதானிகளைப் பார்த்தான்.

"நான் காம்போஜ இளவரசனாகத் தருமநகரத்திலேயே இருந்திருந்தால், மன்னனாகத் திகழ்ந்திருக்கமாட்டேன். ஆனால் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தோம் என்கிற மனநிறை வுடன் மரணம் அடைந்திருப்பேன். எதற்காக என்னைக் காஞ்சிக்கு அழைத்து வந்தீர்கள்? இங்கே மன்னனாக நான் சாதித்தது என்ன? உங்கள் உதயசந்திரனையே நீங்கள் மன்னனாக அரியணையில் அமர்த்தியிருந்தால், காஞ்சியும் கீர்த்தியுடன் இருந்திருக்கும். இப்படித் தனது பெரும்பகுதிகளைப் போரில் இழந்திருக்காது. என் மீது

*தவறில்லை. உதயசந்திரன் என்கிற ஆலமரத்தின் அடியில் வளர்ந்த செடியாக நான் இருந்திருக்கிறேன். அதனால் தான் என்னால் ஒரு மரமாகத் தழைக்க முடியவில்லை. உண்மையைக் கூறுகிறேன். மன்னன் ஆக வேண்டும் என்கிற ஆசையில் நான் காஞ்சிக்கு வரவில்லை. அத்திமலைத் தேவராஜனின் தேவ உடும்பர மேனியைக் காண வேண்டும் என்கிற ஆவலில்தான் காஞ்சிக்கு வந்தேன். அவனைக் காணாமலேயே போகிறேன்.*

*"என் போல் எனது மகன் மக்களின் அதிருப்தியை சம்பாதிக்கக் கூடாது. உதயசந்திரர் எங்கிருந்தாலும் அவரை வரவழைத்து அவர் வசம் எனது மகனை ஒப்படையுங்கள். பல்லவத்தைக் காப்பாற்ற இனி அவரால்தான் முடியும். ஒருவேளை, எனது மரணத்திற்கு அவர் வந்தால், நான் நடந்தவைகளுக்கு அவரிடம் மன்னிப்புக் கோரியதாகக் கூறுங்கள்..! மற்றபடி யாரிடமும் எவ்வித வன்மமும் இல்லாமல் போகிறேன்..!" என்றவன் மீண்டும் கண்களை மூடினான். அதன் பிறகு அவனது கண்கள் திறக்கவேயில்லை.*

*நந்திவர்மனின் மரணத்திற்கு அஞ்சலி செலுத்த தனது சகோதரன் உதயசந்திரன் வருவான் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தாள், ரேவாதேவி. தனது எதிர்பார்ப்பினை விஜயவிக்கிரமனிடம் கூறியபோது அவன் சோகமாகச் சிரித்தான்.*

*"எப்படி வருவார், அரசியாரே? பல்லவத்தில் காலடி வைத்தால் அவரது தலை துண்டிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கும் போது?"*

*விஜயவிக்கிரமன் கூற்றில் நியாயம் இருப்பதை உணர்ந்த ரேவாதேவி, அவன் மூலமாகவே ஸ்வேத கிரியில் இருந்த உதயசந்திரனுக்கு ஓலை அனுப்பினாள்.*

> ***'அண்ணா! நடந்தவைக்கு எனது கணவர் நந்திவர்ம பல்லவர் உன்னிடம் மன்னிப்புக் கோரினார். உனது வசம் எங்கள் மகன் தந்திவர்மனை ஒப்படைக்க***

*வேண்டும் என்கிற இறுதி ஆசையை வெளிப்படுத்தினார். நீ உடனே காஞ்சிக்கு வந்து, பல்லவத்தையும் தந்திவர்மனையும் வழிநடத்த வேண்டும்!'*

*- உனது சகோதரி ரேவாதேவி.*

என்று ஓலை வரைந்து, விஜயவிக்கிரமனை ஸ்வேதகிரிக்கு அனுப்பினாள்.

உதயசந்திரன் பதிலும் அனுப்பினான். அவன் ஓலையில் அவளைக் குறிப்பிட்டிருந்த விதமே, அவன் தங்களைவிட்டு வெகு தூரம் பயணித்துவிட்டான் என்பதை ரேவாதேவிக்குப் புலப்படுத்தியது.

*'அரசியார் ரேவாதேவிக்கு உதயசந்திரன் பணிவன்புடன் எழுதிக் கொள்வது,*

*எனது கண்களின் முன்பாகவே பல்லவம் அழிந்தது. இனி பல்லவம் எழுந்து நின்றாலும் அது மரணப் படுக்கையில் இருப்பவனின் போக்கு தெளிவாகவே கருதப்படும். இப்போது நான் பல்லவத்தின் பொறுப்பை ஏற்க தயாராயில்லை. நந்திவர்ம பல்லவர் அரசியல் வழிமுறைகளை மாற்றி இருந்தால் கூட நான் அவரை மன்னித்திருப்பேன். நமது பல்லவத்தின் வித்தான அத்திமலையையே அல்லவா மாற்றி உள்ளார்? பாரதப் போர் காலம் தொடங்கி அத்தியூரில் கோயில் கொண்டிருக்கும் தேவராஜனை ஒரு இரவில் திசை திருப்பிவிட்டாரே, மன்னர்? தெய்வத்தைவிடவா மன்னர் பெரியவர்? ஆதியில் தொடங்கி அந்தம் வரையில் இருக்கப்போகிற அத்திமலை பேரருளாளனின் சந்நிதியை அரண்மனையை மாற்றிக் கட்டுவது போன்று, திருத்தி அமைக்க நமக்கு யார் அதிகாரம் கொடுத்தனர்? தெய்வத்தையே திசை மாற்றியவர்கள், எதைத்தான் செய்யத் துணியமாட்டார்கள். என்னைப் பொறுத்தவரை நந்திவர்மனை நான் மன்னிக்கத் தயாரில்லை..! சூரிய பாதையில் இருந்து சந்திர பாதைக்கு மாற்றப்பட்ட பல்லவத்தை இனி மீட்பது சிரமம். எது நடக்க வேண்டுமோ அது நடக்கட்டும்..!*

*எனது ஆருயிர் கடவுளான அத்திமலைத்தேவனின் ஆலயத்திற்கு இனி நான் செல்வதாக இல்லை. என்னைப் பொறுத்தவரை மேற்கு நோக்கி நிற்கும் அந்த ஆலயம் காம்போஜர்களின் ஆலயம். அது எனது அத்தி மலைத்தேவனின் ஆலயம் அல்ல. இனி அந்த ஆலயத்திற்குக் காணாமல் போன அத்திமலைத்தேவன் வந்தால் என்ன, வராவிட்டால்தான் என்ன?*

*புதிய மன்னனாக அரியணையில் அமர உள்ள தந்திவர்மனுக்கு எனது ஆசிகள்.'*

*- உதயசந்திரன்.*

உதயசந்திரனின் ஓலையைப் படித்த ரேவாதேவி ஸ்தம்பித்துப் போய் நின்றிருந்தாள்.

## 24. ஸ்வஸ்திக கிணறு

நந்திவர்மனால் நாடு கடத்தப்பட்ட உதயசந்திரன் மனைவி பீயுஷமணியுடனும் மகன் இதயசந்திரனுடனும் வில்வலத்தைவிட்டுப் புறப்பட்ட அன்று, வானமே அவனுக்காக அழுவது போன்று பொத்துக்கொண்டு மழை பெய்ய, மழையில் நனைந்தபடி அவனை பின்தொடர்ந்தனர், வில்வல வாசிகள்.

"உதயசந்திரரே! நீங்கள் எங்கு செல்கிறீர்களோ நாங்களும் அங்கே வந்துவிடுகிறோம்!" என்று கிராமவாசிகள் கதற, அவர்களைத் தடுத்தான், உதயன்.

"தவறு! என் மீது உள்ள பிரியத்தில், பல்லவத்தைவிட்டு வெளியேறுகிறோம் என்று சொல்கின்றீரே! அவ்வளவு தானா உங்கள் தேசபக்தி? காம்போஜத்தில் இருந்து வந்த மன்னனுக்குத் தேசபக்தி இல்லாதது தவறில்லை. உங்களுக்கு இல்லாமல் இருக்கலாமோ? ஆட்சி செய்பவர்களைக் காட்டிலும் மக்களுக்குத்தான் தேச உணர்வு அதிகம் இருத்தல் வேண்டும்! எனக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. எனவே தண்டனையை அனுபவிக்க நான் போகிறேன். நீங்கள் ஏன் என் பின்பாக வர வேண்டும்? நாட்டிற்காக உங்கள் கடமையைச் செய்யுங்கள். பல்லவத்தைப் பலப்படுத்த என்ன செய்யலாம் என்று யோசியுங்கள். காலம் அனுமதித்தால் மீண்டும் வில்வலம் வருகிறேன்..! எனக்கு விடை கொடுங்கள்!" என்று கூறியபடி வில்வலத்தில் இருந்து வெளியேறி தெற்கே நடக்கத் தொடங்கினான்.

வில்வலத்தில் இருந்து புறப்பட்டு, *பண்ணுருட்டி வழியாகப் **பரிமலை பகுதியை அடைந்தனர், உதயசந்திரனும், பீயுஷாவும். பரிமலையை அடைந்த போது இரவு படர்ந்துவிட்டது.

“உதயரே! பனி பெய்யத்தொடங்கிவிட்டது. இதயசந்திரனுக்கு ஒத்துக்கொள்ளாது. இரவை இங்கேயே எங்காவது கழிக்கலாம்” பீயுஷா கூற, உதயன் அந்தப் பகுதியைச் சுற்றி கவனித்தான். வயல் ஒன்றின் அருகே இருந்த களத்து மேட்டினில் வைக்கோற்போர் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. சிறிய குவியலாக ஒரு வைக்கோற்போரும், உயரமான குவியலாக மற்றொன்றும் வைக்கப்பட்டிருந்தன. மேடைபோன்ற சிறிய வைக்கோற் குவியலில், தனது மேல்துண்டை விரித்து, குழந்தையைக் கிடத்திய உதயசந்திரன், மனைவியை அதன் அருகே படுக்கச் சொன்னான். தான் உயரமான வைக்கோற் போரின் மீது படுத்துக்கொள்வதாகக் கூறிவிட்டு, மேலே ஏறிச்சென்றான். வைக்கோற்போர் கததப்பாக இருக்க, முகம் மட்டும் தெரியும்படியாக வைத்து, குழந்தையின் மீது வைக்கோலால் மூடினாள். குழந்தையும் உறங்கிவிட, வெகுதூரம் நடந்த களைப்பினால் இருவரும் உறங்கிப் போயினர்.

விண்ணில் ஜொலித்த தாரகைகளை வெறித்தபடி தங்களது எதிர்காலத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தான், உதயசந்திரன். பல்லவத்தின் மீது தீராத காதல் கொண்டிருந்த தனக்கு இறுதியில் இதுதானா பரிசு?

யோசித்துக் கொண்டே இருந்தவன், ஒரு கட்டத்தில் தன்னையும் அறியாமல் உறங்கிப்போனான்.

உறக்கத்தில் அவனுக்கு ஒரு காட்சி தென்படுகிறது.

---

* பண்ணுருட்டி - இன்றைய பண்ருட்டி..! பண்ணிசைக்கும் பாணர்கள் வசித்த பகுதியாகையால் அதற்குப் பண்ணுருட்டி என்று பெயர்.

** பரிமலை தற்போது பரிக்கல் என்று அழைக்கப்படுகிறது.

இதயசந்திரன் பாலகனாக ஒரு காளையின் மீது பயணம் செய்து கொண்டிருக்கிறான். அந்தக் காளையின் முதுகில் சிவப்பு துணி ஒன்று போர்த்தப்பட்டிருக்க அதன் கழுத்தில் கட்டப்பட்டுள்ள மணி, அந்தக் காளை நடக்கும்போது இனிமையாகச் சப்தம் செய்கிறது. உதயசந்திரனும், பீயுஷமணியும் அந்தக் காளையின் பின்பாகத் தங்களது மகனைப் பார்த்தபடியே நடக்கின்றனர்.

திடீரென்று ஒரு அம்பு எங்கிருந்தோ பாய்ந்து வருகிறது. பீயுஷமணி அதைக் கண்டு அலறுகிறாள். உதயன் அந்த அம்பைத் தடுக்க நினைக்கிறான். விண்ணில் இருந்து பாயும் அந்தக் கூரிய அம்பு இதய சந்திரனை நோக்கி வருகிறது என்பது கண்டு இருவரும் அலறுகின்றனர்.

"ஐயோ.. எங்கள் குழந்தை..!"

திடீரென்று அந்த அம்பு காளையின் மீது பாய்ந்து, அதன் தலையைத் துண்டிக்கிறது. காளை நிலத்தில் சரிய, இதயசந்திரன் நிலத்தில் விழப்போகிறானே என்று உதயன் அவனைத் தாவிப் பிடிக்க முயல, அப்போது ஒரு அதிசயம் நடக்கிறது.

ஒரு நாற்காலி பறந்து வருகிறது. அந்த நாற்காலி சுழலும் சக்கரம் ஒன்றின் மீது அமர்ந்திருக்கிறது. இதய சந்திரன் அருகே வந்ததும் சுழலும் சக்கரம் நின்று விடுகிறது. அந்தச் சக்கரத்திற்கு நான்கு கரங்கள். அந்தக் கரங்கள் நீண்டும், நான்கு திசைகளையும் நோக்கித் திரும்பி இருக்கின்றன. தான் கற்ற பாணினி இலக்கண விளக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஸ்வஸ்திக சின்னத்தைப் பிரதிபலிக்கின்றன அந்தச் சக்கரத்தின் கரங்கள். அந்த நாற்காலி இதயசந்திரனைத் தாங்க, அவன் அதில் அமர்ந்ததும், நாற்காலி எங்கோ பறந்து செல்கின்றது.

"போகாதே இதயசந்திரா!" என்று இருவரும் அலறிக்கொண்டே அந்த நாற்காலியின் பின்பாக ஓடுகின்றனர்.

"இதயா!" — என்று அலறியபடி கண்விழித்தான், உதயசந்திரன். அவன் முகத்தில் இருள் மூடியிருக்க, தான் வைக்கோற்போரினுள் கிடக்கிறோம், என்பதைப் புரிந்துகொண்டு வெளியே வந்தான்.

நல்லவேளை —

பீயுஷாவும், இதயசந்திரனும் இன்னும் உறங்கிக் கொண்டுதான் இருந்தார்கள். தான் ஒரு நீண்ட கனவினைக் கண்டிருக்கின்றோம் என்பதனை உதயன் உணந்தான். கனவுக்குப் பொருள் என்ன என்பதைக் கூட யோசிக்க முடியாமல் உடல் அசதியாக இருந்தது.

தனது எதிர்காலத்தைப் பற்றிக் கவலையுடன் சிந்தித்துவிட்டு உறங்கச் சென்றதால் உண்டான கனவா அல்லது காலம் இந்தக் கனவின் மூலம் இவனுக்குச் சூசகமாக ஏதாவது தகவலை கூறுகின்றதா?

யோசித்துக்கொண்டே இருந்தவன், மீண்டும் உறங்கச் சென்றான்.

காலையில் மீண்டும் பயணத்தைத் தொடங்கியவர்கள், அரங்கத்தை அடைந்தனர். அன்று அங்கேயே தங்கி, அரங்கத்தில் தரிசனம் செய்துவிட்டு மறுநாள் மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தார்கள். அன்று மாலை ஆலம்பம் என்கிற பகுதியின் வழியே சென்று கொண்டிருந்தார்கள். இரவு படர்ந்துவிட, எங்காவது தங்கலாம் என்று சுற்றிப் பார்த்தபோது, ஒரு தனவந்தரின் வீட்டை உதயன் கண்டான்.

அந்த மாளிகை விஜயநல்லூழான் என்கிற தனவந்தருக்குச் சொந்தமானது. உதயசந்திரன் அவர் மாளிகையினுள் நுழைந்து அன்றைய இரவை அங்கே கழிப்பதற்கு அனுமதி கேட்டான். கையில் குழந்தையுடன் பீயுஷமணியைக் கண்டதுமே, விஜயநல்லூழானின்

மனைவி, மலர்மங்கைக்கு மனம் கனிந்துவிட்டது. உதயசந்திரனின் கம்பீரமும், அவனது முகத்தில் தவழ்ந்த ராஜகளையும், இவன் ராஜரத்தம் என்பதைப் பறைசாற்ற, விஜயநல்லூரான் அவர்களைத் தங்கள் மாளிகையில் சகல வசதிகளுடனும் தங்க வைத்தான்.

தான் யார் என்பதைக் கூறாமலேயே அங்கு தங்கியிருந்தான், உதயசந்திரன். ஆனால், எதிர்காலத்தை நிர்ணயிக்கும் காலச்சக்கரம் அமைதியாக இருக்க வேண்டுமே. உதயன் தன்னை யார் என்று விஜய நல்லூரானிடம் கூறாவிட்டாலும், அவன் யார் என்பதைத் தெரியப்படுத்தும் வகையில் காலச்சக்கரம் ஒரு நிகழ்வினை அங்கே அரங்கேற்றியது.

தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் சிலர், அன்றிரவு, விஜயநல்லூரானின் மாளிகையைச் சுற்றி வளைத்தனர். வீடு புகுந்து ஆபரணங்களையும், சொத்துகளையும் கொள்ளையடிக்க, மலர்மங்கையின் வீறிட்ட அலறலைக்கேட்டு கண்விழித்த உதயசந்திரனுடன் அவனது போர்க்கலையும் உறக்கத்தைக் கலைத்தது. தனியொருவனாகவே மாளிகையினுள் புகுந்திருந்த அத்தனை கொள்ளையர்களையும் விரட்டி அடித்தான், உதயன். அவனது வாள்வீச்சைக் கண்டு மலைத்துப் போய் நின்றனர், நல்லூரானும், மலர்மங்கையும்.

"ஐயா! உண்மையிலேயே தாங்கள் யார்?" — நல்லூரான் கேட்க, வேறு வழியின்றித் தான் யார் என்பதை உதயசந்திரன் கூற வேண்டியதாயிற்று.

"ராஜசிம்ம பல்லவனின் பெயரன் உதயசந்திரன் நான். குந்தள மன்னன் வயிரமேகன் என்கிற தந்திதுர்கனுக்கும், ராஜசிம்மன் மகன் மகேந்திரனின் மகள் ராஜகாந்திக்கும் பிறந்தவன் நான்..!" என்றதும், நல்லூரான் அடைந்த உவகைக்கு அளவேயில்லை.

"பல்லவ வாரிசா எனது மாளிகையில் தங்கியுள்ளது!" என்றவன் அதன் பிறகு அவனை உறங்கவே விடவில்லை.

*"நந்திவர்ம பல்லவனால் நாடு கடத்தப்பட்டு இருப்பிடம் தேடி அலைகிறேன்!" உதயன் கூறியதும்தான் தாமதம், உணர்ச்சிவயப்பட்ட விஜயநல்லூழான் உதயன் கையைப் பற்றிக் கொண்டான்.*

*"ராஜசிம்ம பல்லவனின் வாரிசு அனாதையாக அலைவதா? *ஸ்வேதகிரியில் எனக்கு ஒரு மாளிகை உள்ளது. அருகே திருமால் விண்ணகரம் ஒன்று உள்ளது. தாங்கள் அங்கே சென்று தங்கலாம். எனது தம்பி கம்பவர்ம அரையன் உறையூர் சோழன் கமலாதித்யனின் அமைச்சன். நாளை அவனையும் சந்தித்துவிட்டு, தாங்கள் ஸ்வேதகிரி போகலாம்" என்றார்.*

*மறுநாள் —*

*கம்பவர்மன் வந்ததும் நடந்ததை அறிந்து உதய சந்திரனை பணிவுடன் வணங்கினான்.*

*"எனது அண்ணன் குடும்பத்தின் உயிரைக் காப்பாற்றிய தங்களுக்கு நான் என்றென்றும் கடமைப் பட்டவன்!" — என்று கூறியவன் உதயசந்திரனையும், பீயுஷமணியையும், குழந்தை இதயசந்திரனையும் ஸ்வேதகிரியில் உள்ள நல்லூழான் மாளிகைக்கு அழைத்துச் சென்றான்.*

*நல்லூழான் மாளிகையிலேயே தங்கிவிட்ட உதயனும், பீயுஷாவும், அந்தப் பகுதியின் அமைதியை பெரிதும் விரும்பினர். புண்டரீகனின் ஆலயம் மனதுக்கு அமைதியைத் தந்தது.*

*அன்றிரவு —*

*தங்குவதற்கு இடமும், நலம் விரும்பும் நன்மக்களின் அரவணைப்பும் கிட்டிவிட, அன்று இரவு தனது மஞ்சத்தில் அமைதியாக உறங்கினர், பீயுஷாவும்,*

* ஸ்வேதகிரி தற்போது திருவெள்ளறை என்று திருவரங்கத்தில் இருந்து துறையூர் செல்லும் பாதையில் உள்ளது. புண்டரிகாக்ஷ பெருமாள் இங்கே கோயில் கொண்டிருக்கிறார்.

உதயனும். அருகே தொட்டிலில் இதயனும் நிம்மதியாக உறங்கிக்கொண்டிருந்தான்.

உறக்கத்தின் ஊடே, அன்றும் உதயனுக்குச் சுழலும் ஸ்வஸ்திக சக்கரம் தோன்றியது. தொடர்ந்து நான்கைந்து நாட்களுக்கு அவனுக்கு ஸ்வஸ்திக சக்கரம் சுழல்வதும், நிற்பதுமாகவே கனவுகள் தோன்றின.

இந்தக் கனவுகளுக்கு என்ன பொருள் என்று யோசித்த படியே அமர்ந்திருந்தான். ஒருமுறை மனைவியிடமும் தான் கண்ட கனவுகளைப் பற்றிக் கூற, அவளுக்கும் எதுவும் பிடிபடவில்லை.

ஆனால் இந்தக் கனவுகள் தனது அன்றாடப் பணிகளைப் பாதிக்காத வண்ணம் நடந்து கொண்டான், உதயசந்திரன். மனதில் பரவியிருந்த அமைதியை அணுஅணுவாக இரசித்துக் கொண்டிருந்தான்.

பல்லவம் பரிதவித்துக் கிடக்க, தான் இங்கே அமைதியுடன் வாழ்கிறோமே என்கிற வருத்தம் அவ்வப்போது தலைதூக்கத்தான் செய்தது.

இதயசந்திரனின் முதல் பிறந்த தினம் வந்தது. பிறந்ததின விழாவிற்கு, நல்லூழான் குடும்பத்தையும், கம்பவர்மன் குடும்பத்தையும் அழைத்திருந்தான், உதயன். வில்வலமே திரண்டு வாழ்த்த வேண்டிய மகனின் பிறந்த நாளை இப்படி ஒரு கிராமத்தில் அமைதியாகக் கொண்டாடுகின்றோமே என்று உதயன் மனதினுள் வருத்தப்பட்டுக்கொண்டுதான் இருந்தான்.

பிறந்த தினம் அன்று காலை —

கம்பவர்மன் குடும்பம், நல்லூழான் குடும்பம், திருவெள்ளறை கிராமத்தினர் என்று பலர் திரண்டு குழந்தை இதயசந்திரனை வாழ்த்தினர்.

"எங்கள் உயிரைக் காப்பாற்றினீர் உதயசந்திரரே! பிரதியுபகாரமாக நான் தங்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை. உமக்கு நான் என்ன செய்ய வேண்டும்?" — நல்லூழான் கேட்டார்.

“தங்குவதற்கு ஒரு சிறு அறையைத் தேடிக் கொண்டிருந்த எனக்கு, இந்த வெள்ளறையையே தந்துள்ளீர்! இன்னும் என்ன நீங்கள் எனக்குத் தருவது?” — சிரித்தான், உதயன்.

“அப்படிச் சொல்லாதீர்கள். நீங்கள் எங்கள் சொத்துகளை மட்டும் காக்கவில்லை. உங்கள் குழந்தை எங்கள் வீட்டில் காலடி எடுத்து வைத்த வேளை, எங்கள் நிலமகள் பூரித்து நிற்கிறாள். எங்கள் பசுவினங்கள் பாலை பொழிந்துகொண்டே உள்ளன. எங்கள் நந்தவனங்கள் பூத்துக் குலுங்குகின்றன. தோட்டங்கள் காய்கின்றன. உங்கள் மகன் வந்த வேளைதான் எங்கள் செழுமைக்குக் காரணம். அவன் உங்களுக்கு மட்டும் மகனல்ல, எங்களுக்கும்தான்!” — என்ற மலர்மங்கை, கணவனைப் பார்த்தாள்.

•

“இந்த மாளிகையை இதயசந்திரனுக்குப் பரிசாக அளித்துவிடுங்கள்.” — மலர்மங்கை கூற, பீயுஷா திகைத்தாள்.

“அப்படியே செய்கிறேன்!” என்று தொட்டிலில் கிடந்த குழந்தையைத் தூக்கி உச்சி முகர்ந்தான், நல்லூழான்.

“என் பங்குக்கு நான் என்ன செய்வது?” — கம்பவர்மன் கேட்டான்.

“உன் நட்பைவிடவா, எனக்குப் பெரிய பரிசு வேண்டும்?” — உதயன் கேட்டான்.

“காலம் வரும்போது உனக்கு ஒரு பெரிய பரிசு தரப்படும், அதுவரை பொறுத்திரு. இப்போது உனக்கு என்ன வேண்டும், இதயசந்திரா?” — குழந்தையைக் கேட்டான், கம்பவர்மன்.

பீயுஷமணி சிரித்தாள். “அவனது தந்தையைப் போல்தான் அவன். எதனையும் கேட்கத் தெரியாது. அவன் சார்பாக நான் கேட்கிறேன். திருவெள்ளறை ஆலயத்தில் நீர் கிடைப்பது துர்லபமாக இருக்கிறது.

இப்போது இருக்கும் சிறு கிணற்றில் நீர் அதிகம் சுரப்பதில்லை. எனவே, ஆலயத்திற்குப் பெரிய கிணற்றை வெட்டிக் கொடுங்கள். எனது மகன் பிறந்தநாள் பரிசாக ஊர்மக்களுக்கு அந்த உதவியைச் செய்யுங்கள்." — பீயுஷா கேட்க, அனைவரும் மதிப்புடன் அவளை நோக்கினர்.

"ஒரே கல்லில் பல மாங்காய்களை அடித்துவிட வகை செய்துவிட்டாய் சகோதரியே. புண்டரீகனுக்குக் கைங்கர்யமும் செய்தாற்போல இருக்கும், உன் மகனுக்கும் பிறந்த நாள் பரிசு பெற்றுவிட்டாய். ஊர் மக்களுக்கும் பயன் அளிக்கும் வகையில் நல்ல பரிசாகத்தான் கேட்டிருக்கிறாய். இன்றே செயலில் இறங்குகிறேன்..!" என்றான்.

சட்டென்று கம்பனை பார்த்தான், உதயன்.

"கம்பன் அரையா! எனக்கு ஒரு யோசனை! குந்தள மன்னனின் வாரிசாகப் பல்லவ இளவரசியின் வயிற்றில் பிறந்தேன். சோழ நாட்டின் தளபதி மங்கை மன்னனின் நட்பினைப் பெற்றேன். இன்று சோழ நாடுதான் எனக்கு அடைக்கலம் தந்திருக்கிறது. சேர மன்னன் வில்லாளன் கோதையையும், பாண்டிய மன்னன் ஸ்ரீமாறன் இருவரையும் போரினால் வென்றேன். ஆக, குந்தளம், பல்லவம், சோழம், பாண்டியம், சேரம் ஆகிய தேசங்கள் எனது வாழ்க்கையில் பெரும் பங்காற்றி உள்ளன. தமிழ் மண்ணில் இருக்கும், பல்லவம், சோழம், பாண்டியம், சேரம் என்னும் நான்கு பக்கங்களில் துவங்கி மையத்தில் தமிழாக நீர் ஊற்று பெருக வேண்டும். கிணறு மத்தியில் நான்கு திக்கில் இருந்தும் கிணற்றை அடைவதற்கு வழி இருக்க வேண்டும். ஆனால் தாங்கள் வந்த வழியைத் தவிர, மற்ற வழிகள் கிணற்றுக்கு வந்தவர்களின் கண்களில் படக்கூடாது. இம்மாதிரியான *ஸ்வஸ்திக

* ஆலம்பாக்கிழான் விசையநல்லூழான் என்பவனின் தம்பி கம்பன் அரையன் என்பவன் நண்பனானான். இவன்தான் திருவெள்ளறை புண்டரிகாக்ஷ பெருமாள் ஆலயத்தில் இந்த

வடிவத்தில் ஒரு கிணற்றை உருவாக்க வேண்டும்! கிணற்றின் நான்கு நுழைவாயில்களும், தொண்டை நாடு, சோழ நாடு, பாண்டி நாடு மற்றும் சேர நாடு என்கிற கருத்தைக் கொண்டால், அனைவரும் கிணற்றை அடையும் போது, நாம் தமிழ் பேசும் பிரஜைகள் என்கிற ஒற்றுமை அந்தக் கிணற்று நீரை அருந்தும் போது வர வேண்டும்..!" என்றான்.

"ஆஹா! வெகு அற்புதம்!" — உதயசந்திரனின் அந்தக் கற்பனை அனைவரையுமே பெரிதும் கவர்ந்தது.

---

ஸ்வஸ்திக வடிவக் கிணற்றினை எடுப்பித்தான். இங்குள்ள கல்வெட்டில் இச்செய்தி குறிப்பிடப்படுகிறது..

மார்ப்பிடுகு பெருங்கிணறு என்று குறிப்பிடப்படும் இக்கிணறு கி.பி.13-ஆம் நூற்றாண்டில் போசள அரசன் வீரராமநாதன் காலத்தில் குடந்தை வாணிகன் உய்ய நெறிக்காட்டினான் என்பவனால் திருத்தியமைக்கப்பட்டது என்று இங்குள்ள கல்வெட்டு தெரிவிக்கிறது.

'ஸ்வஸ்தி ஸ்ரீ பாரத்வாஜ கோத்திரத்தின் வழித்தோன்றிய பல்லவ திலக குலோத்பவன் தந்திவர்மர்க்கு யாண்டு நான்காவ தெடுத்துக் கொண்டு ஐந்தாவது முற்றுவித்தான் ஆலம்பாக்க விசய நல்லூழான் தம்பி கம்பன் அரையன் திருவெள்ளறை தென்னூர்பெருங்கிணறு. இதன் பியர் மார்ப்பிடுகு பெருங்கிணறு.'

'ஸ்ரீ கண்டார் காணா உலகத்திற் காதல் செய்து நில்லாதேய்
பண்டேய் பரமன் படைத்த நாள் பார்த்து நின்று நைய்யாதேய்
தண்டால் மூப்பு வந்து உன்னைத் தளரச் செய்து நில்லாமுன்நில்லா
உண்டேல் உண்டுமிக்கது உலகமறிய வைம்மிநெய்!'

என்று இந்த நிலையில்லா உலகத்தைப் பற்றிக் கூறி, அறச் செயல்களைச் செய்வீர் எனக் கூறுகிறது இங்குள்ள மற்றொரு கல்வெட்டு.

இன்றும் திருவெள்ளறை ஆலயத்தில் ஸ்வஸ்திக் வடிவில் புஷ்கரணியாகக் கருத்தப்படும் அந்தக் கிணறு உள்ளது. மையத்தில் மாலவனின் புகழ் பாடும் தமிழ் பிரபந்தச் சுனையாகக் கிணறு இருக்க, நான்கு வழிகள் படிகளாக ஏறிச் சென்று நான்கு திசையில் முடிகின்றன. இந்த ஸ்வஸ்திக கிணறில் ஒரு பக்கமாக இறங்கி நீராடினால், மறுமுனையில் நீராடுபவர்களைக் காண முடியாது.

தான் கண்ட கனவுக்கு வடிவம் காண்கிறான், தனது கணவன் என்பதைப் புரிந்து கொண்ட பீயுஷமணி அவனை ஆச்சரியத்துடன் நோக்கினாள்.

"நீங்கள் கண்ட கனவுக்கு இதுதான் பொருளா?" — தனிமையில் இருந்த போது கணவனைக் கேட்டாள், பீயுஷமணி.

"இல்லை பீயுஷா! தொடர்ந்து ஸ்வஸ்திக சக்கரத்தை எனது கனவுகளில் காண்கிறேன். ஏதோ ஒரு தகவல் எனக்குத் தெரிவிக்கப்படுகிறது. என்னால் அதனை அனுமானிக்க முடியவில்லை. ஒருவேளை, சிந்தையில் இருக்கும் அந்த ஸ்வஸ்திக சக்கரத்திற்கு வடிவம் கொடுத்தால் ஏதாவது பதில் கிடைக்குமா என்று பார்க்கிறேன்..!" — உதயசந்திரன் கூறினான்.

கம்பன் அரையன் ஒரு நல்ல நாளில், உதயசந்திரனின் ஸ்வஸ்திக சக்கரத்திற்கு வடிவம் கொடுக்கத் துவங்கினான்.

உதயனின் மகன் இதயனின் பிறந்ததின பரிசாகக் கம்பன் அரையன் எழுப்பிய இந்தக் கிணறுதான் தமிழகத்தில் பெரிய திருப்பம் உண்டாகப் போவதை உணர்த்தியது.

உதயசந்திரன் சற்றே தான் கண்ட கனவை யோசித்துப் பார்த்திருந்தால், அந்தக் கனவு தெரிவிக்கும் தகவலை யூகித்திருப்பான். ஸ்வஸ்திகம் எதனைக் குறிக்கிறது என்பதை உணர்ந்திருந்தால் எதிர்காலப் பாதை உதயனின் கண் முன்பாகத் தோன்றியிருக்கும். அவன்தான் அத்திமலை சூரிய பாதையில் இருந்து சந்திர பாதைக்குத் திரும்பிவிட்டதை எண்ணி மருகிக் கொண்டிருக்கிறானே. ஸ்வஸ்திகம் தெரிவிக்கும் செய்தி என்ன என்பதை அவனால் எங்கே யூகிக்க முடியும்?

# 25. சூரியவித்து

பொழுது புலர்வதற்கு இன்னும் அவகாசம் இருந்தது. இரவெல்லாம் அழுதுகொண்டிருந்த இதயசந்திரனோடு போராடிக்கொண்டிருந்ததால், பீயுஷாவும் விடியலில் தான் கண்ணயர்ந்திருந்தாள். சப்திக்காமல் மஞ்சத்தி லிருந்து எழுந்த உதயசந்திரன், சயன அறையைவிட்டு வெளியே வந்தான்.

வாட்பயிற்சி மற்றும் உடற்பயிற்சி செய்வதற்காக உப்பரிகைக்குச் செல்வது வழக்கம். அவனது உதவி யாளன் கோமேதகன் உதயனது உடற்பயிற்சி சாதனங் களைத் தயாராக வைத்திருந்தான்.

உப்பரிகைக்குச் சென்று சூரியோதயம் வரை உடற்பயிற்சி செய்த உதயசந்திரன், கோமேதகனை நோக்கினான்.

"கோமேதகா..! இன்று வெள்ளறை ஆலய *ஸ்வஸ்திக கிணற்றில் நீராடப் போகிறேன். எனது ஆடைகளை எடுத்துக்கொண்டு நீயும் புறப்படு!" — உதயசந்திரன் கூறினான்.

---

* ஸ்வஸ்திகம் என்பது தேவநாகரியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சொல். நலம் மற்றும் சுபம் ஆகியவற்றைக் குறிக்கும் சொற்கள். மங்கலம் என்றும் பொருள் கொள்ளலாம். வேதங் களில் ஸ்வஸ்தி என்கிற சொல் அதிகம் பிரயோகப்படுத்தப் படுகிறது. சாந்திரஸ்து, ஸ்வஸ்திரஸ்து என்று சாந்தி மந்திரங்கள் உச்சரிக்கப்படுகின்றன. ஸ்வஸ்திகத்தின் கரங்கள் கடிகார முட்களைப் போன்று வலப்புறமாக (Clock-wise) காணப்பட்டால் ஸ்வஸ்திகா என்னும் சூரியனாகக் கருதப்

ஆலயத்தினுள் நுழைந்த உதயசந்திரன், நிலத்தில் பதிந்திருந்த ஸ்வஸ்திக கிணற்றை உறுத்து நோக்கினான். இவனது கனவில் சுழன்ற ஸ்வஸ்திக சக்கரம் நின்றவுடன் எங்ஙனம் காட்சி தந்ததோ அதே போன்றுதான் காட்சி யளித்தது. உண்மையிலேயே கம்பன் அரையனின் திறமையைப் பாராட்ட வேண்டியதுதான். திருவெள்ளறை ஆலயத்தின் தண்ணீர் பிரச்னையையும் தீர்த்து, தனது மகனுக்கும் ஒரு பிறந்த நாள் பரிசைத் தந்திருந்தான். புஷ்கரணியைத் திறந்ததும், புண்டரீகாட்ச பெருமாள் அந்தக் கிணற்றின் உள்ளே இறங்கி திரு மஞ்சனம் செய்து கொண்டார். தொடர்ந்து இதய சந்திரனும் கிணற்று நீரில் நீராட்டப்பட்டான். அதன் பிறகே மற்றவர்களை நீராட அனுமதித்திருந்தான், கம்பன் அரையன்.

உடன் வந்த கோமேதகன், மகிழமரம் ஒன்றின் அடியில் உதயனின் மாற்று ஆடைகளுடன் அமர்ந்து கொள்ள, உதயசந்திரன் மட்டும் கிணற்றை நோக்கி நடந்தான்.

கிணற்றின் ஒரு வழியாக உள்ளே இறங்கி, ஆடைகளைக் களைந்துவிட்டு, நீரில் குதித்தான்.

---

படுகிறது. இந்தக் குறியீடு மங்கலம் மற்றும் சௌபாக்கியங் களைக் குறிக்கும்.

இந்தக் குறியீட்டின் கரங்கள் இடப்புறமாக (Anti-clockwise) காணப்பட்டால், அப்போது அதன் பெயர் சாவ்-அஸ்திகா. இது இரவையும், காளிதேவி தந்திரங்களையும் குறிக்கும்.

The symbol is found in the archeological remains of the Sintashta culture and Indus Valley Civilization. கம்பன், திருவெள்ளறை ஆலயத்தில் எழுப்பிய ஸ்வஸ்திகா கிணறு கி.பி. 800-ல் கட்டப்பட்டது. இந்தக் கிணறு சூரியனைக் குறிக்கிறது. பாணினி தனது அஷ்டத்யாயி என்னும் சமஸ்கிருத இலக்கண நூலில், இந்தச் சொல்லைப் பயன்படுத்தி உள்ளார். Monier-Williams, என்கிற மேல்நாட்டுக்காரர், ஸ்வஸ்திக் சின்னம் சூரியனின் குறியீடு என்கிறார்.

விடியற்காலை என்பதால், ஆலயத்தில் இன்னும் நடமாட்டம் துவங்கவில்லை. குறிப்பாக, ஸ்வஸ்திக கிணற்றில் யாருமே இல்லை.

தன்னை மறந்து நீந்திவிட்டு, மீண்டும் கரையேறி, படிகளில் அமர்ந்து சற்றே தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்தான்.

அப்போது —

எதிரொலியாக ஒலித்தது ஒரு குரல்..!

"உதயசந்திரா! நீந்தி களைத்துவிட்டாயா என்ன? பாதிக் கடலைத்தானே நீ கடந்திருக்கிறாய்? இன்னும் தொலைதூரம் நீ போக வேண்டுமே?" கனத்த அந்தக் குரல், கிணற்றின் சுவர்களில் மோதி எதிரொலித்தது.

"யார்?" திகைப்புடன் எழுந்து நின்று, கிணற்றினுள் யாராவது தென்படுகின்றனரா என்பது போன்று எட்டிப் பார்த்தான், உதயசந்திரன்.

"ஒருவர் நீராடுவதை மற்றவர் காணக்கூடாது என்று ஸ்வஸ்திக கிணறு அமைய யோசனை கூறியவனே, நீதானே. அப்படியிருக்க, உன்னிடம் பேசும் என்னைக் காண்பதற்கு ஏன் பிரயத்தனப்படுகிறாய், உதயா? நலமாக இருக்கிறாயா?" — அந்தக் குரல் தொடர்ந்து கேட்க, உதயனின் வியப்பு அதிகரித்தது.

"சுவாமி! தாங்கள் யார்?"

"நான் உனக்கு அறிமுகமானவன்தான். ஆனால் நீ இப்போது என்னைப் பார்த்து ஒன்றும் ஆகப்போவ தில்லை. காரணம், என்னால் உனக்கோ, உன்னால் எனக்கோ இனி பிரயோஜனம் இல்லை. நீ கிணற்றில் இருப்பதை உணர்ந்தேன். பழைய அக்ஞானம் அதுதான், உன்னிடம் பேச்சு வளர்த்தேன். நான் என் வழியே ஷேத்ராடனம் செய்தபடி செல்கின்றேன். எனவே நாம் சந்திக்கத் தேவையில்லை..!" — அந்தக் குரல் கூறியது.

"சுவாமி! தாங்கள் என்னைச் சந்திக்க விரும்பவில்லை என்றால், நானும் உங்களைச் சந்திப்பதில் பிரயோஜனம் இல்லைதான். என்னால் தங்களைக் காண முடியாத போது, தாங்கள் கிணற்றில் இருப்பதை உணராத போது, தாங்கள் என்னுடன் பேசுகிறீர்கள் என்றால், தாங்கள் என்னைப் பார்த்திருக்க முடியும். நான் கிணற்றில் இருப்பதை உணர்ந்திருக்க முடியும். நான் சந்தித்த மனிதர்களில் அத்தகைய ஆற்றலைக் கொண்டிருப்பவர் ஒருவர்தான். ஆலிநாடன் என்கிற பரகாலரின் அமைச்சர், சாயாவக்ரர் என்கிற நிழலைப் பிடிப்பான். உங்கள் குரலும் அவரது குரலை ஒத்திருக்கிறது. அவராகத் தாங்கள் இருந்தால், உங்களுக்கு எனது வந்தனங்கள்..!" — உதயசந்திரன் கூறியதும், அங்கே ஒரு நீண்ட மௌனம் தொடர்ந்தது.

திடீரென்று யாரோ நீரில் பாயும் சத்தம். யாரோ நீந்தி வரும் நீரின் சலசலப்பு ஒலி நெருங்கி வர, திடீரென்று நீரில் இருந்து எழுந்து படிகளில் ஏறி நின்றார், சாயாவக்ரர்.

"என்னே ஒரு புத்திகூர்மை! நாம் சந்தித்து யுகங்கள் ஆகிவிட்டது. எனது குரலையும், செயல்பாட்டுத் திறனையும் வைத்து நான் யார் என்பதை யூகித்து விட்டாயே..!" —அவனை மதிப்புடன் பார்த்தபடி நின்றான், நிழலைப்பிடிப்பான் என்கிற சாயாவக்ரர். ஜடாமுடி கொண்டை தாடி, தீட்சண்யமான பார்வை அனைத்துமே முன்பு கண்டது போன்றே இருந்தது. ஆனால், முறுக்கேறியிருந்த அந்த வலுவான தேகம் இப்போது தளர்ந்துவிட்ட சரீரமாகக் காட்சி அளித்தது.

கிளரொளி இளமை என்று இதைத்தானே கூறியிருக்கிறார்கள். இளமை கிளர்ந்து தேகத்தில் திரள, தேகம் வளர்ந்துகொண்டே இருக்கும். ஒரு நாள் தேகத்தை இளமையிடமிருந்து முதுமை பறித்துக் கொள்ளும். இளமையிடம் இருந்த போது வளரும் தேகம்,

முதுமையிடம் சென்றவுடன் அழியத் துவங்கும்.. வளரும்போது தேகம் என்று காதலிக்கப்படும் உடல், அழியும்போது சரீரம் என்று வெறுக்கப்படும். இதுதானே இயற்கையின் நியதி. இளமையில் மனதுக்கு ரம்மியத்தைத் தருபவர்கள், முதுமையில் நமது வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்வதில்லையா..?

ஆனால் சாயாவக்ரர் இன்னும் கம்பீரமாகவே இருந்தார்.

"ஆலிநாடர் எப்படி இருக்கிறார்?" — உதயன் கேட்டான்.

"அவருகென்ன! தெய்வ நிலையை அடைந்துவிட்டார். தளபதியாக, மன்னனாக, காதலனாக, கணவனாக, கள்வனாகப் பல வாழ்வை அனுபவித்துவிட்டு, பரம் பொருளால் ஆட்கொள்ளப்பட்டு, மடலூரி மாலவனில் ஆழ்ந்து, அவனது விண்ணகரங்களைப் பாடி ஓய்ந்து விட்டார். இப்போது அரங்கத்தில் இருந்து திருக்குறுங் குடிக்குப் பயணம் செய்ய ஏற்பாடுகளைச் செய்து வருகிறார். அங்கேயே தனது இறுதி நாட்களைக் கழிப்பதாக உத்தேசம்."

"பஞ்சவர், ஜலசயனர், வார்த்தாவரணர், தூண்டில் நல்லான் அனைவரும் நலமா?"

"வார்த்தாவரணரும், தூண்டில் நல்லானும், திருமங்கை மன்னனுக்கு இன்னமும் ஊழியம் செய்து வருகின்றனர். மற்ற இருவரும் சம்சாரத்தில் ஈடுபட்டு உள்ளனர். அவர்களுடன் தொடர்பு விட்டுப்போயிற்று. நான் துறவியாக விண்ணகரங்களுக்குச் சென்று கொண்டிருக் கிறேன். என்னைப் பற்றி விடு! நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய், உதயசந்திரா?"

"நீர் துறவியாக அலைகிறீர். நான் நாடோடியாக அலைகிறேன்!" — சிரித்தான் உதயன்.

"என்ன சொல்கிறாய்? பல்லவத்தின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தவன் நீ. நீ ஏன் நாடோடியாக அலைய வேண்டும்? நந்திவர்மனை மன்னனாக்கியவன் நீ அல்லவா?"

"காம்போஜம் அவன் பிறந்த நாடு. அவன் பிறந்த நாட்டில் இருந்து அவனைப் பிரித்து இங்கே பல்லவத்தின் மன்னனாக அமர வைத்தோம். நான் பிறந்த நாட்டிலிருந்து என்னை நீங்கள் பிரித்தது போன்று, நீ பிறந்த காஞ்சியிலிருந்து உன்னைப் பிரிக்கிறேன் பார் என்று சபதமிட்டு, என்னை நாடு கடத்திவிட்டான். இப்போது இந்த ஸ்வேதகிரிதான் எனது இருப்பிடம்."

"தெரியும்! இந்த ஸ்வஸ்திக கிணற்றைக் கண்டு மெய்ம்மறந்து இதன் சரித்திரத்தை ஆலயத்தாரிடம் கேட்டபோது, அவர்கள், உம்மைப் பற்றியும், கம்பன் அரையன் பற்றியும் கூறினார்கள். நந்திவர்மன் இறந்த போது நான் அத்தியூரில்தான் இருந்தேன். அதன் பிறகு இங்கு வந்தேன். முதன்முறையாக ஸ்வஸ்திக கிணற்றைக் கண்டு, அதில் இறங்கி ஆனந்தமாகக் குளித்தேன். அதன் பிறகு இங்கேயே தங்கிவிட்டேன். இன்று காலை உன்னையும் சந்தித்துவிட்டேன்..!" தனது வேட்டியின் ஈரத்தை பிழிந்துவிட்டு, படிகளில் அமர்ந்தார், நிழலைப் பிடிப்பான்.

"உதயசந்திரரே! நந்திவர்மன் உன்னைப் பல்லவத்தை விட்டு நாடு கடத்திய காரணம் என்ன?" —சாயாவக்ரர் கேட்க, நீண்ட பெருமூச்சு ஒன்றைச் சிந்தினான், உதயன்.

"சுவாமி! நந்திவர்மனே போய்ச் சேர்ந்துவிட்டான். அவனது பிறந்த நாட்டின் மீது உள்ள பாசம்தான், எங்களிடையே பிரிவு ஏற்பட்டதற்குக் காரணம். தன்னைச் சுற்றி காம்போஜர்களை இருத்திக் கொண்டான். அவர்களுடைய துர்போதனைகள் பல்லவத்திற்குக் கேடாக முடிந்தது. எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டேன். ஆனால் கிழக்கை நோக்கி

நின்ற அத்திமலைத்தேவனை மேற்கு நோக்கி திருப்பியதை மட்டும் என்னால் ஏற்றுக்கொள்ளவே இயலவில்லை. சூரியபாதையை நோக்கி நின்ற நமது விண்ணகரங்களைச் சந்திர பாதையை நோக்கித் திருப்பி வைக்க இவன் யார்? இதனை நான் தட்டிக் கேட்டதால், மக்கள் கிளர்ந்தெழ நான் புரட்சியைத் தோற்றுவிக்க முயலுவதாகக் குற்றம் சாட்டி என்னை நாடு கடத்தினான்."

"எல்லாம் அத்திமலையானின் சித்தம். சூரிய பாதையில் நின்ற அத்திமலை சந்திர பாதைக்குத் திரும்பியது கிடக்கட்டும். இது உணர்த்தும் செய்தி உனக்கு உறைக்கவில்லையா?"

உதயன் அவரை வியப்புடன் நோக்கினான். "எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே சுவாமி?"

"தவம் செய்ய அஸ்வத்தாமா அத்திவனம் வருகிறான். இங்கு நாகச் சோமா என்கிற கன்னிகையைச் சந்தித்து அவளைக் காதலித்து மணக்கிறான்.. அவர்களுக்கு இரட்டை மகன்கள் பிறக்கிறார்கள். பல்லவச் செடி அணிந்தவன் பல்லவத்தைத் தோற்றுவிக்கிறான். சந்திரகாந்த செடியை அணிந்தவன் காம்போஜத்தைத் தோற்றுவிக்கிறான். விதிவசத்தால் ஒரு பல்லவன் காம்போஜத்தின் மாப்பிள்ளையாகப் போகிறான். அவன் வழியில் தோன்றியவன் மீண்டும் பல்லவத்திற்கே மன்னனாகப் போகிறான். பல்லவம் என்கிற சூரியன் அஸ்தமனம் ஆனது. சந்திரன் தோன்றுகிறான். இப்போது சந்திரன் ஆதிக்கம். சந்திரனும் விரைவில் மறையும். பல்லவம் உறங்கிவிடும். பிறகு சூரியன் எழுவான். இந்தச் சுழற்சிதான் அரசியலிலும் நடக்கிறது."

கிணற்றினுள் ஈர உடையில் இருந்தும், உதயசந்திரனின் வாய் உலர்ந்து போனது.

"பல்லவம் வேரோடு அழியப் போகிறது. பல்லவம் என்கிற பரம்பரை ஆண்டதற்கு அடையாளங்களே

*இல்லாமல் போகும். அத்திமலையானை இழந்ததால் மட்டும் எழுந்த சாபம் அல்ல. அவன் ஆலயப் பாதையை மாற்றியதால் கிடைத்த சாபம் மட்டுமல்ல. உன்னைப் போன்ற வல்லவனையும், நல்லவனையும் புறக் கணித்ததால் உண்டான, பின்னடைவுகள் மட்டும் காரணம் அல்ல. நமது பூமியில் சந்திராதிக்கம் குறைந்து சூரியாதிக்கம் தோன்றப் போகிறது. சூரிய குளம் ஒன்று மிக விரைவில் வலுவாகத் தோன்றும்..!" — சாயாவக்ரர் கூறியதும் அதிர்ந்து போனான், உதயன்.*

*"சுவாமி! பல்லவத்தைக் காப்பாற்றவே முடியாதா?" — துக்கத்துடன் கேட்டான், உதயசந்திரன்.*

"நந்தியின் தலை கொய்யப்படும்.
பெருநந்தியின் மானம் பங்கப்படும்.
வீணையின் தந்திகள் அறுபடும்.
சிறுநந்தியின் தேகம் பொசுக்கப்படும்.
தொண்டை கிழிபடும்.
அபராதம் செய்தவனின் தலை சீவப்படும்.
அத்துடன் பல்லவம் சமாதி நிலையை அடையும்!"

*"கேட்கவே அச்சமாக உள்ளதே, இதற்கான பொருள் என்ன சுவாமி?*

*"பொருள் அறிய முயற்சிக்காதே. இப்போதே மனம் விசனப்படும். காலம் வரும்போது ஒவ்வொன்றாக அரங்கேறும். அப்போது நீ புரிந்து கொள்வாய். இப்போது அதன் பொருளை நீ அறியத் தேவையில்லை!" சாயாவக்ரர் கூறினார்.*

*"சுவாமி. இதனைச் செய்யப்போவது யார்?" — உதயன் கேட்டான்.*

*"நீதான்..!" — கடகடவென்று சிரித்தார், நிழலைப் பிடிப்பான்.*

*அரண்டு போனான், உதயன்..!*

*"நானா?"*

“நீயேதான். உனக்குக் காலம் பல சூசகங்களைத் தெரிவித்து வந்திருக்குமே.” — அவனை ஆழமாக நோக்கினார், சாயாவக்ரர்.

“இல்லையே சுவாமி! எனக்கு எவ்விதத் தகவல்களும் தரப்படவில்லையே!” — உதயசந்திரன் குழம்பினான்.

சற்றே மௌனம் சாதித்த சாயாவக்ரர், யோசனையுடன் ஸ்வஸ்திக கிணற்றைச் சுற்றி நோக்கினார்.

“இந்த ஸ்வஸ்திக கிணற்றை வடிவமைக்கக் கம்பன் அரையனுக்கு யோசனை கூறியது யார்?” — சாயாவக்ரர் கேட்டார்.

“நான்தான் சுவாமி! அடிக்கடி எனது கனவில் இந்த ஸ்வஸ்திக சக்கர வடிவம் தோன்றி வந்தது. முதலில் ஒரு கனவுதான் தோன்றியது. அதில் காளை ஒன்றின் மீது பயணம் செய்யும் என் மகன் இதயசந்திரனை நோக்கி ஓர் அம்பு பாய்ந்து வர, பிறகு அந்த அம்பு அந்தக் காளையைக் கொன்றுவிடுகிறது. காளை மண்ணில் சரிய எனது மகன் அந்தரத்தில் அமர்ந்திருக்க, அப்போது ஒரு நாற்காலியைத் தாங்கி வரும் ஸ்வஸ்திக சக்கரம் அவனை அதில் அமர்த்துகிறது. பிறகு அவன் எங்கோ பறந்து செல்கிறான். நாங்கள் அவன் பின்பாக அலறிக் கொண்டே ஓடுகிறோம்..! இந்தக் கனவுக்குப் பொருள் தெரியாமல் குழம்பினேன். ஆனால் தொடர்ந்து அந்த ஸ்வஸ்திக சக்கரம் எனது கனவில் தோன்றிக் கொண்டே இருந்தது. அந்தக் கனவில் கண்ட ஸ்வஸ்திக சக்கரத்திற்கு வடிவம் கொடுக்கும்படி, கம்பன் அரையனுக்கு நான்தான் யோசனை கூறினேன்..!” — உதயசந்திரன் கூறியதும், சாயாவக்ரரின் முகம் மலர்ந்தது.

“காலம் உன்னிடம் இவ்வளவு தகவல்களைக் கூறியிருக்கிறது. நீயோ ஒரு தகவலையும் கூறவில்லை என்று சொல்கிறாய். நீ கண்ட கனவின் பொருளை நீ அறியவில்லையா?” — வியப்புடன் கேட்டார், நிழலைப் பிடிப்பான்.

"இல்லை சுவாமி!" — உதயன் கூறினான்.

"உனது கனவை மறுபடி எண்ணிப்பார். காளையின் மீது உனது மகன் பயணிக்கிறான். காளை பல்லவர்களின் சின்னம். அதன் மீது அம்பு பாய்ந்து அது மாண்டு போகிறது என்றால், பல்லவர்களின் காலம் முடியப் போகிறது என்று பொருள். உனது மகனைத் தேடி ஸ்வஸ்திக சக்கரம் ஒரு நாற்காலியைக் கொண்டு வருகிறது என்றால், ஸ்வஸ்திகத்தின் அரியணையை உன் மகன் ஏற்கப் போகிறான். ஸ்வஸ்திக சின்னம் எதனைக் குறிக்கிறது என்பதை நீ அறிவாயா? ஸ்வஸ்திகம் சூரியனைக் குறிக்கிறது. சவ—ஆஸ்திகம் இரவைக் குறிக்கும் சந்திரனைக் குறிக்கிறது. அத்தியூரை சூரிய பாதையில் இருந்து சந்திர பாதைக்கு மாற்றினான், நந்திவர்மன். உனது மகன் சந்திர பாதையை மீண்டும் சூரிய பாதைக்குத் திருப்பப் போகிறான். புரிய வில்லையா! உனது மகன் பெரிய சூரிய குலத்தைத் தோற்றுவிக்கப் போகிறான். சூரிய குலத்தின் வித்துதான் உனது மகன். சூரிய குலமான ஆதிசோழர்களைப் பற்றி நீ அறிவாய் அல்லவா? அத்திமலைத்தேவனை ஆராதித்த கரிகாலன் சூரியக்குலத்தோன். கிள்ளிவளவன், நெடுங்கிள்ளி என்று சோழர்கள் ஆண்ட பூமி மீண்டும் உயிர்த்தெழப் போகிறது. உனது மகன் புதிய சோழத்துக்கு வித்தளிப்பான். அவனது வழியில் வரும் சோழ மன்னன் காஞ்சியைக் கைப்பற்றிப் பல்லவத்தை வேரோடு களைவான். இதுவே வருங்காலம்! எனவே, உன்னை மீறி நடக்கும் காலத்தின் லீலைகளை எண்ணி நீ கலங்காதே. வருவதை அப்படியே ஏற்றுக்கொள்."

உதயசந்திரன் மனம் கலங்கினான்.

"சுவாமி! சதவாஹனர் காலத்தில் துவங்கி, புலிசோமன், புலிவேமு, பல்லவ இளந்திரையன், விஷ்ணுகோபன், சிவஸ்கந்தவர்மன், சிம்மவர்மன், அவனிசிம்மன், மகேந்திர பல்லவன், நரசிம்ம பல்லவன்,

ராஜசிம்மன் என்று பல ஒப்பற்ற மன்னர்கள் ஆட்சி செய்த இடம். கலை பொக்கிஷங்களாக ஆலயங்களையும், திருகடன்மல்லையையும் எழுப்பிய குலம். சமுத்ரகுப்தன், புலிகேசி, சாணக்கியர், பாரவி, தண்டி என்று பல சான்றோர்கள் வந்து போற்றிய குலம். முக்கூடல் கடிகையை உருவாக்கிய குலம். எல்லாவற்றிற்கும் மேலாக அத்திமலைத்தேவனுக்காகத் தங்களது சகலத்தையும் அர்ப்பணித்த குலம் பல்லவ குலம். அந்தக் குலம் நசித்துப் போகும் என்பதை என்னால் ஜீரணிக்க இயலவில்லை. ஒருவேளை, அத்திமலைத்தேவனின் சிலையை அதற்குள் கண்டுபிடித்தால், பல்லவம் பிழைக்குமா?" — உதயன் மருகினான்.

"பல்லவரின் காலத்தில் அத்திமலையான் மீண்டு வரமாட்டான். எனவே அத்தகைய கற்பனைகளில் ஈடுபடாதே. பல்லவத்திற்கு மங்கலம் பாடும் நேரம் வந்துகொண்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்..!"

"சுவாமி! தாங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்!" — உதயன் கூற, நிழலைப் பிடிப்பான் அவனை வியப்புடன் நோக்கினார்.

"என்ன உதவி வேண்டும், உதயா?"

"தாங்கள் சிறிது காலம் காஞ்சியில் தங்கி, எனது சகோதரி ரேவாதேவிக்கும், அவளது மகனுக்கும் தக்க ஆலோசனைகளை வழங்கி, பல்லவத்தைப் பாதுகாக்க வேண்டும். அழியப்போகும் பல்லவம் பெருமையுடனே போகட்டும். இழிவுநிலை அடைந்து போகக்கூடாது. எனக்காக இந்த உதவியைச் செய்யுங்கள்." உதயசந்திரன் கூறினான்.

புன்சிரிப்புடன் அவனை நோக்கினார், சாயாவக்ரர்.

"செய்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. உனது நாட்டை நான் கவனித்துக் கொள்கிறேன். நீ எனது நாடான சோழத்தை வலுவான நாடாக மாற்ற வேண்டும். சூரிய

குல சோழம் உன்னால் கிளர்ந்து எழ வேண்டும். சோழம் உலகையே பெருமையுடன் ஆள வேண்டும். இதற்கு நீ ஒப்புக்கொள்ள வேண்டும்..!" — சாயாவக்ரர் கூற, உதயசந்திரன் தலையசைத்தான்.

"எனக்கு அடைக்கலம் கொடுத்த நாட்டை வலுவான தேசமாக மாற்றுகிறேன். எனது பல்லவத்தின் குருதியை உரமாகக்கொண்டு புதிய சோழத்தை உருவாக்குகிறேன். இது உறுதி..!" — உதயன் உணர்ச்சியுடன் கூற, அவனது முதுகில் அன்புடன் தட்டிய சாயாவக்ரர் அவனை ஒருமுறை ஆழமாகப் பார்த்துவிட்டு, அவன் செவியில் ஏதோ கிசுகிசுத்துவிட்டு, மீண்டும் நீரில் குதித்து மறைந்து போனார்.

மீண்டும் தனது மாளிகைக்கு வந்தவன், தொட்டிலில் இருந்த குழந்தையை உயர்த்திப் பிடித்தான். பீயுஷமணி அவனை வியப்புடன் பார்த்தாள்!

"மகனே! இனி உனது பெயர் இதயசந்திரன் இல்லை. இனி உனது பெயர் ஜெயாதித்யன். நந்திவர்மன் சூரிய பாதையிலிருந்து சந்திர பாதைக்கு மாறினான். நாம் சந்திர பாதையில் இருந்து சூரிய பாதைக்கு மாறுகிறோம். அதற்காகத்தான் இதயசந்திரன் என்கிற உனது பெயரை வெற்றி சூரியன் என்பதைக் குறிக்கும் வகையில் ஜெயாதித்யன் என்று மாற்றி இருக்கிறேன்!" — உதயசந்திரன் புதிய உத்வேகத்துடன் பேச, அவனது திடீர் உற்சாகத்திற்கான காரணத்தை அறிய முடியாமல் நின்றாள், பீயுஷமணி.

குழந்தையின் பெயரை மாற்றும்படிதானே, உதயனின் செவிகளில் கிசுகிசுத்துவிட்டுச் சென்றிருந்தார், சாயாவக்ரர்.

# 26. பாணன் மகள் எய்த பாணம்

*பஞ்ச பொய்கை க்ஷேத்திரம். கஜதீர்த்தம், அக்னிதீர்த்தம், பிரம்ம தீர்த்தம், இந்திர தீர்த்தம் மற்றும் கைரம் என்கிற அல்லிகுளம் ஆகிய ஐந்து குளங்கள் இருந்ததால் அந்தப் பகுதி பஞ்ச பொய்கை க்ஷேத்ரம் என்றும் ஐந்து கேணி என்றும் அழைக்கப்பட்டு வந்தது. ஒவ்வொரு குளத்தின் அருகேயும் ஒரு மாலவனின் விண்ணகரம் இருந்தது. கஜதீர்த்தத்தின் கரையில்தான், அஞ்சிலை அணங்கு வசித்து வந்தாள். ஜெயவர்மன் அளித்த சுவடிகளை நரசிம்மவர்மனிடம் அவள் கொடுத்தது அந்தக் கஜதீர்த்தத்தின் கரையில்தான்.

தந்திவர்மன் தனது பரிவாரங்களுடன் கடல் மல்லைக்கு வந்திருந்தான். பின்னிரவில் நிறைய விலங்குகள் நடமாடும் என்பதை அறிந்திருந்த அவன்,

---

* இன்றைய திருவல்லிக்கேணிதான் அப்போதைய பஞ்ச பொய்கை க்ஷேத்திரம். ஐந்து மாலவன் விண்ணகரங்களையும் இணைத்து ஒரே ஆலயமாகக் கட்டி, இன்று பார்த்தசாரதி கோயிலாகப் புகழ் பெற்று விளங்குகிறது. முதலாழ்வார்களில் கடையவரான பேயாழ்வார், 'மூன்றாம் திருவந்தாதியில் வந்துதித்த வெந்தித்திரைகள் செம்பவள வெண்முத்தம்' என்கிற பாசுரத்தில் திருவல்லிக்கேணியைப் பாடியுள்ளார். அவரது சீடர் திருமழிசை ஆழ்வார், இந்த ஆலயத்து அரங்க நாதனை மட்டுமே பாடியுள்ளார். ஆனால் நந்திவர்மன் காலத்திய திருமங்கை ஆழ்வார் மட்டும், ஐந்து மாலவன்களையும் பாடி, 'இப்பவரில்லா மாதர்கள் வாழும் மாடமாம் மயில்திருவல்லிக்கேணி' என்று பாடியுள்ளார். எனவே இந்த ஆலயம் நந்திவர்மன் காலத்தில் ஒருங்கிணைக்கப் பட்டதாகக் கொள்ளலாம்.

பின்னிரவில் வேட்டையாடுவதற்காக மலையில் இருந்து புறப்பட்டான்.

விடிவதற்கான அறிகுறிகள் தென்பட, வேட்டை யாடியது போதும் என்கிற எண்ணத்தில் மலைக்குத் திரும்ப யத்தனித்தான்.

அப்போது —

வானம் திடீரென்று பொத்துக்கொண்டது போன்று பேய் மழை பெய்யத்துவங்க, தந்திவர்மனும் அவனது பரிவாரங்களும் மழையில் சிக்கிக் கொண்டனர்.

"அரசே! அருகாமையில் பஞ்ச பொய்கை க்ஷேத்ரம் உள்ளது. அங்கு ஆலய மண்டபத்தில் தங்கிவிட்டு, மழை நின்றதும் புறப்படலாம்" என்று காவல் தலைவன் கூற, தந்திவர்மன் சம்மதித்தான்.

துளசிக் காடுகளைக் கடந்து அல்லிக்கேணியை அடைந்தான். அவனது தந்தை நந்திவர்மனின் காலத்தில் ஐந்து ஆலயங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரே ஆலயமாக எழுப்பப்பட்டிருந்தன.

தந்திவர்மன் தனது பரிவாரங்களுடன் அல்லிக்கேணி ஆலயத்தின் முகப்பு மண்டபத்தில் நின்றான். மழை தொடர்ந்து பெய்து கொண்டிருக்க அப்போது மழையின் ஊடே யாழ் மீட்டப்படும் ஒலி கேட்டது. தொலைவில் தாழம்பூ குடை ஒன்றை ஏந்தி ஒரு நங்கை வந்து கொண்டிருந்தாள். தந்திவர்மன் முதலில் கவனித்தது அவளது பாதங்களைத்தான். அவளது காற்சதங்கைகள் குலுங்க, அவள் கையில் ஒரு யாழை ஏந்தியிருந்தாள். அவளது வலது தோளினில் யாழின் யாளி படிந்திருந்தது.

தாழம்பூ குடையை நிலத்தில் வைத்தவள், யாழை மீட்டியபடி ஆலயத்தைப் பார்த்தபடி நின்றாள். மண்டபத்தில் நின்ற தந்திவர்மனையோ அவனது பரிவாரங்களையோ அந்தப் பாணர் குலத்து பாடினி கவனிக்கவில்லை. யாழை நிலத்தில் வைத்தவள் ஆலயத்தின் முன்பாக நின்றாள்.

மெலிந்த உயரமான தேகம். கோபுர கொண்டையைப் போட்டிருந்தாள். கழுத்தில் மகிழம்பூ மாலை. செங்கல்பொடி வண்ணத்தில் மார்புக் கச்சையும், அதே வண்ணத்தில் சேலையும் அணிந்திருந்தாள். செவிகளில் ஸ்வர்ண தொங்கணங்கள். கொண்டையில் திருகுப்பூ. ஆடம்பரமான அலங்காரம் இல்லையென்றாலும், அப்சரஸைப் போன்று காணப்பட்டாள். அவளுக்கு அழகு சேர்த்ததே முகத்தில் தவழ்ந்த அந்த அமைதிதான்.

திடீரென்று ஆலயத்தின் வாயிலில் குயில் ஒன்று இயம்ப ஆரம்பித்தது. மழையின் ஒலியை மீறிக்கொண்டு தேன்மழை பொழிய ஆரம்பித்தது.

தந்திவர்மன் அவளது குரலைக் கேட்டு மலைத்துப் போனான்.

"புருவவில் குமரியாம் நீ
ஒன்றுகட் காவிஅம் பாணத்தை அளியநான்
உறநின்று உடக்குமவன்,
நீ செருமுகத்து உபயகட் திருத்தகப்
புகுமுகத் தால் செஞ்செவே
அளியநான் உறநின்று உடக்கிதிறை
திறை கொள்ளும் நோக்கத்தி நீ
இருள்முகக் கங்குல்
களிற்று அண்ணல் அவன்
நீ இரைத்து இரைத்து ஈரம்வற் றாது
இழுக்குமான் மதம் உறக்கடபடாத் துடன்நிமிரும்
இணைமுலைக் களியானை யாய்!
கருமுகில் குழகர்அழ கரைவெல்ல
உருவிளக் காமன்ஏன்
வில்லிபுத்தூர்க் கன்னியே!
நினதுதிரு உருஒன்றும் அமையுமே
காமநோன்பது தவிர்கவே."

உருக்கமாகப் பாடி நின்றாள், அந்தப் பாடினி. அவளது இனிமையான குரலில் மகுடிக்குக் கட்டுண்ட நாகமாக ஆடாமல், அசையாமல் கேட்டுக்கொண்டே இருந்தான். மெய்ம்மறந்து பாடியபடி நின்ற அவளை விழுங்குவது போன்று பார்த்துக்கொண்டிருந்தான். என்றும் இல்லாத

படி அந்தப் பாடலைக் கேட்டதும் அவனது இதயத்தில் அமைதியும் நிம்மதியும் தவழ்ந்தன.

பாடியபடி அந்தப் பாடினி ஆலயத்தினுள் பிரவேசித்து ஆலயத்தை வலம் வந்தாள். ஒவ்வொரு சந்நிதியின் முன்பாகவும் நின்று பாடியவள் மீண்டும் ஆலய வாயிலில் நின்று தனது பண்ணிசையை நிறைவு செய்தாள்.

மீண்டும் தனது யாழை தோளினில் சரித்துக்கொண்டு தாழம்பூ குடையை எடுத்துக் கொண்டாள். மழை நின்று போனாலும் இன்னும் தூறிக்கொண்டுதான் இருந்தது.

அந்தப் பெண் மீண்டும் வந்த வழியே நடக்க, தந்திவர்மனின் இதயத்தில் சலனம். இனி அந்தப் பெண்ணைக் காணமாட்டோமா என்று ஒருவித வேதனை தோன்ற, அவள் பின்பாகவே ஓடிச்சென்றான்.

"பெண்ணே!" என்று அழைத்தபடி ஆவலாய் வழிமறித்தான்.

திகைப்புடன் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

"பெண்ணே! உனது பாடலைக் கேட்டு மெய்ம் மறந்தேன். 'புருவவில் குமரியாம்' என்று நீ பாடிய பாடல் என்னை நெகிழ்த்திவிட்டது..!" — தந்திவர்மன் அவளைக் கிரக்கத்துடன் பார்க்க, அந்தப் பெண் குழம்பினாள்.

"மாலவனுக்குப் பாவை நோன்பு நோற்றவளை குறித்துப் பாடினேன் ஐயா. அவளுக்காகப் பாடப்பட்ட பாடல். தங்களுக்காக அல்ல!" — அந்தப் பெண் கண்களைத் தாழ்த்திப் பணிவுடன் கூறினாள்.

"நீ யாருக்காகப் பாடினாலும், எனது அனுமதியின்றி அந்தப் பாடல் எனது செவிகளில் புகுந்து இதயத்தை உருக்கிவிட்டன. அந்தப் பாடலின் பொருளை மட்டும் கூறிவிட்டுப் போ. இல்லையென்றால், எனது சிந்தை கலங்கிவிடும்..!" — தந்திவர்மன் அவளைப் பரிதாபமாகப் பார்த்தான்.

"அழகிய மாலவனை அடைவதற்கு உருவம் இல்லாத காமனை நோக்கி ஏன் பாவை நோன்பு நோற்கின்றாய். உனது அழகிய வடிவு ஒன்றே அவனை உன்னிடம் சேர்ப்பித்துவிடுமே' என்று வில்லிப்புத்தூர் கோதையை நோக்கிப் பாடினேன், அவ்வளவே..!" அந்தப் பெண் கூறினாள்.

அந்தப் பாடலை விளக்கும்போது அந்தப் பெண்ணின் முகத்தில் தென்படும் பரவசத்தை ரசித்தான், தந்திவர்மன். அந்தப் பரவசம் தொடரட்டும் என்று அந்தப் பாட்டைப் பற்றியே அடுத்தக் கேள்வியையும் தொடுத்தான்.

"அற்புதம்! இந்தப் பாடலின் முழுப் பொருளினையும் சொல்ல முடியுமா?"

ஒரு பெண்ணைக் கவர வேண்டும் என்றால், முதலில் அவளுக்குப் பிடித்தமான விஷயங்களைக் குறித்துப் பேச வேண்டும் என்பதைத் தெரிந்திருந்தான், தந்திவர்மன்.

இலக்கியமும் தமிழ் நாட்டமும் உடையவன் போல இருக்கிறதே! சற்றே வியப்புடன் அவனை ஏறிட்டுப் பார்த்த அந்தப் பாடினி, பாடலின் முழுக் கருத்தையும் சொல்லத் துவங்கினாள்.

"அதாவது, மன்மதனோ ஒரு கரும்புவில் மட்டுமே உடையவன்! ஆனால் நீயோ இரண்டு கரும்புவில் போன்ற புருவங்களை உடைய குமரி; அவனுடைய அம்பு செங்கழுநீர்ப்பூ; அந்த அம்பை நாணேற்றிப் போர் செய்வான் மன்மதன்;

நீயோ, நாணமும் கருணையும் இயற்கையாய் இரு கண்களில் அம்புகளாய்க் கொண்டவள்; உனது முகமோ செந்தீயைப் போன்று சிவந்து இருக்கும்; அவன் முகமோ இருளைடைந்து இருக்கும்.

யானையின் மத்தகங்களைப் போன்று சேலையால் மூடிய மார்பினைக் கொண்டவள் நீ; எவ்வளவு கஸ்தூரியை இறைத்தும் பொலிவு குன்றாத கஸ்தூரி மான் நீ.

எனவே, மாலவனை வெல்ல, காமனை எதற்குத் துணைக்கு அழைக்கிறாய். உனது தேக வடிவே, அழகனை உன்னிடம் சேர்ப்பித்துவிடும்! இதுதான் பாடலின் முழுப் பொருள்." — அந்தப் பாடினி சற்றே வெட்கத்தினால் சிவந்த முகத்துடன் விலக்கினாள்.

"அருமை.. அருமை..! பாடலும் அருமை..! உனது விளக்கமும் அருமை. தேனாக இசையைப் பொழிந்தாய். அமுதாக பொருளை விளக்கினாய். உனது அபிநயங்கள் நாடகமாக எனது உள்ளத்தை நிரப்பிவிட்டன!" — தன்னை மறந்து தந்திவர்மன் கூற, அந்தப் பெண் பதைபதைத்துப் போய் நோக்கினாள்.

"வாலிபரே! என்ன வார்த்தைகளைக் கூறுகிறீர்கள்! நான் மாலவன் சேவையில் ஈடுபட்டிருக்கும் பாணர் குல மகள். பாடினியின் பாடல்கள், பரந்தாமனுக்கு மட்டுமே!" — சற்றே காட்டத்துடன் ஒலித்தது அவளது குரல்.

"உனது பெயரைக் கூறு?" என்று கூற, அவள் மௌனம் சாதித்தாள். முன்பின் பார்த்திராத ஒரு ஆண்மகனிடம் எப்படிப் பெயரைச் சொல்லுவது. ஏதோ பாடலைப் பற்றி விளக்கம் கேட்டான் என்று பதிலளித்தால், அதீத உரிமை எடுத்துக் கொள்கிறான்.

பிரதானிகளில் ஒருவர் ஓடி வந்தார்.

"அரசே! மழை நின்றுவிட்டது. காஞ்சிக்குப் புறப்படலாமா?"

அவர் கேட்டதும்தான் தந்திவர்மனின் ஆடை அலங்காரங்களை நோக்கினாள். அவனது ஆடம்பரமான ஆடையும் ஆபரணங்களும் அவன் மன்னன் என்பதைப் புலப்படுத்தின. தொலைவில் நின்ற புரவிகளும், கூடியிருந்த அவனது மெய்க்காவலர்களும் அவன் பல்லவ மன்னன் என்பதை ஊர்ஜிதம் செய்தன.

"மன்னித்துவிடுங்கள் அரசே! தாங்கள் யார் என்று தெரியாமல் பேசிவிட்டேன். எனது பெயர் கோகில

*வாணி. மாதங்க பாணரின் மகள். அவருக்கு ஆனந்த பாணன் என்று ஒரு மகனும் உண்டு. நான் ஏழு தந்திகளை உடைய சிறு யாழ் கொண்டு பாடுபவள். எனது தந்தையும் அண்ணனும், இருபத்தியொரு தந்திகளை மீட்டும் பெரும்பாணர்கள்*" என்றாள்.*

*தான் அரசன் என்றவுடன் கேட்காமலேயே பதில்கள் வருவதை உணர்ந்தான், தந்திவர்மன்.*

*"இந்தப் பகுதியைச் சேர்ந்தவளா நீ?" — தந்திவர்மன் கேட்டான்.*

*"இல்லை மன்னா! தென்காஞ்சியில் பாணர்சேரியைச் சேர்ந்தவள். வழக்கமாக அத்திமலையில் பண்ணிசை பாடி, அத்திமலைத்தேவனை மகிழ்வித்தவர் எனது பாட்டனார். மேலும், ஆலய மேற்குப்புறத்தில் ஒரு நந்தவனம் அமைத்து, புஷ்ப கைங்கரியங்களைச் செய்துகொண்டிருந்தோம். மேற்கு வாசலை மூலவாசல் ஆக்கியதால், எங்களது நந்தவனம் நீக்கப்பட்டது. மேலும் காம்போஜ தேவராஜ மார்க்கத்தின் தலைவர் சிம்மவபு நாங்கள் பண்ணிசை பாடுவதற்கு தடை விதித்தார். அவர்களுடைய தேவராஜ மார்க்கத்தின் விஸ்வநாத ஆகமங்களில் ஆலயங்களில் பண்ணிசைப்பது தடை விதிக்கப்பட்டுள்ளது என்றார்கள். வேறு வழியின்றி, நாங்கள் இந்தப் பகுதிக்குக் குடி பெயர்ந்தோம்..!" — சற்றே வருத்தத்துடன் கூறினாள், கோகில வாணி.*

*"கோகில வாணி! பொருத்தமாகத்தான் பெயரை வைத்திருக்கிறார், உனது தந்தை. விரைவில் நீங்கள் பழையபடி அத்திமலையில் பண்ணிசை பாடி அத்திமலைத்தேவனை மகிழ்விக்கலாம்!" என்றதும் கண்கள் விரிய அவனை நோக்கினாள்.*

---

* சிறுபாண் -- ஏழு நரம்புகள் கொண்ட சிறிய யாழினை மீட்டிக்கொண்டு பாடுபவர்கள்.

பெரும்பாண் -- 21 நரம்புகள் கொண்ட பெரிய யாழினை மீட்டிக்கொண்டு பாடுபவர்கள்.

*அவளது தந்தை மாதங்க பாணருக்கு காஞ்சியைவிட்டு வந்துவிட்டோமே என்கிற வருத்தம் அதிகம் இருந்தது. மன்னர் கூறியதை கேட்டால் எவ்வளவு சந்தோஷம் அடைவார். ஓடிச்சென்று தந்தையிடம் அப்போதே அந்தத் தகவலைக் கூற வேண்டும் என்பது போன்று பரபரத்தாள்.*

*"கோகில வாணி! உனது இனிய பாடலால், இன்றைய பொழுது நன்றாக விடிந்தது!" என்று கூறியவன் தனது குதிரையை நோக்கிச் சென்றான்.*

*"நான் யாரைப் பார்த்தேன் தெரியுமா! மன்னர் பெருமானை. எனது பாடலைக் கேட்டு மலைத்து விட்டார். விரைவில் நம்மை மீண்டும் அத்திமலையில் பண்ணிசை செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்வதாகக் கூறியுள்ளார்..!" — பேரானந்தத்துடன் அவள் கூற, அவளது தந்தையும், அண்ணனும் மலைப்புடன் அவளைப் பார்த்தனர்.*

*குதிரையின் மீது சென்ற போது தந்திவர்மன் திடுக்கிட்டு நின்றான். இப்போது அவனது செவியில் புதிய பாடல் ஒன்று கேட்டது. கரகரத்த குரலில் வைணவத் துறவி ஒருவர் பாடியபடி வந்தார்.*

*தந்திவர்மன் திடுக்கிட்டான்.*

"நந்தியின் தலை கொய்யப்படும்.
பெருநந்தியின் மானம் பங்கப்படும்.
வீணையின் தந்திகள் அறுபடும்.
சிறுநந்தியின் தேகம் பொசுக்கப்படும்.
தொண்டை கிழிபடும்.
அபராதம் செய்தவனின் தலை சீவப்படும்.
அத்துடன் பல்லவம் சமாதி நிலையை அடையும்!"

*"ஸ்வாமி! இப்போதுதான் இந்தக் காலைப்பொழுது நன்றாக விடிந்தது என்று கூறினேன். அதற்குள் என் இதயத்தைப் பிளக்க வைக்கும் பாட்டினை பாடி வருகிறீர்களே. தாங்கள் யார்?" — தந்திவர்மன் கேட்டான்.*

"பாடினியின் பாட்டைக் கேட்டுப் பரவசம் கொண்டாய். இந்த நாடோடியின் பாட்டைக் கேட்டு அதிர்ந்து நிற்கிறாய்..! அவள் பாடியது தெய்வீகம். நான் பாடியது ஆருடம்! எதிர்காலப் பல்லவத்தைக் காக்க வேண்டுமென்றால், நீ உன்னைப் புரிந்து கொள்ள வேண்டும். நான் சோழ நாட்டுத் திருமங்கை மன்னன் அமைச்சராக இருந்தவன். ராஜசிம்ம பல்லவனின் பெயரன், பழைய பல்லவ தளபதி உதயசந்திரன் என்னை உன்னிடம் அனுப்பியிருக்கிறான், பல்லவத்தைக் காக்க வேண்டி!" — சாயாவக்ரர் கூறியதும் அதிர்ந்தான், தந்திவர்மன்.

"எனது தாய் ரேவாதேவியின் சகோதரர் உதயசந்திரன் அல்லவா?" — தந்திவர்மன் திகைத்தான்.

"இருக்கலாம். ஆனால் பல்லவத்தால் நாடு கடத்தப்பட்டு இப்போது ஸ்வேதகிரியில் வசிக்கிறார். அவர்தான் என்னை உன்னிடம் அனுப்பினார்..!" என்றதும் பயபக்தியுடன் அவரை நோக்கினான்.

"நான் உன்னிடம் நிறையப் பேச வேண்டும். பல்லவத்தை பேரிடர்கள் தாக்கப் போகின்றன. அதைத் தவிர்க்க வேண்டுமென்றால், நீ என்னை உனது ஆசானாகக் கொள்ள வேண்டும்." — சாயாவக்ரர் கூற, தனது பிரதானிகளை நோக்கிக் கையசைத்தான், தந்திவர்மன்.

"ஸ்வாமிக்கு ஒரு புரவியைக் கொண்டு வாருங்கள்!" என்றவுடன் ஒரு கரியநிற குதிரையை அழைத்து வந்தான் ஒருவன்.

'நல்லது நடக்க வேண்டும் என்று தந்திவர்மனுடன் செல்கிறேன். வெள்ளைக் குதிரையாக இல்லாமல் கரிய குதிரையாக வந்துள்ளதே. நமது பிரயத்தனங்களைச் செய்வோம். முடிவை அத்திமலைத்தேவனிடமே விட்டுவிடுவோம்!' என்றபடி அந்தப் புரவியில் ஏறினார், சாயாவக்ரர்.

# 27. பாயும் தாய், பதுங்கும் தனயன்!

*கடம்ப தேசத்து இளவரசி அக்கள நிம்மடியை தந்திவர்மனுக்கு மணமுடிப்பது என்று ரேவாதேவி தனது ஆலோசகர்களுடன் பேசிக்கொண்டிருந்த அதே சமயத்தில்தான், கோகில வாணி பாடினியிடம் தனது மனதை பறிகொடுத்துவிட்டிருந்ததை உணர்ந்தான், தந்திவர்மன். அல்லிக்கேணியில் இருந்து தன்னுடன் பயணித்த, சாயாவக்ரரிடம் தனது எண்ணத்தைக் கூறியவுடன், அவர் கடகடவென்று நகைக்கத் தொடங்கினார்.*

*"இப்படித்தான், வெள்ளக்குளம் என்கிற பகுதிக்கு நாங்கள் சென்ற போது திருமங்கை மன்னன் அங்கு நீர் எடுக்க வந்த குமுதவல்லி என்கிற வைணவப் பெண்ணைக் கண்டதும் காதல் கொண்டு, அவள் நினைவாகவே இருந்து, மன்னர் பதவியைவிட்டு, கள்வனாகி பிறகு பரத்துவத்தில் இணைந்தார். நீயும் மன்னனாக இருந்து, சாதாரண ஒரு பாடினியை காதலிக்கிறாய். உனது அரச குடும்பம் இதற்கு இசைவு தர வேண்டுமே!" — சாயாவக்ரர் கூறியதும், தந்திவர்மன் யோசித்தான்.*

*"நானும் ஓரளவிற்குப் பல்லவ குடும்பச் சரித்திரம் அறிவேன், ஸ்வாமி. நரசிம்ம பல்லவன் சாமவை என்கிற சாதாரண வைணவ குடும்பத்திலிருந்து பெண் எடுத்து அவளை அரசியாக அமர்த்தியிருக்கிறான். மகா மல்லனால் முடிந்தது, இந்தத் தந்திவர்மனால் முடியாதா?" — தந்திவர்மன் கேட்டான்.*

"நியாயமான கேள்விதான். ஆனால் இதற்கான விடையையும் நீதான் கூற வேண்டும். ஆனால், நீ எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் மிக எச்சரிக்கையாக வைக்க வேண்டும்" என்று மட்டும் கூறினார், சாயாவக்ரர்.

"சுவாமி! உதயசந்திரரைப் பற்றி நான் நிறையவே அறிந்திருக்கிறேன். பல்லவத்தின் மீது அதிக பக்தி செலுத்தியவர் . அவரே தங்களை என்னிடம் அனுப்பி இருக்கிறார் என்றால், உங்களது வழிகாட்டுதல்படி நான் நடக்கிறேன். அரண்மனைக்குச் சென்றதும் தங்களை எனது அரசியல் ஆலோசகராக நியமிக்கிறேன்! தாங்கள் எனக்கு அரசியல், குடும்ப வாழ்க்கை, ஆன்மிகம், போர்க்கலை அனைத்திற்குமே உறுதுணையாக இருக்க வேண்டும்!" — தந்திவர்மன் உணர்ச்சியுடன் கூறினான்.

"தந்திவர்மா! நான் க்ஷேத்திராடனம் செய்து கொண்டிருந்தவன். உதயசந்திரன் கேட்டுக்கொண்டதாலேயே உன்னிடம் வந்திருக்கிறேன். யார் உனக்கு என்ன ஆலோசனைகளைக் கூறினாலும், அது எனது ஆலோசனைகளாகவே இருந்தாலும் கூட, பாலையும் நீரையும் பிரித்துப் பருகும் அன்னப்பறவையைப் போன்று நல்லதை ஏற்று, தீயதை புறக்கணிக்கக் கற்றுக்கொள். பல்லவத்திற்கு க்ஷீண திசை துவங்கிவிட்டது. உன்னால் பல்லவம் அழிந்தது என்று இல்லாமல் காய்களைச் சாமர்த்தியமாக நகர்த்து. காம்போஜத்தின் ஆதிக்கம் அழிக்கப்பட வேண்டியதுதான். ஆனால் உனது தாய் அவர்களின் பக்கம் இருக்கிறாள் என்பதை மறந்து விடாதே. காம்போஜ — காஞ்சியின் பிரச்னை தாய் — மகன் இடையே பிரச்னையாக மாறிவிடாமல் பார்த்துக் கொள்." — தன்னால் இயன்ற அளவு அவனுக்கு ஆலோசனைகளைக் கூறினார், சாயாவக்ரர்.

தந்திவர்மன் காஞ்சிக்கு வந்து சேர்ந்ததும், பிரச்னைகள் துவங்கிவிட்டன.

"ராஜமாதா தங்களுக்காகக் காத்திருக்கிறார்! முக்கிய மான பிரச்னை ஒன்றை விவாதிக்க வேண்டுமாம்!" — புதிய அரண்மனை அதிகாரி, விமலவர்மர் வந்து பணிவுடன் அறிவித்தார். தளபதி சூடாமணிவர்மனின் உறவினர். இவரும் காம்போஜத்தைச் சேர்ந்தவரே. முந்தைய தினமாக இருந்தால், தாய் அழைத்ததும் காண ஓடோடிச் சென்றிருப்பான். ஆனால் இப்போது முற்றிலும் புதிய தந்திவர்மன் ஆயிற்றே.

ஒரு செவியில் கோகில வாணியின் இனிமையான பண்ணிசை ஒலித்துக் கொண்டிருக்க, மறுசெவியில் உதய சந்திரன் அனுப்பிய சாயாவக்ரர் கூறிய அறிவுரைகள் ரீங்கரித்துக் கொண்டிருந்தன. உதயசந்திரனைப் பற்றிக் காஸ்யப சதகரணி இவனுக்குப் பல கதைகளைக் கூறியிருக்கிறார். பல்லவத்திற்காகத் தனது உயிரைத் தருபவர்கள் பட்டியலில் அவன் பெயர்தான் முதலில் இருக்கும். தானே பல்லவ மன்னனாக அமரக்கூடிய சந்தர்ப்பங்கள் கிட்டியும், அதனைத் தான் ஏற்காமல், காம்போஜத்தில் இருந்து அழைத்துவரப்பட்ட நந்திவர் மனுக்காகப் பாண்டியர்கள் மற்றும் சித்ரமாயனை எதிர்த்துப் போராடினான், என்றெல்லாம் அறிந்திருக் கிறான். உதயசந்திரன் தனது தாய் ரேவாதேவியின் சகோதரன் என்பதையும் அறிந்திருந்தான். தனது தாயும், தந்தையும் அவனிடம் நன்றியுடன் நடக்கவில்லை என்பதையும் புரிந்து கொண்டிருந்தான். தன்னையும் அறியாமல் உதயசந்திரனின் மீது ஒருவித பக்தியை வளர்த்திருந்தான். ஆனால், உதயசந்திரனே இவனை வழி நடத்துவதற்காகச் சாயாவக்ரரை அனுப்பியதும், அவனுள் ஒருவித துணிவு ஏற்பட்டிருந்தது. காம்போஜம் கலந்துவிட்ட பல்லவக் குருதியில், காம்போஜத்தை வடி கட்டிவிட்டு, மீண்டும் காஞ்சியின் பெருமையை நிலை நாட்ட வேண்டும் என்கிற எண்ணம், தனது முன்பாக நிற்கும் விமலவர்மரைக் கண்டதும் அவனுள் பிறந்தது.

"ராஜமாதா அழைப்பது இருக்கட்டும். மன்னன் அழைப்பதாகத் தலைமை அமைச்சர் கிரிராஜரை அழைத்து வாருங்கள். மிகவும் முக்கியமான அறிவிப்பு ஒன்றைச் செய்ய வேண்டியுள்ளது!" — தந்திவர்மனின் குரலில் ஒலித்த உறுதி விமலவர்மரின் புருவங்களை உயர்த்தச் செய்தது.

தாய் அழைக்கிறாள் என்றால், இதோ வருகிறேன் என்று முணுமுணுத்தபடி தாண்டுகால் நடை போடுபவன், இன்று நிதானமாக இருக்கையில் சரிந்தபடி, தலைமை அமைச்சரை அழையுங்கள் என்று கூறுவது விந்தையிலும் விந்தையாக இருந்தது அவருக்கு.

"மன்னன் தந்திவர்மனுடன் ஒரு வைணவத் துறவி வந்து விருந்தினர் மாளிகையில் தங்கியிருக்கிறார். யார் அவர் என்று தெரியவில்லை!" என்று ஒற்றன் தெரிவித்துக் கொண்டிருந்த செய்தியை செவிகளில் உள்வாங்கிக் கொண்டிருந்த கிரிராஜர், அரண்மனை அதிகாரி விமலவர்மர் அவசரமாக வந்து, மன்னர் தன்னை அழைப்பதாகக் கூறியதும், விசித்திரமாக அவரைப் பார்த்தார்.

"மன்னன் என்னை அழைகின்றாரா? ராஜமாதா அவரைச் சந்திக்கக் காத்திருக்கிறார் என்கிற தகவலை அவரிடம் தெரிவித்தீரா?" — திகைப்புடன் கேட்டார், கிரிராஜர்.

"சொல்லாமல் இருப்பேனா? வழக்கமாகத் தாய்ப் பசுவை நோக்கி ஓடும் கன்றாக ஓடிச்செல்வார். இன்று ஏனோ அலட்சியமாக அமர்ந்து கொண்டார்!" விமல வர்மர் கூறியதும், முகவாயை நீவிவிட்டுக் கொண்டார், கிரிராஜர்.

"வேட்டையாடிய களைப்பாக இருக்கும்!" என்று தனக்குள் கூறியபடி, எழுந்தவர், தனது அங்கவஸ்திரத்தை அழகாக மடித்துத் தனது தோளினில் மாலையாகப்

போட்டுக்கொண்டு மன்னனை காண்பதற்குச் சென்றார். தந்திவர்மன் தன்னை அழைத்தது ராஜமாதாவுக்குத் தெரியுமா என்று யோசித்தபடி நடந்தார்.

கிரிராஜர் மன்னனின் அறையை நெருங்கும்போது, உள்ளே பேச்சுக்குரல் கேட்க, வியப்புடன் உள்ளே நுழைந்தார்.

உள்ளே —

ஒரு வைணவத் துறவி அமர்ந்திருக்க, அவரிடம் பயபக்தியுடன் பேசிக்கொண்டிருந்தான் தந்திவர்மன். உள்ளே நுழைந்த கிரிராஜரை, துறவி அலட்சியமாக நோக்க, தந்திவர்மன், அவரைப் பார்த்தான்.

"சாயாவக்ரரே! இவர்தான் தலைமை அமைச்சர், கிரிராஜர்!" — தந்திவர்மன் கூறினான்.

"அத்திகிரிக்கு மட்டும் ராஜா இல்லை ஐராவத கிரிக்கும் சேர்த்தேவா?" — நையாண்டியுடன் கூறிச் சிரித்தார், சாயாவக்ரர்.

கிரிராஜரின் முகம் சிறுத்தது.

'யார் இந்தத் துறவி. தான் தலைமை அமைச்சர் என்று கூறியும் எழுந்து நிற்காமல், கேலிப்பேச்சு வேறு செய்கிறாரே!'

"சந்தர்ப்பம் கிடைத்தால் இமயகிரிக்குக் கூட நான் ராஜனாகத் திகழும் திறமை உள்ளவன்!" — போலியாகச் சிரித்தபடி கூறினார், கிரிராஜர்.

"இமயத்தில் சேரக்கொடி நாட்டப்பட்டுவிட்டது. எங்கள் கரிகாலன் சோழத்திலிருந்து கல் எடுத்து வந்து வலுவான சோழத்திற்கு அடிக்கல் நாட்டிவிட்டான். இமயகிரிக்கு அலைந்தீர் என்றால், ஐராவத கிரியும் கைநழுவிப் போய்விடும். எச்சரிக்கையுடன் இருங்கள்!" — சிரிக்காமல் கூறினார் சாயாவக்ரர். ஆனால்

உள்ளுக்குள் அவர் நகைத்துக்கொண்டிருப்பது கிரிராஜருக்கு நன்றாகவே புரிந்தது.

"மன்னா! தாங்கள் அழைத்ததாக விமலவர்மர் கூறினார்!"

"ஆம் தலைமை அமைச்சரே! ஒரு முக்கிய அறிவிப்பினை செய்ய நினைக்கிறேன்! இவரது பெயர் சாயாவக்ரர். தற்போது துறவியாக இருந்தாலும், ஒரு காலத்தில் மாவீரர். காம்போஜத்தில் இருந்து வந்த எனது தந்தை நந்திவர்மரின் உயிரை பாண்டியர்களிடம் இருந்து காத்து பல்லவ அரியணையில் அமர வைப்பதற்குக் காரணமாக இருந்த ஆலிநாடரின் அமைச்சராகத் திகழ்ந்தவர்.. என் மீது பாசம் கொண்டவர். இவரை எனது அரசியல் மற்றும் அந்தரங்க ஆலோசகராக நியமிக்கிறேன். அதற்கான அறிவிப்பினை உடனேயே செய்யுங்கள்!" — தந்திவர்மனின் குரலில் இதுநாள்வரை இல்லாத உறுதி காணப்பட, கிரிராஜர் உறைந்து போனார்.

"ஏற்கெனவே தேவராஜ மார்க்கத்தின் தலைவர் தரணீதர தாய்வான் உமக்கு ஆலோசகராக இருக்கிறாரே!" — தலைமை அமைச்சர் தயங்கினார்.

"உமது கருத்துக்களை கேட்கவில்லை. எனது உத்தரவை செயல்படுத்துங்கள்!" — தந்திவர்மன் காட்டத்துடன் சொல்ல, அவர் நேராக அந்தப்புரம் சென்று ரேவா தேவியிடம் மன்னரின் உத்தரவை பற்றிக் கூற, ரேவாதேவி சினத்துடன் கிரிராஜர் மற்றும் தரணீதர தாய்வான் பின்தொடர, தந்திவர்மனின் அறையை நாடி வந்தாள்.

"தந்திவர்மா!" என்று கூப்பாடு போட்டபடி வந்த ரேவாதேவியை அலட்சியமாகப் பார்த்தார், சாயாவக்ரர்.

"மன்னர் நீராடுவதற்குச் சென்றிருக்கிறார். சற்றே அமர்ந்திருங்கள். இப்போது வந்துவிடுவார்!"

"தந்திவர்மன் வருவது இருக்கட்டும். இங்கு வந்து அமர்ந்திருக்கும் நீங்கள் யார்?" எரிச்சலுடன் வினவினாள், ரேவாதேவி.

"நேற்று வரை ஒரு வைணவத் துறவி. இன்று முதல் பல்லவ மன்னனின் ஆலோசகர். மொத்தமாக நோக்கினால், நான் பல்லவத்தின் நலம்விரும்பி."

"துறவிக்கு என்ன அரசியல் தெரியும்? பல்லவத்தின் நலம்விரும்பிகள் நாங்கள் நிறையப் பேர் இருக்கிறோம்! சோழ நாட்டிலிருந்து வந்திருக்கும் நீங்கள் ஒன்றும் பல்லவத்திற்கு ஆலோசனை செய்ய வேண்டியதில்லை." — தரணீதரர் கூற, சிரித்தார், சாயாவக்ரர்.

"கடல் கடந்து வந்த காம்போஜர்களைக் காட்டிலும் அண்டையில் உள்ள சோழ நாட்டுக்கு பல்லவத்தின் மீது அக்கறை உண்டு." — சாயாவக்ரர் கூற, அதிர்ந்து போனாள் ரேவாதேவி.

அங்கிருக்கும் இருக்கை ஒன்றின் மீது அமர்ந்து, தனது இடது காலின் மீது வலக்காலைப் போட்டபடி, தான் அந்தத் துறவியை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை என்பது போன்று அமர்ந்தாள்.

"ஒரு காலின் மீது மற்றொரு காலைப் போடுவது அமர்ந்திருக்கும் பொழுதினில் மட்டுமே சாத்தியமான செயல். நடக்கும் போது அங்ஙனம் போடுவதற்கு இயலாது. இப்போது பல்லவம் அமர்ந்திருக்கிறது. காரணம், காஞ்சி என்னும் ஒரு காலின் மீது காம்போஜம் என்கிற கால் படர்ந்திருக்கிறது. பல்லவம் எழுந்து நடக்கவேண்டுமென்றால், காம்போஜம் என்கிற மற்றொரு கால் நீங்க வேண்டும்!" — சாயாவக்ரர் கூற, அனைவருமே அதிர்ந்தனர்.

சரியாக உள்ளே நுழைந்தான் தந்திவர்மன்.

"அனைவரும் இங்குதான் இருக்கின்றீரா? நல்லதாகப் போனது! முக்கியமான சில அறிவிப்புகளைச் செய்ய

*வேண்டி உள்ளது. நானும், சாயாவக்ரரும் பேசி தீர்மானித்திருக்கிறோம்!" — வரும்போதே தான் தற்போது புதிய சிந்தனையுள்ள மன்னன் என்பதைத் தெரிவித்தபடி வந்தான்.*

*"என்ன இது தந்திவர்மா? யோசிக்காமல் எதை யெதையோ அறிவிக்கின்றாய்?" — நேரடியாகத் தாக்குதலைத் துவக்கினாள், ரேவா.*

*"இதுநாள்வரை எனக்காகத் தாங்கள் யோசித்துக் கொண்டிருந்தீர்கள்! தங்களுக்கும் வயது ஏறுகிறது. எனவே தங்களுக்கு ஓய்வு கொடுக்கலாம் என்று இந்தத் துறவியை ஆலோசகராக நியமித்தேன். எனது தந்தையையே காப்பாற்றியவர் இவர்! என்னையும் நன்றாகவே வழிநடத்துவார்" என்ற தந்திவர்மன்,*

*"கிரிராஜரே! சில புதிய முடிவுகளை அறிவிக்க உள்ளேன்.*

*"முதலில் அத்திமலை ஆலயத்தின் தொன்மையைக் கருத்தில் கொண்டு புதிதாகச் செய்துள்ள மாற்றங்களை நிறுத்தி பழைய சம்பிரதாயங்களை மீண்டும் நிலைநாட்ட எண்ணியுள்ளேன். அதன்படி, ஆலயத்தினுள் பாணர்கள் பண்ணிசை பாடுவதற்கு அறிவிக்கப்பட்ட தடையை நீக்குகிறேன். தடை செய்யப்பட்ட பண்ணிசைக்கும் பாணர்கள் மீண்டும் ஆலயத்தினுள் வந்து பாடுவதற்கு அனுமதி வழங்குகிறேன். தேவராஜ மார்க்கம் கடல் கடந்து வந்த மார்க்கம். அந்த மார்க்கத்தின் ஆகமங் களான விஸ்வநாத ஆகமங்களைக் கொண்டு எதற்காக அத்திமலைத்தேவனை ஆராதனை செய்ய வேண்டும்? எனவே பழைய ஆகமங்களின்படியே ஆராதனைகள் இனி அத்திமலையில் நடைபெறும் என்று அரசாங்க உத்தரவினை இடுகிறேன்!"*

*தாங்கள் எச்சரிக்கையுடன் எழுப்பிய கோட்டை ஒரு நொடியில் நிர்மூலம் ஆவதைக் கண்டு திகைத்து நின்ற*

காம்போஜத்தினர், ராஜமாதாவை நோக்க, அவள் ஆவேசத்துடன் சாயாவக்ரரைப் பார்த்தாள்.

"இதெல்லாம் நீர் செய்யும் வேலைதானே?" — ரேவா அவரை உறுத்துப் பார்த்தாள்.

"இல்லை ராஜமாதா. மறைந்து நிற்கும் அத்தி மலையான் செய்யும் வேலை. அவன் தன்னை வெளிப் படுத்திக் கொள்ளும் நேரம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. தான் வருவதற்கு முன்பாகச் சீர்கெட்டு நிற்கும் தனது அத்திமலை ஆலயத்தைச் சீர் செய்து கொண்டிருக்கிறான், போலும்!"

'அத்திமலைத்தேவன் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் நேரம் நெருங்குகிறது.' சாயாவக்ரர் இப்படிக் கூறியதும், மெய்சிலிர்த்துப்போனது, தந்திவர்மனுக்கு.

"மீண்டும் அத்திமலைத்தேவன் தனது சந்நிதிக்கு வந்து கிழக்கு நோக்கி நிற்பான். அது எனது ஆட்சியில் நடக்கும்" — தந்திவர்மன் உணர்ச்சியுடன் கூற, சாயாவக்ரர் அவனை ஆனந்தத்துடன் நோக்கினார்.

தரணீதரரும், கிரிராஜரும் துறவியை சந்தேகத்துடன் நோக்கினார்கள். தந்திவர்மனின் குரலில் இவ்வளவு உறுதி காணப்படுகிறது என்றால், அந்தத் துறவிக்குக் காணாமல் போன தேவ உடும்பர அத்திமர தேவராஜனின் பிரதிமை இருக்குமிடம் தெரியும் போலும்.

ரேவாதேவிக்கு தந்திவர்மன் தனது பிடியில் இருந்து நழுவிக்கொண்டிருக்கிறான் என்பது புரிந்து போனது. திருமணம் என்கிற கடிவாளத்தை வைத்து தனது பிடியை மீண்டும் இறுக்க வேண்டியதுதான்.

"தந்திவர்மா! கடம்ப மன்னர் ஷஷ்டிதேவா பதவி யேற்று நாற்பதாண்டுகள் நிறைவடைந்ததை மாபெரும் வைபவமாகக் கொண்டாடுகிறார்களாம். நீயும் நானும், அந்த வைபவத்தில் கலந்து கொள்ள வேண்டும். உனது

தந்தை நந்திவர்மனுக்குப் பல உதவிகளைச் செய்துள்ளனர். எனவே நாம் அவசியம் போக வேண்டும். அதனைக் கூறுவதற்குத்தான், நான் உன்னை அழைத்தேன்!" என்றபடி உள்ளுக்குள் பொங்கிக் கொண்டிருந்த கோபத்தை அடைக்கியபடி அறையை விட்டு வெளியேறினாள், ரேவாதேவி.

மற்றவர்கள் அவளைப் பின்தொடர, தந்திவர்மன் சாயாவக்ரரை பணிவுடன் நோக்கினான்.

"எப்படி எனது செயல்பாடு?" — தந்திவர்மன் கேட்க, அவனது முதுகில் தட்டிக் கொடுத்தார், சாயாவக்ரர்.

"முதல் அடியை சரியாக அளந்துவிட்டாய். இரண்டாவது அடியையும் சரியாக அளந்து வைத்து, மூன்றாவது அடியை காம்போஜத்தின் தலையில் வைத்து நிலத்தோடு நிலமாக அழுத்திவிடவேண்டும். உதய சந்திரன் உன்னைப் பற்றி அறிந்தால், உண்மையிலேயே மகிழ்ந்து போவான்!" — சாயாவக்ரர் கூற, தான் சந்தித்தே இருந்திராத உதயசந்திரனுக்கு மனத்தால் நன்றியினைக் காணிக்கையாக்கினான், தந்திவர்மன்.

# 28. கடம்பும், உடும்பும்

இரண்டாவது அடியை எச்சரிக்கையுடன் அளந்து வைக்க வேண்டும் — சாயாவக்ரரின் அறிவுரை தந்திவர்மனது செவிகளில் ரீங்கரித்துக்கொண்டுதான் இருந்தது. இதனிடையே அவகாசம் கிடைக்கும் போதெல்லாம் அல்லிக்கேணிக்குச் சென்று கோகில வாணியைச் சந்தித்துக்கொண்டுதான் இருந்தான். முதன்முதலாகத் தந்திவர்மன் தனது காதலைக் கோகில வாணியிடம் வெளியிட்ட போது, அவள் அதிர்ந்து போனாள். அவள் கையில் ஏந்தியிருந்த சிறுயாழ் நழுவி இருந்தது.

பாணர் பெண்ணை, அதுவும் யாழேந்தி பண்ணிசைக்கும் ஒரு பாடினியை பல்லவ மன்னன் மணப்பதா?

“வேண்டாம் அரசே! அமைதியாகச் சென்று கொண்டிருக்கின்றது எனது வாழ்க்கை. மாலவனைப் பாடிக்கொண்டு நிம்மதியாக உள்ளேன். இப்படியே காலமெல்லாம் அவன் புகழைப் பாடிக்கொண்டு இருந்துவிடுகிறேன். இங்கிருக்கும் அல்லிக்குளத்தைக் கவனியுங்கள். பொய்கை முழுவதும் அல்லி மலர்களால் நிறைந்து, அதன் நீரே தெரியவில்லை. நீந்துவதற்குச் சிரமம் என்கிற காரணத்தினால்தான் இந்தக் குளத்தில் மீன்கள் வாசம் செய்வதில்லை போலும். நீரிலும் சலனமில்லை. கீதையருளிய கண்ணன் வாழும் பகுதியல்லவா! எனவேதான் இப்பகுதியின் பொய்கையும் சலனங்களின்றி ஸ்திதபிரக்னத்துடன் இருக்கின்றது.

*இந்தக் குளத்தைப் போன்றுதான் நானும் எவ்வித சலனமுமின்றி இருக்கிறேன். எனது மனதில் சலனங்களை உண்டாக்காதீர்கள்!" என்றுதான் கூறியிருந்தாள்.*

*"அரண்மனையில் அரம்பையர் போன்ற பெண்கள் இருக்கின்றனர். அவர்களின் மீது நாட்டம் எழவில்லை. ஆனால் தெய்வீக சூழ்நிலையில் உன்னை நோக்கியதும், உன் மீது காதல் கொண்டேன். அரண்மனை விருந்தின் ருசி மிகுந்த பதார்த்தங்கள் மாலவன் கோயில் நிவேதன அமுதுக்கு ஈடாகுமா? உன்னை அத்தகைய கண்ணன் தந்த அமுதாகத்தான் நினைக்கிறேன். எனவே எனது காதலை நிராகரிக்காதே. நரசிம்ம பல்லவனின் மனைவி ஸாமவை சாதாரண வைணவக் குடும்பத்துப் பெண். பரகாலன் என்கிற திருமங்கை மன்னனின் மனைவி ஒரு வைணவப் பெண். எனவே, தந்திவர்மனின் மனையாளும் ஒரு வைணவ ஸ்திரீரத்னம் என்று நாளை சரித்திரம் கூறட்டும்" என்றெல்லாம் பேசி ஒரு வழியாகக் கோகில வாணியைச் சம்மதிக்க வைத்திருந்தான். சாயாவிக்ரரும், மாதங்க பாணரைச் சந்தித்து மன்னனின் விருப்பத்தைக் கூற, அவர் பிரம்மித்துப் போனார். ஆனந்த பாணன் முதலில் ஆர்வம் காட்டாவிட்டாலும், தனது தங்கையும் மன்னனை மணக்க ஆர்வமாக உள்ளாள் என்பதை அறிந்து தனது சம்மதத்தைத் தெரிவித்தான்.*

*அதன் பிறகு —*

*தந்திவர்மனுக்கு *அல்லிக்கேணி சொர்க்கபுரியானது. தனக்கு மனையாளை காண்பித்த பகுதி என்பதால்*

---

*** பல்லவ மன்னன் தந்திவர்மனது காலம் கி.பி. 777 முதல் கி.பி. 830 வரை. தந்திவர்மன் அரியணையேறிய 12ஆம் ஆண்டு அதாவது கி.பி. 789 திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் செதுக்கப்பட்ட ஒரு கல்வெட்டு கிடைத்துள்ளது.**

**கல்வெட்டுச் செய்தி இதுதான்!**

**திருவல்லிக்கேணிக் கோயிலுக்கு உரிமையுடைவர்கள் கோயிலுக்குரிய கருமாரச் சேரிப்புலத்தை[2] ஒற்றிக்கு**

*அல்லிக்கேணியின் மீதும் அதன் எம்பெருமான்கள் மீதும் மிகுந்த பக்தி செலுத்தினான்.*

*தந்திவர்மனின் குணமாற்றத்திற்குக் காரணம் எதுவாக இருக்கும்? வேட்டைக்குச் சென்றவன், வரும்போது வைணவத் துறவி ஒருவனை அழைத்து வந்து, அவரை ஆசானாக இருத்தும் அளவிற்கு என்ன நடந்திருக்கக் கூடும்? — ரேவாதேவி யோசித்துக்கொண்டே இருந்தாள்.*

---

வைத்துவிட்டனர். அதனால் நாற்பத்தைந்து காடி[3] நெல் வருமானம் குறைந்துபோக, சுவாமிக்குத் திருவமுது தடைப்பட்டது. புகழ்த்துணை விசையரையன் முப்பதின் காடி நெல்லும் அங்கழஞ்சு பொன்னும் கொடுத்து ஒற்றியை மீட்டுத் தன்னுடையதாக்கி, நாள் ஒன்றுக்கு ஐந்து நாழி நெல்லைக் கொடுத்து, அதை நன்கு குற்றுதலால் உண்டாகும் இரண்டு நாழி தூக்குத்தல்[4] அரிசியைக்கொண்டு, சங்கசர்மனும், சத்திசர்மனும், இளையசத்திசர்மனும் சுவாமிக்கு இரவு போனகம்[5] காட்டக் கடவார்கள் எனவும் அப்போனகம் தடைப்படுமாயின், அவிப்புலம், தத்தன்புலம், காரைக்கிழான் புலம் ஆகியவற்றிலிருந்து சுவாமி போகனத்துக்குத் திருவமுது காட்டக் கடவதென்றும், அவர்கள் தவறிவிடுவார்களானால், அரசன் விதிக்கும் தண்டத்திற்குட்பட்டு அவர்கள் நடத்திடக் கடவதென்றும் ஏற்பாடுகளைச் செய்துள்ளான். இவனே பொன்விளக்கு, வட்டில், உலோகத்தால் செய்த பானை ஆகியவற்றையும் கொடுத்துள்ளான்.

மேற்கோள்களும் குறிப்புகளும் - Epigraphic Indica, vol. VIII. No.29.

வடமொழி மற்றும் தமிழ் கலந்து செதுக்கப்பட்டிருக்கும் இந்தக் கல்வெட்டு தந்திவர்மன் இந்த ஆலயத்தின் மீது கொண்டிருந்த நெருக்கத்தைக் காட்டுகின்றது.

கருமாரச்சேரி என்பது வயலின் பெயர். கருமாரச்சேரி என்ற ஊரிலுள்ள வயல் என்றும் கொள்ளலாம்.

தமிழர்கள் தானியங்களை அளக்கப் பயன்படுத்திய அளவை: இரண்டு பதக்குக் கொண்டது ஒரு தூணி அல்லது காடி.

தூக்குதல் : நன்கு குத்தப்பட்ட தூய அரிசி.

இரவு போனகம்: இரவில் இறைவனுக்கு வைத்துப் படைக்கும் உணவு.

இரண்டு மூன்று தினங்களுக்குப் பிறகு ஒரு நாள் ரேவாதேவியைத் தேடி தலைமை அமைச்சர் கிரிராஜரின் மகளும், தளபதி சூடாமணிவர்மனின் மனைவியுமான சுரஞ்சனா வந்தாள்.

"ராஜமாதா! உங்களுக்கு விவரத்தைக் கூறலாம் என்று வந்தேன். வேட்டையாடச் சென்ற நமது அரசர், துளசி வனம் என்கிற அல்லிக்கேணியில் பாணர் குலப் பெண் ஒருத்தியின் மீது மையல் கொண்டுவிட்டார். யாழ் மீட்டிப் பாடும் அந்தப் பெண்ணை, நமது அரசருக்கு மணமுடித்து வைக்க எண்ணி அந்தத் துறவியும் அந்தப் பெண்ணின் குடும்பத்தோடு பேச்சு வார்த்தை நடத்தி வருகிறார்." — சுரஞ்சனா கூறியதும், பொங்கி எழுந்தாள், ரேவாதேவி.

"என்ன அவமானம்! மன்னன் ஒரு பாடினியை மணப்பதா? எனது உயிர் இருக்கும் வரை அது நடக்காது!" என்று சால்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டு வெளியே புறப்பட்டாள்.

"எங்கு செல்கிறீர்கள், ராஜமாதா?" — சுரஞ்சனா கீழ்கண்களால் ரேவாவை நோக்கினாள்.

"தந்திவர்மனுக்கு அறிவை புகட்டிவிட்டு வருகிறேன்!" என்றவளை பரிதாபத்துடன் பார்த்தாள் சுரஞ்சனா.

"அரசியாரே! மன்னரும் அந்த வைணவத் துறவியும் இப்போது அந்தப் பாணர் குடும்பத்தைச் சந்திக்கச் சென்றிருக்கின்றனர்." — சுரஞ்சனா கூறியதும் உறைந்து போய் நின்றாள், ரேவாதேவி.

"அவ்வளவு தூரம் சென்றுவிட்டானா!" — அதிர்ச்சியுடன் மஞ்சத்தில் சரிந்தாள், ரேவாதேவி.

"நீங்கள் இடிந்து போகும் அளவுக்கு ஒன்றும் பெரிதாக நடந்துவிடவில்லை. மன்னர் அந்தப் பாடினி பெண்ணின் மீது மையல் கொண்டிருக்கிறார், அவ்வளவுதானே. பெண்களின் மீது மையல் கொள்வது என்பது

மன்னரைப் போன்ற இளங்குமரர்களுக்குச் சகஜம் அல்லவா. ஆனால், அவர் தடுப்புக்குக் கீழாகச் செல்வதற்கு முன்பாக நாம் கோலத்திற்குக் கீழே புகுந்து விடுவோம்!" — சுரஞ்சனா கூற, அவளை வியப்புடன் நோக்கினாள், ரேவாதேவி.

"ராஜமாதா! நீங்களும் அரசரும், கடம்ப அரசன் சஷ்டிவர்மன் பதவியேற்று நாற்பதாண்டுகள் நிறைவடையும் வைபவத்திற்குச் செல்கிறீர்கள் அல்லவா?" — சுரஞ்சனா ரேவாவை ஆழமாக நோக்கினாள்.

"ஆம்!"

"இருவராகச் செல்லுங்கள்! மூவராக வாருங்கள்!" — புன்சிரிப்புடன் சுரஞ்சனா கூற, ரேவாதேவி திகைத்தாள்.

"என்ன சொல்கிறாய், சுரஞ்சனா?"

"கடம்ப மன்னனுக்கு மிகவும் அழகு வாய்ந்த பெண் ஒருத்தி இருக்கிறாள். அவளது பெயர் அக்கள நிம்மடி. அவளை நம் மன்னர் ஒருமுறை பார்த்தால் போதும். அவளிடம் சரணாகதி அடைந்துவிடுவார். மாபெரும் பேரழகி அக்கள நிம்மடி. புத்திக்கூர்மையும் உள்ளவள். அவளை நம் மன்னருக்கு மனம் செய்துவிட்டால், யாழ் இசைப்பவளின் எண்ணங்கள் பாழ் ஆகிவிடும் அல்லவா?" — சுரஞ்சனா கேட்டாள்.

"அடடா..! என்னவென்று சொல்வேன் உனது சிந்திக்கும் தன்மையை. மீன்குஞ்சுக்கு நீந்தக் கற்றுத்தர வேண்டுமா என்ன? உனது தந்தை கிரிராஜர் சிறந்த ராஜதந்திரி. கணவனும் மதியூகி. நீ மட்டும் மாறுபட்டா இருப்பாய்..? நாங்கள் குந்தளத்திற்கு இருவராகச் சென்று மூவராக வருவோம்!" என்று ரேவாதேவி கூறிக் கொண்டிருந்தபோது துளசி வனம் என்கிற அல்லிக் கேணி ஆலயத்தில் தந்திவர்மன் கோகில வாணியை மனைவியாக ஏற்றுக்கொண்டிருந்தான். சாயாவக்ரர், மாதங்க பாணர், அவர் மகன் ஆனந்த பாணர், ஊர்

மற்றும் ஆலய பரிஜனத்தார் ஆகியோர் திரண்டு வந்து வாழ்த்து கூற, கோகில வாணி தந்திவர்மனை கரம் பிடித்தாள்.

"உன் சந்நிதியில் யாழ் மீட்டியதற்கு இவ்வளவு பெரிய பரிசா?" கண்களில் ஆனந்தக் கண்ணீருடன் மாலவன் கண்ணனை வேண்டினாள்.

ஆலயத்தின் வாயிலில் காத்திருந்த இரதத்தில் ஏறியதும்தான், அவளை அச்சம் தொற்றிக்கொண்டது. நாம் ஒரு மன்னனை திருமணம் செய்துகொண்டு அரண்மனைக்குச் செல்கிறோம். அரண்மனையில் இருப்பவர்கள் இதனை எப்படி ஏற்றுக்கொள்வார்களோ?

சாயாவக்ரர் தனது புரவியில் ஏறி இரதத்தின் பக்கலில் பயணித்தார்.

"தந்திவர்மா! திருமணம் செய்துகொண்டது பெரிதல்ல. இறுதிவரை உறுதியுடன் நடக்க வேண்டும். மாதங்க பாணரிடம் அவர் மகளே பல்லவ அரசியாகத் திகழுவாள் என்று வாக்குக் கொடுத்திருக்கிறாய். அவர் எந்த வாக்கையும் கேட்கவில்லை! நீயாகத்தான் அவருக்கு வாக்களித்தாய். எனவே, அரண்மனையில் எவ்வளவு எதிர்ப்புகள் புறப்பட்டாலும் சற்றும் கலங்காமல், கோகில வாணியை அரசியாக அறிவிப்பாய். கோகில வாணி! எனது ஆசான் பரகாலன் அல்லிக்கேணியில் பாடியது போன்று, ஒப்பவரில்லா மாதர்கள் வாழும் பகுதியில் வசித்திருக்கிறாய். தந்திவர்மனின் கரத்தை பற்றிவிட்டாய். இனி நீ அரசியாகவே வாழக் கற்றுக்கொள். உனக்கு ஆரத்தி சுற்ற அரண்மனையில் கரங்கள் இல்லாமல் போகலாம். அதனால் கலங்காதே. 'கொண்டவன் மட்டுமே உன்னுடைய சொத்து..!' என்கிற நினைவுடன் மட்டும் வாழ கற்றுக் கொள்!" — சாயாவக்ரர் கூறினார்.

விதி ஒன்று நினைக்கின்றதே என்று நாம் அதன்படி திட்டங்கள் தீட்டினால், விதி வேறொரு திட்டத்தைச் செயல்படுத்தி, நம்மைக் கோமாளிகளாக நிற்க

வைத்துவிடுமல்லவா? அந்த மாதிரி தான் கோமாளியாக நிற்கக்கூடாது என்பதற்காகத்தான் சாயாவக்ரர் அல்லிக்கேணியில் துவங்கி ஒத்தாடை அரண்மனை வரையில் தந்திவர்மனுக்கு ஆயிரம் போதனைகளைச் செய்து வந்தார். அழியப்போகும் பல்லவனுக்கு நாம் என்ன அரணாக நிற்பது என்று அவர் பாட்டுக்கு தன் வழியே க்ஷேத்திராடனம் போயிருந்தால் அவருக்குப் பல ஏமாற்றங்கள் ஏற்பட்டிருக்காது. பல்லவத்தைக் காக்க வேண்டும்; அழியப்போகும் பல்லவம் கீர்த்தியுடன் போக வேண்டுமே தவிர அபவாதத்துடன் போகக்கூடாது என்கிற ஏக்கத்தில்தான் உதயசந்திரன், சாயாவக்ரரை தந்திவர்மனிடம் அனுப்பியிருந்தான்.

ஆனால் தாய் ரேவாதேவியுடன் கடம்பம் புறப்பட்டுச் சென்றிருக்கிற தந்திவர்மன், தாயின் சதி திட்டத்திற்கு உட்பட்டிருப்பானா? அல்லது அவளது திட்டத்திற்கு நந்தியாக இருந்திருப்பானா? தாய் அதட்டல் போட்டதும் பற்கள் தந்தியடிக்க அவளுக்கு அடி பணிவான் என்றே சுரஞ்சனா நம்பினாள்! யாருக்கு தெரியும்? இப்போது இருவராகக் குந்தளம் செல் கிறார்கள். வரும்போதினில் இருவராக வருகின்றனரா, மூவராக வருகின்றனரா என்பதைப் பார்த்தால்தான் தெரியும்.

சுரஞ்சனா கூறியது போன்று கடம்ப இளவரசி அக்கள நிம்மடியைக் கண்டதும் அவளிடம் சரணாகதி அடைந்துவிடுவானா அல்லது கோகில வாணியின் மீதுள்ள காதலை உடும்பு போன்று பிடித்துக்கொண்டி ருப்பானா? பார்ப்போம்!

# 29. சீறியாழ், பெரும் பாழ்!

"கரும்பு தின்பதற்குக் கூலியும் வேண்டுமா! எனது மகள் அக்கள நிம்மடி பல்லவ மன்னருக்குத்தான். கடம்பத்தில் நடைபெறும் இந்த வைபவத்தில் எனக்கு மிகச்சிறந்த பரிசினைக் கொடுத்திருப்பது பல்லவம்தான்.!" — கடம்ப மன்னன் ஷஷ்டிவர்மன் கூற, கையோடு தனது திட்டத்திற்கு உருவகம் கொடுத்தாள், ரேவாதேவி.

அக்களாவைக் கண்டவுடனேயே ரேவாதேவிக்குத் தெரிந்துவிட்டது, மகன் மயங்கிவிடுவான் என்று. தேவலோக மங்கையரையே மறக்கடிக்கச் செய்யும் அழகைக் கொண்டிருந்தவளால் ஒரு பாடினியை மறக்கடிக்கச் செய்ய முடியாதா என்ன?

தன்னை அற்புதமாக அலங்கரித்துக்கொண்டு தந்திவர்மன் தங்கியிருந்த விருந்தினர் மாளிகைக்குச் சென்றாள், அக்களா.

அவளது பேரழகு தந்தியினை மீட்ட, அவனைக் கிறங்க வைக்கும் கண்களால் பார்த்தாள், அக்களா.

கிறங்க வைத்தால் குரங்காகத் தாவிவிடாதோ ஆண்களின் மனம்..?

"ஹெஹெ..! அதென்ன.. இவ்வளவு அழகான உனக்கு.. அக்கள நிம்மடி என்று பெயர் வைத்திருக்கிறார், உனது தந்தை?" — அவளிடம் அவன் கொண்ட மயக்கம் அவனது முகத்தில் வழியத்துவங்கியது.

"அக்களாதேவி எங்களது குலதெய்வம். அக்களா நிம்மடி என்றால் அக்களாதேவியின் திருவடியில்

சரணாகதி என்று பொருள். அழைக்கும்போது அக்களா என்று அழைத்து அதுவே இறுதியில் நிலைத்துவிட்டது.

"அக்களா! உனது மடியில் நானும் சரணடைகிறேன்!" என்று அவளது மடியில் தலையை வைத்துப் படுத்து விட்டான், தந்திவர்மன்.

அவள் மடியில் படுத்ததும், அங்கு வைக்கப்பட்டிருந்த மகர யாழ் அவனுக்குக் கோகில வாணியின் நினைவைத் தர, திரும்பிப் படுத்து, அதனைத் தனது பார்வையில் சிக்காமல் தவிர்த்தான்.

சுரஞ்சனா கூறியது போலவே, அக்களாவை திருமணம் செய்து கொண்டு ஒத்தாடைக்கு மூவராகத் தான் வந்தார்கள்.

தகவலை அறிந்த கோகில வாணி, அரசனுக்கு இது சகஜம் என்பது போன்று வாளாயிருந்துவிட்டாலும், சாயாவக்ரர் துடிதுடித்துப் போனார். தந்திவர்மன் எடுப்பார் கைப்பிள்ளை. அவனுக்கு உறுதி கிடையாது. கோகில வாணியிடம் இருக்கும் போது அவள் சொற்படி நடப்பான். அக்களாவிடம் சென்றால் அவள் விருப்பப்படி நடந்து கொள்வான். நீர் போன்று, வைக்கப்படும் கலயத்தின் வடிவினை எடுப்பான் என்பதை யூகித்தார். இம்மாதிரி இருப்பவர்களுக்கு ஆசானாக இருப்பது வீண் என்பதையும் உணர்ந்தார்.

"அம்மா கோகில வாணி! தெரிந்தோ தெரியாமலோ, உனக்கும், தந்திவர்மனுக்கும் திருமணத்தைச் செய்து விட்டேன். அவனை எவ்வளவு தூரத்திற்கு நம்ப முடியும் என்பது தெரியவில்லை. உதயசந்திரன் கூறியதால் தந்திவர்மனுக்கு ஆசானாக இருக்கச் சம்மதித்தேன். எனக்கு அவனிடம் நம்பிக்கையும், வாழ்க்கையில் பிடிப்பும் அறவே போய்விட்டது. எனது ஆசான் திருமங்கை மன்னன் பரத்துவம் அடைந்த திருக்குறுங்குடி மலைக்குச் சென்று அவரது திருவரசில் எனது இறுதி

நாட்களைக் கழிப்பதாக உத்தேசம் கொண்டுள்ளேன்..!" என்று விரக்தியுடன் கூறியவர், ஒரு நாள் தன் வழியே புறப்பட்டுப் போனார்.

அவர் புறப்பட்டுச் சென்றதும், நீரை விட்டு வெளியில் விழுந்த மீனாகத் திணறினாள், கோகில வாணி. ஒன்றுமே நடவாதது போன்று வந்து இவளுடன் இருப்பான். பிறகு மறுநாள் காலை புறப்பட்டுப் போய்விடுவான். அந்த மட்டும், தன்னைப் புறக்கணிக்காமல் தனது அந்தப் புரத்திற்கு வருகின்றான் என்பதை நினைத்து மனம் நிம்மதி கொள்வாள்.

திடீரென்று ஒரு நாள் அந்த அறிவிப்பு வந்தது.

அக்கள நிம்மடி பல்லவத்தின் பட்டத்தரசியாக அறிவிக்கப்பட்டாள். உள்ளுக்குள் அதிர்ந்தாலும், கோகில வாணி வெளியே காட்டிக்கொள்ளவில்லை. அக்களா கடம்ப மன்னனின் மகள். இவள் வெறும் பண்ணிசைக்கும் பாடினிதானே.

யாருடன் அதிகம் தனது பொழுதைக் கழிக்கிறான் என்பதைத் தெரிவிக்க இயலாதபடி, கோகில வாணியிடம் நான்கு மகன்களைப் பெற்றுக்கொண்டான், தந்திவர்மன். ஜெயமல்லன், விஜயமல்லன், ராஜமல்லன், குணமல்லன் என்று அவர்களுக்குப் பெயர் வைத்தான் தந்திவர்மன்.

அக்கள நிம்மடிக்கும் ஒரு மகன் பிறந்தான். தனது தந்தையின் பெயரான நந்திவர்மன் என்கிற பெயரையே வைத்தான், தந்திவர்மன்.

துவக்கத்தில் எல்லாமே நன்றாகத்தான் போய்க் கொண்டிருந்தது. நான்கு மல்லன்களுடனும், நந்தி வர்மனும் விளையாடிக் கொண்டுதானே இருந்தான்.

ஒரு நாள் விளையாட்டில் சண்டை நிகழ்ந்துவிட்டது.

"நான் பட்டத்து அரசியின் மகன். எனவே நான்தான் வருங்கால அரசன்!" என்று நந்திவர்மன் கூற, ஜெயமல்லன் அதற்கு ஆட்சேபம் தெரிவித்தான்.

"நான்தான் உனக்கு முன்பாகப் பிறந்தேன். எனது தாய்க்குத்தான் முதலில் திருமணம் நடந்தது. அதனால் எனது அம்மாதான் பட்டத்து அரசி. மேலும், மல்லன் என்று பெயர் கொண்டவர்கள்தான் பல்லவத்தில் சிறந்த மன்னர்களாக இருந்திருக்கிறார்கள். மல்லன், மகா மல்லன் என்று. எனவே நான்தான் மன்னன்" என்று கூற, வார்த்தைகள் தடித்து, அடிதடி சண்டையாகி விட்டது. அதன் பிறகு தனது மகன் நந்திவர்மனை மல்லர் சகோதரர்களோடு பழகவிடாமல் தடுத்துவிட்டாள் அக்களா. சகோதரர்கள் கவுரவ—பாண்டவர்களாகிப் போனார்கள். தந்திவர்மனும் கோகில வாணியைக் காண வருவது குறைந்து போனது.

வாட்கள் சுழல்வது போன்று நாட்களும் சுழன்று நேற்று இருந்தவர்கள் இன்று இல்லை என்கிற விதியை நிறைவேற்றிக் கொண்டிருந்தது. நீர்க்குமிழிகள் தோன்றுவது போன்று மனிதர்கள் தோன்றி, அந்தக் குமிழிகள் ஊசியால் குத்தப்பட்டது போன்று வெடித்தும் சிதறிக்கொண்டிருந்தன. மன்னர்களுக்குத் தங்க ஊசியால் குத்தப்பட்டாலும் குமிழ்களாகத் தேகங்கள் மறையத்தானே செய்யும். ரேவாதேவி இறந்து ஒன்றிரண்டு வருடங்களில் தந்திவர்மனும் இறந்து போக, கோகில வாணி நான்கு பிள்ளைகளுடன் தனித்து விடப்பட்டாள். அரசு யந்திரமே அக்களாவின் பின்பாகத் திரண்டது.

கோகில வாணி எது நடக்கும் என்று உள்ளூர அஞ்சி நடந்துகொண்டிருந்தாளோ அது ஒருநாள் நடந்தே விட்டது.

பதினாறு வயது குமரன் நந்திவர்மன் மூன்றாம் நந்தி வர்மனாக அரியணை ஏறியதும் ஒரு நாள் இரவு —

அரண்மனை அதிகாரி விஜயராஜர் வந்தார்.

"அம்மா! நீங்களும் உங்களது நான்கு மகன்களும் இப்போதே அரண்மனையைவிட்டு வெளியேறும்படி

மன்னரின் உத்தரவு” என்று கூற, உறைந்து போய் நின்றாள்.

குமாரர்களாக நிற்கும் பிள்ளைகளை வைத்துக் கொண்டு இந்த இரவில் நான் எங்கே போவேன். உங்கள் மன்னரின் மனைவியை இப்படித்தான் விரட்டுவீர்களா?” — கோகில வாணி இறைஞ்சினாள்.

“இப்போதைய மன்னரின் உத்தரவு! அதனைச் செயல்படுத்தவே நான் வந்திருக்கிறேன்..!” என்றார் விஜயராஜர்.

வேறு வழியின்றி, நான்கு மகன்களை அழைத்துக் கொண்டு அரண்மனையைவிட்டு வெளியேறி, கால்போன போக்கில் நடந்தாள் கோகிலவாணி. தந்தை மாதங்க பாணரும் இறந்து போக, அண்ணன் ஆனந்த பாணரிடம் போவதற்கு விருப்பம் இல்லாமல், தருமநகரத்தினுள் நுழைந்தவர்கள் பிரவாள மாளிகையில் இரவை கழித்தனர்.

இரவு அனைவரும் பாழடைந்த பிரவாள மாளிகையில் உறங்கிக்கொண்டிருந்த போது, மாளிகையைச் சுற்றி யாரோ நடமாடும் அரவமும், கிசுகிசுவென்ற பேச்சுக்குரலும் கேட்க, பிள்ளைகளை அவசரமாக எழுப்பினாள்.

“மல்லர்களா! எழுந்து ஓடுங்கள். நம்மை ஆபத்து சூழ்ந்துள்ளது. நம்மைக் கொல்ல நந்திவர்மனும், அவனது தாய் அக்களாவும் ஆட்களை அனுப்பியிருக்கிறார்கள் போலும். ஓடிச்செல்லுங்கள்..” என்றாள்.

“நீயும் வா அம்மா!” கடைசி மகன் குணமல்லன் அழைக்க, கோகில வாணி அவனை அணைத்தாள்.

“இல்லை குணமல்லா! இளவரசர்களாகிய உங்களுக்குத்தான் ஆபத்து! எனக்கு அல்ல. நீங்கள் மன்னனாகக் கூடாது என்பதால்தான் உங்களைக்

கொல்லத் துணிந்திருக்கிறார்கள். நீங்கள் ஓடிச்சென்று மறைந்து கொள்ளுங்கள். நான் அவர்களைச் சமாளித்துக் கொள்கிறேன்..!" என்று அவர்களை விரட்ட, மாளிகையின் அடர்ந்த செடிகொடிகளினுள் நுழைந்து முற்றத்தைக் கடந்து, அடுக்களையின் வழியாக ஓடிச்சென்று மறைந்தார்கள்.

அவர்கள் புறப்பட்டுச் சென்றுவிட்டார்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு செயலில் இறங்கினாள், கோகில வாணி. தங்களைக் கொல்வதற்குப் பின்பாகவே ஆட்கள் வருவார்கள் என்பதைப் புரிந்துகொண்டு உறங்கு வதற்கு முன்பாகவே தழைகளையும், மட்டைகளையும் சேகரித்துப் பற்றி எரிவதற்கு வாகாக அடுக்கியிருந்தாள். அவற்றின் மீது சுளுந்து ஒன்றை எறிந்து தீ மூட்டினாள். கோகில வாணியையும், அவளது பிள்ளைகளையும் கொல்ல வேண்டும் என்கிற உத்தரவை நிறைவேற்று வதற்காகப் பிரவாள மாளிகையினுள் பிரவேசிக்க முயன்று கொண்டிருந்த ஆட்கள் கதவைத் திறந்ததும், அவர்கள் முகத்தில் அனல் தாக்கியது.

பிரவாள மாளிகையின் உள்ளே தீ கொழுந்து விட்டெரிந்தது.

"ஐயோ..! எனது நான்கு மகன்களும் இறந்து போனார்கள். நான் மட்டும் உயிர் வாழ வேண்டுமா. நானும் தீயில் கருகுகிறேன்" என்று அலறியபடி அந்த ஆட்களின் முன்பாகவே தனது சேலையில் தீயை வைத்துக்கொண்டு, எரிந்துகொண்டிருந்த சுள்ளிகளின் மீது விழுந்தாள், கோகில வாணி.

'தங்களது வேலை மிச்சம். தந்திவர்மனின் முதல் குடும்பம் அடியோடு தீயில் கருகியது' என்கிற தகவலை நந்திவர்மனிடம் தெரிவிப்பதற்காகப் புறப்பட்டுச் சென்றனர், ஆட்கள்.

சிறுயாழ் மீட்டி அல்லிக்கேணியானை நீராய் உருக வைத்த கோகில வாணி இப்போது அனலில் உருகிக்

கொண்டிருந்தாள். தீயினுள் வெளிவந்த அத்திமலைத் தேவன், புகைபோக்கியின் உள்ளே நின்று இதனைப் பார்த்துக்கொண்டுதான் இருந்தான். பல்லவத்தின் தவறுகளை அவன் எண்ணிக்கொண்டுதான் வருகிறான். சிசுபாலனின் தவறுகளைக் கண்ணன் பாக்குகளைக் கொண்டு எண்ணிவந்து, நூறு தவறுகளை அவன் செய்ததும், அவனை அழித்தது போன்று, அத்திவரதனும் பல்லவர்களின் தவறுகளை எண்ணிக் கொண்டுதான் இருக்கிறான். எப்போது அவர்களைத் தண்டிக்கப் போகிறான் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

கோகில வாணியின் உயிரை தனது நிழலினுள் ஒதுங்கச் செய்த அத்திமலையான் புகைபோக்கியைவிட்டு எப்போது வெளிவரலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த வேளை —

இனி கோகில வாணியாலும் அவளது மகன்களாலும் நமக்குப் பிரச்னைகள் இல்லை என்று அக்களாவும், நந்திவர்மனும் நிம்மதி பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்த வேளையில் —

ஜெயமல்லன், விஜயமல்லன், ராஜமல்லன், குணமல்லன் ஆகியோர், சோழ தேசத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

தாய் கோகில வாணி தங்களைக் காப்பாற்ற வேண்டி தன்னை மாய்த்துக் கொண்டதை அவர்களால் ஜீரணிக்கவே முடியவில்லை.

“தம்பிகாள்! நான்கு ஆண்பிள்ளைகள் நாம் இருந்தோம். தாயை காப்பாற்றாமல் அவளது சேலை தலைப்பின் பின்பாக மறைந்து ஓடி ஒளிந்து தப்பினோம். இதற்குக் காரணமான மன்னன் நந்திவர்மனுக்கு மன்னிப்பே இல்லை. அவனது மரணம் நமது கையில்தான். நாம் ஒவ்வொருவரும் ஒரு கலையைக்

கற்றுக்கொண்டு அந்தத் திறமைகளைக் கொண்டு பல்லவ மன்னனைக் கொல்லுவோம். யார் யார் எந்தக் கலைகளில் நாட்டம் கொண்டிருக்கின்றீரோ அதனைக் கற்றுக் கொள்ளுங்கள்!" — மூத்தவன் ஜெயமல்லன் கூறினான்.

விஜயமல்லன், ராஜமல்லன் மற்றும் குணமல்லன் மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்.

ஜெயமல்லன் தனது தம்பிகளை நோக்கினான்.

"நான் ஆட்சியைப் பிடித்து மன்னன் ஆகப்போகிறேன். எனவே நான் வாட்பயிற்சியைச் செய்கிறேன். உங்களுக்குப் பிடித்தமான கலைகளை நீங்கள் தேர்ந்தெடுங்கள்" என்றான்.

"ஒரு ராஜகுருவின் திறமைகளை நான் வளர்த்துக் கொள்கிறேன். ராஜதந்திரத்தை பயிலப் போகிறேன்!" — விஜயமல்லன் கூறினான்.

"நான் மந்திர, மாய வித்தைகளைக் கற்றுக்கொள்ளப் போகிறேன்!" — மூன்றாவது மகன் ராஜமல்லன் கூறினான்.

கடைசி மகன் குணமல்லன், தனது சகோதரர்களைப் பார்த்தான். "நான் தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்கப் போகிறேன். நாளை நந்திவர்மனை வீழ்த்தி நாம் ஆட்சியைப் பிடிக்கும் *சரித்திரத்தை நூலாக வடிப்பேன்..!" என்றான்.

* நான்காவது மகன் குணமல்லன்தான் பிற்காலத்தில் நந்திக் கலம்பகம் என்கிற நூலை எழுதியவர். நால்வரும் நந்தி வர்மனுக்கு எதிராகப் போர்தொடுக்க, அதில் தோல்வியுற்று, பிறகு சதியால் அவனை வீழ்த்தும் உண்மைக் கதைதான் நந்திக்கலம்பகம்.

# 30. நந்திக்கலம்பகம்

ஸ்வரூபா கணிகையர் சேரியில் இருந்த தனது மாளிகையின் உப்பரிகையில் தனியாக வீற்றிருந்தாள். இன்று பாடுவதற்கோ, ஆடுவதற்கோ மனம் ஒப்பவில்லை. தேகமே ஆத்மா என்று எண்ணிக்கொண்டிருக்கும் பல்லவ நாடு அடலேறுகளுக்கு இவளது தேகம்தான் பரமாத்மா. பல்லவ இளநெஞ்சங்களைத் தனது சேலை நுனியில் முடித்துக் கொண்டிருந்ததால், அவளது மாளிகை எப்போதும் இளைஞர்களால் நிரம்பி இருக்கும். திடீரென்று போர் மூண்டால், நாட்டில் உள்ள அத்தனை வீரர்களையும் அணிதிரட்ட வேண்டிய பணியே இருக்காது. தளபதி உட்பட அத்தனை வீரர்களும் ஸ்வரூபாவின் மாளிகையிலேதான் தவமிருப்பார்கள். அங்கிருந்து நேராகப் போர்க்களம் செல்ல வேண்டியது தான்.

"இன்று எனக்குக் காய்ச்சலாக இருக்கிறது. எனது தேகம் ஓய்வு கேட்டு என்னை இறைஞ்சுகிறது. இன்று மட்டும் யாரையும் உள்ளே அனுமதிக்காதே!" — தாய் மாதங்கியிடம் கண்டிப்புடன் கூறியிருந்தாள்.

"புகார் நகரத்தில் இருந்து ஒரு வணிகர் வந்திருக்கிறார். முத்துக்களை விற்பவராம். உனக்கு ஒரு முத்தங்கியை பரிசளிக்க வேண்டும் என்று விரும்புகிறார்." — மாதங்கி கூறினாள்.

"அங்கியை பூட்ட வேண்டும் என்று வருகிறார்கள். அங்கியை பூட்டிக்கொண்டால் கோபப்படுகிறார்கள்..! யாராக இருந்தாலும் இன்று எனக்கு ஓய்வு.." விரக்தி யுடன் கூறினாள் ஸ்வரூபா.

ஒருநாள் சம்பாதிப்பினை இழக்க வேண்டியுள்ளதே என்கிற விசனத்தோடு அகன்றாள், மாதங்கி.

பாலாற்றின் கரையில் இருந்தது கணிகையர் சேரி. பாலாறு பொங்கிப் பெருக, பால்நிலவு குளிரைப் பொழிய, முப்பாலில் கடை பாலில் அந்த இரவினைத் தோய்த்து வாலிபர்களுக்குப் பரிமாறும் கணிகையர் வசிக்கும் பகுதி. பாலாற்றில் நீர் இல்லை என்றாலும், குளிர்க் காற்று ஸ்வரூபாவின் உப்பரிகை மாடத்தில் வந்து மோத, இருக்கையில் சரிந்திருந்த அவளது கூந்தல் காற்றில் அலைமோதியது.

அந்த அமைதியை அணுவணுவாக அவள் உள்வாங்கிக் கொண்டிருந்த வேளையில், காற்றில் ஒரு கம்பீரக் குரல் மிதந்து வந்தது.

"வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை அடைந்ததுன் வீரம்
கற்பகம் அடைந்ததுன் கரங்கள்
தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்
செந்தழல் அடைந்ததுன் தேகம்
நானும் என் கலியும் எவ்விடம் புகுவோம்
நந்தியே நந்தயா பரனே!"

ஸ்வரூபா சுவாசிக்க மறந்து அமர்ந்திருந்தாள்.

என்ன குரல்? பிசிறில்லாத த்வனி. பாடலின் பொருள் புரிய வில்லையென்றாலும் அதன் லயம் அவளை பிரம்மிக்க வைத்தது. அந்தக் குரல் அருகே ஒலிக்க, எழுந்து சென்று உப்பரிகையிலிருந்து எட்டிப்பார்த்தாள்.

இளம்துறவி ஒருவர் வீதியில் பாடியபடி சென்று கொண்டிருந்தார். கம்பீரமான உருவம். சுருள்சுருளாக வளர்ந்திருந்த தனது தலைமுடிக் கற்றையை நாரினால் முடிந்திருந்தார். நீண்ட காவி அங்கி ஒன்றை அணிந் திருந்தார். ஒரு கையில் திரிதண்டமும் வைத்திருந்தார்.

அந்தப் பாடலாலும், அவரது கம்பீரக் குரலாலும் கவரப்பட்டவள், பணிப்பெண்ணை அவசரமாக அழைத்தாள்.

“சுகுணவல்லி! ஓடிச்சென்று அந்தத் துறவியை அழைத்து வா. அவருக்குப் பாத பூஜை செய்ய வேண்டும்!” — ஸ்வரூபா கூற, அந்தப் பணிப்பெண் ஓடிச்சென்றாள்.

ஸ்வரூபா விரைவாகக் கீழே சென்று ஒரு குடத்தில் நீர் எடுத்து, வாயிலுக்கு விரைந்தாள். அவரது திருவடிகளைத் தாம்பாளத்தில் வைத்து அதனைக் கழுவி, அந்த நீரை தனது தலையில் ப்ரோக்ஷித்துக் கொண்டாள்.

“எனது பாதங்களைக் கழுவும் அளவுக்கு நான் இன்னும் தேச சஞ்சாரம் செய்யவில்லை, அம்மணி. ஏதோ எனக்குத் தெரிந்த பாடல்களைப் பாடிக்கொண்டு பிச்சை எடுத்துக்கொண்டு திரிகிறேன்!” — துறவி வேடத்தில் இருந்த தந்திவர்மன் — கோகில வாணி ஈன்ற நான்கு மகன்களில் கடைசி மகனான குணமல்லன் கூறினான்.

“சுவாமி! நான் மிகக் கொடிய பாவங்களைச் செய்பவள். இந்தப் பாரத மண்ணில் பாயும் அத்தனை புண்ணிய நதிகளையும் சேர்த்து என் மீது வார்த்தால் கூட நான் புனிதவதியாகமாட்டேன். இருப்பினும், இப்போது தங்களுக்கு நான் செய்த பூஜை தங்கள் திருவடிகளுக்கு மட்டும் அல்ல. கம்பீர ஆலயமணியாக ஒலிக்கும் தங்களது குரலுக்கும், தங்களது பாடலுக்கும் சேர்த்துதான் பூஜை செய்கிறேன்..!” — ஸ்வரூபா கூறினாள்.

அவளை ஆச்சரியத்துடன் பார்த்தான், குணமல்லன். எல்லாமே தலைகீழாக நடக்கின்றதே. தன்மையுடன் நடக்கவேண்டிய அரசியான அக்கள நிம்மடி அகந்தை யுடன் திரிய, தான் ஈன தொழில் புரிகிறோம் என்று

*தன்னையே நொந்துகொண்டு தன்மையுடன் இவனை வணங்குகிறாள், இந்தக் கணிகை.*

*"உனக்கு என்ன வேண்டுமோ கேள்?" — குணமல்லன் அவளை அன்புடன் நோக்கினான்.*

*"ஊர்த்தேவைக்கு இருப்பவள் நான். எனக்கு என்ன சுவாமி தேவை. நீங்கள் இன்னொரு முறை அந்தப் பாட்டைப் பாட வேண்டும். அதை நான் கற்றுக்கொள்ள ஆசைப்படுகிறேன்!" — ஸ்வரூபா வேண்ட, ஆசனம் ஒன்றில் அமர்ந்தான், குணமல்லன்.*

*"பிச்சை எடுக்கும் துறவியின் பாடலை சிலாகித்துக் கேட்கிறாய். ஊரே உனது பாடலைக் கேட்கத் துடிப்பதை நான் அறிவேன்..!" — என்றவன் மீண்டும் அந்தப் பாடலைப் பாடத்தொடங்கினான்:*

"*வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை அடைந்ததுன் வீரம்
கற்பகம் அடைந்ததுன் கரங்கள்
தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்
செந்தழல் அடைந்ததுன் தேகம்
நானும் என் கலியும் எவ்விடம் புகுவோம்
நந்தியே நந்தயா பரனே!"

*"ஸ்வாமி! இந்தப் பாடலை நான் பாடிக் காட்டுகிறேன்! சரியா என்று கூறுங்கள்!" குணமல்லன் பாடிய பாடலை அதே லயத்துடனும், இனிமையுடனும் பாடினாள், ஸ்வரூபா.*

*"அருமை. பிச்சைக்காக நான் பாடிய போது இல்லாத இனிமை, நீ பாடும்போது அந்தப் பாட்டினில் மிளிர்*

---

* (வான் உறு = வானத்தில் தோன்றும்; மதி = சந்திரன்; வதனம் = முகம்; மறி = மோதுகின்ற; கீர்த்தி = புகழ்; கான் = காடு; தேன் உறு மலராள் = திருமகள்; அரி = திருமால்; தழல் = நெருப்பு; தேகம் = உடம்பு; கலி = வறுமைத் துன்பம்; தயாபரன் = அருள் நிறைந்தவன்).

கின்றது. இந்தப் பாடலை உனக்கு நான் கொடுத்த பரிசாக வைத்துக்கொள்..!" என்றபடி எழுந்தான்.

"சுவாமி! இன்று இரவு இங்கேயே தங்கிவிட்டு, நாளை செல்லுங்களேன்..! — ஸ்வரூபா கூறினாள்.

"நான் முப்பாலில் முதல்பாலை மட்டுமே பருகுபவன். என்னைப் பனைமரத்தின் அடியில் தங்கச் சொல்கிறாய். நான் மூன்றாவது பாலை அருந்துவதாக அனைவரும் நினைக்கக்கூடும். எனவே, நான் புறப்படுகிறேன்..!" துறவி விடைபெற்றுச் செல்ல, ஸ்வரூபா அந்தப் பாடலை மீண்டும் மீண்டும் பாடிப் பார்த்தாள். அந்தப் சுவையில் திளைத்தவள், அந்தப் பாடலின் பொருளை அந்தத் துறவியிடம் தான் கேட்க மறந்திருந்தாள்.

மறுநாள் இரவு, வழக்கம்போல் வாலிபர்கள் பலர் அவளது மாளிகையின் நிலா முற்றத்தில் குழுமினர். அனைவரும் பஞ்சணைகளில் அமர, அன்னம் போன்று நடந்து வந்தாள், ஸ்வரூபா. அவள் பின்பாக மாதங்கியும், இசைக் கலைஞர்களும் வர, கையில் கைப்பைகளில் பழரசக் குடுவையோடும், குவளைகளோடும் சுகுணவல்லி வந்து அங்கு குழுமியிருந்தவர்களுக்குப் பழரசத்தை விநியோகித்தாள்.

முதல் பாடலாகவே அந்தத் துறவியின் பாடலைப் பாடினாள், ஸ்வரூபா. அவளது அழகிய தேகத்தைக் கண்களாலேயே விழுங்கியபடி பாடலையும் அதற்கேற்ப அவளது அபிநயங்களையும் கவனித்துக் கொண்டிருந் தான், சூடாமணிவர்மனின் பெயரன் பல்லவ சிங்கன். அவனுடன் அமர்ந்திருந்த அந்த அந்தண வாலிபன், திலீபகாந்தன் ஸ்வரூபாவின் பாடலைக் கேட்டவன் திடுக்கிட்டான். அந்தப் பாடலின் வரிகள் அவனது முகத்தை இருண்டு போகச் செய்தன.

"பல்லவ சிங்கா! இந்தப் பெண்ணுக்கு சிந்தை குழம்பி விட்டதா என்ன? இப்படி ஒரு பாடலைப் பாடுகிறாள்?

தான் பாடும் பாடல் ராஜதுரோகம் என்பதை அவள் அறிவாளா?" — திலீபன் கேட்க அவளைக் குழப்பத்துடன் பார்த்தான், பல்லவ சிங்கன்.

"அப்படி என்ன பாட்டைப் பாடுகிறாள்?" — சிங்கன் கேட்டான்.

"அவள் பாடும் பாட்டின் பொருளைக் கேட்டால் நீ பொங்கி எழுவாய். அவளது பாடலின் பொருளை நான் உரைக்கிறேன் கேள். மன்னன் நந்திவர்மனை நோக்கி அவள் பாடுவதாக அமைந்திருக்கிறது பாடல்.

'நந்தி என்ற பெயர் உடைய மன்னனே! அருளில் மேம்பட்டவனே! நீ இப்போது இறந்துவிட்டாய். எனவே உன் முகத்தின் ஒளி வானத்தில் உள்ள நிலவில் சேர்ந்து விட்டது. உன் புகழ் கடலில் மூழ்கிவிட்டது. உன் வீரம் காட்டில் வாழும் புலியிடம் சேர்ந்துவிட்டது. உன் கொடைத்திறம் கற்பக மரத்திடம் சேர்ந்துவிட்டது. உனக்கு மங்கலங்களை அளித்துக் கொண்டிருந்த திருமகள் திருமாலிடம் சேர்ந்துவிட்டாள். இவை எல்லாம் போய்விட்டன. எனவே, உன் உடல் நெருப்பிடம் சேர்ந்துவிட்டது. ஆனால் நானும் என் வறுமையும் எங்கே போய் வாழ்வோம்' என்ற பொருளில் இப்பாடல் அமைகின்றது. மொத்தத்தில் மன்னன் இறந்து போனதாகக் கருதிப்பாடும் பாடல் இது." — திலீபன் கூற, அதிர்ந்து போன பல்லவன் ஸ்வரூபாவை கோபத்துடன் நோக்கினான்.

ஸ்வரூபாவை தனது பிரியநாயகியாக வைத்துக் கொள்ள விரும்பி அவன் மாதங்கியை அணுகியபோது பிடிவாதமாக மறுத்துவிட்டிருந்தாள். அதற்குப் பழிவாங்கும் விதமாக அவளைக் கைது செய்து சிறையில் தள்ளி அவமானப்படுத்த இதோ ஒரு சந்தர்ப்பம்.

தான் சரிந்திருந்த பஞ்சணையில் இருந்து எழுந்தவன், வாளை உருவிக்கொண்டு அபிநயனம் புரிந்து கொண்டிருந்த ஸ்வரூபாவின் எதிராக நீட்டினான்.

*"ராஜதுரோகத்தின் அடிப்படையில் உன்னைக் கைது செய்கிறேன். மன்னர் நந்திவர்ம பல்லவன் இறந்ததாகக் கருதிப் பாடல் பாடும் உனக்குக் கடும் தண்டனை காத்திருக்கிறது!" — என்றதும் ஸ்வரூபா ஸ்தம்பித்துப் போய் நின்றாள்.*

*"பாவி மகளே. நான் வேண்டாம் வேண்டாம் என்று தலைப்பாடமாக அடித்துக்கொண்டேனே. எவனோ பிச்சைக்காரத் துறவி பாடலைப் பாடாதே என்று சொன்னேனே. கேட்டாயா? பார் இப்போது.. தேசத்துரோக குற்றச்சாட்டில் சிக்கிக்கொண்டாயே!" — மாதங்கி அலற, விருந்தினர் திகைக்க, பல்லவ சிங்கன் ஸ்வரூபாவை கைது செய்து தனது புரவியில் ஏற்றிக்கொண்டு அரண்மனைக்குச் சென்றான். அன்றிரவு ஸ்வரூபா அரண்மனை சிறையில் கழித்தாள்.*

*மறுநாள் —*

*மன்னன் நந்திவர்மனின் கொலுமண்டபத்தில் அவன் முன்பாக நிறுத்தப்பட்டாள்.*

*"இத்தகைய ஒரு பாடலை நீ பாடிய காரணம்?" — நந்திவர்மன் அவளை உறுத்து நோக்கினான்.*

*"மன்னரே! அது தங்களை இழிவுப்படுத்தும் பாடல் என்பது எனக்குத் தெரியாது. ஒரு துறவி தெருவில் பாடிக்கொண்டே போனார். அதனைக் கேட்டு எனது மனதில் பதிந்த அந்தப் பாடலை, நான் எனது மாளிகையில் பாடினேன். பாடலின் பொருளை அந்தத் துறவி கூறவில்லை. தெரிந்திருந்தால் அதனைப் பாடி இருக்கமாட்டேன்..!" — உண்மையான வருத்தத்துடன் கூறினாள், ஸ்வரூபா.*

*"இல்லை அரசே! அரசரை அவமானம் செய்ய வேண்டும் என்றே இவள் அங்ஙனம் பாடியிருக்கிறாள். இவளுக்குத் தக்க தண்டனை கொடுக்க வேண்டும்!" — பல்லவ சிங்கன் கூற, மன்னன் அவளை யோசனையுடன் நோக்கினான்.*

"நீ சந்தித்த அந்தத் துறவியை இந்த அவையில் நீ நிறுத்த வேண்டும். அவர் என் முன்பாகத் தோன்றும் வரை நீ சிறையில்தான் இருக்க வேண்டும்!" — நந்திவர்மன் கூற, ஸ்வரூபா அமைதியாக நின்றாள்.

"மிக நன்றி அரசே! சிறையில் இருப்பதால், சிறிது காலம் ஆடவர்களின் தொந்தரவு இன்றி நாம் நிம்மதியாக இருக்கலாம். குறிப்பாக, அன்றாடம் எனது மாளிகைக்கு வந்து என்னைப் பெண்டாள முயற்சிக்கும் உங்கள் உப தளபதியின் தொல்லை இல்லாமல் இருக்கும்!" — ஸ்வரூபா கூற, பல்லவ சிங்கனுக்கு அவமானம் பிடுங்கித் தின்றது.

காவலர்களுடன் சிறைச்சாலைக்கு நடந்தாள்.

ஸ்வரூபாவின் நல்ல காலம், மறுநாளே, தெருவில் பாடிக்கொண்டு சென்ற குணமல்லனைக் கண்ட சுகுணவல்லி ஓடோடிச்சென்று அவரைத் தடுத்தாள்.

"ஸ்வாமி! நீங்கள் ஸ்வரூபாவுக்குக் கற்றுத் தந்த பாடலை அவர் பாடினார். அதனைக் கேட்ட உபதளபதி அவர் தேசத்துரோகம் செய்துவிட்டார் என்று குற்றம் சுமத்தி அவரைக் கைது செய்து சிறையில் அடைத்து விட்டார். தாங்கள்தான் அவரைக் காப்பாற்ற வேண்டும்" என்று புலம்ப, மாதங்கி, சுகுணாவுடன் அரண் மனைக்குச் சென்றான்.

"ஸ்வரூபா மீது தவறில்லை. அந்தப் பாட்டை இயற்றி, இசையமைத்து பாடியவன் நான்தான்!" என்றதும், மன்னன் நந்திவர்மன் முன்பாக நிறுத்தப்பட்டான் குண மல்லன். ஸ்வரூபாவும் கொலுமண்டபத்திற்கு வரவழைக்கப்பட்டாள்.

"எனது மகன் இறந்துவிடுவது போன்று பாடியது நீர்தானே?" ஆத்திரத்துடன் கேட்டாள் அக்களா. தனது சக்களத்தி கோகில வாணியின் கடைசி மகன் குண மல்லனுடன் தான் உரையாடிக்கொண்டிருக்கிறோம் என்பதை அவள் அறியவில்லை.

"ஆம்! நான்தான் அங்ஙனம் பாடினேன். நான் பாடியது உண்மை. மன்னர் தனது உயிரை இழக்கப் போவது உண்மையே!" — குணமல்லன் அங்ஙனம் கூறியதும் அவையே அதிர்ந்தது.

"என்ன துணிச்சல் உமக்கு?" — தலைமை அமைச்சர் கோபத்துடன் எழுந்தார்.

குணமல்லன் நந்திவர்மனை அமைதியாகப் பார்த்தான்.

"அரசரே! நான் தரும் விளக்கத்தைச் சற்றே கேளுங்கள். சிம்மவர்மன் காலம் முதல் நமது பல்லவத்தின் பொக்கிஷமான அத்திமலைத்தேவனின் தேவ உடும்பர சிலையைத் தேடிக் கண்டுபிடிக்கிறோம் என்று பல்வேறு மன்னர்களும் சபதம் எடுக்கிறார்கள். ஆனால் அவர்கள் இறக்கும்போது அவர்கள் செய்யும் சபதங்களும் அவர்களுடன் இறக்கின்றன. எனவே அவர்கள் சொன்னதைச் செய்யாமல் இறந்ததால் அவர்கள் இன்னமும் உயிருடன்தான் இருப்பதாகக் கொள்ள வேண்டும். ஆனால் பூரணத்துவத்துடன், அத்திமலைத் தேவனின் சிலையைக் கண்டெடுத்து அதை மீண்டும் அத்திமலையில் பிரதிஷ்டை செய்த பிறகே, சொன்னதைச் செய்தவன் என்கிற பெருமையோடு மரணத்தை எய்துவீர்கள். அவனிசிம்மரும், பல்லவ மல்லனும், மகாமல்லனும், ராஜசிம்மனும், உங்கள் தந்தை நந்திவர்மனும் அடையாத பெரும்புகழை அடைவீர்கள் என்கிற பொருளை வஞ்சப் புகழ்ச்சி அணியில் பாடினேன். அவ்வளவே..! நான் பாடியதில் தவறு இருப்பதாக நான் நினைக்கவில்லை. தவறு என்றால் நீங்கள் தரும் தண்டனையை ஏற்றுக் கொள்கிறேன்!" — அண்ணன்மாரின் ஆலோசனைப்படி மிக அழகாக வலையை விரித்தான் குணமல்லன். கோகில வாணியின் குடும்பமே தீயில் கருகி இறந்துவிட்டதாகக் காவலர்களே கூறிய பிறகு, நடுவயது துறவியாக நிற்கும் குணமல்லனின் மீது எப்படி நந்திவர்மனுக்குச் சந்தேகம் பிறக்கும்..?

"உண்மையாகவா? நான் அத்திமலைத்தேவனைக் கண்டு பிடிப்பேனா?" — ஆர்வத்துடன் கேட்டான், நந்திவர்மன்.

"என்னுடைய ஆசான் துறவி ஒருவர் இருக்கிறார். அவர் அறுதியிட்டுக் கூறுகிறார். நீங்கள் இறந்த மறுநாள் அத்திமலைத்தேவன் கிடைப்பான் என்கிறார்!" — குணமல்லன் கூறினான்.

"நான் இருக்கும்போது ஏன் கிடைக்கமாட்டான்?" — நந்திவர்மன் திகைத்தான்.

"எனது ஆசானின் கனவில் அத்திமலைத்தேவன் வந்தார். 'மன்னர் இறந்த மறுநாள் நான் பதுங்கியிருக்கும் இடத்தைவிட்டு வெளிவருவேன்' என்றார். 'அந்த நாள் என்று?' என எனது ஆசான் கேட்க, 'மன்னர் நீண்ட நாட்கள் வாழட்டும். அவர் என்று இறக்கிறாரோ, அதற்கு மறுநாள் நான் வருவேன்!' என்று கூறிவிட்டு மறைந்தார். எனவே தங்களது மரணத்தைப் பற்றிப் பாடல் எழுதினேன். எல்லா வளங்களும் போய்விட்ட பல்லவத்தில், மக்கள் என்ன செய்வார்கள் என்று பரிதவிக்க வேண்டாம். நந்திவர்மன் இறந்த மறுநாள், அத்திவரதன் வளங்களை வாரி வழங்க வருவான் என்கிற அடுத்த பகுதியைப் பாடுவதற்குள், ஸ்வரூபா அந்தப் பாட்டைப் பாடிக்காட்ட, அதனால் பல அனர்த்தங்கள் நிகழ்ந்துவிட்டன." — குணமல்லன் கூறினான்.

நந்திவர்மன் யோசித்தான். 'தான் அத்திமலைத் தேவனைக் கண்டெடுத்து ஆலயத்தில் பிரதிஷ்டை செய்து எந்தப் பல்லவ மன்னனும் செய்யாத செயலைப் புரிந்து பெருங்கீர்த்தியை பெறுவோம்' என்கிற கூற்று அவனை யோசிக்க வைத்தது.

இப்போதுதான் தெள்ளாறு யுத்தத்தில் பெரும் வெற்றியைப் பெற்றிருந்தான். பாண்டியர்களைக் கங்கர்கள் மற்றும் குந்தளர்களின் கூட்டணியோடு சிதற அடித்திருந்தான்.

குந்தள இளவரசி சங்கவையை மணந்துகொண்டு நிருபதுங்கன் என்கிற மகனைப் பெற்றிருந்தான். பாண்டிய இளவரசி கண்டன் மாறம்பாவையைச் சிறையெடுத்துவந்து அவளையும் மணந்து கம்பவர்மன் என்கிற மகனைப் பெற்றிருந்தான்.

போர்களில் வெற்றி, நல்லாட்சி, வீரம் செறிந்த இரு மகன்கள் என்று குறையொன்றுமில்லாமல்தான் ஆட்சி செய்து வருகிறான். கீர்த்தியுடன் இறக்க வேண்டும் என்கிற ஒரு சந்தர்ப்பம் வரும்போது அதனை ஏற்றால் என்ன..? இன்று சாகாதோர் நாளையோ அல்லது என்றாவது ஒரு நாளோ சாகத்தானே வேண்டும். அத்திமலைத்தேவனை மீட்டெடுத்தவன் என்கிற பெயருடன் இறந்தால்தான் என்ன..?

"உமது ஆசானுடன் நாளை நீர் அரசவைக்கு வாரும்!" என்ற நந்திவர்மன் ஸ்வரூபாவை விடுதலை செய்தான்.

மறுநாள் மந்திர மாயங்களைக் கற்ற தனது மூன்றாவது தமையன் ராஜமல்லனுடன் வந்து நின்றான், குணமல்லன்.

"துறவியே! தாங்கள் கண்ட கனவினை பற்றித் தங்கள் சீடர் கூறினார். இறப்பதைப் பற்றி நான் கவலை கொள்ள வில்லை. அத்திமலைத்தேவன் மீண்டும் அவனது ஆலயத்தில் நின்று அருள்பாலிக்கத் தயாராகிவிட்டான் என்கிற செய்தியைக் கேட்டுப் பேருவகை அடைகிறேன். இனி நான் அனுபவிக்க வேண்டியது ஒன்றுமில்லை. எனவே, நீங்கள் கூறுவதைக் கேட்கச் சித்தமாக இருக்கிறேன்..!" என்றதும் இரு அரசிகளும் அதிர்ந்து மன்னரைப் பார்த்தனர்.

தலைமை அமைச்சர் பரபரப்புடன் எழுந்தார்.

"மன்னா! இத்தகைய முடிவு இப்போது அவசிய மில்லை. தாங்கள் பிராணத் தியாகம் செய்து, அத்தி மலைத்தேவனை மீட்க வேண்டும் என்கிற அவசரமும்

இல்லை. வேண்டாம் இந்த விபரீத பரீட்சை!" — தலைமை அமைச்சர் கூற அவரை அலட்சியம் செய்த நந்திவர்மன், துறவிகளைப் பார்த்தான்.

தனது தாயின் மரணத்திற்குக் காரணமான நந்தி வர்மனை அழிப்போம் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்த மல்லர் சகோதரர்களுக்கு அவனாகவே ஒரு சந்தர்ப்பத்தை அமைத்துக் கொடுத்தான்.

ராஜமல்லன் நந்திவர்மனை எச்சரிக்கையுடன் பார்த்தான்.

"பச்சை ஓலையால் நூறு பந்தல்கள் போட வேண்டும். ஒவ்வொரு பந்தலிலும் மன்னன் அமர்ந்து ஒவ்வொரு பாடலாகக் கேட்க வேண்டும். ஒரு பாடல் முடிந்ததும் அந்தப் பந்தல் எரிந்துவிடும். கடைசி பாடலைக் கேட்கும் முன் பந்தலில் விறகுகளை அடுக்கி அதன் மேல் படுத்துக் கொண்டு கேட்க வேண்டும். கடைசிப் பாட்டு முடிந்ததும் உன் உடலிலும் விறகிலும் தீப்பற்றி எரியும். நீ இறப்பாய். மறுநாள் அத்திமலைத்தேவன் தோன்றுவான். இதற்குச் சம்மதமா!" — என்று துறவி கேட்டார்.

நந்திவர்மனும் சம்மதித்தான்.

"நான் தயார். ஆனால் அத்திமலையான் நான் இறந்த மறுநாள் காட்சி தருவான் என்று தாங்கள் கூறியதை நம்பலாம் அல்லவா..?" — மன்னன் கேட்டதும், சிரித்தார் துறவி.

"நூறு பாடல்களைப் பாடிய பிறகு நீர் இருக்க மாட்டீர்கள். ஆனால் உங்கள் அரசியர், அரசகுமாரர்கள், மந்திரி பிரதானிகள் அனைவரும் இருப்பார்கள் அல்லவா? நான் சொன்னது நடக்கவில்லையென்றால், அடுத்தகணமே அவர்கள் எனது மரணதண்டனையை நிறைவேற்றலாம்." — துறவி கூற மன்னன் ஏதோ விளை யாட்டாகத்தான் இந்தத் திட்டத்திற்கு ஒப்புக் கொள்கிறான் என்று பலரும் நினைத்திருந்தனர்.

*துறவிகள் கூறியவாறு நூறு பந்தல்கள் போடப்பட்டன.*

*நந்திவர்மன் முதலாம் பந்தலின் கீழ் அமர்ந்தவுடன் துறவி முதல் பாடலைப் பாடினார். பாடி முடிந்ததும் நந்திவர்மன் அமர்ந்திருந்த பந்தல் தீப்பற்றி எரிந்தது.*

*கூட்டத்தினர் திடுக்கிட்டுப் போய் அலறினர். எப்படி ஒரு பந்தல் தீப்பற்றி எரிந்தது..! மாய மந்திரங்களைக் கற்ற ராஜமல்லனையும், கலம்பகப் பாடல்களைப் பாடிக்கொண்டிருந்த குணமல்லனையும் தவிர மற்ற அனைவருக்குமே அங்கே நடைபெறுவது விந்தையாக இருந்தது. மறுநாள் மன்னன் அடுத்த பந்தலின் கீழ் அமர, துறவி அடுத்த பாடலைப் பாடினார். அந்தப் பந்தலும் தீப்பற்றி எரிந்தது. மன்னன் தக்க தருணத்தில் அந்தப் பந்தலில் இருந்து நழுவினான்.*

*"போதும் இந்த விபரீத விளையாட்டு!" —அரசி சங்கவை கூறினாள். ஆனால் நந்திவர்மன் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. பாடல்கள் கேட்பது தொடரும்* என்றான்.*

*இவ்வாறு பாடல்கள் பாடுவது தொடங்க, ஐம்பதாவது பந்தல் எரிந்தபோது ஆழ்ந்த யோசனையில் இருந்த*

---

* நூல் முழுவதையும் கேட்டால் மன்னன் உடல் எரிந்து இறப்பான் என்பதை அறிந்தும் தனது உயிரையும் பொருட்படுத்தாது, எரியும் பந்தலின் கீழிருந்து கேட்டு உயிர் இறந்தான் என்று கூறப்படுகிறது. 'நந்தி, கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்' என்னும் சோமேசர் முதுமொழி வெண்பா என்னும் நூலின் வெண்பா வரிகளும், 'கள்ளாரும் செஞ்சொல் கலம்பகமே கொண்டு, காயம் விட்ட தெள்ளாறை நந்தி' என்னும் தொண்டை மண்டலச் சதகப்பாடல் வரிகளும் இக்கருத்தை வலியுறுத்துகின்றன.

** உள்ளதை உள்ளவாறு கூறுவது வரலாறு. உள்ளதை உயர்த்திக் கூறுவது இலக்கியம். மூன்றாம் நந்திவர்மனது அரசியல் தொடர்பான செய்திகள் நந்திக்கலம்பகத்தில் அதிகமாகக் காணப்படுகிறது. இவ்விலக்கியத்தில் மூன்றாம் நந்திவர்மனின் வரலாற்றுச் செய்திகளைப் புறத்துறைகள் வாயிலாகவும், தலைவி தன் மகிழ்ச்சியைக் கூறுவதாக அமைந்து, அகப்பொருள் சுவையுடன் விளக்கப்படுகிறது.

*நந்திவர்மன், தனது அமைச்சரவையைக் கொலு மண்டபத்தில் கூட்டினான்.*

*"இன்னும் ஐம்பது பாடல்கள் உள்ளன. ஐம்பது பந்தல்கள் எரிய வேண்டும். கடைசிப் பந்தல் எரிந்தவுடன் எனது உயிர் போகலாம். உயிர் போவதை பற்றி எனக்குக் கவலையில்லை. பல்லவம் இழந்த பொக்கிஷமான அத்தி வரதனின் சிலையை மீண்டும் கண்டெடுத்து ஆலயத்தில் பிரதிஷ்டை செய்வதற்காகத் தனது இன்னுயிரை ஈந்தான் நந்திவர்மன் என்று வருங்காலம் கூறட்டும். ஐம்பது பாடல்கள் பாடப்பட்ட நிலையில் நான், எனக்குப் பிறகு வாரிசு பிரச்னை ஏற்படக்கூடாது என்பதால் ஒரு திட்டத்தை அறிவிக்கிறேன். நமது பல்லவத்தை வடபல்லவம் தென்பல்லவம் என்று இரு பகுதிகளாகப் பிரிக்கிறேன். தென்பல்லவத்தின் தலைநகரம் மாவிலக்கையும், வடபல்லவத்தின் தலைநகரம் காஞ்சியாகவும் இருக்கட்டும். வடபல்லவத்தைப் பட்டத்து அரசி சங்கவை பிராட்டிக்கும் எனக்கும் பிறந்த நிருபதுங்க வர்மன் ஆள்வான். தென்பல்லவத்தை எனக்கும் கண்டன் மாறம்பாவைக்கும் பிறந்த கம்பவர்மன் ஆள்வான். போர்க்காலங்களில் இரு பல்லவர்களும் தங்கள் படைகளை ஒன்று திரட்டிப் போர் புரிவர்..!"*

*இரு அரசிகளுக்கிடையே பட்டத்துக்காக நடைபெற்றுக் கொண்டிருந்த பனியுத்தத்தை இந்தப் பிரிவினையின் மூலம் தீர்த்து வைத்தான், நந்திவர்மன்.*

*'நந்தியின் தலை கொய்யப்படும். தொண்டை கிழியும்!' என்று உதயசந்திரனிடம் பல்லவத்தின் அழிவைப்*

*** மூன்றாம் நந்திவர்மனின் வரலாறு குறித்த கல்வெட்டு, செப்பேட்டுச் செய்திகளும், நந்திக்கலம்பகத்தில் உள்ள செய்திகளும் ஒன்றோடு ஒன்று இணைந்து காணப்படுகின்றன.

இந்நூலில் நந்திவர்மனின் தெள்ளாறு வெற்றியைப் பற்றி மட்டும் 16 பாடல்களில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. கொற்றவாயில் முற்றம், வெறியலூர், வெள்ளாறு, தெள்ளாறு போன்ற பல்வேறு போர்க்களங்களைப் பற்றிக் கூறும் சிறந்த வரலாற்று நூலாகவும் இது திகழ்கிறது.

பாடலாகப் பாடி எச்சரித்திருந்தார், சாயாவக்ரர். அவர் கூறியது போல் தொண்டை என்கிற தொண்டை நாடு இரண்டாகக் கிழிந்தது.

பல்லவத்தை இரண்டு கூறாகப் பிரித்துவிட்டு, தொடர்ந்து துறவியின் பாடல்களைக் கேட்கத் துவங்கினான், நந்திவர்மன்.

துறவி தொடர்ந்து பாடல்களைப் பாட, தொடர்ந்து பந்தல்களும் எரிந்தன.

கடைசியில் ஒரே ஒரு பாடல் மட்டும் பாட வேண்டி யிருந்தது. ஒரே ஒரு பந்தல் மட்டும்தான் எரிய வேண்டியிருந்தது.

"வேண்டாம் மன்னரே! கடைசிப் பாடலை கேட்காமல் இருந்துவிடுங்கள்..!" மாறம்பாவையும், சங்கவியும் இருபுறமும் நின்று இறைஞ்சினார்கள்.

"நான் என்றாவது மறையத்தான் வேண்டும். ஆனால் காஞ்சிக்கு மீண்டும் அத்திமலைத்தேவன் கிடைத்தால் பல்லவம் மீண்டும் பொலிந்து நிற்கும். பல்லவம் பழைய பெருமைகளுடன் நிமிர்ந்து நிற்கும்!" என்ற நந்திவர்மன் தனது செல்வங்களான நிருபதுங்கனையும், கம்ப வர்மனையும் தன் அருகே அழைத்தான்.

"நாளை நான் மடிந்துபோனால், எனது கிரியைகளைத் தருமவனத்தில் செய்யுங்கள். அத்திமலையான் சிலையை அத்திமலையில் பிரதிஷ்டை செய்துவிட்டு, தற்போது அங்குள்ள வரதநாராயணனை மீண்டும் ஸ்ரீவரத்திற்கு எழுந்தருளச் செய்துவிடுங்கள்..!" என்றான்.

இரு மனைவிகளையும் வாஞ்சையுடன் நோக்கினான்.

"சங்கவை! மாறம்பாவை! உங்கள் இருவருக்கும் இடையே உள்ள பிணக்குகளை அகற்றவே பல்லவத்தை இரண்டாகப் பிரித்தேன். இரண்டு பல்லவங்களுக்கும் ஆன்மா ஒன்றே. அது அத்திமலையில் உள்ளது. ஒற்றுமையாக இருங்கள். அஸ்வத்தாமா தொடங்கி

மூன்றாம் நந்திவர்மனான எனது காலம் வரையில் பல்லவம் பல சாதனைகளைப் பார்த்துள்ளது. எனது ஆட்சியில் போர் வெற்றிகள் ஏராளம். இருப்பினும், அத்திமலையானை மீண்டும் கண்டெடுப்பதற்காக எனது இன்னுயிரை ஈந்தேன் என்கிற பெருமை யாருக்குக் கிடைக்கும். அந்தத் திருப்தியோடு நாளை நான் புறப்படுகிறேன்" என்று கூற, இரு அரசிகளும் அழுகை தாளாமல் கதற ஆரம்பித்தனர்.

மறுநாள் —

சூரியன் உதித்தது. நந்திவர்மனின் வாழ்வில் கடைசி நாள். நந்திவர்மனின் வாழ்வு மட்டுமா.. நந்திவர்மனோடு பல்லவமும் பொசுங்கப் போகிறது அல்லவா?

துறவியின் கடைசிப் பாடலுக்காக அமைக்கப் பட்டிருந்த பந்தல் சற்றே பெரிதாக இருந்தது. பந்தலின் கீழே இருக்கைக்குப் பதிலாக விறகுக் கட்டைகள் அடுக்கப்பட்டிருந்தன. துறவிகள் இருவரும் பந்தலின் முன்பாகத் தயார் நிலையில் நின்றனர். மன்னரும் தயாராக வந்து நின்றார்.

நந்திக்கலம்பகத்தின் நிறைவைக் காண மக்கள் கூட்டம் அலைமோதியது. இதுவரை கேட்டிருந்த நந்திக்கலம்பகப் பாடல்களில் வீரமும் *நகைச்சுவையும் கலந்து காணப் பட்டது.

---

* பரத்தையர் வீட்டுக்குச் சென்று திரும்பிய தலைவன், பாணன் ஒருவனைத் தலைவியிடம் தூது அனுப்புகிறான். பாணரின் தூது உரை கேட்டுச் சினம் கொண்ட தலைவி அவனை இழித்துரைப்பதாக அமையும்.

'ஈட்டுபுகழ் நந்தி பாண! நீ எங்கையர் தம்
வீட்டிலிருந்து பாட விடிவளவும் – கேட்டிருந்தோம்
பேயென்றாள் அன்னை, பிறர் நரியென்றார், தோழி
நாயென்றாள், நீ என்றேன் நான்.'

பாடல் வரிகளில் இளிவரல் (எள்ளல் நகை) தொனிப்பதை அறியலாம்.

நந்திவர்மன் வெள்ளை வேட்டியை அணிந்து, வெள்ளை வஸ்திரத்தால் மார்பை மூடியிருந்தான். மேனியில் அணிகலன்கள் எதுவும் இல்லை. நிதானமாக அந்தப் பந்தலை நோக்கி நடக்க, கூட்டம் அமைதியாக அவனை நோக்கிக்கொண்டிருந்தது.

இளந்துறவி பாடத் துவங்கினார்.

"வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை அடைந்ததுன் வீரம்
கற்பகம் அடைந்ததுன் கரங்கள்
தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்
செந்தழல் அடைந்ததுன் தேகம்
நானும் என் கலியும் எவ்விடம் புகுவோம்
நந்தியே நந்தயா பரனே!"

துறவிகள் பாடி முடித்திருக்கமாட்டார்கள். பந்தலோடு சேர்ந்து சிதைப் பகுதியும் எரியத்தொடங்க, பந்தல் முறிந்து சிதையின் மீது விழ..

அதற்குப் பிறகு நந்திவர்மனை யாராலும் காண முடியவில்லை.

"நந்திவர்மன் புகழ் ஓங்குக!" என்று அலறியபடி மக்கள் கூட்டம் முண்டியடித்து வர, தலைமை அமைச்சர் தலையசைக்க, காவலர்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்தத் துவங்கினர். நந்திவர்மனின் சிதையிலிருந்து சாம்பலை எடுத்து நெற்றியில் பூசுவதற்காக மக்கள் முண்டியடிக்க, தலைமை அமைச்சரின் கண்கள், பாடிய துறவிகளைத் தேடின. அந்தக் களேபரத்தில் துறவிகள் இருவரும் காணாமல் போனார்கள் என்பதை அறியவே அரண்மனை அதிகாரிகளுக்குத் தாமதமானது.

தன்னைத் தீயிட்டுக் கொளுத்தி தனது மகன்களைக் காப்பாற்றிய கோகில வாணியின் மகன்கள் திறம்பட ஒரு நாடகத்தை ஆடி, நந்திவர்மனை பழிதீர்த்த கதைதான் நந்திக்கலம்பகம்.

நந்திக்கலம்பத்திற்குப் பிறகு பல்லவம் இரண்டு கூறுகளாகச் செயல்படத் துவங்கின.

# 31. அஸ்வம் முதல் அபராதம் வரை

'நந்தியின் தலை கொய்யப்படும்.
பெருநந்தியின் மானம் பங்கப்படும்.
வீணையின் தந்திகள் அறுபடும்.
சிறுநந்தியின் தேகம் பொசுக்கப்படும்.
தொண்டை கிழிபடும்.
அபராதம் செய்தவனின் தலை சீவப்படும்.
அத்துடன் பல்லவம் சமாதி நிலையை அடையும்..'

*சாயாவக்ரர் தன்னிடம் ஆருடமாகப் பாடியிருந்த பாடல் உதயசந்திரனின் செவிகளில் எதிரொலித்துக் கொண்டே இருந்தது..!*

*பல்லவத்தின் அழிவு தவிர்க்க இயலாது என்பது அவனுக்குத் தெரிந்துவிட்டது. இருந்தும், அஸ்வத் தாமாவின் பிள்ளைகளாகத் தோன்றி பல்லவமும், காம்போஜமும் ஆயிரம் ஆண்டுகளாக ஆற்றிய சாதனை களுக்கெல்லாம் முடிவுரை கூறும் தருணம் நெருங்கி விட்டது என்பதனை ஜீரணிக்க முடியாமல் திணறினான்.*

*சாயாவக்ரரின் பாடல்படி பெரும்பாலான சம்பவங்கள் நிகழ்ந்துவிட்டன. சாளுக்கிய விக்ர மாதித்யன் பல்லவ நந்தியின் வடபகுதிகளை ஆக்ரமித்து நந்தியின் தலை கொய்யப்படும் என்பதனை நிரூபித்தான்.*

*பெருநந்தி என்கிற இரண்டாம் நந்திவர்மன் சாளுக்கியத்திடம் வடபுலத்தையும், பாண்டியர்களிடம் தென்புலத்தையும் இழந்து பெரும் அவமானத்திற் குள்ளானான். பெருநந்தியின் மானம் பங்கப்படும் என்கிற ஆருடம் இதனை மெய்ப்பித்தது.*

மிகவும் பலவீனமான மன்னனாகத் நந்திவர்மன் திகழ்ந்ததால், கங்கர்கள், குந்தளர்கள், சாளுக்கியர்கள், கடம்பர்கள், சேரர்கள், பாண்டியர்கள் என்று சுற்றி நின்ற எதிரிகளிடம் அவன் பணிந்தே போக வேண்டி இருந்தது. பல பகுதிகளை எதிரிகளிடம் இழந்து, நந்திகள் அறுபடும் என்பதற்குச் சான்றாக அவனது ஆட்சி திகழ்ந்தது.

சிறுநந்தியின் தேகம் பொசுக்கப்படும் என்பதும் உண்மையாயிற்று. தீயினில் பொசுங்கி மாண்ட சிற்றன்னை கோகில வாணியின் மகன்கள் சதி செய்து நந்திக்கலம்பகம் பாடி மூன்றாம் நந்திவர்மனின் தேகத்தைத் தீயில் பொசுக்கினர்.

எல்லாவற்றிற்கும் மேலாகத் தொண்டை கிழியும் என்று கூறியதை மெய்ப்பிக்கும் வகையில், தொண்டை நாடு, தென்பல்லவம், வடபல்லவம் என்று இரு கூறாகப் பிரிக்கப்பட்டது. அவர் பாடலில் கூறப்பட்டிருந்த பெரும்பாலான ஆருடங்கள் பலித்துவிட்டன.

உதயசந்திரன் வேதனையுடன் இரவு வானை வெறித்த படி உப்பரிகை மஞ்சத்தில் சரிந்திருந்தான்.

நந்திவர்மன் சந்திர பாதையில் அத்திமலை ஆலயத்தைத் திருப்பி நோக்க வைத்த அதே சமயம், தமிழ் மண்ணின் சரித்திரம், சூரிய பாதையை நோக்கி பயணம் செய்து கொண்டிருந்தது.

ஸ்வேதகிரியில் இருந்தபடி அனைத்து மாற்றங்களையும் செய்து கொண்டிருந்தான், உதயசந்திரன். பகீரதனின் பிரயத்தனத்தினால் வானுலகில் இருந்து பூவுலகிற்கு வர ஒப்புக்கொண்ட கங்கை, ஆர்ப்பாட்டத்துடன் பூமியில் இறங்க, அவளைத் தனது மணிமுடியில் சிவனார் தாங்க, அதில் சிக்கி வெளிவரும்வரை வழி தெரியாமல் கர்வ பங்கம் அடைந்து, பிறகு அவரது அருளால் புனித கங்கையாகப் பிரவாகம் எடுத்தது போன்று, பல்லவத்தின் ஆர்ப்பாட்டத்தையெல்லாம் தனது வேகத்தால் தடுத்து

நிறுத்தி, புதியதொரு சோழத்தை தனது குருதியினால் உண்டாக்கி இருந்தான் உதயசந்திரன்.

அவனுக்கும், பீயுஷமணிக்கும் பிறந்த இதயசந்திரனை சாயாவக்ரரின் யோசனைப்படி ஜெயாதித்யன் என்று பெயர் மாற்றி இருந்தான். ஜெயாதித்யன் சகலகலா வல்லவனாக, போர்க்கலைகளில் சமர்த்தனாக, அரசியல் தந்திரங்களில் சாணக்கியனாக வளர்ந்திருந்தான்.

தனது அமைச்சர் திருவெள்ளறை ஸ்வஸ்திக கிணற்றை அமைத்த கம்பன் அரையன் மூலம் அவனது பெருமை களை அறிந்திருந்தான், உறையூர் சோழன் கமலாதித்யன். ஸ்வஸ்திக கிணறு அமைந்ததே, ஜெயாதித்யனின் பிறந்த தினத்தை முன்னிட்டுத்தானே. உறையூர் சோழனும், அவனது மகள் மகரந்த வல்லியும் திருவெள்ளறைக்கு வந்து ஸ்வஸ்திக கிணற்றைப் பிரம்மிப்புடன் நோக்கினர். ஜெயாதித்யனை கூடத்தான்..! அவனைக் கண்டதும் காதல் கொண்டாள், மகரந்தவல்லி. தன் மகளுக்கு நாயகனை மட்டும் தேடவில்லை கமலாதித்யன். தனக்குப் பிறகு உறையூர் சோழனாக ஆட்சி நடத்துவதற்கு ஒரு மன்னனையும்தான் தேடிக்கொண்டிருந்தான். அனைத்துத் தேடல்களுக்கும் ஒரு விடையாகக் கிடைத் தான் ஜெயாதித்யன்.

பல்லவ ராஜசிம்மனின் பெயரன், குந்தளத் தந்திதுர்கனது மகன், பழைய பல்லவ தளபதி உதய சந்திரனின் மகன்தான் ஜெயாதித்யன் என்பதை அறிந்ததும் கமலாதித்யனுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. பல்லவமும், சோழமும் நம்மால் இணையட்டும் என்று தனது மகளை ஜெயாதித்யனுக்கு மணமுடித்தான், உறையூர் சோழன் கமலாதித்யன்.

மகன் ஜெயாதித்யன் உறையூர் சோழனாகப் பதவி ஏற்ற அன்று, தனது ஸ்வேதகிரி மாளிகையின் உப்பரிகையில் அமர்ந்தபடி விண்மீன்களை நோக்கிக் கொண்டிருந்தான்.

தமிழன்னை பல்லவத்திற்கு நீலாம்பரியையும், சோழத்திற்குப் பூபாளத்தையும் பாடுவதற்குத் தயாராகி விட்டிருந்தாள், என்பதை உணர்ந்துவிட்டிருந்தான். முதுமையை ஏற்றுக்கொண்டுவிட்டிருந்த அவனது தேகம், மஞ்சத்தில் சாய்ந்திருக்க, வானை நோக்கியபடி கிடந்தான். எங்கும் விண்மீன்களை யாரோ வான மண்டலத்தில் இறைத்தது போன்று காட்சி அளிக்க, தனது அயர்ச்சி மிகுந்த கண்களால் வானையே பார்த்துக்கொண்டிருந்தான்.

அப்போது —

'இன்று என்ன நட்சத்திரம்? ஓ..! இன்று சித்திர அஸ்தம் அன்றோ..! அத்திமலையான் அத்திமலையின் மீது இருந்த வரை ஸ்ரீதள மணியைச் சாற்றிக்கொள்ளும் அன்றெல்லாம் இந்த ஒளிவட்டம் தோன்றுமே. இன்று எங்ஙனம் தோன்றுகிறது? ஒருவேளை.. அத்திமலைத் தேவன் கிடைத்து அவனுக்குத் தற்போது உக்ரோதயமாக இருக்கும் ஸ்ரீதள மணியைச் சாற்றி இருக்கிறார்களோ?'

பரபரப்புடன் எழ முயன்றான். ஆனால் அவனால் தனது தேகத்தை அசைக்க இயலவில்லை. வாய்விட்டு, பீயுஷமணியை அழைக்க முயன்றான். நா புரளவில்லை. தனது தேகம் கனத்து சில்லிட்டு வருவதை உணர்ந்தான். வானில் தெரிந்த அந்த ஒளிவட்டத்தையே வெறித்தான்.

'அத்திமலையானே! நீ வந்துவிட்டாயா! வரவில்லை யென்றால் தயை கூர்ந்து வந்துவிடு. பல்லவர்கள் உன்னை வைத்துப் பகடை ஆடியதால் கோபத்தில் நீ தலைமறைவாக இருக்கிறாய் என்று எனக்குத் தெரியும். இனி அங்ஙனம் அரசர்கள் பொறுப்பில்லாமல் இருக்க மாட்டார்கள். புதிய சோழ பல்லவத்தை உருவாக்கி யிருக்கிறேன். வலுவான அரசர்கள், துடிப்பான வீரம், கூர்மையான சிந்தனைகளைக் கொண்டு அவர்கள் உன்னைக் காப்பார்கள். நீ காஞ்சியில் உனது அத்தி மலையிலேயே நிம்மதியாக இருக்கலாம். அதற்கான

ஏற்பாடுகளைச் செய்துவிட்டேன். இனி அரசியல் உனது ஆலயத்தைப் பாதிக்காது,' என்று மனதினுள் வேண்டியபடி அந்த ஒளிவட்டத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

பீயுஷமணி உதயசந்திரனுக்காகக் குவளையில் பால் கொண்டு வந்து அவனை உலுக்கியபோது அவனது தேகம் பூரணமாகச் சில்லிட்டு இருந்தது. கண்கள் விரிந்த படியே இருந்தன. வானின் ஒளிவட்டத்தை நோக்கிய படியே அத்திமலைத்தேவனை நாடிச் சென்றுவிட்டிருந் தான், உதயசந்திரன்.

தான் தென்பல்லவத்தின் மன்னனாக முடிசூட்டிக் கொண்டதை கொண்டாடும் வகையில், காஞ்சி அத்திமலையின் மீது எழுந்தருளி இருந்த வரத நாராயணனுக்கு உக்ரோதயத்தைச் சூட்டியிருந்தான், நிருபதுங்கவர்மன்.

# 32. கடைசி பல்லவன்

கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகப் பயணம் செய்த ஒரு வம்சத்தின் முடிவுரையை எழுதப் போகிற தினம் அன்று என்று யார்தான் எதிர்பார்த் திருப்பார்கள்?

உபபாண்டவர்களைக் கொன்றதற்காகக் கண்ணனின் சாபத்தைப் பெற்று, தனது தேகம் உருகத் துவங்க, வலி தாளாமல் அத்திவனத்திற்குத் தவம் செய்ய வந்தான், அஸ்வத்தாமா. அங்கே நாகசோமாவிடம் காதல் கொண்டு வாழ வேண்டும் என்கிற ஆசையில் இரட்டை மகன்களைப் பெற்று பல்லவர்களையும், காம்போஜர் களையும் தோற்றுவித்தான்.

புலிசோமா, புலிவேமு தொடங்கி, கரிகாலன் — இளந்திரையன் சகோதர பாசத்தினால் பலம் பெற்று, விஷ்ணுகோபனால் வளர்க்கப்பெற்று, சிம்மவர்மன், அவனிசிம்மன், மகேந்திரன், நரசிம்ம பல்லவன், ராஜசிம்மன், நந்திவர்மன் என்று பல மன்னர்களால் வல்லரசாகத் திகழ்ந்து, மூவேந்தர்களையும் தங்களுக்குச் சாமரம் வீசவைத்த பல்லவம் மரணப்படுக்கையில் கிடந்தது.

சமுத்ரகுப்தன், புலிகேசி, சாளுக்கிய விக்கிரமாதித்யன் போன்ற எதிரிகளையே அஞ்சி ஓட வைத்த பல்லவம், இப்போது தங்களுக்குள்ளேயே வடபல்லவம் மற்றும் தென்பல்லவமாகப் பிரிந்து போராடிக் கொண்டிருந் தார்கள்.

சிம்மவர்மனின் காலத்தில் நவரத்தின பல்லவியால் பாதிக்கப்பட்டு, பிறகு நரசிம்மவர்மனின் தீவிர முயற்சியில் சிறிது காலம் வெளிப்பட்ட அத்தி மலைத்தேவன் மீண்டும் ஆழிப்பேரலையில் காணாமல் போய், இதுவரை மீண்டும் கிடைக்கவில்லை. பல்லவர் காலம் முடியும்வரை நான் வெளிவரப்போவதில்லை என்று இன்னும் பிரவாள மாளிகையின் புகை போக்கியின் உள்ளேதான் நிற்கின்றான்.

பல்லவத்தின் இரு துண்டுகளான வடபல்லவத்திற்கும், தென்பல்லவத்திற்கும் பல பிரச்னைகள் மூண்டுள்ளன.

தான் பதவியேற்றதை கொண்டாடும் வகையில் அத்திமலையில் எழுந்தருளி இருந்த வரதநாராயணனுக்கு உக்ரோதயத்தைச் சாற்றி வழிபட்டான், நிருபதுங்கவர்மன். விண்ணில் படர்ந்த அந்த ஒளியை நோக்கியபடி உதயசந்திரனும் தனது உயிரைவிட்டிருந்தான்.

அந்த ஒளியை மற்றொரு இரு கண்களும் அதே வேளையில் நோக்கியிருந்தன. அவை வடபுல பல்லவத்தை ஆளும் கம்பவர்மனின் கண்கள். அந்த ஒளியைக் கண்டதுமே உக்ரோதயம் அவன் வசம் உள்ளதை அறிந்து கொண்டான்.

கோபத்துடன் தனது தாய் மாறம்பாவையைச் சந்திக்கச் சென்றான்.

"அம்மா! இன்று ஹஸ்த நட்சத்திரம் போல் இருக்கிறதே!" — கேட்டுக் கொண்டே வந்த மகனின் முகத்தைப் பார்த்ததுமே அவன் எதற்கு அடிபோடுகிறான் என்பதைப் புரிந்து கொண்டாள், மாறம்பாவை.

"ஆம்! வரதநாராயணனுக்கு உக்ரோதயத்தைச் சாற்றி நிருபதுங்கன் வழிபட்டதாக நானும் அறிந்தேன்." — மாறம் பாவை கூற, அவளைக் கோபத்துடன் நோக்கினான், கம்பவர்மன்.

"இதென்ன நியாயம்? தென்பல்லவத்திற்கும், வட பல்லவத்திற்கும் தலைநகரம் காஞ்சி என்கிற போது, ஒத்தாடை அரண்மனையும், அத்தியூரும் இருவருக்குமே பொது என்கிற போது உக்ரோதயம் மட்டும் அவன் வசம் எப்படிச் சென்றது?" — கம்பவர்மன் ஆவேசத்துடன் கேட்டான்.

"மகனே! ஒன்றை நீ நினைவில் கொள்ள வேண்டும். நிருபதுங்கவர்மன் பட்டத்து அரசி சங்கவையின் மகன். முழுப் பல்லவத்திற்கும் அவனே வாரிசு. உனது தந்தையால் பாண்டிய கைதியாக நான் இங்கு வந்தவள். என்னை மணந்து கொள்ளும்படி நந்திவர்மருக்கு ஆலோசனை கூறியதே சங்கவைதான். அப்படி இருக்க, நமது நன்மைக்காக மன்னர் பல்லவத்தை இரண்டு பகுதியாகப் பிரித்து உன்னை மன்னனாக அமர்த்தி இருக்கிறார். தானம் கொடுத்த மாட்டின் பற்களைச் சோதிப்பது போன்று இம்மாதிரி விஷயங்களில் உன் மனதை அலைபாயவிடாதே. உனக்குக் கிடைத்துள்ள பகுதியில் நல்லாட்சி வழங்கு. அவ்வளவுதான் கூற முடியும்!" — மகனை சமாதானம் செய்தாள்.

"இருப்பினும் எனது அனுமதியின்றி அவரால் உக்ரோதயத்தை எடுத்து வரதநாராயணனுக்கு அணிவிக்க முடியாது! அந்த ஆபரணம் அவன் வசம் சென்றது எப்படி? கஜானாவில் இருந்து களவாடினானா?" — கம்பவர்மன் கேட்டதும், திடுக்கிட்டாள், மாறம்பாவை.

"நந்திக்கலம்பகம் பாடல் நிறைவடைந்த நூறாம் நாள், சிதையின் மீது ஏறிப் படுப்பதற்கு முன்பாகத் தனது வசம் இருந்த உக்ரோதயத்தை தனது மகன் நிருபதுங்க வர்மனிடம் சேர்த்துவிடும்படி உனது தந்தை என்னிடம் தந்தார். நானும் அதை அவனிடம் தந்துவிட்டேன்..!" — மாறம்பாவை கூற, அவளை எரிச்சலுடன் நோக்கினான், கம்பவர்மன்.

"நீ பெற்ற மகன் நான். என்னிடம் அல்லவா உக்ரோதயத்தை நீ தந்திருக்க வேண்டும்?"

"உனது தந்தையின் உத்தரவு. அவன் முதலில் பிறந்தவன். மன்னரின் முதல் மனைவிக்குப் பிறந்தவன். உன்னிடம் உனது பெரியன்னை சங்கவை பாசத்தைக் காட்டுவதில்லையா..? அதுபோன்று நான் நிருபதுங்க னிடம் எனது பாசத்தைக் காட்டினேன். அவ்வளவே. பிரச்னை எனக்கும், உனது பெரியன்னை சங்கவைக்கும் தான். உங்களிடையே அல்ல என்பதை மட்டும் புரிந்து கொள். நாளையே சாளுக்கியருடனோ, பாண்டி யருடனோ போர் மூண்டால் நீங்கள் இருவரும் ஒற்றுமை யாகப் போர் புரிய வேண்டும் என்பதை நினைவில் கொள்!" — மாறம்பாவை கூற, கோபத்துடன் அங்கிருந்து வெளியேறினான் கம்பவர்மன்.

ஆற்றாமையுடன் இங்கும் அங்குமாக அலைந்து கொண்டிருந்தான், கம்பவர்மன். அவன் மனைவி கங்க நாட்டு இளவரசி விஜயா அவனை எப்படிச் சமாதானம் செய்வது என்று புரியாமல் தனது கைகளைக் கட்டியபடி நின்றிருந்தாள்.

கம்பவர்மனை சமாதானம் செய்வதற்கு ஒருவரால் மட்டுமே முடியும். அவர் வரும் வரை அமைதியாகக் காத்திருக்க வேண்டியதுதான் என்று நினைத்திருந்தாள். மகன் அபராஜிதனையும், மகள் திரிபுவனையையும் கண்ட மாத்திரத்தில் கம்பவர்மன் உருகிவிடுவான். அத்திமலையான் ஆலயத்திற்குச் சென்றிருந்த அவர்கள் வரும் நேரம்தான்.

திரிபுவனை முன் நடக்க, அவளைத் தொடர்ந்தபடி உள்ளே வந்தான், அபராஜிதன். தந்தை கோபத்துடன் நடை போட்டிருப்பதைக் கண்டதும் தாயின் முகத்தைக் கேள்வியுடன் நோக்கினான்.

"என்ன நடந்தது?"

*“யாருக்குத் தெரியும்? பாட்டியார் மாறம்பாவையை சந்திக்கச் சென்றார். வரும்போது கோபத்துடன் வந்தார். அதன் பிறகு இந்த ராஜநடையைப் பயின்று கொண்டிருக்கிறார்.” — விஜயா கூறினாள்.*

*“கவலைப்படாதீர் தந்தையே..! பெரியப்பா நிருபதுங்கவர்மரை ஆலயத்தில் பார்த்தேன். உம்மைப் போன்ற கம்பீர நடை இல்லை. அவரது நடை நுணல் ஒன்று தாவிச்செல்வது போன்று உள்ளது..!” — திரிபுவனை கூறினாள்.*

*“உஷ்.. உனது தந்தையை நம்பி எதையும் கூறாதே, புவனா. திடீரென்று அண்ணாவின் மீது பாசம் கொண்டு, எனது அண்ணனை நுணல் என்று கூறுகிறாயா என்று உன் மீது பாய்வார்..?” — விஜயா கூறினாள்.*

*“அபராஜிதா! அத்திமலை ஆலயத்தில் வரத நாராயணப் பெருமாளுக்கு உக்ரோதயத்தை அணி வித்தார்களாமே. நீ கண்டாயா?”*

*“கண்டேன் அப்பா! அதனை அணிந்துகொண்டு பெருமாள் ஜொலித்தார்.!” — அபராஜிதன் கூறினான்.*

*“அந்த ஆபரணத்தின் பழைய பெயர் ஸ்ரீதள மணி. காணாமல் போன அத்திமலையானின் ஆபரணம். அத்திமலையான், உக்ரோதயம் பல்லவத்திற்குச் சொந்தம். இரண்டையும் வைத்திருப்பவர்கள் உண்மையான பல்லவ மன்னர்கள். அவை நம் வசம் வைத்திருக்கும் வரை, நாம் நம்மைப் பல்லவ மன்னர்கள் என்று கூறிக்கொள்ள இயலாது.” — யோசனையுடன் கூறினான், கம்பவர்மன்.*

*“அப்பா! பல்லவம் இரு கூறானது குறித்து எனக்கும் வருத்தம் உண்டு. கவலைப்படாதீர்கள். நீங்களே பல்லவ மன்னர். ஒருங்கிணைந்த பல்லவத்தை விரைவில் நீங்கள் ஆட்சி செய்யப்போகிறீர்கள். விரைவில், அதனை நான்*

செய்து முடிப்பேன்..! அத்திமலையும், உக்ரோதயமும் விரைவில் நம் வசம் வந்துவிடும் பாருங்கள்." — அபராஜிதன் கூற, மற்ற மூவரும் அவனை திகைப்புடன் நோக்கினர்.

"அப்படியானால் நம் பெரிய தந்தையின் கதி? அவரது ஒரே மகள் நம் அக்கா கோதாவரி தேவியின் கதி?"

"பொறுத்திருந்து பாருங்கள். அமர்ந்திருக்கும் பல்லவ நந்தி துடிப்புடன் பாய்ந்து பழைய வேகத்துடன் எழுந்து முன்னேறப் போகிறது. சாளுக்கிய வராகமும் பாண்டிய மீனும், பல்லவ நந்திக்குக் கப்பம் கட்டப்போகின்றன. நமது பெரிய தந்தை நிருபதுங்கவர்மனை கைது செய்து சிறையில் தள்ளப்போகிறேன். கோதாவரி தேவி நமது ஆளுமையை ஏற்றால் பிழைக்கலாம். இல்லையேல் அவளும் தந்தைக்குத் துணையாகச் சிறையில் அவதிப்பட வேண்டியதுதான்." — அபராஜிதனின் குரலில் உறுதி தொனிக்க, கம்பவர்மன் திகைத்தான்.

'என்ன இருந்தாலும் அவன் என் அண்ணன். கோதாவரி எனது மகள். அவர்களை சிறையில் அடைப்பதற்கு நான் ஒப்புக்கொள்ளமாட்டேன்..!" — என்று சொல்வதற்காக தன் வாயைத் திறந்தான், கம்பவர்மன். ஆனால்..

'எனது திட்டத்திற்கு நீ ஆதரவு கொடுக்கவில்லையென்றால், உனது அண்ணனுடன் நீயும் சிறையில் கிடக்க வேண்டியதுதான்..' என்பது போன்று அபராஜிதன் பார்க்க, கம்பவர்மன், தனது எண்ணத்தை மாற்றிக்கொண்டான்.

இளவரசன் அபராஜிதன் இப்போதெல்லாம் சோழ நாட்டு இளவரசன் ஆதித்தனிடம் நெருங்கிப் பழகுகிறான் என்பதை அறிந்திருந்தான் கம்பவர்மன்.

ஆதித்தன், உதயசந்திரனின் கொள்ளுப்பேரன் என்பதை அபராஜிதன் மூலம் அறிந்திருந்தான். தனது

பாட்டன் இரண்டாம் நந்திவர்மனின் மைத்துனன் உதயசந்திரன் நாடு கடத்தப்பட்டது, ஸ்வேதகிரியில் தங்கி, உறையூர் சோழனின் மகளைத் தன் மகனுக்கு மணம் செய்வித்தது, அவன் சோழ அரசனாகப் பதவி ஏற்றது, அனைத்தையுமே அறிந்திருந்தான்.

ஜெயாதித்யனின் மகன் குமராதித்யனுக்குப் பிறந்த விஜயாலயனின் மகன்தான் ஆதித்யன். தனது மகன் அபராஜிதனுக்கும், ஆதித்யனுக்கும் இடையே ஏற்பட்ட நட்பு, காலத்தின் கட்டாயம் என்றே நினைத்தான் கம்பவர்மன். அபராஜிதன் பல்லவனாகவும், ஆதித்தன் சோழனாகவும் கூட்டணி வைத்து, சாளுக்கியம், பாண்டியம் ஆகிய எதிரிகளை அடக்கியாள வேண்டும் என்று மனதினுள் திட்டம் வகுத்திருந்தான், கம்பவர்மன். எனவேதான், அபராஜிதன், ஆதித்யனுக்கு இடையே நிலவிய நட்பினை ஆதரித்து வந்தான்.

நண்பனைக் காண அடிக்கடி காஞ்சிக்கு வந்தான், ஆதித்யன்.

நண்பனுடன் உப்பரிகையில் உரையாடிக் கொண்டிருப்பான், அபராஜிதன். பல்லவமும், சோழமும் இணைந்து தென்புலத்தையே கைப்பற்றி ஆளவேண்டும் என்கிற தங்களது கற்பனைக்கு எப்படி வடிவம் கொடுப்பது என்று ஆலோசித்துக் கொண்டிருப்பார்கள்.

ஒரு நாள் உப்பரிகை நந்தவனத்தில் மலர்களைப் பறிப்பதற்காக வந்தாள் திரிபுவனை. கரகரப்பான குரல் ஒன்று துடிப்புடன் பேச, செடிகளின் மறைவிலிருந்து தனது அண்ணன் அபராஜிதனுடன் உரையாடிக் கொண்டிருக்கும் அவனது நண்பன் ஆதித்தனை முதன் முறையாக நோக்கினாள். இவன்தான் சோழ இளவரசன் ஆதித்தனா? காண்பதற்குக் கம்பீரமாக இருக்கிறானே. இவளது அண்ணன் அபராஜிதன் பல்லவ அரண்மனைக் கன்னியரின் தூக்கத்தைக் கெடுத்தவன். அழகும், கம்பீரமும், துடிப்புடன் காணப்படுவான். தனது தாய்

*கங்க இளவரசி விஜயாவின் பேரழகையும், பல்லவத்தின் கம்பீரத்தையும் ஒருங்கே கொண்டவன். ஆனால் அவனே, ஆதித்தனின் முன்பாகச் சற்றே பொலிவிழந்து காணப்பட்டான். முறுக்கிய மீசையும், துடிக்கும் தசைகளும் அவனது வீரத்தின் புகழைப் பாடின. குன்றுகளைத் தோளினில் சுமப்பது போன்று புஜபலம், கதாயுதங்களாகக் கைகள், தேக்கு மரங்களாகக் கால்கள், ஒட்டிய வயிறு, அகன்ற மார்பு என்று அவனது எழில்தேகத்தைத் தனது கண்கள் என்னும் தூரிகைகளால் ஓவியமாகத் தீட்டினாள்.*

*"எனது தங்கை திரிபுவனைக்குத் திருமணம் முடித்ததும், நான் முதலில் எனது பெரியப்பன் வசம் உள்ள பல்லவத்தை மீட்டெடுப்பேன். பிறகுதான் நமது திட்டத்தைச் செயல்படுத்த முடியும்!" — அபராஜிதன் கூறினான்.*

*"எனது தந்தைக்கு வாதம் ஏற்பட்டு வலதுபுறம் செயலிழந்துவிட்டது. மஞ்சத்தில் கிடந்தபடிதான் ஆட்சி செய்கிறார். அவரது உடல்நிலை இன்னும் மோசமாவதற்கு முன்பு பழைய சோழத்தை தஞ்சையில் நிறுவி, எனது தந்தையை முதல் பிற்காலச் சோழனாக அறிவிக்க எண்ணுகிறேன். அதற்கு நாம் உடனடியாகப் போர் நடவடிக்கைகளில் இறங்கினால்தான் முடியும். நானும் நீயும் இளவரசர்களாக எவ்வளவு காலம்தான் காத்திருப்பது நண்பா?" — அலுப்புடன் கூறினான், ஆதித்தன்.*

*"எனது தந்தை எப்போது கேட்டாலும், அரியணையை விட்டு இறங்கி வழிவிடுவார். ஆனால் தனது அண்ணன் நிருபதுங்கனின் மீது பாசம் கொண்டவர். நான் பதவிக்கு வந்தால் அவரை விரட்டிவிடுவேன் என்கிற பயத்தில் தான், தான் இன்னும் அரியணையில் தொடர்கிறார்!" — அபராஜிதன் கூறினான்.*

"இப்படியே நாம் திட்டம் தீட்டிக்கொண்டிருக்க வேண்டியதுதானா, அபராஜிதா? உனது தங்கைக்குத் திருமணம் நடக்க வேண்டும் என்றால், சேர நாட்டு மன்னன் ஸ்தாணு ரவிக்குத் திருமணம் செய்யப் பெண் தேடுகிறார்கள். அவனை வேண்டுமானால் நிச்சயம் செய்துவிடேன்?" — ஆதித்தன் கூற, செடிகளின் பின்பாக நின்றிருந்த திரிபுவனையின் மனம் துடிதுடித்தது. முதன் முறையாக ஒருவனைக் கண்டு வசப்பட்டிருக்கிறாள் அவள். அவள் இதயத்தைக் கவர்ந்தவனே, அவளுக்கு ஒரு மணவாளனைப் பரிந்துரைத்தால் அவளுக்கு எப்படி இருக்கும்..?

'ஏன் ஆதித்தா! நீயே எனது தங்கையைத் திருமணம் செய்துகொள்ளேன்!' — அபராஜிதன் கூறினால் ஆதித்தன் என்ன பதிலைக் கூறுவான்?

பறித்த பவளமல்லி கூடையில் குவிந்திருக்க, தற்செயலாக அங்கே வருபவளைப் போன்று அன்னம் போன்று நடந்து அண்ணன் முன்பாக நின்றாள். அண்ணனின் எதிரே அமர்ந்திருந்த ஆதித்தனை கவனி யாதவள் போல் அண்ணனை மட்டும் நோக்கினாள்.

"அண்ணா! நாளை நடக்கும் எனது பிறந்ததின வைபவத்திற்கு அக்கா கோதாவரியை அழைக்கப் போகிறேன். என் மீது பாசத்தைப் பொழிபவள். அவளை நாம் புறக்கணித்தோம் என்றால் மிகவும் வேதனைப் படுவாள். உனக்கு அவளைப் பிடிக்காது என்றாலும் எனக்கு வேறு வழி தோன்றவில்லை..!" —அண்ணனை நோக்கிப் பேசினாலும், ஆதித்தனின் கண்கள் தனது மேனியில் பரவியிருக்கும் என்கிற எண்ணத்தில் ஓரக்கண்ணால் அவனை நோக்கினாள். அவளது முகத்தில் ஏமாற்றம் பரவியது.

சுவடியில் இருந்த வரைபடம் ஒன்றை தீவிரமாகக் கவனித்துக்கொண்டிருந்தான், ஆதித்தன். இவளது பக்கம் அவன் ஏறிட்டு நோக்கவில்லை.

"நல்லவேளை, நினைவுபடுத்தினாய். நீ கோதாவரி தேவியை அழைப்பது குறித்து எனக்குக் கவலையில்லை. ஆனால் உனது சீராட்டத்தைச் சற்றே குறைத்துக் கொள். ஏனென்றால், எனது வருங்காலத் திட்டத்தின்படி முதலில் குறிவைக்கப்படுபவர்கள், பெரியப்பன் நிருபதுங்கனும், அவர் மகள் கோதாவரி தேவியும்தான். அடேடே! மறந்து போனேனே! ஆதித்தா! இவள்தான் எனது தங்கை, பல்லவ நாட்டு இளவரசி திரிபுவனை. திரிபுவனை, இவன்தான், எனது நண்பன் சோழ இளவரசன் ஆதித்தன்."

அவனது உருவமே ஓவியமாக இவளது இதயத்தில் இருந்தாலும், அப்போதுதான் அவனை கவனிப்பவள் போன்று புருவங்களை உயர்த்தினாள்..

"ஓ! மன்னிக்க வேண்டும். தங்களை நான் கவனிக்கவில்லை. எனது பணிவான வந்தனங்கள்..!" — திரிபுவனை கூறினாள்.

"அப்படியா? ஆனால் நான் இந்தக் கண்களைப் பார்த்திருக்கிறேன்..!" ஆதித்தன் கூறினான்.

"இருக்காதே. தங்களை நான் முதன்முறையாக இப்போதுதானே காண்கிறேன்?" — வியப்புடன் கேட்டாள், திரிபுவனை.

"இல்லை! செடியின் பின்பாக இந்தக் கண்களை நான் அப்போதே கவனித்துவிட்டேன். நேராகத் தென்படும் கண்களைவிட, மறைந்திருந்து நோக்கும் கண்களை நான் எளிதாக இனம் கண்டு கொள்வேன்!" — ஆதித்தன் கூறியதும், குப்பென்று குங்குமமாக அவளது முகம் சிவந்தது. அவனும் இவளை கவனித்துக் கொண்டுதான் இருக்கிறான்.

"கண்களைக் கண்டுவிட்டீர்கள். அப்படியென்றால், தெரிந்தவராகிவிட்டீர்கள். நாளை எனது பிறந்ததின வைபவத்திற்கு நீங்களும் அவசியம் வர வேண்டும்!" — திரிபுவனை கூறினாள்.

"நான் இருப்பது உறையூர். வாரம் ஒருமுறை காஞ்சிக்கு வந்து அபராஜிதனைச் சந்திக்கிறேன். மீண்டும் உறையூர் சென்றுவிட்டு நாளை வருவது என்பது நடவாத காரியம்!" — ஆதித்தன் கூறினான்,

"உறையூரில் வாழ்பவரா..? உறையில் கத்தியை சொருகினால் வாரம் ஒருமுறைதான் எடுப்பீரோ. அடுத்த வாரம் வரும் வரை, எதிரியை காத்திருக்கச் சொல்வீரோ..? உறையில் இருந்து புறப்படும் கத்தியைப் போன்று வீறுகொண்டு உறையூரிலிருந்து புறப்படுவதற்கு எப்போதும் தயாராக இருக்க வேண்டாமோ?" — திரிபுவனை கூற, அனைவரும் சிரித்துவிட்டனர்.

அன்றிரவு ஒத்தாடை அரண்மனையிலேயே தங்கிவிட்டு, மறுநாள் திரிபுவனையின் பிறந்த நாள் வைபவத்தில் பங்கேற்றுவிட்டு, உறையூருக்குத் திரும்பத் தீர்மானித்தான், ஆதித்தன்.

அன்றிரவு —

அபராஜிதனின் அறைக்குச் சென்று பேசிக் கொண்டிருந்தான், ஆதித்தன். அப்போது ஆதித்தனின் பணியாள் ஓடிவந்து அவனது செவியில் ஏதோ கூறிவிட்டுச் செல்ல, ஆதித்தனின் முகம் இருளடைந்தது.

"என்ன நடந்தது, ஆதித்தா?"

"உறையூரில் இருந்து செய்தி வந்துள்ளது. எனது தந்தை விஜயாலயன் மஞ்சத்தில் இருந்து விழுந்து மூர்ச்சையாகி விட்டார். தலையில் பலத்த காயம். இனியும் அவர் பழைய நிலைக்குத் திரும்புவார் என்று எனக்குத் தோன்ற வில்லை, அபராஜிதா! மீண்டும் நான் நிறுவ நினைக்கும் சோழ ஆட்சியின் முதல் மன்னனாக அவரை அமர்த்துவேன் என்று சபதம் செய்திருக்கிறேன். எனவே, நமது திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும்!" — ஆதித்தன் கூற, தனது கண்களை மூடி யோசனையில் அமர்ந்திருந்த அபராஜிதன், ஒருவித தீர்மானத்துடன் எழுந்து நின்றான்.

"சரி! உடனே நாம் காரியத்தில் இறங்குவோம். நாளை எனது தங்கையின் பிறந்த நாள் வைபவத்தில் ஒரு முக்கிய அறிவிப்பினை எனது தந்தை கம்பவர்மன் செய்வார்!" என்று கூறியபடி தந்தையின் அறையை நோக்கி நடந்தான், அபராஜிதன்.

கம்பவர்மனும் விஜயாவும் அப்போதுதான் பள்ளியறைக்கு வந்திருந்தனர். விஜயா வெற்றிலையை மடித்துக் கம்பவர்மனிடம் நீட்ட அவன் அதனை வாங்கி வாயில் போட்டுக்கொள்ள, சரியாக அறைக்கதவு தடதடவென்று தட்டப்பட்டது.

விஜயா சென்று கதவைத் திறக்க, புயலென உள்ளே வந்தான், அபராஜிதன்.

"அம்மா! நீ சற்று நேரம் அறைக்குச் சென்று காத்திரு அல்லது நந்தவனத்தில் உலவிவிட்டு வா. நான் தந்தையுடன் ராஜாங்க விஷயங்கள் குறித்துப் பேச வேண்டும்!" என்று சொல்ல, கணவனைத் திரும்பி நோக்கியவள், மௌனமாக அறையைவிட்டு வெளியேறினாள். அவள் பின்பாகக் கதவை அறைந்து சாற்றினான், அபராஜிதன்.

மறுநாள் மாலை —

சர்வாலங்கார பூஷிதையாகத் தனது அந்தப்புரத்திலிருந்து வந்த திரிபுவனையைப் பிரம்மிப்புடன் பார்த்துக்கொண்டிருந்தான், ஆதித்த சோழன். அவனை பிரம்மிக்கச் செய்துவிட்டோம் என்கிற திருப்தியில் உற்சாகமாக வளைய வந்து விருந்தினருடன் பேசிக் கொண்டிருந்தாள், திரிபுவனை. மன்னனாகப் பதவி ஏற்றுத் திக்விஜயம் செய்து நாடுகளைக் கைப்பற்றிச் சோழ சக்கரவர்த்தியாகத் திகழ வேண்டும். அஸ்வமேத யாகத்தைச் செய்து உலகின் பலம் வாய்ந்த மன்னனாகத் திகழ வேண்டும் என்கிற கனவினை வளர்த்து வந்தான், ஆதித்தன். வானத்தைத் தங்களின் கனவுகளுக்கு

எல்லையாகக் கொண்டவர்களுக்குச் சிற்றின்ப விஷயங்களில் அவ்வளவாக நாட்டம் இருக்காது. முதன் முறையாக, அரியணை மற்றும் போரை மறக்கடிக்கும் விஷயங்கள் உலகில் உள்ளன என்பதை அறிந்தவனாக, தனது பார்வையைத் திரிபுவனை செல்லும் திசைகளில் எல்லாம் பாய்ச்சிக்கொண்டிருந்தான், ஆதித்தன்.

அபராஜிதன் தனது தந்தையையே கவனித்துக் கொண்டிருந்தான். கம்பவர்மன் சற்றே பதற்றத்துடன் அமர்ந்திருந்தான். இருக்காதா பின்னே? 'நீ மன்னர் பதவியில் இருந்து விலகுவதாக நாளை பிறந்த நாள் வைபவத்தில் அறிவிக்க வேண்டும். என் மகன் அபராஜி தன்தான் அடுத்த மன்னன் என்ற அறிவிப்பினையும் செய்ய வேண்டும்' என்று கட்டளையாகக் கூறியிருந்தான். தனது மகனை மீறி தான் ஒன்றும் செய்ய முடியாது என்பதனை உணர்ந்திருந்த கம்பவர்மனால் தலை யசைக்கத்தான் முடிந்தது.

தந்தை அறிவிப்பு செய்தவுடன் களத்தில் இறங்கி தனது ஆளுமையை நிலைநாட்ட வேண்டும். படைகளைத் திரட்டி பெரியப்பன் நிருபதுங்கனையும் அவன் மகள் கோதாவரியையும் சிறையிலடைக்க வேண்டும்.

அபராஜிதன் நினைத்துக்கொண்டிருந்த போதே, உள்ளே நுழைந்தாள், கோதாவரி.

அபராஜிதனும், கோதாவரியும் சம வயதுடையவர்கள் என்றாலும் மாதக்கணக்கில் அபராஜிதன் பெரியவன் என்பதால் அவனை அண்ணா என்றுதான் அழைப்பாள், கோதாவரி.

"அண்ணா! நலமாக இருக்கிறாயா?" என்றபடி அவன் முன்பாக நின்றாள், கோதாவரி.

"பல்லவம் நலமாக இருந்தால் நாமும் நலமாகத்தானே இருப்போம் கோதா! பல்லவமே பாதியாகப் பிரிந்து போனது. எனவே நான் பாதியளவில் நலமாக

இருக்கிறேன். மீதியளவில் நீ நலமாக இருக்கிறாய் அல்லவா?" — அபராஜிதன் கூறினான்.

"நீ நகைச்சுவையாகப் பேசுகிறாயோ, இல்லை காட்டமாகப் பேசுகிறாயோ நான் அறியேன் அண்ணா. என்னைக் காணும்போதெல்லாம் உனது குரல் காட்டமாகவே ஒலிக்கின்றது. உனது தங்கை திரிபுவனையுடன் பேசும் போது உற்சாகமாக ஒலிக்கும் உனது குரல் என்னைக் கண்டால் மட்டும் ஏன் கோபத்தை உமிழ்கின்றது? ராஜாங்க விஷயங்களைக் கடந்து பார்க்கப் பழகு. நாம் இருவரும் சகோதரர் களுக்குப் பிறந்தவர்கள் அல்லவா? என்னிடம் ஏன் பகைமை பாராட்டுகிறாய்?" — நேரிடையாகவே கேட்டுவிட்டாள் கோதாவரி.

அவளது கண்களுக்குள் உறுத்துப் பார்த்தான், அபராஜிதன்.

"உனது தந்தை மட்டுமல்ல, எனது தந்தையும் சேர்த்து தான் சொல்கிறேன். நந்திவர்மருக்கு மகன்களாகப் பிறந்த தால் மட்டுமே அவர்கள் மன்னர்களாகத் திகழ்கிறார்கள். பெற்றவன் பெயரில் குளிர்காய நினைக்கும் மகன் இல்லை நான். உண்மையில் புலிசோமன் தொடங்கி எனது தந்தை கம்பவர்மன் மற்றும் உனது தந்தை நிருப துங்கவர்மன் வரை, ஆட்சி செய்த பல்லவ மன்னர் களிலேயே சிறந்தவன் அபராஜித பல்லவன் என்கிற பெயரைப் பெறுவதற்காக உழைக்கிறேன். மன்னன் யார் என்பது போர்க்களத்தில் நிச்சயிக்கப்பட்ட வேண்டும். மஞ்சத்தில் அல்ல! உனது தந்தையும், எனது தந்தையும் மன்னராக அரியணையில் வீற்றிருக்கத் தகுதி அற்றவர்கள்!" — பற்களை உக்கிரமாகக் கடித்தபடி அபராஜிதன் பேச, கோதாவரி உறைந்து போனாள்.

அவனது மிரட்டல்களுக்குத் தான் பயப்படவில்லை என்பதை அவனுக்கு உணர்த்த வேண்டும் என்கிற ஆக்கிரோஷம் எழுந்தது அவளுள்.

"அப்படியா அண்ணா! மஞ்சத்தில் மன்னர்கள் தேர்ந் தெடுக்கப்படக் கூடாது என்கிற உனது கூற்றை நான் முழுவதுமாக ஆதரிக்கிறேன். உனது பாட்டி மாறம் பாவைக்கு நீ இதனை முன்பே கூறியிருந்தால், உனது தந்தை கம்பவர்மன் மன்னனாக வேண்டும் என்று நந்தி வர்மரிடம் தலையணை மந்திரம் ஓதாமல் இருந்திருப் பாரோ என்னவோ!" என்றபடி அவனை இகழ்ச்சியுடன் பார்த்துவிட்டு, உள்ளே நடந்தாள்.

வாயடைத்துப் போனான், அபராஜிதன்.

'பேசு கோதாவரி பேசு! நாளை எனது சிறையில் இருக்கும்போது யாருடன் பேசப் போகிறாய்? உனக்குள் பேசிக்கொள்ள வேண்டியதுதான்.'

பிறந்த நாள் வைபவம் தொடங்கியது.

"எனது உடல்நிலை மோசமடைந்து வருகிறது. எனவே நான் வடபல்லவத்தின் மன்னர் பதவியில் இருந்து விலகுகிறேன். எனது மகன் அபராஜித பல்லவன் எனக்குப் பின் அரியணை ஏறி வடபல்லவத்தை ஆட்சி செய்வான்" என்றதும் அனைவரும் திகைத்து நிற்க, பிறகு தங்களைச் சுதாரித்துக்கொண்டு கைகளைத் தட்டினார்கள்.

அபராஜிதன் தனது நண்பன் ஆதித்தன் பக்கத்தில் நிற்க மறுபுறம் திரிபுவனை நிற்க, விருந்தினர்களை நோக்கி தலையசைத்து வணங்கினான்.

"பல்லவ மக்களே! எனது தந்தையின் விருப்பத்தை ஏற்று, பல்லவத்தின் மன்னனான நான் நல்லாட்சி வழங்குவேன்!" என்று கூற, சட்டென்று தனது இருக்கை யினில் எழுந்து நின்றாள், கோதாவரி.

"உனது தந்தை வடபல்லவத்திற்கு மட்டுமே மன்னர். எனவே அவரது வடபுலத்தில் மன்னனாகப் பதவி ஏற்றுக் கொள்ளத் தயார் என்று கூறு. தென்பல்லவத்தை எனது

தந்தை நிருபதுங்கவர்மர் ஆள்கிறார்..!" —ஆவேசத்துடன் கோதாவரி கூற, அங்கே பூரண அமைதி நிலவியது.

"இளவரசி! இன்றுள்ள நிலை அது! நாளை அந்த நிலை மாறலாம்!" — ஆதித்த சோழன் கூற, அவனை எரித்துவிடுபவளைப் போன்று பார்த்தாள், கோதாவரி.

"என்றோ சோழர்கள் விட்டுப்போன பெயரை உங்கள் பெயருடன் இணைத்துக்கொண்டு பல்லவம் அளிக்கும் பிச்சையைக் கொண்டு வயிற்றைக் கழுவும் நீ ஒன்றும் எங்கள் நாட்டு விவகாரங்களில் தலையிடத் தேவை யில்லை. உன்னை வளர்த்துக் கொள்வதற்காக அபராஜி தனுக்குக் கொம்பு சீவிவிட்டுக் கொண்டிருக்கிறாய்..! அதற்கு நாங்கள் இடம் கொடுக்கமாட்டோம்!" — கோதாவரி கூற, ஆதித்தனின் முகம் சிறுத்தது.

"இப்போது புரிந்ததா? எதற்கு இவளுக்கு அழைப்பு விடக் கூடாது என்று கூறினேன் என்று!" —அபராஜிதன் தங்கை திரிபுவனையைக் கடிந்து கொள்ள, திரிபுவனையின் முகம் சூம்பியது.

"என்னால் உங்கள் வைபவம் பாழாக வேண்டாம். நான் இங்கிருக்கப் போவதில்லை. திரிபுவனை! உன்னை வாழ்த்துவதற்காகத்தான் நான் வந்தேன். ஆனால் போகும்போது ஒரு எச்சரிக்கை விடுக்க நினைக்கிறேன். இந்த மனிதன் ஆதித்தன் என்பானை நம்பாதே. அவனது முகத்தின் பின்பாக ஒரு சதியாளனை நான் காண்கிறேன். தன்னை உயர்திக் கொள்வதற்காக என்ன வேண்டு மானாலும் செய்வான். அபராஜிதா! நீ எனது அண்ணன்! இவனிடம் எச்சரிக்கையாக நடந்துகொள். போலி முகமூடியோடு அலைகிறான். பல்லவத்திற்கு இவன் பெருங்கேட்டினை விளைவிப்பான். அண்ணன் தங்கை இருவருமே இவனிடம் எச்சரிக்கையாக இருங்கள்!" என்று கூறிவிட்டு வெளியேறினாள், கோதாவரி.

*மன்னனாக பதவி ஏற்றதும், உடனடியாகத் தென் பல்லவத்தின் மீது படையெடுத்தான். சோழமும் தெற்கு திசையில் இருந்து தாக்க, அபராஜிதவர்மனும் வடதிசையில் இருந்து படையெடுக்க, தென்புலம் போராடாமல் வீழ்ந்தது. நிருபதுங்கனும், கோதாவரியும் பாண்டிய நாட்டிற்குத் தப்பி ஓடி தலைமறைவாக வாழ்ந்தார்கள். முதலில் உக்ரோதயத்தைக் கைப்பற்றிய அபராஜிதன் அதனைத் தனது பள்ளியறையில் பதுக்கி வைத்தான்.*

*கங்க மன்னன் ப்ரித்விபதியும், அபராஜிதன் மற்றும் ஆதித்தன் கூட்டணியில் சேர்ந்து கொண்டான்.*

*வரகுண பாண்டியனுக்கும், அபராஜிதனுக்கும் *திருப்புறம்பியத்தில் பெரும்போர் நிகழ்ந்தது. ஆதித்த சோழனும், கங்க நாட்டு ப்ரித்விபதியும் அபராஜிதனுக்கு ஆதரவாகக் களத்தில் குதிக்கத் தஞ்சை முத்தரையர்கள் பாண்டியரை ஆதரிக்கக் கடுமையான போர் நிகழ்ந்தது. ஆதித்தன் தனது போர்த் திறமையால் பாண்டியர்களை நடுங்க வைத்ததோடு அவர்களை விரட்டியும் அடித்தான். போரில் படுதோல்வி அடைந்தான் வரகுண பாண்டியன். தனது புரவியில் தப்பி ஓடிய வரகுணன் ஓரிடத்தில் மயங்கி விழுந்தான். காயங்களுடன் அனாதையாகக் கிடந்த வரகுணனை தற்செயலாகக் கவனித்தாள் ஒரு*

---

* தமிழகத்தில் மாபெரும் சரித்திர திருப்பத்தை உண்டு பண்ணிய போர் ஸ்ரீபுறம்பியப் போர். கும்பகோணம் அருகில் உள்ள புறம்பியத்தில்தான் வரகுண பாண்டியன் படைகளும், அபராஜித பல்லவனின் படைகளும் மோதின. ஆதித்த சோழனும், கங்க நாட்டு பிரித்விபதியும் அபராஜிதனுக்கு ஆதரவாகப் போரிட பாண்டியர்கள் பக்கம் தஞ்சை முத்தரையர்கள் போரிட்டனர்.

உதயேந்திரியம் தகடுகளின் குறிப்புப்படி அபராஜிதன் இந்தப் போரில் வென்றாலும், கங்க நாட்டு மன்னன் பிரித்விபதி இந்தப் போரில் கொல்லப்பட்டான். அவனது திருவரசு இன்றும் புறம்பியத்தில் உள்ளது. சோழர்கள் மீண்டும் எழுச்சியைப் பெற உதவிய போர் திருப்புறம்பியப் போர்.

பெண். தனது குடிலுக்கு ஓடிச்சென்று தந்தையை அழைத்து வந்து வரகுணனை தங்கள் குடிலுக்கு அழைத்துச் சென்று அவனது காயங்களுக்குக் களிம்பு பூசி, அவனைக் குணப்படுத்தினாள்.

சற்றே தெளிவடைந்த வரகுண பாண்டியன் தன்னைக் காப்பாற்றிய தந்தைக்கும் மகளுக்கும் நன்றியைக் கூறினான்.

“நாங்களும் அபராஜிதனால் பாதிக்கப்பட்டவர்கள் தான். எனவே உங்களுக்குச் செய்த உதவிகளுக்கு நன்றி தேவையில்லை!” — அந்தப் பெண் கூற, வியப்புடன் அவர்களை நோக்கினான், வரகுணன்.

“நீங்கள் யார்?” — வரகுணன் கேட்டான்.

“நான்தான் உண்மையான பல்லவ மன்னன் நிருபதுங்கவர்மன். இவள் எனது மகள் கோதாவரி!”

அந்த தந்தை கூறியதும் மலைத்துப் போனான், வரகுண பாண்டியன். அவர்களைத் தன்னுடன் பாண்டிய அரண்மனைக்கு அழைத்துச் சென்று சகல மரியாதைகளுடன் அவர்களைத் தங்க வைத்தான். போரில் தளபதியாகச் செயல்பட்ட தனது தம்பி வீர குலசேகரனுக்குக் கோதாவரியை மணம் செய்து கொடுத்தான். பாண்டியனின் அரவணைப்பில் தாங்கியபடி அபராஜிதவர்மனுக்கு எதிராகக் காய்களை நகர்த்த தக்க தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தனர், தந்தையும் மகளும்.

“கவலைப்படாதீர்கள் தந்தையே. ஆதித்த சோழனை பெரிதும் நம்புகிறான் உனது தம்பி மகன். யானைப் பாகனுக்கு யானையால் மரணம், தேர் தச்சனுக்குத் தேரினால் மரணம். சதிகாரனை நம்பினால் சதியால் தான் மரணம் என்பதை அப்போது அவன் உணர மாட்டான்.” — கோதாவரி கூறிக்கொண்டிருந்த அதே சமயம்,

*காஞ்சி ஒத்தாடை அரண்மனையில் மாபெரும் விழா ஒன்று நடைபெற்றுக்கொண்டிருந்தது.*

*"திருப்புறம்பியம் போரில் நமது பல்லவப் படைகளுக்கு மாபெரும் வெற்றியை ஈட்டித்தந்த ஆதித்த கரிகாலனை பாராட்டி, நமது பல்லவம் வசம் உள்ள சோழ நாடு பகுதிகளை எனது நண்பனுக்கே பரிசாக அளிக்கிறேன். மேலும் முத்தரையர்களிடமிருந்து பறித்த தஞ்சையும் அவனுக்கே வெகுமதியாக அளிக்கிறேன். புதிய சோழன் பொழிந்து நிற்கட்டும். பல்லவமும், சோழ தேசமும் தமிழன்னையின் இரு கண்களாகத் திகழட்டும்..!" உணர்ச்சியுடன் உரையாற்றி, சோழத்திற்குத் தனது வசமிருந்த பகுதிகளை அளித்தான்.*

*அன்றிரவு விருந்து இனிதே முடிந்தது.*

*பள்ளியறைக்குப் போவதற்கு முன்பாக அபராஜிதன் தனது நண்பனின் தோளினை பற்றி நிறுத்தினான்.*

*"நண்பா! எனது தங்கை திரிபுவனை உன்னை விரும்பு கிறாள். சோழ அரசியாக அவளை உனது அரியணையில் அமர்த்திக்கொள்வாயா?" — ஆர்வத்துடன் கேட்டான், அபராஜிதன்.*

*"நண்பா! மன்னித்துக்கொள். எனது தாயார் குந்தள இளவரசி *லக்ஷ்மணப்ரியாவை எனக்கு மணம் பேசி விட்டாள். என்னால் மறுத்துப் பேச இயலவில்லை. அவளை நான் விரைவிலேயே மணந்து கொள்ள இருக்கிறேன்..!" — ஆதித்தன் கூறினான்.*

*"என் தங்கையை ஏமாற்றிவிட்டாயே, ஆதித்தா! அவள் உன்னைப் பெரிதும் நம்பியிருந்தாள்!"*

---

* ஆதித்த சோழனின் முதல் மனைவி இளங்கோ பிச்சிதான் லட்சுமணப்ரியா. தமிழில் இளங்கோ பிச்சி என்று பெயர் மாற்றம் செய்து கொண்டாள்.

"இல்லையண்ணா! எனக்கு ஒன்றும் ஏமாற்றம் இல்லை. கோதாவரி எனது பிறந்ததின வைபவத்தின் போது எச்சரித்தாளே. தன்னை உயர்த்திக் கொள் வதற்காக உனது நண்பன் என்ன வேண்டுமென்றாலும் செய்து கொள்வான் என்று. வெற்றிபெற முடியவில்லை என்றால் வெற்றி பெறுபவர்களோடு நின்று எக்காளம் செய்தால் உலகமே ஒருவனை பெரிய வீரனாகக் கருதுமாம். பெரிய அரச குடும்பங்கள் எல்லாம் பெண் தர போட்டி போடுவார்களாம். கோதாவரி சொன்னது போன்று நீதான் நல்ல நண்பனை தேர்ந்தெடுக்கத் தவறிவிட்டாய். எச்சரிக்கையாக இரு. பல்லவத்திற்கே வேட்டு வைத்துவிடப் போகிறான், உனது நண்பன்" என்று வருத்தத்துடன் கூறியவள், விடுவிடுவென்று அங்கிருந்து நகர்ந்தாள்.

புன்னகைத்தபடி நின்றிருந்தாலும், உள்ளுக்குள் எரிமலை வெடித்துக் கொண்டிருந்தது, ஆதித்தனுக்கு. திமிர் பிடித்தவள். பொசுங்கிக்கொண்டிருக்கும் பல்லவத்தின் இளவரசி அவள். பொலிந்து கொண் டிருக்கும் சோழத்தின் மன்னன் நான். இவளை நான் மணப்பதற்கு வரிசையில் நிற்க வேண்டுமா? இவளல்லவா இவனது காதலைப் பிச்சை வாங்கி, இவனது பாதங்களில் சரணாகதி அடைந்திருக்க வேண்டும்.

எந்தத் துணிவில் இவனிடம் ஆணவத்துடன் பேசுகிறாள்? பழைய உறையூர் சோழன் அல்லவே இவன். தஞ்சை தரணியைப் புதிய தலைநகராகக் கொண்டு பழையாறையில் பெருமைகளை உலகிற்கு எடுத்துரைக்கச் சோழ அரியணையில் விஜயாலயனுக்குப் பிறகு மன்னனாக மாறப் போகிறவன். நினைவிழந்து கிடைக்கும் விஜயாலயனுக்குப் பதிலாக இவன்தான் மன்னனாக ஆட்சி செய்பவன் என்பதை மறந்து விட்டாளா திரிபுவனை!

உள்ளம் கொதித்துக் கொண்டிருக்க, வெளியே புன்சிரிப்புடன் எதுவுமே நடவாதது போன்று அமர்ந்திருந்தான், ஆதித்தன்.

★ ★ ★

**ஆ**தித்தனுக்கும் இளங்கோ பிச்சிக்கும் குந்தள நாட்டில் திருமணம் இனிதே நடந்தது. மீண்டும் தஞ்சைக்குத் திரும்பும் வழியில் காஞ்சிக்கு வந்து தான் தரும் விருந்தினை தம்பதியாக ஏற்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தான். நண்பனின் கோரிக்கையைச் சங்கடத்துடன் ஏற்றான், ஆதித்தன். தனது புதிய மனையாளுடன் திரிபுவனையைச் சந்திப்பதில் சிறிதும் விருப்பம் இல்லை அவனுக்கு. இருப்பினும், ஆணவம் பிடித்த திரிபுவனைக்கு முன்பாகத் தனது மனைவியுடன் சரசமாடி அவளை எரிச்சலில் ஆழ்த்த வேண்டும் என்கிற தீர்மானத்துடன் விருந்திற்கு வர ஒப்புக்கொண்டான்.

நண்பனையும் அவன் மனைவி இளங்கோ பிச்சியையும் வாயிலில் வந்து வரவேற்றான். திரிபுவனையைக் காணாமல் சற்றே ஏமாற்றம் அடைந்தான், ஆதித்தன். தன்னை அடைய முடியவில்லையே என்கிற ஏமாற்றத்தில் தன்னை அவள் தவிர்க்கின்றாள் போலும் என்று நினைத்தான்.

ஆனால் விருந்துக்கு முன்பாகத் தன்னைப் பிரமாத மாக அலங்கரித்துக்கொண்டு ஒய்யாரமாக நடந்து வந்தாள், திரிபுவனை.

இளங்கோ பிச்சிக்கு அலங்காரம் செய்வதற்காகத் தோழிகள் அழைத்துச் சென்றிருக்க, ஆதித்தன் அங்கே தனியாக அமர்ந்திருந்தான். திருபுவனை நேராக ஆதித்தனிடம வந்தாள்.

“சோழ அரசே! தாங்கள் எனக்கு எட்டாக்கனி யாகிவிட்டீர்கள் என்கிற வருத்தத்தில் மனம் போனபடி பேசிவிட்டேன். தங்கள் மனம் என்ன பாடுபட்டிருக்கும்

என்பதைப் பிறகு உணர்ந்தேன். எனது பேச்சை ஒரு சிறு பெண்ணின் பிதற்றலாகக் கருதி என்னை மன்னித்துவிடுங்கள்..!" — பணிவுடன் அவள் கூற, அவளைக் கனிவுடன் பார்த்தான், ஆதித்தன்.

"அதனால் என்ன திருபுவனி. நாம் ஒருவரை நேசித்து அவரால் உதாசீனம் செய்யப்படும்போது வார்த்தைகளில் கட்டுப்பாட்டினை இழப்பது சகஜம்தான். எட்டாக் கனியை முயற்சிப்பதைவிட, எட்டுகின்ற கனியை பறித்துச் சுவைக்க வேண்டியதுதான்!" — ஆதித்தன் கூறினான்.

"அதற்கு அவசியமில்லை ஆதித்த சோழரே. சில சமயங்களில் ஏமாற்றம் என்று நாம் நினைத்திருக்க, இல்லை, நீ முயற்சிக்கும் கனியை காட்டிலும் சுவையான கனியை நானே உதிர்த்து உன் மடியில் விழச்செய்கிறேன் என்று எங்கள் அத்திமலைத்தேவன் ஒரு இனிய கனியை எனது மடியில் விழ வைத்திருக்கிறான். யோசித்துப் பார்த்தேன். உண்மையிலேயே அந்தக் கனி, நான் முயற்சித்த கனியைக் காட்டிலும் அதிக சுவை கொண்டது!" — திரிபுவனை அவனைக் கேலியாகப் பார்த்தாள்.

குழப்பத்துடன் ஆதித்தன் அவளை வெறித்தான். சரியாக அப்போது கட்டிளங்காளையைப் போன்ற ஒரு வாலிபன் அங்கே தோன்றி, திரிபுவனையின் பக்கத்தில் வந்து நிற்க, அவனைப் பார்த்ததும், அவள் தனது வெண்முத்துப் பற்கள் பளிச்சிட சிரித்தாள்,

திரிபுவனை பக்கத்தில் நின்ற வாலிபன் மன்மதனை போன்று காணப்பட்டான். ஆதித்தனைவிடச் சற்றுக் குட்டையாக இருந்தாலும், வெண்ணிறமும், அழகிய முகவெட்டுமாக, கட்டுமஸ்தான உடலுடன் காட்சி அளித்தான். தனது கரிய நிறத்திற்கு முன்பாக அந்த வாலிபன் தேகம் ஜொலித்துக்கொண்டிருப்பதை ஆதித்தன் உணர்ந்தான்.

திரிபுவனை ஆதித்தனை அலட்சியமாக நோக்கினாள்.

"இவர் யார் தெரியுமா? சேர மன்னர் ஸ்தாணு ரவி. என்னை மணம் பேசுவதற்காக வந்திருக்கிறார். நெல்லொடு நெல் சேர வேண்டும். கல்லோடு கல் சேர வேண்டும் என்கிற தத்துவத்தை இவரைப் பார்த்ததும் தான் உணர்ந்து கொண்டேன். எனது அண்ணன் எனக்காகப் பார்த்திருக்கும் மணமகன் எப்படி?" என்று கேட்டபடி ஆதித்தனை அலட்சியமாகப் பார்த்தாள்.

ஆதித்தனின் முகம் இருண்டது.

இளங்கோ பிச்சியுடன் சரசமாடி திரிபுவனைக்கு எரிச்சலை ஏற்படுத்த வேண்டும் என்று இவன் நினைத் திருக்க, பேரழகன் ஒருவனுடன் அவள் வளைய வருவதைக் கண்டு, இவனது அடிவயிற்றில் கனன்று எரிந்தது.

சரியாக இளங்கோ பிச்சி அதீத அலங்காரங்களுடன் அங்கே வந்து ஒரு பொம்மையைப் போன்று அவனருகில் அமர்ந்தாள். பட்டுச்சேலையில் பொட்டணமாக அமர்ந்து தலைக்கு மேல் பாறை ஒன்றை சுமப்பவளை போன்று பெரிய கொண்டையுடன் திகழ, மலைப் பாதையைச் சுற்றிச் சுற்றிச் செல்லும் பாதையைப் போன்று புஷ்ப சரங்கள் அந்தக் கொண்டையைச் சுற்றிப் படர்ந்திருந்தன.

"உங்கள் மனைவியா?" சாதாரணமாகத்தான் திரிபுவனை கேட்டிருந்தாலும், அவள் தன்னைக் கேலி செய்வதாக உணர்ந்தான் ஆதித்தன்.

"தங்களது பெயரை நான் தெரிந்துகொள்ளலாமா?" — திரிபுவனை கேட்க, அவள் தனது ஓரவிழிகளால் ஆதித்தனை நோக்கினாள்.

"யார் உனது பெயரைக் கேட்டாலும் லக்ஷ்மணப்ரியா என்று சொல்லாதே. தூய தமிழில் இளங்கோபிச்சி என்று

உரைக்க வேண்டும்!" — ஆதித்தன் அவளுக்குப் பாடம் புகட்டியிருந்தான்.

"எனது பெயர் இளங்கோ பிச்சி..!" — அடக்கத்துடன் கூறினாள் இளங்கோ.

"பிச்சி! பிச்சனுக்கேற்ற பிச்சிதான்!" என்று முணுமுணுத்தபடி ஸ்தாணு ரவியுடன் பேசியபடி நடந்தாள், திரிபுவனை.

வெறுத்துப்போய் அமர்ந்திருந்தான், ஆதித்தன்.

முதன்முறையாகத் திரிபுவனையைக் கண்டபோதே அவள் மீது மையல் கொண்டிருந்தான். அவளது உயரமும், மெலிந்த தேகமும், படபடப்பான பேச்சும், நளினமான நடையுடையும், கவர்ச்சியான பார்வையும் அவனைச் சுண்டி இழுத்தன. தான் உறையூர் சோழனாக இருப்பதால் பல்லவ இளவரசி தன்னிடம் ஆர்வம் காட்டமாட்டாள் என்றுதான் நினைத்திருந்தான். தான் அபராஜிதனிடம் பேசும்போது செடிகளின் மறைவில் இருந்து அவள் தன்னை ஆர்வமாக நோட்டம் விடுவதைக் கண்டதும் வேண்டும் என்றே அவளை அலட்சியப்படுத்தினான். திரிபுவனை தன் மீது மையல் கொண்டிருக்கிறாள் என்பதைப் புரிந்துகொண்டு இவளை சற்று அழ வைத்து, காதல் பிச்சைக்கு இறைஞ்ச வைத்து அவளை நம் காலில் விழ வைப்போம் என்றுதான் எண்ணியிருந்தான்.

ஆனால் தந்தையின் நிலை மோசமடைய, வேறு வழியின்றித் தாயின் திருமணப் பேச்சை ஏற்க வேண்டிய நிலை. குந்தள இளவரசி லக்ஷ்மணபிரியாவுடன் திருமணம் நிச்சயம் ஆன பிறகே அபராஜிதன் தனது தங்கையின் எண்ணத்தை அவனிடம் கூறியிருந்தான். அதன் பிறகு அவளது ஆக்கிரோஷமான பேச்சினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தவன், விருந்திற்கு வந்த தன்னை அவள் அவமதித்த விதம் பெரிதும் உறுத்தியது.

விருந்தில் கலந்து கொள்ள விரும்பாமல் மனைவியுடன் தஞ்சைக்குப் புறப்பட்டான்.

சேர மன்னன் ஸ்தாணு ரவியுடன் திரிபுவனைக்குத் திருமணம் நிச்சயமானதாகத் தகவல் வந்தது.

சோழ ஆட்சியைத் தஞ்சையில் நிறுவி, நல்லாட்சியை வழங்கிக்கொண்டிருந்தான், ஆதித்தன். அபராஜிதனும், திருப்புறம்பியம் போரில் வென்று தனது பலத்தை அதிகரித்துக் கொண்டிருந்தான்.

இருவரும் ஒன்றாகத் திக்விஜயம் செய்து சாளுக்கியத்தை வீழ்த்துவோம் என்று ஆதித்தனுக்குச் செய்தி அனுப்பினான் அபராஜிதன். இருவரும் சேர்ந்து திக்விஜயம் செய்யலாம் என்று யோசனையைக் கூறியது ஆதித்தன்தான். ஆனால் இப்போது அபராஜிதன் அதற்கு அழைப்பு அனுப்பியபோது ஆதித்தன் அதற்கு ஆர்வம் காட்டவில்லை. இருந்தாலும் நண்பனுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தைத் துவக்கத்திலேயே மீற விரும்ப வில்லை. தனது தளபதி பழுவூர் அரசருடன் காஞ்சிக்குப் புறப்பட்டான்.

அன்று சைத்ர ஹஸ்த நட்சத்திரம். அத்திமலை ஆலயத்தில் விமரிசையாக ஆராதனை நடந்தது. தனது பள்ளியறை கஜானாவில் பதுக்கி வைத்திருந்த உக்ரோதயத்தை வரதநாராயணனுக்கு அணிவிப்பதற்காக எடுத்துச் சென்றான்.

அன்று இரவு முழுவதும் உக்ரோதயத்தை அணிந் திருந்தார், வரதநாராயணர். அதிகாலையில் கோயில் அதிகாரிகள் உக்ரோதயத்தை அரண்மனையில் ஒப்படைக்க, அந்த ஆபரணத்தை பள்ளியறை கஜானாவில் வைப்பதற்காக எடுத்துச் சென்றவன், உடன் வந்த ஆதித்தனிடம் அந்த உக்ரோதயத்தைக் காட்டினான் அபராஜிதன்.

"நண்பா! இதுதான் உக்ரோதயம். அத்திமலைத் தேவனின் ஆபரணமான ஸ்ரீதள மணியின் புதிய வடிவம் தான் உக்ரோதயம். இதனை நரசிம்ம பல்லவனின் மகன் மகேந்திரனிடம் இருந்து ஏமாற்றி அபகரித்தனர் கங்கர்கள். ஆனால் நந்திவர்ம பல்லவன் அவர்களை வென்று உக்ரோதயத்தைப் பறித்துக்கொண்டார். பல்லவர்களின் வித்தான அத்திமலைத்தேவனின் ஆபரணம். அவனுக்காகவே இன்னும் காத்திருக்கிறது." — அபராஜிதன் கூறினான்.

"இந்த ஆபரணத்தின் விசேடம் என்ன?" — ஆதித்தன் வியப்புடன் கேட்டான்.

"நவரத்தினங்களைக் காட்டிலும் விலைமதிப்பில்லா யட்ச நேத்திரக் கற்களைக் கொண்டு செய்யப்பட்டது இந்த ஆபரணம். குபேரன் அத்திமலைத்தேவனுக்கு அளித்தது. பீமவர்மனால் மாற்றி அமைக்கப்பட்டது. அத்திமலைத்தேவன் சைத்ர ஹஸ்த நாளில் இதனை அணிந்து கொள்வான். அன்று காஞ்சியும் அதன் வான மண்டலமும் ஜெகஜோதியாக இருக்கும் என்பார்கள். அத்திமலையானுக்கு இந்த ஆபரணத்தை அணிவித்து அஸ்வமேத யாகம் செய்தால், ஒரு மன்னன் உலகையே தனது குடையின் கீழ் கொண்டு வருவான் என்கிற நம்பிக்கை. எனவேதான் பல மன்னர்கள் அத்திமலைத் தேவனின் தேவ உடும்பர பிரதிமைக்கும், இந்த உக்ரோதயத்திற்கும் அலைந்தார்கள்." தனது பள்ளியறை கஜானாவில் மீண்டும் வைத்தான், அபராஜிதன்.

மறுநாள் காலை பல்லவத் தளபதியும், சோழத் தளபதி பழுவூர் அரசரும் சந்தித்து திக்விஜயத்திற்கான திட்டத்தின் செயல்வடிவினை தயாரித்து இரு மன்னர் களிடமும் ஒப்படைப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

அன்று இரவு —

அபராஜிதன் ஆதித்தனுக்கும் அவனது சேனைத் தலைவர்களுக்கும் பெரிய விருந்து ஒன்றை அளித்தான்.

விருந்து முடிந்ததும் சற்று நேரம் பேசிக் கொண்டிருக்கலாம் என்று ஆதித்த சோழனை தனது பள்ளியறைக்கு அழைத்துச் சென்றான், அபராஜிதன். அவர்கள் உரையாடிக்கொண்டிருந்த போது, சற்று கவலை தோய்ந்த முகத்துடன் வந்து நின்றாள், அபராஜிதனின் மனைவி சந்திரகாந்தி.

"இன்று உமது மகள் கிருபாவதி பல்லவிக்குச் சற்று காய்ச்சலாக இருக்கிறது. எனவே நான் அவளது அறையில் உறங்கலாம் என்று இருக்கிறேன்..!" என்று கூறியதும், கவலையுடன் அவளை நோக்கினான், அபராஜிதன்.

"காய்ச்சலா? இரு நானும் வருகிறேன்!" என்றவன், திரும்பி ஆதித்தனை நோக்கினான்.

"நண்பா! சற்று எனக்காகக் காத்திரு! என் மகளுக்குக் காய்ச்சலாம். நான் சென்று அவளைப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்றவன் சந்திரகாந்தியுடன் நடந்தான்.

ஆதித்தனுக்குக் காலையில் அபராஜிதன் தனக்குக் காட்டியிருந்த உக்ரோதயத்தைக் காண வேண்டும் போல இருந்தது. அபராஜிதனின் கஜானாவை உரிமையுடன் திறந்து வெள்ளிப் பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த உக்ரோதயத்தை எடுத்து மேஜையின் மீது வைத்தான்.

மேஜையின் மீது கிடந்த உக்ரோதயத்தையே வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்தான், ஆதித்தன்.

மகள் கிருபாவதியைப் பார்த்துவிட்டு, ஆவலுடன் சற்றுநேரம் விளையாடிவிட்டு, தனது பள்ளியறையை நோக்கி நடந்தான், அபராஜிதவர்மன்.

அடுத்த சில நொடிகளில் அந்த இரவு பயங்கரமாக மாறப் போகிறது என்பதனை யார் அறிவார்கள்?

சோழத் தளபதியான பழுவூர் அரசர் மறுநாள் காலையில் பல்லவத் தளபதியுடன் அமர்ந்து திக்விஜய திட்டத்திற்கு வடிவம் கொடுக்க வேண்டும். அமாவாசை அன்று இரு மன்னர்களும் சாளுக்கியதை நோக்கி திக்விஜயம் செய்யப் புறப்பட இருந்தார்கள். பழுவூர் அரசர் தனது அறையின் மஞ்சத்தில் தியானத்தில் இருந்தார். ஒவ்வொரு இரவு உறங்கப்போவதற்கு முன்பாகத் தியானத்தில் ஈடுபடுவது அவரது வழக்கம்.

ஒத்தாடை அரண்மனை அடங்கிவிட்டிருந்தது. அமைதியான இரவில் சுவர்க்கோழிகளின் சத்தம் மட்டுமே கேட்டுக்கொண்டிருந்தது. குழந்தையின் அறையைவிட்டு வெளியே வந்த அபராஜிதன் தனது அறையை நோக்கி நடந்தான். தனது அறையில் ஒரு பெரிய ஆபத்து காத்திருப்பதை அவன் உணரவில்லை.

அந்த நீண்ட முற்றத்தின் வழியே தனது அறைக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். தீப்பந்தங்கள் நிழலில் அவனது நிழலே அவனை முந்திக்கொண்டு சென்று, 'வேண்டாம்.. உனது பள்ளியறைக்குப் போகாதே. அங்கே பெரிய ஆபத்து காத்திருக்கிறது' என்று உரைப்பது போன்று அந்த முற்றத்துப் பாதையில் பூதாகாரமாக வளர்ந்து அவனை எச்சரித்தது.

ஆனால் சாயாவக்ரர்தான் என்றோ ஆருட பாடலாக உதயசந்திரனிடமே பாடிக் காட்டிவிட்டாரே.

'அபராதம் செய்தவனின் தலை வாங்கப்படும். அதோடு பல்லவம் சமாதி நிலை அடையும்' என்றுதானே கூறியிருந்தார்.

பல்லவ அரசர்களில் கடைசி மன்னனாகத் திகழப் போகும் அபராஜிதன் தனது பள்ளியறைக்குச் சென்று கொண்டிருந்தான். அவன் பள்ளியறையினுள் கால் வைத்ததும், பல்லவம் ஒரேடியாகப் பள்ளிகொண்டுவிடும்.

முற்றத்தின் கடைசி வரையில் சென்று தனது பள்ளியறைக்குள் நின்றான். ஆதித்தன் கண்ணாடியைப் பார்த்துக்கொண்டு உறைந்து போய் நின்றிருந்தான்.

"என்ன நண்பா! உறக்கம் வரவில்லையா?" என்று கேட்டபடி ஆதித்தனை நெருங்கியவன் திகைத்துப் போய் நின்றான். அதிர்ச்சியில் அவனது வாய் பிளந்திருந்தது.

"ஆதித்தா! என்ன காரியம் செய்தாய்..? இறைவனின் உக்ரோதயத்தை நீ அணிந்திருக்கிறாயே? உடனே அவிழ்த்துவிடு!" — கோபத்துடன் கூறியபடி அவனை நெருங்க, சடாரென்று திரும்பினான், ஆதித்தன்.

அவனது கண்களில் தவழ்ந்த வெறியினை முதன்முதலாகக் கண்டான், அபராஜிதன்..

"நண்பா! என்ன ஆயிற்று உனக்கு?" — அதிர்ச்சியுடன் அவனைப் பார்க்க, திடீரென்று தனது உறையில் இருந்து வாளை உருவினான், ஆதித்தன்.

அப்போது கடைசியாக அபராஜிதன் நினைத்தது கோதாவரியின் எச்சரிக்கையைத்தான். 'தன்னை மேம்படுத்திக் கொள்வதற்காக இந்தச் சதியாளன் என்ன வேண்டுமானாலும் செய்வான். எச்சரிக்கையாக இரு!' கோதாவரியின் குரல் அபராஜிதனின் செவிகளில் ரீங்கரித்தன. உறைந்து போய்த் தனது கழுத்தை நோக்கி வரும் வாளை பார்த்தான்.

"தொலைந்து போ, பல்லவப் பதரே!" — என்றபடி அபராஜிதனின் தலையை வெட்டி வீழ்த்த, கடைசி பல்லவ மன்னனின் ரத்தம் பெருகிப் பாய்ந்தது. உள்ளே மன்னனின் ஓலம் எழுந்ததைக் கேட்டு வாயிலில் நின்ற காவலர்கள் உள்ளே ஓடி வர, பல்லவனின் சிரசு தரையில் உருண்டிருப்பதைக் கண்டு காவலர்கள் அலற, ஒருவன் அந்த இரவு நேர அமைதியைக் கிழித்துக் கொண்டு அலறியபடி ஓடினான்.

"பல்லவ மன்னரை சோழ மன்னன் வெட்டிக் கொன்றுவிட்டார்.. எல்லோரும் ஓடி வாருங்கள்!"

காவலனின் கூப்பாடு பல்லவர்களை எழுப்புவதற்குள் பழுவூர் அரசரின் கதவை எட்டி உதைத்தான் ஆதித்தன்.

"தளபதியாரே! அபராஜிதனைக் கொன்றுவிட்டேன். கடைசிப் பல்லவனும் அழிந்தான். இனி பல்லவம் இல்லை. இனிமேல் இது சோழ காஞ்சி. நமது படைகளைத் திரட்டி எஞ்சியுள்ள பல்லவர்களை வீழ்த்தி, காஞ்சியை ஆக்ரமியுங்கள். பல்லவ அரச ரத்தம் உள்ளவர்களை எங்கு கண்டாலும் வெட்டி வீழ்த்துங்கள்!" வாளைச் சுழற்றியபடி கூறிய ஆதித்தன், ஆவேசத்துடன் புறப்பட்டுச் செல்ல, உறைந்து போய் நின்றார், பழுவூர் அரசர்.

முன்னிரவில்தான் விருந்தின்போது அனைவரும் சிரிப்பும் கும்மாளமுமாகப் பேசிக்கொண்டு உணவு அருந்தினர். திக்விஜயத்தின் போது சோழக் கொடியை அபராஜிதன் தேரிலும், பல்லவக் கொடியை ஆதித்தன் தேரிலும் கட்டி, எதிரிகளைக் குழப்ப வேண்டும் என்றெல்லாம் பேசிக்கொண்டிருந்த நண்பர்களிடையே என்ன நடந்தது..?

ஆனால் நடந்தது என்ன என்று விசாரிக்கும் நிலையில் அவர் இல்லை. மன்னனின் உத்தரவை உடனே நிறைவேற்றுவதற்காக புறப்பட்டுச் சென்றார்.

ஆதித்த சோழன் திரிபுவனையைத் தேடிச் செல்ல, பழுவூர் அரசன் பல்லவர்களை வெட்டி வீழ்த்தி, அரண்மனையை வசப்படுத்த, மோகனா என்கிற பணிப்பெண் அரசியின் அறையை நோக்கி கலவரத்துடன் ஓடினாள்.

தடதடவென்று கதவு தட்டப்பட, குழந்தையை அணைத்தபடி படுத்திருந்த சந்திரகாந்தி எழுந்து வந்து கதவை திறந்தாள்.

"அரசியாரே! நாம் மோசம் போனோம்! சோழ மன்னர் பல்லவ மன்னரை வெட்டிக் கொன்றார். சோழர்கள் திடீரென்று புரட்சி செய்து அரண்மனையை கைப்பற்றி வருகின்றனர். விருந்துண்ட வீட்டில் இரண்டகம் செய்கின்றனர். நீங்கள் உடனே இளவரசி யாருடன் தப்பிச் செல்வது நல்லது!" — மோகனா கதற, செய்வதறியாது நின்றவள், பிறகு தன்னை சுதாரித்துக் கொண்டு குழந்தையை எடுத்துக்கொண்டு அரண் மனையின் அடுக்களையை நோக்கி ஓடினாள்.

அரண்மனையின் அடுக்களையில் மறுபக்கம் ஒரு முற்றம் உள்ளது. அந்த முற்றத்தின் வழியே சென்றால் ஒரு சிறு வாயில்கதவு இருக்கும். அதன் வழியே சென்றால், ஒத்தாடையான் ஆலய மடைப்பள்ளி வந்து விடும். ரகசியமாக ஆலயம் செல்ல வேண்டும் என்றாலோ, ஒத்தாடையான் அமுது செய்த பிரசாதங் களை அரண்மனைக்கு எடுத்து வருவதாக இருந்தாலோ, அந்த பாதையைத்தான் கோயில் பணியாளர்கள் உபயோகிப்பார்கள்.

அந்த பாதையின் வழியே ஒத்தாடையான் ஆலயத்தின் மடைப்பள்ளிக்குள் பிரவேசித்து ஆலயத்தின் வாயில் வழியாக அத்தியூர் பக்கமாக ஓடிச்சென்றாள். தோளில் கிடந்த குழந்தை கிருபாவதி காய்ச்சலால் இன்னும் அனற்றிக்கொண்டுதானே இருந்தது.

அத்திமலைத்தேவனின் ஆலயத்தை கடந்து ஓடிக் கொண்டே இருந்தாள்.

"பல்லவர்களை இந்த பாடு படுத்துகிறாயே, அத்திமலைத்தேவா.. எங்கள் நிலைமையை பார்த்தாயா..? கடைசி பல்லவனான எனது கணவர் அபராஜித வர்மனும் கொல்லப்பட்டுவிட்டானே. இனி பல்லவம் இருந்த இடத்தில் புல் முளைத்துவிடுமா..?" — கண்ணீருடன் அத்திமலை ஆலயத்தின் கிழக்கு கோபுரத்தின் முன்பாக கண்ணீர் உகுத்தபடி நின்றவள்,

சோழர்கள் அத்தியூரை கைப்பற்றுவதற்குள் பல்லவத்தை விட்டு நீங்க வேண்டும் என்கிற தவிப்போடு மீண்டும் ஓடத்துவங்கினாள். ஐயம்படுகை ஆலமரத்தடிக்கு வரும் பொழுது நன்றாக இருட்டிப் போனது. இனியும் ஓட முடியாது என்கிற நிலை. குழந்தைக்கும் ஓய்வு தேவை என்கிற எண்ணத்துடன், ஐயம்படுகை சோதனைச் சாவடியின் அருகே இருந்த அந்த பெரிய ஆலமரத் தடியை நோக்கி நடந்தாள். உறங்கிக்கொண்டிருந்த குழந்தையை, அங்கிருந்த சுமைதாங்கியின் மீது வைத்து விட்டு, சற்றே தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டாள்.

சுற்றிலும் இருள் தனது கரிய போர்வையை பரப்பியிருக்க, அந்த ஆலமரத்தின் பின்பாக குழந்தையுடன் சென்றவள், தனது முந்தானையை மணலில் பரப்பி குழந்தையை அதன் மீது படுக்க வைத்தாள். இனி நாம் என்ன செய்வது என்கிற யோசனையுடன் மரத்தின் மீது சாய்ந்தபடி அமர்ந்தாள். யோசித்துக்கொண்டே இருந்தவள், களைப்பினால் உறக்கத்தில் ஆழ்ந்தாள்.

பொழுது விடிந்தது. இளங்குமரர்கள் சிலரின் குரல் கேட்டு கண்விழித்தாள் சந்திரகாந்தி. மரத்தின் பின் பிருந்து எட்டிப்பார்க்க, மூன்று நான்கு இளம்குமரர்கள் அந்த மரத்தின் கீழ் நின்ற சுமைதாங்கியின் மீது பாய்ந்து ஏறி அமர்ந்தனர்.

“இவ்வளவு உயரத்தில் இந்த பாறையை வைத்திருக் கிறார்களே. வழிப்போக்கர்கள் எப்படி அமருவார் களாம்..?” — ஒருவன் கேட்டான்.

“அடேய் அடுமடையா! உனக்கு போய் சூடன் என்று பெயர் வைத்தனரே! மூடன் என்றல்லவா வைத்திருக்க வேண்டும். இது வழிப்போக்கர்கள் அமருவதற்காக அமைக்கப்பட்ட திண்ணையல்ல! தலையில் சுமந்து செல்லும் பாரங்களை இறக்கி வைப்பதற்காக அமைக்கப் பட்ட சுமைதாங்கி. இது நாம் அமர்வதற்காக இல்லை!”

— அவர்களில் சற்று பலவானாக இருந்த காத்தான் என்பவன் கூறினான்.

“இவ்வளவு கனமான பாறையை எப்படி இவ்வளவு உயர்ந்த கல்தூண்களின் மீது அமர்த்தினார்கள்?” — சாகரன் என்கிற மற்றொருவன் கேட்டான்.

“நான்கைந்து பேராவது இந்த பாறையை தூக்கி மேலே வைத்திருப்பார்கள்.” — சூடன் கூறினான்.

“நான்கைந்து பேர் எதற்கு.. நான் ஒருவனே இந்த பாறையை தூக்குவேன்!” — காத்தான் கூற, மற்ற இருவரும் அவனைப் பார்த்து சிரித்தனர்.

“உன்னால் முடியாது..”

“சுமந்து காட்டிவிட்டால்..?” கேள்வியுடன் சுமை தாங்கியின் மீது இருந்து குதித்த காத்தான் அவர்களிடம் சவால்விட்டான்.

“நான் ஒருவனாகவே இந்த பாறையை நகர்த்தி, நிலத்தில் தூக்கிப் போடுகிறேன்!” என்றபடி அந்த சுமைதாங்கியின் பாறையை நகர்த்தத்துவங்கினான். தனது இரு கரங்களினால் அந்த பாறையை தூக்க முயல, அவனது வலுவான கைகளுக்கு சற்றே அசைந்து கொடுத்தது.

காத்தான் தனது பலம் முழுவதையும் பிரயோகித்து அந்த பாறையின் ஒரு பக்கத்தைத் தூக்க, அந்த பாறை நகர்ந்தது. அந்த பாறையை தனது இரு கால்களால் உயர்த்திய காத்தான், அதனை எதிர் பக்கமாகத் தள்ள, பாறை பெருத்த ஓசையுடன் நிலத்தில் விழுந்தது.

“இப்போது என்ன சொல்கிறீர்கள்..?” என்றபடி கர்வத்துடன் தூணின் குழியை பார்த்தவனின் கண்களில் செம்மை வண்ணத்தில் ஏதோ தட்டுப்பட, கையை அந்தக் குழியினுள்விட்டு, அதனை ஸ்பரிசித்தான். செம்மை வஸ்திரத்தில் சுற்றப்பட்ட ஒரு சுவடி என்பது புரிய, அதனை கையில் எடுத்தான்.

சரியாக குழந்தையுடன் எழுந்த சந்திரகாந்தி தனது பயணத்தைத் தொடங்குவதற்கு முற்பட்டாள்.

வஸ்திரத்தில் இருந்து சுவடியை எடுத்த காத்தான் அதனை வியப்புடன் பார்த்தான்.

"ஏதோ புதையலை குறித்த தகவலாக இருக்குமோ..?" — பேராசையில் அவனது கண்கள் விரிய, தனது நண்பர்களை நோக்கினான்.

"யாருக்காவது சுவடியை வாசிக்கத் தெரியுமா..?"

அவனது நண்பர்கள் உதட்டைப் பிதுக்க, காத்தான் சுற்றுமுற்றும் நோக்கினான். குழந்தையுடன் நின்ற சந்திரகாந்தியின் மீது அவனது பார்வை படர்ந்தது. அவளை கேட்டால் சுவடியில் இருப்பதை வாசித்து விஷயத்தை கூறுவாள் என்று தோன்ற, அவளை அணுகினான்.

"அம்மா! அந்த சுமைதாங்கியின் உள்ளே இந்தச் சுவடி கிடந்தது. இதில் உள்ள தகவலை எனக்கு விளக்க முடியுமா..?"

காத்தான் நீட்டிய சுவடியை வாங்கி வாசித்தாள், சந்திரகாந்தி. அதை படிக்கத் துவங்கியதும் அவளது முகம் வெளிறியது. கண்கள் படபடத்தன. பிடரியில் மயிர்க் கூச்சம் எடுத்தது.

மல்ல எதி குணபரன் சாளுக்கிய மன்னனுக்கு வடித்து தாரா என்கிற கிழவியின் மூலம் அனுப்ப, அவள் அதை சுமைதாங்கியின் உள்ளே பதுக்கியிருந்தாளே! அதே சுவடிதான், சந்திரகாந்தியின் கையில் இருந்தது.

**'சாளுக்கிய மன்னர் வாழி. அனைத்து திட்டங்களும் வெற்றிகரமாக முடிந்தன. காஞ்சியின் பொக்கிஷம் இப்போது எனது வசம். அதனை தருமநகரின் பிரவாள மாளிகையில்தான் பதுக்கி வைத்துள்ளேன். புகைப் போக்கியினுள் பத்திரப்படுத்தியுள்ளேன். பொக்கிஷம் வைத்திருக்கும் இடம், பல்லவர்களின் நாசிக்கு கீழேயே வைத்து இருப்பதால் அவர்களால் காண முடியாது.**

***எல்லையில் பலத்த காவல் நிலவுவதால், பல்லவர்கள் அயர்ந்திருக்கும் வேளையில் நான் அதனை எடுத்து வருகிறேன். அதுவரையில் உமது அஸ்வமேத யாக திட்டத்தை ஒத்தி வையுங்கள். பொக்கிஷத்தோடு விரைவில் வருகிறேன்.'***

**- குணபரன் என்கிற பிரமதி**

அதை வாசித்த மாத்திரத்தில் அவளுக்கு வியர்த்துக் கொட்டியது. அஸ்வமேதத்திற்குத் தேவையான அந்த பொக்கிஷம், பல்லவர்கள் தேடும் அத்திமலைத்தேவனாக இருக்கக் கூடுமோ..? சாளுக்கிய மன்னன் விக்கிர மாதித்யனுக்கு பிரமதி என்கிற மல்ல எதி வடித்திருந்த சுவடி அவனிடம் செல்லாமல் அந்த ஆலமரத்தின் கீழே நின்ற சுமைதாங்கியின் உள்ளே கிடந்திருக்கிறது.

'அப்படியென்றால், அத்திமலைத்தேவனை பிரவாள மாளிகையின் உள்ளேயே பதுக்கி இருக்கிறான், மல்ல எதி. இவர்கள் நாடெல்லாம் தேடிக்கொண்டிருக்க அவன் காஞ்சியின் இதயப்பகுதியிலேயே பதுக்கி வைக்கப் பட்டிருக்கிறானே. அபராஜிதன் இருந்திருந்தால் எவ்வளவு மகிழ்ந்திருப்பான். இருக்கட்டும். பல்லவம் ஆட்சியைத்தான் இழந்துவிட்டது. அத்திமலைத் தேவனையாவது நம்வசம் வைத்திருப்போம்' என்று நினைத்த சந்திரகாந்தி அந்தச் சிறுவனை நோக்கினாள்.

"ஐயம்படுகை தலைவர் பாணாச்சாரியார் என்பவர் தனது பிறந்த தினத்தை முன்னிட்டு அமைத்திருக்கும் சுமைதாங்கி என்று இந்த குறிப்பு கூறுகிறது அவ்வளவு தான்!" — சந்திரகாந்தி கூறியதும், அந்த குமாரர்கள் முகத்தில் சுவாரஸ்யம் குறைந்தது.

"அவ்வளவுதானா! நான் ஏதோ புதையலை பற்றிய தகவல் என்று நினைத்தேன்.." என்று கூறியபடி, அந்தச் சுவடியை மறந்துவிட்டு, அவர்கள் நடையைக் கட்ட, சந்திரகாந்தி அந்தச் சுவடியை தனது சேலையினுள் மறைத்துக்கொண்டாள். பிறகு காஞ்சியின் எல்லையைக் கடந்து வடக்கே பயணமானாள்.

# இ. சோழ காஞ்சி

பல்லவர்களின் காலத்திற்கு தான் வெளியே வரப் போவதில்லை என்பது போன்று பிரவாள மாளிகையின் புகைபோக்கியின் உள்ளே நின்றிருக்கிறான், அத்திமலைத் தேவன். சோழர் வசம் காஞ்சி வந்து இப்போது சோழ காஞ்சியாகத் திகழ்கின்றது. என்ன செய்யப் போகிறான் அத்திவரதன்..?

கோதாவரி என்கிற நற்கோதை தனது மகன் வீரவர்மனுக்கு வீரக்கலைகளை கற்றுக்கொடுத்து தனது தந்தை நிருபதுங்கவர்மனுக்கு ஆதரவாக பல்லவத்தை மீண்டும் நிறுவ முயற்சி செய்கிறாள். என்ன செய்யப் போகிறான் நிருபதுங்கவர்மன்..?

சந்திரகாந்தி குழந்தை கிருபாவதியுடன் கங்க நாட்டில் தலைமறைவாக வாழ்ந்து வருகிறாள். காஞ்சியின் பொக்கிஷத்தை பற்றிய சுவடியுடனும், மகள் கிருபாவதியுடனும் தலக்காடு பாடலீஸ்வரத்தில் வசிக்கிறாள்; என்ன செய்யப் போகின்றாள், சந்திரகாந்தி..?

சோழம் மட்டும் வலுவாகிக்கொண்டே போகிறது. பல்லவம் இருந்த இடத்தில் புல் முளைக்கத் துவங்கி விட்டது. பல்லவர்களை நினைக்கும்போது மனம் கனக்கிறது.

ஜெயவர்மன் மற்றும் நவரத்தின பல்லவியின் தியாகம், ராஜஸ்ரீயின் மதியூகம், மல்லன், மாமல்லன், ராஜசிம்மன்,

*நந்திவர்மன் ஆகியோரின் சாதனைகள் அனைத்தும் வீணானதே..!*

*சமுத்ரகுப்தன், புலிகேசி என்று எத்தனையோ எதிரிகளை ஓட ஓட விரட்டிய பல்லவம், இறுதியில் நண்பன் என்று வேடமிட்ட ஒருவனின் சதியால் அழிந்து போனதே!*

*சாணக்கியன், பாரவி, தண்டின் என்று மேதாவிகள் வசித்த பல்லவம் கடைசியில் சிந்திக்கத் தெரியாமல் சூழ்ச்சியில் சிக்கி மடிந்து போனதே!*

*இனி சோழ காஞ்சியை சுற்றி வருவோம்..*

# 33. நினைவுகள் நிலைப்பதில்லை!

ஆதித்தனின் சிரசில் மணிமுடி வைக்கப்பட்டதும் அவையினரைப் பணிந்த அவன், தளபதி பழுவூர் அரசரைப் பார்த்து அவன் கேட்ட முதல் கேள்வி.

"எனது பட்டாபிஷேகத்திற்கு ஏன் எனது உயிர் தோழன் அபராஜிதன் வரவில்லை?"

சபையே அதிர்ந்து நிற்க, மன்னனின் பக்கலில் அமர்ந்திருந்த இளங்கோ பிச்சி பழுவூர் அரசரை எச்சரிக்கையுடன் நோக்கினாள்.

'அந்தப்புரத்திலும் இப்படித்தான் வினோதமாக நடந்து கொள்கிறார். அவையோரின் எதிரே ரசாபாசம் வேண்டாம்!' என்பது போன்று கண்களாலேயே இறைஞ்ச, பழுவூர் அரசர் நிலைமையைச் சமாளித்தார்.

"மன்னரே! நீர் சற்று ஓய்வு எடுக்க வேண்டும். முடி சூட்டு வைபவத்திற்காக இரவெல்லாம் கண்விழித்து ஏற்பாடுகளைக் கேட்டறிந்ததால், தங்களுக்கு ஓய்வு அவசியம் தேவை!" என்றபடி ஆதித்தனை வழிநடத்திச் சென்றார்.

அந்தப்புரம் வந்ததும், ஆதித்தனின் முன்பாக வந்து நின்றார்.

"உண்மையிலேயே தங்களுக்கு ஒன்றுமே நினைவில் இல்லையா, மன்னரே? ஒத்தாடை அரண்மனையில் நாம் தங்கினோம். அபராஜிதனுடன் திக்விஜயம் செய்வதற்காக ஒத்தாடை அரண்மனைக்குச் சென்றோம்..! அதன் பிறகு.." — பழுவூர் அரசர் ஆதித்தனை வெறித்துப் பார்த்தார்.

"திக்விஜயம் செய்யலாம் என்று யோசனை கூறியதே நான்தானே. எனக்குத் தெரியாதா..? ஒத்தாடை அரண்மனைக்குச் சென்றோம். இரவு விருந்து நடந்தது. மறுநாள் காலை நீங்களும் பல்லவத் தளபதியும் சேர்ந்து திக்விஜய திட்டத்திற்கு வடிவம் தந்து என்னிடமும், அபராஜிதனிடமும் தர வேண்டும் என்பது பேச்சு. அன்றிரவு அபராஜிதன் எனக்குப் பெரும் விருந்து ஒன்றை அளித்தான். அதன் பிறகு, என்னைத் தனது பள்ளியறைக்கு அழைத்துச் சென்றான். இருவரும் பேசிக்கொண்டிருந்தோம். அவன் மனைவி வந்து அவனை அழைத்துச் சென்றாள். அதன் பிறகு.. என்ன நடந்தது?" — ஆதித்தன் மலங்க விழித்தான்.

'இதென்ன முக்கியமான கட்டத்தில் அவரது சிந்தனை சங்கிலி அறுபடுவானேன்! அதற்கப்புறம் நடந்தவை தானே சரித்திரத்தையே மாற்றி அமைத்தன. உண்மையிலேயே அவனுக்கு நினைவில்லையா அல்லது நடிக்கின்றானா?' — பழுவூர் அரசர் குழம்பினார்.

"அரசே, அதற்குப் பிறகு வாயில்காவலரின் அலறல் கேட்டது. தாங்கள் தங்கள் நண்பர் அபராஜிதனின் தலையை வெட்டி வீழ்த்தியதாகக் காவலர்கள் அலறிக் கொண்டே ஓடினார்கள். தாங்கள் எனது அறைக்கதவை எட்டி உதைத்து, 'நண்பனைக் கொன்றேன்! பல்லவம் இனி இல்லை. காஞ்சி இனி சோழ காஞ்சி' என்று கர்ஜித்தபடி திரிபுவனையாரின் அறைக்குச் சென்று அவரை பலவந்தமாகக் கடத்தி வந்து இங்கே சிறை வைத்திருக்கிறீர்கள். இப்போது காஞ்சி நமது வசம்!" — பழுவூர் அரசர் சொல்ல, ஆதித்தனின் இதயமே வாய் வழியாக வெளியே வந்துவிடும் போன்று உணர்ந்தான்.

"நானா.. எனது நண்பனைக் கொன்றேன்..? நானா எனது நண்பனின் தங்கையைக் கடத்தி வந்தேன்..? இல்லவே இல்லை..! நான் அபராஜிதனின் அறையில் தான் இருந்தேன். அப்போது.. அப்போது.." நடந்ததை நினைவுபடுத்திப் பார்க்க முயன்றான், ஆதித்தன். அவனால் ஒன்றுக்குமே யோசிக்க இயலவில்லை.

———

பரிதாபத்துடன் பழுவூர் அரசரை நோக்கினான். "தளபதியாரே! எனக்கு என்ன நேர்ந்தது? உயிர் நண்பனை நான் எதற்கு கொல்லப் போகிறேன்? அதுவும் சோழத்தை மீண்டும் புதுப்பொலிவுடன் அமைப்பதற்குப் பேருதவி புரிந்திருக்கிறான். முத்தரையர்களை விரட்டி எனக்காகத் தஞ்சையைப் பரிசளித்திருக்கிறான். அவனைக் கொன்று, அவன் தங்கையைக் கடத்தி வந்தேன் என்றால், சரித்திரம் என்னைத் தூஷிக்காதா?" — கவலையுடன் கேட்டான் ஆதித்தன்.

'ஒன்று ஆதித்தனுக்கு சித்தம் கலங்கியிருக்க வேண்டும் அல்லது நடிப்பில் நன்றாகக் கைதேர்ந்தவனாக இருக்க வேண்டும். நம்பிய நண்பனின் கழுத்தை அறுத்து அவன் நாட்டை அபகரித்துவிட்டோம் என்கிற குற்ற உணர்வினால் இப்படி ஒரு நாடகத்தை அவன் அரங்கேற்றுகின்றானோ என்னவோ..!' — பழுவூர் அரசர் நினைத்தார்.

"நான் திருபுவனையைச் சந்தித்து நடந்ததை அவளிடம் விளக்க வேண்டும்..!" ஆதித்தன் சிறையில் அடைபட்டுக் கிடந்த திரிபுவனையைக் காண்பதற்குச் சென்றான்.

"திரிபுவனா!"

ஆதித்தனின் குரலைக் கேட்டு தலைநிமிர்ந்து பார்த்தாள். அவளது கண்களில் கண்ணீர் வற்றிவிட்டிருந்தது. ஆனால் குரோதம் செம்மையாகக் கண்களில் பரவியிருந்தது..

"சோழ மன்னா! உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்தவனே. உன்னை வளர்த்துவிட்ட நண்பனுக்கு நீ செய்த துரோகத்தைப் பார்த்து உலகமே உன்னை எள்ளி நகையாடுகின்றது. நண்பனைக் கொன்று அவனது நாட்டை அபகரித்து, அவனது தங்கையையும் கடத்தி வந்து சிறை வைத்திருக்கும் உனது வீரத்தை உலகமே வியந்து பாராட்டுகிறது.." என்றவள் "சே.." என்று அருவருப்புடன் அவனைப் பார்த்துவிட்டு, மீண்டும் தனது முகத்தை முழங்கால்களில் புதைத்துக்கொண்டாள்.

"திரிபுவனை..! என்னை நம்பு! நான் ஏன் அப்படி நடந்துகொண்டேன் என்று எனக்கே தெரியவில்லை. முழுவதுமாக அப்போது நான் எனது சுயநினைவில் இல்லை. திடீரென்று என்னுள் ஒரு குரல் ஒலித்தது. 'உக்ரோதயத்தை எடுத்து அணிந்து கொள்' என்றது. அதனை எடுத்து அணிந்து கொண்டேன். அபராஜிதன் வந்து பதறியது மட்டும் புரிந்தது. அப்புறம் அந்தக் குரல் சொன்னபடியெல்லாம் கேட்க ஆரம்பித்தேன். மகுடாபிஷேகம் முடிந்ததும்தான் எனது சுய உணர்வினைப் பெற்றேன்..!" — ஆதித்தன் கூறினான்.

"இதை வெளியில் கூறினால், உமக்குச் சித்த சுவாதீனம் இல்லை என்று கூறுவார்கள். சித்த சுவாதீனம் இழந்தவன் இப்படித்தான் கதை சொல்வான். ஒருவேளை உண்மை யிலேயே சித்த சுவாதீனத்தை இழந்துவிட்டீரோ?" — திரிபுவனை கேட்டாள்.

"நீ கூட விருந்தின் போது இருந்தாயே, திரிபுவனை. அபராஜிதன் எனது வீரத்தைப் பாராட்டி, ஸ்வர்ண தகட்டில் வாழ்த்துரை பட்டயம் ஒன்றை வழங்கினான். அப்போது நான் கண்கலங்கி நிற்க, அபராஜிதன் என்னைக் கட்டி அணைத்தபோது, நான் கூட என்ன கூறினேன். 'நண்பா! எனது உயிர் பிரிந்த பிறகு உனது உயிர் போகும்' என்று அறுதியிட்டு, கட்டைவிரலை கிழித்து எனது குருதியால் அவனது நெற்றியில் திலகம் வைத்தேனே. அப்படிப்பட்ட நான் எனது நண்பனை, விருந்தில் கை நனைத்த ஈரம் காய்வதற்குள் வெட்டிக் கொல்வேனா? கடைசியில் விருந்து முடிந்து நீ, நான், உனது அண்ணன் மூவரும் தனித்திருந்த வேளையிலே நம் முன் அவன் கூறிய வார்த்தைகளை நான் உனக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன், திரிபுவனா!"

ஆதித்தன் கூறியதும், தன்னையும் அறியாமல் தனது தலையை உயர்த்திச் சுவரை வெறித்து நோக்கினாள் திரிபுவனா.

ஆம்! இவர்கள் மூவரும் தனித்திருந்த போது அபராஜிதன் ஏதோ கூறியிருந்தான்.

"ஆதித்தா! நான்தான் தவறு செய்துவிட்டேன்! உனது தாய், குந்தள இளவரசியுடன் திருமணப் பேச்சைத் துவங்குவதற்கு முன்பாக நான் உங்கள் இருவருக்கும் திருமணப் பேச்சைத் துவக்கி இருக்க வேண்டும். ஏமாந்து விட்டேன். ஸ்தாணு ரவியிடம் பேசிப் பார்த்தேன். காண்பதற்கு மன்மதனைப் போன்று இருக்கிறானே தவிர, அவனது பேச்சில் தெளிவு இல்லை. உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுகின்றான். கண்கள் சூனிய மாகவே காட்சி தருகின்றன. திடீரென்று ஆழ்ந்த சிந்தனைக்குள் சென்றுவிடுகிறான். தனக்குள் பேசிக் கொள்கிறான்! எனக்கு அவனை சுத்தமாகப் பிடிக்க வில்லை. நீங்கள் இருவரும் இணைந்திருந்தால் நமது நட்பு இன்னும் பலப்பட்டிருக்கும். நல்ல வாய்ப்பினை நழுவவிட்டேன்..!" — உண்மையான வேதனையுடன் கூறி இருந்தான் அபராஜிதன்.

"அதனால் என்ன! இப்போதும் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லையே என்று நீதானே சொன்னாய். இப்போதும் என்னைத் திருமணம் செய்துகொள்ளத் தயார் என்பது போன்றுதானே பேசினாய். அப்படி இருக்க உனது அண்ணனைக் கொன்று நான் ஏன் உன்னைக் கடத்த வேண்டும்..? மன்னர்களுக்குப் பல தாரம் என்பது புதிதா என்ன? உன் தங்கையை நானே திருமணம் செய்து கொள்கிறேன் என்று கேட்டிருந்தால் நீங்கள் இருவருமே சம்மதித்திருக்கப் போகிறீர்கள். அப்படியிருக்க, நான் எதற்கு அபராஜிதனைக் கொன்று உன்னை இங்கே கடத்தி வர வேண்டும்?"

"அப்படியென்றால், சோழக் கொடி ஒத்தாடை கோட்டையில் பறப்பதும் உங்களுக்குத் தெரியாது போலும்! நன்றாகவே பசப்புகிறீர்கள். இதைத்தானே எனது சகோதரி அன்றே கூறினாள். அவளது புத்திக் கூர்மை எங்களுக்குக் கிடையாது. தன்னை உயர்த்திக்

கொள்வதற்காக நீர் என்ன வேண்டுமானாலும் செய்வீர் என்று கூறினாள். அவள் வார்த்தையைக் கேட்காததன் பலன் எனது அண்ணன் உயிரையும், நாட்டையும் இழந்தான். நான் எனது எதிர்காலத்தையும் மானத்தையும் இழந்தேன். உனது கைதியாக என்னை இங்கே கொண்டு வந்துவிட்ட பிறகு, எனக்கு என்று வாழ்வு இல்லை..!" ஆவேசத்துடன் சுவரை நோக்கிக் கூறியவள், மீண்டும் முகத்தை முழங்கால்களில் புதைத்துக்கொண்டாள்.

"எல்லாத் தவறுகளுக்கும் பரிகாரம் உண்டு, திரிபுவனை. நானே உன்னைத் திருமணம் செய்து கொள்கிறேன். பல்லவம் மற்றும் சோழம் இரண்டு தேசங்கள் சங்கமமானதற்கு அடையாளமாக நீ இங்கே மகாராணியாக வளைய வரலாம்."

"உனது மனைவியாக நான் திகழ்வேன் என்று ஒருபோதும் கனவு காணாதே. உன்னைப் பார்த்தால் வெட்டப்பட்ட எனது அண்ணனின் தலையும், காணாமல் போன அவனது மகளின் முகமும்தான் எனது கண்களில் தென்படுகின்றன. அந்த இளம்குருத்தை என்ன செய்தாய்?" — வினவினாள் திரிபுவனை.

"அவர்களைப் பற்றி எனக்கொன்றும் தெரியாது. இளங்கோ பிச்சியைக் காட்டிலும் உனக்கு முக்கியத்துவம் தருகிறேன், திரிபுவனா. என்னை ஏற்றுக்கொள்." — இறைஞ்சினான் ஆதித்தன்.

நீண்ட மௌனத்திற்குப் பிறகு அவனை நோக்கினாள்.

"எப்படியும் உமது சிறையில் காலமெல்லாம் இருக்கப் போகிறேன். சிறையில் இருந்தால் என்ன, உங்களது அந்தப்புரத்தில் இருந்தால் என்ன? எனக்குச் சிறிது அவகாசம் தேவை. நாளை எனது முடிவைக் கூறுகிறேன்!" — திரிபுவனை கூறினாள்.

"வேண்டிய அவகாசத்தை எடுத்துக் கொள்! நாளைய முடிவு நல்லதாக இருந்தால் நான் மகிழ்வேன்!" என்றபடி அகன்றான் ஆதித்தன்.

"அண்ணா! இவன் நமக்குச் சரிப்பட்டு வரமாட்டான். எனக்கு வேண்டாம் அவன்!" என்று கூறியவள், தான் ஆதித்தனையே திருமணம் செய்து கொள்வதாக வெட்கத்தைவிட்டுக் கூறியிருந்தாள். அதன் பிறகே ஆதித்தனிடம் அபராஜிதன் அதைப் பற்றிப் பேசியிருந் தான். மூவரின் மனங்களுக்கு ஆதித்தன் —திரிபுவனை திருமணம் விரைவிலேயே நடக்கப் போகும் ஒரு நிகழ்வு தான் என்று இருக்கும் நிலையில், இந்த துர்பாக்கியமான சம்பவங்கள் நிகழ்ந்துவிட்டன.

ஆதித்தனை எவ்வளவு தூரம் நம்புவது..? கோதாவரி இவ்வளவு போதனைகளைச் செய்தும், அண்ணனும் தங்கையும் அவனது சதிவலையில் சிக்கிக்கொண்டார்கள். தான் குற்றமற்றவன் என்று ஆதித்தன் பசப்புகிறான். ஒருவேளை, பல்லவத்தோடு சேர்ந்து, சோழத்திலும் அவனது நடவடிக்கை விமர்சிக்கப்படுவதால், குற்ற உணர்வில் இவளை திருமணம் செய்து கொள்ள விரும்புகின்றானோ என்னவோ..! எப்படி இருந்தாலும் இவள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இவள் ஆதித்த சோழனை எந்நாளும் மன்னிக்கப் போவதில்லை.

சிறையில் கிடந்து அவனை எதிர்ப்பதைவிட, அந்தப்புரத்தில் புகுந்து அவனுடன் உறவாடி அவனைச் சித்திரவதை செய்து அவனை பழி தீர்க்கலாமே..!

மறுநாள் —

ஆவலுடன் திரிபுவனையின் முன்பாக வந்து நின்றான், ஆதித்த சோழன்.

"என்ன முடிவு எடுத்திருக்கிறாய், திரிபுவனி?" — ஆவலுடன் கேட்டான்.

"உங்களை மணக்க சம்மதிக்க வேண்டுமென்றால் இரு நிபந்தனைகள்!" — திரிபுவனை கூறினாள்.

"நான் பட்டத்து இளவரசியாக இருக்க வேண்டும். எனக்குப் பிறக்கும் மகன் சோழ நாட்டை ஆள வேண்டும். இதற்குச் சம்மதமென்றால் சிறையைவிட்டு வெளியே வருகிறேன். இல்லையேல் இங்கேயே இருந்து எனது காலத்தை முடித்துக்கொள்கிறேன்." — திரிபுவனை கண்டிப்புடன் கூறினாள்.

சற்றே யோசித்தான், ஆதித்தன். 'நண்பனைக் கொன்ற துரோகி என்கிற பெயர் நீங்க வேண்டுமென்றால், இவளை அவசியம் மணந்து கொள்ள வேண்டும். இவளைப் பட்டத்து அரசியாக இருத்தினால், அந்தப் பெயர் முற்றிலுமாக நீங்கலாம். இவள் நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டியதுதான்.'

தனக்குள் கூறியவன், அவளை அன்புடன் நோக்கினான்.

"உனது நிபந்தனைகளுக்கு நான் கட்டுப்படுகிறேன். விரைவில் நீ பட்டத்து அரசியாக அரியணையில் அமர்வாய்!" — ஆதித்தன் கூறினான்.

சொன்னதைச் செய்து காட்டினான், ஆதித்தன். திரிபுவனையைத் திருமணம் செய்து கொண்டதோடு, அவளை பட்டத்து அரசியாகவும் அமர்த்தினான்.

செய்தியை அறிந்த நிருபதுங்கனும், நற்கோதையும் திகைத்துப் போயினர். அண்ணனைக் கொன்றவனை மணந்து கொள்கிறாளே இவளுக்குச் சித்தம் கலங்கி விட்டதா?" என்று தந்தையிடம் வினவினாள், நற்கோதை.

"பெரியப்பன் என்று பாராமல் எனக்குத் துரோகம் புரிந்தான் அபராஜிதன். நண்பன் என்று பாராமல் அவனைக் கொன்றான் ஆதித்தன். அண்ணனைக் கொன்றவன் என்று பாராமல் அவனை மணாளனாக ஏற்கிறாள் உன் தங்கை. கலியுகத்தில் கொடுமை புரிவதற்கு அரசியலைத்தான் ஆயுதமாகப் பிரயோகிக் கிறான் கலிபுருஷன். நிரந்தர எதிரி, நிரந்தர நண்பன்

கிடையாது என்று கூறி, மனித வர்க்கத்தின் கோட்பாடு களைக் கேலிக்கூத்தாக்குவார்கள். உனது தங்கையும் அதைத்தான் செய்திருக்கிறாள்..!" — நிருபதுங்கன் கூறினார்.

இளங்கோ பிச்சிக்கு கன்னர தேவன் என்கிற மகன் பிறந்து அவன் வளர்ந்து பட்டத்து இளவரசன் என்று கூட அறிவித்தாகிவிட்டது. ஆனால் திரிபுவனைக்கு மகன் பிறந்ததும், அவனுக்குப் பராந்தகன் என்று பெயரிட்டு, அவனை யுவராஜாவாகக் கூட அறிவித்துவிட்டான், ஆதித்த சோழன். ஆதித்த சோழன் காலத்திற்குப் பிறகு மன்னனாகவும் பதவி ஏற்றுவிட்டான் பராந்தகன்.

இளங்கோ பிச்சி மனம் உடைந்து மகன் கன்னர தேவனுடன் தனது குந்தள நாட்டிற்குப் பயணமானாள்.

வழியில் காஞ்சிக்குச் செல்ல வேண்டும் என்று தேரோட்டியிடம் கூற, அவன் ஒத்தாடை அரண் மனையின் அருகில் இரதத்தை நிறுத்தினான்.

பல்லவ மண்ணின் ஒரு பிடியை எடுத்து ஒத்தாடை அரண்மனையை நோக்கி வீசி ஏறிய ஆரம்பித்தாள்.

"எனது மகனையும் என்னையும் மோசம் செய்த திரிபுவனா! எனது வயிற்றெரிச்சல் உன்னை சும்மா விடாது. நான் விடும் சாபம் உங்கள் அத்திமலைத் தேவனின் செவிகளில் விழட்டும். எனது மகனிடம் இருந்து வாரிசு உரிமையை பிடுங்கிய உனது மகனுக்கு வாரிசு இல்லாமல் போகட்டும். உனது மகன்கள் எவனும் அதிக நாட்கள் வாழாமல் போகட்டும். நான் உண்மையான பத்தினி என்றால், இந்த சாபத்தை அத்திமலைத் தெய்வமே நிறைவேற்றட்டும்..!'" என்று அலறியபடி இறுதியாக ஒருமுறை தனது கரத்தில் இருந்த பிடி மண்ணை வாரி இறைத்தாள்.

பிறகு மீண்டும் இரதத்தில் ஏறி குந்தளம் சென்றாள்.

# 34. காலத்தின் கட்டாயம்

**த**லக்காடு!

கீர்த்தி நாராயண ஆலயத்திற்கும், பாடலீஸ்வரர் ஆலயத்திற்கும் இடையே ஒரு வீதி. அதில்தான் ஒரு குடிலில் தங்கியிருந்தாள், சந்திரகாந்தியும், அவளது மகள் கிருபாவதியும். அவர்களுக்கு எதிரே உள்ள குடிலில்தான் நித்யானந்தர் என்கிற அர்ச்சகரும் அவர் மனைவி லீலாவதியும் வசித்தனர். அர்ச்சகரும் அவர் மனைவியும் தான் சந்திரகாந்திக்கும், கிருபாவதிக்கும் உற்ற துணை. அடைக்கலம் தேடி வந்தபோது, தாங்கள் அத்திமலைத் தேவன் கோயில் அதிகாரியின் மனைவி மற்றும் மகள் என்றும் கணவன் இறந்துவிட்டதால், ஊர் ஊராகத் திரிந்து அடைக்கலம் தேடித் தலக்காடு வந்திருப்பதாகவும் அர்ச்சகர் தம்பதியிடம் கூறியிருந்தாள், சந்திரகாந்தி.

ஆனால் நாளடைவில் அவர்கள் இருவரும் கிருபாவதியின் மீது உண்மையான அன்பைச் செலுத்த, உண்மையில் தாங்கள் யார் என்பதைக் கூறும்படி ஆனது, சந்திரகாந்திக்கு.

“சுவாமி! யாரிடமும் கூற வேண்டாம். கொலை செய்யப்பட்ட அபராஜித பல்லவனின் மனைவி நான். இவள் அவர் மகள் கிருபாவதி” என்று கூற அர்ச்சகர் தம்பதியினர் ஸ்தம்பித்தனர்.

காலம் வேகமாகச் சுழல, கிருபாவதி வளர்ந்து அழகிய நங்கையாக மாறினாள். அவளை திருமணம் செய்து கொள்ள ஊர் வாலிபர்களிடையே போட்டா போட்டி

மூள, ஒரு வியாபாரி தனது மகனுக்குக் கிருபாவை மணம் பேச சந்திரகாந்தியின் குடிலுக்கு மங்கலப் பொருட்களுடன் வந்துவிட்டார்.

சந்திரகாந்தி துடித்துப் போனாள். பல்லவ மன்னன் மகளாகச் சுயம்வரத்தில் மணாளனைத் தேர்ந்தெடுக்க வேண்டியவள், இப்படிப் போவோரும் வருவோரும் பெண் கேட்கும் இழி நிலையில் நிற்கின்றாளே என்று கண்ணீர் சிந்த, அதனை லீலாவதி கவனித்துவிட்டாள்.

"தலைமை அமைச்சருக்கே நீங்கள்தானே எள்ளையும், தண்ணீரையும் இறைத்துப் புரோகிதம் செய்கின்றீர். நமது பல்லவி கிருபாவதிக்கு அரண்மனை ராஜ குடும்பத்தில் மணமகன் யாராவது இருக்கிறானா என்று பாருங்கள்.." என்று கூற, தலைமை அமைச்சர் சுகதேவரிடம் அபராஜிதனின் மகளைப் பற்றிக் கூறினார், புரோகிதர்.

"நம் நாட்டிலா அபராஜிதனின் மகள் இருக்கிறாள். நமக்குத் தெரியாமல் போனதே!" என்று வருந்திய சுகதேவர், கங்க மன்னன் பூதுகனின் செவியில் போட உடனே அவன் சந்திரகாந்திக்கும், கிருபாவதிக்கும் அரண்மனையில் இருந்து தேர் ஒன்றினை அனுப்பி விட்டான். பூதுகனின் இரண்டாம் மகன் குணதுர்கனை மணந்து கொண்டாள் கிருபாவதி.

தனது மகளை அரச குடும்பத்திலேயே மணம் செய்து கொடுத்துவிட்டோம் என்கிற ஆனந்தத்தில் திளைத்தாள், சந்திரகாந்தி. மகளுடன் தலைக்காட்டு அரண்மனை யிலேயே தங்கும்படி பூதுகன் கூறியபோதும், அதனை மறுத்துவிட்டு தனது குடிலிலேயே தங்கினாள், சந்திரகாந்தி.

மகளுக்கு ஒரு பெண்ணும் பிறந்தாள். அவளுக்கு கங்காவதி என்று பெயரிடப்பட்டது. சந்திரகாந்தி அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை.

ஆதித்த சோழனால் படுகொலை செய்யப்பட்டு, காய்ச்சலுடன் அல்லாடிக் கொண்டிருந்த கிருபாவதியுடன் தப்பி கங்க நாடு வந்து, அர்ச்சகரிடம் அடைக்கலம் பெற்று, பெண்ணை வளர்த்து கங்க அரச குடும்பத்தில் மணம் செய்வித்து எப்படியோ போராடி வென்றுவிட்டாள். தனது மகள் சீரும் சிறப்புமாக வாழ்வதைக் காண அபராஜிதன் கொடுத்து வைக்கவில்லையே என்று துயர் அடைந்தாள்.

இடிபோன்று வந்தது ஒரு செய்தி. கடம்பர்களுடன் நிகழ்ந்த யுத்தத்தில் கிருபாவதியின் கணவன் குணதுர்கன் வீர மரணம் அடைந்தான் என்கிற செய்தி வந்தது. குழந்தை கங்காவதியுடன் தனது தாய் வசித்த குடிலுக்கே வந்துவிட்டாள். கங்க அரண்மனையில் அவளை யாரும் தடுக்கவில்லை. குழந்தை கங்காவதியும் வேகமாக வளர்ந்து நங்கையாக மாறிக்கொண்டிருந்தாள்.

திடீரென்று ஒரு நாள் சந்திரகாந்தி உறக்கத்திலேயே தனது கணவனை நாடிச் சென்றுவிட்டாள். கிருபாவதிக்கும் அவளது மகள் கங்காவதிக்கும் வழக்கம் போல், அர்ச்சகரும் அவரது மனைவி லீலாவதியுமே பாதுகாப்பாக இருந்தனர். அர்ச்சகர் மட்டும் சாஸ்வதமா என்ன? ஒரு நாள் அவரும் தனது கண்களை மூட, லீலாவதி கிருபாவதியின் குடிலிலேயே தங்கிவிட்டாள்.

ஒரு நாள் தங்கள் வீதியில் படைவீரர்களின் நடமாட்டம் அதிகமாக இருப்பதைக் கண்டாள். பதற்றத்துடன் உள்ளே வந்து உணவு தயாரித்துக் கொண்டிருந்த கிருபாவதியைக் கண்டாள்.

“அம்மா கிருபா! உங்கள் பல்லவர்களின் வைரி சோழர்களுக்கும், கங்கர்களுக்கும் போர் நடைபெற உள்ளதாம். படைவீரர்களின் நடமாட்டம் இங்கே அதிகமாகக் காணப்படுகிறது. உனது மகளும் வளர்ந்து அழகிய நங்கையாகி வருகிறாள். பல்லவன் அபராஜிதனின் வாரிசு இன்னும் இங்கே உயிருடன் இருப்பதை

அறிந்தால் உனக்குப் பேராபத்து. எனக்கும் வயதாகிக் கொண்டே போகிறது. சாமுண்டத்தில் இருக்கும் எனது தமையன் வீட்டிற்கு நான் சென்றுவிடப் போகிறேன். நாளையே நான் கொட்டாவிவிட்டால் என்னைத் தூக்கிப்போட அவன் ஒருவன்தான் இருக்கிறான். எனவே, நீ இங்கிருந்து புறப்பட்டுப் பாதுகாப்பான இடத்திற்குச் சென்று குடியேறிவிடு. உனது தந்தையும், தாயும் தெய்வமாக இருந்து உன்னைக் காப்பார்கள். நானும் அன்றாடம் உனக்காக வேண்டிக்கொள்கிறேன்!" — கண்களில் நீர் மல்க லீலாவதி கூற, அவள் கூறுவது நியாயமே என்பதை உணர்ந்து கொண்ட கிருபாவதி, அவளை வணங்கிவிட்டு, கங்காவதியோடு தெற்கே பயணிக்கத் துவங்கினாள். அவள் கண்ணில் இருந்து மறையும் வரை தன் கண்கள் பனிக்கப் பார்த்துக் கொண்டிருந்த லீலாவதி அவள் கண்ணைவிட்டு மறைந்ததும், தனது உடைமைகளை எடுத்துக்கொண்டு சாமுண்டத்திற்குப் புறப்பட்டாள்.

வெகு தொலைவு பயணித்து ஒரு அமைதியான கிராமத்தை தான் தங்குவதற்குப் பாதுகாப்பான இடமாகத் தேர்ந்தெடுத்தாள், கிருபாவதி. அந்த கிராமம் பல்லவத்தில்தான் இருந்தது. அதன் பெயர் தக்கன் ஓலம். தக்கன் என்கிற அசுரனை காளியைக் கொண்டு ஈசன் வதம் செய்தான். காளியைக் கண்டு பயந்து தக்கன் ஓலம் செய்ததால் *தக்கன் ஓலம் என்று அந்த இடம் புகழ் பெற்றது.

---

* தக்கன் ஓலம் என்கிற அந்தப் பகுதிதான் இன்றைய தக்கோலம். புகழ்பெற்ற தக்கோலம் போர் நடைபெற்ற இடம். ராஜாதித்யன் என்கிற பராந்தகனின் மூத்த மகன், பூதுகன் எய்த அம்பால் கொல்லப்பட்ட இடம். யானை மேல் துஞ்சிய தேவர் என்று ராஜாதித்யன் அழைக்கப்பட்ட போர். கொசத்தலையாற்றின் நதிக்கரையில் உள்ள தக்கோலத்தில் ஜலந்தீஸ்வரர் ஆலயம் ஒன்று உள்ளது. காஞ்சிபுரத்தில் இருந்து சரியாக இருபத்து ஆறு கி.மீ. தொலைவில் உள்ளது.

தக்கோலம் அமைதியான கிராமமாக உள்ளதை நினைத்து எந்த வேளையில் கிருபா வந்து தங்கினாளோ, உடனே அந்தப் பகுதியில் போர் முரசம் ஒலித்தது. பராந்தகனின் மகன் ராஜாதித்யன் தலைமையில் சோழர்கள் தக்கோலத்தில் அணிவகுத்து நிற்க, குந்தள மன்னன் மூன்றாம் கோவிந்தனும் அவனது நண்பன் கங்க நாட்டு மன்னன் பூதுகனும் ராஜாதித்யனுக்கு எதிராக அணிவகுத்தனர். கடல் போன்று தனது முன்பாக நிற்கும் குந்தள—கங்க சேனையைக் கண்டு சற்றே திகைத்தான். தம்பி அரிஞ்சயன் வந்தால் அவன் பூதுகனை சமாளித்துக் கொள்ள, இவன் கோவிந்தனை ஒரு கை பார்க்கலாம். யோசித்த ராஜாதித்யன் தம்பிக்கு காவலன் ஒருவன் மூலம் செய்தி அனுப்பினான்.

'தம்பி அரிஞ்சயா! இங்கே போர்க்களத்தில் கங்க நாட்டு மன்னன் பூதுகனும் எதிர்பாராதவிதமாக வந்திருக் கிறான். போர் தருமங்களை மீறி கொலைகளைப் புரிந்து அநியாய வெற்றியைக் களவாடுபவன் பூதுகன் என்பது அனைவருமே அறிந்த விஷயம். நீ போர்க்களம் வந்து பூதுகனை நகரவிடாமல் செய்தால், நான் கோவிந்தனை கொன்றுவிட முடியும். தயைகூர்ந்து உடனே புறப்பட்டுத் தக்கோலம் வா,' என்று செய்தி அனுப்பிவிட்டு, இருவரையும் சமாளித்தபடி போர் புரிந்து கொண்டிருந் தான்.

அரிஞ்சயனும் அண்ணனின் ஓலையைப் படித்துவிட்டு உடனே படையுடன் தக்கோலம் வந்துவிட்டான். அண்ணனுக்கு உதவியாகப் போரிட்டு பூதுகன் தலையை வெட்டி வீழ்த்திவிட வேண்டும் என்கிற உத்வேகத்துடன் தான் பயணித்துக் கொண்டிருந்தான். இரவுக்குள் தக்கோலம் சென்றுவிட வேண்டும் என்றுதான் புறப்பட்டான், சரியாக.

மாலை ஜலந்தீஸ்வரர் ஆலயத்தை அடைந்தான். தக்கோலம் போர்களத்தில் வெற்றி அடைவதற்குப்

பிரார்த்தனை செய்துவிட்டு வருகிறேன் என்று கூறிவிட்டு ஆலயத்தினுள் நுழைந்தான்.

ஆலயத்தினுள் நுழைந்த போது அங்கே பிரார்த்தனை செய்து கொண்டிருந்த கங்காவதியின் மீது அரிஞ்சயனின் கண்கள் பதிந்தன. அவளது அழகு அவனைச் சொக்கி இழுத்தது. போரை மறந்தான். அண்ணனை மறந்தான். தான் ஆலயத்தில் இருப்பதையும் மறந்தான். உலகில் தானும், கங்காவதியும்தான் இருப்பது போன்று அவளை வெறித்தான். ஆலயத்தின் வெளியே நின்று அவளுக்காகக் காத்திருந்தான்.

தனது புரவியைக் கொண்டு வரும்படி சைகை காட்ட, ஒருவன் அரிஞ்சயனின் புரவியைக் கொண்டு வந்தான். கங்காவதி ஆலயத்தைவிட்டு வெளியே வந்ததும்தான் தாமதம், அவளை பலவந்தமாகப் பற்றித் தூக்கிக் கொண்டு அருகில் இருந்த காட்டுப்பகுதிக்குள் சென்று விட்டான்.

இரவும் வந்துவிட்டது. இளவரசன் அரிஞ்சயன் வந்த பாடில்லை. விடியலில்தான் மீண்டும் வந்த அரிஞ்சயன் கங்காவதியை புரவியில் இருந்து இறக்கிவிட்டு தனது வழியே சென்றுகொண்டிருந்தான்.

தன்னைப் பரிதாபமாகப் பார்த்த ஒரு போர்வீரனை கண்களில் கண்ணீருடன் ஏறிட்டாள்.

"ஐயா! எனது வாழ்வை நாசப்படுத்தியவர் யார் என்பதைத் தயைகூர்ந்து சொல்லுங்கள்!" — கங்கா இறைஞ்சினாள்.

அந்தப் போர்வீரன் அச்சத்துடன் சுற்றிப் பார்த்து விட்டு, கிசுகிசுத்த குரலில் கூறினான், "அவர்தான் சோழ இளவரசர், அரிஞ்சயன்!" என்று கூறிவிட்டு தனது குதிரையில் பறந்தான்.

"ஆலயத்துக்குச் சென்றவள் இரவெல்லாம் எங்கு இருந்தாய்?" — கிருபாவதி கேட்க, கதறியபடி தனக்கு நேர்ந்த துயரச் சம்பவத்தை கூறினாள் கங்காவதி. அதற்குக் காரணமானவன் யார் என்பதையும் தெரிவித்தாள்.

"எனது தந்தையின் தலையை வாங்கியவர்கள் சோழர்கள். எனது தாயை அல்லாட வைத்தவர்கள் சோழர்கள். எனது மகளின் வாழ்வையும் நாசமாக்கியது சோழர்கள். இன்னும் என்ன விட்டு வைத்திருக்கிறார்கள். நமது கணக்கைத் தீர்க்க தக்க தருணம் வரும்! பொறுமையுடன் காத்திரு மகளே! உனது கற்பு பறிபோன இன்று முதல், சோழர்கள் ஒவ்வொன்றாகப் பறி கொடுப்பார்கள்!" — கிருபாவதி ஆவேசத்துடன் கூறினாள்.

கங்காவதியிடம் தனது இச்சையைத் தீர்த்துக்கொண்டு, நிதானமாகத் தக்கோலம் சென்றான் அரிஞ்சயன்..

அதற்குள், யானை மீது நின்று கோவிந்தனுடன் போர் புரிந்து கொண்டிருந்த ராஜாதித்யனை கங்க மன்னன் பூதுகன் தனது குதிரையின் மீது அமர்ந்தபடி அவனது நெஞ்சைப் பார்த்து அம்பை எய்தான்.

பூதுகன் எய்த அம்பு ராஜாதித்யன் மீது பாய, யானையின் மீது நின்று போர் புரிந்துகொண்டிருந்த அவன் அதன் மீதிருந்து விழுந்து உயிர் துறந்தான்.

யானையின் மீது துஞ்சிய தேவர் எனப் போற்றப் பட்டான், சோழ பட்டத்து இளவரசன் ராஜாதித்யன்.

கிருபாவதி கூறியது போன்று ஒவ்வொன்றாக இனி சோழர்கள் இழப்பார்கள் என்பதற்கு அறிகுறியாகப் பட்டத்து இளவரசன் ராஜாதித்யனை முதலில் இழந்திருந்தார்கள்.

விடியலில் துவங்கிய போரில் ராஜாதித்யன் கொல்லப் பட்டிருந்தான். அவன் அரிஞ்சயனிடம் கோரிக்கை விடுக்க, உடனே போர்க்களம் புறப்பட்டவன், கங்காவதியை காணாமல் இருந்திருந்தால், தக்க தருணத்தில் போர்க்களம் வந்து பூதுகனை வளைத்து, அவனால் ராஜாதித்யனின் உயிருக்கு ஆபத்து நேர்ந்ததை தவிர்த்து இருக்கலாம்.

என்ன செய்வது! ஒன்றை பறிமுதல் செய்யும்போது மற்றொன்று நம்மிடம் இருந்து பறிமுதல் ஆகும் என்பது காலத்தின் கட்டாயம்தானே..!

# 35. புதிய மொந்தை, பழைய கள்

மரணங்கள், துயரங்கள், மர்மங்கள்! திருப்பங்கள்.

இவையே பல்லவத்தின் வாழ்க்கையாக இருந்தது என்றால் சோழர்களின் கையில் காஞ்சி வந்ததும், புதிய வாழ்க்கையைத் தொடங்கிப் புதிய பாதையில் காஞ்சி பயணிக்கும் என்றே பலரும் நம்பியிருக்க, மரணங்களும், துயரங்களும், மர்மங்களும், திருப்பங்களும் இன்னமும் தொடர்ந்தால் மக்களுக்கு எப்படி இருக்கும்?

சோழ பட்டத்து இளவரசன் ராஜாதித்யன் தக்கோலம் போரில் உயிர் நீத்தான். அவனுக்கு மட்டும் சமயத்தில் அரிஞ்சயன் கைகொடுத்திருந்தால் தக்கோலம் போரில் சோழர்கள் வெற்றியைத் தழுவி இருப்பார்கள். தனி மனிதனின் இச்சைகள் ஒரு நாட்டின் தலைவிதியை எப்படியெல்லாம் மாற்றுகின்றன? ஒரு இளவரசன் தான்தான் அடுத்த மன்னன் என்பது உறுதியானதும் நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றி அறிவது, மக்களின் தேவைகளை அறிவது, நாட்டின் பஞ்ச பூத வளங்களை எப்படிக் காப்பது போன்றவற்றைக் கவனியாமல், எந்தப் பெண்ணை வசப்படுத்துவது, செல்வங்களை எப்படிச் சேகரிப்பது, ஆடம்பரமாக எப்படி வாழ்வது என்பது பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறான். அரிஞ்சயனின் பெண் மோகத்தால், தக்க தருணத்தில் உதவி கிடைக்காமல் தனது தமையனின் உயிர் பிரிவதற்குக் காரணமாக இருந்தான்.

கிருபாவதி கூறியது போன்று, சோழம் ஒவ்வொன்றாகப் பறிகொடுக்கத் துவங்கி இருந்தது.

ராஜாதித்யன் இறந்த பின், பாண்டிய மன்னன் வீரபாண்டியன் படை எடுத்து வர, தென்மண்டல சேனைத் தலைவனாக இருந்த பராந்தகனின் கடைசி மகன் உத்தமசீலன் பாண்டியர்களால் சூழப்பட்டு, அவனது தலையைக் கொய்து அதனைத் தனது காலால் எட்டி உதைத்தான், வீரபாண்டியன்.

பராந்தகன் இறந்ததும், ராஜாதித்யனுக்குப் பதிலாகப் பட்டத்து இளவரசனாகத் திகழ்ந்த கண்டராதித்தன் சோழ மன்னனாகப் பதவி ஏற்றான். அவனும் ஒரு நாள் நள்ளிரவு திடீரென்று காணாமல் போனான். 'மேற்கே சென்ற தேவர்' என்கிற பெயர் பெற்று இன்றுவரை அவரது முடிவு என்ன ஆனது என்பதை சரித்திரம் கூறவில்லை.

கண்டராதித்யர் காணாமல் போனதால் மன்னராகப் பதவி ஏற்றான் அரிஞ்சயன். ஆனால் பதவியில் அமர்ந்த ஆறாம் மாதமே ஆற்றூர் போர்க்களத்திற்குச் சென்றவன், தனது கூடாரத்தில் பிணமாகக் கிடந்தான். 'ஆற்றூரில் துஞ்சிய தேவர்' என்று சரித்திரம் அவனை அழைத்தது. ஆற்றூரில் போரே நிகழவில்லை என்கிற போது அவன் போரில் எங்ஙனம் இறந்திருக்க முடியும்? அவனது முடிவும் மர்மமாகவே இருந்தது.

இளங்கோ பிச்சி மண்ணை வாரி இறைத்து பராந்தகனின் பிள்ளைகள் யாரும் அரியணையில் நிலைக்கமாட்டார்கள் என்று சாபமிட்டதுதான் இந்த மரணங்களுக்குக் காரணமா?

சரித்திரம் மர்மங்களை விளக்கிக் கூறாது. சரித்திரம் சகடத்தைப் போன்று உருண்டு கொண்டே நடப்புகளை மட்டுமே விவரிக்கும். மர்மங்களை என்று அது விடுத்துள்ளது..?

சுந்தரச் சோழர் இப்போது சோழ மன்னராகப் பதவி ஏற்றுவிட்டார். அவரது மகன் ஆதித்த கரிகாலன், தனது

சிறிய பாட்டன் உத்தம சீலன் மரணத்திற்குப் பழி வாங்குகிறேன் என்று சபதம் செய்து வீரபாண்டியனின் தலையைச் சீவி, தனது காலால் உதைத்தும்விட்டான். வடபுல சேனைத் தலைவனாகக் காஞ்சியில் குடியேறவும் தீர்மானித்துவிட்டான்.

தக்கோலத்தில் வசித்த கிருபாவதி, கர்ப்பவதியான மகள் கங்காவதி ஈன்ற பெண் குழந்தையோடு எங்கோ தலைமறைவாகச் சென்றுவிட்டாள். சோழம் அவளுக்கும் ஒரு நாள் பதில் கூறியே ஆக வேண்டும். கங்காவதியிடம் உள்ள ஒரே பல்லவத்தின் சொத்து, சந்திரகாந்தி ஐயம்படுகை ஆலமரத்தடியில் கண்டெடுத்த அந்தச் சுவடிதான்.

மல்ல எதி சாளுக்கிய மன்னனுக்குக் காஞ்சியின் பொக்கிஷம் உள்ள இடத்தைக் குறிப்பிடும் சுவடி. சந்திரகாந்தி கிருபாவதிக்கு அந்தச் சுவடியை அளித்திருந்தாள். அந்தச் சுவடியால் கிருபாவதிக்கோ அவள் மகள் கங்காவதிக்கோ பயன் எதுவும் விளையப் போகின்றதா என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

பாண்டியன் அரண்மனையில் அடைக்கலம் புகுந்து வீர குலசேகரப் பாண்டியனின் மனைவியான கோதாவரி என்கிற நற்கோதை ஈன்ற மகனுக்கு வீரவர்மன் என்று பெயரிட்டான் வீர குலசேகரன். பாட்டன் நிருப துங்கனிடம் வீர கலைகளைக் கற்றுக்கொண்ட வீரவர்மன் சோழக்காஞ்சியின் படையில் சேர்ந்து தனது வீரத்தால் படைத்தலைவரானான். சோழ அமைச்சர் அமுதவண்ணரின் மகள் இருவாட்சியை மணந்த வீரவர்மன் சோமவர்மன் என்கிற மகனைப் பெற்றான். அவன் மகன் தர்மவர்மன். தர்மவர்மனின் மகன்தான் ஆதித்த கரிகாலனின் நண்பனாகத் திகழ்ந்த பார்த்திபேந்திர பல்லவன். இவனது உண்மை பெயர் உபேந்திர பார்த்திப பல்லவன்.

*சோழமும், பல்லவமும் ஒன்றோடொன்று பிணைந்து நிற்க, மிகுந்த பலத்துடன் சோழம் திகழ, அதற்குக் காரணமான ஆதித்த கரிகாலன் சோழத்தில் மட்டு மல்லாமல் காஞ்சியிலும் மிகவும் போற்றப்பட்டான். சுந்தரச் சோழர் ஆதித்த கரிகாலனை வடபுல சேனைத் தலைவனாக நியமிக்க, காஞ்சியில் வாசம் செய்வதற்காக வருகிறான்.*

*அவனுக்கு ஆலோசகனாகவும், அமைச்சனாகவும் நியமிக்கப்படுகிறான், நிருபதுங்கனின் ஆறாம் தலைமுறை மகனான உபேந்திர பார்த்திப பல்லவன்.*

**பல்லவம்**

**மூன்றாம் நந்திவர்மன்**

நிருபதுங்கன் → கோதாவரி → வீரவர்மன் → சோமவர்மன் → தர்மவர்மன் → உபேந்திர பார்த்திபன்

கம்பவர்மன் → அபராஜிதவர்மன் → கிருபாவதி → கங்காவதி → சமந்தகப் பல்லவி → பல்லவாங்கி

# சோழம்

**விஜயாலய சோழன்**

↓

**ஆதித்த சோழன்**

↓

**பராந்தகன்**

↓

**அரிஞ்சய சோழன்**

↓

**சுந்தரச் சோழன்**

↓

ஆதித்த கரிகாலன் | குந்தவை | ராஜராஜன்

# 36. சோழ கிருமி!

தருமவர்மன் கம்பீரமாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்த மகன் உபேந்திர பார்த்திபனையே பார்த்துக்கொண்டிருந்தான். கண்ணாடியில் தனது பிம்பத்தைப் பார்த்த பார்த்திபன், திருப்தியுடன் திரும்பினான்.

"தந்தையே! வடபுல சேனைத்தலைவரும், சோழ பட்டத்து இளவரசருமான ஆதித்த கரிகாலனின் ஆலோசகனாகவும், சேனைத்தலைவராகவும் நியமிக்கப் பட்டிருக்கிறேன். என்னை ஆசீர்வதியுங்கள்!"

காலில் விழுந்த மகனின் தலையில் தனது இரு கைகளையும் வைத்தார், தர்மவர்மர். அவருடைய கண்கள் கலங்கின.

"பல்லவப் பேரரசின் மன்னனாக நீ இருந்து ஆதித்த கரிகாலனுக்குச் சேனைத்தலைவர் பதவியை நீ வழங்கி இருக்க வேண்டும். ஆனால் காலம் செய்த கோலம், அதற்கு நேர்மாறாக நடக்கின்றது. பல்லவத்தின் மூன்றாம் நந்திவர்மன் செய்த தவறு. தனது மகன் நிருபதுங்க வர்மனுக்கு அரியணையை வழங்காமல் நாட்டை இரு கூறாகப் பிரித்துத் தனது இரண்டாம் மனைவியின் மகன் கம்பவர்மனுக்கும் ராஜ்யத்தைத் தந்ததன் பலன் பல்லவம் பலவீனமாகியது." — தர்மவர்மனின் கண்களில் திரண்டிருந்த நீர் இப்போது கன்னங்களில் வழிந்தோடியது.

அவரை பரிதாபமாக நோக்கினான், பார்த்திபன்.

"தந்தையே. நிருபதுங்கரின் மகள் கோதைக்குப் பிறந்த வீரவர்மரின் வழி வந்தவர்கள் நாம். கம்பவர்மரின் மகன் அபராஜிதனுக்குக் குழந்தைகள் யாரேனும் இருந்தார் களா?"

"எனது தந்தை சோமவர்மனுக்கு அவருடைய தந்தை வீரவர்மன் கூறிய சரித்திரத்தின்படி, அபராஜிதவர்மன் சோழர்களால் கொல்லப்பட்டதும், அவன் மனைவி தனது பெண் குழந்தையோடு தப்பிச் சென்றாளாம். அதன் பிறகு அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது தெரியாது." — தர்மவர்மன் கூறினார்.

"நாம் பல்லவர்களின் குலமாக இருப்பது போன்று அபராஜிதவர்மனின் வாரிசுகளும் ஒரு பல்லவக் கிளையைத் தோற்றுவித்திருந்தால்..?" — பார்த்திபன் கேட்டான்.

"அபராஜிதனுக்கு ஒரு பெண் மட்டுமே பிறந்தாள். ஆனால் நிருபதுங்கர் பெற்றது பெண்ணாக இருந்தாலும், வழிவழியாகப் பிள்ளைகளாகத்தான் பிறக்கின்றோம். பல்லவர்களுக்குப் பெண் ராசி கிடையாது. இது பல காலமாக நிலவி வரும் நம்பிக்கை. நமது குடும்பத்தில் வழிவழியாகப் பிள்ளைகளே பிறப்பதால் நாம்தான் உண்மையான பல்லவர்கள்!" — தர்மவர்மர் கூறினார்.

"நாம் உண்மையான பல்லவர்களோ அல்லது போலியோ, இப்போதைக்குச் சோழரின் அடிமைகள்!" — துயரத்துடன் கூறினான், பார்த்திபன்.

"கவலைப்படாதே பார்த்திபா! பல்லவம் மீண்டும் பழைய பொலிவினை பெறும். உடைந்த பல்லவம் இணைந்து சோழம், சாளுக்கியத்திற்குச் சவாலாக நிற்கும்!" — தர்மவர்மர் கூறினார்.

"நான் புறப்படுகிறேன் தந்தையே!" — வாளை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

"நமது முன்னோர்கள் பயன்படுத்திய வாள். ஆதித்த கரிகாலனின் காலில் வைத்து நீ அவனிடம் மரியாதை செலுத்த வேண்டும் என்பதை நினைக்கும்போது மனது கொதிக்கிறது!" — தர்மவர்மர் கூறினார்.

"அப்பா! கட்டுண்டிருக்கும்போது பொறுத்திருக்க வேண்டும். காலம் மாறிய பிறகு பொங்க வேண்டும். கட்டுண்டிருக்கும்போது பொங்கினால், காலம் மாறுகின்ற போது பொறுத்திருக்க வேண்டியதுதான். கவலைப்படாதீர்கள். பல்லவம் மீண்டும் நிமிர்ந்து நிற்கும்!" — பார்த்திபன் கூற, அவனை ஆழமாகப் பார்த்தார், தர்மவர்மர்.

"மகனே எச்சரிக்கை! வருவது சோழ இளவரசன் அல்ல! சோழ கிருமி. ஆதித்த கரிகாலன் மிகவும் கோபக்காரன். மனதில் கொடுமையையும், வன்மத்தையும் கொண்டிருப்பவர்கள் மீதுதான் மிகவும் அன்பு காட்டுவான். வாயெல்லாம் மாங்கனியாக இனிய சொற்களைப் பேசினாலும், உள்ளே நஞ்சு இருக்கும். அவன் உன்னிடம் அன்பாகப் பேசுகிறான் என்று மயங்கிவிடாதே. இப்போது பல்லவத்தின் ஒரே சின்னமாக இருப்பவன் நீதான். பெயரிலேயே பல்லவத்தைக் கொண்டிருக்கிறாய். எனவே உன்னை எச்சரிக்கையுடன் பார்த்துக் கொள். காஞ்சியில் வந்து அவன் காரணமின்றித் தங்கவில்லை. காஞ்சியின் பொக்கிஷங்களைப் பற்றி அவன் அறிந்திருக்கக் கூடும். அதனைக் கைப்பற்றவே இங்கே தங்குகிறான். பல்லவர் கள் ராஜ்யத்தை வேண்டுமானால் இழந்திருக்கலாம். ஆனால் தங்களது பொக்கிஷத்தை சோழர்களிடம் இழக்கக்கூடாது. எச்சரிக்கையுடன் செயல்படு. ஆதித்த கரிகாலனின் சேனைத்தலைவன் என்பதைவிட, பல்லவத்தின் பொக்கிஷங்களின் பாதுகாவலன் நீ என்கிற உணர்வுடன் செயல்படு!" — தர்மவர்மன் கூறினான்.

*பார்த்திபன் தனது தந்தையை திகைப்புடன் நோக்கினான்.*

*"தந்தையே! இதென்ன கிருமி என்கிற சொல்லை பிரயோகப்படுத்தும் அளவிற்கு பல்லவர்களுக்கு சோழர்கள் என்ன கொடுமையை புரிந்தார்கள்?" — பார்த்திபன் கேட்டான்.*

*"பார்த்திபா! உன் போன்ற வாலிபர்கள் சரித்திரங்களை புறக்கணிக்ககின்றனர். இதனால்தான் எதிரிகள் யார், நண்பர்கள் யார் என்பது புரியாமல் இருக்கின்றீர்கள். சோழர்களை கிருமி என்று கூறுவதற்கு காரணம் இல்லாமல் இல்லை. கிருமி என்பது உடன் இருந்து கொல்லும். அது போன்றுதான் சோழர்களும். உடன் இருந்தே கொல்வார்கள். சோழர்களை எதிரியாக கொண்டிருந்தால், கவலையில்லை. ஒன்று போர்க் களத்தில் சந்தித்து வீர மரணம் எய்தலாம், அல்லது அவர்கள் வெற்றி கொள்ளலாம். பிரச்சனைகள் அவர்கள் நம் தோழர்களாக இருக்கும் போதுதான் எழுகிறது. உதாரணம், வாணர் மன்னன் விஜயாதித்த வாணன் சோழர்களிடம் நட்பு பூண்டிருந்தான். கங்க நாட்டு மன்னன் பிருத்விபதியும் பராந்தகனிடம் நட்பு கொண்டிருந்தான். ஆனால் வாணர்களுக்கும், கங்கர்கலுக்கும் கடிகைமலை*" குறித்து பிரச்சனை எழுந்தபோது, சோழர்கள் வாணர்களுக்கு எதிராக கங்கர்களை ஆதரித்தனர். வாணர் நாட்டை கைப்பற்றி, பெண்களையும், குழந்தைகளையும் கங்கை நாட்டிற்கு அடிமைகளாக விற்றனர் சோழர்கள்."*

---

* பாணருடன் போர் : பாலாற்றுக்கு வடக்கே புங்கனூரிலிருந்து காளத்தி வரையுள்ள நிலப்பகுதியை நெடுங்காலமாக ஆண்டு வந்தவர் பாணர் எனப் பட்டனர். அவர் ஆண்ட நாடு பாணப்பாடி அல்லது பெரும்பாணப்பாடி எனப்படும். அவர்கள் பல்லவர் காலத்தில் ஆனந்தப்பூருக்கு அண்மையில் இருந்தவர்கள். சாளுக்கியர் பலம் மிகுதிப்பட்டதால், அவர்கள் தெற்கே வரவேண்டியவர் ஆயினர். இரண்டாம் விசயாதித்த பாணன் பாணப்பாடியைக் கி.பி.909 வரை ஆண்டான்.

*"உடன் உறவாடி கொல்பவர்கள் சோழர்கள். எனவே தான், சோழ கிருமியும் எச்சரிக்கையுடன் இரு என்றேன்!" — தர்மவர்மன் கூற, உபேந்திர பார்த்திபன் சிந்தனையில் ஆழ்ந்தான். சற்று நேரம் அமைதியை கடைபிடித்தவன், வந்து தந்தையை நோக்கினான்.*

*"தந்தையே! பல்லவம் என்கிற பெயரை சுமந்து கொண்டு நாம் இருவர் மட்டுமே உயிர் வாழ்கிறோம். பல்லவத்தை தழைக்க வைத்து பழைய கீர்த்தியை உண்டாக்க உறுதி பூண்டிருக்கிறேன். சோழ கிருமி*

---

இவனது பெயரன் விக்கிரமாதித்ய பாணன் இராட்டிடர கூட அரசனான மூன்றாம் கிருஷ்ணன் காலத்தவன். இந்த இருவருக்கும் இடையில் இரண்டாம் விக்கிரமாதித்தன், மூன்றாம் விசயாதித்தன் (புகழ்விப்பவர் கண்டன்) என்பர் ஆண்டனர். கங்க அரசனான இரண்டாம் பிருதிவீபதி பராந்தககனின் நண்பன். அவன் பராந்தகன் ஏவலால் பாண அரசரை எதிர்த்துப் போராடி வென்றான். பராந்தகன் அவனுக்குப் பாணாதிராசன் என்ற பெயரைத் தந்து பாணப்பாடியை அவனது ஆட்சியில் விட்டனன் என்ற சோழசிங்கபுரக் கல்வெட்டு கூறுகிறது! தோற்றோடிய பாண அரசர் இராட்டிர கூட அரசனிடம் சரண்புகுந்தனர். பராந்தகன் பாணர்களை வெற்றி கொண்டதுடன் கங்க மன்னன் ஹுஸ்திமல்லனைத் தன் அதிகாரத்திற்கு உட்படுத்தினான். தனது அதிகாரத்தின் கீழ் உட்படுத்தி அவனை தனது கைப் பாவையாக மாற்றி, வாணர் குடிமக்களை துன்புறுத்தினான். இந்த பாணர் குடியில் தோன்றிய பராக்கிரம ஆதித்த பாணன்தான் சோழர்களை பழி வாங்கத் துடித்தான். அந்த பராக்கிரம ஆதித்த பாணன்தான் பொன்னியின் செல்வனில் வந்தியத்தேவனாக வீரநாராயண ஏரியின் கரையோரமாக புரவியில் பயணிக்கிறான். வந்தியத்தேவன் வாணர் குலத்தவன் என்று சரித்திரமே ஒப்புக்கொண்டிருக் கிறது. அவன் மூலம் ஆதித்த கரிகாலன் தனது தந்தைக்கு ஓலை அனுப்புகிறான். "உங்கள் உயிருக்கு ஆபத்து. இவன் தங்களுக்கு பாதுகாப் பாளனாக இருப்பான்" - என்கிற செய்தியை தாங்கி சொல்லும் அந்த ஓலையை சுமந்து செல்பவனே சோழர்களை பழி வாங்கதான் வந்துக் கொண்டிருக்கிறான் என்பதை சோழர்கள் தான் அறியவில்லை. கல்கியும் காணத் தவறியது விந்தைதான்.

மட்டுமில்லை. பாண்டிய, சாளுக்கிய, சேர கிருமிகளையும் விரட்டி அடிப்பதற்கு நான் எனது உயிரையே பணயம் வைத்திருக்கிறேன். இப்போது, ஆதித்த கரிகாலனே விரும்பி என்னை தனது ஆலோசகனாக நியமித் திருக்கிறான். அவரால் உறவாடி கெடுத்தால், நாமும் அவர்கள் பாணியிலேயே செயல்பட்டு விட்டால் போகிறது. எனக்கு ஆசி கூறி அனுப்புங்கள். மீண்டும் நந்திக்கொடி காஞ்சியில் பறந்து, புலியையும், வில்லையும், மீனையும் அடிமைப்படுத்த வேண்டும் என்பதே எனது ஆசை!" பார்த்திபன் கூற, அவனது சிரசில் தனது கையை வைத்து கண்களை மூடி பிரார்த்தித்தார் தர்மவர்மர்.

"அத்திமலைதேவா! மீண்டு உனது பல்லவத்தை தழைக்க செய்!" என்று அவர் கூறிய அதே சமயம், பழையறையிலிருந்து தனது சேனையுடன், காஞ்சியை நோக்கி பயணிக்கத் தொடங்கினான், சோழ பட்டத்து, இளவரசனும், வடபுல சேனை தலைவனுமான ஆதித்த கரிகாலன்.

## 37. கரி வருது, கரிவரதா!

"**சோ**ழப் பேரரசின் வடபுல சேனைத்தலைவர் பட்டத்து இளவரசர் ஆதித்த கரிகாலர் பராக் பராக் பராக்! ஜெய விஜயீ பவ!"

கட்டியங்காரன் குரல் கொடுக்க, உடனே காஞ்சியின் உள்ளே பிரவேசிக்கத் துவங்கினான், ஆதித்த கரிகாலன். நெடிய தேகம், சதைப்பற்றற்ற உறுதியான உடல். வீரபாண்டியனின் தலையைக் கொய்த வாளினை தேரின் பீடத்தில் ஊன்றி மக்கள் அதனைப் பார்க்குமாறு வைத்து தனது உறுதியான முஷ்டியால் அதன் பிடியைப் பிடித்திருந்தான். தனது வலது காலை தேர் சாரதியின் இருக்கையின் பின்பாக உயர்ந்த பீடத்தில் பதித்தபடி கம்பீரமாக நின்றிருந்தான். கதாயுதங்களைப் போன்று அவனது துடைகள் திகழ, இடது துடையின் மீது இடது கையை ஊன்றியிருந்தான்.

அவனது மணிமுடியை ஸ்வேத முக்தாம்பரம் என்கிற பாண்டிய மன்னன் வெண்கொற்றக் குடையில் இருந்து பறிக்கப்பட்ட வெண்முத்துக்களால் அலங்கரித்திருந்தான்.

அவனது கம்பீரத்தையும், அழகையும் தாண்டி முகத்தில் ஒரு கடுமை நிலவிக்கொண்டிருந்தது. பாதுகாப்பு இல்லாமல் சுற்றிலும் எதிரிகளாலும், துரோகிகளாலும் சூழப்பட்டு, யாரை நம்புவது, யாரை நம்பக்கூடாது என்கிற நிலையில் உள்ளவர்களுக்குப் பாதுகாப்பே அவர்கள் முகத்தில் காட்டும் கடுமைதான்.

அத்தகைய கடுமைதான் ஆதித்த கரிகாலனின் முகத்திலும் நிலவிக்கொண்டிருந்தது. காஞ்சி வாழ்

மக்களின் வரவேற்பை அங்கீகரித்தபடி அகன்ற காஞ்சியின் வீதிகளை பிரம்மிப்புடன் நோக்கினான். காஞ்சி மிகவும் தொன்மையான இடம் என்பதை அறிந்திருந்தாலும், அதன் அகல வீதிகளையும் பிரம்மாண்ட மாளிகைகளையும் பார்த்தபோது தஞ்சையைக் காட்டிலும் மிகவும் பெருமை வாய்ந்தது என்று ஒப்புக்கொள்ளத் தோன்றியது. இனி காஞ்சி இவனது வாசஸ்தலம். காஞ்சியைப் பற்றி இவனுடைய ஆலோசகரும், குருவுமான நேமிநாதர் அனைத்தையுமே கூறியிருக்கிறார். அத்திகிரி, முக்கூடல், மாலிருந்த சோலை, தருமநகரம் மற்றும் ஒத்தாடை ஆகிய பகுதி களை இணைத்து தனது தம்பி பல்லவ இளந்திரை யனுக்காகக் காஞ்சி நகரை கரிகாலன் நிர்மாணித்த கதை, விஷ்ணுகுப்தன் என்கிற சாணக்கியன் மௌரியத்தை உருவாக்கியது, சமுத்ரகுப்தன் காஞ்சியின் மீது படையெடுத்தது, சிம்மவர்மனின் போர் திறமைகள், அவனை பிரக்ஞுதாரா மயக்கியது, பல்லவத்தைக் காப்பாற்ற ஜெயவர்மன் செய்த தியாகம், நவரத்ன பல்லவி அத்திமலையான் பிரதிமையைப் பதுக்கியது, அப்பரால் திருத்தி பணிகொள்ளப்பட்ட மகேந்திரன் மல்லையை எழுப்பியது, நரசிம்ம பல்லவன் புலிகேசியைக் கொன்றது, நந்திவர்மன் காம்போஜத்தில் இருந்து வந்தது என்று பல்லவத்தின் வீழ்ச்சி வரை காஞ்சியின் கதையைக் கூறியிருந்தார்.

அதன் பிறகு காஞ்சியைக் காணவேண்டும் என்று அவன் கொண்டிருந்த ஆவல், வடபுல சேனைத் தலைவராக நியமிக்கப்பட்டதும், உற்சாகமாக மாறியது. தான் தொன்மை வாய்ந்த காஞ்சி நகரில் வசிக்கப் போகிறோம் என்கிற களிப்புடன் பவனி வந்து கொண்டிருந்தான்.

காஞ்சியின் எல்லையில் அவனை வரவேற்றான், உபேந்திர பார்த்திப பல்லவன்.

பார்த்த மாத்திரத்திலேயே ஆதித்த கரிகாலனுக்கு அவனை மிகவும் பிடித்துப் போனது.

"உன்னை எனது ஆலோசகனாகவும், தளபதியாகவும் நியமித்துள்ளதாக அறிகிறேன். அதைவிடப் பெரிய பதவி ஒன்றை உனக்கு அளிக்கிறேன். இன்று முதல் நீ என்னுடைய உயிர் தோழன்!" — ஆதித்த கரிகாலன் கூற, புன்னகையுடன் அவனது கையைப் பற்றித் தனது இதழ்களில் பதித்து அவனது தோழமையை ஏற்றுக் கொண்டான், பார்த்திபன்.

ஆதித்த கரிகாலன் அளவிற்கு உயரம் இல்லையென்றாலும், ஒரு வீரனின் இலட்சணங்களுடன் திகழ்ந்தான். அவனது முகவாய் அருகே இருந்த குழியில் காணப்பட்ட தாமரை மச்சம் அவனது முகத்திற்கு அழகை சேர்த்தது. கண்களில் ஒளி இல்லையென்றால் முகம் சோபையை இழந்து காணப்படும். ஒரு காலத்தில் பேரரசாக இருந்த பல்லவம் இப்போது தனது பெயரில் மட்டுமே உள்ளதே என்கிற சோகம் உபேந்திர பார்த்திபனின் கண்களில் தெரிந்தது.

"வரவேண்டும், சோழ இளவரசே!" — பார்த்திபன் சொன்னதும், சட்டென்று அவனது வாயை பொத்தினான், ஆதித்த கரிகாலன்.

"பார்த்திபா. உன்னை நண்பன் என்று அறிவித்து விட்டேன். இளவரசன், சேனை நாயகன் என்று கூறும் சம்பிரதாயச் சொற்கள் எனக்கு அலுத்துவிட்டன. மனம் விட்டுப் பேச எனக்கு ஒரு நண்பன் தேவை. என்னை ஒருமையில் அழைத்து, நான் அழும்போது ஆறுதல் கூறி, நான் சிரிக்கும் போது உடன் சிரித்து, நான் தவறு செய்யும் போது என்னைக் கண்டித்துப் பேசும் ஒரு நல்ல இதயம் தேவை. அந்த நல்ல இதயமாக நீ இருக்க வேண்டும் என்று உன்னை வேண்டிக் கேட்டு கொள்கிறேன்." — ஆதித்தன் கூற, தனது தந்தை தர்மவர்மன் கூறிய வார்த்தைகளை நினைத்துப் பார்த்தான்.

'எப்போது சோழ மன்னர்கள் ஒருவனை நண்பனாக ஏற்கின்றனரோ அவர்களுக்கு அழிவு நிச்சயம்!' — கம்பவர்மன் கூறியிருந்தானே! அதே சமயம் ஆதித்த கரிகாலனின் கண்களுக்குள் ஆராய்ந்தான். அவனது வெள்ளை உள்ளத்தில் இருந்து வெளிவரும் சுத்தமான, தெளிவான, சுனைநீரைப் போன்ற சொற்கள் அவை என்பதையும் உணர்ந்து கொண்டான்.

தாய் தந்தையைப் பிரிந்த பாதுகாப்பு இல்லாத குழந்தை, முதலில் தென்படும் தெரிந்த முகத்தைக் கண்டதும் அவரது அணைப்பினுள் இருக்க விரும்புவது போன்று, அவனது பிரச்னையை உடனே புரிந்து கொண்டான், பார்த்திபன்.

நம்பகத்தன்மையைத்தான் அவன் தேடிக்கொண்டிருக்கின்றான். இதுவரை நம்பகத்தன்மை கொண்டவரை அவன் சந்திக்கவில்லை போலும்.

"கவலைப்படாதே நண்பா! நம்பிக்கை என்கிற பசையைக் கொண்டு நமது இருவரது இதயங்களையும் இணைத்துக் கொள்வோம். நீ எதைத் தேடுகிறாய் என்பதைப் புரிந்து கொண்டேன். நீ தேடுவதை என்னால் கொடுக்க முடியும்!" என்றவன் தேரில் ஏறி அவனது கரத்துடன் தனது கரத்தை கோர்த்துக் கொண்டான்.

பல்லவமும், சோழமும் பிணைந்து நிற்க, காஞ்சி மக்கள் அதனைக் கண்டு ஆரவாரம் செய்யவில்லை. மீண்டும் பல்லவம் துளிர்க்க வேண்டும். அபராஜிதனுக்குச் சோழம் செய்த துரோகத்திற்குப் பதிலடி கொடுக்க வேண்டும் என்று நினைத்திருந்த காஞ்சி மக்களுக்கு அந்தக் காட்சி ரசிக்கவில்லை போலும்!

ஊர்வலம் ஒத்தாடையை நோக்கி நகர்ந்தது.

ஒத்தாடை ஈசனின் ஆலயத்தின் வாயிலில் இரதம் நிற்க, தேரில் இருந்தபடியே கைகளைக் குவித்து வணங்கினர் இருவரும்.

"அதோ தெரிகிறது பார்! அதுதான் நீ வாசம் செய்யப் போகும் ஒத்தாடை அரண்மனை!" — பார்த்திபன் கூற, ஆவலுடன் அவன் சுட்டிக்காட்டிய திசையில் நோக்கினான். ஆதித்தனின் முகம் சுண்டியது.

"இதுவா காஞ்சியின் ஒத்தாடை அரண்மனை! எங்கள் பழையாறையின் பணியாளர் விடுதியே இதைவிடப் பெரியதாக இருக்கும் நண்பா! அரண்மனை ஏன் இப்படிக் கிலமாக, பூச்சுகள் உதிர்ந்து, பழமையாகக் காட்சி தருகிறது..?" ஏமாற்றத்துடன் கேட்டான்.

உபேந்திர பார்த்திபன் குரலைவிட்டுச் சிரித்தான்.

"அத்தியூர் வேழூலத்துடன் இணைக்கப்பட்ட போது அத்தியூர் ஆலயம் அருகே ஒரு அரண்மனை கட்டப் பட்டது. ஆனால் காஞ்சி பல்லவத்தின் தலைநகரான போது திருலோச்சனா பல்லவனால் கட்டப்பட்ட அரண்மனைதான் ஒத்தாடை அரண்மனை. அதன்பிறகு எல்லா பல்லவ மன்னர்களும் இங்குதான் வசித்து வந்துள்ளனர். ஒத்தாடையான் ஆலயம் வளர வளர, ஒத்தாடை அரண்மனை குறுகிப் போய்விட்டது. நிரந்தரமாக உள்ளவன் ஒத்தாடையான். அவனுக்குப் பெரிய இடம் தேவை. மனிதர்கள் நிலையானவர்கள் அல்ல. எனவே அவர்களுக்குக் குறுகிய அரண்மனை போதும் என்பதனை உணர்த்தும் வண்ணம் எங்கள் ஒத்தாடை அரண்மனை சிறியதாக உள்ளது." — பார்த்திபன் கூறினான்.

ஆதித்த கரிகாலனும், பார்த்திபனும் அரண்மனையைச் சுற்றிப் பார்த்துவிட்டு, உப்பரிகைக்கு வந்தார்கள்.

ஆதித்த கரிகாலன், பார்த்திபனை கவலையுடன் நோக்கினான்.

"பார்த்திபா! எனது தங்கை குந்தவை சோழ தேசத்தின் எல்லையைவிட்டு தாண்டமாட்டேன் என்று சபதம் செய்திருப்பவள். இப்போது சோழரின் வசம் காஞ்சி

உள்ளதால், காஞ்சிக்கு வர ஒப்புக்கொண்டிருக்கிறாள். இந்த ஒத்தாடை அரண்மனையைக் கண்டால் அதன் உள்ளே கூட நுழைய மறுப்பாள். அவளுக்கு ரசனைகள் அதிகம். தொன்மையான இடம் என்பதற்காக வசதி குறைவான இடங்களில் அவள் தங்குவாள் என்று எனக்குத் தோன்றவில்லை. என்னைத் தவறாக நினைக்காதே. காஞ்சியில் நான் தங்கும் வகையில் வேறு ஏதாவது பிரம்மாண்டமான மாளிகைகள் உண்டா..?" — ஆதித்த கரிகாலன் கேட்க, பார்த்திபன் சிரித்தான்.

"எனக்குத் தெரிந்து இப்போதைக்குக் காஞ்சியில் உள்ள பிரம்மாண்டமான இடம் அத்திமலைத்தேவனின் கோயில்தான். அவனே அந்த இடம் வசதியாக இல்லை என்று எங்கோ தலைமறைவாகப் போய்விட்டான். வேறு பிரும்மாண்டமான இடம் காஞ்சியில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை!" — பார்த்திபன் கூற, ஆதித்த கரிகாலன் யோசித்தான்.

"சரி! அப்படியானால் நான் வசிப்பதற்குப் புதிதாக ஒரு மாளிகையை எழுப்ப வேண்டியதுதான். அதுவரை வேண்டுமானால், ஒத்தாடை அரண்மனையில் வசிக்கிறேன்." — ஆதித்த கரிகாலன் கூறினான்.

"நல்ல யோசனைதான்" — பார்த்திபன் கூறினான்.

"பல்லவமும், சோழமும் பிணைந்திருக்கும் தற்போதைய நிலையைக் கருத்தில் கொண்டு இரு நாட்டின் கட்டடக் கலையையும் இணைத்து ஒரு மாளிகையை எழுப்பப் போகிறேன். அந்த மாளிகையைக் கண்டு எனது தங்கை மலைக்க வேண்டும். இம்மாதிரி அரண்மனை சேரம், சோழம், பாண்டியம், பல்லவம், சாளுக்கியம், கங்கம், கதம்பம் என்று எங்குமே இருக்கக்கூடாது. நீரருவிகள், அழகிய பூஞ்சோலைகள், தந்த சிற்பங்கள், கண்ணாடி மண்டபங்கள் என்று அந்த அரண்மனையை அமைக்கப் போகிறேன்." — கண்களில்

கனவுடன் பேச, மீண்டும் தனது தந்தை தர்மவர்மன் கூறியது நினைவில் வந்தது.

'பல்லவ பொக்கிஷங்களை அபகரிக்கவே சோழர்கள் நம்முடன் நட்பு பாராட்டுகிறார்கள். நாம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.'

"சரி நண்பா! புதிய அரண்மனையைக் கட்டப் போகின்றாய். ஆனால் எங்கே?"

"நாளை முதல் அதற்கான இடத்தைத் தேடும் படலத்தைத் தொடங்குவோம். அமைதியான ஆற்றங்கரை அல்லது விஸ்தாரமான காடு, நகரத்தின் சப்தங்கள் ஒலிக்காத தொலைவில் அந்த இடம் இருக்க வேண்டும்." — ஆதித்த கரிகாலன் கூறினான்.

"நாளையே அப்படி ஒரு இடத்தைத் தேடிப் பார்ப்போம்!" — பார்த்திபன் கூறினான்.

அவர்களது உரையாடல் தருமநகரப் பிரவாள மாளிகையின் இடிபாடுகளின் ஊடே ஓங்கி நின்ற புகை போக்கியின் உள்ளே நின்றிருந்த அத்திமலைத்தேவனின் செவிகளில் விழுந்திருக்கும் போலும். தான் விரைவில் வெளியே வந்துவிடுவோம் என்று தோன்ற, தனது புன்முறுவலை இன்னும் இன்னும் அதிகமாக்கினான்.

# 38. மீண்டும் பிரவாள மாளிகை

பார்த்திபன் தனது வெண்புரவியிலும், ஆதித்த கரிகாலன் தனது கரிய குதிரையிலும் ஏறி காஞ்சியைச் சுற்றி வந்தார்கள். விடியற்காலையிலேயே புறப்பட்ட அவர்கள், முக்கூடல், அத்தியூர், மாலிருந்தசோலை என்று பல இடங்களைக் கண்டுவிட்டு உச்சிவேளையில் ஒத்தாடையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். ஆதித்த கரிகாலனுக்கு ஏமாற்றமாக இருந்தது. நகரேஷு காஞ்சி என்று போற்றப்படும் காஞ்சியில் மன்னர் வசிக்கத் தகுந்த மாளிகைகள் இல்லாமல் இருப்பது கூடப் பரவாயில்லை. புதிதாக ஒரு கனவு மாளிகையை எழுப்புவதற்குக் கூடவா இடமில்லை?

பசி வயிற்றைக் கிள்ளியதால், உணவு அருந்துவதற்காக ஒத்தாடை அரண்மனைக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர்.

அப்போது —

ஆதித்த கரிகாலனின் உதவியாளனும், மெய்க்காவலனுமான குழலழகன் தனது புரவியில் இவர்களை நோக்கி விரைந்து வருவதைப் பார்த்தான். தனது கனவு மாளிகையை எழுப்புவதற்குப் பொருத்தமான இடத்தைத் தேடும்படி தனது குரு நேமியங்கையையும், குழலழகனையும் அனுப்பியிருந்தான். அவன் வரும் வேகத்தைப் பார்த்தால் ஏதோ தகவலுடன் வருகிறான் போலும்..

தனது புரவியைத் தொலைவிலேயே நிறுத்திவிட்டு, அதன் மேலிருந்து குதித்து ஆதித்த கரிகாலனை நோக்கி ஓடிவந்து பணிந்தான்.

"இளவரசே! குரு நேமியங்கையர் தங்களை உடனே அழைத்து வரச் சொன்னார். தங்களது கனவு மாளிகையை எழுப்புவதற்கு ஒரு அருமையான வனப் பகுதியை தேர்ந்தெடுத்திருக்கிறார்." — குழலழகன் கூறியதும், ஆதித்த கரிகாலனின் வயிற்றைக் கிள்ளிக் கொண்டிருந்த பசியை, மனதைக் கிள்ளத்தொடங்கி இருந்த ஆவல், விரட்டி அடித்தது.

"நண்பா! வா! சென்று பார்ப்போம்!" — கரிகாலன் கூற, இருவரும் குழலழகன் தொடர்ந்தனர்.

குழலழகன் தருமநகரத்தில் நுழைந்து ஆதிசரஸ்வதி ஆலயத்தின் அருகில் பாழடைந்து கிடந்த பிரவாள மாளிகையின் முன்பாக நிற்க, மரநிழலில் ஒதுங்கி இருந்த குரு நேமியங்கையர் ஆதித்த கரிகாலனை நோக்கி வந்தார்.

"இந்த இடிபாடுகளைப் பாருங்கள். ஒரு காலத்தில் பிரம்மாண்ட மாளிகையாக இருந்திருக்க வேண்டும். எவ்வளவு விஸ்தாரமான பகுதி என்பதைக் கவனியுங்கள். இந்த மாளிகையில் துவங்கும் வனம் ஒத்தாடை வரை பரவியுள்ளது. தருமநகரத்தின் தெற்கிலும் தும்பை வனம் என்கிற காட்டுப் பகுதி. ஒத்தாடை அரண்மனைக்கும், அத்திமலைக்கும் இடையே ஒதுங்கி நிற்கும் இந்தத் தரும வனத்தின் பிரவாள மாளிகையைப் பல்லவ இளவரசி ஒருத்திக்காகக் கட்டப்பட்டதாம்!" — நேமியங்கையர் கூற, ஆதித்த கரிகாலன் பிரம்மிப்புடன் அந்த இடிபாடுகளைக் கவனித்தான்.

'உண்மையிலேயே ஒரு காலத்தில் பிரம்மாண்டமாகத்தான் இருந்திருக்க வேண்டும். சுற்றி அடர்த்தியான மரங்களும், செடிகளும் வளர்ந்திருந்தாலும், அந்தக் கல்தூண்களும், சுவர்களும் இன்னும் உறுதியாகத்தான் நின்றிருந்தன. இந்தப் பழைய மாளிகையை இடித்துவிட்டு, இவனது கனவு மாளிகையை எளிதாக எழுப்பலாம். இவன் எழுப்பும் ஸ்வர்ண மாளிகைக்கேற்ப சுற்றி வனங்களும் ஓடைகளும் கொண்ட பகுதியாகத்

தருமநகரம் உள்ளது. இந்த இடம் தகுதியான இடம்தான்!' மனதில் திருப்தி தோன்ற, நேமியங்கையரை நன்றியுடன் நோக்கினான்.

"நல்ல காரியம் செய்தீர்கள், குருவே. எனது மனதில் நான் எழுப்பிவரும் அந்தக் கனவு மாளிகை அமைக்கப்படுவதற்கு இதுவே தோதான இடம்!" என்று கூறியவன் பார்த்திபனை திரும்பி நோக்கினான்.

அவன் பிரவாள மாளிகையையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

"என்ன சொல்கிறாய் நண்பா? இந்த இடம் பொருத்த மானதுதானே?" — ஆதித்த கரிகாலன் கேட்டான்.

பார்த்திபன் அவனை யோசனையுடன் நோக்கினான்.

"அவசரப்படாதே ஆதித்தா! உனக்கோ, குருவுக்கோ, அல்லது குழலழகனுக்கோ இந்தப் பகுதியைப் பற்றி முழுவதுமாகத் தெரியாது. நானே இந்தப் பகுதிக்கு அதிகம் வந்ததில்லை. சிம்மவர்ம பல்லவன் தனது மகள் நவரத்ன பல்லவிக்காக ஆசையுடன் கட்டிய மாளிகை. அவள் மரணம் அடைந்த பிறகு யாருமே இங்கு வசிக்க வில்லை. பல பல்லவ மன்னர்கள் வாழ்ந்தும் மறைந்தும் விட்டார்கள். ஆனால் யாருமே இந்தப் பிரவாள மாளிகையில் வசிப்பதற்கோ, புதிப்பித்துக் கட்டுவதற்கோ விரும்பவில்லை. ஒருவரும் முயற்சி கூடச் செய்யவில்லை. காலங்காலமாக இந்தப் பகுதி மக்கள் இதனைப் பேய் மளிகை என்றே அழைக்கின்றனர். இளவரசி நவரத்தின பல்லவி தற்கொலை செய்துகொண்டு நிம்மதி இன்றி ஆவியாக அலைந்ததாகக் கூறுகிறார்கள். களப்பரர்கள் இங்கே பல அட்டூழியங்களைச் செய்திருக்கின்றனர். கொலைகள் பல இங்கே அரங்கேறியுள்ளன. தந்திவர்மரின் இரண்டாம் மனைவி கோகில வாணி என்பாள் இங்கே எரித்துக் கொல்லப்பட்டதாகவும் கதைகள் உண்டு. மொத்தத்தில் ஒரு மன்னர் வசிக்க

வேண்டிய இடமே இல்லை இது. எனவே உனது கனவு மாளிகையை இங்கே எழுப்பும் எண்ணத்தை மாற்றிக் கொள்!" — பார்த்திபன் கூற, ஆதித்த கரிகாலன் சிரிக்கத் தொடங்கினான்.

"இம்மாதிரி நம்பிக்கைகளைக் கொண்டிருந்ததால்தான் பல்லவம் அழிந்துவிட்டது போலும். பேய் உலாவினால் பேயை விரட்டிவிட்டு அந்த மாளிகையை எடுத்துக் கொள்ள வேண்டியதுதானே. பேயை எதிர்த்து போர் புரிய முடியவில்லை என்றால் பெரிய போர்களை எப்படிப் பல்லவர்கள் தொடுத்தனர்..? எனக்கு இந்த நம்பிக்கைகள் எல்லாம் கிடையாது. ஒருவேளை நவரத்தின பல்லவி ஆவி எனது கண்ணின் முன்பாக வந்து நின்றால், காணாமல் போன காஞ்சியின் பொக்கிஷம் எங்கே என்று அதனிடமே கேட்பேன். எனக்கு இந்த இடம் மிகவும் பிடித்துள்ளது நண்பா. இங்கேயே எனது கனவு மாளிகையை எழுப்பலாம். பிரவாள மாளிகையைத் தரை மட்டம் செய்துவிட்டு, இந்தப் பகுதியை சுத்தம் செய்துவிட்டு, நமது ஸ்வர்ண மாளிகையை எழுப்பும் பணிகளைத் தொடங்குவோம். குழலழகா! உன்னிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைக்கிறேன். இந்தப் பிரவாள மாளிகையைச் சுற்றி வளர்ந்துள்ள மரஞ்செடி கொடிகளை அகற்றி, பிரவாள மாளிகையை இடித்துவிட்டு, புதிய மாளிகையை எழுப்புவதற்கு வசதியாக இந்த இடத்தை மாற்றம் செய். குருநாதா! நீங்கள் குழலழகனை வழி நடத்துங்கள்!" என்று கூறிய ஆதித்த கரிகாலன், பார்த்திபனை நோக்கினான்.

"உனது யோசனையை நான் கேட்கவில்லை என்கிற வருத்தம் ஒன்றும் இல்லையே?" — ஆதித்த கரிகாலன் கேட்டதும், அவனை நோக்கிப் புன்னகைத்தான், பார்த்திபன்.

"துணிவுக்குப் பெயர் போனவன் நீ! புதிய மாளிகையை எழுப்பி இந்தப் பகுதி மக்களின் நம்பிக்கை

மூடத்தனமானது என்று நீ நிரூபிக்கும் வல்லமை கொண்டவன். நான் ஏன் வருத்தப்படப் போகிறேன். நீ புதிய மாளிகையில் வசித்தால், உனது நண்பன் எனக்கும் அதில் ஒரு அறை ஒதுக்கப்படும் அல்லவா? பின் நான் ஏன் வருத்தப்படப் போகிறேன்..?" என்றான், பார்த்திபன்.

இருவரும் சிரித்தபடி பிரவாள மாளிகையின் உள்ளே நடந்தனர். மாளிகையைச் சுற்றிப் பார்த்தபடி உப்பரிகைக்கு வர, அடுக்களையின் மீது நின்ற அந்தப் புகைபோக்கியினையும், அதன் உச்சியில் வட்டமாக அமைந்துள்ள மரப்பாலத்தையும் கண்டனர்.

"பார்த்திபா! என்ன அது? கோபுரம் போன்று மிக அழகாக இருக்கிறது?" — ஆதித்தன் கேட்டான்.

"அது ஒரு புகைபோக்கி. ஒத்தாடை அரண்மனையின் உப்பரிகையில் இருந்து பார்த்தால் இந்தப் புகைபோக்கி தெரியும். சிம்மவர்ம பல்லவர் தனது பிரிய மகள் அன்றாடம் உணவு சமைத்து உண்கிறாளா என்பதைப் பார்ப்பதற்காக அமைக்கப்பட்ட புகைபோக்கி. வேடிக்கை என்னவென்றால், அவள் திருமணம் செய்துகொண்ட அன்றே தற்கொலை செய்து கொண்டாளாம்.." — பார்த்திபன் கூறினான்.

"தற்கொலையா... எதற்கு?" — ஆதித்த கரிகாலன் திகைத்தான்.

"காணாமல் போன அத்திமலைத்தேவனின் பிரதிமையை அவள் பதுக்கி வைத்தாலும் வைத்திருக்கலாம். வசிய கலையினை அறிந்த ஒரு புத்த சந்நியாசினி தன்னை வசியம் செய்து தகவலை அறிந்து கொண்டுவிடப் போகிறாளே என்று தற்கொலை செய்து கொண்டாளாம்." — ஆதித்தன் கூறினான்.

"அந்தச் சிலை அவ்வளவு விலைமதிப்பற்றதா?" — ஆதித்தன் வியந்தான்.

"தேவ உடும்பரச் சிலை என்று நான் கேள்விப் பட்டிருக்கிறேன். உலகிலேயே அவ்வகை மரம் அது ஒன்றுதான் உள்ளதாம். மிகவும் ஆற்றல் மிக்கச் சிலை. அதனைக் கொண்டு அஸ்வமேத யாகம் செய்யும் மன்னன் உலகையே வெல்வானாம்! சமுத்ரகுப்தன், புலிகேசி போன்ற மன்னர்கள் காஞ்சிக்குப் படையெடுத்து வந்தது அந்த தேவ உடும்பர சிலையைக் கைப்பற்றவே!" — பார்த்திபன் கூறினான்.

"நேமியங்கையர் என்னிடம் கூறியுள்ளார். ஒரு சிலைக்காக இவ்வளவு போராட்டங்களா..!" — வியப்புடன் கேட்டான் ஆதித்த கரிகாலன்.

"ஆம் ஆதித்தா! காஞ்சியின் வித்து அந்தச் சிலைதான். நரசிம்ம பல்லவரால் கண்டெடுக்கப்பட்டு, பிறகு ஆழிப்பேரலையில் சிக்கி காணாமல் போனது. பல்லவர்களின் எதிரி மல்ல எதி என்பான் அதனைக் கைப்பற்றி மறைத்து வைத்ததாகக் கூறப்படுகிறது. அவனது உயிரும் பிரிந்துவிட, அந்தச் சிலை இருக்கும் இடம் தற்போது யாருக்கும் தெரியாது. ஒவ்வொரு பல்லவனும் அதைத் தேடிக் கண்டு பிடிப்பேன் என்று அரியணையில் அமர்ந்த அன்று சபதம் செய்வான். பிறகு மரணப்படுக்கையில் மகனிடம் அதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று சத்தியம் வாங்குவான். ஆனால் அத்தி மலைத்தேவன் இன்னும் விளையாட்டு காட்டிக் கொண்டே இருக்கிறான்!" — பார்த்திபன் கூற, ஆதித்தன் தனது தோள்களை அலட்சியமாகக் குலுக்கினான்.

"நான் எனது வீரத்தை மட்டுமே நம்புகிறேன். உலகச் சக்கரவர்த்தியாவதற்கு எனது பலமே போதும். அத்திமலைத்தேவனின் சிலை எனக்குக் கிடைத்தாலும் அது எனக்குத் தேவையில்லை. அத்திமலை ஆலயத்திலேயே அதை வைத்துவிட்டு எனது பணிகளை நான் கவனிப்பேன். எனது ஆற்றலைக் கொண்டு நான் உலகச் சக்கரவர்த்தி ஆவேனே தவிரப் பல்லவ

மன்னர்களைப் போன்று அத்திமலையானை தொந்தரவு செய்து கொண்டிருக்கமாட்டேன்!" — என்றபடி ஆதித்த கரிகாலன் அந்தப் புகைபோக்கியையே நோக்கிக் கொண்டிருந்தான். அவன் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த அத்திமலைத்தேவன் அவனைச் சோதிக்க முடிவு செய்துவிட்டான் போலும்.

மீண்டும் பிரவாள மாளிகையின் வெளியே வந்த ஆதித்தனும், பார்த்திபனும் அவர்களுக்காகக் காத்திருந்த நேமியங்கையரையும், குழலழகனையும் அணுகினர்.

"குழலழகா! நாளையே நமது குருவின் மேற்பார்வையில் இந்தப் பகுதி சுத்தம் செய்யப்பட வேண்டும். பழையாறையிலிருந்து நமது ஆட்களை வரவழைத்து பணியைத் துவக்கு. பரிவாள மாளிகையை இடித்து நிலத்தைச் சமன்படுத்தி புதிய மாளிகைக்குக் கடைக்கால் போட வேண்டும். பணிகள் விரைவாக நடக்க வேண்டும்!" என்றபடி புறப்பட்டான்.

நேமியங்கையர் நல்ல முகூர்த்தத்தில் பணிகளைத் துவக்க, பழையாறையிலிருந்து தருவிக்கப்பட்ட பணியாட்கள், முதலில் பிரவாள மாளிகையைச் சுற்றி அடர்ந்திருந்த மரஞ்செடி கொடிகளை அகற்றினர். இப்போது மாளிகையின் நுழைவாயிலில் இருந்தே அந்தப் பன்னிரண்டு அடி உயர புகைபோக்கி நன்கு புலப்பட்டது.

பிரவாள மாளிகையை இடிக்கும் பணிகளும் துவங்கியது. மூன்று நான்கு குழாம்களாகப் பிரிந்து, மாளிகையை இடிக்கும் பணி துவங்கியது. உயரமான புகைபோக்கியை மேலிருந்து இடித்து வர எண்ணி இரு பணியாட்கள் சுழலும் படிகளில் ஏறி உச்சிக்குச் சென் றார்கள். உச்சியைப் பெயர்த்தவர்கள், புகைபோக்கியின் மேலிருந்து இடித்தபடி கீழே வர, ஒரு குறிப்பிட்ட பகுதியில் புகைபோக்கியின் ஒரு பெரிய பாகம் இடிந்து

விழுந்தது. புகைபோக்கியின் வழியே அத்திமலையான் எழுந்தருளி இருந்த மரப்பெட்டகம் தென்பட்டது. பணியாட்கள் திகைப்புடன் மாளிகையின் முன்பகுதியில் பணிகளை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்த, நேமியங்கையரையும், கள்ளன் அமுதனையும் அழைத்தனர். பெட்டகத்தைப் பார்த்த நேமியங்கையர், புகைபோக்கியை இடிக்கும் பணியை நிறுத்தினார்.

நீண்ட யோசனைக்குப் பிறகு புகைபோக்கியின் அடிப்பாகத்தை இடித்து நொறுக்க, ஒரு இரும்பு வளையத்தின் மீது பத்து அடி பெட்டகம் நிற்பதை அறிந்துகொண்டனர்.

"புகைபோக்கியை எச்சரிக்கையுடன் உடைத்துக் கொண்டிருங்கள். நான் சென்று இளவரசரை அழைத்து வருகிறேன்!" என்றபடி நேமியங்கையரும், குழலழகனும் ஒத்தாடைக்குக் கிளம்பினர்.

சூரியன் அஸ்தமனமாகிக் கொண்டிருக்க, உபேந்திர பார்த்திப பல்லவன் தனது மாளிகைக்குப் புறப்பட்டுச் சென்றான். உப்பரிகையில் யோசனையுடன் நின்றிருந்த ஆதித்தகரிகாலனை பணிந்த நேமியங்கையரும், குழலழகனும் அவனை பரபரப்புடன் நோக்கினர்.

"இளவரசே! உடனே பிரவாள மாளிகைக்குப் புறப்பட்டு வாருங்கள். புகைபோக்கியின் உள்ளே ஒரு பெட்டகம் கிடைத்துள்ளது. பன்னிரண்டு அடி உயர பெட்டகத்தில் பத்து அடி உயரத்திற்கு பெட்டகம் நிற்கிறது." — நேமியங்கையர் கூற, அவர்களை திகைப் புடன் பார்த்த ஆதித்த கரிகாலன் எதுவும் கேட்காமல் உடனே அவர்களுடன் புறப்பட்டான்.

அவர்கள் தருமநகரம் செல்வதற்குள் இருள் சூழ்ந்து விட்டது. புகைபோக்கியை இடிக்கும் பணி முழுவதுமாக நிறைவடைந்துவிட, பெட்டகத்தை எடுத்த பணியாட்கள் அதனை நிலத்தில் வைத்திருந்தனர்.

அந்தத் தேக்கு மரப் பெட்டகத்தை ஆதித்த கரிகாலன் வெறித்து நோக்கினான்.

"உள்ளே என்ன இருக்கிறது?" — பரபரப்பு அதிகமானது ஆதித்தனுக்கு.

"தெரியவில்லை இளவரசே! தங்களின் வருகைக்குத் தான் காத்திருக்கிறோம்!" — பழையாறையைச் சேர்ந்த செங்கம்பாடி சிந்தூரன் என்கிற கட்டடக்கலை விற்பன்னன் கூறினான். அவன்தான் ஆதித்தனின் கனவு மாளிகையை எழுப்பப் போகிறவன்.

"பெட்டகத்தைத் திறவுங்கள்!" — ஆதித்தன் கூறியதும், குழலழகன் பெட்டகத்தை மிகவும் சிரமப்பட்டுத் திறந்தான்.

உள்ளே —

தேவ உடும்பர அத்திமலைத்தேவன் தனது வழக்க மான புன்முறுவலுடன் காட்சி தந்துகொண்டிருந்தான். சிம்மவர்மன் காலத்தில் குணம் குன்றத்தின் தண்ணீர் தொட்டியில் மறைந்திருந்து, நரசிம்மவர்மன் காலத்தில் வெளிவந்து, மீண்டும் ஆழிப்பேரலையில் கடலடியில் சென்று சயனித்து, மல்ல எதியால் கைப்பற்றப்பட்டு, பிரவாள மாளிகையில் ஐநூறு ஆண்டுகளாக நின்ற கோலத்தில் இருந்த அத்திமலைத்தேவன், இப்போது வெளிவந்திருந்தான்.

"இவன்தான் பல்லவர்கள் தேடிக்கொண்டிருக்கும் அத்திமலைத்தேவன்!" — கண்களில் பரவசம் பொங்க பிரதிமையை நோக்கினார், நேமியங்கையர்.

"இவர்தான் அத்திமலைத்தேவனா? அஸ்வமேத தெய்வம்.. ஆற்றலின் மொத்த உருவம்..!" — பிரம்மித்துப் போய் அவரைப் பார்த்தான், ஆதித்த கரிகாலன்.

'எனது ஆற்றலைக் கொண்டே நான் உலகத்தை ஆள்வேன். எனக்கு அத்திமலைத்தேவனின் அருள்

தேவையில்லை என்றாயே. நான் கிடைத்தால் என்னைக் கோயிலுக்கு அனுப்பிவிடுவேன் என்றாயே. இதோ நான் வெளியே வந்துவிட்டேன். என்னை எனது கோயிலுக்கு அனுப்பிவிடு!' என்று கூறுவது போன்று கிடந்த அத்திவரதனை வெறித்துப் பார்த்தபடி நின்றான், ஆதித்த கரிகாலன்.

பல்லவர்களின் பொக்கிஷம், பல்லவர்களுக்குக் கிடைக்கவில்லை. காஞ்சி நகரின் இதயப்பகுதியான தருமநகரத்தின் பிரவாள மாளிகையிலேயே இத்தனைக் காலம் நின்றிருக்கிறான். அதனைப் பல்லவர்கள் அறியவில்லை. ஆனால் பேய் மாளிகை என்று கருதப்பட்ட பிரவாள மாளிகையில் இவன் காலடி எடுத்து வைத்ததும் அத்திமலைத்தேவனே கிடைத்திருக்கிறான். பிரவாள மாளிகையைத் தன் பெயரில் இன்று காலைதான் சாசனத்தில் பதிவு செய்து கொண்டிருந்தான். தற்போது பிரவாள மாளிகை பல்லவரின் இருப்பிடம் அல்ல. இவனது தனிப்பட்ட சொத்து. அதில் கிடைத்த அத்திமலைத்தேவனும் இவனுடைய தனிப்பட்ட சொத்து ஆகிவிட்டார். நல்லவேளையாக, பார்த்திபன் இங்கே இல்லை. பணியாட்கள் அனைவருமே பழையாறையைச் சேர்ந்தவர்கள். சிலை கிடைத்த விஷயம் பல்லவர்களுக்குத் தெரியவே வேண்டாம்.

விறுவிறு என்று ஆதித்த கரிகாலனின் சிந்தனை சுழல், சிலையையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு ஒரு யோசனை. அவனுக்கு என்ன செய்ய வேண்டும் என்பது தெரிந்துவிட்டது.

நேமியங்கையரையும், குழலழகனையும் தனியே அழைத்துச் சென்று அவர்களுடன் ஆலோசித்தான். குழலழகன் பெட்டகத்தை மூடிவிட்டு, பணியாட்கள் சிலருடன் பெட்டகத்தைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டான். பெரிய மாட்டு வண்டி ஒன்றில் பெட்டகம் வைக்கப்பட்டது. அதன் மீதும் அதனைச்

சுற்றியும் பஞ்சுப் பொதி மூட்டைகள் அடுக்கப்பட்டன. அரிசி மூட்டைகள், காய்கறிகள், பழங்கள் ஆகியவை வைக்கப்பட்டு பெட்டகம் மூடப்பட்டது. வியாபாரிகளின் வேடத்தில் நேமியங்கையரும், குழலழகனும், பணியாட்களும் எங்கோ புறப்பட்டுச் சென்றார்கள்.

ஆதித்த கரிகாலன் பெருமிதத்துடன், கண்ணில் இருந்து மறையும்வரை அந்த மாட்டு வண்டியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

# 39. தேவியின் கோபம்

பெருந்தேவி கோபத்துடன் அமர்ந்திருந்தாள்.

“அத்திவரதனே! எப்போதுதான் உமது இருப் பிடத்திற்கு வரப்போகின்றீர். நானும் உமக்காகக் காத்திருந்து அலுத்துவிட்டேன்..!” என்று அவள் முணு முணுக்க, பெட்டகத்தில் பயணித்துக் கொண்டிருந்த அத்திவரதனின் செவிகளில் அவளுடைய ஆற்றாமை விழாமல் இல்லை.

“பல்லவர்களைப் போன்று அல்லாமல், சோழர்கள் சற்று வித்தியாசமாக இருப்பார்கள் என்று நினைத்தேன். குறிப்பாக ஆதித்த கரிகாலன், எனக்குச் சிலை கிடைத்தால் உடனே அதனைக் கோயிலில் ஒப்படைப்பேன். எனது ஆற்றலினால் உலகை வெல்ல வேண்டுமே தவிர, அத்திமலையானின் அருள் எனக்குத் தேவையில்லை என்று கூறியதை நம்பி வெளியே வந்தேன். கடைசியில் அவனும் தான் வித்தியாச மானவன் இல்லை என்பதை நிரூபித்துவிட்டான். சோழர்கள் பல்லவர்களின் வழியேதான் அழிவுப் பாதையில் செல்கின்றனர்.

“என்னை மீட்டெடுத்து அத்திமலையில் ஸ்தாபிதம் செய்கிறேன் என்று ஒவ்வொரு மன்னவனும் சபதமிடு கிறார்களே தவிர, என்னை மீட்கும் வரை எவனும் நீண்ட ஆயுளுடன் திகழமாட்டேன் என்கிறார்களே. என்னை அத்திமலையில் ஸ்தாபிதம் செய்வது இருக்கட்டும். இவர்கள் முதலில் ஒருவரையொருவர்

*கணக்கை முடித்துக்கொண்டு அரியணையில் நிரந்தரமாக ஒருத்தரை ஸ்தாபிதம் செய்தால்தான், என்னை எடுத்து ஆலயத்தில் ஸ்தாபிதம் செய்ய முடியும். பல்லவர்கள்தான் இதனைப் புரிந்து கொள்ளவில்லையென்றால், சூரிய குல சோழர்களும் பல்லவர்களின் பாதையிலேயே பயணிக்கின்றனர். நான் என்ன செய்வது?"*

*அத்திமலைத்தேவன் தனது புதிய இருப்பிடத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான்.*

*பல்லவ பொக்கிஷங்களைக் கவர்வதற்கே ஆதித்த கரிகாலன் காஞ்சிக்கு வந்திருக்கிறான் என்று உபேந்திர பல்லவனிடம் அவனது தந்தை தர்மவர்மன் கூறியது சரிதான் போலும்.*


**இறுதி ஐந்தாவது பாகம் விரைவில்...**

# 40. அத்திமலைத்தேவன் ஆட்டுவிக்கிறான்

*கடந்த அக்டோபர் மாதம் அதாவது அக்டோபர் 2018இல் அத்திமலைத்தேவனின் முதல் பாகம் வந்தது. ஜம்பமாக, நான்கு பாகங்களை அத்திவரதன் நீருக்குள் மீண்டும் செல்வதற்குள் வெளியிட்டுவிடுகிறேன் என்று கூறியிருந்தேன். ஆனால் இப்போதுதான் நான்காவது பாகத்தையே வெளியிட முடிகிறது.*

*'காலத்தை நிர்ணயிப்பவன் நான். எனது கதைக்கு நீ என்ன காலத்தை நிர்ணயிப்பது' என்று கேட்டு பாடாய்ப் படுத்திவிட்டான். புதிய தகவல்கள், சரித்திரத் திருப்பங்கள் என்று அவன்தான் கதையில் புகுத்தி எனது புதினத்தின் பாகங்கள் வெளிவரும் சமயத்தை நிர்ணயிக்கின்றான்.. அடுத்த பாகம் எப்போது என்று நான் சொல்லவில்லை. அவன் கூறுகிறான். நிச்சயம் ஆண்டின் இறுதிக்குள் எத்தனை பாகங்களோ அத்தனை பாகங்களும் வெளிவந்து, அத்திமலைத்தேவன் தனது சரித்திரத்தை முடித்துக்கொள்வான் என்பது திண்ணம்.*

**'காலச்சக்கரம்' நரசிம்மா**







**காலச்சக்கரம் நரசிம்மா என்கிற டி.ஏ.நரசிம்மன்,** தி இந்து ஆங்கில நாளிதழில் நிர்வாக ஆசிரியராகப் பணிபுரிகிறார். அதற்கு முன்பாக இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் பணிபுரிந்தார். காலச்சக்கரம் என்கிற இவரது முதல் நாவல் பெரும் வரவேற்பினை பெற, அவரது பெயர் 'காலச்சக்கரம் நரசிம்மா' வாக மாறியது.

குமுதம், கலைமகள், அமுதசுரபி உள்பட பல பத்திரிகைகளில் சிறுகதைகளை எழுதியுள்ள காலச்சக்கரம் நரசிம்மா, ஆங்கில கட்டுரைகளையும், தொலைக்காட்சி தொடர்களையும் எழுதி உள்ளார். சன் டிவி, கலைஞர் டிவி, ஜெயா டிவி, வசந்த் டிவி மற்றும் தூர்தர்ஷனில் சின்னத்திரை தொடர்களையும் எழுதி வருகிறார். தொலைக்காட்சிகளில் அரசியல் கலந்துரையாடல்களில் பங்கு கொண்டிருக்கிறார்.

சங்கதாரா, பஞ்ச நாராயண கோட்டம், ரங்கராட்டினம், கர்ணபரம்பரை, அந்தப்புரம் போகாதே அரிஞ்சயா, குபேரவன காவல் போன்ற இவரது நாவல்களின் மூலம் தனக்கென்று ஒரு வாசகர் வட்டத்தையே கொண்டிருக்கிறார். அத்திமலைத்தேவன் இவரது ஒன்பதாவது நாவல். ஐந்து பாகங்களில் நான்காம் பாகம் இது.

**சரித்திரம் + மர்மம், அரசியல் + மர்மம், ஆன்மிகம் + மர்மம், குடும்பம் + மர்மம், காதல் + மர்மம்**

என்கிற வரிசையில், அத்திமலைத்தேவன் சரித்திரம் + ஆன்மிகம் + அரசியல் + காதல் + மர்மம் என்று ஒரு பஞ்சாமிர்தமாக உங்களுக்கு சுவை தரப் போகிறது.

இவரது தந்தை திரைப்பட இயக்குனரும் திரைக்கதை வசனகர்த்தாவுமான சித்ராலயா கோபு. தாய் மறைந்த எழுத்தாளர் நாவலாசிரியர் கமலா சடகோபன். இவரது மகன் மற்றும் மகள் திரைப்படத்துறையில் பணிபுரிகின்றனர். மனைவி சுதா இவரது சரித்திர ஆராய்ச்சிகளுக்கு உதவி செய்து வருகிறார். குடும்பத்துடன் திருவான்மியூரில் வசித்து வருகிறார்.

வானதி பதிப்பகம்